
# Tamilnanbargal



## செந்தமிழ்ச் செம்மொழி, எம்மொழியாம்!!!

Sundar_Purushothaman

*குமிழ்கலசம் விரிக்கலயம் எல்லாமும் தேடி,*
*அமிழ்தெங்கே...அமிழ்தெங்கே...வினவுகின்றீர் -*
*எங்கள்*
*‘தமிழெ’ன்ற சொல்லொன்றே அமிழ்து காண்பீர்!*

*இரண்டாறுயிரும்,*
*மூன்றாறு மெய்யும்,*
*உடன்கூடி உருவான சதமிரண்டும்,*
*தசமோடாறும், ஆயுதமொன்றுமாய்*
*ஆதியிலுதித்த அருமை மொழி - எங்கள்*
*செந்தமிழுணர்வீரே!!*

*சந்தையில் வாங்கும் சரக்கல்ல - இதன்*
*விந்தையுரைப்பேன் சிந்தையில் கொள்வீர்!*
*எந்தை ஈசனின் நுதல்விழித் தீப்பொறியில்,*
*பொய்கைக் கஞ்சத்தின் மேலுதித்த*
*எழில்கொஞ்சும் குகனெங்கள்*
*தமிழுக்குத் தலைவன்!*

*குமிழ்மேகம் முகம்மோதும்,*
*பொதிகைமடி வரமேகும்,*
*முதிர் ஞானக் குறுமூர்த்தக் குருசீலன்,*
*தமிழுக்குத் துணைவன்!*

*வரிவண்டு நடமாடும்*
*நறுங்கூந்தல் அசைந்தாட,*
*கருங்கண்டன் மனையாள்*
*கயல்விழியாள்நகர் திரிசங்கவேந்தர்  - நற்*
*தமிழ்ச் சேவகராமே!*

*இலக்கியங்கள் இதில் நயமுடன் தோன்றின - நல்*
*இலக்கணங்கள் நறுமலரெனச் சொரிந்தன*
*பல்சுவைப் பதிகம் பதமாய் மிளிர்ந்தன*
*பண்பினை வளர்த்ததென் பழந்தமிழ் மொழியே!*

*தொல்காப்பியமென் தமிழினை உரைத்தது*
*கணக்கு நூல்கள் நல்லறம் தந்தன*
*நீதி நூல்கள் வாழ்தலைச் செப்பின*
*காப்பியங்கள் கனிந்ததை விளக்கின*

*திருமுறை பிரபந்தம் தெய்வம் போற்றின*
*சாத்திரமெல்லாம் சத்தியம் நவின்றன*
*வள்ளுவராதி வல்லுனரெல்லாம்*
*வாழ்வின் வழியதை வலிந்து நவின்றனர்!*

*பொன்பொருளெல்லாம் புறத்தே போக*
*பொலிவுற்றிலங்கும் செந்தமிழ் மொழியை*
*வந்தனம் கூறி வாய்வழியுரைப்பீர்*
*உணர்வீர் அதுவே நல்லதோர் அமுதாம்!*

# காதல் வெற்றி

சீர்காழி.சேதுசபா

♥ ♥ ♥

### 4. காதலின் உறுதி

அழகிகளின் இளவரசி!
தேவதைகளின் ராணி!
பூக்களின் அரசி!
அற்புதங்களின் பேரரசி!

அதிசயமாய் வந்ததோ
அருகில் நின்றதோ
அன்பாய் சிரித்ததோ
ஆசையாய் தொட்டதோ

உணர்வு சிலிர்க்க
நெஞ்சம் துடிக்க
கண்டேன் கண்டேன்
காவியப் பேரழகை!

மார்பு தடதடக்க
மனது படபடக்க
உண்டேன் உண்டேன்
ஓவியப் பேரெழிலை!

நெஞ்சங்கள் அருகருகே
நினைவுகளின் நீந்தலிலே!
காதலர்கள் நாம்
கவிதையாகிக் கிடந்தோம்!


தேக்கிவைத்த அன்பினையே
தெவிட்டாது உண்டோம்!
தேனின்பப் பேச்சினிலே
தினக்களெல்லாம் மகிழ்ந்தோம்!

வருவது வரட்டும்
வந்துவிடு என்னுடன்
வாய்வரை வந்தவார்த்தைகள்
வருவதற்குக் காத்திருந்தது!

வாழ்வின் இறுதிவரை
வந்திடுவேன் உன்னோடு
வாஞ்சையோடு சொன்னாய்
வானம் வசப்பட்டது!

பகைவந்தாலும் சிறையிட்டாலும்
உனைவிடமாட்டேன்!
எதுவந்தாலும் எவர்தடுத்தாலும்
உனைபிரியமாட்டேன்!

எப்படி மறப்பேன்
காந்தக் கண்களை!
எப்படி மறுப்பேன்
கனிவுக் குணங்களை!




♥ ♥ ♥

### 5. காதலின்பம்

வஞ்சகன் வந்தான்
வஞ்சனை செய்தான்
விலங்கிட்டு பூட்டினான்
விதிவசமானோம்!

விலங்கறுக்க நேரம் வந்தது
விதி முடிவுக்கு வந்தது
வஞ்சம் தடுத்து வீழ்த்தப்பட்டது
வாழ்வில் வசந்தம் தொடங்கியது!

நண்பர்களைக் காத்து
நயவஞ்சகம் உடைத்து
நீதியை நிலைப்படுத்தி
நேர்மையாய் நடந்தோம்!

எங்கேயோ ஒருசந்திப்பு
எப்போதோ ஒருபார்வை
தொட்டுக்கொண்டோமில்லை
பலவருட நிகழ்வுகளில்!

எங்கேயும் சேர்ந்திருப்பு
எப்போதும் பார்வையிலே
சுகநினைவுகள் நனைக்கும்
நடந்திடும் நிகழ்வுகளில்!

அன்பான உணர்வுகள்
அணுவிலும் நுழையும்
அன்பான இதயம்
அற்புதங்கள் நிகழ்த்தும்!

தந்தையும் தமையனும்
ஊரும் உறவும்
சுற்றாரும் உற்றாரும்
சேர்ந்திருந்து சிறப்பிக்கும்

நல்லதோர் நாளில்
நல்லோர்களின் முன்னிலையில்
நன்மைதரும் நல்வாக்குகளில்
நாம் இணைந்தோம்!

நல்லவை நிகழ்ந்திடவே
நிம்மதி பெருகிடவே
நன்மைகள் நிலைத்திடவே
நாடே மகிழ்ந்திடவே

பார்ப்போர் வியந்திடவே
பெருமைகள் கூடிடவே
பிறப்பு சிறந்திடவே
பேரானந்தமாய்
வாழ்ந்திடுவோம்!




--- நிறைந்தது ---

♥ ♥ ♥



# கருவாச்சி காதல்

சுதா

அத்த பெத்த ராசாவே
ஜல்லிக்கட்டு காளனாலும்
மல்லுக் கட்டி ஜெயிக்கும்
வெட்டருவா மீச வீரனே !!!

அறியா வயசுல

நாவப் பழம் பறிக்கையில
நாடிக்குள்ள வந்தவனே
கண்ணாமூச்சு ஆடுறப்ப
கனவுல நுழஞ்சவனே !!!

பருவவயசுல

சந்தைக்கி போனவள
சாடையில பேசி சாச்சவனே
பல்லாங்குழி ஆடயிலே
பாவி மனச பறித்தவனே !!!

ஒளிஞ்சி விளையாடையிலே
உசுரை திருடி போனவனே
வாய்க்கா வரப்பு சேத்துல
எனைத் தள்ளி கொன்னவனே !!!

அத்தை மவனு

ஒத்தையா போனவள
வழி மறிச்சி
முத்தமொன்னு கேட்டவனே !!!

ஆடு மேய்க்க போனவள
பாதியில விட்டிட்டு
படிக்கதா பட்டணம் போனவனே !!!

செங்காத்து வீசுதடா
செவி சாச்சு கொஞ்சம்
என் சோகத்த கேளுடா !!!

உன்னோட நெனப்பால
நெஞ்சங் கூடு வேகுதடா
பொச கெட்ட சிறுக்கி
எனக்கு கிறுக்குதான் புடிக்குதடா !!!

வருசங்க தேஞ்சாலும் நெஞ்சுல
உன் நெனப்பு தேயலடா
அத பத்திரமா முடிஞ்சுதா
வைச்சிருக்கேன் முந்தானில !!

தோட்டம் தொரவெல்லாம்
உன் வாசம் வீசுதடா
உன் கடுதாசி காணாம
கண்ணு ரெண்டும் கலங்குதடா !!!

தென்ன தோப்பு கிளியும்
உன் பேரை சொல்லுதடா
மாந்தோப்பு மைனாவும்
உன்ன பத்தி பாடுதடா !!

மச்சானே

உன் கம்மம் காட்டு
முத்தமும் காயலடா
நீ வாங்கி கொடுத்த
மல்லியும் வாடலடா !!!

மாமானே

நீயில்லாம கருவாச்சி
நானோ வெறுங்கட்டையடா
உன் மாருல சாயாம
இந்த கட்ட சாகதடா !!!

தாரமாக்க தாலியோட
நீ வருவனு நான்
உசுரோட உசுரு சேத்து
உன் கூட வாழறேன்டா!!!

எங்கப்பனும் வரன பாக்குராரு
உனக்கு வாக்கப்பட நெனச்சவளுக்கு
வாய்க்கரிசி போடதா போராரு !!!


தனி மரமா நிக்குறேன்டா
சேதி சொல்ல ஆளுமில்ல
நீயோ பட்டணத்து மங்கையோட
வந்து இறங்கிடாதடா !!!

பாழாப்போன என் மனசு தாங்காது
அரளியை அரச்சி குடிச்சு
பாடையில போய்டுவேண்டா !!!

# சாம்ராட் சம்யுக்தன்

Sivaji dhasan

*பாகம் 2 – 10. சாவின் பிடியில் சம்யுக்தன்*




**கா**லை இளந்தென்றல் சில்லென்று வீசினாலும் அது மனதிற்கு குளிர்ச்சி தராமல் இருப்பதாகத் தோன்றியது சம்யுக்தனுக்கு. அன்று ஒரு காரியம் முடிக்க வேண்டிய கட்டாயத்தில் அவன் மனது துடித்துக்கொண்டிருந்தது. தான் இதுநாள் வரை பராமரித்து வந்திருந்த யானைக்குக் கரும்புக் கட்டை வைத்துவிட்டு அதன் அருகிலேயே வெறுமையோடு உட்கார்ந்திருந்தான்.

ஒரு சிறிய மலைக்குன்று போல கருநிற யானை, கரும்பை சுவை பார்த்துக்கொண்டே சம்யுக்தனைப் பார்த்துக்கொண்டிருந்தது. சிறிது காலமே அதனைப் பராமரித்திருந்தாலும் அந்தக் களிறு சம்யுக்தனின் அன்பு மழையில் நனைந்தபடி சந்தோசமாக இருந்தது. நாகவனத்தில் அந்த யானையைக் கண்டாலே எல்லோரும் நடுங்கும் அளவிற்கு பெயர் கொண்டது. மக்கள் அதற்கு வைத்த பெயர் மத யானை. திடீர் திடீரென்று மதம் பிடிக்கும்; பாகனையே தூக்கி வீசும்; எதிர்பட்டவர்களை துதிக்கையால் பிடித்து சுழற்றி நெற்கதிர் போல் தரையில் அடிக்கும்; பல பேரின் உயிரைக் குடித்த யானை அது. அந்த யானைக்குப் பாகனாகப் போக எல்லோரும் பயந்த சமயத்தில் சம்யுக்தன் தைரியமாகச் சென்றான்.

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்ற பழமொழிக்கு ஏற்ப சம்யுக்தன் அதன் மேல் அன்பாக நடந்துகொண்டான். தினமும் உணவைத் தன் கையால் உருண்டை பிடித்து அதற்கு ஊட்டுவதும் ஆற்றங்கரைக்குச் சென்று குளிப்பாட்டிவிடுவதும் பாதி நேரம் அதன் கூடவே இருப்பதுமாக இருந்த அவனின் கருணை உள்ளத்திற்குக் கட்டுப்பட்டது மத யானை. சிறு பிள்ளை போல மத யானை அவன் பின்னே வீதியில் நடந்து செல்வதைப் பார்த்து ஊரே ஆச்சர்யப்பட்டு வாயடைத்து நின்றது.

நடப்பவை கனவாகத் தோன்றியது சம்யுக்தனுக்கு. நீண்ட பெருமூச்சை வெளியேற்றி, எழுந்து நின்று யானையின் அருகே சென்றான். தனது தும்பிக்கையால் அவனது முகத்தை வருடியது களிறு. அதைப் பிடித்து வெள்ளை நிற கூரிய வேல்களாக இருந்த அதனுடைய தந்தத்தைத் தடவிப்பார்த்தான். பின்னர், யானையின் மீது ஏறி உட்கார்ந்து இரு கைகளாலும் முடிந்தவரை யானையை அணைத்துத் தலைமாட்டில் ஒரு முத்தத்தைக் கொடுத்தான். அதில் பிரியப்போகும் ஏக்கம் வலியோடு பதிந்தது. பின்னர், கலங்கிய கண்களோடு யானை மீதிருந்து இறங்கி அங்கிருந்து நகன்றான். தன் எஜமானன் இன்று வித்யாசமாக நடந்துகொள்கிறானே என்று எண்ணிய யானை, கரும்பைச் சுவைப்பதை நிறுத்திவிட்டு அவனையே பார்த்துக்கொண்டிருந்தது.

அரண்மனை வாசலில் மன்னர் மார்த்தாண்டன் கோவிலுக்குச் செல்வதற்கான பணிகள் ஆயத்தமாகிக்கொண்டிருந்தன. அவற்றின் சலசலப்புகள் சம்யுக்தன் காதுகளில் விழத் தவறவில்லை.

* * *

நூற்றுக்கணக்கான வீரர்கள் கையில் வேலோடு முன்னே செல்ல அதற்கடுத்து சில நூறு குதிரைவீரர்கள் கடல் அலையாய் வந்தனர். நடுவே தங்கத்தாலான ரதம் கதிரவனின் காலை இளம்சூட்டில் இன்னும் மெருகேறி ஜொலித்தது. அதை, சுமார் பத்து குதிரைகள் போராடியபடி இழுத்துச் சென்றன. ரதத்திற்குக் காவலாக முன்னேயும் பின்னேயும் குதிரை வீரர்கள் சென்றனர்.

இவற்றையெல்லாம் காண மக்கள் பெருவெள்ளம் வீதியின் ஓரத்தில் நின்றபடி வேடிக்கை பார்த்தது. வெள்ளிக்கிழமை தோறும் இது போன்ற காட்சியை மக்கள் காண்பர். நாட்டின் நடுவில் அம்மனுக்காக எழுப்பப்பட்டிருக்கும் கோவிலுக்கு வெள்ளிக்கிழமை காலையில் சென்று பூஜை செய்வதை வழக்கமாகக் கொண்டவர் மார்த்தாண்டன். அம்மன் மேல் இருக்கும் அலாதி பக்தியால் மாபெரும் கோவிலையெழுப்பி விசேஷ பூஜைகளை நடத்துபவர். என்ன தான் கொடிய மனம் கொண்டவராக இருந்தாலும், மார்த்தாண்டன் சில விஷயங்களில் நல்லவர் என்றே கூறலாம். தெய்வ வழிபாடு; பெண்களின் மேல் நாட்டம் கொள்ளாத மனம்; வீதிக்கொரு கோவிலை எழுப்பி மக்களுக்குத் தெய்வ நம்பிக்கையை ஊட்டுதல் எல்லாம் அவரது நற்குணங்கள்.

எப்பொழுதும் அம்மன் கோவிலுக்குச் செல்வதென்றால் பக்தியோடும் நிம்மதியோடும் செல்லும் மன்னர் இன்னும் ஏனோ மனதிற்கு ஒவ்வாமையாக உணர்ந்தார். காரணம் தெரியாமல் தவித்தார்; பட்டுத் திரையை விலக்கி மக்களின் முகத்தைப் பார்த்தார்; எல்லோர் கண்களிலும் ஒருவித பயம் சூழ்ந்திருந்தது; லேசான புன்முறுவலை உதிர்த்து சிந்தனையில் குடிபுகுந்தார்.

இரண்டு நாழிகைகளில் ரதம் கோவிலையடைந்தது. மார்த்தாண்டன், கனவிலிருந்து விழித்தவர் போல் கீழே

இறங்கினார். ரதத்தின் படியில் அவரது கால் இடறி தரையில் விழப் பார்த்தார். அருகிலிருந்த காவலன் அவரைத் தாங்கிக்கொண்டான். என்ன இது துர்சகுனமாக நடக்கிறதே ! என்றெண்ணி தன்னைச் சுற்றிக் குழுமி இருக்கும் வீரர்களின் முகத்தை ஆராய்ந்தபடி நோக்கிச் சலிப்போடு கோவில் வாசலில் கால் வைக்கும் முன் ஒரு குதிரை கனைக்கும் ஒலி கேட்டு தலையைத் திருப்பிப் பார்த்தார்.

முண்டாசுத் துணியால் முகத்தை மறைத்தபடி வேலை ஏந்திக்கொண்டு குதிரையின் மேல் அமர்ந்திருந்த ஒருவன், மன்னரை நோக்கிக் குறிபார்த்து அந்த வேலை எறிந்தான். காற்றையும் வீரர்களையும் கடந்து விர்ரென்று சீறிக் கிளம்பியது கூரான வேல். அதைச் சற்றும் எதிர்பாராத மார்த்தாண்டன் கணப் பொழுதில் தப்பிக்க எண்ணினார்.

*நில் கவனி செல் ..*
*சாலைவிதிகளை மட்டும் அல்ல*
*சாலையோரத்தில் உன்க்காக காத்துக்கிடக்கும்*
*என்னையும் பார்த்து விட்டு செல்லடி.....*

*தமிழரசி*

அவர் ஓடவில்லை; ஒதுங்கவில்லை; நின்றபடியே தன்னை நோக்கி வரும் வேலுக்காகக் காத்திருப்பது போல் கோவைப் பழமாகச் சிவந்த கண்களின் வழியே பாய்ந்து வரும் வேலை சுட்டெரிக்கும் சூரியனாய்ப் பார்த்தார். அவரின் நெற்றிப் பொட்டில் பாய்வதற்கு வந்த வேலை தன் கைகளால் நொடிப்பொழுதில் பிடித்து நிறுத்தினார். கூட்டத்தினர் பயமூச்சை வெளியேற்றினர். தன் நெற்றிப்பொட்டில் திலகமிட்டதைப் போல் கீறிய வேலின் முனையை ஒரு முறை நோக்கிவிட்டு அந்த வேலை எறிந்தவனை சினம்கொண்ட வேங்கையாக நோக்கினார்.

வேலை எறிந்தவன் குதிரையின் மீது லாவகமாக நின்றுகொண்டு சுடும் விழிகளோடு மன்னரை நோக்கினான். அப்பார்வையில் மன்னரே லேசாகக் கதிகலங்கிப் போனார். அவரையும் அறியாமல் அவரது உதடுகள் "சம்யுக்தன்..." என்று முணுமுணுத்தன.

வேலை எறிந்த சம்யுக்தன் குதிரையை வேகமாகச் செலுத்தினான். அவனை நாகவன வீரர்கள் துரத்திச் சென்றனர். மன்னரும் ஒரு குதிரையின் மீதேறி அவனை வெறிகொண்டு துரத்தினார். அவன் வீசி எறிந்த வேலை கையில் சுமந்தபடி வேகமாகக் குதிரையைச் செலுத்தினார்.

⭐ ⭐ ⭐

சம்யுக்தன் நெடுநேரமாக வராததால் தன் எஜமானனுக்கு என்ன ஆனதோ என்று நினைத்த சம்யுக்தன் பராமரித்த யானைக்கு மதம் பிடித்துக்கொண்டது. பூமி அதிர மலையே ஓடி வருவதைப் போல வீதியில் ஓடி வந்தது. மக்கள் அனைவரும் பயந்து ஓடி ஒதுங்கினர். மீறி எதிரே வந்தவரையெல்லாம் தூக்கி வீசியபடி முரட்டுப் பிளிறலோடு வலம் வந்தது. அதை அடக்க, பாகர்கள் பின்னே ஓடினர். ஆயினும், யானையை நெருங்க முடியவில்லை. வாசலில் தீட்டிய மாக்கோலத்தை எல்லாம் கலைத்து மண்ணை வாரி தன் மேலேயே தூறி அங்கும் இங்கும் ஓடியது. குடிசை வீடுகளை அடித்து நொறுக்கியது. வாழைத் தோட்டத்திற்குள் புகுந்து நிலங்களை நாசப்படுத்தியபடி சம்யுக்தனைத் தேடி ஓடியது.

மற்ற யானைப் பாகர்கள் அங்குசத்தைச் சுமந்தபடி செய்வதறியாது யானையின் பின்னே ஓடிக்கொண்டிருந்தனர். அவ்வப்போது யானை நின்று பாகர்களைத் துரத்தியது. பாகர்கள் நாலா புறமும் ஓடி தப்பிக்கப் போராடினர். வாழை மரங்களை மிதித்து நாசம் செய்தபடி ஓடிய யானையின் கண்கள் ஒருவனை நூறு பேர் துரத்துவதைக் கண்டது. யானையின் அபார ஆற்றல், முகத்தை மறைத்திருந்தவன் தான் தன் எஜமானன் என்று யூகித்துக்கொண்டது.

யானைக்கு ஒரு குணாதிசயம் உண்டு. தன் எஜமானரை யாராவது தாக்கினாலோ அல்லது தனக்கு முன்னால் தன் எஜமானரின் பேச்சைக் கேட்காமல் முரண்டு பிடித்தாலோ, அவர்களைத் தாக்கிக் கொன்றுவிடும். தன் எஜமானருக்கு ஆபத்து என்று தெரிந்துகொண்ட யானை துரத்துபவர்களை எச்சரிக்க துதிக்கையை உயரத் தூக்கி ஒரு பிளிறலை வெளியிட்டது. அதில், தன் எஜமானரைத் துரத்தாதீர்கள் என்ற பொருள் ஒளிந்திருந்தது. சம்யுக்தனைப் பிடிக்கும் நோக்கத்தில் ஓடிக்கொண்டிருந்த வீரர்களின் காதுகளில் யானையின் எச்சரிக்கை மணி ஒலிக்கவில்லை. இதனால் ஆத்திரமுற்ற யானை அவர்களை நோக்கி ஓடியது.

மார்த்தாண்டனின் சிவந்த விழிகளில் பொங்கி வழிந்த அனல் தேகமெங்கும் பரவி கொழுந்துவிட்டெரிந்தது. ஒரு சிறு பயலின் தாக்குதலுக்கு சிறு தடுமாற்றத்தை அடைந்ததை எண்ணி அவருக்கே அவர் மீது ஆத்திரம் மூண்டது. இது வரை தன்னை நேருக்கு நேராக எதிர்த்தவர்களை அவ்விடத்திலேயே கொன்று அவர்களின் குருதியில் அபிஷேகம் நடத்திவந்த மார்த்தாண்டனின் உள்ளத்தை நடுங்கச் செய்த அவனை இரண்டு கூறாகப் பிளக்க வேண்டும் என்று எண்ணியபடியே எல்லா வீரர்களையும் முந்திக்கொண்டு சம்யுக்தனைத் துரத்தினார்.

அதற்குள் யானை அங்கே வந்து தடையை உருவாக்கியது. யானை, கூட்டத்தில் நுழைந்தவுடன் குதிரைகள் பயந்து முரண்டு பிடித்து சிதறியோடின. சில குதிரைகள் சறுக்கி விழுந்தன. பின்னே வந்த குதிரைகளும் சறுக்கல்களைச் சந்தித்தன. கீழே விழுந்த வீரர்களின் உடலைக் குத்திக் கிழித்தன யானையின் தந்தங்கள். பயந்த வீரர்கள் யானையிடம் இருந்து தப்பிக்க ஓடினர். ஒவ்வொருவரையும் தூக்கி வீசி மார்த்தாண்டனைத் துரத்தியது யானை.

குதிரையில் சென்றுகொண்டிருந்த சம்யுக்தன் தன் பின்னே வந்துகொண்டிருந்த மார்த்தாண்டனையும் அவன் பின்னே துரத்தி வந்துகொண்டிருந்த யானையையும் நோக்கினான். தன் உயிரைக் காப்பாற்ற யானை வருவதைக் கண்டு அவன் கண்களில் லேசாகக் கண்ணீர்

ஊற்று முளைத்தது. இருந்தும், வேகத்தைக் குறைக்காமல் அருவியை நோக்கிக் குதிரையைத் திருப்பினான். குதிரையின் கால்களில் வலி ஏற்பட்ட போதும், அது நிலைமையை உணர்ந்துகொண்டு கற்களையும் முட்புதர்களையும் தாண்டியபடி சென்றது.

யானையால் குதிரைகளின் வேகத்திற்கு ஈடு கொடுக்கமுடியவில்லை. சிறிது நேரத்தில் பாகர்கள் யானையைச் சூழ்ந்து அங்குசத்தால் அதை அடக்கப் போராடினர். யானையும் களைப்படைந்ததால் அவர்களுக்குப் பணியவேண்டியதாயிற்று. இருந்தும், 'எஜமானனை விட்டு விடு..எஜமானனை விட்டு விடு' என்பது போன்ற பிளிறலின் ஒலி நாற்புறங்களிலும் ஒலித்தது.

மலையில் இருந்து ஒரு நீண்ட அருவி கீழே குதித்து எங்கோ சென்று மறைந்துகொண்டிருந்தது. அருவி கீழே விழும் ஓசை, கடல் அலைகளின் ஓசைக்கு இணையாக இருந்தது. அவ்வோசையோடு குதிரையின் குளம்பொலியும் கலந்துகொண்டது. சம்யுக்தனின் குதிரைக்கும் மார்த்தாண்டன் செலுத்திய குதிரைக்கும் இடைவெளி குறுகிக்கொண்டே சென்றது. சம்யுக்தனின் குதிரை களைப்படைந்து வேகத்தைக் குறைத்தது.

அது தான் சரியான சமயம் என்று தெரிந்துகொண்ட மார்த்தாண்டன், சம்யுக்தன் தன் மேல் எறிந்த வேலை அவன் மீது எறிந்தார். வேல், கண்ணிமைக்கும் நேரத்தில் சம்யுக்தனின் பின்னந்தோளில் பாய்ந்து பிளந்தது. சம்யுக்தன் வலி பொறுக்கமுடியாமல் "ஆஆ..." என்று அலறினான். தன்னுடைய குறி தப்பவில்லை என்ற பெருமை மார்த்தாண்டனின் முகத்தில் புன்னகையாக அரும்பி ஒரு எதிர்பார்ப்பு முளைத்தது. சம்யுக்தனின் முகத்தைப் பார்த்துவிடவேண்டும் என்ற ஆவல் தான் அதற்குக் காரணம். சம்யுக்தனைப் பிடிக்க குதிரையின் வேகத்தை அதிகப்படுத்தினார். அதற்குள் சம்யுக்தன் மலையின் மீதிருந்து குதித்துவிட்டான்; கீழே விழுந்து ஓடிக்கொண்டிருந்த அருவியில் கலந்துவிட்டான்.

சிறு ஏமாற்றத்தோடு குதிரையிலிருந்து கீழிறங்கிய மார்த்தாண்டன், சம்யுக்தன் விழுந்த இடத்தை மலை உச்சியிலிருந்து கீழே பார்த்தார். நதியின் ஓரத்தில் சம்யுக்தன் சடலமாக கிடந்தான். அவனது முகம் நீரினுள் புதைந்திருந்தது. அருவி ஓஓ..வென்று கதறி அழுவதைப் போல் விழுந்ததை மார்த்தாண்டன் கவனிக்கவில்லை. சில மணித் துளிகளில் நாகவன வீரர்கள் மன்னரை நோக்கி வந்து நின்றனர். கீழே இருந்த உடலை நோக்கிவிட்டு, 'இறந்துவிட்டான்..' என்று தங்களுக்குள் பேசிக்கொண்டனர்.

அவர்கள் பேசும் சொற்கள் மார்த்தாண்டனின் காதுகளுக்குள் தேனாகப் பாய்ந்தன. எதிர்த்த எதிரியைத் தீர்த்துவிட்டோம் என்ற பெருமிதத்தில் அவர் மனது ஆனந்தம் அடைந்தது. இருந்தும், சம்யுக்தன் இறந்திருப்பானா என்ற உறுதியான நம்பிக்கைக்கு மார்த்தாண்டன் வரவில்லை. அவரது நினைவு முழுவதும் சம்யுக்தனின் முகத்தைப் பார்க்கவில்லையே என்பதிலேயே இருந்தது.

உடனே, தன் வீரர்களிடம் கீழே கிடக்கும் உடலை எடுத்து வருமாறு கட்டளையிட்டான். வீரர்கள் சற்று தயக்கம் காட்டினர். காரணம், ஆபத்தான மலைப்பகுதியது. சற்று நிதானம் தவறினால் கூட மரணம் அணைத்துக்கொள்ளும். அவர்களின் தயக்கத்தைக் கண்டு கொதித்த மார்த்தாண்டனின் விழிகள் உஷ்ணத்தைக் கக்கின. அதனால், வீரர்கள் வேறுவழியில்லாமல் மலைப்பாதையில் இறங்கத் துவங்கினர்.

முன்தினம் பெய்த கனமழையால் பாதை ஈரமாகவும் பாசி படர்ந்தும் இருந்தது. அதனால், அவர்களுக்கு இடையூறு வளர்ந்தவண்ணமிருந்தது. இருந்தும், ஒவ்வொரு அடியாக நிதானமாக எடுத்து வைத்து சம்யுக்தனின் உடலை நெருங்கிக்கொண்டிருந்த சமயத்தில் திடீரென்று, மலைச்சரிவு உண்டானது. சில பாறைகள் உருண்டோடி அருவியில் விழுந்தன. அதில் ஒரு பெரிய பாறை சம்யுக்தனின் உடலின் மேல் விழுந்து அதைக் கூழாக்கியது.

அக்காட்சியைக் கண்ட வீரர்கள் அந்த உடலை எடுத்துச் செல்லமுடியாதென்று உணர்ந்து கொண்டனர். அதனால், மீண்டும் மேலேறி வெறுங்கையோடு மார்த்தாண்டனின் எதிரே நின்றனர். சம்யுக்தனின் உடலின் மேல் பாறை விழுந்ததையும் அது சிதைந்து உருக்குலைந்து போனதையும் அவரிடம் பணிவுடன் தெரிவித்தனர்.

மார்த்தாண்டனுக்கு அவ்வுண்மை கசப்பானதாய்த் தோன்றினாலும் ஏற்றுக்கொள்ள வேண்டியதாய்ப் போயிற்று. மறுகணமே குதிரையில் ஏறி அரண்மனையை நோக்கிச் சென்றார். வீரர்களும் மன்னரைப் பின்தொடர்ந்தனர். மார்த்தாண்டனுக்கு தான் வெற்றி பெற்றதில் மலையளவு மகிழ்ச்சி இருந்தாலும் சம்யுக்தனின் முகத்தைப் பார்க்கவில்லையே என்ற கடுகளவு வருத்தமும் இருந்தது ஏனோ உண்மைதான்.

⋆ ⋆ ⋆

மரத்திலிருந்து முறிந்த ஒரு சிறிய கிளை அருவியில் விழுந்து தண்ணீர் செல்லும் திசையில் அடித்துச் செல்லப்பட்டது. மரக்கிளையால் பாய்ந்து செல்லும் தண்ணீரை எதிர்த்துப் போராடமுடியவில்லை. அதனால் செத்த மீனாக நதி இழுத்துச் செல்லும் திசைக்குச் சென்றுகொண்டிருந்தது. ஒரு காத தூரம் பயணம் செய்த அந்தக் கிளை ஓரிடத்தில் தடைபட்டு நின்றது. சிறிது நேரம் தடைபட்டபடி அங்கேயே இருந்த மரக்கிளையை மீண்டும் தண்ணீர் அடித்துச் சென்றது. அப்பொழுது அது செல்லும் திசையில் உள்ள தண்ணீர் ரத்தமாக மாறியிருந்தது. மரக்கிளையின் முகப்பிலும் ரத்தம் வழிந்தோடிக்கொண்டிருந்தது.

அந்த மரக்கிளையை ஒளியிழந்த கண்களோடும் உடலில் படர்ந்திருந்த வலியோடும் பாறையில் சாய்ந்தபடி சம்யுக்தன் பார்த்துக்கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் மரக்கிளை மறைந்து போனது. சம்யுக்தனின் கண்கள் இருண்டன. அவனது இமைகள் மூடி மீதமிருக்கும் உயிரில் அவனது எண்ணங்கள் கலந்து நடந்த

நிகழ்வுகளை ஒரு முறை மீட்டிப்பார்த்தன. மின்னலின் ஒளிக்கீற்றைப் போல பல நிகழ்வுகள் நொடி நேரத்தில் அவன் உள்ளத்தில் தோன்றின.

மார்த்தாண்டன் தன்னை எப்படியும் கண்டுபிடித்துவிடுவார் என்று உள்ளுணர்வால் உணர்ந்து, தான் ஒரு திட்டத்தைத் தீட்டியதையும் அதைச் செயல்படுத்த பார்த்திபன், விஜயன் ஆகியோரின் உதவியை நாடியதையும், முதலில் பதறிய இருவரும் பின்னர் தன் மேலிருந்த நம்பிக்கையால் அரைமனதோடு ஒப்புக்கொண்டதையும் எண்ணிய அவனது கண்களில் நீர் சுரந்தது.

மார்த்தாண்டன் கோவிலுக்குச் செல்வதை முன்னமே தெரிந்துகொண்டு, அதற்கேற்ப ஒரு திட்டத்தைத் தீட்டினான், சம்யுக்தன்.

மன்னர் மார்த்தாண்டன் கோவிலுக்குச் செல்லும் வழியில் அவரைத் தாக்கிவிட்டு குதிரையில் தப்பித்தோடி அருவியில் குதித்துவிடுவதாகவும், அந்த நேரத்தில் கீழே காத்துக்கொண்டிருக்கும் பார்த்திபனும் விஜயனும், விஜயனின் உயிரிழந்த நண்பனின் உடலுக்கு தன் உடையைப் போலவே ஓர் ஆடையை அணிவித்து தான் குதிக்கும் இடத்தில் கிடத்திவிட்டால் மார்த்தாண்டனும் வீரர்களும் தான் இறந்துவிட்டதாகப் பொருள் கொள்ளுவார்கள் என்றும் நினைத்தான்.

அவன் நினைத்ததைப் போலவே எல்லாம் சரியாக நடந்துகொண்டிருந்த சமயத்தில் தான் விதி வேறு பாதையில் பயணிக்கத் தொடங்கியது. மார்த்தாண்டன் களத்தில் இறங்குவான் என்பதை சம்யுக்தன் யூகிக்கத் தவறிவிட்டான். அங்கு தான் மதி மறைந்து விதியின் ஆட்டம் ஆரம்பமானது.

வேல் எறிவதில் மார்த்தாண்டனுக்கு நிகர் மார்த்தாண்டனே. அவன் குறி இது வரை தவறியதேயில்லை என்ற பெருமையை சம்யுக்தனும் அறிவான். சரியாக அருவியின் அருகே வந்த சம்யுக்தனின் தோள்களில் வேல் பாய்ந்து, அவன் அருவியில் குதித்து உயிர் தப்ப எண்ணிய திட்டத்தைத் தவிடுபொடியாக்கியது.

நடந்தவற்றில் ஒரே ஒரு ஆறுதல் என்னவென்றால் சம்யுக்தனின் திட்டப்படியே அவன் இறந்துவிட்டான் என்று மார்த்தாண்டன் நம்பியது தான். ஆனால், சம்யுக்தன் இறக்கவில்லை. இறந்துகொண்டிருக்கிறான். எப்பொழுது வேண்டுமென்றாலும் அவனது உடலை விட்டு உயிர் பறந்துவிடும்.

மலையிலிருந்து தோள்பட்டைக் காயத்துடன் குதித்த சம்யுக்தனுக்கு அங்கிருந்த பாறைகளில் மோதி தலையிலும் அடிபட்டது. போராட வலுவின்றி தண்ணீர் இழுத்துச் செல்லும் திசைக்குச் சென்றது அவனது உடல். தண்ணீர் அவனை எங்கோ இழுத்துச் சென்று எங்கேயோ விட்டது. ஒரு பாறையைப் பிடித்தபடி படுத்துக்கிடந்தான் சம்யுக்தன். அவனது கால்கள் கைகள் எல்லாமே ஒடிந்துவிட்டதாய்த் தோன்றியது அவனுக்கு.

காலம் சில நேரங்களில் புத்திசாலியையும் முட்டாளாக்கிவிடுகிறது. சம்யுக்தனும் அதற்கு விதிவிலக்கல்ல. மூச்சின் வேகம் மந்தமாகியது. தன் இறுதி நிமிடங்களுக்காக சுயநினைவின்றி வலியோடு காத்துக் கிடந்தான் சம்யுக்தன்.

அவனது எண்ணங்கள் கடைசியாக நினைத்த வார்த்தைகள் "நண்பர்களே என்னை மன்னித்துவிடுங்கள்!"

⋆ ⋆ ⋆

இரவு ஜாமத்தில் வானில் கூடியிருந்த கருமேகங்களைக் கிழித்துக்கொண்டு மழை வெள்ளம் பூமியை நனைத்திருந்த சமயத்தில் வான் மேகங்களின் மேல் தன் விசாலமான இறக்கைகளை விரித்தபடி வந்துகொண்டிருந்தது மார்த்தாண்டனின் கழுகு. மின்னலின் ஒளியும் அசுரனைப் போல் சிரிக்கும் இடியும் அந்த ராஜாளியை சிறிதும் கலக்கமடையச் செய்யவில்லை.

ராஜாளி வீரபுர எல்லைக்குள் பறந்து வந்து அரண்மனையின் மேல் ஒரு வட்டமிட்டது. அது உயரே வட்டமிட்டதால் காவலாளிகளின் கண்களுக்குப் புலப்படவில்லை. ராஜாளி அரண்மனையின் வடக்குப் புறமுள்ள ஓர் அறையின் சாளரத்தில் நின்று தன் சிறகுகளைப் படபடத்தது.

உள்ளே உறங்கிக்கொண்டிருந்த மணியம்மை தன் இமைகளை மெல்லத் திறந்து சாளரத்தை நோக்கினார். மின்னலும் இடியும் ஒன்றாகக் கலந்து ராஜாளியை இன்னும் அகோரமாகக் காட்டியது. முதலில் திடுக்கிட்ட அவர், பின் சுதாரித்துக்கொண்டு மெல்ல ராஜாளியை நோக்கிச் சென்றார். ராஜாளி தன் அலகில் பற்றியிருந்த ஓலையை மணியம்மை பெற்றுக்கொண்டார். தன் வேலை முடிந்ததால் நொடிப்பொழுது கூட தாமதியாமல் ராஜாளி அங்கிருந்து பறந்து சென்றது.

மணியம்மை, சாளரத்தின் வழியே பேரிரைச்சலோடு பெய்துகொண்டிருந்த மழையை ஒரு முறை நோக்கினார். சுற்றியெங்கும் கும்மிருட்டு. பின் தன் விழிகளைக் காவல் புரியும் வீரர்கள் இருக்கும் திசையில் ஓட்டினார். நொடிப்பொழுதில் ஓர் மின்னலின் ஒளி அவர் பார்த்த திசையை வெளிச்சம் போட்டுக் காட்டியது. வீரர்கள் அங்கில்லை. மழையால் எங்காவது ஒதுங்கியிருப்பார்கள் என்று தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டார்.

பின், நடுங்கிய கைகளோடு, தன் அறையில் பிரகாசித்துக்கொண்டிருந்த தீபத்தின் ஒளியில் ஓலையைப் பிரித்துப் படித்தார். ஒரே ஒரு வாசகம் மட்டுமே அதில் எழுதப்பட்டிருந்தது. ஒரு முறைக்கு இரு முறை அதைப் படித்துப் பார்த்தார். மீண்டும் மீண்டும் படித்தார். விஷமப் புன்னகை அவரின் இதழ்களில் தவழ மீண்டும் ஒரு முறை ஓலையை நோக்கினார்,

**அதில், " சம்யுக்தன் இறந்துவிட்டான்" என்று எழுதப்பட்டிருந்தது.**


உடனே, மணியம்மை அந்த ஓலையை தீப ஜுவாலையில் எரித்தார். அது எரிந்து முடியும் வரை அவரது கண்களில் குரூரம் குடிகொண்டிருந்தது.

தொடர்ந்து படிக்க
**URL**: http://tamilnanbargal.com/node/46558

# கவிதைக்குறள்

## திருக்குறள் தெளிவுரை

செந்தமிழ் தாசன்



**அறத்துப்பால் - பாயிரம்**

**முதலாம் அதிகாரம் - கடவுள் வாழ்த்து**

பாரிமேலழகர் உரை - அஃதாவது, கவி தான் வழிபடு கடவுளையாதல் எடுத்துக்கொண்ட பொருட் கேற்புடைக் கடவுளையாதல் வாழ்த்துதல். அவற்றுள் இவ்வாழ்த் தேற்புடைக்கடவுளை யெனஅறிக.

குறள். 1. **அகர முதல வெழுத்தெல்லா மாதி**

**பகவன் முதற்றே யுலகு.**

**As all letters have the letter A for their first, so the world has the eternal God for its first.**

பரிமேலழகர் தெளிவுரை- அகரமாகிய முதலையுடைய எழுத்துகளெல்லாம், அதுபோல ஆதிபகவனாகிய முதலையுடைத்துலகு என்றவாறு.

உலகென்றது உயிர்களின் மேல் நின்றது, காணப்பட்ட உலகால் காணப்படாத கடவுள் உண்மை கூறவேண்டுமாயின், ஆதிபகவன் முதற்றே என உலகின் மேல் வைத்துக் கூறினார்.

*அ முதல் னகரம்*
*முடிவாம்*
*தமிழெழுத்து.*
*அவ்வெழுத்துகளின் பிள்ளையார் சுழி*
*“அ“கரம்.*

*அன்னையும் பிதாவும்*
*முன்னறி தெய்வம்*
*உலகின் உயிர்களின்*
*ஆதிபகவன் தெய்வம்.*

*அகரத்தை ஆண்டவன்*
*இறைவன் யென்பேன் யான்*
*(சேய்யின் முதல் சொல் அம்மா)*
*உயிரின் முதல் சொல்*
*“அ“ வன்றோ!*
*உலகின் முதற்பொருள்*
*“அவன்“ னன்றோ!*

*எழுத்தின் முதன்மை அகரம்*
*உயிரின் முதன்மை ஆதி*
*அண்டம் படைத்த பகவன்.*

# சிநேகிதியுடன் தனிமையில் சில நிமிடங்கள்

பூங்கோதை

### 10. தாய் தன் பொண்ணுக்கு சொல்ல வேண்டியவைகள்!

வணக்கம் சிநேகித உள்ளங்களே...

*அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து*
*இன்புற்றார் எய்தும் சிறப்பு.*

*உலகத்தில் இன்பம் உற்று வாழ்கின்றவர்*
*அடையும் சிறப்பு, அன்பு உடையவராகிப்*
*பொருந்தி வாழும் வாழ்கையின் பயன்*
*என்று கூறுவர்*

என்ற திருவள்ளுவரின் உயர்ந்த சிந்தனையோடு சிநேகிதிக்குள் பயணிக்கலாம் வாங்க.

இந்த வாரம் பொதுப்படையாக எல்லோருக்கும் பயன்படும் வகையில் ஒரு நண்பர் இந்தக் கேள்வியை எழுதி அனுப்பியிருக்கிறார். அவருடைய கேள்விக்கு என்னாலியன்ற பதிலைக் கூறியிருக்கிறேன்... இதை வாசிக்கும் நேயர்களும் உங்கள் கருத்துக்களைப் பதிவு செய்து அந்த நண்பருக்கு மேலும் விளக்கங்களைக் கொடுக்க வேண்டும் என எதிர்பார்க்கிறேன்.

சிநேகிதியுடன்......
"பிரித்தானியா மற்றும் மேலைநாடுகளில் உள்ள ஒவ்வொரு தமிழ்த் தாய்மார்களும் தமது பெண் பிள்ளைகளுக்கு மாதவிலக்கு பற்றி முழுமையாய் சொல்லி தருகிறார்களா? இல்லை, இங்கு நிலவும் சூழலில் தமிழ்க்கலாச்சாரம் எனும் போர்வையில் மட்டம் தட்டி வைத்திருக்கிறார்களா? கடைசியாய், இது பற்றி சாதாரண தமிழ்த்தாய் ஒருத்தி தன் பிள்ளையை எவ்வாறு வளர்க்க வேண்டும் ?

**தனிமையில் சில நிமிடங்கள்......**

வணக்கம் நண்பா...

ஒரு நல்ல கேள்வியோடு இன்றைய சிநேகிதியை சிந்திக்கத் தூண்டியிருக்கிறிர்கள்.

உண்மையில் ஒரு பெண் பூப்படையும் போது, மாத விலக்கு பற்றி தாய்மாரோ அல்லது சகோதரிகளோ தான் சொல்லிக் கொடுக்கிறார்கள். இதற்கு எமது கலாச்சாரம் எந்த விதத்திலும் தடையாக இல்லை. பொதுவாக பூப்படையும் வயதில் இருக்கும் பெண்கள் தம்மை விட வயதில் அதிகமான பெண்களுடன் நட்பு வைத்திருப்பது அரிது. இதனால், அது பற்றிய அனுபவத்தை நண்பிகளிடம் அறிந்துகொள்ளும் வாய்ப்பும் மிகக்குறைவு. ஆகவே தாய் அல்லது சகோதரிதான் சொல்லிக் கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

இது பற்றி 'முழுமையாக' சொல்லிக் கொடுக்கிறார்களா என்றால், தமக்குத் தெரிந்தவரை சொல்லிக் கொடுக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும். மற்றப்படி விஞ்ஞான முறையிலான விளக்கங்கள் பல தாய்மாருக்கே தெரியாதவை. ஆனால் அந்தக் குறையையும் நிவர்த்தி செய்வது போல் இதுபற்றி பாடசாலைக் கல்வியில் ஆண் பெண் இருபாலாருக்குமே கற்பிக்கப்படுகின்றது.

இன்னும், மேலைத்தேய நாடுகளில் அதிக இணையத்தளப் பயன்பாடும் பிள்ளைகளுக்கு இவை பற்றி அறிந்து கொள்ள உதவியாக இருக்கின்றது. எனவே, மாதவிலக்கு பற்றி பெண்பிள்ளைகளுக்குத் தெரிய வருகிறதா என்பதையிட்டு கவலையடைய ஏதும் இல்லை என்றே நினைக்கிறேன்.

ஆனால், நீங்கள் இறுதியாகக் கேட்ட கேள்வி மிகவும் அவசியமானது. தாய்மார் தங்கள் பிள்ளைகளை எப்படி வளர்க்க வேண்டும் என்பது நிச்சயம் சிந்திக்கப்பட வேண்டிய விடயமே.

பெற்றோர் பிள்ளைகளிடம் நட்புரீதியில் நடந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகிறது. அதுதான் மேலைத்தேய நாடுகளின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது எனினும், அதைவிட நட்பு ரீதியிலான பிள்ளை வளர்ப்பு தமிழ் தாய்மாருக்கு மிகவும் அவசியமாகிறது. ஏனென்றால், பல விடயங்களை பெற்றோர் மனம் திறந்து பேசவும், பிள்ளைகள் அதை ஏற்றுக் கொள்ளவும் இந்த நட்புறவு அவசியமாகின்றது.

மேலைத்தேய கலாச்சாரத்துக்கேற்ப பிள்ளையை வளர்ப்பது தமிழ்க்கலாச்சாரம் சிதைந்து போக, அல்லது மறக்கப்பட ஏதுவாக அமைகிறது. ஆனால், அதே வேளை தனியே தமிழ்க்கலாச்சாரத்தை மட்டும் ஏற்றுக் கொண்டு வாழ்வது பிள்ளைகளை அவர்களது நண்பர்களிடமிருந்து தனிமைப்படுத்துகிறது. ஆகவே, மேலைத்தேய கலாச்சாரத்தில் சில அனுசரிப்பைச் செய்து கொண்டு தமிழ்க்கலாச்சாரத்தைப் பேணுவதே சிறந்த முறை என நான் நம்புகிறேன். இது மேலைத்தேய நாடுகளில் வாழும் பிற இனத்தவர்களிடையே எந்த வகையிலும் தடையாக இருப்பதில்லை. தமிழினம் மட்டும் தான், எந்த இடத்துக்குப் போகிறோமோ, அந்த இடத்தின் கலாச்சாரத்தை தமதாக்கிக் கொண்டு வாழ்கிறார்கள். இதனால், பிள்ளைகளைக் குறை சொல்ல முடிவதில்லை.

பிள்ளைகளுக்கு சிறு வயதில் இருந்தே இதைச் சொல்லிக் கொடுத்தால், அனேக பெற்றோருக்கு பிரச்சனை இருக்காது. பொதுவாக, எமது நாட்டில் சிறுவயதில் எதையும் கண்டுகொள்வதில்லை. பிள்ளையைத் தன்போக்கிற்கு வளர விடுகிறார்கள். ஆனாலும், எமது நாட்டுச் சூழலில் எமது கலாச்சரம் பேணப்படுவதால், பெரும்பாலும் பிள்ளைகள் இயல்பாகவே அதைப் புரிந்து கொண்டே வளர்கிறார்கள். ஆனால், அதே போக்கை மேலைத்தேய நாட்டிலும் நாம் அனுமதிப்பது தவறு. ஏனென்றால், மேலைத்தேய கலாச்சாரத்தைப் புகுத்துவதில் இங்கே பாடசாலைகள் பெரும்பங்கு வகிக்கின்றன. பிள்ளைகள் தமது 18 வது வயதிற்குப் பின் எப்படியும் வாழலாம் என்ற மன நிலையில்

*மனிதன் படைத்த*

*கடவுள்*

*குழந்தைகள் மட்டுமே*

*தமிழரசி*

வளர்கிறார்கள். எனவே அதற்குச் சரிசமமாக நாம் அவர்களுடைய சிறுபராயத்திலேயே எமது கலாச்சாரம்பற்றிய சிந்தனையைப் புகுத்த வேண்டிய அவசியம் இருக்கின்றது என்றே நம்புகின்றேன். இதற்கு பெற்றோர் மனம் திறந்து பேசவேண்டிய அவசியம் உண்டாகின்றது.

பாடசாலை முடிந்ததும் நேரே வீட்டுக்கு வருவது, சிறு வயது முதலே பிறரைத் தொட்டுப் பேசுவதைத் தவிர்க்கச் சொல்லிக் கொடுத்தல், எந்தச் செயலைச் செய்யவும் பெற்றோரின் அனுமதியைப் பெறுதல், அல்லது குறைந்த பட்சம் பெற்றோருக்கு அதைப்பற்றிப் தெரிவிக்க வேண்டும் என்பதைச் சொல்லிக் கொடுத்தல் போன்ற விடயங்களைக் கடைப்பிடித்தல் மிகவும் அவசியமாகின்றது. ஆனால், இதேவேளை பிள்ளைகளுக்கு அவர்கள் மீது நாம் மிகவும் நம்பிக்கை வைத்திருக்கிறோம் என்ற உணர்வையும் கொண்டிருத்தல் வேண்டும். தற்காலத்தில் பிள்ளைகள் மிகவும் சென்ஸிட்டிவாக வளர்கிறார்கள். குழந்தைப் பருவத்தில் இருந்தே அவர்கள் பெற்றோரின் சிறிய புரிந்துணர்வற்ற செயல்களால் கூட புண்பட்டுப் போகிறார்கள். இது எமது நாட்டில் நடந்தால், பிள்ளைகள் வெளியே இதைப்பற்றி மனமுடைந்து பேசினால், பலர் பெற்றோருக்கு சார்பாகப் பேசி பிள்ளைகளின் மனநிலையை மாற்றி வீட்டுக்கு அனுப்புவார்கள். ஆனால், மேலைத்தேய நாடுகளில் இது தலைகீழாக நடந்துவிடும். பிள்ளை பெற்றோரை விட்டுப் பிரியும் நிலையை சூழ உள்ளவர்களே ஏற்படுத்தி விடுவார்கள். எனவே பெற்றோர் தமது பிள்ளைகளின் மனநிலையைப் புரிந்து அதற்கேற்ப அவர்களைக் கையாளத்தெரிந்திருக்க வேண்டும்.

மேலைத்தேய நாட்டில் வாழும் பெற்றோருக்கு நேரமின்மை மிகப்பெரிய பிரச்சனை. இதனால், பல பெற்றோர் தமது பிள்ளை வளர்ப்பில் தவறிழைக்கிறார்கள். எத்தனை பெற்றோர் தமது பிள்ளைகளைச் சரியாக வளர்க்க வேண்டும் என்பதற்காக, பிள்ளை வளர்ப்புப் பற்றிய புத்தகங்களையோ, அல்லது இணையத்தளங்களிலோ தேடிப் படித்திருப்பார்கள்??? 70% பெற்றோருக்கு இது தெரியாமலே இருக்கிறது என்றே நான் நினைக்கிறேன்.

ஒவ்வொரு பருவத்திலும் பிள்ளை எப்படி நடந்து கொள்ளும் என்பது பற்றிய அறிவு பெற்றோருக்கு இருக்குமானால் அவர்களைக் கையாள்வது மிகவும் இலகு. உதாரணமாக டீன் ஏஜ் பருவத்தில் பிள்ளைகள் 'ரோல்மொடல்'களைக் கொண்டு வாழ ஆரம்பிப்பார்கள். அவர்களைக் கவர்ந்த ஒரு சினிமா நடிகன், நடிகை, அல்லது சாதாரண வாழ்க்கையில் அவர்கள் மனதுக்குப் பிடித்த ஒருவரது நடை உடை பாவனைகளை பின்பற்றுவார்கள். சிலர் தமக்கென ஒரு தனிச் செயற்பாடுகளை ஆரம்பிப்பார்கள். ஒரு ஹீரோ/ஹீரோயினாக தம்மைக் கற்பனை செய்ய ஆரம்பிப்பார்கள். இது உளவியல்ரீதியாக அந்த வயதில் அவர்களுக்குள் ஏற்படும் மாற்றம் என்பதைப் பெற்றோர் புரிந்து கொண்டு அவர்களை மெதுவாக, மென்மையாக கையாள வேண்டும். அதை விடுத்து, அவர்களைக் கண்டபடி திட்டுவதும், பிறரிடம் போய் பிள்ளைகளை பற்றிக் குறை பேசுவதும் அவர்களை நோகடிக்கும். பல பெற்றோர் இந்த இடத்தில் தவறு செய்வதைக் காணமுடியும். எனவே இதற்கு தகுந்த வழி, முதலில் பிள்ளைகளின் வளர்ச்சிப் படி பற்றி பெற்றோர் தேடிக் கற்க வேண்டும். அத்தோடு தாம் வாழும் நாட்டின் சட்டங்களைப் பற்றி அறிந்து கொள்வதும் ஒரு குடும்பவாழ்க்கைக்கு அவசியமாகிறது.

மேலைத்தேய நாடுகளில் வாழும் பல தமிழ் குடும்பங்களில் சில பெற்றோர் நாட்டின் சட்ட திட்டம் அறியாமல், தமது குடும்பத்தில் ஏற்படும் சிறுபிரச்சனைக்கும் போலீசை அழைத்து அதனால் பெரும் பிரச்சனைகளைச் சந்தித்து, பிள்ளைகளும் அவர்களிடமிருந்து பிரிக்க பட்டு, அதனால் இன்னும் அதிக மன அழுத்ததுக்குள்ளாகிய சம்பவங்கள் பல உண்டு. இதனால் பிள்ளைகளின் வாழ்க்கையும் பாதிக்கப் படுவதுடன், சிறுவயதிலேயே பிள்ளைகளின் மனதில் தமது பெற்றோரை பற்றிய தவறான எண்ணத்தையும், மனதில் வன்முறையையும் விதைத்து விடுகிறார்கள்.

நண்பா, எனக்குப் புரிகிறது... பெண்கள் பற்றி பேச ஆரம்பித்து பொதுவாக பிள்ளைகள் என்ற இடத்தில் நான் வந்து நிற்கின்றேன் என்று. எமது பெற்றோர் பெண்பிள்ளைகளைப் பார்த்துப் பார்த்து வளர்த்துவிட்டு ஆண்பிள்ளைகளை அவர்கள் போக்கில் விடுவதாலேயே மேலைத்தேய நாடுகளில் சிறு வயதிலேயே சில ஆண்பிள்ளைகள் வன்மக் குழுக்களாக உருவெடுக்கிறார்கள், அல்லது அத்தகைய குழுக்களோடு இணைந்து கொள்கிறார்கள். எனவே, பெண் பிள்ளைகளை மட்டுமன்றி, ஆண்பிள்ளைகளையும் பெற்றோர் சரியாக வளர்க்க வேண்டிய அவசியம் பெற்றோருக்கு இருக்கிறது.

பெற்றோர் பிள்ளைகளை எப்படி வளர்க்க வேண்டும் என்பது பற்றி சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால் பதிவும் நீண்டு கொண்டே போகிறது என்பதால் இத்தோடு நிறுத்திக் கொள்கிறேன், இதுபோன்ற கேள்விகள் சிநேகிதிக்கு வரும் போது இன்னும் பல விடயங்களைப் பேசலாம்.

***மிக்க நன்றி அன்புச் சிநேகித உள்ளங்களே… மீண்டும் அடுத்தவாரம் இன்னொரு சிநேகிதியின் கருத்தில் சந்திக்கலாம். உங்கள் கேள்விகளை தயவு செய்து poongothaichelvan8@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.***

# என் நினைவுகளின் ஒரு துளி

*கனகீஸ்*

இனி இழப்பதற்கு ஒன்றும் இல்லை
என்னை இழந்தேன் இதோ இன்று
உன்னையும் இழந்துவிட்டேன்....

வாழ் நாள் முழுதும் வருத்தப்பட
உன் அன்பு இருக்கிறது போதும்
இது போதும் எனக்கு.....

என் கண் இமைக்கும் காரணம் கேட்கும்
உன் புது முகம் எனக்கு புலப்படவில்லை
நிமிடங்களை கணக்கு பார்க்கும் இந்த
நரகவலி என்னை தகர்க்கிறது.....

உடைந்து போனேன் நான் உள்ளம்
முழுதும் புரையோடிய புண்கள்....
நீ மருந்திட்டது சில காலம்....

குணப்படுத்த முடியாமல் விட்டு போகிறாய்...
ஒரு வேளை எனக்கு இருப்பது தொற்று நோயோ...
தொட்டால் ஒட்டிக் கொள்ளுமோ......
என்னால் உனக்கு நோயென்றால் நான்
மருந்திட முடியாதுதான் மன்னிப்பு கேட்கிறேன்....

உனக்காய் தான் எல்லாமும் என்றிருந்தேன்....
என் உள்ளத் தராசில் என்றுமே நீ உயரமாய்...
நீ விலகிப் போகிறாய் உன் கரம் பற்றி நான்
கதறிடவே நினைக்கிறேன்..... நான்
தடுப்பதால் மீண்டும் நீ துயர் பெற்றிடுவாய்
என நினைத்தே நான் விலகுகிறேன்....

என் விழினீரின் உண்மை புரியாது எனும் போது
என் வாய் மொழி என்னை புரிய வைத்திடுமா உனக்கு....
நீ பேசாமல் போகிறாய் வருத்தம் தான் எனக்கு
இருக்கட்டும் என்னால் உனக்கு துன்பம்
என்றால் அதைவிட வேறு வலி எனக்கு பெரிதில்லை....

உனக்காய் இழக்கிறேன் உன்னையும்.....
எல்லாம் கடந்து போகுமென்கிறார்கள்...

கடந்து போக நீ என்ன ஆற்று நீரா?
என் உயிரின் துடிப்பு..... நீ கடந்து போனால்
நான் வாழ்வது எப்படி?......

நீ மடிந்து போ
என்றாலும் நான் மனதார போகிறேன்....
என்னை இல்லை என் அன்பை உண்மையென
ஏற்றுக் கொள்..... என் இதயம் துடிக்கும்
போதெல்லாம் அதன் சத்தத்தை நான்
சகைகளால் வெளிப் படுத்துகிறேன்....
நீ சட்டை செய்வதில்லை.....

நீ கோபுர கலசம் நான் குப்பை
காற்று அடித்ததால் கலசம் தொட்டேன்...
இனி மீண்டும் புதைந்து போகிறேன்
உன் நினைவை சுமந்த படி பூமிக்கு அடியில்...

உன் அன்பை நான் களங்கப்படுத்த மாட்டேன்
என் காலம் உள்ளவரை நான்
மறைத்துக் கொண்டு சிரிக்க பார்க்கிறேன்
என் விழி ஓரங்களில் நீர்த்துளிகள்....

# அழகு

*காரை சீனு*

உனக்கு
கோபம்கூட அழகுதான்.
நீ வெட்கப்பட்டால்
வேறெங்காவது
பார்ப்பாய்...

கோபப்பட்டால்
நீ
என்னை மட்டுமே
பார்ப்பாய் ...!

# உறவைத் தேடும் உயிர்

- 10

Sivaji dhasan




**தேடல் - 10**

குளிரையே தனக்குப் போர்வையாக்கிக் கண்களை மூடி மயக்க நிலையில் இருந்த வசந்தனது உடல் முழுதும் வெண்பனித்துளிகள் படர்ந்து குளிர்ச்சியை அதிகப்படுத்தி அவனை வாட்டமுறச் செய்தன. அதையும் தாங்கிக்கொள்ள அவன் மனம் பழகிக்கொண்டது. கண்களைத் திறந்து பார்த்தான்.

சந்திரன் இல்லை; நட்சத்திரங்கள் இல்லை; எங்கும் இருள்; சிறு வெளிச்சம் கூட இல்லாமல் அவன் மனதை நடுங்கச் செய்தது. நடுங்கியபடியே கடலை நோக்கினான். தங்கமுலாம் பூசி அதில் வைரங்களைப் பூக்களாகத் தூவி வெள்ளியை அதனுடன் கலந்து ஓட விட்டால் எப்படி இருக்குமோ அப்படியிருந்தது கடல். கோர சத்தம் அவன் காதைக் கிழித்தது. அவ்வப்போது ஒரு மாபெரும் அலை எழுந்து அவனைத் தாக்க வருவதாய்த் தோன்றியது அவனுக்கு. எதிரே மாபெரும் ஒளிக்கீற்று ஒன்று விஸ்வரூபம் எடுத்து அவன் கண்களைக் கூசச் செய்தது. அவனுடைய கண்கள் ஒளிக்கீற்றைச் சந்திக்கமுடியாமல் கூசியபடியே திரையை மூடிக்கொண்டது. மூடிய இமைகள் திறக்கவே இல்லை. அவன் மனது அமைதி அடைந்து அவனை மயக்க நிலைக்குத் தள்ளியது. தன் நினைவுகள் தன்னை விட்டு அகன்று எங்கோ தூரத்தில் தெரிந்த ஒளியை நோக்கி பறந்து செல்வதாய்த் தோன்றியது அவனுக்கு.

கடல் அலைகளின் மேல் பல தீய ஆத்மாக்கள் சத்தமிட்டபடி எழுந்தன. கடலின் மஞ்சள் ஜலத்தில் தவழ்ந்தபடி வசந்தனின் அருகில் வந்து பல ஆத்மாக்கள் சூழ்ந்து வட்டமிட்டன. கோரமாக சத்தமிட்டபடி வசந்தனை நெருங்கின. அந்தக் குரல்கள் இரும்பும் பாறைகளும் ஒன்றோடொன்று மோதி மலையின் மீது உருட்டிவிட்டதைப் போலிருந்தன. வசந்தனின் கண்கள் மெல்லத் திறந்தன. அவனது இமைகளில் பனி படர்ந்திருந்ததால் திறக்கச் சிரமபட்டான். இருந்தும் திறந்து பார்த்தவன், ஆத்மாக்களின் கோரமுகத்தைக் கண்டு நொடிப்பொழுதில் கண்களை மூடினான்.

அப்போது ஓர் இரும்புக்குரல் அவன் காதில் விழுந்தது.

"வசந்தா ! இன்னுமா தூங்கிக்கொண்டிருக்கிறாய்? உனக்கு வேலை கொடுத்து நான் வீடில்லாமல் நடுத்தெருவில் நின்றுவிடுவேன் போலிருக்கிறதே" என்று புலம்பியது அந்தக் குரல்.

வசந்தன் மெல்ல இமைகளைத் திறந்தான். அவனுக்கு முதுகு காட்டியபடி ஒரு பெரியவர் எதையோ செய்துகொண்டிருந்தார். வசந்தன் ஒரு கட்டிலில் படுத்துக்கிடந்தான். என்ன இது என்று அதிர்ச்சியோடு எழுந்தபோது, அந்தப் பழைய கட்டில் ஒரு வித ஒலியை எழுப்பியது.

"நான் எங்கிருக்கிறேன்?" என்று நெற்றியைத் தேய்த்தபடி கேட்டான்.

பெரியவர் செய்த வேலையை விட்டு விட்டு அவனது முகத்தைக் கூர்மையாகப் பார்த்தார்.

"எங்கிருக்கிறேன் என்றா கேட்டாய்? மிகவும் நல்லது. என்னையாவது யாரென்று தெரிகிறதா?" என்றார்.

இல்லை என்பதைப் போல் தலையாட்டினான்.

"விளையாட்டு போதும். உனக்கு வேலை வந்திருக்கிறது. சீக்கிரம் தயாராகு" என்றார்.

அதைக் காதில் வாங்கியபடி அந்த அறையை நோட்டமிட்டான் வசந்தன். மரவேலைப்பாடுகளுடன் கூடிய அழகிய அறை அது. சுவற்றில், அழகைக் கூட்டக்கூடிய படங்கள் ஆங்காங்கே தொங்கவிடப்பட்டிருந்தன. அவன் நேர் எதிரே உள்ள

சுவற்றின் மேல் ஒரு பெரிய கடிகாரம் தொங்கவிடப்பட்டிருந்தது. அது மணி பதினொன்றைக் காட்டியது. கடிகாரத்தினுள் சுற்றும் நொடி முள்ளை வெறித்தபடி தன்னுடைய ஆடையைப் பார்த்தான். இரவு உடை அது. கருப்பு வெள்ளை நிறத்தில் வடிவமைக்கப்பட்டிருந்தது அவ்வாடை. அதைத் தொட்டுப்பார்த்தபடி ஒன்றும் புரியாமல் விழித்தான்.

பெரியவர் சூடான இறைச்சியைப் பொரித்துக்கொண்டிருந்தார். அதனுடைய வாசனை அவன் வயிறைக் கடித்து பசியைத் தூண்டியது. அருகில் இருந்த ஜன்னலை நோக்கினான். வெளியே மக்கள் அரக்கப் பறக்க எதையோ தேடிக்கொண்டிருப்பதைப் போல் சென்றுகொண்டிருந்தனர். என்ன நடக்கிறது என்று புதிதாய்ப் பிறந்த கன்று போல் சுற்றிச் சுற்றிப் பார்த்தான்.

சூடான மாமிசத்தைச் சமைத்துக்கொண்டிருந்த பெரியவர் அவனை நோக்கி, "இன்னும் நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்?" என்றார்.

"எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. நீங்கள் யார்? நான் எப்படி இங்கு வந்தேன்? இது எந்த இடம்?" என்று தொடர் கேள்வியை அவரைப் பார்த்து எறிந்தபடி இருந்தான் அவன்.

"இதோ பார் வசந்தா! என்னைக் கோபப்படுத்தாதே. நமக்கு ஒரு உத்தரவு வந்திருக்கிறது. இதோ இப்பொழுது செய்துகொண்டிருக்கும் இந்த உணவை இரண்டு தெரு தள்ளி இருக்கும் சந்தோஷ் என்பவனுக்குக் கொடுத்து அவன் கொடுக்கும் பணத்தை நீ வாங்கிவரவேண்டும். நேரம் கடத்தினால் பணமும் கிடைக்காது. உனக்குச் சம்பளமும் கிடைக்காது. உனக்குப் புது ஆடை வாங்கி வைத்திருக்கிறேன். அதோ அந்த மேசை மீது இருக்கின்றது. அதை அணிந்துகொண்டு புறப்படு" என்றார் வேக வேகமாக.

தான் எது கூறினாலும், அவர் அதைக் கண்டுகொள்ளவும் மாட்டார், என்னவென்று கேட்கவும் மாட்டார் என்று தெரிந்துகொண்ட வசந்தன், மேஜை மீதிருந்த ஆடையை எடுத்தான். குளிருக்கு இதமான அடர்த்தியான ஆடை அது. அதை எடுத்துக்கொண்டு பெரியவரை ஒரு முறை நோக்கிவிட்டு குழப்பத்தோடு ஓர் அறைக்குள் நுழைந்தான்.

ஆடையைக் கலைக்கும் போது, ராஜீவ், ஷோபனா, மெமோரியல் உலகம் என் அத்தனை எண்ணங்களும் பசுமையாகப் படர்ந்து அவன் மனதில் தென்றலாய் வீசியது. இப்பொழுது நடக்கும் நிகழ்வுகள் நிஜமா? ஆச்சர்யங்கள் நிறைந்த சொர்க்கத்தில் சில காலம் வாழ்ந்தோமே அது நிஜமா? என்று குழம்பினான். எனக்கு எதுவுமே ஞாபகம் இல்லையே. என்ன இது மாயை என்று நொந்துகொண்டான். அழ வேண்டும் போலிருந்தது. இருந்தும் மனதைத் திடப்படுத்தி, உடையை உடுத்தினான். ஒரு தொப்பி இருந்தது. அதையும் அணிந்துகொண்டு வெளியே வந்தான்.

அதற்குள் அந்தப் பெரியவர், மாமிசத்தைத் தயார்செய்து, எடுத்துப் போக வசதியாக ஒரு பையில் போட்டுக்கொடுத்தார். "மறக்காதே! சந்தோஷ் தானா என்று உறுதிசெய்துகொண்டு கொடு" என்றார். வசந்தன், அதற்குப் பதில் கூறாமல் வெளியே வந்தான்.

வாசற்படியில் நின்று வீதியை நோக்கிவிட்டு தான் இருந்த வீட்டின் முகப்பை நோக்கினான். அது ஒரு கடை என்பது அவனுக்குப் புரிந்தது. கலங்கிய நீரோடையாய் குமுறிய மனதோடு அங்கேயே நின்று வெறித்துக்கொண்டிருந்தான்.

"நீ இன்னும் போகவில்லையா? சீக்கிரம் ! " என்று பெரியவர் கத்தினார். "உன் வண்டியை எடுத்துக்கொண்டு போ" என்றார்.

*உன் மின்னல் விழிகளால் மட்டும் தான்*

*இன்னும் என் இதயத்திற்குள்.*

*காதல் மின் வெட்டு*

*நடைப்பெறுகிறது......*

*தமிழரசி*

வசந்தன் கடையின் வாசலில் நின்றுகொண்டிருந்த ஒரு இருசக்கர வாகனத்தையும் அதன் மேலிருந்த தலைக்கவசத்தையும் நோக்கினான். அது ஒரு சின்ன வண்டி தான். அதன் மேல் தூசு படிந்து சிறிது அலங்கோலமாகக் காட்சி தந்தது. அதில் ஏறி வீதியில் இருக்கும் கூட்டத்தைக் கிழித்துக்கொண்டு புறப்பட்டான். அலுவலகம் செல்வோர், பள்ளிக்கூடம் செல்லும் குழந்தைகள், குழந்தைகளை கைப்பிடித்து அழைத்துச் செல்லும் பெற்றோர்கள், இரவு மூடிய தங்களது கடைகளைத் திறந்துகொண்டிருக்கும் வியாபாரிகள் என அவ்வீதி நிரம்பியிருந்தது. வீதியின் ஓரத்தில் மலர் விற்போர் வண்ண வண்ண மலர்களை வைத்துக்கொண்டு வாங்குவோரிடம் மலரின் பெருமையைப் பேசிக்கொண்டிருந்தனர். கலைநயப்

பொருள்களும் ஆங்காங்கே இருந்தன. அதில் கடவுள் சிலைகளோடு யானை சிலை, குதிரை சிலை ஆகிய சிலைகளும் இருந்தன .

நேற்று மாமழை வந்திருக்கும் போலும். வீதி முழுதும் ஈரமாகவும் வானம் இன்னும் மேகமூட்டமாகவும் எப்பொழுது வேணுமானாலும் மழை பொழியும் என்பதாக இருந்தது.

கூட்டத்தை விலக்கி விட்டபடி வண்டியில் சென்ற வசந்தன், என்ன தான் நடக்கிறது என்று பார்த்துவிடுவோமே என்று எண்ணி வண்டியின் வேகத்தைக் கூட்டினான். அடுத்த தெருவுக்குச் செல்லும் திசைகாட்டி, அவனுக்குச் செல்ல வேண்டிய வழியை மௌனமாகக் கூறியது.

வண்டியை வலது புற வளைவில் செலுத்தினான். அங்கிருக்கும் சிலரிடம் சந்தோஷின் விலாசத்தைக் கேட்டுக் கண்டுபிடித்து சரியாக சந்தோஷின் வீட்டின் முன் நிறுத்தினான்.

வாசற்படியில் ஏறி, கதவைத் தட்டினான். கதவு திறக்கவில்லை. சாலையில் போவோர் வருவோர் அவனையே பார்ப்பதைப் போல் பிரம்மை தோன்றியது. ஆத்திரத்தோடு கதவை வேகமாகத் தட்டினான். சில நொடிகளில் பதில் கிடைத்தது. கதவை ஒருவன் திறந்தான்.

வந்தவனைப் பார்த்து அதிர்ந்தான் வசந்தன். என்ன நடக்கிறதென்று உரக்கக் கத்தவேண்டும் போலிருந்தது அவனுக்கு. காரணம் கதவைத் திறந்தது ராஜீவ். ராஜீவை போல் இருந்தவன் வசந்தனை ஏற இறங்க ஒரு பூச்சியைப் பார்ப்பதைப் போல் பார்த்தான்.

"உங்கள் பெயர் என்ன?" என்று குரலில் நடுக்கத்தோடு கேட்டான் வசந்தன்.

"சந்தோஷ்" என்று கூறியபடி கையிலிருந்த பையைப் பார்த்து, "எவ்வளவு நேரம் காத்திருப்பது?" என்று கடுமையான பார்வையை வசந்தனின் முகத்தில் வீசிவிட்டு அதைப் பிடுங்கினான்.

அவன் முகத்தையே புரியாமல் வெறித்துக்கொண்டிருந்த வசந்தனின் கையில் அலட்சியமாகப் பணத்தைத் திணித்து கதவைப் படார் என்று மூடிக்கொண்டான் சந்தோஷ்.

வசந்தன் தன் நெற்றியில் படர்ந்திருந்த வியர்வைத்துளிகளைத் துடைத்துக்கொண்டே கையிலிருக்கும் பணத்தை சட்டைப் பையில் போட்டுக்கொண்டு வண்டியில் உட்கார்ந்து கிளம்பத் தயார் ஆனான். அப்பொழுது அவன் சட்டைப் பையிலிருந்த செல்பேசி ஒலித்தது. அதை எடுத்துக் குழப்பத்தோடு உற்றுநோக்கிவிட்டு காதில் வைத்தான்.

"எவ்வளவு நேரம் நான் இங்கே காத்திருப்பது?" என்றது பொய்யான கண்டிப்போடு தேனொழுகும் குரலில் ஒரு பெண்.

"யார் நீங்கள்?" என்றான்.

"ஓ...அதற்குள்ளாகவே காதலியை மறந்துவிட்டதா" என்றாள். இம்முறை நிஜக் கண்டிப்பு தெரிந்தது.

வசந்தன் தலையைச் சொறிந்தபடி புரியாமல் நின்றான்.

"ஹலோ இருக்கீங்களா?" என்றது அப்பெண்ணின் குரல்.

"எங்கிருக்கீங்க நீங்க? ம்ம்..சொல்லுங்க..நீங்க எங்க இருக்கீங்க?" என்றான்

"நீங்க காத்திருக்கச் சொன்ன அதே மலை மேலே தான். பெயர் கூட மலர்த்தோட்டமலை என்று சொல்வார்கள்" என்றாள் பரிகாசத்தோடு.

"சீக்கிரம் வருகிறேன்" என்று துண்டித்தான். பிறகு, சிறு சிந்தனையில் வீழ்ந்து மலர்த்தோட்டமலை இருக்கும் இடத்தை விசாரித்து வண்டியை செலுத்தினான்.

விரைவாகச் சென்றுகொண்டிருந்த சமயத்தில் அவனது மனதில் ஒரே ஒரு கேள்வி மட்டும் தான் எழுந்தது. எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கிறது என்ற ஒரு கேள்வி அவனது மொத்தக் குமுறலையும் ஒன்றாக இணைத்துக் கேட்டது.

மலர்த்தோட்டமலையின் அடிவாரத்திற்கு வந்துவிட்டான். பெயருக்கு ஏற்றார் போல் மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது மலர்த்தோட்டமலை. வண்ண வண்ண மலர்களின் பல வித மணம் ஒன்றாகக் காற்றில் கலந்து அங்கே சுற்றிக்கொண்டிருந்தது. அதன் அழகில் நடந்ததையெல்லாம் மறந்துவிட்டான் வசந்தன். சிறிது நேரத்தில் நினைவு வந்தவனாய் மலர்களின் நடுவே இருந்த பாதையில் ஓடினான். பல பேர் அங்கும் இங்கும் குழுமியபடி இருக்கும் இடத்தில வந்து சேர்ந்தான்.

எங்கே அந்தப் பெண் என்று சுற்றும் முற்றும் தேடினான். பல பெண்கள் அவனைக் கடந்து சென்றார்கள். யாரும் அவனை ஏறெடுத்துப் பார்க்கவில்லை. மீண்டும் செல்பேசி ஒலித்தது. அதை காதில் வைத்து கண்களால் தேடினான்.

"என்னைக் காணாமல் தேடுறீங்க போலிருக்கிறது?" என்ற சிரிப்பு கலந்த அதே பெண்ணின் குரல்.

"எங்கிருக்கிறாய் நீ?"

"திரும்பிப் பாருங்கள்!" என்றது அந்தக் குரல்.

திரும்பிப் பார்த்தான். மீண்டும் அதிர்ச்சி அவன் தலையில் இறங்கியது. எதிரே ஷோபனா பட்டாடை உடுத்திச் சிரித்த முகத்தோடு நின்றுகொண்டிருந்தாள். அவள் கார்கூந்தலில் ரோஜாமலர் காற்றோடு இசைந்தாடிக்கொண்டிருந்தது.

"நீங்கள் தான் காதலனா? சொன்ன நேரத்திற்கு என்றாவது வந்திருக்கிறீர்களா?" என்றாள் மலர் முகத்தில் கோபத்தைச் சுமந்தபடி.

அவளது முகத்தை உற்றுநோக்கினான். கண்களை நேருக்கு நேர் சந்தித்தான். அவளது இதழில் புன்னகை அரும்பி அவனைக் கிறங்கச் செய்தது. இருந்தும் ஏதோ ஒரு உணர்வு அவனைத் தடுமாறாமல் தடுத்து நிறுத்தியது.

"கனவு தான் புரியாமல் இருக்கும்" என்று ஒரு குரல் அவன் காதுகளில் அவனுக்கு மட்டும் கேட்குமாறு ஒலித்தது. அவன் மனம் திடமானது. கண்களில் உறுதி குடிகொண்டது. சுற்றி நடக்கும் எல்லாவற்றையும் நோக்கினான். எல்லாம் மறைந்துகொண்டே சென்றது. எதிரே இருந்த ஷோபனாவின் உருவம் அகோரமாக மாறியது. வசந்தன் விழித்தான். தீய ஆத்மாக்கள் சிதறிச் சென்று விழுந்தன.

வசந்தன் எழுந்தான். உடல் முறுக்கேறியது. நரம்புகள் துடித்தன. கண்களில் இருக்கும் உறுதி குறையவில்லை. செல்வம் கூறியது அவன் நினைவுக்கு வந்தது. நடந்தவை எல்லாம் தீய ஆத்மாக்களின் வேலை தான் என்று தெரிந்துகொண்டான். தன் நினைவினில் நுழைந்து தான் பூமியில் வாழ்வதைப் போன்று ஒரு மாயையை உண்டாக்கித் தன்னையே ஆட்டிவைத்த தீய ஆத்மாக்களை முறைத்தான்.

ஓர் ஆத்மா வசந்தனைத் தாக்க ஓடி வந்தது. சற்றும் தளராமல் அலட்சியப் பார்வை வீசிய வசந்தன் அதை இலகுவாகத் தாக்கித் தூக்கி எறிந்தான். சுற்றி இருக்கும் ஆத்மாக்கள் ஒன்றாகத் தாக்க வந்த போதும் அவனது தைரியம் குறையவில்லை. பந்தாடத் துவங்கினான். ஆத்மாக்கள் தன் பலத்தால் நிலைகுலைவதைக் கண்டு அந்த ஊக்கத்தில் பலம் பெருகிய உணர்வோடு போராடினான். சளைக்கவில்லை; சோர்வடையவில்லை; முடியும் முடியும் என்ற குரல் அவனை வீரனாக்கியது.

அவனது மன உறுதியோடு ஆத்மாக்களால் போராட முடியாமல் தங்க நிற ஜலத்தில் ஓடி ஒளிந்துகொண்டன. அதில் ஓர் ஆத்மா மட்டும் கொடூரக் கண்களோடு அவனை நோட்டமிட்டுச் சென்றது. அந்தப் பார்வையில் நீ அழியப் போகிறாய் என்ற அர்த்தம் ஒளிந்துகொண்டிருந்தது.

நீண்ட பெருமூச்சு அனலாக வெளிவந்து குளிர்காற்றில் கரைந்து போனதை வசந்தன் கண்டுகொள்ளவில்லை. இந்தத் தீய ஆத்மாக்கள் தன் எண்ணங்களில் நுழைந்து விளையாடியதை அவனால் பொறுக்கமுடியவில்லை. ஷோபனாவைத் தன் காதலி ஆக்கியது தான் அவனது கோபத்தைக் கிளறிவிட்டிருந்தது. அந்தக் கோப அனலில் அவன் தூக்கம் அவனை விட்டு எங்கோ பறந்து சென்றுவிட்டது. அவனது மூளையில் ஒரு கேள்வி அவன் மனதிடம் கேட்டது. இந்த வேலை வேண்டுமா? இதோடு போதும் என்று திரும்பி விடலாமா? என்றது. என்ன ஆனாலும் ஒரு கை பார்த்துவிடவேண்டும். வேலையில் சேர்ந்துவிடவேண்டும். பட்ட துன்பங்களின் வடுக்களுக்கு மருந்து பூச வேண்டும் என்றது.

வசந்தன் மின்னிக்கொண்டிருக்கும் தங்க ஜலத்தையே கூர்மையாக நோக்கிக்கொண்டிருந்தான். சீக்கிரம் விடிய வேண்டும் என்ற எண்ணம் அவன் மனதில் அரிக்கத்தொடங்கியது. காற்று ஜில்வ்வென்று வீசி உறைய வைத்த போதும் அவனது உறுதி குறையவில்லை. சிந்தித்தபடியும் எப்பொழுது பொழுது புலரும் என்ற எதிர்பார்ப்பிலும் காத்துக்கொண்டிருந்தான். இன்னும் நிலவு தோன்றவில்லை. நட்சத்திரங்கள் ஜொலிக்கவில்லை. நாம் வேறு உலகிற்கு வந்துவிட்டோமா என எண்ணினான்.

சில நாழிகையில் செல்வம் அவன் முன் தோன்றினார். சிரிப்பில் பரிகாசத்தைக் கலந்து வசந்தனைப் பார்த்தார்.

"என்ன தம்பி! தயாராகி விட்டாயா? அல்லது இத்தோடு முடித்துக்கொண்டு வேறு வேலையைப் பார்க்கிறாயா?" என்றார்.

"இல்லை ஐயா! பொழுது புலர்ந்ததும் நான் போட்டியில் கலந்துகொள்ளப் போகிறேன்" என்றான் வசந்தன் திடமான மனதுடன்.

"உண்மையைத் தான் சொல்கிறாயா?" என்றார் அவர் ஆச்சர்யம் பொங்க.

"ஆமாம்"

"சரி, கடலில் இறங்கி உன் மரக்கலத்தைக் கண்டுபிடி" என்றார் செல்வம்.

"இன்னும் பொழுது விடியவில்லையே" என்றான் வசந்தன் விழித்தபடி.

""நீ ஜெயிக்கும் வரை உனக்கு விடிவது தெரியாது. தோற்றுவிட்டால் இருள் படர்ந்த கொடூர உலகில் வாழ்வாய். நேரம் ஆகின்றது. கடலில் இறங்கி மரக்கலத்தைத் தேடு" என்றார்.

வசந்தன் புரியாமல் கடலை நோக்கிச் சென்றான். தங்கநீர் அவனைச் சுருட்டி உண்ண அலையைப் பொங்கி எழச் செய்து அவனை நோக்கி ஓட விட்டது. வசந்தன் சிறிது நேரம் கண்களை மூடினான். அப்பொழுது அந்த அலை அவன் மேலே மலை மேலிருந்து விழும் அருவியாகக் கொட்டியது.

லேசாக மூச்சு முட்டினாலும் சுதாரித்துக்கொண்டு கண்களைத் திறந்தான் வசந்தன். அவன் கண்களையே அவனால் நம்ப முடியாமல் போனது. சுற்றியெங்கும் தங்க நிறக் கடல் சூழ்ந்து நிலப்பரப்பை மறைத்தது.

எதிரே ஒரு மரக்கலம் தோன்றியது. ஆர்வத்தோடு அதை நோக்கி நீந்திச் சென்றான் வசந்தன். மரக்கலத்தின் அருகே நெருங்கும் பொழுது அது மறைந்துவிட்டது. சிறிது தூரத்தில் மீண்டும் அது தோன்றியது. அதைப் பிடிக்க வேகமாக நீந்தினான். அலை அவனை வேறு பக்கம் இழுத்துச் சென்றது. இருந்தும் முயற்சியை விடாமல் மரக்கலத்தை நோக்கிச் சென்றான். மீண்டும் மறைந்துவிட்டது.

அப்பொழுது தீய ஆத்மாக்கள் அவனைச் சூழ்ந்து தாக்கத் தொடங்கியது. அவனால் சமாளிக்க முடியவில்லை. தப்பிக்கும் வழியும் இல்லை. ஒரே வழி, இவர்கள் கையால் சாக வேண்டும் என்பது தான். அவனைக் கடலில் இழுத்துக்கொண்டு போனது தீயாத்மாக்கள். கடற் செடிகள், பாசிகள், முத்துக்கள் எல்லாம் மின்னிக்கொண்டிருந்த இடத்திற்கு அழைத்துச் சென்று அவனை சுவாசிக்க விடாமல் செய்து கோரமாகத் தாக்கி அவனை வீசி எறிந்தன. எல்லாம் முடிந்துவிட்டது போன்ற ஓர் உணர்வு அவனைச் சோர்வடையச் செய்து அவன் கண்களை மூடச் செய்தது. அப்படியே இருந்தான். அவனது மெல்லிய மூச்சு தண்ணீர் முட்டைகளாக வந்துகொண்டிருந்தன. கடைசி முறையாக ஒரு முறை கண்ணைத் திறந்து பார்க்கலாம் என்று தோன்றியது அவனுக்கு. மெதுவே கண்களைத் திறந்தான்.

தூரத்தில் ஒரு வெள்ளை நிற வெளிச்சம் அவனை நோக்கி வந்துகொண்டிருந்தது. அதுவும் தாக்கப்போகிறது போலும் என்று நினைத்தான். அது நெருங்கி வர வர அது ஒரு பெண் என்று புரிந்தது. கடற்கன்னியா? என்று எண்ணினான். அவளின் முகத்தைச் சரியாகப் பார்க்கமுடியவில்லை. தண்ணீரில் வரைந்த ஓவியமாகத் தோன்றினாள் அவள். அவன் மீண்டும் கண்களை மூடினான். அவனை நெருங்கி வந்த அவள் அவனை இழுத்துச் சென்றாள். விதி முடிந்துவிட்டது என்று எண்ணினான் வசந்தன். அவள் அவனைக் கடலின் மேல் மட்டத்துக்கு இழுத்துக்கொண்டு போனாள்.

தண்ணீரைக் கிழித்து மரக்கலம் ஒன்று வெளியே வந்தது. மரக்கலத்தின் முனையில் சுவாசிக்கச் சிரமப்பட்டபடி இருந்த வசந்தனின் செவிகளில் கரகோஷங்கள் விழுந்தன. அவன் கண்களைத் திறந்து பார்த்தான். தான் ஒரு மரக்கலத்தில் இருப்பதை அவனால் நம்பமுடியவில்லை. ஒரு பெண் தானே வந்தாள். அவள் எப்படி மரக்கலமாக மாறினாள் என்று எண்ண அவனுக்கு நேரம் கூட போதவில்லை.

வானத்தில் நிலவும் நட்சத்திரங்களும் வெண்ணிற மேகங்களும் தோன்றின. கடலின் நிறம் பழையபடியே மாறியது. பெரிய அலைகள் சிறிய அலைகளாக மாறி, மரக்கலத்தைத் தழுவிச் சென்றது. மற்ற மரக்கலத்தில் இருந்தவர்கள் அவனின் வெற்றியைக் கரகோஷங்களுடன் கொண்டாடினர். அதைப் பார்த்துப் புன்னகை பூத்தபடி தன் மரக்கலத்தின் ஒரு தூணை அணைத்தான்.

அந்த மரக்கலத்தின் முனையில் செல்வம் தோன்றினார்.

"ம்ம்..உத்தரவு கொடு!" என்று கர்ஜித்தார்.

வசந்தனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"கட்டளை இடு!" என்றார் மீண்டும் மிரட்டும் தொனியில்.

"மரக்கலம் புறப்படட்டும்!" என்று உரக்கக் கத்தினான் வசந்தன்.

மரக்கலம் நகரத் தொடங்கியது...

**தேடல் தொடரும்...**

தொடர்கதை முழுவதும் படிக்க URI:
http://tamilnanbargal.com/node/52207



# பிரசவத்தில் பிரசவிக்கும் தாய்!!!

சுதா

கம்பனின் கற்பனைக்கெட்டாத
கவியொன்று பூத்தது என்னுள்
கவியே நீ
கண்ணனா !!! கண்ணகியா !!!

ஈருயிர் சுமக்க வைத்து
தாய்மை பட்டம் சூட்டி
பெண்மையை பூர்த்தியாக்கிய
வீர குடி வித்தே !!!

பொதிகை தமிழே
உன்னை உயிரிலே செதுக்கி
உதிரத்தை உணவாக்கி
பத்து திங்கள் காத்தேன் ...!!!

குலம் காக்கும் குருத்தே
குங்கும பூ பாலாம்
இசைகேட்டு நீ துயிலிட
வளைகாப்பு விழாவாம் ...!!!

எட்டி உதைத்து விளையாடி
கருவறையிலே வீணை மீட்டி
சிந்தையை மயக்கிய சிறு தளிரே
ஏங்கினேன் உன்முகம் காண ...!!!

மஞ்சள் திரையிட்டு ஆதவன்
மதி வருகைக்காக மறைந்திருக்க
முகில்கள் முத்தமிடும் மாலையிலே
பெற்றேன் பிரசவ வலியை ...!!!

அக்கணமே மனதில் மழை
இன்ப துளிகள் கண்களில்
சிப்பியின் முத்தாக முகம்காட்டி நீ
அம்மா என்றழைக்க வருவதையெண்ணி ...!!!

வலியின் வன்முறையில்
ரணம் தேகத்தை தீயாக்கி
உயிர் நாடியை இறுக்கி
ஆன்மாவை ரணமாக்கியது ...!!!

அந்நொடியில் இரத்த திலகமிட்டு
நவ ரத்தினமாய் உதித்தாய்
கீதத்தோடு உன்பிஞ்சு விரல்கள்
எனைத்தீண்டியதும் நானும் பிரசவித்து ...!!!

அள்ளி அணைத்து முத்தமிட்டேன்
அங்கமெல்லாம் என் உயிர் தங்கமே .
அங்கமானாய் அம்மாவின் வாழ்வில் ...!!!




# ஆதலால் காதல் செய்வீர் அன்னை மொழியை

சுதா

**தமிழா நான் ..!!!**

கல் தோன்றி மன் தோன்றாக் காலத்தே
முன் தோன்றிய மூத்த குடியில் பிறந்து
அகத்தியனின் ஞானம் பெற்று ..!!

பிள்ளைத்தமிழில் தாலாட்டி
அவ்வை மடியில் தவழ்ந்து
நெல்லியூட்டி வளர்த்தான் அதியமான் ..!!

முச்சங்கமிட்டு முக்கனி சுவையுடன்
முதறிஞர்களால் முத்தமிழாக முடிச்சூடி
கரைபுரண்டேன் காவேரி அன்னையாக ..!!

மூவேந்தர்களின் வாளில் திலகமாகி
ஈழம் தொட்டு இமயத்தில் கொடிநாட்டி
வங்காளயெல்லை தாண்டியது வீரம் ..!!

திரிகடுகத்தில் தீரா நோய் தீர்த்து
கம்பரின் கற்பனைக்கு காதலியாகி
விடுதலை வேங்கையானேன் பாரதியால் ..!!

வள்ளுவனால் உலகப் பொதுமறையாகி
வீரமாமுனிவரால் பாரெங்கிலும் பவனிகொண்டு
வான் புகழ் அடைந்தேன் நேற்றுவரை..!!

**தமிழா இன்று ..!!!**

அலமாரியில் உறங்குகிறேன்
அரசியலுக்கு விளம்பரமாகி
ஊடகத்தில் கற்பையிழக்கிறேன் ..!!

விதவையாக்கி விளையாடுகிறான் அந்நியன்
அனாதையாக மாண்டுபோகிறேன் வீதியிலே
ஈழத்தில் எம் மங்கையர் போல ..!!

**தமிழா நாளை ..!!!**

ஆங்கிலத்துடன் கலப்பு திருமணமாகும்
தமிழில் பேசினால் பரிசென்பார்கள்
அருங்காட்சியகத்திலே காட்சியளிப்பேன் ..!!

மலட்டு மொழியென பட்டம் பெற்று
தூசு படிந்து கரையானுக்கு இரையாவேன்
ஈழத்தில் எம்மினத்தைப் போல ..!!

நீ அன்னியமொழிக்கு அடிமையாகி
முகவரியிழந்து மூழ்கிவிடுவாய் இலமூரியாவாக
ஆதலால் காதல் செய்வீர் அன்னை மொழியை ..!!

# திசை மாறுமோ

Kirikasan **பகுதி 4 . கயமை தெளியுமா?**

**ஊரின் மத்தியில் :**

*மாவிலைத் தோரணம் மங்கல இன்னிசை*
*மன்னவன் மாளிகைமுன் - பல*
*பூநறு வாசமும் புன்னகை யும்கொள*
*பூரிப்பில் நின்றவர்கள் - சில*
*ஏவல்கள் வேலைகள் இன்பநல் நாட்டியம்*
*இத்தனைக் கும்நடுவே - பல*
*நாவது செந்தமிழ் மீது பகைகொண்டு*
*நீசமுரைத்திடக் காண்*

*வென்றோம் அவர்நிலம் என்றோர் உரமிட*
*வீதியில் கூத்திடுவோர் -இதோ*
*கொன்றோம் எனக் கூறிக் கூத்திடுவோர் கரம்*
*கொட்டி சிரித்தனர்காண் - நற்*
*சான்றோர் கூடும் சபை சட்டதுறைகளும்*
*சோர்ந்தே வெறுமைகொள்ள - அந்தத்*
*தேன்தமிழ் பேசிடும் நாட்டினை வென்றவர்*
*தீமை இழைத்துநின்றார்*

*வாசலி டைசில வண்ணப்ப தாகைகள்*
*வானென் றழைத்திருக்க - சொந்த*
*பேசுந்தமிழ் அதிலில்லைப் பிறன்மொழி*
*பூசிக் கிடந்தன காண் - இவர்*
*நேசமு டைத்தவ ரல்லர் பகைவரும்*
*நீதியற்றோர் அரசின் முடி*
*ஆளும் வகையினில் ஆடிடும் பொம்மையில்*
*ஆட்சி அமைத்துவிட்டார்*

*தீங்கிளைக்கும் பகை யோடு நலன்பெற*
*தோள் கொடுத்தே சிலரும் - கூடி*
*ஆங்கிருந் தார்அவர் ஆனந்த போதையின்*
*ஆழமும் காணநின்றார் - இனி*
*பூங்குயில் கானமும் புத்தொளி வண்ணம்*
*போதை கொள் மஞ்சமதில் இவர்*
*தூங்கியெழச் சுக தோரணம், மாலைகள்*
*தூவிக்கிடந்தன காண்*

✡ ✡ ✡

**சில மைல்களுக்கப்பால் :**

*உருள் பெரு ஊர்திகள் உளமது கிலிபட*
*ஊரினுள் நுழைவதையும்*
*தெருமுழு பேரணி தமிழல்ல யாரெனத்*
*தவித்தனர் தமிழ்க்குலமும்*
*ஒரு பெரு அழிவென உணர்வுகள் உறுத்திட*
*உயிர்ப்பய உணர்வெழவே*
*பரிவினை விரும்பியும் பலதலைவரின் விழி*
*பதிவொளி தனை இயக்க*

*விதி எனும் கருமுகம் கொடுமைகள் விளைத்திட*
*வழிந்தன வியர்வையல்ல*
*சதிபதியுடன் தவழ் குழந்தைகள் குரலற*
*செறிந்தன பிணமலைகள்*
*கதியின்றி நிசப்தமும் கனவுகள் எனவிழி*
*கணமதில் ஒளிவிலக*
*மதியுல கதைப் பெரு மதியொடு வலமிடும்*
*பதிகரு வியில் கண்டார்*

✡ ✡ ✡

**மன்னர் மாளிகையில் :**

*மாங்கனிச் சாற்றினில் தேன்கலந்தோர் மது*
*ஊற்றும் இதழுடையாள் - எழிற்*
*பூங்குழல் தான்விரித் தோங்கிடும் புன்னகை*
*பூத்தவள் மன்னவனின் - அயல்*
*மூங்கிலின் பொன்னெழில் மேவுகரத்துடன்*
*மெல்லென ஊட்டிவைக்க - கரம்*
*தாங்கிஒரு பெண்ணும் சாமரை வீசிடும்*
*தன்மையைப் பேணிநின்றாள்*

*ஆனந்த போதையில் வானில் மிதந்தவன்*
*ஆகாவென விழிகள் - இன்ப*
*தேனது மாந்தத் திளைத்தவனோ மனம்*
*தூங்கிக் களித்திருக்க - அயல்*
*வானது போற்றிடும் மானத்தமிழ்மகன்*
*வந்துகை கட்டி நின்றான் - என்ன*
*ஆனது வீரமோ தொன்மைக்கலி புறம்*
*தானெடு மார்புடையோன்*

*கூனலில் நெஞ்சுங் குறுகி வளைந்திடக்*
*காலடி நின்றவன்காண் - தமிழ்*
*மானமும் விட்டவன் மஞ்சத்தில்; தூங்கிட*
*மாறிக் கிடந்தவனும் -அந்த*
*ஆனந்த வேளையில் கூச்சலும் சத்தமும்*
*அண்மை எழுந்துவர - என்ன*
*ஆனது எண்ணிட முன்னர் விரைந்தொரு*
*ஆபத்தென உணர்ந்தான்*

*கொல் லுடன்கொல் எனக். கூவித்துடித்தனர்*
*கொன்று இனமழிப்போர் அட*
*நில்லென உள்ளமும் சொல்லிடும்போதிலும்*
*நிர்க்கதி என்றுணர்ந்தான் - இவர்*
*வெல்லென வீணரை வேண்டிஉதவிய*
*வெற்று மதியூகத்தை என்றும்,*
*கொல்லுமினம் தன்னைக் கொள்கை சிதைவுறக்*
*கொல்வரோ எண்ணிநொந்தான்*

✡ ✡ ✡

# இன்பமெனும் ஓடம், இன்னலின் மேல் ஆடுதடீ!

Sundar_Purushothaman

இனிய நிகழ்வுகள் எப்போதும் வாய்ப்பதில்லை - இருப்பினும்,
வறண்ட வனம்தனில் தென்றலாய்
சிலகணமது நம்முன் வீசத்தான் செய்கிறது!

இனிய நிகழ்வுகள் எல்லோர்க்கும் வாய்ப்பதில்லை-என்றாலும்,
இலையில் வைத்த இரண்டாவது இனிப்பைப்போல்
சிலமுறையது நம்மை சிலிர்க்கவும் செய்கிறது!

கனியது இனிக்குமென்றெண்ணிச் சுவைக்கின்றோம்..
வாயில் வைத்தது எட்டிக்கனியாகிறது!
பிணிதான் இனியென எண்ணித் துன்புறுவோம்,
வருவதறியாமல் வரம் நம்மைச் சேர்கிறது!!

உரமென் னறிவென எண்ணித் திளைத்தவன்,
துவள்கிறேனிது ஏட்டுச்சுரைக்காய்!
மரம்தான் நானும்! மண்ணெந்தன் மூளை!!

இடியொன்று தாக்கிபின்
இளைப்பாறலில்லாத காலத்தில்,
மடியொன்று வந்தது நான் தலைவைத்துறங்க!!

இரத்தம் வழியும் காயத்தில், இறகால் வருடின மருந்தது!

சத்தமின்றி அழுகின்றேன்...
எச்சமது துன்பத்தின் ஊறலா? இன்பத்தின் சாரலா!?
பாகற்காயொடு பச்சடிபோல்-அதன்
கதம்ப உணர்வைக் கட்டுரைக்க இயலவில்லை!

பாலினும் தூயதாய் பாசத்தைக் கண்டேன்!
அதைப் பெற்றிடும் கலயம்நான் கழுவப்படவில்லை!!
இன்னலின் சோகம், இன்பத்தில் சாகும்!
இவ்வின்னலோடின்பம் எப்போது சாகும்?!

முக்கண் முதல்வன்,
கண்களிரண்டிலும் கரந்தது இன்னலோ?! -அவன்,
நுதற் கண்ணைப் பிறையளவே திறந்தானோ?
அதை முழுதாய் திறந்தெந்தெந்தன் துயரத்தைத் துடைப்பானோ?

## மனிதனாக வேண்டும்!!!

*உடனே கவிஞனாகி*
*உலகைத் திருத்திட*
*தீர்மானித்தேன்!*

*சிந்தனைக் கடலில் மூழ்கி*
*கருத்து முத்துக் குளிக்க*
*நான் எத்தனித்தபோது....*

*மனசாட்சியாம்*
*கலங்கரை விளக்கக் கதிர்கள்*
*என்மீது பட்டன!*

*அந்த ஒளியிலே*
*என்னை நான் பார்த்தேன்!!*

*அப்போது உணர்ந்தேன்,*
*"கவிஞனாக முதலில்*
*மனிதனாக வேண்டும்"!!!*

*பால குருசாமி*

# யாரோ போட்ட வாந்தியில்.

nandagopal.d



*தேநீர் இடைவேளையின்*
*பரபரப்பு நேரமொன்றில்*
*தேநீர் அருந்த வந்து*
*அதற்க்கு முன்பு*
*தாகத்திற்கு தண்ணீர் குடிக்க*
*எத்தனித்த பொழுது குழந்தையின்*
*எச்சில் பட்ட தண்ணீர் என்று*
*முகம் சுளித்து டம்பாளரை*
*இரண்டு முறை கழுவி விட்டு*
*குடித்த அந்த மனித நாக்கு*

*கதிரவனின் மறைவிற்கு பின்*
*வெகு நேரம் கழித்து*
*கை பிடியில் சிக்கிய*
*மது கோப்பையில்*
*கடைசி ரச சொட்டில்*
*எங்கோ கழிவுகளில்*
*அமர்ந்த ஈ ஒன்று*
*விழுந்து இருந்ததை கவனித்தும்*
*எதையும் சுளிக்காமல்*
*ருசித்தது*
*அந்த சொரணை கெட்ட நாக்கு*

*யாரோ போட்ட வாந்தியில் புரண்ட*
*ஜடத்தின் வடிவம் வான் வழியே*
*வாழ்க்கை என்று மூளையற்று*
*முனகி கொண்டு இருந்தது*
*முக்கிய வீதியொன்றின் முடிவில்*

*விடியலில் பால் வாங்க வந்த குழந்தை*
*தன் தந்தையிடம் கேட்டது*
*" அந்த மாமாக்கு உடம்பு*
*சரி இல்லையாப்பா என்று"*

# தாய் ஒருத்தியை தேடும்.

kalpana.bharathi



*கணவன்மார்களே மனைவிமார்களே*
*கரமொன்று வரமாகக் கிடைக்காதா என்று*
*காத்துக் கிடக்கின்றன காப்பகத்தில்*
*மழலைச் செல்வங்கள்*
*பால்மணம் மாறிடும் பல் முளைத்திடும்*
*தவழ்ந்திடும் தத்தி நடந்திடும் ஓடிடும்*
*ஓடி விழுந்திடும் அழுதிடும்*
*அள்ளி அணைக்கியிலே மலர்ந்து சிரித்திடும்*
*கர்பத்தில் தரிக்கவிட்டால் என்ன*
*காப்பகத்தில் பெற்றால் என்ன*
*மாசற்றதடி மழலையின் முத்தம் !*

*கையாட்டி கூப்பிடுதடி*
*கைகொட்டிச் சிரிக்குதடி*
*தாவி வருகுதடி*
*தாய் ஒருத்தியைத் தேடுதடி*
*கண்மணியே கனி அமுதே என்று*
*கட்டி அணைத்திட தவிக்குதடி !*

*தாயாகிட தவமிருந்தது போதும்*
*ஆழ்கடல் அலையில் நீராடியது போதும்*
*ஆலயம் நூறு வலம் வந்தது போதும்*
*அணைத்திடும் கரங்கள் அன்பு ஆலயம்*
*அங்கே மழலை தெய்வம் !*
*தாய்மை ஒரு ஆராதனை !*

# பில்லா III: பில்லா Vs டிராகுலா - 7

Sivaji dhasan




**பகுதி - 7**

விதி என்றுமே மனிதர்களை விரட்டிக்கொண்டிருக்கும் சாட்டை. அதிலிருந்து யாரும் தப்பியதில்லை. பணக்காரனிலிருந்து பாமரன் வரை ஆட்டுவிக்கும் வல்லமை கொண்டது அது. இது வரை வெற்றியை மட்டுமே சுவாசித்துக்கொண்டிருந்த பில்லாவுக்கு தோல்விகள் கம்பளத்தை விரித்து வரவேற்றன. கசாப்புக் கடைக்காரனுக்கு ஆட்டின் மேல் பாசம் வந்தால் அவனால் கத்தியை ஓங்க முடியுமா? கடத்தல் தொழிலால் தன் உயிருக்கு ஆபத்து என்றிருந்தாலும் எதிர்த்துப் போராடியிருப்பார். ஆனால், ஒரே மகனின் உயிர் ஊசலாடும் சமயத்தில் சாதாரணத் தந்தையாக மாறிப்போனார்.

இவற்றையெல்லாம் சிந்தித்தபடி பில்லா டாக்ஸியில் சென்றுகொண்டிருந்தார். சாலையில் உள்ள மின்விளக்குகள் அவரைக் கடந்துகொண்டே போயின. நீண்ட பெருமூச்சை விட்டெறிந்தபடி தனது செல்பேசியை எடுத்து யாருக்கோ கட்டளையைப் பிறப்பித்தார். பிறகு, செல்பேசியை அணைத்து தன் கால்சட்டைப் பையிலிருந்த ஒரு சிறு துப்பாக்கியை எடுத்தார். அதில் தோட்டாக்கள் சரியாக உள்ளதா என்று பார்த்தார். அதை மீண்டும் கால்சட்டைப்பையில் போட்டுக்கொண்டு இருக்கையில் சாய்ந்து கண்களை மூடி மனதில் பட்ட ரணத்தை மறக்கப் போராடினார்.

வானில் உள்ள கருமேகங்களின் குழந்தைகளான மழைத்துளிகள் சிறு தூறலால் பூமியை நனைத்தது. தான் உட்கார்ந்திருந்த இருக்கையின் பக்கவாட்டில் உள்ள கண்ணாடியில் தண்ணீர் வழிந்துகொண்டிருந்ததை வெறித்த பில்லாவின் மனது சற்று நிம்மதி அடைந்தது என்றே சொல்லலாம். எவ்வளவு பிரச்சனைகள் இருந்தாலும், யாரும் தொல்லை செய்யாமல் யாருமற்ற சாலையில் பேருந்திலோ அல்லது காரிலோ அமைதியாக செல்லும்பொழுது பிரச்சனைகள் மறைந்துவிட்டதாக ஒரு பிம்பம் தோன்றும். ஆனாலும் பில்லா ஒரு விஷயத்தைச் செய்வதற்கு சித்தமாகிக்கொண்டிருப்பதை அவரது கூரிய கண்கள் கூறின.

பாரிஸில் உள்ள அந்த பிரதான சாலையில் டாக்ஸி சென்றது. டிரைவரின் கைகள் ஸ்டியரிங்கைப் பிடித்தபடி நடுங்கிக்கொண்டிருந்தன. அவ்வளவு மோசமான இடம் விக்டரின் வசிப்பிடம். கொலைகள் எல்லாம் காலை உணவு சாப்பிடுவது மாதிரி சர்வ சாதாரணமாக நடக்கும். போலிசும் பெரிய நடவடிக்கைகளை எடுக்காது.

*காதல்*

*பைத்தியம் போல . . .*

*எல்லோருக்கும் பிடிப்பதும் இல்லை*

*பிடிப்பதும் இல்லை.....*

*தமிழரசி*

அப்போது, அந்தச் சாலையில் ஒரு காட்சி நடந்தது. நான்கைந்து பேர் ஒருவனை தாக்கிக்கொண்டிருந்தனர். தாக்கப்பட்டவன் வலியால் துடித்து, தப்பிக்க வழி தெரியாமல் தவித்துக்கொண்டிருந்தான். அது போன்ற ஒரு சம்பவமே நடக்காதது போல் பில்லா விக்டரின் வீட்டை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

சிறிது நேரத்தில், ஒரு பெரிய வீட்டு கேட்டின் முன் வண்டி நின்றது. பில்லா இறங்கினார். டிரைவரின் முகமோ வாடிப் போன கத்தரிக்காய் போலிருந்தது. திரும்பி எப்படி இவ்விடத்தைக் கடக்கப் போகிறோமோ என்கின்ற பயம் அவரின் இதயத்துடிப்பை அதிகப்படுத்தியது.

விக்டர் வீட்டு கேட்டின் முன், சில பேர், தூங்கிக்கொண்டிருப்பவர்களைத் தூக்கிக்கொண்டு செல்வதைப் போல் தெரிந்தது. முதலில் அப்படி நினைத்த டிரைவர், பிறகு செயலற்றுப் போனார். அவர்கள் தூங்கிக்கொண்டிருக்கவில்லை. இறந்துவிட்டதாக உடலிலிருந்து வெளியேறிய ரத்தம் சொன்னது. டிரைவருக்குப் பயத்தில் வேர்த்துக்கொட்டியது.

ஆனால், பில்லா எவ்வித சலனமும் முகத்தில் காட்டாமல் "எவ்வளவு தரணும்?" என்றார்.

அவர் குரலில் உள்ள இரும்புத்தன்மையில் டிரைவரின்

உடல் செயல்படத் துவங்கியது போல பில்லாவை நோக்கினான். எங்கோ தூரத்திலிருந்து பேசுவது போல் மெல்லிய குரலில் பயத்தை கலந்து பார்வையில் மிரட்சியுடன், "ஐம்பது யூரோ சார்" என்றான்.

# விலையேற்றம்

கவியாழினி



*ஓலை வீட்டில் இருந்தாலும்*
*ஒய்யாரமாய் நான் வாழ்ந்தேன்*
*ஒரு பிடி உண்பதற்கும் என்னை*
*ஒருமுறை கடித்து உண்பான்*

*உழைத்து வருபவனின் உடல்வலியையும்*
*என்னை ரசித்து சாப்பிட மறந்துபோவான்*
*இன்று எட்டிநின்று என்னை வேடிக்கை*
*பார்த்து விரைந்து செல்கிறான்*

*பணம்படைத்தவன் வாங்குகிறான்*
*மனம் வதங்க அறையில் கொட்டிவைக்கிறான்*
*குளிர்பதன பெட்டியில் போட்டு*
*என்னை கண்டபடி வாட்டுகிறான்*

*ஏழை என்னை உரிக்கையிலே கண்ணில்*
*கண்ணீர் வர வைத்தேன் நான்*
*இன்று அவன் என்னை தூரமாக*
*நினைக்கயிலே கண்ணீரில் நான் தவிக்கிறேன்*

*இந்த விலையேற்றம் எனக்கு வேண்டாமே*
*என்னை சுற்றி அன்பானவர்கள் காணோமே*
*என் விலையையும் இறக்கிடுங்க எனக்கு*
*பிடித்த இடத்தில் என்னை சேர்த்திடுங்க*

***இப்படிக்கு நானுங்க வெங்காயமுங்க...***

பில்லா தனது பாக்கெட்டில் கைவிட்டு நூறு யூரோவை அவனுக்கு கொடுத்து விட்டு விக்டரின் வீட்டினுள் நுழைந்தார். சிறிதும் தாமதியாமல் டாக்ஸியைக் கிளப்பிக்கொண்டு சென்றான் அவன்.

பில்லா உள்ளே சென்றதும், ஒருவன் அவரின் முன் வந்தான்.

"எல்லாம் சரியாத்தானே இருக்கு?" என்றார் விக்டரின் வீட்டினுள் எரியும் விளக்கைப் பார்த்தபடி.

"காவலிருந்த எல்லோரையும் கொன்னுட்டோம் சார். இன்னும் வீட்டுக்குள்ள போகல. இங்க நடந்தது யாருக்கும் தெரியாது" என்றான்.

விக்டரின் வீட்டிற்குக் காவல் புரிந்திருந்த ஆட்களின் இறந்த உடல்களை நோக்கிவிட்டு வீட்டிற்குள் தனியாகச் சென்றார் பில்லா. அவரது நடையில் வேகம் கூடியது. கொலைவெறி அவர் மனதைப் பாறைபோல் ஆக்கி முகத்தை இறுக்கமாக்கியது. கையில் துப்பாக்கியை ஏந்தியபடி வீட்டின் மாடிப்படியில் ஏறி விளக்கு எரிந்துகொண்டிருக்கும் அறையின் கதவைத் திறந்தார்.

அங்கே விக்டர் இல்லை. அவன் மனைவியும் ஐந்து வயது மகளும் நடப்பவை ஏதும் அறியாமல் உறங்கிக்கொண்டிருந்தனர். பில்லா சிறிது தடுமாறினார். இவ்வளவு அழகான மனைவி, குழந்தையுடைய தந்தையைக் கொல்லத்தான் வேண்டுமா? என்று கூட எண்ணினார். திடீரென்று, அவரின் மனதில் டிராகுலா அவரை அலையவிட்டது நினைவில் துளிர்த்தது. மீண்டும் இறுக்கமான முகத்துக்கு மாறி கதவை ஓசை எழுப்பாமல் மூடினார்.

அடுத்த அறையின் கதவைத் திறக்கக் கைவைத்தார். அது உள்ளே பூட்டப்பட்டிருந்தது. தன்னுடைய துப்பாக்கியை சாவித் துவாரத்தில் வைத்துச் சுட்டார். சைலென்சர் பொருத்தப்பட்டிருந்த துப்பாக்கி என்பதால் சிறிய சத்தம் தான் எழுந்தது. கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றார்.

விக்டர் உறங்கிக் கொண்டிருந்தான். மூன்று பேர் படுக்க வேண்டிய படுக்கையில் அவன் ஒருவனே படுத்து நிம்மதி உறக்கத்தை ரசித்துக்கொண்டிருந்தான். அவன் தலைமாட்டு சுவரில் ஓர் ஓவியம் தொங்கவிடப்பட்டிருந்தது. சிறு மஞ்சள் வெளிச்சம் மட்டுமே அவ்வறையில் இருந்தது. பில்லா சில நிமிடங்கள் அவனை உற்றுப் பார்த்துவிட்டு துப்பாக்கியின் குழலால் அவனைத் தொட்டு எழுப்பினார்.

"விக்டர்..விக்டர்" என்றார்.

ஒரு சிறு முனகலுடன் கண்களில் படர்ந்திருந்த சோம்பலைத் துடைத்தபடி, "யாரது?" என்று நோக்கினான். பில்லாவைக் கண்டதும் அவனது புருவங்கள் மேலெழுந்து, "இங்கே எப்படி?" என்று கூற விழைகையில் ஒரு தலையணையை எடுத்து அவன் முகத்தில் புதைத்து துப்பாக்கியால் தலையணையில் மூன்று முறை சுட்டார். அவனது உடல் மூன்று முறை துடித்து அடங்கியது. முதல் தொட்டாவிலேயே விக்டர் மாண்டு போனாலும் தன் வெறி தீர இரண்டு

தோட்டாக்களை வீணடித்தார் பில்லா.

கீழுதட்டைக் கடித்தபடி அறையை விட்டு வெளிவந்து விக்டர் மனைவியின் அறைக் கதவைத் திறந்து அவர்கள் இன்னும் தூங்குகிறார்களா என்று பார்த்தார். அவர்களின் உறக்கம் கலையவில்லை என்பதைத் தெரிந்துகொண்டு அங்கிருந்து புறப்பட்டார். வீட்டு வாசலைக் கடந்து கேட்டை நோக்கி நடக்கையில் பில்லாவின் செல்பேசி அலறியது. எடுத்து காதில் வைத்தார்.

"என்ன பில்லா?" என்ற குரூரக் குரல் அவரின் கோபத்தீயைக் கிளறியது. "நான் விரிச்ச வலையில விழுந்திட்டீங்களே பில்லா. நான் விக்டருக்கு வேலை செய்றேன்னு நினச்சி இந்நேரம் நீங்க அவனை கொன்னுருப்பீங்களே" என்று பரிகாசமாகக் கூறினான் டிராகுலா.

பில்லா சலனமற்ற முகத்தை மாற்றாமல் ஓரிடத்தை வெறித்தபடி அவன் பேசுவதைக் காதில் விழுங்கிக்கொண்டிருந்தார்.

"நான் உங்க கூட கொஞ்சம் விளையாடினேன் பில்லா. விக்டருக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்ல. நீங்க கொஞ்சம் யோசிச்சிருந்தா விக்டர் உயிரோடு இருந்திருப்பான். உங்க கடத்தல் சரக்க போலீஸ் விக்டர் கேரேஜ்ல பிடிச்சிருக்காது. நாளைல இருந்து நீங்க போலிசால தேடப்படமாட்டீங்க. ஆனா நிலைமை கைமீறிப் போயிடுச்சே" என்று சிறிது இடைவெளி விட்டான்.

பில்லா அமைதியாக இருந்தார். பேசவில்லை. முக இறுக்கம் மட்டுமே தொடர்ந்தபடி இருந்தது.

"என்னுடைய ஆட்டம் ஆரம்பிச்சி நல்லா ஆடிட்டு இருக்கேன். நீங்க இன்னும் ஆரம்பிக்கலையே. சீக்கிரம். நான் காத்திட்டு இருக்கேன்" என்று சிரித்தபடி துண்டானது இணைப்பு.

பில்லா கேட்டைத் தாண்டி நடந்து தன் ஆட்கள்

> *உனக்காக காத்திருப்பேன்*
>
> *நீ வரும்வரை அல்ல*
>
> *நான் போகும்வரை..*
>
> *உன்னை விட்டு அல்ல*
>
> *உலகத்தை விட்டு...*
>
> *அனீஸ் ராஜ்..*

கொண்டு வந்த காரில் ஏறிச் சென்றார்.

★ ★ ★

அடுத்த நாள் காலை, மக்களின் கையில் ஃபிரான்ஸ் டெய்லி நியூஸ் என்கின்ற பத்திரிக்கையில் பில்லா ஓட்டிய வண்டியும் அதில் உட்கார்ந்திருந்த பில்லாவின் படமும் சூடான செய்தியாக மாறி மக்களிடம் பரவலாகப் பேசப்பட்டன. பில்லாவை ரகசியமாகத் தொடர்ந்துகொண்டிருந்த திவாகர் புகைப்படம் எடுத்து அதைப் பத்திரிக்கைக்குக் கொடுத்து பணத்தைப் பார்த்துவிட்டான். அந்தச் செய்தி அடங்கும் வேளையில் போலீஸ் பில்லாவின் வீட்டை முற்றுகையிட்டது.

அசிஸ்டன்ட் கமிஷனர் ஆன்சன் பில்லாவைக் கைது செய்ய வீட்டினுள் நுழைந்தார். சத்யம் மட்டுமே இருந்தார். பில்லாவைக் காணவில்லை. பில்லா இரண்டு நாட்களாக வரவில்லை என்றார். வீட்டினுள் போலீஸ் நுழைந்து இண்டு இடுக்கெல்லாம் தேடியது. அவரது தொழிற்சாலைகளிலும் ஹோட்டல்களிலும் கூட போலீஸ் தேடிக் களைத்து விட்டது. பில்லா இருக்கும் இடம் யாருக்கும் தெரியவில்லை.

பில்லா ரகசியமாக ஓரிடத்தில் நன்றாக இருக்கிறார் என்று மட்டும் ஆன்சனுக்குத் தெரியும். பில்லா ஓடி ஒளிந்ததை எண்ணி அவர் மனதில் சிறு மகிழ்ச்சி. விக்டர் கொல்லப்பட்டது, விக்டரின் கேரேஜுக்கு பில்லா கார் ஓட்டிச்சென்றது, இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கும் போது பில்லா தான் கொலை செய்திருப்பார் என்ற எண்ணத்திற்கு வந்தார் ஆன்சன். ஆதாரமாக செய்தித்தாளில் வந்த புகைப்படம் அவருக்கு எல்லையில்லா மகிழ்ச்சியை அள்ளித் தந்தது. பில்லாவைக் கைது செய்துவிடலாம் என்று ஆசைப்பட்டது தான் நிராசையானது. ஆனாலும் பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான் என்கிற பழமொழிக்கு ஏற்ப என்றாவது ஒரு நாள் பில்லா பிடிபடுவார் என்று மனதிற்கு ஆறுதலைத் தேடிக்கொண்டார்.

★ ★ ★

கடலில் ஒரு சிறிய கப்பலில் சாதாரண உடையணிந்து மாஃபியா கூட்டத்தின் தலைவர் ஜோசப் உட்கார்ந்து எல்லையில்லா பரப்பளவு கொண்ட நீலக் கடலை வெறித்தவண்ணம் ஓய்வெடுத்துக்கொண்டிருந்தார். அவ்வப்போது தன் கைக்கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டார். அது யாருக்கோ அவர் காத்திருப்பதை உணர்த்தியது. நேரம் கடந்து கொண்டே சென்றது. கடல் அலைகளின் இரைச்சலில் சற்று கண் அயர்ந்துவிட்டார்.

அப்பொழுது, ஒரு ஸ்பீட்போட்டின் என்ஜின் சத்தம் அவரை உறக்கத்திலிருந்து எழுப்பியது. பரத் தான் அந்தப் படகில் வந்துகொண்டிருந்தான். கப்பலின் அருகே படகை நிறுத்திவிட்டு கப்பலில் ஏறி ஜோசப்பை சந்தித்தான்.

அவன் வந்ததும் செய்தித்தாளை அவன் மீது வீசினார் ஜோசப். அதைப் பார்த்துவிட்டு இது பழைய விஷயம் என்பதைப் போல் லேசான சலிப்புப் பார்வையை ஜோசப்பிடம் வீசினான் பரத்.

"என்ன நடந்துட்டு இருக்கு?" என்றார் மிரட்டும் குரலில்.

"விக்டரை பில்லா தான் கொன்னுருக்காரு சார். இந்த பேப்பர்ல வந்த செய்தியும் உண்மை தான். ஆனா ஏன் அந்த நேரத்தில அவரே வண்டி ஓட்டிட்டு போனாருன்னு தெரியல. அதை விசாரிக்கணும். இப்போ பில்லாவை போலீஸ் தேடிட்டு இருக்கு. அவர் தலைமறைவாயிட்டாரு . எங்க ஒளிஞ்சிருக்காருனு தெரியல. ஆனா விக்டரை கொன்னதுக்கு ஏதோ காரணம் இருக்குனு எனக்கு தோணுது சார்" என்றான்.

"அன்றைக்கே என் முன்னாடி அவனைச் சுடப் பார்த்தானே"

"இல்லை சார். அது காரணமா இருக்காது. நான் விசாரிக்கிறேன். கொஞ்சம் டைம் தாங்க. எல்லாத்தையும் கண்டுபிடிக்கிறேன்"

"முதல்ல அந்த நியூஸ் ரிப்போர்ட்டரைக் கொன்னுடு. அவன் பெரிய தலைவலியா இருக்கான். பில்லா வேற நமக்கு குடைச்சல் குடுத்துட்டு இருக்கான். அவன் இனி நமக்கு தேவையான்னு யோசிக்க வேண்டியிருக்கு" என்று சிந்தித்தார்.

பரத் சிலையாக நின்றுகொண்டிருந்தான்.

"என் முன்னாடி மரம் மாதிரி நிக்காத. அந்த நியூஸ் ரிப்போர்ட்டரைக் கொன்னுட்டு வந்து பேசு" என்றார்.

பரத் அங்கிருந்து சென்றான்.

★ ★ ★

சஞ்சயின் மனைவி தன்னுடைய மகன் தர்ஷனை அழைத்துக்கொண்டு "வீனஸ் சர்க்கஸ்" க்கு வந்திருந்தார். அப்பா எங்கே? அப்பா எங்கே? என்று உயிரை வாங்கியதால் சமாதானப்படுத்த சர்க்கஸிற்கு கூட்டி வந்தார்.

பெரிய கூடாரம். நடுவே மைதானம் போல் மேடை. சுற்றிலும் வண்ண வண்ண விளக்குகள். அதைப் பார்க்கக் குழுமியிருந்த பார்வையாளர்கள். பார்வையாளர்களை மேலும் பரவசமாகக ஜோக்கர்களின் அணிவகுப்புக்கள். ஜோக்கர்களின் விளையாட்டைப் பார்த்து ஆர்ப்பரித்த குழந்தைகள் என எண்ணற்ற பேர் அங்கே கூடியிருந்தனர்.

கையில் ஐஸ்கிரீமை ருசி பார்த்தபடி சர்க்கஸை ரசித்துக்கொண்டிருந்த தர்ஷன் லேசான தடுமாற்றத்திற்கு உள்ளானான். மேடையில் ஒரு ஜோக்கர் ஒற்றைச் சக்கர சைக்கிளை வித விதமாக ஓட்டியபடி வித்தை காட்டிக்கொண்டிருந்தார். அவரைப் பார்த்த தர்ஷனுக்கு தன் வீட்டுக்கு வந்த ஜோக்கர் ஞாபகம் வந்தது. அவரின் நடை, விளையாட்டுத்தனம் எல்லாம் அப்படியே ஒத்துப்போனது. அப்பாவுடைய நண்பர் இவராகத் தான் இருக்கும் என்று முடிவெடுத்தான். இவரைப் பார்த்தால் பில்லா அங்கிள் போன் செய்யச் சொன்னாரே என்று நினைத்தான்.

தன் அம்மாவைப் பார்த்து, "பில்லா அங்கிளோட பேசணும்" என்றான்.

திடீரென்று அவன் கூறியதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த அவன் அம்மா, "ஏன் அவர் கிட்ட பேசணும்?" என்றார்.

"பேசணும். போன் பண்ணி குடு" என்று அழத் தொடங்கினான் அந்தப் பாலகன்.

வேறு வழி இல்லாத காரணத்தால் குழந்தையைக் கடிந்துகொண்டே பில்லாவின் நம்பருக்கு போன் செய்தார்.

சில நொடியில் "ஹலோ" என்றது ஓர் ஆண் குரல்.

"ஹலோ" என்று கூறி பின், தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு, "டேவிட் சார் இருக்காரா?" என்றார் சஞ்சயின் மனைவி.

"அவர் இல்லையேம்மா" என்றார் மறுமுனையில் பேசிய சத்யம்.

"தர்ஷன் தான் பேசணும்னு சொன்னான். அவன் கிட்டேயே சொல்லிடுங்க" என்று போனை தர்ஷனிடம் கொடுத்தார்.

"ஹலோ" என்றான் தர்ஷன்.

"சொல்லுடா குட்டிப்பையா. பில்லா அங்கிள் இப்போ ஊருல இல்ல. அவர் வந்ததும் உன்கிட்ட பேசச் சொல்றேன் சரியா?"

"அப்படியா தாத்தா? சரி, அவர் என்கிட்டே ஒண்ணு சொல்லச் சொன்னாரு. அதை சொல்லிடுங்க. அவர் தேடுற ஜோக்கர் அங்கிள் 'வீனஸ் சர்க்கஸ்'ல இருக்காரு. அவரு பச்ச கலர் ஜோக்கர் பேண்ட்டும் மஞ்ச கலர் கோடு போட்ட சட்டையும் போட்டுட்டு இங்க சைக்கிள் ஓட்டிட்டு இருக்காரு" என்றான் மழலை மொழியில்.

சத்யமுக்கு இன்ப அதிர்ச்சியாகிப் போனது. உடனே அழைப்பைத் துண்டித்து பில்லாவைப் பார்க்க ஓடினார்.

★ ★ ★

தர்ஷன் கூறிய அந்த ஜோக்கர் மனிதன் சில

மாதங்களுக்கு முன்னால் தான் அந்த சர்க்கஸில் வேலைக்குச் சேர்ந்தான். அவன் காட்டும் வித்தையில் குழந்தைகள் குதூகலமாகியதில் அதிக சம்பளம் கொடுத்து வேலைக்கு வைத்துக்கொண்டார் முதலாளி. இது நாள் வரை யாரிடமும் பழக்கம் ஏற்படுத்திக்கொள்ளாமல் தான் உண்டு தன் வேலையுண்டு என்று இருந்தான். ஷோ முடிந்ததும் அங்கிருக்காமல் கிளம்பிடுவான் அவன். அவன் நல்ல வித்தைக்காரன் என்பதால் முதலாளியும் அவனைக் கண்டுகொள்ளவில்லை.

இரவு ஷோ முடிந்து ஜோக்கர் வேஷத்தைக் கலைக்காமல் சுட்டிக் குழந்தை போல் நடந்து வெளியே வந்தான். மின்விளக்கின் வெளிச்சத்தில் தன் இருசக்கர வாகனத்தை அடையாளம் கண்டு சிரித்தபடியே நடனமாடிக்கொண்டே சென்றான்.

சுற்றியிருக்கும் கட்டடங்களின் ஜன்னலின் வழியே பல துப்பாக்கிக் குழல்கள் அவனைக் குறிபார்த்தன. அவன் அருகே பல கார்களில் பில்லாவின் ஆட்கள் கண்காணித்துக்கொண்டிருந்தனர்.

நிலைமை சரி இல்லை என்பதை நொடிப் பொழுதில் உணர்ந்துகொண்ட ஜோக்கர், எல்லோரையும் பார்த்து நமட்டுச் சிரிப்பு சிரித்து சின்ன குலுக்கல் நடையோடு பைக்கில் ஏறிப் பறந்தான். பல கார்கள் அவனைத் துரத்தின. கார்களின் ஹெட் லைட் வெளிச்சம் அவனைச் சரியாகப் படம் பிடித்தது.

அவன் பின்னே திரும்பி, கூசும் வெளிச்சத்தை நோக்கிவிட்டு தன் பைக்கை மேலும் வேகப்படுத்திச் சென்றான். நாலாபுறமும் கார்கள் சூழ்ந்தன. ஒரு கார் அவன் பைக்கை வேகமாக முட்டியது. பைக் ஒரு பக்கம் அவன் ஒரு பக்கம் என தூக்கியெறியப்பட்டனர்.


சுற்றியெங்கும் இருள். காரின் வெளிச்சத்தில், அவன் விழுந்திருப்பதை எல்லோரும் பார்த்தபடி காரில் இருந்து இறங்கினர்.

**தொடரும்...**

தொடர்ந்து படிக்க URI:
http://tamilnanbargal.com/node/52686

# பழமை என்றால் சிறுமையோ ...?

கே இனியவன்



வாடி
விழுந்த மலரொண்டின்
சோகக்கதை கேளீர்
வாடி விழுந்தது என் குற்றமா ..?
தாங்கி வைத்திருந்த காம்பு
தள்ளி விட்டது குற்றமா ...?
இளமையாக இருந்த போது
உவமைக்கு என்னை
பயன்படுத்திய - கவிஞரே
பதில் கூறுங்கள் .....!!!

தேய்ந்து
அறுந்த செருப்பொன்றின்
சோகக்கதை கேளீர்
தேய்ந்தது என் குற்றமா ..?
தேய்த்தவர் கால் குற்றமா ...?
என் சோடியை இழந்த நான்
தெருவோரத்தில்
வீசப்பட்டுள்ளேன் - தவிக்கும்
என் மனசை யாரறிவார்
பராபரமே ....!!!

கிழிந்த சட்டையின்
சோகக்கதை கேளீர்
கிழிந்தது என் குற்றமா ...?
கிழிக்க வைத்த உடலின்
வியர்வை குற்றமா ...?
உடலுக்கு அழகுசெய்த
என் வாழ்க்கை இப்போ
துடைப்பு துணியாக
மாறிவிட்ட என் வாழ்க்கை ...!!!

பழமையானால் பாராமுகம்
காட்டும் எம் சமுதாய
பாரம் பரியம் - இதில் மட்டும்
பழமை பேணும் கோட்பாட்டை
காலத்தால் கடைப்பிடிப்பது
விந்தையிலும் விந்தைதான் ...!!!




# மௌனங்கள் உயிர்த்தெழுந்தால்

## பகுதி 21

மணிகண்டன்

இரவினில் நீ விழி மூடி தூங்கும் அழகினை
சாளரத்தின் வழியே விழி துளைத்து
இதயம் தொலைத்த விண்மீன்கள்
கவிதை படைக்க என்னை துணைக்கு அழைக்கின்றன !

என் உள்ளங்கையதனில் உந்தன் கையெழுத்தினோடு
கைவிரல் ரேகையும் பதிய வாழ்த்து சொல்லும்
எந்தன் பிறந்தநாளினை வருடம் முழுவதும் கொண்டாடிட
அனைத்து நாள்காட்டியோடும் பேசி வருகிறேன் !

எனது நினைவு வரும்போதெல்லாம்
உனக்கனுப்பிய கவிதைகளை படிக்கிறேன் என்றாய்
உனது விழியின் பிரதிகளைதானே கவிதையாக்குகிறேன்
அதை அதே விழிகளால் மீண்டும் புசிப்பதும் ஓர் அழகுதான் !

உனது இமையிலிருந்து உதிர்ந்த மயிரொன்றை
வண்ணத்துப்பூச்சிகள் புடை சூழ
தங்க பல்லக்கில் நந்தவனத்திற்கு கொண்டு செல்கிறது!
ஒரு வண்ணம் கொண்ட முடியினோடு பல வண்ணம் கொண்ட
வண்ணத்துப்பூச்சிக்கென்ன காதலோ !

நேற்று காலை பூங்காவில்
முடி வெட்டிக்கொண்ட புல்வெளிகள்
மாலை எனை சந்திக்க மருதாணியிட்ட கையோடு
காலடி எடுத்து வைத்து வந்து சென்ற பின்பு
மீண்டும் கால் அடி உயரம் வளர்ந்து விட்டதாம் !

நின் மயில் விழிக்கு
அழகாக இல்லையேனும்
அடிமையாகவாது எனது கவிதைகளை
தோகையென வைத்துக்கொள் !

நின் விழிப்புன்னகைக்கும்
அதைச்சார்ந்த எனது பாக்களுக்கும்
வாரக்கடைசியோ மாதக்கடைசியோ
தெரியாத பெயர்தான் இன்னமும் !

கோடி முறைக்கு மேல்
நின் விழியதனை கவிதைகள் கவிதைக்குள்
நலம் விசாரித்து வருகின்றன்
கோடிக்கு ஒரு முறையேனும்
விழிகள் கவிதைகளை
நலம் கேட்குமென தவம் இருக்கின்றன !

நின் விழிகளால் எல்லா வித
இலக்கண குறிப்புகளையும்
கூட்டுக்குடும்பமென ஒரு கவிதைக்குள்
அடக்கி அடங்கி கிடக்கின்றன !

வானம் எனும் காகிதம் விரித்து
மேகம் கொண்டு நீர் தெளித்து
வானவில் தொட்டு கோலமிட்டு
நின் விழி மை தொட்டு கவிதை எழுதுகிறேன்
காகிதம் தீர்ந்துவிடும் போல
கவிதைகள் இன்னும் ஆரம்ப நிலையிலே !

# காத்திருக்கிறது

கவியாழினி



நீயும் நானும்
ஒன்றாய் அமர்ந்து
பேசிய சாய்வு
நாற்காலியும்

நாம் பாதம் பதித்து
ஓடிவிளையாடிய
கிளைபரப்பிய
மரங்களும்

நாம் பாதம்பதித்து
இணைந்து
வருவோமென

தரையில்
இலைகளை பரப்பி
கையில்
இரு ரோஜா
மலர்கள் கொண்டு

வரவேற்க
நம்பிக்கையோடு
காத்திருக்கிறது
நம் வரவிற்காய்..

# மாசில்லா அன்பு

Pandima

சிறு சாரலில் சிலிர்க்க
ரசித்து நடந்து போகிறேன்
அதி மழைக் கூடினாலும்
உடல் குளிர நடுங்கினாலும்
குடையோடு வந்து விடாதே
கூடவே வா விரும்புகிறேன்

கால் வலிக்க நடந்தாலும்
பட்டினியாய் கிடந்தாலும்
மயங்கியே விழுந்தாலும்
அறுசுவையில் சமைத்து
உணவோடு வந்து விடாதே
கவிதை தா எழுந்துவிடுவேன்

பள பளக்கும் உடை தேடி
பெரும் பொருளில் அணி வாங்கி
மயக்க வைக்கும் மாளிகையில்
மகிழ வைக்க கனவு காணாதே
சிறு மண் கீற்றுக் குடிசையில்
இறுக்கி உறங்க ஆசைப்படுகிறேன்

பாவமெனப் பெரிதாய் கலங்கி
பழி எது வருமோ என்றஞ்சி
குழம்பிப் போகாதே வழித்தப்பி
பிடித்து வந்த கூட்டுப் பறவையல்ல
மாசு தீண்டாத் தூய உறவதை
உனக்கு பரிசாக்கவே காத்திருக்கிறேன்

# வெள்ளை நிலா ஒன்று

கல்பனா பாரதி

கோள்கள் சுற்றுது
சூரியனை !
பூமியும் சுற்றுது
சூரியனை !
வெள்ளை நிலா ஒன்று
சுற்ற வந்தது பூமியை !
மகிழ்ச்சியில்
தன்னைத்தானே
சுற்றத் துவங்கியது பூமி !
அன்று முதல்
இரவும் பகலும்
இடைப்பட்ட மாலையும்
காதலும்
நமக்குக் கிடைத்தது
பூமியில் !

# பெண்ணொருத்தி புலம்புகிறாள்...

கனகீஸ்



ஆத்து தண்ணீ ஊத்து தண்ணீ
அத்தனையும் வத்திருச்சே_
ஆனா நா வடிக்கும்
கண்ணீரு வத்தலையே.....

சொத்து சுகம் கேக்குலியே
சோறு தண்ணீ கேக்குலியே _
உன் ஒத்த சொல்லு
கேட்டிடவும் கூடுலியே......

ஊர நா நம்புலியே
என் உள்ளத்தையும் நம்புலியே
உன்னை தானே நம்பினேனே
உள்ளுக்குள்ளே இப்ப வெம்பினேனே.......

மண்ணுலையும் ஆசையில்லை அட
பொன்னுலயும் ஆசையில்லை
உன் ஆசைமுகம் பாத்திடத்தான்
ஆயுசுக்கும் ஆசைப்பட்டேன்.....

கண்ணுதான் பட்டுருச்சோ
கால நேரம் கெட்டிருச்சோ
உன் பொன்னு மனம் வாடிப்போக
நா பொலம்பி தவிக்கிறனே......

பொங்கி வச்ச சோறும்
புடிச்சு வச்ச நீரும்
என் தொண்டை நனைக்கிலியே
என்வயித்துக்கும் இப்போ பசிக்கலியே.......

ஆருனா ஆரிடுமா
அத்தனையும் மாறிடுமா?.....
யாரோ சொல்லிருந்தா
ஆருதலா நீயிருப்ப.....

நீயே சொன்னதால
நாதியத்து நானிருக்கேன்.....

வேலை செய்ய தோணிலியே
வேதனையை சொல்லிடவும் ஆளில்லையே _
மனம் புழுங்கி சாகுறனே
புத்தியின்றி வாடுரனே......

மாலக் கருக்கலிலும்
அந்த மையிருட்டுவேளையிலும்
பேசிக் களித்த கதை
என் நெஞ்சுகுழி பொசுக்குதடா.....

உறவா நீயிருந்தா உதறி விட்டிருப்பேன்....
உசுரா நீயிருக்க உன்ன விட்டுபுட்டு
எப்படி நான் வாழ்ந்திடுவேன்?.........

அட சாட்சி தேவையில்லை
நீ தந்த சத்தியமும் மெய்யிலையோ...
பாலும் திரிஞ்சிருச்சோ
உன் பாசமும் மாறிடுச்சோ.....


உசுர உருக்கி நா
என் உள்மனச சொல்லிபுட்ட
காலம் கடத்தாத...
என் கனவை கலைக்காத....

ஓடி நீ வந்து விடு
ஒத்த சொல்லு பேசிவிடு
வாடி நா நிக்கிறனே
வந்து நீயும் சேர்ந்து விடு......

காலந்தான் மாறிடுமா _உன்
கனிவு மொழி கேட்டிடவும்....
நேரம் தான் விடிஞ்சிருமா _உன்
நேச முகம் பாத்திடத்தான்......

# அன்னிய மொழி மோகம்

கனகீஸ்




வீதிக்கு வீதீ இருக்குதுங்க பள்ளிக்கூடம் தான்....
அட எங்கயும் கேக்கல எங்கயும் கேக்கல _
நம் தாய் மொழி கீதம் தான்....

அஞ்சு வயசுல பள்ளிக்குப் போனோம்....
அது நம் காலந்தான்.... அட
அரக்கால் சட்டை போடத்தெரியலை
அவன் முதுகுல பாரந்தான்.....

அம்மா, அப்பா சொல்லிய காலம்...
மாறிப் போயிடுச்சு..... அட
மம்மி, டாடி சொல்லிடத்தானே
இப்ப மவுசும் கூடிடுச்சு.....

வெள்ளைக் காரன் போட்டுக்கிட்டான்
கோட்டும், சூட்டும் தான்.... அட
வெப்ப நாட்டிலும் நாம் ஏன் போடனும்
அந்த கோமாளி வேசம் தான்....?

கொள்ளை அடிக்கிறான் கொள்ளை அடிக்கிறான்
அந்த யுகேஜி படிப்புக்கும் தான்....
கூலி செஞ்சும் நாம ஏன் கொட்டிக் கொடுக்கனும்
எல்லாம் அன்னிய மோகம் தான்.....

அட எதுதா இல்லை எதுதா இல்லை
நம் தமிழ்வழிக் கல்வியில?....
நாம ஏன் சேர்க்கனும் நாம ஏன் சேர்க்கனும்
அயல்மொழிப் பள்ளியில?......

குழந்தைங்க என்ன குத்தமா செஞ்சுது?
எதுக்குங்க சிறைவாசம்?.... நாலு
செவுத்துக்கு மத்தியில் அடஞ்சி
கிடக்கும் அடிமை மொழி நேசம்?.......

அட எப்பங்க குறையும் எப்பங்க குறையும்
உங்க அன்னிய மொழிப் பாசம்?.....
இன்னும் எதுவரை போகுமோ எதுவரை போகுமோ?
உங்க ஆங்கில இன மோகம்?.........

# தமிழ் தளங்களும் களைகளும்....

பூங்கோதை

சில வாரங்களுக்கு முன்னரே இந்தப் பதிவை எழுதத் திட்டமிட்டிருந்த போதிலும், கடந்த சில நாட்களாக முன்னர் வெளிப்படை அரட்டையில் (Public Chat) நான் அவதானித்த சில விடயங்களும் மனதை நெருடுவதாக இருக்கவே, உடனடியாக இதை எழுதலாம் என முடிவெடுத்தேன்.

சமூக வலைத்தளங்கள் எமக்கு பல வகையிலும் நன்மை பயப்பதாகவே உள்ளது. எனினும் நாம் அதை எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்தே அதன் விளைவுகள் நமக்கு கிட்டுகின்றன. சாதாரணமாக நாம் வாழும் சமூகத்தில் எம்மைச் சூழ நல்லவர்கள் மட்டுமன்றி தீயவர்களும் இருக்கவே செய்கிறார்கள். சமூகத்தில் நாம் நேரடியாகப் பழகும் நபர்களே இப்படி இருக்கும் போது, சமூக வலைத்தளங்களில் முகம் தெரியாமல் பழகும் நபர்களில் கெட்டவர்களுக்குப் பஞ்சமே இருக்காது என்பது அனைவரும் புரிந்து கொள்ளக் கூடிய ஒன்றே.

அந்த வகையில் வலைத்தளங்களில் பெண்கள் பலரும் சில நாகரீகமற்ற ஆண்களினால் தொல்லைகளுக்கு உள்ளாவது தவிர்க்க முடியாததே. ஆனால், சகோதரிகளே... தோழிகளே....

எங்களைப் பாதுகாக்க மற்றவர்கள் வரவேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. எம்மை நாம் தான் பாதுகாக்க வேண்டும். ஒருவரோடு பேசும் போது ஆரம்பத்தில் எல்லா ஆண்களுமே மிகவும் நாகரீகமாகப் பேசினாலும் அவர் தப்பான ஒருவரா என்பதை அடுத்த சில சம்பாசனைகளில் புரிந்து கொள்ள முடியும். சில வார்த்தைகளேனும் மனதை நெருடும் வகையில் ஒருவர் பேசினால், அப்பொழுதே சுதாகரித்துவிட வேண்டியது உங்கள் பொறுப்பு. அப்படி ஒருவர் தவறான விதத்தில் பேசுகிறார் என்று நீங்கள் உணர்ந்தால் அவருக்கு சந்தர்ப்பம் கூடக் கொடுக்கத் தேவை இல்லை. உடனேயே அவரை உங்கள் நட்புவட்டத்தில் இருந்து நீக்கவும் தடை செய்யவும் முடியும். நீங்கள் இத்தகையவர்களுக்குப் பயந்து முடங்கிப் போக வேண்டிய அவசியம் இல்லை. எத்தனை பேர் வந்தாலும், எத்தனை மாற்றுப் பெயர்களில் வந்தாலும், அவர்களை உதறித்தள்ளி விட்டு நீங்கள் என்ன நோக்கத்தில் இணையத்தில் வந்தீர்களோ அதை செவ்வனே செய்து கொண்டே இருங்கள். தேவையானால், வேறு தோழிகளின் உதவியை நாடுங்கள். ஆதாரங்கள் இருக்குமாயின் தள நிர்வாகத்திடம் முறையிடுங்கள். இந்தத் தகவலை/ ஆலோசனையை நான் சொல்வது இணையத் தளங்களில் புதிதாக நுழைந்து, சில நடத்தை கெட்ட ஆண்களின் இத்தகைய பேச்சுக்களால் மனமுடைந்து, மன உளைச்சலுக்கு ஆளாகி, இணையத் தளமே வேண்டாம் என நிறுத்தி விடும் சகோதரிகளுக்காக மட்டுமே.

மேற்குறிப்பிட்ட சகோதரிகளை விட வேறு வகையான சில சகோதரிகளுக்கும் சில விடயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

சகோதரிகளே.. பெண்ணாக இருந்தும் இப்படி நான் சொல்வதற்கு முதலில் மன்னிக்கவும். இன்னும் சில பெண்கள் அப்படிப்பட்ட ஆண்கள் நாகரீகமின்றிப் பேசுவதற்கு அனுமதிக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும். ‘அப்படி’ப் பேசுவதை இவர்கள் ஒருவகையில் விரும்புகிறார்கள். ஆனால் ஒரு அளவுக்கு மேல் அதை அனுமதிக்க முடியாமலோ அல்லது அவர்களுடைய ஏதாவது எதிர்பார்ப்பு நிறைவேறாமலோ தான் பயன்படுத்தும் இணையதளங்களை விட்டு வெளியேறும் இவர்கள்

> *காக்கை தூக்கிய வடை*
> *நீ வைத்திருப்பாயா ..?*
> *தவறவிடுவாயா..?என்ற*
> *ஏக்கத்தில் நான்...!!!*
>
> *நரிக்கு*
> *எட்டாத திராட்சை நீ*
> *புளிக்கும் என்று போக*
> *முடியவும் இல்லை*
> *எட்டுகிறாயும் இல்லை ...!!!*
>
> *இரண்டுபேரும் ஊதிய*
> *இதயபலூன் -நீ*
> *அளவுக்கு மீறி ஊதி*
> *வெடித்த பலூனை பார்த்து*
> *சிரிக்கிறாய் ....!!!*
>
> *கே இனியவன்*

தன்னிடம் பேசிய நபரின் மீது மட்டுமல்லாது அந்தந்த தளங்களின் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டு, தாமாகவே அந்தத் தளத்துக்கு எதிரான பரப்புரைகளில் ஈடுபடுகின்றனர்.

மேற்குறிப்பிட்ட விடயத்தை இல்லையென்று மறுப்பவர்களுக்கு ஒரு கேள்வியை முன்வைக்கின்றேன். உண்மையில் ஒரு தளத்தில் தப்பான ஆண்களால் மனமுடைந்து வெளியேறும் ஒரு பெண் இன்னுமொரு இணையத்தளத்தில் இயங்க முடியாது. ஏனென்றால் எல்லா இடத்திலும் இத்தகைய ஆண்கள் இருக்கவே செய்கிறார்கள். உதாரணமாக, ஃபேஸ்புக்கில் இல்லாத அயோக்கியர்களா?... ஆனால் எத்தனை பெண்கள் இன்னும் அங்கே உலாவுகிறார்கள்... எனக்கு அத்தகைய ஆண்களின் தொடர்பைத் தவிர்க்கத்

தெரியவில்லை என்பதற்காக ஃபேஸ்புக் வலைத்தளமே தவறானது, கெட்டது என்று நான் சொல்வது எந்தவகையில் நியாயம்?

பேஸ்புக்கிலும் கூகிளிலும் இருப்பதைப் போலவே மற்ற பல தமிழ் தளங்களிலும் பெண்களை குறிவைத்து பேசக்கூடியவர்களும் ஆண்களுடன் பேசுவதற்காகவே வரும் பெண்களும் இருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது. அவர்கள் தனக்கான ஆசையை அல்லது தேவையை நிறைவேற்ற இணையத்தையோ வளர்ந்து வரும் தொழில் நுட்ப வசதிகளையோ பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்றே கூற வேண்டும்.

ஆனால் இவ்வாறான வசதிகள் பெருக பெருக தன்னை பாதுகாத்துக்கொள்ளும் வசதிகளும் பெருகி வருகின்றன என்பது தான் உண்மை.

தமிழ் தளங்களைப் பொறுத்தவரை பலவகையான தளங்கள் இருப்பினும் அவற்றில் நல்ல தளங்களை தெரிவு செய்து அவற்றில் எழுதி நம் எழுத்துத்திறமையை வளர்க்கலாம்.

பேஸ்புக் போன்ற சமூக தளங்கள், பல்சுவை தளங்கள், எழுத்தாளர்கள் எழுதும் பதிவுகளைத் தாங்கி வரும் இணைய இதழ்கள், செய்தி தளங்கள், அரட்டைக்காக என்றே இருக்கும் தளங்கள், தனிநபர் எழுதும் வலைதளங்கள், சினிமாக்களையும் பாடல்களையும் முறைகேடாக இணையத்தில் வெளியிடும் தளங்கள், குழுமங்கள் அல்லது மன்றங்கள் (Forums), ஆபாச தளங்கள் என ஓரளவு தளங்களை வகைப்படுத்த முடியும்.

இவற்றில் சமூக தளங்கள், மன்றங்கள், அரட்டைகள் இவற்றில் தான் பெண்களுக்கு எதிராக பல நிகழ்வுகள் அதிகம் நிகழ்கிறது. அவற்றை எளிதில் தடுப்பதும் இயலாததாக இருக்கிறது. வலைதளங்களில் நடப்பது அதிகமாக தனிநபர்கள் போடும் குடுமிச்சண்டையாகவே இருக்கிறது. அதனால் அதிலிருந்து வெளிவருவது மிக எளிதான ஒன்றே.

ஆனால், சமூக தளங்களில் நாம் மட்டுமல்லாது நமது மற்ற நண்பர்கள், உறவினர்கள் என இருப்பதால் அங்கே ஒரு பிரச்சனை என்றால் நாம் கவனமாக கையாள வேண்டியிருக்கிறது.

சில தினங்களுக்கு முன்பு பேஸ்புக்கில் ஒருவர் பெண் ஐடியில் வந்து 'இன்னுமா தமிழ் நண்பர்கள் தளத்தில் இருக்கிறீர்கள்?' என்று கேட்டார். இத்தளத்தில் பலர் தன்னிடம் தவறாக நடந்துகொண்டதாகவும் புகார் அளித்தும் பயனில்லை என்று கூறினார். அத்துடன் தள நிர்வாகத்தின் மேலும் புகார்களை அடுக்கிக்கொண்டு போனார். இருபக்க நியாயமும் அறிவதற்காக பலரிடம் விசயங்கள் சேகரிக்க ஆரம்பித்தேன். அவரிடம் சிலர் தவறாக நடந்துகொண்டிருப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஏனென்றால் அந்த அனுபவம் எனக்கும் உண்டு. ஆனால் நிர்வாகத்திடம் சரியான ஆதாரம் காட்டியிருந்தால் அவர்களை தடுத்திருக்கலாம். நான் அவ்வாறு தான் சிலரை தடை செய்தேன். ஆதாரம் இல்லாமல் ஒருவர் சொல்கிறார் என்பதற்காகவே யாரையும் தடை செய்துவிட முடியாது, ஆனாலும் அவ்வாறு நடந்து கொண்டவர்கள் தற்போது தளத்தில் அதிகமான பங்களிப்பில் இல்லை என அறிந்தேன். முன்பு எப்போதோ நடந்ததை வைத்து இப்போதும் தளத்தின் மீது குறைசொல்லிவிட்டு வேறு தளங்களைப்பற்றியும் கூறும் போது தளத்தின் வளர்ச்சியை பொறுத்துக்கொள்ள இயலாதவர்கள் வேண்டும் என்றே தளத்தில் எழுதும் நபர்களை தளத்தை விட்டு விலகச்செய்வதற்காக இவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பது மட்டும் புரிந்தது.

நீண்ட நாட்களாக எனது தனிப்பட்ட வலைப்பூவில் மட்டும் என் படைப்புகளைப் பதிவு செய்து வந்த நான், சமூக வலைத்தளம் என்று முதன்முதல் காலடி எடுத்து வைத்தது தமிழ் நண்பர்கள் தளத்தில் தான். சுமார் ஒன்றரை வருடங்களாக இங்கே உலாவிக் கொண்டிருக்கும் எனக்கு இத்தகைய அனுபவங்கள் ஏற்படவில்லையா என்று கேட்கிறீர்களா?... நன்றாகவே அனுபவப்பட்டேன். முன்பு குறிப்பிட்டபடி நானும் இணையத்துக்குப் புதுவரவு என்பதால் மனமுடைந்து இணையத் தளமே வேண்டாம் என நினைக்கும்படி ஒரே நேரத்தில் தள உறுப்பினர்கள் மூன்று கேடுகெட்டவர்களின் தாக்குதலுக்கு உள்ளானேன். சில நாட்கள் தளப்பக்கம் வருவதையே நிறுத்தி விட்டேன்.

பின்னர் தான் என் மனதில் இந்தக் கேள்வி தோன்றியது. "நான் ஏன் அவர்களுக்குப் பயப்பட வேண்டும்? ஏன் என்னால் அவர்களை எதிர்க்க முடியாது? எதிர்க்கவே தேவையில்லை, அவர்களைத் தடை செய்ய வசதி இருக்கிறதே தடை செய்து விடலாமே..., தளத்தில் யாரோ ஒரு உறுப்பினர் செய்யும் தவறுக்கு நாம் ஏன் தளத்தை குறை சொல்லிக்கொண்டிருக்க வேண்டும், தேவையற்ற அனுபவத்தை தந்த அதே தளத்தில் இருந்தே பல நல்ல நண்பர்களையும் நான் பெற்றிருக்கிறேனே. அவர்களை ஏன் இழக்க வேண்டும்?"

இப்படியெல்லாம் சிந்தித்ததன் விளைவு ஒரு சிலரைப்பற்றி முறையிட்டு அவர்களது ஐடி தளத்தில் தடை செய்யப்பட்டு விட்டது. அதன் பின் தொடர்ந்தும் இன்று வரை இந்த தளத்தில் இயங்குகிறேன். அதற்குப் பின்னர் பிரச்சனை கொடுக்க வந்தவர்கள் எல்லாம் எப்படி என்னை விட்டுப் போனார்கள் என்றே தெரியாது.

தோழிகளே, உங்களுக்கு ஒன்று சொல்கிறேன்.

தனிப்பட்ட முறையில் ஒருவருடன் எப்படிப்பட்ட உறவை வைத்திருக்க வேண்டும் என்று தீர்மானிப்பது உங்களைப் பொறுத்தது. ஆனால், முட்டி மோதிக் கொண்டு வந்துவிட்டு தளத்தைக் குறை சொல்வதோ அல்லது ஏனைய பெண்களை தளத்தை விட்டு வெளியேறச் செய்வதோ உங்களுடைய இயலாமையையும் நாகரீகமற்ற செயலையுமே காட்டுகிறது. நாலு நாட்கள் ஒரு ஆண் நன்றாகப் பேசி விட்டால் அவர்களை நம்பி உடனேயே

தொலைபேசி இலக்கத்தையோ புகைப்படங்களையோ பரிமாறுவதை நிறுத்துங்கள். உங்களை நீங்கள் தான் பாதுகாக்க வேண்டும். உங்களை சுற்றி வளரும் களைகளை நீங்கள் தான் அகற்ற வேண்டும். ஒரு தளத்தில் உறுப்பினராகி அங்கே வரும் பெண்களுடன் அநாகரீகமாக பேசுபவர்களும், தளத்தை விட்டு வெளியே போயிருந்து அடுத்தவரையும் தளங்களையும் விமர்சிப்பவர்களும் தளத்தின் களைகளே என்றுதான் நான் எண்ணுகிறேன். இவை பேஸ்புக் கூகிள் போன்ற அனைத்து தளத்திற்குமே பொருந்தும்.

*உன் இதயம் என்ன?*

*ஷேர் ஆட்டோவா.?*

*அவ்வப்பொழுது என்னை இறக்கி ஏற்றுக்கிறாய்*

*- தமிழரசி -*

ஒவ்வொரு தமிழ் தளங்களும் ஒவ்வொரு தமிழ்ப் பற்றின் ஆதாரம், அது யாரோ முகம் தெரியாத தமிழ் விரும்பிகள் பலரின் முயற்சியும், பல படைப்பளிகளின் வளர்ச்சியும் முக்கியமாக தமிழின் நிலை என்பதை மறந்து, தங்கள் சுய இலாபங்களுக்காகவும், கோபதாபங்களுக்காகவும் ஒரு தளத்துக்கு எதிராகப் பரப்புரை செய்வதும், தளத்தில் இயங்கக் கூடிய பெண்களை அங்கிருந்து விலகும் படியாக விமர்சிப்பதும் மனச்சாட்சி உள்ளவர்கள் செய்ய மாட்டார்கள் என்றே நான் நினைக்கிறேன்.

தோழிகளே, உண்மை புரியாமல், அடுத்தவரின் சொற்களைக் கேட்டோ, அல்லது மனமுடைந்தோ இங்கிருந்து வெளியேறிய சகோதரிகள் உங்கள் தொடர்பில் இருந்தால் அவர்களுக்குப் புரிய வையுங்கள். தளத்துக்கு மீண்டும் அவர்கள் வரவேண்டும் என்பதே என் தனிப்பட்ட விருப்பம். ஆனால், அப்படி அவர்கள் வர விரும்பாவிட்டாலும் கூடப் பரவாயில்லை, வளர்ந்து வரும் தளத்தைப் பற்றிய தவறான விமர்சனங்களைத் தவிர்க்கச் சொல்லுங்கள். ஒரு தளத்தின் வளர்ச்சிக்கு உதவா விட்டாலும் கூடப் பரவாயில்லை, கட்டியெழுப்பப்பட்ட ஒரு தளத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாயிருக்காதீர்கள்.

**நல்ல தளங்களை தெரிவு செய்வதற்கு சில காரணிகள்:**

- தளத்தின் முக்கிய நோக்கம் என்ன என்பதை பாருங்கள். ஒரு தளத்தை பார்த்த உடனே அதில் போடப்பட்டிருக்கும் பதிவுகள், படங்களை வைத்தே ஓரளவு தளத்தைப்பற்றிய ஒரு உருவகம் மனதில் பதியும். அதை வைத்தே தளத்தை எடை போட்டுவிடலாம்.

- பல தளங்களில் நல்ல பதிவுகளுடன் ஆண்களை கவர்வதற்காகவே ஆபாச பதிவுகளும் வந்தவண்ணம் இருக்கும். சில மன்றங்கள் உடைய தளங்களில் ஆபாசத்தை வெளிப்படையாக பதியாமல் பாலியல் கல்வி என்ற பெயரிலும் இம்மாதிரி பதிவுகள் வரும். இம்மாதிரி தளத்தில் இருப்பவர்களுடன் பழக நேர்ந்தால் கவனமாக இருக்க வேண்டியது முக்கியம்.

- சமூக தளங்களிலும், குழுமங்கள், அரட்டை தளங்களில் எம்மாதிரி ஆட்கள் வருவார்கள் என்பதையே அவதானிக்க இயலாது. ஒவ்வொரு நாளும் புதுப்புது ஆட்கள் வருவார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி குணங்கள் கொண்டவர்கள் என்பதை மனதில் பதிய வைத்துக் கொண்டு பழகுவது நல்லது.

- ஆபாச தளங்கள், நடிகைகளின் படங்களை ஆபாசமாக வெளியிடும் தளங்கள் இவை எப்போதுமே கவனமாக கையாளப்பட வேண்டியவை. ஆனால் இங்கே எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று நான் சொல்லப்போவதில்லை, ஏனென்றால் இம்மாதிரி தளங்களுக்குள் நுழைபவர்கள் தங்களுக்கு தெரிந்தே தான் ஏதோ தேவைக்காக நுழைகிறார்கள். இம்மாதிரி ஆட்களிடம் மற்றவர்கள் தான் கவனமாக பழக வேண்டும்.

- பெண்களே, உங்களுக்கு அரசியலில் ஈடுபாடு இருந்தால் தைரியம் இருந்தால் மட்டும் அரசியல் விவாதத்திற்குள் தலையை விடுங்கள். ஏனென்றால் அரசியல் ஒரு சாக்கடை என்று சொல்லப்படுவது மட்டுமல்லாமல் அரசியல் விவாதங்களில் நாகரீகம் என்பது எந்த கணத்தில் யாரிடமிருந்து விலகும் என்பதை கணிக்க முடியாது. அது எப்போது வேண்டுமானாலும் நம்மை தாக்கலாம். இந்த வகையில், நமது சமூகத்தின் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டு எழுதப்படும் பதிவுகளையும் வரலாற்றை உண்மையை கூறுகிறேன் என்ற போர்வையில் திரித்து எழுதி நஞ்சை கலந்து பிரிவினை செய்யும் பதிவுகளையும் தாங்கி வரும் தளங்களையும் அடக்கலாம்.

- ஆண் பெண் கலந்து பழகும் இணைய விவாதங்களில் பெண்ணின் பிரச்சனைகள், பாலியல் சம்பந்தமான விவாதங்களில் வெளிப்படையாக பேசுவதை தவிர்க்கலாம். ஏனென்றால் இவ்வாறு பேசும் பெண்களுடன்

நட்பு கொண்டால் இவைபற்றி தன்னிடமும் அதிகமாக பேசுவாள் என்ற மனநிலையில் ஆண்கள் உங்களை எண்ண ஆரம்பித்துவிடுவார்கள்.

இறுதியாக,...

நாகரீகமின்றி பெண்களோடு பழகுகின்ற ............ களுக்கு (மன்னிக்கவும்.. கெட்ட வார்த்தையால் திட்டலாம் என்று தோன்றுகிறது. அப்படித் தோன்றுகிறவர்கள் உங்களுக்கு விரும்பிய சொல்லை வைத்து இடைவெளியை நிரப்புங்க.. மற்றவங்க கண்மணி, பொன்மணி இப்படி ஏதாவது போட்டு நிரப்பிக்கோங்க.. )

எங்கே விட்டேன்.. ஆங்... நாகரீகம் தெரியாத நண்பர்களே..... சாதாரணமாக சமூகத்தில் எல்லோரும் திட்டுவது போல "ஏண்டா....நீயெல்லாம் அக்கா தங்கச்சியோடு பிறக்கலயா? உன்னோட அம்மா கூட ஒரு பெண் என்றதை மறந்துட்டியா..." இப்படியெல்லாம் சொல்லித் திட்ட விரும்பல, ஏன் என்றால் அது சூடு சொரணை உள்ளவங்களுக்கு மட்டும் தான் உறைக்கும். நீங்கள் எல்லாம் மனிதர்கள் என்ற தரத்தை விட்டு இறக்கி மிருகங்களின் தரத்தில் கூட வைக்கப்பட முடியாதவர்கள்... அதையும் தாண்ண்ண்டி.... முகம் தெரியாது என்ற தைரியத்தில் பெண்களோடு வாலாட்டும் கோழைகள் நீங்கள். ஆனால் பெண்கள் எப்போதும் இப்படியே இருக்கப் போவதில்லை. என்றாவது ஒரு நாள் இதன் பயனை நீங்கள் அனுபவிப்பீர்கள்... அனுபவிக்க வேண்டும் என்றே விரும்புகிறேன். இதற்குமேல் உங்களோடு பேசி நான் நேரத்தை வீணடிப்பதை விட ஏதாவது பயனுள்ள வேலை பார்க்கலாம்...

எனவே தோழிகளே...

"எப்பொருள் யார் வாய்க் கேட்பினும்

அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்ற பொன்னான வாக்கியத்தை மனதில் கொண்டு இணைந்து செயற்படுவோம். களைகளை அகற்றிப் பயிர்களை வளர்ப்போம்... தளத்தில் உள்ள தோழிகளோடு ஒரு குடும்பத்தில் உள்ள சகோதரர்கள் போன்று பழகும், சகோதரிகளின் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் ஒவ்வொரு நண்பர்களுக்கும் என் மனம் நிறைந்த நன்றிகள். நீங்கள் எப்பொழுதும் தமிழ் தள வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பீர்கள் என்றே நம்புகிறேன்.

நட்புடன்
சிநேகிதி பூங்கோதை

# வயதுக்கு வந்த தீட்டு

நந்தகோபால்



குருதியின் குரூரத்தில்
கரை ஒதுங்க போகும்
நாணல்கள் போல
பரிதவிக்கி போகின்றன
வயதுக்கு வந்த பின்னே
அவளின் பிதற்றல்கள்
மாற்றம் ஆகதான் போகின்றன
உயிர் எனும் அடையாங்கள்,
தொலைக்கப்பட்டு......

வானில் நட்சதிரத்தினை போல
மின்னும் அவளின் பேச்சும் ,
கல கலப்பான சிரிப்பும்
அடங்கதான் போகின்றன......
"பொம்பள புள்ளைய நடந்துக்க"
சுற்றி உள்ளவர்களின் சீண்டலில்.....
அவள்
இனி கவிதைக்கும்
கற்பனைக்கும்தானா
வாழ்தலில் இல்லையா?


குருதி எங்கும் சிந்தப்பட்டு
வாங்கப்பட்டதுதான்
சுதந்திரம் என்றால்
வெட்கப்பட்டு கொண்டே
கேட்கிறாள். அவள்,
இனி,சிந்தும் கண்ணீருக்கும்
குருதிக்கும் முதுகு வலிக்கும்
யார் அளிப்பார்கள் சுதந்திரத்தை??????

ஆங்காங்கே தீண்டபடும் உடல்கள்
இனி, பற்களை காட்டி
மாமிசமாய் எண்ணி மயங்கும்
வளர்ச்சியற்ற பிளாஸ்டிக்கு
பூவை போல் நறுமண பொருளுடந்தானா அவள்.....

அழிப்பர்களா அளிப்பார்களா சுதந்திரத்தை??? .
இருப்பினும் காத்திருப்புக்கள்
தொடர்ந்த வண்ணமே இருக்கிறது.......

# கவிதைக்குறள்

செந்தமிழ்தாசன்



2. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்.

நற்கல்வி கற்று
நின்றாலும் அதன்பயன்
என்னென்பது அறிவாய்!

எங்கும் நீக்கமற
நிறைந்திருக்கும்
உலகின் முதல்வன்
உண்மை அறிவதனை
உளத்தில் உணர்த்தும்
மெய்யாய் நின்று
உருஅருவ மல்லாத
பகவன் நற்பாதம்
நாளும் தொழுது நிற்றல்
கற்றகல்விக்கு பயனாம்.........

3. மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

நீர்நிறை தடாகத்தாமரை
நீர்குறை சேராகினும்
தன்பெருமை குன்றாது
அதன் தாள்கொண்ட
கருணையால்...

அன்பர் நெஞ்சத்தாமரை
ஆங்கே
பெருமைமிகும் இறைவன்
தாற்பாதம் சேர்ந்து
இடையறா சிந்தனை
செய்தே நிலவாழ்வில்
நீர்ந்து போய்விடா
முக்தியில் சேர்ந்திடுவரே.........

3. மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

நீர்நிறை தடாகத்தாமரை
நீர்குறை சேராகினும்
தன்பெருமை குன்றாது
அதன் தாள்கொண்ட
கருணையால்...

அன்பர் நெஞ்சத்தாமரை
ஆங்கே
பெருமைமிகும் இறைவன்
தாற்பாதம் சேர்ந்து
இடையறா சிந்தனை
செய்தே நிலவாழ்வில்
நீர்ந்து போய்விடா
முக்தியில் சேர்ந்திடுவரே.

4. வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.

உலகின் நடுவன்
உன்னத உயிர்ப்பிறவி
தந்தோன்-அவன்
ஆசை அறுத்தவன்
ஞாலம் முழுதிற்கும்
துலாக்கோல் முள்ளாய்
நடுவு கொண்டவன்.........

விரும்புதலும் வெறுத்தலும்
இல்லாத அவனடிகள்
நெருங்கித்
தொழுது நின்றவர்
தான் பிறர் தெய்வம் யென
மூவகைத் துன்பநிலை
வினைப்பயன் காரணமாய்
காலத்தால்
வருதல் நீங்கி இருப்பரே.

# குறளின் குரல்!



வள்ளுவர்தம் வாய்மொழி, வரிவடிவில் மாறுபட்டிங்கு...!

## அறத்துப்பால் - பாயிரவியல் அதிகாரம் - 01. கடவுள் வாழ்த்து

சுந்தர் புருஷோத்தமன்

1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

கல்தோன்றி மண்தோன்றா காலத்து மொழியதுவின்
முதலெழுத்து அகரமாம்!
சிகரமும் நகரமும் உடைத்தாய உலகுக்கும்
உலகாய உயிர்கட்கும் பயிர்கட்கும் முதலானான் பதி.

2. கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

கற்ற கலையும் பெற்றறிந்த கல்வியும்
காயும் வெயிலில் காணும் கானலாம்.
பெற்றம் ஏறியே நல்லருள் நல்கிடும்
நாயகன் நற்சரண் பற்றாது போய்விடினே!

3. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

மனமென்னும் அடியார்தம் மலர்தன்னில்
உறைகொள்ளும்
இறைதாள்கள் துதிப்போர்தம் மனப்பூவும் மணம்நாறும்
மறுப்பில்லை மறுப்பில்லை மகிழ்விங்கு வசமாகும்
நிலந்தன்னில் வாழ்வெய்தி வளமோடு நிலைப்பாரே!

4. வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

விருப்பில்லை, வெறுத்தானுமில்லை
அறத்தானவன் பாதம் அகத்தால் பணிவார்க்கு
வறுக்கும் வன்துன்பம் வாட்டா, வதைக்காதே.
சிறக்கும் சீரெல்லாமது பெருக்கும் பேறாமே!

5. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

நல்வினை தீவினை மயக்கமளிப்பன
தெய்வமென்பது மயக்கமறுப்பது
மயக்கமறுப்பதன் இருப்பது விழைந்திட
மயக்கமளிப்பது விழுந்திடுமாமே

6. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

அவயமைந்தின் அவாவினை யறுத்தான்
அன்பறன் யாவையும் அன்றே வகுத்தான்
வகுத்தவ னறநெறி வழியதைக் கொள்வார்
அழியாப் புகழதை நிலமிதில் வெல்வார்

7. தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

ஒப்பாரும் மிக்காரு மில்லாதா னிணையடிகள்
தப்பாமல் உணர்ந்தேத்திப் பிறழாமல் நடப்போர்க்கு
நலிந்தொக்கும் பிறப்பென்னும்
பிணியென்னுந் துயராமே!

8. அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

அறமென்னும் பேராழிக் கடலெந்தன் பெருமான் –
அவன்
பிறவாழிக் கடலென்னும் பெருந்துன்பம் களைவான்
அவனாற்றல் அறிவார்கள் மலர்த்தாள்கள் பணிவர்
-அதை
பணியாதார் பிறவாழிக் கடல்தன்னில் உழல்வார்

9. கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

பெருங்குண மனைத்தின் இருப்பிடத்தா னவன்
மணங்கமழ் திருவடி வணங்காத் தலையது
நற்சுவையறியா நாவிதழ், பிற புலன்
இருப்பினு மியங்கா திருத்தலைப் போலாம்

10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

பிறப்பு இறப்பிலான் பதமலர்ப் பற்றுவார்
பிறவிப் பிணியெனும் பெருங்கடல் நீந்துவர்
பிறப்பு இறப்பிலான் பதமலர்ப் பற்றிலார்
பிறவிப் பிணியெனும் வினையுளே யாழ்வரே!

# ஆழ நட்ட வாழை

*பசுந்திரா*

11 வயது நிரம்பிய கரனை பார்ப்பவர்கள் எட்டு வயதே மதிப்பார்கள். ஆனால் அவனோ அந்த 18 , 19 வயது இளைஞர்கள் மூவரின் பின்னால் கையில் ஒரு தடியை பாதையெங்கும் இழுத்து கோடு போட்ட படி நடந்துகொண்டு இருந்தான் .

அவனுக்கு நினைவு தொரிந்த இத்தனை வருடத்தில் இதுவே முதல் தடவையாக வேலைக்குப் புறப்பட்டு இருக்கிறான். பெரிதாக ஒன்றும் வெட்டிப் புடுங்கும் வேலை இல்லை இது ஒரு எட்டிப் புடுங்கும் வேலை. புடுங்குவதும் தேங்காய் மாய்காய் இல்லை வெறும் பூ. அவன் இந்த வேலைக்கு போக பல காரணங்கள் உண்டு ஆனால் ஒரு தகுதியும் இல்லை.

ஊரில் இருக்கும் போது அவனது தந்தை வாழை நாட்டுவதற்காக ஆழமான கிடங்கு வெட்டி நடுவே வாழைக் குட்டியை வைத்து இவனை பிடித்துக் கொள்ளும் படி கூறி மண்ணை போட்டு மூடுவார் . வாழைக் குருத்து அவனது வண்டியோடு முண்டிக்கொண்டு நிற்கும் புதிதாக வரும் குருதுக்களை விரியமுன் கிழித்து விடுவதில் பேரானந்தம் அடைவான்

ஒரு நாள் “ ஏனப்பா இவ்வளவு ஆழமாக கிடங்கு வெட்டி நடுகிறீர்கள் சின்ன சின்ன கிடங்கு வெட்டி நடலாமே ?” என்று கேட்டதற்கு

–“ வாழை ஆழ நடு தென்னை தெரிய நடு” –

என்று தந்தை கூறிய வேத வாக்கை நம்பி இந்த வாழைப் பொத்தி பிடுங்கும் வேலைக்கு சேர்ந்து கொண்டான். ஆனாலும் வாழையை நினைக்க வயிற்றை கலக்கிக் கொண்டு வந்தது . அப்பாவிற்கு தொரிந்தது இங்குள்ளவர்களுக்கும் தெரிந்து இவர்களும் வாழையை ஆழ நாட்டிருந்தால் மட்டுமே வாழைப் பொத்தி இவனுக்கு எட்டும்.

‘ஒரு வேளை வாழைப் பொத்தி எனக்கு எட்டாவிட்டால் என்ன செய்வது எதற்கும் முன்னே போகும் ஒருவரிடம் ஒரு வார்த்தை கேட்டு விட்டால் என்ன.’ என்று எண்ணுகையில் தம்பி றமாவின் வாடிய முகம் கண்முன் தோன்றியது.

‘பெரிதாக என்ன வந்து விடப்போகிறது – ஒன்றில்

“ சீ..... நீ இந்த வேலைக்கு சரி வர மாட்டாய் போய் கொஞ்சம் வளர்ந்தாப்பிறகு வா “

என்று சொல்லுவார்கள். அல்லது “இந்த சின்னப் பயலை ஏனடா கூட்டிவந்த நீங்கள் “ என்று இதோ முன்னுக்குப் போகிறார்களே இவர்களுக்கு பேச்சு விழும் அவ்வளவுதான். ஆனால் அவர்களோ அதுபற்றி எந்த கவலையும் கொண்டதாக தெரியவில்லை தன்னையும் அவர்களில் ஒருவனாக நினைத்து வேலைத்தலம் நோக்கி நடந்து கொண்டு இருக்கிறார்கள் நானாக ஏன் குட்டையை குழப்புவான்’ என்று மௌனமாக இருந்து விட்டான்.

முன்பு தந்தையின் விரலைப் பிடித்துக்கொண்டு நடக்கும் போது சிறிது தூரம் நடந்தாலே “கால் நோகுதா ? “ என்று கேட்டு விட்டு தூக்கி தோழில் சுமந்து கொண்டு நடப்பார். அது எல்லாம் என்றோ ஊரோடு முடிந்து விட்டது.

கரனுக்கும் அவனது தம்பி றமாவிற்கும் ஏழு வயது வித்தியாசம் அதனால் கரனுடன் கூட விளையாடுவதற்கு வீட்டில் யாரும் இல்லை. சில சமயங்களில் மூன்று வயதான தம்பியையும் நாயைக்குட்டியையும் சேர்த்து விளையாடுவான். நாய் இவனை திரத்தும் பின் இடை நடுவில் நாய்குட்டி தம்பியை திரத்த அவன் விழுந்து எழும்பி வீரிட்டுக் கத்தி இறுதியில் அம்மா தடியோடு இவனை திரத்தி வருவதுடன் அந்த விளையாட்டு முடிவுக்கு வரும்.

ஒரு வருடத்திற்கு முன் வவுனியா பூவரசங்குளத்தில் இருந்து நாட்டுப் பிரச்சனையால் இடம் பெயர்ந்து ஓமந்தை பாடசாலைக்கு வந்த போது கரனின் சந்தோசத்திற்கு அளவே இல்லை. எத்தனை நண்பர்கள் . பலரது பொயர்களைக்கூட ஞாபத்தில் வைத்திருக்க முடியவில்லை பூவரங்குளம் கிராமமே அந்த பாடசாலையில் தானே தஞ்சமடைந்து இருந்தது.

> *காற்றோடு நான்*
>
> *கவலையில்லை எனக்கு*
> *காற்றோடு நான் கைகோர்த்து செல்வேன்*
> *கற்பனையுண்டு எனக்கு*
> *கவின் நீல வானத்தை கண்டு ரசிப்பேன்*
> *மலரோடு கன்னம் தேய்த்து*
> *மகிழ்ந்து நான் உறவாடுவேன்*
> *கனவுகள் விரியும் இரவின்*
> *துயில் கலைக்க மறந்திடுவேன்*
> *நேற்றைய சிந்தனைகளும் இல்லை*
> *நாளையக் கவலைகளும் எனக்கில்லை*
> *இன்றோடு சிரித்து மகிழ்ந்திடுவேன் !*
>
> *~~~ கல்பனா பாரதி ~~~*

பாடசாலை , வீட்டுப்பாடம் , சாப்பாடு , கொஞ்ச நேரம் விளையாட்டு என்ற வழக்கம் அகதி முகாமிற்கு வந்ததும் தலை கீழாக மாறி : விளையாட்டின் நடுவிலே ஓடிப்போய் சாப்பிட்டு விட்டு வந்து மீண்டும் விளையாட்டை முழுநேரமாக செய்து கொண்டு இருந்தான். வேறு எந்த வேலையும் இல்லை. இவ்வளவு ஏன் அம்மா அப்பா கூட அரை வாசி நேரம் வகுப்பறை வாசலில் இருந்தபடி இவர்களின் விளையாட்டைத்தானே பார்த்தக்கொண்டு இருந்தார்கள். ஆனால் அந்த வாழ்க்கையும் அப்பா பூவரங்குளத்தில் இருந்த அவர்களது வீட்டை பார்க்கப்போய் திரும்பி வராமல் காணாமல் போனதில் இருந்து தொலைந்து போனது அன்றில் இருந்து அம்மாவும் ஒடிந்து போய் அடிக்கடி நோயில் படுத்தார். தம்பியை இடுப்பில் வைத்தபடி மற்றவர்கள் விளையாடுவதை

அவ்வப்போது எட்டிப் பார்ப்பான்.

ஓமந்தையிலும் இருக்கமுடியாமல் மீண்டும் இடம் பெயர்வு. இடம் பெயர இடம் பெயர இருக்கம் பொருட்களும் ஒவ்வொன்றாக அவர்களை விட்டு இடம் பெயர்ந்தது. தந்தை தூக்கி வந்த சில பாரமான பொருட்களை தாயால் கொண்டு வர முடியாமல் போக அங்கேயே விட்டு விட்டு கிளிநொச்சியில் உள்ள -கோணாவில் காந்திக் கிராமம் - எனப்படடும் இந்த அகதி முகாமிற்கு வந்து சேர்ந்து இரண்டு மாதம் ஆகிறது.

இங்கே அகதி சாமான் என்று அரிசியும் பருப்புமே தருவார்கள் மீதி எல்லாம் கடையிலேயே வாங்க வேண்டும் . வீட்டில் ஆம்பிளை உள்ளவர்கள் அயல் அட்டையில் வேலைக்கு போவார்கள். அம்மாவும் அவ்வப்போது எதாவது வேலைக்குப் போய் வருவார். கடந்த ஒரு மாதமாக அவரால் முற்றாக முடியாமல் போய் விட்டது.

அம்மாவிற்கு அம்மாள் வருத்தம் (சின்ன முத்து ) உடல் நிலை மேலும் மோசமாகியது. தம்பி அம்மாவிற்கு கிட்டையும் போக முடியாது வருத்தம் தொத்தி விடுமாம். அவரால் எழுந்திருக்கவே முடியவில்லை இதில் சமைப்பது எப்படி. வீட்டில் அரிசி சேடம் இழுக்க பருப்பு உயிரை விட்டிருந்தது. அதனால் அம்மா சொல்லச் சொல்ல இவனே கஞ்சி காச்சுவான்.

அந்த வெறும் கஞ்சியிலேயே மூவரின் உயிரும் தங்கி நின்றது.
கஞ்சி என்றால் தம்பி நல்லா குடிப்பான். ஆனால் ஒருக்கா மூத்திரம் போய் வந்து விட்டால் மீண்டும் அழ ஆரம்பித்து விடுவான் . அம்மாவும் அந்த கஞ்சியோடயே நாள் முழுக்க பாயில் கிடக்கிறார். சில சமயம் காச்சல் வாய்க்கு குடித்த கஞ்சியையும் சத்தி எடுத்து விடுவார்.

ஒவ்வொரு நாளும் அம்மாவின் அம்மை வருத்தத்திற்கு முத்து மாரியம்மன் தாலாட்டு பாட வரும் நாலாம் கொட்டிலில் வசிக்கும் அருமைநாயகம் ஐயா 'ஏதாவது நல்ல சாப்பாடாய் சாப்பிடு பிள்ளை' என்று சொல்லி விட்டுப் போகிறார். ஆனால் அதற்கு கையில் காசு இருக்க வேண்டுமே.

முகாமிற்கு முன்னால் இருக்கிற கொட்டில் கடையில் பாண் பணிஸ் இடியப்பம் என பல வகை வகையான சாப்பாடுகள் வரும் அம்மாவையும் தம்பியையும் நினைத்த படி அவற்றை பார்த்துக் கொண்டு நின்று விட்டு வருவான் கரன் . தம்பிக்கு பணிஸ் என்றால் கொள்ளை பிரியம் யாரும் வேண்டிச் சாப்படுவதை கண்டு விட்டால் காட்டிக் காட்டி அழுவான். பணிசுக்குப் பதிலாக காக்கா , குருவி , அணில் போன்ற வற்றை தேடித் தேடிக் காட்டுவான் கரன். ஓடும் அணிலைப் பார்த்தால் சிரிப்பான் அது ஒரு இடத்தில் நின்று விட்டால் அழுவான் .

இந்த நிலையில் தான் கரன் தானும் வேலைக்கு வருவதாக சேர்ந்து கொண்டான் . மண்ணில் வேலை என்றால் செய்யலாம் அனால் இது மரத்தில் வேலை அதுவும் கொப்பில்லாத மரத்தில் . இழுத்துக்கொண்டு வந்த தடியை மீண்டும் ஒருமுறை தூக்கிப் பார்த்துக்கொண்டான் . ஒரு வேளை இவன் பயந்தது போல வாழைப் பொத்தி எட்டாது போனால் இந்த தடியால் தட்டிப்பிடுங்கி விட வேண்டும் என்பது அவனது இன்னொரு திட்டம்.

கோணாவில் நல்ல செழிப்பான கிராமம் இந்த மண்ணில் எவ்வளவுதான் விழுந்து புரண்டாலும் உடலில் அழுக்கு பிரளாது வெள்ளை வெளேரென்ற மணல் மண். தோட்டத்திற்கு உகந்த மண் . அக்கராயன் குளத்து நீர் கோணாவில் கிராமத்தையும் சோலையாக்கிக் கொண்டு இருந்தது. நாலா புறமும் தென்னை ,பாக்கு, மா ,பிலா போன்றவற்றோடு வாழைத்தோட்டங்களும் வயல்களுமாக பச்சைப் பசேல் என்று இருக்கம்.

அவ்வப்போது அங்குள்ள வாழைதோட்டங்களில் பொத்தி , வாழைக்குலை , வாழையிலை பிடுங்கி ஸ்கந்தபுரம் சந்தையில் விற்பதற்கு என பலர் அகதி முகாமில் உள்ளவர்களை வேலைக்கு அழைப்பது வழக்கம். அப்படி நாலு போர் வேண்டும் என்று கேட்டதாலேயே கரன் தானும் வருவதாக கூறி வந்து விட்டான் .

முருகன் கோயில் தாண்டி இருந்த பெரிய வாழைத் தோட்ட சோலைக்குள் முன்னால் சென்ற மூவரும் நுழைந்தார்கள். கரனும் நுழைந்து படலையை சாத்திக் கொண்டான். படலையை தாண்டியதும் குறுக்காக ஒரு வாய்க்கால் சென்றது. இரவு அதனூடாக தண்ணீர் பாச்சியிருக்க
வேண்டும் வாய்க்காலில் சேறு படிந்திருந்தது. கொண்டு வந்த தடியை வாய்க்கால் நடுவே ஊன்றி எம்பி குதித்து மறு கரைக்கு தாவினான்.

கம்பு குத்தியபடி நின்றது கரனை காண வில்லை முன்னால் போனவர்களில் ஒருவன்
" கரன்... கரன் ..." என்று கூப்பிட்டான். உடம்பெங்கும் சேற்றுமண்ணுடன் வாய்க்காலில் இருந்து எழும்பினான் கரன். அவர்களால் சிரிப்பை அடக்க முடியவில்லை
" சும்மா கடக்கிற வாய்க்காலை ஏனடா கம்பு குத்திக்கடந்து விழுந்து எழும்புகிறாய்" என்று விட்டு உரப்பையை எடுத்துக்கொண்டு வாழை மரங்களை அண்ணாந்து பார்த்தபடி ஆளுக்கு ஒரு திசையில் நடந்தார்கள்.

வாழைக்கயர் படும் என சேட்டு போடாமல் வந்ததால் கணிமண்ணில் இருந்து சோட்டு தப்பியது என எண்ணியபடி பெரும் கஸ்டத்தின் மத்தியில் குத்திய தடியை பிடுங்கி எடுத்துக்கொண்டு முடிந்தவரை மண்ணை துடைத்து விட்டு காவல் கொட்டிலில் இருந்து ஒரு பையை எடுத்துக்கொண்டு வாழைப்பொத்திகளை தேடி நடந்தான் கரன்.

எந்த வாழை மரமும் அவனை வாழ வைப்பதாக தெரிய வில்லை. எட்டாத உயரத்தில் பொத்திகள் தொங்கின. ஒரு சில பொத்திகள் எட்டிய போதும் அவை பல காலங்களாக முறிக்காமல் விட்டு பூத்துக் கொட்டி பொத்தியும் சூம்பி வாழைக்காய் அளவிலேயே இருந்தது. அவற்றை முறித்து எறிய வேண்டுமே தவிர சந்தைக்கு கொண்டு செல்ல முடியாது.
அப்பா சொன்னது போல் - இங்கே எந்த வாழையையும் ஆழ கிடங்கு வெட்டி நட்டதாக

தொரிய வில்லை . கொண்டு வந்த தடியால் பொத்தியை குத்தி முறிக்கப் பார்த்தான் . பொத்தி மாட்டேன் என்று குலையோடு சேர்ந்து தலையை ஆட்டியது . வாழைக்குலையில் தடி குத்தி காயம் பட்டு காய் கண்ணீர் விட்டு அழுதது. சற்றே சரிந்து நின்ற ஒரு மரத்தில் இருந்து பகீரதப்பிரயத்தனத்தின் பின் ஒரு பொத்தி பிடுங்கி விட்டான். குறைந்தது 20 பொத்தி பிடுங்கினால் தான் அந்த பை நிறையும்.

அந்த ஒரு பொத்தியுடன் பையை இழுத்துக்கொண்டு எட்டாத பொத்திகளுக்கு கொட்டாவி விட்டபடி எட்டும் உயரத்தில் பொத்தி தேடி அலைந்தான். ஆனால் மற்றைய மூவரும் அரை வாசி பையை நிரப்பிவிட்டார்கள்.
இந்த ஒரு பொத்திக்கு என்ன கூலி தருவார்கள் அதைக்கொண்டு ஒரு பணிசாவது வாங்கிவிட முடியுமா என எண்ணியபடி நடந்தான்

ஒருவன் அவனிடம் வந்து பையை பார்த்து சிரித்து விட்டு
“ எத்தனை பொத்தி புடுங்கினாய் கரன் ? ” என்றான்.
“கனக்க பொத்தி கண்டு வச்சிருக்கிறேன் ஆனா ஒண்டுதான் புடுங்கினனான்” என்றான் தலையை பையினுள் ஓட்டி அந்த பொத்தியை பார்த்தபடி. வந்தவன் வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்தான். பின் “இனி என்ன செய்யப்போகிறாய் ? ” என்றான்.
“ என்னை தூக்கிப் பிடிச்சால் மள மளவென்று பிடுங்குவேன் “ என்றான். அப்பா தூக்கிப் பிடிக்க பப்பாப்பழம் பிடுங்கிய ஞாபகத்தில். வந்தவன் ஓடியே விட்டான் .

பையை கீழே போட்டு விட்டு அதன்மேல் இருந்தபடி ‘என்னண்டு இந்த பொத்திகளை புடுங்கலாம்’ என ஒரு அழகிய பொத்தியை பார்த்துக் கொண்டு யோசித்தான். அந்த பொத்தியின் ஒரு இதழ் மெல்ல விரிந்து இருந்தது. உள்ளே வாழைப்பூவில் இருந்த தேனை குடிக்க முடியாமல் ஒரு வண்டு சற்றிச் சுற்றிப் பறந்தது கொண்டிருந்தது . ஏதோ சிந்தனையில் தோன்ற திடீரென எழுந்து அந்த மூவரையும் தேடி ஓடினான்.

அவர்கள் மூட்டையை சுமக்க முடியாமல் சுமந்து கொண்டு நடந்தார்கள்.
“உங்கள் மூவரினின் பைகளையும் ஓர் இடத்தில் வைத்துவிட்டு பொத்தியை பிடுங்கி என்னிடம் தாருங்கள் நான் ஓடி ஓடி அவரவர் பையில் போட்டு விட்டு வருகிறேன் நீங்கள் சுமக்க வேண்டிய அவசியம் இல்லை “ என்றான் மூச்சு வாங்கியபடி .

அவர்களுக்கும் அது நல்ல யோசனையாகவே பட்டது ஆனால் அதற்காக இவனுக்கு என்ன கூலி கொடுப்பது என்று யோசித்தார்கள். இறுதியில் எந்த முடிவிற்கும் வராமலே அவனிடம் பொத்திகளை முறித்து கொடுத்தார்கள் அவனும் ஓடி ஓடி அவரவர் பையில் போட்டுவிட்டு வந்தான். கூடவே வழியில் கண்ட பொத்திகளை அவர்களுக்கு கூப்பிட்டுக் காட்டினான் . சற்று நேரத்திலேயே மூவரினதும் அந்த உரப் பை நிரம்பி விட்டது.
நேரம் மதியம் மூன்று மணியாகிக் கொண்டிருந்தது அந்த மூவரையும் விட அவனே களைத்து விட்டான் காலை குடித்த கஞ்சி செமித்து பசி எடுத்தது.

அவனது பை மட்டும் அந்த ஒரு பொத்தியுடன் தவம் கிடந்தது. மூவரில் ஒருவன் “இனி முறிக்கும் பொத்திகளை உன் பையில் போடு” என்றான்.

கரனின் முகத்தில் முழுச் சந்திரன் பிரகாசித்தான். அவர்கள் முறித்து தந்த பொத்திகளை தனது பையினுள் போட்டான். இருந்தும் என்ன பயன் தோட்டத்தில் இருந்த பொத்திகள் முழுவதும் பறிக்கப்பட்டு விட்டது.

## குழந்தையின் குமுறல்

*ரத்ன தேவி*

*புட்டிப்பால் இல்லாமல்*
*துடிக்கிறது ஓர் உயிர்…*
*ஒட்டுத்துணி இல்லாமல்*
*தவிக்கிறது ஒரு மேனி…*
*தாய் இல்லை தாலாட்டு பாட…*
*தந்தை இல்லை தட்டிக் கொடுக்க…*
*அழுகிறது அம்மனம்…*
*எம்மனதிலும் மௌனம்…*
*அக்குழந்தை ஓரனாதை…*
*எடுப்பார் எவருமில்லை…*
*கேட்பார் யாருமில்லை…*
*அக்குழந்தையின் உயிர்…*
*காண்போருக்கோ வெறும்பயிர்…*
*கருதுகிறார்கள் துச்சமாக…*
*கடவுளுக்குத்தான் வெளிச்சம்!!!*

“ இவ்வளவுதான் இனி இல்லை வாங்கோ தோட்டக்காற ஜயா வரும் வரைக்கும் அதில போய் இருப்போம்”
என்றபடி ஒருவன் காவற்கொட்டிலை நோக்கி நடந்தான் . மற்றவர்களும் அவனை பின் தொடர்ந்து சென்றனர். கரன் ஒவ்வொரு வாழையாக அண்ணாந்து பார்த்தபடியே பின்னால் நடந்தான் . ஒவ்வெருவரும் தத்தம் மூட்டைகளோடு முதலாளிக்காக காத்திருந்தார்கள். கரனின் பையில் ஆக எட்டு பொத்திகளே இருந்தது .

தோட்டக்காரரும் வந்தார்
“எத்தனை மூட்டை ? ” என்று கேட்டார். அந்தக் குழுவின் தலைவன் “ மூன்று மூட்டை “ என்றான்.
“அந்தப் பையில் எத்தனை ? ” என்று கரனை பார்த்துக் கேட்டார்.
உற்சாகமான குரலில் “ எட்டு பொத்திகள் ஐயா ” என்றான் கரன்.

எல்லோருக்கும் பொதுவாக முப்பது ரூபாயை ஒருவனிடம் கொடுத்து விட்டு கரனின் பையில் இருந்த எட்டு பொத்திகளையும் ஆளுக்கு இவ்விரண்டாக பிரித்து எடுக்குமாறு கூறி விட்டு தோட்டக்காரர் சென்று விட்டார்.
கரன் மாறி மாறி மூவரின் முகத்தையும் பார்த்தபடி நின்றான்.

“இந்த மூன்று மூட்டைக்கும் தான் முப்பது ரூபாய் தந்திருக்கிறார் . கரன் அந்த எட்டுப் பொத்தியையும்

நீயே எடுத்துக் கொள் எங்களுக்கு வேண்டாம் நாங்கள் காசை பிரித்து எடுத்துக்கொள்கிறோம் ” என்றான் குழுவின் தலைவன். கரனின் பணிஸ் கனவு மெல்ல கரைய ஆரம்பித்தது கண்கள் நீரரும்ப தொண்டை வரை துக்கம் முட்டியது ஓ என்று அழுது விட வேண்டும் போல் இருந்தது . எதையும் காட்டிக் கொள்ளாமல் சரி என தலையை ஆட்டி விட்டு அந்த எட்டுப் பொத்தியோடு வீடு வந்தான்.

களி மண் உடலெங்கும் புரண்டபடி வாழைப் பொத்தியுடன் வந்த மகனைப் பார்த்து படுக்கையில் கிடந்தபடியே கண்ணீர் வடித்தார் அம்மா.

அன்று முளுவதும் தம்பியை பார்த்துக்கொண்டு இருந்த பக்கத்து வீட்டு அக்காவிடம் ஒரு பொத்தியை கொடுத்தான். அம்மாவுக்காக மாரியம்மன் தாலாட்டு பாட வரும் ஐயாவுக்கும் ஒரு பொத்தியை கொடுத்தான் . இரண்டு பொத்திகளை வீட்டில் வைத்து விட்டு . மீதி நான்கு பொத்திகளுடனும் அந்த பெட்டிக் கடையை நோக்கி ஓடினான் .

கடையில் இருந்த அந்த கண்ணாடிப் பெட்டியில் இன்னமும் மூன்று பணிஸ் மீதியாக இருந்தது . அந்த பெட்டியையும் தன் கையில் இருந்த பொத்தியையும் கடை முதலாளியையும் மாறி மாறி பார்த்தபடி நின்றான்.

“என்னடா வேணும் ? ” என்றார் முதலாளி. எதுவும் பேசாது ஊமையாக நின்றான். மீண்டும் சற்று உரத்த தொனியில் “என்னடா வேணும் ? ” என்றார் முதலாளி. அவரது பெறுமாத வண்டியை பார்த்த படியே “ உங்களுக்கு வாழைப்பொத்தி வேணுமா ? ” என்று கேட்டான்
“ எங்க காட்டு பாப்பம் “ என்றார். பையை எட்டிக் கொடுத்தான் .

“பறவாய் இல்லையே பொத்தி வாடாம நல்லாத்தான் இருக்கு இப்பதான் புடுங்கி இருக்குப்போல சரி என்ன விலை ? “ என்றார்.

அவன் அந்த கண்ணாடிப் பெட்டி பணிஸையே பார்த்தபடி நின்றான். நான்கு பொத்திகளையும் எடுத்து முட்டைக்கோவாவிற்கு அருகில் வைத்தது விட்டு பையை அவனிடம் கொடுத்தார். பின் ஒரு பொத்திக்கு இரண்டு ரூபா வீதம் எட்டு ரூபா காசை மடித்து அவனின் உள்ளங் கையில் வைத்தார். அவனின் கண்கள் அந்த கண்ணாடிப் பெட்டியை விட்டு அகலவில்லை காசோடு கையை மேசையில் வைத்தபடி சிலையாய் நின்றான்.

முதலாளி அந்த மூன்று பணிசையும் ஒரு சரையில் சுத்தி அவனிடம் கொடுத்து விட்டு.

“ உன் பொத்திக்கு இதை விட நல்ல விலை யாரும் தர மாட்டார்கள் ” என்று கூறினார்.

பையை கமக்கட்டில் வைத்துக் கொண்டு இரு கையிலும் இருந்த பணிசையும் காசையும் மாறி மாறி பார்த்தபடி வீடு நோக்கி ஓடினான்.

முற்றும் .

## சேர்ந்து நில் விடிவு வரும்

*கிரிகாசன்*

*மலர் தூங்கும் பனி மண்ணில் வீழும் - பூ*

*மணம் ஏந்தி இளந்தென்றல் அலைந்தோடக் காணும்*
*புலர்கின்ற பொழுதான யாவும் - நம்*
*பொன்னான தாய்மண்ணின் புதுமை என்றாகும்*
*சிலர்வந்து தாய்நிலம் பற்றி - எம்மைச்*
*செல்லென்று காட்டிடை சிறையிட்டு வைத்தால்*
*இலதென்று ஆகுமோ வீரம் - நாமும்*
*இருந்தழும் நிலை காண மீளுமோ தேசம்*

*கலை ஒன்றித் தமிழ் இன்பம் காணும் - நற்*
*கனி போலும் சுவை எங்கள் தமிழீழ வாழ்வும்*
*உலைபொங்கும் வயல்கொண்ட நெல்லும் - விதை*
*உழவர்தம் வியர்வையும் உதிர்கின்ற மண்ணும்*
*நிலை கொண்ட எம் தேசம் வேண்டும் - அதை*
*நீர்வார்த்து தருமமென் றளிக்கவா நானும்*
*மலைபோன்று இடர் வந்தபோதும்- நாமும்*
*மறுபடி கொள்வோமோ எமதன்னை நாடும்*

*சிலபூக்கள் குளம் தன்னில் ஆடும் - அதில்*
*சிந்தாமல் வண்டொன்று தேனுண்டே ஓடும்*
*வலைதன்னில் மீன்வந்து வீழும் -அதை*
*வாரிக் கரைபோட்டு விலைகூறு வோரும்*
*தலை சீவிப் பூச் சூட அன்னை - அவர்*
*தாயாம் என் பாட்டியின் கதை சொல்லும் தன்மை*
*நிலைகொண்ட நாம் வாழ்ந்த மண்ணை - இன்று*
*நீசர்தம் கைவிட்டு மீட்பதே வேலை*

*தொலை என்று வந்தாலும் பகைவன் - அவன்*
*துண்டுதுண்டாய் ஆக்கத் துணைநின்ற உலகம்*
*மலை போலும் தமிழ் வீர மாந்தர் - இவர்*
*மாளென நஞ்சிட்டுக் கொன்றதோர் கோலம்*
*குலைகுலை யாகவே வெட்டி - அவன்*
*கும்மாளம் போட்டாடக் குவலயம்சுற்றித்*
*தலை கீழென் றுருண்டோடும் பூமி - நாமும்*
*தருமத்தைக் கேட்டிட எவருண்டு மீதி*

*மொழி ஒன்று தமிழ் எங்கள் அன்னை - இதை*
*மறப்பதோ ஒன்றாகு மதியூகம் கொண்டே*
*வழி கண்டு சென்றிட வாழ்வாம் -நூறு*
*வகையான வழிகாணில் பிரிவொன்றே மீதாம்*
*தெளிகின்ற மனதோடு உறுதி - அதை*
*தேர்ந்து நீ சரியான திசைகண்டு சென்றால்*
*பழி வென்று தீர்வாகி விடியும் - நீயும்*

*பயமின்றி வாழ ஓர் விடியலும் தோன்றும்.*

# மௌனங்கள் உயிர்த்தெழுந்தால்

பகுதி 22

மணிகண்டன்




காகித திருவிழாவில்
நின் விழிக்கு முன்மொழிந்த கவிதைகளை
மணிமகுடமென வெற்று காகிதங்கள்
ஏழாம் புன்னகையுடன் சூடிக்கொண்டனவாம் !

♠ ♠ ♠

பாகற்காயும் மூன்று விரல் தாங்கி
ஆள்காட்டி விரல் அனைத்து
கட்டை விரல் முட்டு கொடுத்து
அமுதூட்டுகையிலே பஞ்சாமிர்தம் ஆயினவே !

♠ ♠ ♠

செவ்வாய்க்கும் வழி பிடித்து
செயற்கைகோள் ஒன்றை ஏவியாச்சு
செவ் வாய்க்கு மேலிருக்கும் விழியடைய
வழி தேடி கவிதைகள் தாங்கிய காகித
செயற்கைகோள் ஒன்றை அனுப்பியிருக்கிறேன் !

♠ ♠ ♠

நீ அணிந்து வந்த தாவணி கண்ட
வண்ணத்துப்பூச்சியின் தென்காசி பட்டண இளவரசி
பொதிகை ஆடை கடை சென்று மொத்த
ஆடைகளையும்
ஒரு புரட்டு புரட்டிவிட்டு அதுபோல் இல்லையென
மலரினோடு சண்டையிட்டு மௌனமாய் இருக்கிறதாம் !

♠ ♠ ♠

உனக்கென எழுதி தந்த கவிதைகளை படித்த பின்பு
வெற்று காகிதமாய் திரும்ப வருகிறது
நீ படித்த பின்பு காகிதத்தில் படிந்திருக்க
எங்ஙனம் அவற்றாலும் முடியும் !

♠ ♠ ♠

எண்களில் சுழியம் மட்டும்
வளையல்களாக நின் கை சேர்த்தாய்
மற்றவை உயர்மட்ட குழுவொன்றை கூட்டி
அணிகளன்களோடு பேச்சுவர்த்தை நடத்தி வருகிறதாம் !

♠ ♠ ♠

நின் விழிகளென்ன
இலை கூட உதிரா பூச்செடியோ
ஒரு பூவாவது எனக்கு திரும்ப கொடு
எல்லாம் பூக்களையும் வாங்கி மட்டும்
வைத்துக்கொள்கிறாய் !

♠ ♠ ♠

எனக்கென்று உன்னிடம்
பெரியதாக ஒன்றும் கேட்க போவதில்லை
அதிகபட்சமாக எனது கவிதைகளையாவது
காதலித்துக்கொண்டிரு போதும் !

♠ ♠ ♠

எனது பற்களின் நண்பன் நகத்தினை
எங்ஙனம் காய் நகர்த்தி
இங்ஙனம் நகவெட்டி கொண்டு வெட்டிக்கொள்ள
நாடகம் ஒன்றை நடைபெறச் செய்தாய்
ஒரு முறை எனது நகம் கடித்து பார்
உனது விழி குறிப்புகளை அங்குதான் சேமித்து
வைத்திருக்கிறேன் !

♠ ♠ ♠


காதல் என்று உனது கையில் இருக்கும்
கத்திக்கும் என் மீது காதல் சற்று அதிகம் போல
சிறு துளையிட்டு பெரும் கவிதை தொகுப்பு ஒன்றை
வற்றாமல் ஓட விட்டுக்கொண்டிருக்கிறது !

♠ ♠ ♠

# சாம்ராட் சம்யுக்தன்

*சிவாஜிதாசன்*

### பாவம் 2. 11. துன்ப அலைகள்




சில நேரங்களில் விதியின் விளையாட்டு மோசமானதாகத் தோன்றும். சம்யுக்தனை ஒற்றனாக அனுப்பி, பகைவன் மார்த்தாண்டன் தீட்டும் திட்டங்களைத் தெரிந்து, அவ்வப்போது வீரபுரத்திற்குத் தூது சொல்லுவான் என்று நினைத்திருந்த வீரபுர மன்னருக்கும் ராஜ குருவுக்கும் பெரும் இடி தலையில் இறங்கியது. மார்த்தாண்டன் அனுப்பிய ஓலையை ராஜ குரு படிக்க, மன்னர் சிலையென உட்கார்ந்திருந்தார். மணியம்மை குரூரப் பார்வையோடும், ரவிவர்மன் துக்கத்தால் விக்கித்துப்போயும் அரண்மனையின் ரகசிய அறையில் நின்றிருந்தனர்.

ராஜ குரு ஓலையைப் படிக்கும் ஒலியைத் தவிர வேறு எந்த அரவமும் கேட்காமல் அந்த அறையே துக்கம் சூழ்ந்தபடியிருந்தது.

"வீரபுர மன்னருக்கு,

நீங்கள் அனுப்பிய ஒற்றன் சம்யுக்தன் சிவபதவி அடைந்துவிட்டான். உங்கள் நாடு என் முன் மண்டியிடும் நாள் வெகுதூரத்தில் இல்லை. இனியும் ஒற்றர்களை அனுப்பினால், தேர்ந்தவர்களாக, என் அறிவுக்கு வேலை கொடுப்பவர்களாக அனுப்புங்கள். சிறு பிள்ளைகளை அனுப்பி வேவு பார்க்கும் அளவிற்கு நான் ஒன்றும் தரம் தாழ்ந்துவிடவில்லை." என்று முடித்திருந்தான் மார்த்தாண்டன்.

அதைப் படித்து முடித்த ராஜ குரு, மன்னரின் கவலை தோய்ந்த முகத்தை நோக்கினார். ராஜ குருவிற்கு சம்யுக்தனை அவ்வளவாகப் பிடிக்காது என்றாலும் அவன் திறமை மேல் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார். இப்படி சட்டென்று அவன் கதை முடியும் என்று அவர் நினைக்கவேயில்லை. அவரது மனது லேசாக ஆட்டம் கண்டது. இருந்தும், அதே சாந்த சொரூபமான முகத்தோடு மன்னரிடம் பேசத் துவங்கினார்.

"அரசே!" என்றார் மெல்லிய குரலில்.

கனவிலிருந்து விழித்தவரைப்போல் ராஜ குருவை நோக்கினார் மன்னர்.

நடுக்கமான குரலில், "என்ன சொல்வதென்றே தெரியவில்லை ராஜ குருவே! மந்திரி தேவராஜனுக்கு நான் என்ன பதில் கூறப் போகிறேன். நம் மேல் இருக்கும் நம்பிக்கையில் தானே சம்யுக்தனை நாகவனத்திற்கு அனுப்பச் சம்மதித்தார்" என்றார் கலங்கிய கண்களோடு.

தந்தையின் கவலையை விட தன் நண்பன் பிரிந்து போன கவலை தான் ரவிவர்மனின் உள்ளத்தை வாட்டியது. தூணின் மேல் லேசாக உடலைச் சாய்த்தபடி வருந்திக்கொண்டிருந்தான்.

உள்ளுக்குள் சம்யுக்தன் இறந்ததை எண்ணிக் குதூகலித்த போதும், முகத்தில் துன்பரேகையைப் படரவிட்டுப் பொய்யாக நடித்துக்கொண்டிருந்தார், மணியம்மை.

"என் கணவரையும் மகனையும் காப்பாற்றி என்னிடம் ஒப்படைக்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்த மகனை, காலன் அழைத்துக்கொண்டானே!" என்று கண்ணீர் விட்டு அழுதார்.

ராஜ குரு, மணியம்மையை முதல் முறை பார்ப்பது போன்று வித்தியாசமாகப் பார்த்தார். பின் மன்னரை நோக்கித் தன் தலையைத் திருப்பிக்கொண்டார்.

"அரசே ! இப்போதைக்கு இவ்விஷயத்தை யாருக்கும் தெரியாமல் மறைப்பது நன்று"

"என்ன சொல்கிறீர்கள் ராஜ குருவே ! செய்த பாவத்திற்கே பரிகாரம் இல்லையே என்று வருந்திக்கொண்டிருக்கும் நிலையில், நீங்கள் இன்னும் பாவச்செயல்களைச் செய்யுமாறு என்னை

வற்புறுத்துகிறீர்களே?" என்று மனதின் வலியோடு வார்த்தைகளை உதிர்த்தார் மன்னர்.

"அரசே! நான் சொல்வதைத் தயவு கூர்ந்து கேளுங்கள். மந்திரி தேவாராஜனுக்குத் தன் மகன் இறந்து போனது தெரிந்தால் எளிதில் தாங்கிக்கொள்ளமாட்டார். சிறிது காலம் சென்றதும் நிலைமையை எடுத்துக்கூறி புரியவைப்போம்"

மன்னரும் யோசனையோடு ஒப்புதலாய்த் தலையசைத்தார்.

"ஒன்று மட்டும் புரியவில்லை ராஜ குருவே! மார்த்தாண்டன் சம்யுக்தனை எப்படி எளிதில் கண்டுகொண்டான்?"

"இன்னும் நாகவன ஒற்றர்கள் இங்கு இருக்கிறார்கள் என்று அர்த்தம்" என்றார் ராஜ குரு சலனமற்ற முகத்தோடு.

மன்னர் அதிர்ச்சியோடு ராஜ குருவை நோக்கினார்.

"அதுவும் இந்த அரண்மனையிலேயே தான் உள்ளார்கள்" என்று கூறியபடி, அன்று சம்யுக்தனை அனுப்பிய நிகழ்வுகளை எண்ணிப் பார்த்தார்.

சம்யுக்தன் ஒற்றனாகச் செல்லப்போவதை மன்னரும் ராஜ குருவும் தனி அறையில் முடிவெடுத்த சமயத்தில், யார் யார் இருந்தனர்? என்று எண்ணிப்பார்த்தார். தங்களோடு ரவிவர்மனும் மணியம்மையும் தான் இருந்தனர். இவர்களைத் தாண்டி ரகசியங்கள் வெளியே செல்கிறது என்றால்...! என்று எண்ணியபடியே மணியம்மையை நோக்கினார் ராஜ குரு.

மணியம்மை, ராஜ குரு தன்னைக் கூரிய விழிகளால் துளைத்தபடி பார்ப்பதை அசௌகரியமாக உணர்ந்தார். பின்பு, என்ன எண்ணினாரோ தெரியவில்லை. மணியம்மை பொய்யான, கலங்கிய கண்களோடு அந்த அறையை விட்டு அகன்றார்.

சிறிது நேரத்தில் ரவிவர்மனும் சென்றுவிட்டான். மன்னரும் ராஜ குருவும் அமைதியின் மடியில் அமர்ந்துகொண்டிருந்தனர். ஒருவருக்கொருவர் பேசவில்லை. மௌனம் நீண்டுகொண்டே போனது.

அப்போது, பணியாள் ஒருவன் அவர்களின் முன் தோன்றி, மன்னரையும் ராஜ குருவையும் சிரம் தாழ்த்தி வணங்கினான்.

"சக்கரவர்த்தியே ! தங்களைக் காண மந்திரி தேவராஜன் வந்திருக்கிறார்"

மன்னரும் ராஜ குருவும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். 'வரச் சொல்லுங்கள்; தான் பார்த்துக்கொள்வதாய்' ராஜ குரு பார்வையால் மன்னருக்கு சமிக்ஞை கொடுத்தார்.

மன்னரும் ராஜ குருவின் பார்வையின் கூற்றை உணர்ந்துகொண்டு, "அவரை வரச் சொல் !" என்று பணியாளனுக்குக் கட்டளை பிறப்பித்தார். அவனும் அங்கிருந்து சென்றான்.

"சோதனை நம்மை விடாது போலிருக்கிறதே!" என்று வெறுப்போடு தனக்குத் தானே கூறிக்கொண்டார் மன்னர்.

ராஜ குரு, தேவராஜனை எப்படிச் சமாளிப்பது என்று யோசனையில் ஆழ்ந்தார். சில மணித்துளிகளில் தேவராஜனும் அங்கு வந்து சேர்ந்தார்.

"மன்னருக்கும் ராஜ குருவுக்கும் என் பணிவான வணக்கங்கள் !"

"வாருங்கள் மந்திரியாரே ! அமருங்கள் ! " என்று ஓர் ஆசனத்தைச் சுட்டிக்காட்டினார் ராஜ குரு.

*நான் அழுது காதலை*
*பெற்றேன் நீ*
*அழுது காதலை*
*தொலைக்கிறாய் ...!!!*

***உன் அழகை கிளியுடன்***
***ஒப்பிட்டேன் அப்போ***
***கிழிந்து போனது காதல் ...!!!***

*கே இனியவன்*

அதில் அமர்ந்தவாறே, "சம்யுக்தனிடமிருந்து ஏதாவது செய்தி வந்திருக்கிறதா?" என்று ஆசையோடு எதிர்பார்ப்பையும் கலந்து கேட்டார் தேவராஜன்.

மன்னருக்குச் சங்கடமாகப் போனது. ராஜ குருவை வெறுமையோடு பார்த்தார்.

"வந்திருக்கிறது மந்திரியாரே ! நாங்களே உங்களை அழைக்கலாம் என்றிருந்தோம். அதற்குள் நீங்களாகவே வந்துவிட்டீர்கள்" என்று லாவகமாகப் பேசினார் ராஜ குரு.

"என்ன செய்தி என்று நான் அறிந்துகொள்ளலாமா?" என்று கேட்டார் தேவராஜன் மகிழ்ச்சியாக.

"அது ரகசியம் மந்திரியாரே ! ஆனாலும், உங்களுக்கு வேண்டிய விஷயத்தைக் கூறுகிறேன். உங்கள் மகன் அங்கே நலமாக உள்ளதாகவும் கொடுத்த வேலைகளை முடிக்க முன்னேறிக்கொண்டிருப்பதாகவும் அவன் மேல் யாரும் சந்தேகம்கொள்ளவில்லை எனவும் குறிப்பிட்டிருந்தான்" என்று கூறினார் ராஜ குரு.

தேவராஜனுக்கு அகமும் முகமும் களிப்பில் நிறைந்தது. 'தன் மகன் சிறந்தவன்' என்று தனக்குள்ளாகவே கூறிக்கொண்டார்.

அடுத்த கேள்வியை தேவராஜன் கேட்பதற்கு முன், "மந்திரியாரே ! நானும் மன்னரும் ரகசியமாகச் சில விஷயங்களைப் பேச வேண்டிய நிலையில் உள்ளோம்" என்று புன்முறுவலோடு அவரை வெளியே செல்லும்படி சொல்லாமல் சொன்னார் ராஜ குரு.

"சரி, ராஜ குருவே ! நான் வருகிறேன்"

மன்னருக்குப் பிரிவு வணக்கத்தைக் கொடுத்துவிட்டு புளகாங்கித மனதோடு அங்கிருந்து புறப்பட்டார் தேவராஜன். தன் மகன் நலமாக உள்ளான் என்ற மகிழ்ச்சி எத்தனை நாள் நீடிக்கப்போகிறதோ தெரியவில்லை என்று காலம் அவரைப் பார்த்துச் சிரித்தது.

தேவராஜன் சென்றதும் மன்னர் பெருமூச்சை விட்டெறிந்தபடி, "சம்யுக்தனைப் பற்றிய உண்மை மந்திரிக்குத் தெரியாமல் எத்தனை நாள் மறைந்திருக்கும் என்று தெரியவில்லையே?" என்றார்.

"அவருக்குத் தெரியும் வரை" என்று புன்முறுவலோடு ராஜ குரு கூறினார்.

"இருந்த ஒற்றனும் வழக்கம் போல் மரணித்துவிட்டான். இனி, மார்த்தாண்டனின் நடவடிக்கையை யார் கூறப்போகிறார்கள்?" என்று மெல்லிய குரலில் சோகத்தைக் கலந்து கூறினார் மன்னர்.

"மார்த்தாண்டன் வெற்றி அடைந்துவிட்டான். ஆனால், முழுவதுமாக இல்லை. நம் ஒற்றன் ஒருவன் அங்கிருக்கிறான்"

மன்னர் ராஜ குருவைக் குழப்பத்தோடு நோக்கினார். ராஜ குரு ஏதோ கூற விழைந்து சட்டென்று நிறுத்தி அறையின் வாசலை நோக்கினார். பின், மன்னரின் காதருகில் சென்று, "பார்த்திபன் இன்னும் அங்கு தான் இருக்கிறான்" என்று கூறினார். மன்னரும் உண்மையை உணர்ந்தது போன்று பாவனை செய்தார்.

பிறகு, ராஜ குரு மன்னரிடம் விடைபெற்று அங்கிருந்து வெளியேறினார். வெளியேறும் சமயம் தூணின் பின்னால் மறைந்திருந்த மணியம்மையைக் காணவும் அவர் தவறவில்லை. வஞ்சகப்

புன்னகையோடு சென்றார் ராஜ குரு.

★ ★ ★

சம்யுக்தன் இல்லாத பார்த்திபனின் நிலைமை, ஒளி இல்லாத தீபம் போன்று தான். சம்யுக்தன் இறந்துவிட்டானா? அல்லது உயிரோடு இருக்கிறானா? என்று புரியாமல் இருதலைக்கொள்ளி எறும்பாகத் தவித்துக்கொண்டிருந்தான் பார்த்திபன்.

பார்த்திபன், சம்யுக்தன் தனக்கு இட்ட கட்டளையையும் தானும் விஜயனும் அதன் படி செயல்பட்டதையும் நினைத்துப் பார்த்தான்.

சம்யுக்தன் சொன்னபடியே விஜயனின் நண்பன் உடலை நதியின் ஓரம் கிடத்திவிட்டு, விஜயனும் பார்த்திபனும் மலைச்சரிவின், பாறைகள் நிறைந்திருந்த பகுதியில் யாருக்கும் புலப்படாவண்ணம் மறைந்திருந்து, திட்டம் சரியாக நடக்கின்றதா என்று பார்த்துக்கொண்டிருந்தனர். சிறிது நேரத்தில் சம்யுக்தனும் அருவியில் குதித்தான். திட்டம் சரியாக நடப்பதை எண்ணி முதலில் இருவருக்கும் மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால், தண்ணீரில் விழுந்த சம்யுக்தன் திட்டமிட்டபடி இருவரையும் நோக்கி வரவில்லை. அப்பொழுது தான் இருவருக்கும் பதற்றமானது. தவறு நேர்ந்துவிட்டிருக்குமோ என்று அச்சப்பட்டனர். அந்நேரத்தில், நாகவன வீரர்கள் மலையில் இருந்து இறங்கி, கீழே கிடக்கும் உடலை நோக்கி வந்தனர். அதையும் சம்யுக்தன் முன்னமே யூகித்துக் கூறியிருந்ததால், அங்கிருந்த பாறைகளை உருட்டி, உடலின் மீது தள்ளிவிட்டனர். வீரர்களும் உடலை எடுத்துச் செல்ல முடியாத நிலையில் வெறுங்கையோடு திரும்பி விட்டனர்.

அவர்கள் சென்றதும், விஜயனும் பார்த்திபனும் சம்யுக்தன் விழுந்த இடத்திற்குச் சென்று பார்த்தனர். சம்யுக்தன் குதித்த இடத்திலிருந்த ஒரு பாறையின் மீது ரத்தம் படிந்து தண்ணீரோடு கலந்து வழிந்துகொண்டிருந்தது. ஆனால், சம்யுக்தன் அங்கில்லை. அந்த அருவியின் கொடிய வாயில் விழுந்தவர்கள் மீண்டு வந்ததாய் சரித்திரம் குறிப்பிடவில்லை. ஆனாலும், சம்யுக்தன் வந்துவிடமாட்டானா என்ற நம்பிக்கை ஒளியை மனதில் ஏற்றியபடி இருட்டும் வரை அங்கேயே இருவரும் காத்திருந்தனர். ஆனால், அவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. மனபாரத்துடன் விருப்பமில்லாமல் அவ்விடத்தை விட்டு அரைமனதோடு அகன்றனர்.

நாகவனத்தில் மக்கள் பேசிக்கொண்டதை வைத்துத்தான் சம்யுக்தன் எப்படி மார்த்தாண்டனால் தாக்கப்பட்டுள்ளான் என்பதைத் தெரிந்துகொண்டனர். மார்த்தாண்டன் ஒருவன் மீது குறி வைத்து வேலை எறிந்தால் அது பிரம்மாஸ்திரம் போல் உயிரைக் குடிக்காமல் விடாது என்று மக்கள் கூறினார்கள்.

ஆனாலும், 'தன் நண்பன் பல சாதனைகளைச் சாதிக்கப் பிறந்தவன். அதற்குள் அவன் உயிரை எடுக்கக் காலனுக்கு மனம் வராது' என்று சம்யுக்தன் மேல் இன்னும் நம்பிக்கை இழக்காமல் இருந்தான் பார்த்திபன். 'சம்யுக்தன், நிச்சயமாக மீண்டு வருவான்; என்னோடு சேருவான்; அவனைக் கட்டித் தழுவிக் கண்ணீர் மல்க அவன் மேல் சின்னக் கோபம் கொள்வேன்' என்று கற்பனை உலகில் சஞ்சரித்தவாறு குடிசையின் அருகிலிருந்த மரத்தடியில் வேதனையோடு அமர்ந்திருந்தான் பார்த்திபன்.

பார்த்திபனின் குறும்புத்தனம் மறைந்து விட்டிருந்தது. சோர்வு அவன் மனமெங்கும் பரவி அவனது முகத்தை வாட்டமுறச் செய்தது. இறுகிய முகத்தோடு வேலை செய்துகொண்டிருந்தான். இத்துணைப் பிரச்சனைகள் நடந்தும் அவன் சிறிதும் கலங்கவில்லை. எல்லாவற்றையும் உள்ளூறவே வைத்துக்கொண்டு நடைப்பிணம் போல் வாழத் துவங்கினான். 'சம்யுக்தன் வருவான்; நிச்சயம் வருவான்' என்ற எண்ணம் மட்டும் அவன் மனதில் தேயாமால் வளர்பிறை போல வளர்ந்துகொண்டே போனது.

நாட்களும் கடந்துகொண்டே போயின. சம்யுக்தன் வந்தபாடில்லை.

விஜயனுக்கும் சம்யுக்தனின் நினைவு மனதில் உறுத்திக்கொண்டே இருந்தது. 'சம்யுக்தன், தன்னைக் காப்பாற்றியது; தன்னிடம் உதவி கேட்டது' எல்லாம் எண்ணுகையில் அவனையறியாமல் கண்ணீர்ப் பூக்கள் பூத்தன. விஜயனுக்கு ஒரே ஒரு ஆறுதல் வள்ளி மட்டுமே. அவளிடம் நடந்ததைப் பிசகில்லாமல் கூறிவிட்டான்.

வள்ளியால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. தன் ஆதங்கத்தை இரவு முழுதும் அழுது தீர்த்துக்கொண்டாள். சம்யுக்தன் ஒரு அண்ணனாகத் தன்னிடம் பரிவு காட்டியதை எண்ணும் பொழுது விம்மலும் அழுகையும் ஒரு சேர அவளை ஆட்கொண்டது.

அரண்மனையில் வேலை முடிந்ததும் தன் குடிசையின் அருகில் இருக்கும் ஆலமரத்தடியில் அமர்ந்து பழைய நினைவலைகளில் நீந்திக்கொண்டிருப்பான் பார்த்திபன். உணவு உண்ண மறந்து வெகுநாட்கள் ஆனதால், அவனது உடல் இளைத்து மெலியத் துவங்கியது.

இரவு நேரத்தில் வள்ளி அவனுக்காக உணவு கொண்டு வருவாள். அதை உண்ணாமல் வெறித்தபடியே கிடப்பான். 'சம்யுக்தன் உண்டிருப்பானா?' என்று தனக்குள்ளாகவே கேட்டுக்கொள்வான். பக்கத்துக் குடிசைகளிலிருந்து வரும் சமையல் வாசனையை நுகரும் போதெல்லாம், சம்யுக்தன், 'எதற்காக நீ உண்டுகொண்டே இருக்கிறாய்?' என்று கடிந்துகொள்வது அவன் நினைவுக்குவரும்.

பார்த்திபன், உறங்காமல் வேலைக்குச் செல்லத் துவங்கியதால் உடல் தளரத் துவங்கியது. சமையலறையில் வேலை பார்த்துக்கொண்டிருந்த பார்த்திபன் தோட்டத்திற்குச் சென்று வேலையைப் பார்க்கத் துவங்கினான். செடிகளுக்கும் மரங்களுக்கும் தண்ணீர் ஊற்றுவது அவனுக்குச் சிறு நிம்மதியை வழங்கியது.

சுந்தரியும், அவனை அவ்வப்போது கவனிக்கத்

தவறவில்லை. அவன் மேல் லேசான பரிதாபம் உண்டானது அவளுக்கு. அதனால், அவனைக் கடிந்துகொள்ளவில்லை.

**அவள்**

*புத்தம் புதிய*

*கரன்சி நோட்டு!*

*பக்கத்தில்*

*கசங்கியபடி அவள்!!!*

*- காரைசீனு -*

விஜயன், சம்யுக்தனின் குதிரையைப் பராமரிக்கத் துவங்கினான். சம்யுக்தனுக்கு மட்டுமே பணிந்து நடந்த குதிரை முரண்டு பிடித்தது. ஆயினும், விஜயன் காட்டிய பரிவால் அவனுக்கு அடங்கியது. சம்யுக்தன் எப்பொழுது வருவான்? என்று ஏக்கத்தோடு தினமும் காத்துக்கொண்டிருந்தது அக்குதிரை.

ஒரு இரவு வேளையில், சம்யுக்தன் வளர்த்த யானை பிளிரும் சத்தம் அரண்மனையையே நடுங்கச் செய்தது. நாகவன வீரர்கள் சம்யுக்தனைத் தாக்கிய நிகழ்வை மட்டும் அது இன்னும் மறக்காமல் நினைவில் வைத்துக்கொண்டிருந்தது. தன் கோபத்தை அவ்வப்போது வெளிக்காட்டி, தன்னை நெருங்குபவர்களைத் தாக்கத் தொடங்கியது. அதனால், அதைச் சங்கிலியால் பிணைத்து வைத்திருந்தனர்.

அன்றிரவு, அந்த யானையைப் பார்க்கப் பார்த்திபன் சென்றான். யானை பிளிறியபடியே அவனைப் பார்த்தது. சம்யுக்தனுடன் பார்த்திபனைக் கண்டுள்ளதால், அவனையே சிறிது நேரம் உற்றுநோக்கியது. பார்த்திபன் யானையை நெருங்கினான். யானை ஒன்றும் செய்யாமல் அவனைப் பார்த்தபடியே இருந்தது. திடீரென்று, அவனைத் தாக்க இரண்டு அடி முன்னே வந்தது. பார்த்திபன் தடுமாறிக் கீழே விழுந்தான். அவன் விழுந்த இடத்திற்கு முன்னேற முடியாமல், யானையின் கால்களில் கட்டப்பட்டச் சங்கிலி அதைத் தடுத்து நிறுத்தியது. அதனால், பார்த்திபன் தப்பித்தான். அவனைப் பார்த்தபடி துதிக்கையை உயரத் தூக்கிக் கோரமாகப் பிளிறியது யானை.

அந்நேரத்தில், சுந்தரி குதிரையில் வேகமாகச் சென்று அரண்மனை வாசலில் மறைந்தாள்.

'இந்நேரத்தில் எங்கே செல்கிறாள்?' என்று எண்ணிய பார்த்திபன், எழுந்து, சிந்தித்தபடியே தன் குடிசையை நோக்கிச் சென்றான்.

★ ★ ★

ரவிவர்மனின் நிலைமையோ இன்னும் திண்டாட்டமானது.

சம்யுக்தனின் மரணத்தைப் பற்றி சகுந்தலை அறிந்துகொண்டால், தன்னைப் பற்றி என்ன நினைப்பாள்? 'என் அண்ணனை நீங்கள் தான் கொன்றுவிட்டீர்கள்' என்று கதறப்போகும் அவள் பாசத்திற்கு, நான் கூறப்போகும் ஆறுதல், அவள் மனதைச் சாந்தப்படுத்துமா ? சம்யுக்தன் படிக்கச் சென்றிருக்கிறான் என்று நான் கூறியதை நம்பி சந்தோசமாக இருக்கிறாளே? அந்த சந்தோசத்தைத் திரும்ப அவள் முகத்தில் காண முடியுமா? அவளை ஏமாற்றிப் பாவியாகிப் போனேனே! என்று எண்ணியபோது இதயத்தில் முள் தைப்பதாய்த் தோன்றியது ரவிவர்மனுக்கு.

அதனாலேயே சகுந்தலையைக் காண அவன் விரும்பவில்லை. அவளே வந்தாலும் முகம் கொடுத்துப் பேச அவன் மனதிற்குத் துணிவில்லை. அவளது புன்னகை அவனது உடலைத் தீயாய் சுட்டெரித்தது. ரவிவர்மனின் இந்த நிலைமை சகுந்தலைக்கு மனவேதனையையும் குழப்பத்தையும் உண்டு பண்ணியது. இரவில் அழுதபடி தலையணையை நனைக்கத் துவங்கினாள் அந்தப் பேதை.

தன் நண்பன் சம்யுக்தனின் இறப்பிற்குக் காரணமானவர்களைப் பழி வாங்க, அனலாய்க் கொதித்தது ரவிவர்மனின் உள்ளம். அதனால், ஒரு முடிவுக்கு வந்தவனாய் ஓர் ஓலையை எழுதிப் படுக்கையில் வைத்துவிட்டு, சில உடைமைகளை மட்டும் எடுத்துக்கொண்டு குதிரையில் ஏறி இருட்டில் கரைந்து போனான்.

சுமார் ஒன்பது நாழிகைகள் கழித்து, ரவிவர்மன் உறங்கிவிட்டானா என்று பார்க்க வந்த மன்னருக்கு ஓலையைப் பார்த்து அதிர்ச்சி ! ஓலையில் இருக்கும் செய்தியைக் கலவர முகத்தோடு படிக்கத் துவங்கினார்.

தந்தையே ! என் நண்பன் சம்யுக்தன் இறந்து போனதை எண்ணி என் மனம் எல்லையில்லா துயரில் ஆழ்ந்திருக்கிறது. அவனை வஞ்சம் வைத்துப் பழி தீர்த்த கயவர்களைப் பழி வாங்காமல் விடமாட்டேன். நானே ஓர் ஒற்றனாக நாகவனத்திற்குப் புறப்படுகிறேன். என்னை என் வழியில் போக விடுங்கள் ! பாச விலங்கால் என்னைப் பிணைத்து வைத்திருந்தது போதும். இனி, வெற்றி அல்லது வீரமரணம் என்கின்ற தாரக மந்திரத்தை ஒட்டியே என் வாழ்வு செல்லப் போகிறது. என்னை மன்னியுங்கள் ! என்று எழுதி இருந்தான் ரவிவர்மன்.

மன்னர் கலங்கிய கண்களோடு அவ்வோலையையே பார்த்துக்கொண்டிருந்தார்....

இளவரசன் ரவிவர்மன், குதிரையை விரட்டிக்கொண்டு நாகவனத்தை நோக்கித் தன் பயணத்தைத் தொடங்கினான்...

தொடரும்...

# மாவீரர்க்கு அஞ்சலிகள்

பூங்கோதை



தம்மை மெழுகாக்கி தரணியெங்கும் தமிழன்
தலை நிமிர வைத்த நம் மாவீரச் செல்வங்களை..
முன்னை நம் தேசத்தின் முடிசூடா மன்னவரை
முன்னிறுத்தித் தலை சாய்த்தேன்..
வந்தனங்கள் தந்தேன் எம் வீரக் குழந்தைகளே

மார்பை நிமிர்த்தி நின்று
மறப் போர் தொடுத்து நின்ற
மான மா வீரர் முன்னே
முகம் கொடுக்க முடியா முட்டாள்கள்..
நாடுநாடாய் அலைந்து தம்
அரைகச்சை தனை ஏந்தி
அரசியல் பிச்சை வாங்கிவந்தார்
அப்போதும் கூட... வேங்கைகளைச் சிம்ம
சொப்பனமாய்க் கண்டவர்கள்..
அப்பாவி மக்கள் மேல் தம்
சுடுகலன் நீட்டி நின்றார்..

குஞ்சுகளும் குமரிகளும்
பெற்றவரும் பெரியவரும்
குடல் பிதுங்கி, தலை சிதைத்து
குப்பையாய் சிதறடித்த கிராதகர்கள்...
மாணவனை மருத்துவனைப்
பேதமின்றிக் கொன்ற பேர் அரக்கர்...
குருதிச் சேற்றிடையே குற்றுயிராய்
குளித்து நின்ற போது நாம்
கண்டு கொண்டதொன்றே தான்

சாதியும் சமயமும் அங்கு மறைந்தன..
சமத்துவம் பேசின சதை பிண்டங்கள்... தமிழ்
சந்ததி உதிரத்தில் மிதந்தது கண்டோம்
இசைப்பிரியா முதல் இன்னும் பெயர் தெரியா
இளங்குருத்துக்களின் அலறல் ஒலிகள்
ஒதுங்கி நின்ற உலகத்தின் இதயத்தை
ஓங்கி அறைந்து.. நீதி கோரி நிற்கின்றன

ஆறடி மண்கூட வேண்டாம் எமக்கென்று
அடங்காத காட்டாறாய் பாய்ந்தவர்க்கு
அனுமதி இல்லையாம் கல்லறையில் தூங்க..
ஈனப் பிறவிகளே
ஈழத்தமிழச்சி என் அறைகூவல் கேள்..

எம் வீரர்களை அழிப்பதெனின்
அவர்கள் தூங்கிய கல்லறைகளை அல்ல
எம் இதயங்களை இடித்துப் போடு
இங்கே இரத்தமும் சதையும் மட்டுமல்ல
அவர் உருவாக்கிக் கொடுத்த
உணர்வோடு மானமும் உறுதியும்
உண்டென்று உணர்ந்து கொள்..

வரைதாங்கும் வன்தோளன்
வழிகாட்டி விளைவித்த வீரமண்!!!
புறம் பாடிக் கொடியேந்திப் புயலாகிப்
பொருதிய வீரர்கள் வாழ்ந்த மண்!!!
இறவாத தன்மானம் இயல்பிலே கொண்டு
ஈகங்கள் செய்தவர் வாழ்ந்த மண்!!!
விழியிலே நெருப்பேந்தி விருப்போடு
விடியலை நோக்கி நடந்த மண்!!!
அழியாத வரலாற்றைத் தனதாக
அகத்திலே வரைந்த நம் சொந்த மண்!!!

தேசியக் கொடி முன் தலைநிமிர்ந்து
தீரமாய் வணக்கம் செய்தோர் இன்று
தேசம் இழந்து அலைவதோ...
வீர மறவரைப் போர்த்திய நம் கொடி
வெற்றுத் துணியாய் வீழ விடுவதோ

வித்தாகி போன நம் முத்துக்கள் மீது
சத்தியம் உரைத்துப் பாடுகிறேன்
மானத் தமிழன் வாழ்வில் ஒருபோதும்
மயங்கிக் கிடந்ததாய் சரித்திரம் இல்லை
மீண்டும் ஓர் நாள் ஆர்த்தெழுவான்
மூண்ட பகை பொருதப் பொங்கியெழுவான்
தீ பரவத் திசைகள் ஓர் நாள் எரியும்
தீரப்படைகள் அணிவகுத்தேகும்..

அன்று
வீரக் குழந்தைகளே... எம் தியாக செம்மல்களே- நீர்
விழிகளில் சுமந்த கனவுகள் மெய்ப்பட
வீரத் தமிழ் மண் மீண்டும் ஒரு நாள்
விடியலின் கீதம் பாடும்..

# என் ஊரை காணவில்லை!

கே இனியவன்



நான்கு திசையும் வயல்கள்
நாலாபுறமும் குளங்கள்
ஊர் மத்தியில் அம்மன்
ஆலயம் எல்லை புறத்தில்
வீர பத்திரர்
பைரவர்
அய்யனார் ஊரை காக்கும்
கடவுள்களாய்......!!!

• • •

சிறு படகுடன் நிறைந்த
கடற்கரை தொலைதூரத்தில்
உடைந்த கட்டுமரங்களும்
ஆங்காங்கே சிதறிகிடக்கும்
வரையறுக்கப்பட்ட குடிசைகள்
கிராமிய பண்பாட்டை
மாற்றாத வாழ்க்கை முறை.....!!!

• • •

மாலை நேரத்தில் ஆலமரத்தடி
அறிவு தாத்தாக்களின் மன்றம்
மழைக்கு கூட பாடசாலை
பக்கம் ஒதுங்காதவர்கள்
புராணக்கதையிலும்
உலக நடப்பிலும்
படிக்காத மேதைகள்........!!!

• • •

பச்சை மரமொன்றில்
பழங்கள் எதுமில்லை
கறுப்பாய் ஒரு கனி
அதன் பெயர் தேன் கூடு
அதற்கு ஒரு கல்லால் எறிந்து
தேனிகலைக்கும்போது
தலை தெரிக்க ஓடும் சிறார்கள்.....!!!

• • •

இத்தனையும் அனுபவித்து சுவைத்த
அற்புத மனிதன் நான்
காலம் கடந்து என் பிள்ளையுடன்
என் ஊருக்கு போனேன் கனவுகளுடன்
அம்மன் கோயில் இராஜ கோபுரத்தை
காணவில்லை சிறு கூடாரத்துக்குள்
முடங்கி இருந்தாள் என் தாய்
காவல் தெய்வங்கள் இருந்த
கால சுவடியை கூட காணவில்லை .......!!!

• • •

என் கனவு மட்டும்
தவுடு பொடியாகவில்லை
என் ஊரும் தவுடு பொடியாகிவிட்டது
ஆலமரம் கூட அங்கவீனமாய்
கிளைகள் உடைந்த்த நிலையில்
வீடுகள் எல்லாம் துப்பாக்கி
துளையால் அரிதட்டானது
ஓடி விளையாடிய வயலுக்குள்
இறங்க விரும்பினேன் அருகில்
ஒரு பலகை ..கவனம்
வெடிக்கும் இறங்காதீர் இறங்காதீர்.....!!!

• • •

என் ஊரை காணவில்லை
என் உறவுகளை காணவில்லை
ஓடி விளையாடிய என் நண்பர்களை
ஓரிரு இடங்களில் புகைப்படத்தில் பார்த்தேன்
இது கவிதை இல்லை நான் நேரில்
கண்ட அனுபவித்த துன்பங்கள்
தூரத்தில் என் பழைய நண்பன்
ஓடி வந்து கட்டிப்பிடித்தான்
முடியவில்லை அவனால்
ஒரு கை இல்லை ........!!!

• • •

# மந்த்ரமும் மாந்த்ரீகமும்

கருணாகரன்

நாம் அறிந்து கொள்ள முற்படும் யோகம் மூலிகை மந்த்ரம் பகுதியில் மூலிகைகளை பயன்படுத்தும் விதம் பற்றிய பாகத்தை காணப் போகின்றோம்.



“ஒவ்வொரு மூலிகைக்கும் அதனை நாம் எடுத்துக்கொள்வதற்கு குறிப்பிட்ட நாளும் , நட்சத்திரமும், மந்திரமும் உண்டு .

மூலிகை சாபம் நீக்கவும் , எடுக்கவும் என்ன செய்ய வேண்டும் , எப்போது செய்ய வேண்டும் , எப்படி செய்ய வேண்டும் என்பதனை விரிவாக பார்ப்போம். “

ஸ்ரீ ஸ்ரீ மகா குருவான கருவூரார் மூலிகைகளையும் `அதற்குரிய மந்த்ரங்களையும் தெளிவாக குறிப்பிடுகின்றார்.

அவையாவன :

வசிய மூலிகையில் ஒன்றான சீதாதேவி செங்கழுநீர் எனும் மூலிகையை பறிக்கும் முன் *“ஓம் ஸ்ரீம் லட்சுமி தேவி “* என்று செடியின் முன் நின்று மந்த்ரம் ஜபித்து , அந்தச் செடியின் ஆணிவேரை அறுத்து விடாமல் எடுத்து பயன்படுத்த வேண்டும் .

வசிய மூலிகையில் ஒன்றான பொன்னூமத்தை எனும் மூலிகையை பறிக்கும் முன் *“கிறீணி வருணியாரே மதர்நாமி சீவி வசியம் பவ் வே “* என்று செடியின் முன் நின்று மந்த்ரம் ஜபித்து , அந்தச் செடியின் ஆணிவேரை அறுத்து விடாமல் எடுத்து பயன்படுத்த வேண்டும் .

வசிய மூலிகையில் ஒன்றான கரும் செம்பை எனும் மூலிகையை பறிக்கும் முன் அதற்கு தாமரை அல்லது கற்றாழை நூலில் காப்புக்கட்டி பூஜைகள் செய்து *“ஓம் ஓம் சியாமள ரூபி சாம்பவி கிறீங்கி விலிங் கிறிஞ்சாதகி “* என்ற மந்திரம் உருவேற்றி மூன்றாம் நாள் அந்தச் செடியின் ஆணிவேரை அறுத்து விடாமல் எடுத்து பயன்படுத்த வேண்டும் .

வசிய மூலிகையில் ஒன்றான வெண் குன்றிமணிக் கொடி எனும் மூலிகையை பறிக்கும் முன் அமாவாசையன்று காப்புக்கட்டி பூஜை செய்து *“வம்மம் வசவிச நிறை மிருக வசீகரி ஓம் “* என்று செடியின் முன் நின்று மந்த்ரம் ஜபித்து , அந்தச் செடியின் ஆணிவேரை அறுத்து விடாமல் எடுத்து பயன்படுத்த வேண்டும் .

வசிய மூலிகையில் ஒன்றான மஞ்சள் கரிசலாங்கண்ணி எனும் மூலிகையை பறிக்கும் முன் ஒரு வெள்ளிக்கிழமையன்று காப்புக்கட்டி மறு வெள்ளிகிழமை *“ ஓம் கிலியுஞ் சவ்வு மஹி “* என்று செடியின் முன் நின்று மந்த்ரம் ஜபித்து , அந்தச் செடியின் ஆணிவேரை அறுத்து விடாமல் எடுத்து பயன்படுத்த வேண்டும் .

✡ ✡ ✡ ✡ ✡ ✡

மோகன மூலிகையில் ஒன்றான வெண் ஊமத்தை எனும் மூலிகையின் இலையை பறிக்கும் முன் “ மா இதான் மத்தம் தொன்மத்தி *ஓம் ஆம் இலீஞ் சத்திசன மோகினி “* என்று செடியின் முன் நின்று மந்த்ரம் ஜபித்து , அந்தச் செடியின் ஆணிவேரை அறுத்து விடாமல் எடுத்து பயன்படுத்த வேண்டும் .

மோகன மூலிகையில் ஒன்றான மருளுமத்தை எனும் மூலிகையை பறிக்கும் முன் *“ ஓம் தேவ மோகம் வருக வருக “* என்று செடியின் முன் நின்று மந்த்ரம் ஜபித்து , அந்தச் செடியின் ஆணிவேரை அறுத்து விடாமல் எடுத்து பயன்படுத்த வேண்டும் .

மோகன மூலிகையில் ஒன்றான ஆலம் விழுது எனும் மூலிகையை பறிக்கும் முன் “ ஓம் தேவ மோகம் வருக வருக “ என்று செடியின் முன் நின்று மந்த்ரம் ஜபித்து , அந்தச் செடியின் ஆணிவேரை அறுத்து விடாமல் எடுத்து பயன்படுத்த வேண்டும்

✡ ✡ ✡ ✡ ✡ ✡

உச்சாடன மூலிகையில் ஒன்றான நரி மிரட்டி எனும் மூலிகையை பறிக்கும் முன் செடிக்கு வியாழனன்று காப்புக்கட்டி *“ சடாய் சடாய் தும்ம சடாய் சடாய் “*

என்று செடியின் முன் நின்று மந்த்ரம் ஜபித்து , அந்தச் செடியின் ஆணிவேரை அறுத்து விடாமல் எடுத்து பயன்படுத்த வேண்டும் .

உச்சாடன மூலிகையில் ஒன்றான மான் செவி கள்ளி எனும் மூலிகையை பறிக்கும் முன் செடிக்கு மன மகிழ்வுடன் வாசனை மலர்கள் தூவி தூபமிட்டு , தீபம் காட்டி " அருணகிரி ஆங்கார சத்தி சத்தி தாய் உச்சாடி " என்று செடியின் முன் நின்று மந்த்ரம் ஜபித்து , அந்தச் செடியின் ஆணிவேரை அறுத்து விடாமல் எடுத்து பயன்படுத்த வேண்டும் .

உச்சாடன மூலிகையில் ஒன்றான ஆரண முரி எனும் மூலிகையை பறிக்கும் முன் செடியின் வேருக்கு காப்புகட்டி , " *ஓம் கோர கோர ரூபி மாயி சடாய் சடாய்* " என்று செடியின் முன் நின்று மந்த்ரம் ஜபித்து , அந்தச் செடியின் ஆணிவேரை அறுத்து விடாமல் எடுத்து பயன்படுத்த வேண்டும் .

✡ ✡ ✡ ✡ ✡ ✡

ஸ்தம்பனம் மூலிகையில் ஒன்றான கட்டுக் கொடி எனும் மூலிகையை பறிக்கும் முன் செடியின் வேருக்கு காப்புகட்டி , " *சீலிகிளால் பேத்துலால் பேத்து சிவசிவா* " என்று செடியின் முன் நின்று மந்த்ரம் ஜபித்து , அந்தச் செடியின் ஆணிவேரை அறுத்து விடாமல் எடுத்து பயன்படுத்த வேண்டும் . (ஜலஸ்தம்பனம்)

ஸ்தம்பனம் மூலிகையில் ஒன்றான பால்பிரண்டி (பாற் குரண்டி) எனும் மூலிகையை பறிக்கும் முன் , " *நீலகண்டி விசைய விசைய உயர்திற அத்திற் அகலந் தோபா* " என்று செடியின் முன் நின்று மந்த்ரம் ஜபித்து , அந்தச் செடியின் ஆணிவேரை அறுத்து விடாமல் எடுத்து பயன்படுத்த வேண்டும் . (சுக்லஸ்தம்பனம்)

ஸ்தம்பனம் மூலிகையில் ஒன்றான நத்தை சூரி எனும் மூலிகையை பறிக்கும் முன் செடியின் வேருக்கு காப்புகட்டி , " ஓம் வச்சிர ரூபி சூரி சூரிம, காவீரி சுவாகா " என்று செடியின் முன் நின்று மந்த்ரம் ஜபித்து , அந்தச் செடியின் ஆணிவேரை அறுத்து விடாமல் எடுத்து பயன்படுத்த வேண்டும் . (ஜெயஸ்தம்பனம்)

✡ ✡ ✡ ✡ ✡ ✡

ஆகர்ஷனம் மூலிகையில் ஒன்றான சிறு முன்னை எனும் மூலிகையை பறிக்கும் முன் செடியின் வேருக்கு காப்புகட்டி , " சர்வ ஆகமுஷ்ணி சுவாகா " என்று செடியின் முன் நின்று மந்த்ரம் ஜபித்து , அந்தச் செடியின் ஆணிவேரை அறுத்து விடாமல் எடுத்து பயன்படுத்த வேண்டும் .

ஆகர்ஷனம் மூலிகையில் ஒன்றான சிறியா நங்கை எனும் மூலிகையை பறிக்கும் முன் செடிக்கு கரி நாளில் காப்புகட்டி , " *சர்வ பிசாகர்ஷனி சர்வ மோகினி சூழ் கிருஷ்ணி வா வா* " என்று செடியின் முன் நின்று மந்த்ரம் ஜபித்து , அந்தச் செடியின் ஆணிவேரை அறுத்து விடாமல் எடுத்து பயன்படுத்த வேண்டும்.

ஆகர்ஷனம் மூலிகையில் ஒன்றான அழுகண்ணி எனும் மூலிகையை பறிக்கும் முன் செடிக்கு திங்கள் கிழமை காப்புகட்டி , " *சர்வ சித்த மோகினி , சர்வா கிருஷ்ணி சாம்பஷ சுவாகா* " என்று செடியின் முன் நின்று மந்த்ரம் ஜபித்து , அந்தச் செடியின் ஆணிவேரை அறுத்து விடாமல் எடுத்து பயன்படுத்த வேண்டும்.

✡ ✡ ✡ ✡ ✡ ✡

பேதனம் மூலிகையில் ஒன்றான கோழியவரை எனும் மூலிகையை பறிக்கும் முன் செடிக்கு திங்கள் கிழமை காப்புகட்டி சித்திரை நட்சத்திரத்தன்று " *அரி அர தேவி , பிரம தேவி சர்வ தேவியே தீர்* " என்று செடியின் முன் நின்று மந்த்ரம் ஜபித்து , அந்தச் செடியின் ஆணிவேரை அறுத்து விடாமல் எடுத்து பயன்படுத்த வேண்டும்.

பேதனம் மூலிகையில் ஒன்றான செம்பசலை கீரை எனும் மூலிகையை திருவாதிரை அன்று காப்பு கட்டி, " *சீறியுங் கீறியுங் சீறியும்* " என்று செடியின் முன் நின்று மந்த்ரம் ஜபித்து , அந்தச் செடியின் ஆணிவேரை அறுத்து விடாமல் எடுத்து பயன்படுத்த வேண்டும்.

பேதனம் மூலிகையில் ஒன்றான கீழாநெல்லி எனும் மூலிகையை புதன் கிழமை அன்று காப்பு கட்டி வியாழன் அன்று தேங்காய் உடைத்து அளமை பெறும் , " *பூமி வித்தேஷணி அஞ்சணி மூலி சகல சர்வ பழமை பல பதார்த்தத் தெரிய சுவாகா* " என்று செடியின் முன் நின்று மந்த்ரம் ஜபித்து , அந்தச் செடியின் ஆணிவேரை அறுத்து விடாமல் எடுத்து பயன்படுத்த வேண்டும்.

✡ ✡ ✡ ✡ ✡ ✡

மாரணம் மூலிகையில் ஒன்றான கார்த்திகை கிழங்கு எனும் மூலிகையை கார்த்திகை நட்சத்திரத்தன்று மஞ்சள் நூல் காப்பு கட்டி ஆடு பலி கொடுத்து , " சரவணபவா நமா " என்று செடியின் முன் நின்று மந்த்ரம் ஜபித்து , அந்தச் செடியின் ஆணிவேரை அறுத்து விடாமல் எடுத்து பயன்படுத்த வேண்டும்.

மாரணம் மூலிகையில் ஒன்றான காஞ் சொறி வேர் எனும் மூலிகையை பௌர்ணமிக்குப் பின் வரும் முதல் திதியில் காப்பு கட்டி மறுநாள் மத்தியானம் அந்தச் செடியின் ஆணிவேரை அறுத்து விடாமல் எடுத்து நீரில் ஆட்டி சுத்தப்படுத்தி பயன்படுத்த வேண்டும். (மந்திரமில்லை)

மாரணம் மூலிகையில் ஒன்றான நச்சுப்புல் எனும் மூலிகையை மன மகிழ்வுடன் பூஜை செய்து காப்பு

கட்டி , " விருகனீ விஷதரி " என்று செடியின் முன் நின்று மந்த்ரம் ஜபித்து , அந்தச் செடியின் ஆணிவேரை அறுத்து விடாமல் எடுத்து பயன்படுத்த வேண்டும்.

சில காரணங்களுக்காக எல்லாவித மூலிகைகளுக்கும் மந்திரங்கள் சொல்லப் படவில்லை.

முழு விபரமும் அறியவும் , பயன்படுத்தும் முறை தெரியவும் தகுந்த குரு வேண்டும்.

பயிற்சியில் முழுமை கண்டால் குருவே உங்களை வந்தடைவார் .

ஸ்ரீ ஸ்ரீ மகா குரு அகஸ்திய பெருமானானவர் அஷ்ட கர்மாக்களுக்கும் உரிய கிழமைகளை சொல்லும் போது ...

வசியம் – ஞாயிறு , மோஹனம் – திங்கள் , பேதனம் – செவ்வாய் , ஸ்தம்பனம் - புதன் , உச்சாடனம் – வியாழன் , ஆக்ருஷ்ணம் – வெள்ளி , மாரணம் – சனி உகந்ததென்கிறார்.

ஸ்ரீ ஸ்ரீ மகா குரு அகஸ்திய பெருமானானவர் அஷ்ட கர்மாக்களுக்கும் உரிய திக்குகளை குறிப்பிடும் போது ...

வசியம் – கிழக்கு , மோகனம் – வடக்கு , பேதனம் - வடகிழக்கு , ஸ்தம்பனம் – தென்மேற்கு , உச்சாடனம் – வடமேற்கு , ஆக்ருஷ்னம் – மேற்கு , மாரணம் – தெற்கு என உபதேசிக்கின்றார்.

- மேலும் எல்லாவித கர்மங்களுக்கும் ஈசான்யம் சிறந்ததெனவும் அருள்பாலிக்கின்றார்.

தீபங்களையும் , மந்த்ரங்களையும் குறிப்பிடும்போது:

கிழமை : ஞாயிறு , வஸ்திரம் : சிவப்பு பட்டு , திசை : கிழக்கு நோக்கி வில்வ மரப் பலகையில் அமர்ந்து , திரி : தாமரை நூல் ,நெய் : காராம் பசு (கருத்த நிற முள்ள பசு ) நெய் : தீபம் ஏற்றி யநமசிவ என்ற மந்த்ரத்தை லட்சத்தி எட்டு முறைகள் சொல்லி ஜபம் செய்ய வசியம் சித்திக்கும் .

கிழமை : திங்கள் , வஸ்திரம் : மஞ்சள் பட்டு , திசை : வடக்கு நோக்கி மான் தோலில் அமர்ந்து , திரி : கன்னி நூல் , எண்ணை : நல்லெண்ணெய் : தீபம் ஏற்றி மசிவயந என்ற மந்த்ரத்தை லட்சத்தி எட்டு சொல்லி முறைகள் ஜபம் செய்ய மோகனம் சித்திக்கும் .

கிழமை : செவ்வாய் , வஸ்திரம் : சாதாரண வெள்ளை , திசை : வடகிழக்கு நோக்கி பளிங்கு கல்லினால் ஆன ஆசனத்தில் அமர்ந்து , திரி : கந்தல் துணி , எண்ணை : புன்னை எண்ணை : தீபம் ஏற்றி யவசிநம என்ற மந்த்ரத்தை லட்சத்தி எட்டு முறைகள் சொல்லி ஜபம் செய்ய பேதனம் சித்திக்கும் .

கிழமை : புதன் , வஸ்திரம் : சாதாரண பட்டு , திசை : தென்மேற்கு நோக்கி ஆல மர பலகையில் அமர்ந்து , திரி : எவ்விதமான திரியும் , எண்ணை : ஆதளைக் கொட்டை எண்ணை : தீபம் ஏற்றி நமசிவய என்ற மந்த்ரத்தை லட்சத்தி எட்டு முறைகள் சொல்லி ஜபம் செய்ய ஸ்தம்பனம் சித்திக்கும் .

கிழமை : வியாழன் , வஸ்திரம் : பச்சை பட்டு , திசை : வடமேற்கு நோக்கி பலா மர பலகையில் அமர்ந்து , திரி : இலவம்பஞ்சு , எண்ணை : புங்க எண்ணை : தீபம் ஏற்றி வயநமசி என்ற மந்த்ரத்தை லட்சத்தி எட்டு முறைகள் சொல்லி ஜபம் செய்ய உச்சாடனம் சித்திக்கும் .

கிழமை : வெள்ளி , வஸ்திரம் : சாதாரண பட்டு , திசை : மேற்கு நோக்கி சண்பக மர பலகையில் அமர்ந்து , திரி : வெள்ளெருக்கு நார் , எண்ணை : ஏரண்டத்தெண்ணை : தீபம் ஏற்றி வசியநம என்ற மந்த்ரத்தை லட்சத்தி எட்டு முறைகள் சொல்லி ஜபம் செய்ய ஆக்ருஷ்ணம் சித்திக்கும் .

கிழமை : சனி , வஸ்திரம் : சாதாரண பட்டு , திசை : தெற்கு நோக்கி அத்தி மரத்தால் ஆன பலகையில் அமர்ந்து , திரி : வேலிப்பருத்தி , எண்ணை : வேப்ப எண்ணை : தீபம் ஏற்றி யசிவநம என்ற மந்த்ரத்தை லட்சத்திஎட்டு முறைகள் சொல்லி ஜபம் செய்ய மாரணம் சித்திக்கும்.

**சில சூட்சும வார்த்தை விளக்கங்கள் :**

கன்னி நூல் காப்பு கட்டி என்பது தாமரை மொட்டு உள்ள (பூ பூக்கும் முன் ) தண்டினை எடுத்து அதிலிருந்து எடுக்கும் (மகரந்த இழை) நூலினால் குறிப்பிட்ட மூலிகையில் மூன்று முறை சுற்றுவது .

மஞ்சள் நூலால் காப்பு கட்டி என்றால் விரலி மஞ்சளை முனை முறியாமல் எடுத்து அறைத்து , அதில் மேற்படி கன்னி நூலை புரட்டி எடுத்து பின்னர் உலர்த்தி வைத்துக் கொண்டு பயன்படுத்துவதாகும்.

*பொதுவான மூலிகை சாப விமோசன மந்திரம்:*

*"ஓம் ஸ்ரீம் ஹ்ரீம், ஐம் க்லீம் ஸௌம்,*
*ஸர்வ மூலி சாபம் நாசய நாசய,*
*சித்தர் சாபம் நாசய நாசய,*
*தேவ முனி , அசுர முனி சாபம் நாசய நாசய,*
*ஸர்வ ஸர்ப்ப சாபம் நாசய நாசய ஹூம்பட் ஸ்வாஹா "*

என்பதாகும்.

அன்பிற்குரிய நண்பர்களே ,

யோகமும், சித்தும், மந்த்ரமும் , மாந்த்ரீகமும் நம் நலனுக்காக இறைவனால் உருவாக்கப்பட்டதேயன்றி பிறருக்கு தொல்லை கொடுக்க அல்ல என்பதனை உணர்ந்து செயல்படுங்கள்.

*"இன்றைய விதைப்பு நாளைய அறுவடை என்பதை எப்போதும் , எந்த நிலையிலும் மறக்கவேண்டாம்"*
*வளமோடு வாழுங்கள், வாழும் நாளெல்லாம்.*

# உறவைத் தேடும் உயிர்

*சிவாஜிதாசன்*

தேடல் 12

மெமோரியல் உலகின் அதிசயங்களும் அங்கு நிலவும் மாயாஜால நிகழ்வுகளும் வசந்தனின் உள்ளத்தில் பயத்தையும் கிளர்ச்சியையும் ஒரு சேர உண்டு பண்ணின. எத்துணை பிரம்மாண்டம் ! என்று வாய் பிளந்த அவன், சில அழுகைக் குரல்களையும் சிரிப்புக் குரல்களையும் கேட்டு லேசாக நடுங்கிப்போனான். அவை எங்கே இருந்து வருகின்றன? என்று அங்கும் இங்கும் ஓடியபடி ஆராய்ந்தான். அவனுக்குப் பிடிபடவில்லை. ஒவ்வொரு நொடியும் வித்தியாசமாகவும் விசித்திரமாகவும் இவ்வுலகம் கடந்து போகிறதே ! என்று எண்ணியபடி, மலரின் மீது நடப்பதைப் போன்று மெதுவே நடக்கத் துவங்கினான்.

தண்ணீர்க் கதவுகளின் ஒலி இன்னிசையாகக் காதினுள் நுழைய, அவனது எண்ணங்கள் மத்தளங்களாக ஒலித்து சுதி சேர்த்துப் பேரழகை கண்களால் கவர்ந்துகொண்டிருந்தது. லேசான அழுகுரல் மீண்டும் அவன் செவியில் நுழைய, எங்கே என்று மீண்டும் அவன் திரும்ப, ஓஓ... வென்று கத்தியபடி விழும் ஜலக் கதவுகளின் பின்னே அழுகுரல் கேட்கிறது என்று தெரிந்துகொண்டான்.

என்னவென்று தெரிந்துகொள்ளலாம் என்ற ஆவலோடு அந்த ஜலக் கதவினை நெருங்கினான் வசந்தன். அதை நெருங்க நெருங்க ஏதோ ஒரு சக்தி அவனை நெருங்க விடாமல் தடுத்தது. அவனது உடலைக் கயிறால் சுற்றி இறுக்கியதாய் அவனுக்குத் தோன்றியது. அருவியின் துளி அமிலத் துளியாய் அவன் முகத்தில் விழுந்து சுட்டெரித்தது.

அங்கிருந்து தப்பிவிடலாம் என்று எண்ணிய அவனை, ஒரு குரல் தடுத்து, "உள்ளே வா !" என்று அழைத்தது. ஷோபனாவின் குரல் தான் அது. அவள் உள்ளே என்ன செய்கிறாள்? என்று எண்ணிய அவன், சில அடிகள் பின்னே வைத்து ஒரு நீண்ட பெருமூச்சினை விட்டெறிந்தபடி உள்ளே எப்படிச் செல்வதென்று சிந்தித்தான்.

யார் தடுக்கிறார்கள்? என்று ஜலத் திரையை உற்று நோக்கினான். ஒரு நொடி ஸ்தம்பித்து, அதிர்ச்சி அலைகளில் மூழ்கினான். திரையின் நடுவே தண்ணீர் தேவதை போன்று ஓர் உருவம் அசைந்தாடுவது அவனுக்குப் புலப்பட்டது. அவள் தண்ணீராலேயே தீட்டப்பட்ட ஓவியம் போலவே இருந்தாள். அவளது கண்களைப் பாதுகாக்கும் இமைகள் தண்ணீர் முத்துக்களைச் சிந்தியபடி அவனையே நோக்கியபடி இருந்தன.

அவன் எண்ணங்கள் உள்ளே நுழையும் வாய்ப்பைத் தேடியபடி இருந்தன. அங்கேயே காத்திருந்தான். ஒரு நாழிகை கடந்த பின் தண்ணீர் தேவதை தண்ணீரில் மூழ்கினாள். எங்கே போனாள்? என்று தண்ணீரின்



உறவைத் தேடும் உயிர் - 12

அடியில் நோக்கினான். அவள் பளிங்கு மீனாக மாறி எங்கோ நீந்திக்கொண்டு போனாள். இப்பொழுது உள்ளே செல்! என்று அவன் மனம் தூண்டியது. ஒன்றும் ஆகாது என்ற பாதி நம்பிக்கையோடு உள்ளே நுழைந்தான். தண்ணீரின் ஈரப்பதம் அவன் உடல் முழுதும் சில்லிட வைத்தது.

மெதுவே உள்ளே நுழைந்து, ஷோபனா எங்கே இருப்பாள்? என்று தேடும் பார்வையை வீசினான். மீண்டும் ஒரு பிரம்மிப்பு மனநிலைக்குள் நுழைந்துகொண்டு அந்த அறையை மலைப்பும் வியப்பும் கலந்து நோக்கினான்.

இதழினில் மஞ்சள் நிற ஒளியைச் சுமந்துகொண்டு காற்றில் அசைந்தாடும் தீபமாக, பறக்கும் மலர்கள் அங்கே அந்தரத்தில் மிதந்தபடியும் சில மலர்கள் கீழே விழுந்து தரை முழுதும் மோகன ஒளியை பரப்பிக்கொண்டும் அங்கே ஒரு மோகன ஜாலத்தை நிகழ்த்திக்கொண்டிருந்தன. ஆங்காங்கே வெண்ணிறக்கதிர்களை உமிழ்ந்துகொண்டு வான் மேகங்கள் கீழே படர்ந்திருந்தன. அதன் மேல் பாதங்களை வைக்கும் போது, பஞ்சின் மேல் நடப்பதைப் போன்று இதமாக இருந்தது அவனுக்கு.

ஷோபனா எங்கே? என்று தேடி அலைந்துகொண்டிருந்தான் அந்த அறையில். லேசான தூறல் அங்கே தூறத் துவங்கியது. தன் கைகளை இறுக்கிக் கட்டிக்கொண்டு நடந்தான். ஒதுங்க இடம் இல்லாததால் மழை நீரில் தன் உடலை நனைத்தபடி வந்துகொண்டிருந்த அவனை ஒரு தோட்டம் வரவேற்றது. பெரிய பெரிய மரங்கள் அவனை மழையில் இருந்து காப்பாற்ற முன்வந்ததைப் போன்று அங்கே நின்றுகொண்டிருந்தன.

நீல நிறத்தில் ஜகஜோதியாக இருந்தது அந்தத் தோட்டம். அதில் ஒரு மரத்தினடியில் சென்று நின்றுகொண்டான் வசந்தன். அவன் ஒதுங்கிய இடத்தில் வளர்ந்திருந்த மரங்கள் வித்தியாசமாய் வளர்ந்திருந்தன. பல செடி, கொடிகள்

ஒன்றோடொன்று பின்னி மேலே காளான் குடை போன்று விரிந்து, அதில் பழங்கள் கடல் அலையின் நிறத்தில் தொங்கிக்கொண்டிருந்தன.

சற்று தூரத்தில் ஷோபனாவின் கொஞ்சும் குரல் மீண்டும் கேட்டு, மழையைப் பொருட்படுத்தாமல் குரல் வந்த திசையில் சென்றான். சில மணித் துளிகளில் ஷோபனாவைக் கண்டுகொண்டான். அவள் எதைப் பார்த்து அப்படி ரசிக்கிறாள்? அவளின் முன்னே என்ன அது? தீச்சுடராய் ஓர் ஒளி வருகிறதே! என்ன அது? என்று சற்று முன்னால் நடந்து சென்று என்னவென்று பார்த்தான்.

ஓர் உருண்டையான பொருள் அவளின் முன்னே தொங்கிக்கொண்டிருதது. அது ஒளியை உமிழ்ந்தபடி பூமியில் நடக்கும் ஓர் நிகழ்வை அவளுக்குக் காட்டிக்கொண்டிருந்தது.

ஒரு கணவன் மனைவி கடும் சீற்றத்தோடு சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். வாய்ச் சொற்கள் மாறி மாறிப் பறந்தன. இனி உன்னுடன் வாழ மாட்டேன்! என்று அந்தப் பெண் கத்தினாள். கணவனும் தன் கோபத்தைக் காட்ட கோபமாக ஒரு பொருளைத் தூக்கி உடைத்தான்.

களேபரமாக நடந்துகொண்டிருந்த அந்த நிகழ்ச்சியை, ஷோபனா மிகவும் ரசித்துக்கொண்டிருந்தாள்.

இதையா ரசிக்கிறாள்? என்ன பெண் இவள்? ஒரு குடும்பம் பிரியப் போவதை மகிழ்ச்சியாக ரசிக்கிறாளே? என்று வெறுப்பான எண்ணங்களை மனதினுள் மூட்டினான், வசந்தன். சரி, என்ன தான் நடக்கிறது? என்று பாப்போம் என்று மீண்டும் பூலோக நிகழ்வைக் காட்டும் திரையை நோக்கினான்.

சண்டை முடிந்து கணவன் வேலைக்குச் சென்றுவிடுகிறான். மனைவி மெத்தையில் அமர்ந்து முகத்தை இரு கைகளால் மூடிக்கொண்டு அழுகிறாள். ஏன் தான் இவரைக் கல்யாணம் செய்துகொண்டேனோ? என்று தன்னையே சபிக்கிறாள்.

அதையும் ஷோபனா சிரித்த முகத்தோடு ரசித்தாள். வசந்தன் ஷோபனாவை விழுங்குவது போல் பார்த்துக்கொண்டே திரையையும் நோக்கிக்கொண்டிருந்தான்.

அழுதுகொண்டிருந்த மனைவி சிறிது நேரத்தில் உறங்கிவிட்டாள்.

அதையே வெறித்துக்கொண்டிருந்தாள் ஷோபனா. வசந்தனுக்குப் பொறுமை இழந்துவிட்டது. அங்கிருந்து செல்லலாம் என்று எண்ணுகையில் ஓர் அற்புதமான நிகழ்வு ஒன்று நடந்தது.

வானத்திலிருந்து மிதந்து வந்த ஒரு சின்னஞ் சிறிய மலர் மொட்டு நீலப் பச்சை நிறத்தில் மிளிர்ந்துகொண்டே ஷோபனாவின் கைகளில் தஞ்சம் புகுந்தது. அதைச் சிறிது நேரம் மென்மையான விழிகளில் நோக்கிய அவள், அதனைத் திரையைப் பார்த்தபடி நீட்டினாள். அவளின் கையிலிருந்த ஒளி திரையை நோக்கிச் சென்று, படுத்திருந்த அந்தப் பெண்மணியின் வயிற்றில் சென்று மறைந்தது.

என்ன நடக்கிறது? என்று குழம்பினான் வசந்தன்.

வயிற்றினுள் சென்ற அந்த ஒளி, ஒரு கருவாக உருப்பெற்றது. அப்பெண்ணின் குருதியில் கலந்து அந்தக் கரு அமைதியாக படுத்துக்கொண்டதை ஷோபனாவும் வசந்தனும் நோக்கிக்கொண்டிருந்தார்கள். வசந்தன் தன்னையறியாமல் ஷோபனாவின் அருகில் சென்றான். கருவையே கவனித்துக்கொண்டிருந்தான்.

"அழகாக இருக்கிறதல்லவா?" என்று குரல் எழுப்பினாள் ஷோபனா, கருவைப் பார்த்தபடி.

யாரைக் கேட்கிறாள்? என்று சுற்றி நோட்டமிட்டு, தன்னிடம் தானா? என்று எண்ணித் திரு திருவென்று விழித்தான்.

"உங்களிடம் தான்" என்று அவனை நோக்கினாள் ஷோபனா.

"நான் உங்கள் கண்ணிற்குத் தெரிகிறேனா?" என்று அதிர்ச்சியோடு வினா எழுப்பினான் வசந்தன்.


"நன்றாகத் தெரிகிறீர்கள்" என்று புன்முறுவினாள் ஷோபனா.

"ஆனால்,.. நான்..." என்று கூறியபடி மாயப்பதக்கத்தை அவளிடம் காட்டினான் வசந்தன்.

இந்த அறையில் எந்த மாயமும் பலிக்காது

## *விழி வாழி!!!*

*பூங்கோதை*



*பாசம் காட்டிப் பணிய வைக்கும் விழிகள்*
*ஓசையின்றி உயிர் செதுக்கும் உளிகள்*
*நேசத்தோடு தாங்கிக் கொள்ளும் தூண்கள்*
*நெடும் இருளில் ஒளிரும் விண் மீன்கள்*

*ஒற்றை மொழிக்கு உயிர் கொடுக்கும் கருவி*
*குற்றம் கண்டு அனல் பொழியும் குமுறி*
*இற்றைவரையில் அன்பைச் சுரந்த அருவி*
*கற்றுக் கொள்ளப் பாய்ந்து ஏகும் புரவி*

*துவண்ட போது தூங்க வைத்த தூளி*
*உணரமுடியா மொழிகள் கொண்ட ஆழி*
*உணர்வை அணைத்து உரம்கொடுத்த விழிநீ*
*உலகில் உறவாய் நீடு காலம் வாழி!!!*

"மன்னிக்கவும்! நான் உங்களைப் பின்தொடரவில்லை. எதேச்சையாகத் தான் வந்தேன். வந்த இடத்தில் ஒரு பெண் கருவுற்றதை நோக்கினேன். மெய் சிலிர்த்தேன்" என்றான், வசந்தன்.

ஏந்திழலான ஷோபனா அவன் கண்களை ஊடுருவினாள்.

வசந்தன் லேசான குற்றஉணர்ச்சியோடு தலையைத் தாழ்த்தினான்.

"மழைக் கன்னி உங்களைத் தாக்கினாளா?" என்றாள்.

யாரைச் சொல்கிறாள்? என்று முதலில் விழித்த வசந்தன், தன்னை உள்ளே போக அனுமதிக்காத தண்ணீர் தேவதையைத் தான் சொல்கிறாள் என்று நொடிப்பொழுதில் யூகித்தான்.

"அப்படி ஒன்றும் இல்லை"

"நான் தான் உங்களைத் தாக்க வேண்டாம் என்று சொன்னேன், உங்களிடம் ஒரு கேள்வியைக் கேட்கவேண்டும் என்று"

"இங்கு வந்ததிலிருந்து பதில் தெரியாத பல கேள்விகள் என்னைத் தினமும் கொல்கின்றன. இதில், இன்னொரு கேள்வியா?"

அவள் மௌனமாக முன்னே நடந்து சென்றாள். அவளின் அஞ்சன விழிகளும் மலர்ப் படுக்கையான உதடுகளும் எதையோ கேட்கத் துடித்தன என்பதைத் தெரிந்துகொண்ட வசந்தன், அவள் பின்னே சென்றான்.

"மெமோரியல் உலகம் எப்படி உங்கள் கண்ணிற்குப் புலப்பட்டது?" என்றாள் மெல்லிய குரலில், சிறிது அதிர்ச்சியைக் கலந்து.

"எனக்கே தெரியவில்லை. என் நண்பன் ராஜீவ் கூட யார் கண்களுக்கும் புலப்படாத மர்மம் என்று கூறினான்"

அவள் சிந்தனையாய் தலையசைத்தாள். அவளின் சிந்தனை ஓட்டம் வேகமாக ஓடியது. அவள் என்ன எண்ணுகிறாள்? என்று வசந்தனால் யூகிக்க முடியவில்லை. அதனால் பேச்சை மாற்ற எண்ணினான்.

"நாம் திரையில் கண்ட கணவன் மனைவி சண்டையிடுவதைப் பார்த்து ரசித்தீர்களே. அவர்கள் பிரிவதில் உங்களுக்கு அவ்வளவு மகிழ்ச்சியா?"

"நான் அவர்களின் சண்டையை எண்ணிச் சிரிக்கவில்லை. அவர்களின் அறியாமையை எண்ணிச் சிரித்தேன். பிரிய வேண்டும் என்று எண்ணியவர்களை அந்தக் கரு ஒன்று சேர்த்து சந்தோஷ உலகினுள் அவர்களை அழைத்துச் செல்லும்"

அப்பொழுது தான் புரிந்தது வசந்தனுக்கு, தான் அவளைத் தவறாக எண்ணிக்கொண்டோமே என்று. தன்னையே மனதினுள் கடிந்துகொண்ட அவன் மௌனமாய் நடையைத் தொடர்ந்தான். வழியில் செடியில் தொங்கிக்கொண்டிருந்த கருநிறப் பழத்தைப் பறித்து அவனிடம் நீட்டினாள்.

"இதை வாயில் போட்டுக்கொள்ளுங்கள். யார் கண்களுக்கும் புலப்படமாட்டீர்கள். நீங்கள் விரைவில் வெளியேற வேண்டும். இல்லையேல் ஆபத்து"

அவள் பொய்யாக எச்சரிக்கிறாள் என்று எண்ணிக்கொண்ட வசந்தன், "சிறிது நேரம் உங்களோடு இவ்விடத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டுச் செல்கிறேனே?" என்று சிரித்த முகத்தோடு கூறினான்.

ஷோபனா அவனை உற்றுநோக்கி நடையைத் தொடர்ந்தாள். அப்பார்வையில் ஆயிரம் அர்த்தங்கள் ஒளிந்திருந்தன. அந்த அறையை விட்டு வேறு அறைக்குச் சென்றனர். அந்த அறை முழுதும் வெண்ணிற மேகங்களால் நிரம்பியிருந்தது. அதில் முத்துக்களாய் நட்சத்திரங்கள் மின்னின. ஒரு சிறு பாலம் தென்பட்டது. அப்பாலத்தில் நடந்து சென்றனர், வசந்தனும் ஷோபனாவும்.

வசந்தனின் எண்ணங்கள் ஷோபனாவின் மீதே படிந்திருந்தன. ஏன் காரணமே இல்லாமல் இவளைத் தேடிச்செல்கிறேன் என்று எண்ணினான். இவள் மேலுள்ள இனம் புரியா ஏதோ ஓர் உணர்வு தான் காரணம். நிச்சயம் அது காதல் அல்ல என்று எண்ணிக்கொண்டான்.

பாலம் நீண்டுகொண்டே போனது. தூரத்தில் ஒரு பெரிய பாறை அந்தரத்தில் நிற்க, அப்பாறையின் மீது ஒரு மாளிகை எழும்பி இருந்தது. மிதமிஞ்சிய பிரம்மிப்பை கண்களில் படரவிட்ட வசந்தன் இன்னும் எத்துணை மர்மங்களில் நான் தத்தளிக்கப் போகின்றேனோ? என்று எண்ணிக்கொண்டான். சரியாக ஒரு நாழிகையில் அம்மாளிகையினுள் சென்றனர். பல அறைகள் குழுமியிருந்த மாளிகையில் உள்ள ஒரு அறையினுள் பிரவேசித்தார்கள்.

சுற்றியெங்கும் பனி படர்ந்திருந்த அவ்வறையினுள் நீண்ட ஒரு வெளிச்சம் விண்ணைத் தாண்டி சென்றுகொண்டிருந்தது. அதன் அடியில் ஒரு வயதான பெண்மணி குளிர் உள்ளே நுழைய முடியா ஆடையை உடுத்திக்கொண்டிருந்தார். அவர்களின் அருகில் சென்று ஷோபனா நின்றாள். அவள் பின்னே வசந்தனும் நின்றான்.

ஷோபனாவைப் பார்த்து வயதான பெண்மணி, சிறு புன்முறுவலை உதிர்த்துவிட்டு வெளிச்சத்தை நோக்கினார். அவ்வொளி கானல்நீரைப் போல் தெளிவில்லாமல் ஒரு நிகழ்வைக் காட்டியது. அக்காட்சியைக் கண்டதும், வசந்தனின் உடல் உறைந்துவிடும் அளவிற்கு மாறியது.

அவன் கண்ட காட்சியில், மருத்துவமனையில் இளவயதுப் பெண் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தாள். அவளது கண்கள் மேலே எதையோ நோக்கியபடி சீரற்ற மூச்சு நாசி வழியே

வந்தபடியும், அவளின் உடலில் மெல்ல மரணம் படர்வதை அவள் உணர்ந்துவிட்டதைப் போன்றும் அவள் துடித்தாள். அவளின் வாய் குழறியது. அவளது நெஞ்சு லேசாகத் துடித்தது. சில நிமிடங்களில் அவள் இறந்து போனாள். அவளின் உயிர் ஒளி அவளின் உடலை விட்டுப் பறந்து சென்றது.

அவற்றையெல்லாம் பார்த்த வசந்தனுக்கு மயக்கமே வந்துவிட்டது. கண்ணில் நீர் பூத்தது. சிந்திய கண்ணீரோடு அவன் ஷோபனாவை நோக்கினான். அவளது விழிகளில் சாந்தம் நிலவியது. இதழில் அதே புன்னகை.

இவ்வாறு நடந்துகொண்டிருந்த சமயத்தில், சுயம்பு முகிலனின் அறையினுள் வேகமாக நுழைந்தார்.

"அரசே ! அரசே!" என்றார் பதற்றத்துடன்.

"என்ன சுயம்பு, ஏன் இந்த அவசரம்?
"நம் மெமோரியல் உலகில் புதியவன் ஒருவன் நுழைந்துவிட்டான்"
"என்ன சொல்கிறீர்? யாரது?" என்று பொங்கி எழுந்தார் முகுந்தன்.

"தெரியவில்லை மன்னா. ஆனால், புதியவன் இங்கே உலாவுவது மட்டும் நிஜம்"

மன்னர் முகிலன் கண்களை மூடி எதையோ முணுமுணுத்தார். நெருப்பினாலான ஒரு கொடிய மிருகம் மெமோரியல் உலகினுள் பறந்து சென்றது.

நெருப்பு மிருகம் வருவதைத் தெரிந்துகொண்ட ஷோபனாவின் முகம் கலவரமானது. வசந்தனை நோக்கி, 'சீக்கிரம் செல்! ஆபத்து' என்பதைப் போன்று நெருப்பு மிருகத்தின் பிம்பத்தை உள்ளங்கையில் வரவழைத்து எச்சரிக்கையை. 'சீக்கிரம் கிளம்பு' என்று அவசர சமிக்ஞை கொடுத்தாள்.

புரிந்துகொண்ட வசந்தன் அங்கிருந்து ஓடினான். மெமோரியல் உலகில் நெருப்பு மிருகம் தனது இறக்கைகளை விரித்துக்கொண்டு உள்ளே வந்ததைக் கண்டு, மெமோரியல் உலக வேலையாட்கள் அலறியபடி ஓடினர். நெருப்பு மிருகம் அவர்களைக் கண்டுகொள்ளாமல் வசந்தனை நோக்கிப் பறந்து சென்றது. வசந்தன் பாலத்தைக் கடந்து உள்ளே வந்த சமயத்தில் கடும் அனல் அவன் உடலைத் தழுவியது. என்ன இது? குளிரான பிரதேசத்தில் அனலால் உடல் சுடுகிறதே? என்று எண்ணிக்கொண்டிருக்கும் சமயத்தில் பெரும் அலறல் சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டான்.

நெருப்பு மிருகத்தின் அலறல் சத்தம் தான் அது. அது அவனை நோக்கிப் பறந்து வந்தது. என்ன செய்வதென்று அறியாமல் சிலையாகிப்போனான் வசந்தன்.

நெருப்பு மிருகம் அவனை விழுங்க விரைந்த நிலையில், தேவதையான ஒரு பெண் அங்கே தோன்றினாள். அவள் நீல நிறத்தில் அங்கி போன்ற ஆடையை அணிந்திருந்தாள். அந்த ஆடையின் ஒரு பகுதியால் தன் பின்னந்தலையை முக்காடிட்டு மறைத்திருந்தா. அதைத் தாண்டி அவளின் குழல்கள் வெளியே படர்ந்து அழகு கூட்டியது. தெளிவான நீரைப் போன்ற இரு விழிகள். மஞ்சள் நிற மேனியும் வதனமும் உடையவள்.

அவள் ஒரு அடி முன்னே எடுத்து வைக்க வைக்க நெருப்பு மிருகம் பின்னே சென்றது. பிறகு, அவள் தன் கையில் வைத்திருந்த குடுவை போன்ற ஒரு விளக்கினைத் திறந்தாள். அதிலிருந்து ஓர் உருவம் வெளி வந்து அவளைப் பார்த்தது. அவ்வுருவம் ஒளி அலைகளால் வார்த்தெடுக்கப்பட்ட சிறு உயிர் போல இருந்தது. அந்த உருவத்தை நெருப்பு மிருகத்தின் மீது ஏவினாள். அந்த உருவம் தன் ஒளி அலைகளை நெருப்பு மிருகத்தின் மீது பாய்ச்சி அதைப்

## *மாறிடாத மனம்...*

*கனகீஸ்*



*எத்தனை எத்தனை நாட்களை நான்*
*யுகமென கழிப்பேன் உன் நினைவில்?...*
*சுவாசிக்க மறந்து நான் போனாலும்*
*நேசிக்க மறந்து நான் போவேனோ?...*

*மலரென நானும் மலர்ந்திருப்பேன் _ உன்*
*வருகைக்காய் தினம் தினம் தவமிருப்பேன்*
*வரம் தர நீயும் வந்து விடு உன்*
*வார்த்தைகள் பரிசாய் தந்து விடு.....*

*சின்ன சின்ன ஆசைகளாய் ஓராயிரம்*
*கிடக்குது என் உள்ளே _ வண்ண*
*வண்ண கனவு தந்து நீ வர்ணம்*
*கலைத்தது சரியில்லே.....*

*நான் தேடிப் பெற்ற நல் முத்தை*
*கடலினில் திரும்பவும் வீசுவதோ?...*
*பிள்ளைகள் கட்டிடும் மண்வீடோ ?*
*நாம் பேசிச் சிரித்தது பொய் தானோ?*

*போ போ என நீ சொன்னாலும்*
*போய்விட நானும் மாட்டேனே....*
*உயிரென நீயும் இருக்கையிலே*
*உடல் நான் உனைவிட்டு போவதெங்கே?*

*வாசனை தந்திடும் மலரெல்லாம்*
*வாடிப் போய்விடும் ஒரு நாளில்...*
*பாசம் தந்திடும் என் உள்ளம்*
*மாறிப் போகாதென்னாலும்.....*

பயமுறுத்தி விரட்டியடித்தது. இறுதியில் பேரொலியை எழுப்பியபடி பறந்து சென்றது.

ஏன் நம்மைத் தாக்காமல் மிருகம் பறந்து சென்றது? என்று புரியாமல் தடுமாறிய வசந்தன், பின்னால் இருந்த ஏந்திழையை நோக்கினான். அவளின் இளநகை அவனைக் கவர்ந்தது. பேச்சில்லாமல் நின்றான் வசந்தன்.

"பயப்படாதீர்கள்! அது உங்களை ஒன்றும் செய்யாது"

ஆயினும், அவன் பேசவில்லை. அவள் அழகிலே லயித்துப் போயிருந்தான். அவள் விழிகளின் ஓரம் துளிர் இலை போல் வண்ணம் தீட்டியிருந்ததை அவன் ரசித்தான். அவள், அவனின் முன்னே வந்து நின்றாள்.

வசந்தன், நிம்மதி மூச்சை நாசியின் வழியே விட்டெறிந்து, "காப்பாற்றியதற்கு நன்றி" என்றான்.

"நன்றி வேண்டாம். வாருங்கள். உங்களை நான் வெளியில் கொண்டுசென்று விடுகிறேன்" என்று கூறியபடி முன்னே நடந்தாள். அவளின் பின்னே மாயவலையில் கட்டுண்டதைப் போல் வசந்தன் சென்றான்.

வேலையாட்கள் நெருப்பு மிருகத்தால் ஏற்பட்ட சேதங்களைச் சரிசெய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் செல்வதை யாரும் கவனிக்கவில்லை. அது வசந்தனுக்கு ஆச்சர்யமாக இருந்தது. முன்னே செல்பவள் சாதாரணமானவள் அல்ல என்பதை மட்டும் மனது எடுத்துக் கூறியது. விரைவிலேயே சோலையைக் கடந்து மரக்கலம் இருக்கும் இடத்தை அடைந்தனர். கடல் அலைகள் சந்தோஷ அலைகளாய்க் கரையெங்கும் தழுவியபடி இருந்தது.

வசந்தன் அவளைப் புரியாமல் நோக்கினான். "தாங்கள் யார்?" என்று வினவினான்.

"ஒரு பெண்" என்று அலட்சியப் பதிலை ரசிக்கும்படி கூறினாள்.

"அது தெரிகிறது. என்னைக் காப்பாற்றியதற்குக் காரணமென்ன?"

"மனிதாபிமானம்"

"அதற்கு மேல் அவனுக்கு என்ன பேசுவதென்று தெரியவில்லை"

"சரி, நான் வருகிறேன்" என்று வசந்தன் மரக்கலத்தில் ஏற முற்பட்ட சமயத்தில், "ஒரு நிமிடம்" என்ற அப்பெண்ணின் குரல் அவளை நோக்கி அவனைத் திரும்பிப் பார்க்கச் செய்தது. என்ன என்பதைப் போல் நோக்கினான்.

"ஓர் உதவி!" என்றாள் புன்னகையோடு.

"உதவியா? என்னிடமா?"

"ஆமாம். உங்களால் நிச்சயமாகச் செய்யக்கூடிய உதவி தான்"

தன்னைக் காப்பாற்றியவள் என்று எண்ணிய வசந்தன், "என்ன செய்யவேண்டும்?" என்றான்.

கையடக்க சிறு பெட்டியை அவனிடம் கொடுத்தாள் அவள். முழுக்க முழுக்க வைரங்களாலான சிறு பெட்டி அது. அதை வாங்கி அவளை நோக்கினான் வசந்தன்.

"ஓல்ட்மனிடம் இதைக் கொடுங்கள்" என்றாள் அப்பெண்.

வசந்தனுக்கு தூக்கிவாரிப்போட்டது. "ஓல்ட்மன்னா?" என்றான் அதிர்ச்சியோடு.

"ஆமாம். உங்களுக்குத்தான் அவரைத் தெரியுமே? சந்தித்தீர்கள் தானே? அவரிடம் கொடுத்துவிடுங்கள். வடக்கு திசையை நோக்கி சென்றால் அவர் இருக்குமிடத்தை அடையலாம்" என்று கூறியபடி மறைந்து போனாள் அந்தப் பெண்.

வசந்தனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவன் உத்தரவு இல்லாமலே மரக்கலம் வடக்கு திசையை நோக்கிச் செல்லத் துவங்கியது. அப்பொழுது தான் புரிந்தது வசந்தனுக்கு. அவள் தான் மரக்கலத்திற்குக் கட்டளை பிறப்பித்திருக்கிறாள் என்று.

குழப்பத்தோடு மரக்கலத்தில் உட்கார்ந்தபடி, கையில் பெட்டியைத் தாங்கிக்கொண்டு சென்றுகொண்டிருந்தான் வசந்தன். அவன் மரக்கலத்தில் பயணத்தை மேற்கொண்டிருந்ததை ஓல்ட்மன் மாயக்கண்ணாடியில் பார்த்துக்கொண்டிருந்தார்...

***தேடல் தொடரும்...***

*என்னை கண்டு ஓடி*
*வருபவள் இப்போதும்*
*அதையே செய்கிறாள்*
*எதிர் மறையாக ..!!!*

*கே இனியவன்*

# திசை மாறுமோ ?

கிரிகாசன்

## பகுதி 5. (தேசத்தின் ஒரு புறம்)

பூங்கணை எய்தவன் புண்படுமேனியை
போதையிடும் ஒருத்தி - இரு
தேங்கிய கண்களில் தித்திக்குதோ எனும்
தேவை பார்த்திருக்க - அவள்
தாங்கிய கைகளில் தாமரைபூ இதம்
தன்னை உணர்ந்தவனாய் - அங்கு
ஆங்கவள் மேனியில் அத்தனைஇன்பமென்
றன்பில் திளைத்தவனை

ஆனந்த போதையில் வானில் மிதந்தவன்
ஆற்றலில் தூரநின்றே - இனி
தேனது மாந்திய வேளையில் திடுமென
தடதடவெனும் சத்தம் - அட
ஏனது கூச்சலும் இத்தனை சத்தமும்
என்றயல் கேட்டெழவும் - ஆ
போனதுன் உயிருடன் புறப்படு காத்திட
பின்னிருந் தொலி கேட்டான்

மன்னவனே தமிழ் சொல்லுவதால் உமை
மரணத் தேவியவள் - இனி
தன்னுடைகரமதில் தாங்கிட வருகிறாள்
தருமம் காக்குமெனில் - ஒரு
மின்னும் கணந்தன்னில் விட்டுபறந்திடு
மேனியும் வேண்டுமெனில் - உடன்
என்றவன் இயம்பிட இருக்கைவிட்டுமே
எழுந்தான் வழி நடந்தான்

கொல் உடன்கொல் என்று கூறித்துடித்தனர்
கொன்றே இனமழிப்போர்- பொய்
நில்லென உள்ளமும் சொல்லிடு ம்போதிலும்
நிர்க்கதி என்றுணர்ந்தான் -இவர்
வெல்லென வீணரை வேண்டின உதவிய
வெற்று மதித்திறமும் - போய்ச்
சில்லெனும் உணர்வுகள் சீரளித்தேன் எனும்
சிறுமை யுணர்ந் தகன்றான்

கேட்டு ஒலிதிட்ட கூச்சலுக்கிடையினில்
கிழக்கொரு மண்டபத்தில் - எழிற்
பாட்டுமிசைத் தொலி கூட்ட மலர்க்கொடி
போலொரு கோதை நடம்- தனும்
ஆட்டமும் கொண்டிட ஆனந்தம் மேலிட
ஆகும் நிலைமை தனை இந்த
நாட்டைப் பிடித்திட்ட நஞ்சவ ரோடுடன்
நின்றவன் கண்டு கொண்டான்

தீட்டிய வேல்விழி திங்களெனும் முகத்
தேவதை ஆடிநிற்க - அவள்
பூட்டிய கொல்லெனும் பூமலர்பாதப் -
புறத்திரு பொற்சதங்கை -உடன்
காட்டிய தோலொலி கொல் என்றொலித்திடக்
கேட்டவன் தன்நிலையை
சாட்டியதாய் பழிகொண்டு நகைப்பினைச்
சார்ந்தது போலிருக்க

கூட்டியதாரென கோபங்கொண்டு ஆ..
கோதை நிறுத்துமென்றான்
தீட்டிய பொன்விழி திக்கில் திரும்பிடத்
தேவதை போலெழிலாள்
காட்டிய ஏளனம் கண்களில் மின்னிட
கன்னம் சிவந்தவளோ
ஆட்டம் நிறுத்திடும் எண்ணமில்லை அவள்
அவள் ஆடிக்கொண்டே யிருந்தாள்

வாட்டிய துன்பமும் அஞ்சும் மனத்துடன்
வந்த இடர்நிலையும்
கேட்டகொலை யெனும் கூச்சலும்சத்தமும்
கனவோ முறையறிய
ஈட்டி பிடித்தொரு சேவகன் நின்றிட
யாரங்கே என்றழைத்தான்
காட்டிவிரல் கொண்டு ஏவிய மன்னனை
காணா தவன் நடந்தான்

நாட்டிடை குறுநிலம் ஆளுவன் என்றொரு
நாமம் எனக்கெதற்கு
வீட்டினில் ஆடவன் கொள்ளும் மதிப்பதும்
வீழ்ச்சி யென்றே யிருக்க
தேட்டமும் செல்வமும் தந்தவர் நெஞ்சினில்
தீமை விஷம் இருக்கும்
காட்டிய அன்பிலும் கையணைக்கும் விதம்
காரணம் வேறிருக்கும்

வெட்ட வளர்த்திடும் ஆட்டின்நிலையென
வீரமும் விட்டுலைந்து
குட்டவும் குனிந்திடும் குவலய வாழ்வதில்
கொண்ட மகிழ்வுமென்ன
விட்டபிழைகளை முற்றும் திருத்திட
வேளை பிறந்திடுமோ
திட்டமிட்டே திசை மாற்றி நடந்தனன்
தேவை திருப்பமொன்றே

போகட்டும் என்றுள முள்ளே குமுறிய
போதிலும் நொந்து மனம்
தீகொட்டும் வேதனை செல்லாக் காசென
சில்லறை யாக்கியதேன்
போர் கொட்டும்மேளமும் பொல்லாப்பகைதனை
பொற்றமிழ் மோதிநிற்க
வாய்கட்டி மௌனமும் வார்த்தை கெட்டேமனம்
வாழ்ந்திடும் தேவையென்ன

## 6 ம் பகுதி. ( கொடுங்கோரம்)

அன்னை அழுதாள் பிள்ளை அழுதான்
அன்புக் குலமாந்தர்:
மின்னும் இடிகள் கொல்லும் வெடிகள்
முன்னாற் கண்டழுதார்
மன்னன் ஆணை கொல்என்றார்கள்
மரணப்பசி கொண்டே
இன்னுமின்னும் மின்னும்வேகம்
எத்தனை ஆயிரங்கள்

கெஞ்சும் குரல்கள் அஞ்சும்கண்கள்
ஆகா போதை கண்டார்
வஞ்சம் கோபம் வழியும் குருதி
வானப் பிரவேசம்
அஞ்சும் கதறல் ஆறாத்துயரம்
அவலத்தின் எல்லை
மிஞ்சும் வெறிகள் மிரட்டும் சத்தம்
மின்னும் கைவாள்கள்

பிஞ்சுகுழந்தை பேசத்தெரியா
பிதுங்கும் விழிப்பார்வை
பஞ்சுகைகள் பாவமில்லை
பிறந்தோர் பழிதோஷம்
நெஞ்சம் கதறித் துடித்தாலென்ன
நிலமோ அவர் சொந்தம்
நஞ்சு தூவல் நடுங்குமுள்ளம்
நரகத் தலைமை இதோ

### பயணம்

போகும்பாதை சொன்னான் அந்தோ
புரவியின் முதுகேறி
ஏகும் வழியைப் புரியாமல்இவ்
இடரில் தவிக்கின்றான்-
வேகங் கொண்டேஓடும்குதிரை
விரையும் வழிமீது
ஆகும் எதனால் அஞ்சித்தானும்
அடங்கா தோடியது

வெள்ளை மீன்கள் வானக்குளத்திலே
விந்தை கண்சிமிட்ட
கொள்ளிப் பேயாய் குட்டைவெளியில்
குறுந்தீ நின்றாட
நள்ளிர வாகும் போதில் எங்கே
நானும் என்றவனை
துள்ளிச்சென்ற குதிரை நிற்க
தூங்கும் விழிநோக்க

செத்தோர்ப் பாதி சாகும்பிணங்கள்
சரிந்தே வீழ்ந்திருக்க
கத்தும் அலறல் கைதுண்டாகி
காற்றில் மணம் வீச
அத்தனைகோரம் அன்னைமண்ணில்
யாரால் இது வெல்லாம்
சத்தம்போட்டு கத்திக்கொண்டான்
என்னால் என்னாலே

அழுதான் மனதில்ஆயிரம் கோடி
அகந்தை வெடித்தோட
பழுதாய்போற்றும் பாவம் தீயில்
பஞ்சாய் பொறிகொள்ள
எழுவாய் உந்தன் உள்ளக் கயமை
உடைபட விதிமாற
தொழுதான் அறமொடு திருந்திய உள்ளத்
திடையோர் திசைமாற

### திருப்பம்

பொங்கும் கடல்தனும் பொங்குவதேனென் இவர்
பொங்காநிலைகண்டோ
செங்கதிர் தானும் சிவந்ததுமேன் இச்
சினத்தின் வழிகண்டோ
கங்குல் விடிந்தொளி கொண்டது காலை
கதிரவன் பகைவெல்ல
எங்கும் இருள் கரைந்தோடின இரவின்
கொடுமைப் பிடிவிலக

தொங்கிவிழும் அப்புரவியின் முதுகிடை
துள்ளித் தொற்றியதும்
தெங்குபனவளர் தீந் தமிழ் நாட்டின்
தெருவில் விரைவாக
எங்கும் இலங்கிடு தெய்வபுகழ்திரு
இறையவள் இடம்நோக்கி
பொங்கும்சுடரொளி புலர்ந்திடும்வேளை
போய்வழி அடைகின்றான்

## திசை மாறியதோ 7ம் பகுதி

நொங்கு வளர் பெரு நெடிதெனும் பனைகள்
நெருநெரு என்றொலிக்க
தொங்கும் பனையிடை காய்ந்திடும் ஓலை
தென்றல் தொடக்கூசி
அங்கிங் கெனவும் ஆடிடும் ஓசையும்
அரண்மனை கொடிமுகமாய்
எங்கு மெழுந்திடும் ஓசையைக் கேட்டதும்
அரண்டிடும் புரவி நிற்க

ஓங்கிய கோபுரம், உச்சியிற்பொன்முடி
உதயக் கிரகணங்கள்
தாங்கியே தகதக எனுமெழில் மின்னிய
தனையே நோக்கியதாய்
ஏங்கிய மனதுடன் இளவய துடையவன்
இறையவள்தனை வேண்ட
தேங்கிடும் பயமெழ திரையிடும் விழிநீர்
தொட்டிட உட்சென்றான்

செந்நிறத் தீயாய் திக்கிலெழுமத்
திருமகள் சிலைமுன்னே
சுந்தர நிலவின் ஒளி பெறு வானில்
சாமரைமுகில் வீச
தந்திடும் மளவில் தன்முகவண்ண,
தண்முகம் அழுகென்றே
சிந்திடுமா பய செம்மையில் வானடி
செவ்வரி வடிவாக

வீரத்தாயவள் முன்னே வந்தோன்
வீழ்ந்தே கிடக்கின்றான்
நீரைப்பிரிந்த ஆம்பல் போலே
நீளக் கிடந்தோனை
ஓரக் கண்ணால் வீரத்தாயும்
விழி கொண்டே கண்டு
யாரப்பாநீ கேளாயென்றே
கூறும் மொழிகேட்டான்

வெள்ளி முளைக்கும் முன்னே நீயும்
வீரம் பெறவேண்டும்
அள்ளி யெடுத்தே ஆற்றல்கொண்டும்
அதிரும் நடைவேண்டும்
தெள்ளென அறிவும் திடமும்பார்வை
தீயென ஒளிவீசி
கொள்ளையர்பூமி கொடுமைகள் நீங்க
குமுறும் மனம் வேண்டும்

தீயன கண்டே தேசப்புதல்வர்
தேர்ந்தோர் வழிநோக்கி
தூயன எண்ணித் தோள்களில் பாரம்
தூக்கும் நிலைவேண்டும்
தாயெனப் போற்றி தாய்மண் காக்கும்
தன்மை பெறவேண்டும்
தேய்ந்துவிடாது திசையை மாற்றும்
திருப்பங்கள் வேண்டும்

(முற்றும்)

(இந்தத் திசை மாறி நடந்தவர்கள் திரும்பி சரியான பாதையில் ஒற்றுமையாக செல்லாதவரையும் விடுதலைக்கான பாதை மிகமிகத் தொலைவாகவே இருக்கும் !)

# நான் கதை சொல்கிறேன்..

கனகீஸ்



**நா**ன் அழுக்கு படிந்த என் கரங்களை அழுந்த துடைத்த படி நிற்கிறேன். என் மனம் நான் வாங்கப் போகும் ஊதியத்தை கணக்கு போடுகிறது. இம்மாதம் நான் விடுப்பின்றி வந்திருக்கிறேன். வழக்கமான ஊதியத்திற்கு மேல் ஊக்கத் தொகையும் வழங்கப் படும் விடுப்பு எடுக்காமல் வந்தால் என மேனேஜர் முருகேசன் போன மாதம் சம்பளம் கொடுக்கும் போதே சொன்னதால் விடுப்பு எடுக்க கூடாதென முயன்று வந்திருந்தேன் இம்மாதம் முழுதும். அளவுக்கதிகமான காய்ச்சல் வந்த போதும் மாத்திரை மட்டுமே போட்டுக் கொண்டு வேலைக்கு வந்திருந்தேன்.

வரிசையில் நான் பின் தங்கியிருக்கிறேன் எனக்கு முன் இருப்பவர்கள் ஊதியம் பெற்றக் கொள்ளும் வரை நான் வரிசையில் காத்திருந்தே தான் ஆக வேண்டும். மாதம் முழுதும் உழைத்த கலைப்பு கூட தெரியவில்லை ஆனால் இப்படி ஊதியம் பெற வரிசையில் நிற்பது கால்களை நோகச் செய்கிறது. இருப்பினும் நாம் பெறும் ஊதியம் இம்மாதம் தன் மகனின் நீண்ட நாள் கனவை நிறைவேற்றப் போகிறது என நினைக்கையில் கால் வலி பெறிதாய் தோன்றவில்லை.

என்னை பற்றிய சிறு விளக்கம். நான் நாற்பத்தைந்து வயதை கடந்து மூன்று மாதங்கள் ஆகிறது. நூற்பாலையில் தொழிலாளியாய் கடந்த இருபது வருடங்களாய் பணியாற்றி வருகிறேன். என் மனைவியும் என் மகனுமே எனக்கு இருக்கும் உறவு. இன்று வரை அவர்களுக்காய் தான் நான் உழைத்துக் கொண்டிருக்கிறேன். என் இருபது வருட உழைப்பின் பயனாய் நான் பெரும் ஊதியம் சிறிது சேமிப்பில் போட்டு வைக்கப் பட்டுள்ளது. என் மகனின் நீண்ட நாள் ஆசை புதிதாய் ஒரு இருசக்கர வாகனம் வாங்க வேண்டுமென்பது.

அப்பா ஒரு பத்தாயிரம் இருந்தால் போதும் தவணை முறையில் வாங்கிவிடலாம். என்னுடன் கல்லூரியில் பயிலும் மதன் கூட புதிய வகை வாகனம் வாங்கியிருக்கிறான், அவனின் அப்பா உங்களுடன் வேலை செய்பவர் அவரால் முடியும் போது உங்களால் மட்டும் ஏன் முடியாது? என்னால் எந்த பதிலும் சொல்ல முடியவில்லை. இது வரை அவன் ஒற்றை பிள்ளையென நான் அவன் கேட்கும் முன் அனைத்தும் வாங்கித் தந்திருக்கிறென், இவனுக்கு இருசக்கர வாகனம் வாங்கித் தர வேண்டுமென எனக்கு தோன்றவே இல்லை.

என் மனைவி அன்னம் என் பிள்ளையை கடிந்து கொண்டால். "ஏண்டா உனக்கு இப்ப வண்டி கேட்குதா "

"அப்பா அஞ்சு மைல் தினமும் சைக்கிள் மிதித்து கொண்டிருக்கிறார். உனக்கென்ன இப்ப வண்டிக்கு அவசரம் பதிவுசா பஸ் ஏறினா காலேஜிக்கு பக்கதிலேயே இறங்கிக்கலாம்"என்றவளை நான் அதட்டி அடக்கினேன்.

பிள்ளை முகம் வாடிப் போகுது பாரு அவனுக்கு இல்லாம யாருக்கு நா இப்பிடி ஓடிஓடி உழைக்கிறேன்.? நீ கம்முனு இரு எனக்கு தெரியும் என நான் அதட்டியதில் அடங்கிப் போனாள் அன்னம். இதோ ஆறு மாதங்களாய் வீட்டு செலவு போக சேர்த்து வைத்த தொகையுடன் இன்றைக்கு வரும் ஊதியமும் சேர்த்தால் பத்தாயிரம் ஆகப் போகிறது அவன் ஆசைப்படி வாங்கிக் கொள்ளட்டும்.

மகன் வண்டியில் அமர்ந்து ஓட்டி வருவதாய் கற்பனை செய்து பார்த்தான் என்ன ஒரு அழகு.

"யோவ் எந்த உலகத்துல இருக்க நீ " கையெழுத்த போட்டு காச வாங்கீட்டு கிளம்பு என்ற மேனேஜர் முருகேசனின் குரல் என்னை சுய உலகம் கொண்டு வந்தது. அய்யா இந்த மாசம் நான் லீவு போடாம வந்திருக்கேன் என்றேன் தலையை சொறிந்த படி, சரி சரி கேசியர் கிட்ட சொல்லி வாங்கிக்க என்றார். இனி அவரிடம் வேறு போய் நிக்கனுமா? என்று நொந்த படி நகர்ந்தேன் நான்.

கேசியரின் கண்ணாடிக் கதவை மெல்ல தட்டினேன் அவரின் தலை அசைவுக்குப் பின் உள்ளே சென்றேன். விவரம் சொன்னதும் அவர் ஐநூறு ரூபாய் ஒற்றை தாளை கையெழுத்து வாங்கிக் கொண்டு கொடுத்து அனுப்பினார். வழக்கத்தை விட இன்று நான் வேகமாய் நடக்க ஆரம்பித்தேன் கேட்டுக்கு அருகில் இருக்கும் என் மிதிவண்டியை நோக்கி.

என்னை விட வேகமாய் இடித்த படி நகர்ந்த கந்தசாமியை நான் இழுத்துப் பிடித்து நிருத்தினேன். அவனின் விழிகள் கண்ணீர் சுரந்தபடி இருந்தை பார்த்ததும் எனக்கு கவலை தொற்றிக் கொண்டது. என்ன விவரம் என கேட்ட போது நான் அதிர்ந்து போனேன். கந்தசாமி மதனின் அப்பாதான். மதன் வண்டியில் கண்மண் தெரியாமல் ஓட்டியதால் விபத்து ஏற்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்த்திருப்பதாய் அவன் சொன்னபோது என் இதயம் உடைந்து போனது.

கவலைப்படாதே எதுவும் தவறாய் நடந்து விடாது

என தேற்றி என் கையில் இருந்த ஊதியக் கவரை அவன் கையில் திணித்தேன். அவன் நன்றி சொன்னபடி விலகிப் போனான்.

வீட்டுக்கு வந்ததும் நான் அன்னதிடம் என் பிள்ளையை விசாரித்தேன், அவன் வீட்டுக்கு பின்புறம் இருப்பதாய் சொன்னாள். நான் அவன் அருகில் சென்று அமர்ந்தேன். அப்பா வந்துட்டீங்களா சம்பளம் வாங்கியாச்சா என்று கேட்டவனிடம் இல்லை என்றேன்.

சரி எப்ப தருவாங்க அப்பா நான் பைக்கிற்கு விலை விசாரித்து விட்டேன் கலர் கூட செலக்ட் பண்ணி வச்சிருக்கேன். நீங்க பணம் கொடுத்தா போதும் என்றவனிடம். இல்லை கண்ணா என்னிடம் தற்போது அவ்வளவு பணம் கையிருப்பில் இல்லை. நான் கடன் வாங்கத்தரலாம் என நினைத்திருந்தேன் ஆனால் கேட்ட இடத்தில் கடன் கிடைக்கவில்லை அடுத்த மாதம் வாங்கிக் கொள்ளலாம் என சொன்னதும் அவன் முகம் வாடிப் போனது. சரி அப்பா அடுத்த மாதமேனும் கட்டாயம் வாங்கித் தர முயற்சியுங்கள் என சொல்லிவிட்டு செல்லும் மகனிடம் மனதுக்குள் மன்னிப்பு கேட்டேன்.

> *உள்ளம் விம்மும்போது..*
>
> *விழிகள் சொல்லும்*
>
> *ஆறுதல் வார்த்தைதான்*
>
> *கண்ணீர்..*
>
> *- ரத்ன தேவி -*

என்னை மன்னித்து விடு மகனே நான் உன்னை மதனை போல் மருத்துவமனையில் பார்க்கும் நிலை வந்தாள் என் உயிர் என்னிடம் இருக்காது. உன் ஆசையை நிறைவேற்ற முடியாத தகப்பனாகிப் போனேன் நான். உன் அத்தனை ஆசைகளையும் நிறைவேற்றி உன்னை அல்பாய்சில் பரிகொடுக்க நான் விரும்பவில்லையடா மகனே. என் கண்களில் வழியும் நீரை துடைத்தபடி நான் நடந்தேன் மதனை பார்க்க மருத்துவமனைக்கு.

பின் குறிப்பு : இக்கதை ஒரு உண்மைச் சம்பவத்தின் பின்னனியில் எழுதப்பட்டது. சாலை விபத்தினால் இறந்து போன மதன் கடைசி பலியாய் இருக்கட்டும். தேவையின்றி வாகனம் வாங்கித் தருவது பிள்ளைகளை சந்தோசப் படுத்துவதுடன் பெற்றவர்களை துக்கத்திலும் ஆழ்த்துகிறது.

# ஹோட்டல் தோசை + தக்காளி சாம்பார்

லதாபாலு

### தேவையான பொருட்கள்

புழுங்கல் அரிசி 2 ஆழாக்கு

உளுந்தம் பருப்பு 1/2 [அரை ஆழாக்கு]

மைதா மாவு 1/2 ஆழாக்கு,

ரவை 1/2 ஆழாக்கு

தோசைக்கு தொட்டுக் கொள்ள தக்காளி சாம்பார் நன்றாக இருக்கும்

### செய்முறை

காலையில் செய்வதானால் முதல் நாள் மாலையில் அரிசியையும், பருப்பையும் தனித்தனியாக ஊற வைத்து தோசைக்கு அரைப்பது போல அரைத உப்பு போட்டு கரைத்து வைத்துக் கொள்ளவும்.

மறு நாள் காலையில் அரைத்த மாவுடன் மைதா மாவையும் ரவையையும் போட்டு நன்கு கலந்து வைத்துக் கொள்ளவும் பின்பு ஒரு மணி நேரம் கழித்து தோசை வார்க்க வேண்டும்.

இனி **தக்காளி சாம்பார்** செய்யும் முறையை பார்ப்போம்.

முதலில் தக்காளிப் பழங்களை ஒரு பாத்திரத்தில் எடுத்து தண்ணீர் ஊற்றி அடுப்பிலேற்றி நன்றாக வேகவைத்து தோலுரித்துக் கொள்ளவும்.

பின்பு சாம்பார் வெங்காயம் ஒரு கைப்பிடி அளவு எடுத்து பொடியாக அரிந்து கொண்டு இரண்டு பச்சை மிளகாய் ஒரு துண்டு இஞ்சி எல்லாவற்றையும் பொடியாக அரிந்து வாணலியில் எண்ணை ஊற்றி கடுகு உளுந்து தாளித்து வெங்காயம் பச்சை மிளகாய் இஞ்சி எல்லாம் சேர்த்து தாளித்து சிறிது நீர் ஊற்றி உப்பு மஞ்சள் தூள் மிளகாய் தூள் போட்டு நன்கு கொதிக்க வைக்கவும்.

வேகவைத்த தக்காளி பழங்களை மிக்ஸியில் அரைத்து சேர்த்து மீண்டும் நன்கு கொதிக்கவைத்து கறிவேப்பிலை , கொத்துமல்லி தழை சேர்த்து இறக்கவும்.

# பில்லா III: பில்லா Vs டிராகுலா

*சிவாஜிதாசன்*

**பகுதி - 9**




**கா**லம் என்றுமே தன் பாதையை மாற்றிக் கொண்டே போகும். விளையாட்டாய் இறங்கிய காரியங்கள் வினையாக முடிந்து விடும் என்ற பழமொழியை மெய்ப்பிப்பது போல, திவாகர் மாஃபியா கூட்டத் தலைவன் ஜோசப்பின் கையாள் பரத்திடம் சிக்கிக்கொண்டு மயக்க நிலையில் கிடந்தான்.

மாலை நேர சூரியன் தன் தங்க நிற ஒளியலைகளை கடலின் மீது வீசியெறிந்து ஜலத்தை ஜொலிக்கச் செய்துகொண்டிருந்தது. கடற் பறவைகள் வானில் 'க்ரீச்..'' என்று ஒலியெழுப்பியபடி எங்கோ பறந்தன.

கடலில் ஒரு கப்பல், ஆமை போன்று மெதுவே நகர்ந்தபடி சென்றுகொண்டிருந்தது. அக்கப்பலின் முனையில் ஒரு நீண்ட கம்பியில் திவாகர் கட்டப்பட்டிருந்தான். கம்பி ஒடிந்தாலோ கயிறு அறுந்தாலோ நேரே கடல் அரக்கனின் வாயில் விழுந்து, சுறாக்களுக்கும் திமிங்கலத்துக்கும் இரையாகிவிடுவான் அவன். அக்கப்பலைச் சுற்றி ஆயுதம் ஏந்திய அடியாட்கள் வலம் வந்துகொண்டிருந்தனர். அவர்கள் அங்கே நடந்து செல்வது ரோபோக்களை நினைவுபடுத்தின.

திவாகருக்கு லேசான நினைவு துளிர்விடத் தொடங்கியது. 'என்ன நடந்தது' என்று எண்ணக்கூட சக்தியற்றவனாய் வலியோடு முனங்கினான். கம்பியில் தொங்கிக்கொண்டிருந்தது ஊஞ்சல் ஆடுவது போல் தோன்றியது அவனுக்கு. இரண்டு நிமிடங்களில் எல்லா நினைவுகளையும் மீட்டெடுத்து கண்களைத் திறந்து பார்த்தவனுக்குப் பேரதிர்ச்சி. உடல் முழுதும் கிலி பரவி மீண்டுமொரு மயக்க நிலையை அடைந்தான்.

'என்ன இது விபரீதம் !' என்று மனதில் எண்ணியபடி, சீற்றமென எழுந்த கடல் அலைகளும், அங்கொன்றும் இங்கொன்றுமாய் திரியும் சுறாக்களும் அவனைப் பயமுறுத்தி, "ஓஓஓ.." வென அலறச்செய்தது.

"காப்பாற்றுங்கள் ! காப்பாற்றுங்கள் !" என்று அலறினான்.

கப்பலிலிருந்த யாரும் கண்டுகொள்வதாய் இல்லை. சலனமற்ற முகத்தோடு அவனையே வெறித்துக் கொண்டிருந்தனர். கப்பல் ஆட ஆட கம்பி கீழே வளைந்து மேலே எழ எழ மரணத்தை மிக அருகில் கண்டான்.

"யாராவது காப்பாற்றுங்கள் !" என்று கூக்குரலிட்டான்.

அவனது அழுகுரலைச் சகிக்க முடியாதவனாய் தனது வலது காதைக் குடைந்துகொண்டபடி கையில் குளிர்பானத்தோடு பரத் அங்கே வந்தான். துடித்துக்கொண்டிருந்தவனைப் பார்த்து விஷமப் புன்னகை வீசியபடி கடலை நோக்கினான்.

பரத்தைக் கண்டதும் திவாகர் அவனது முகத்தையே உற்றுநோக்கினான். 'இவன் ஜோசப்பின் வலது கரமாச்சே? நிச்சயமாக நமக்கு மரணம் தான். பணத்திற்கு ஆசைப்பட்டு படுபாதாளத்தில் விழுந்துவிட்டேனே!' என்று கலங்கிய எண்ணங்களோடு, சிறிது முயற்சித்துப் பார்க்கலாம் என்ற இறுதி எண்ணத்தோடு பரத்தைப் பார்த்தான்.

"சார், நான் என்ன பண்ணிட்டேனு இப்படி கட்டி வச்சிருக்கீங்க?"

பரத், பதில் கூறாமலும் அவன் கூறியதைக் காதில் போட்டுக்கொள்ளாமலும் குளிர்பானத்தைக் குடித்துக்கொண்டிருந்தான். சிறு மௌனத்திற்குப் பிறகு, திவாகரை நோக்கினான்.

"உங்கிட்ட நான் சில கேள்விகள் கேக்கணும். அதுக்கு உண்மையான பதில் எனக்கு வேணும். விளையாடினாலோ பொய் சொன்னாலோ உன் விதிய யாராலையும் மாத்த முடியாது"

திவாகரின் முகத்தில் மிரட்சி பரவியது.

"எத்தனை நாளா எங்களைப் பின் தொடருற?" என்று முதல் கேள்வியை எறிந்தான் பரத் திவாகரைப் பார்க்காதவாறே.

"சார், எனக்கு ஒன்றும் தெரியாது. நீங்க தப்பா புரிஞ்சி வச்சிருக்கீங்க. என்னை இறக்கி விடுங்க"

பரத் ஒருவனைக் கூரிய விழிகளோடு நோக்கினான். வீசியெறிந்த விழிகளின் உத்தரவைப் புரிந்துகொண்ட இன்னொருவன், திவாகரைப் பிணைத்திருந்த கயிற்றை அறுக்கத் துவங்கினான்.

திவாகர் பயக்கூக்குரலிட்டு, "நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்! நான் சொல்லிடுறேன்!" என்றான்.

கயிற்றை அறுக்கத் துவங்கியவனை நோக்கிச் சமிக்ஞை செய்தான் பரத். அவனும் நிறுத்திவிட்டான்.

"சொல்லு. எத்தன நாளா பின்தொடருற?"

"இரண்டு வாரம் சார். ஃபிரான்ஸ் டெய்லி நியூஸ் பத்திரிக்கையின் எடிட்டர் ராம்சரண் தான் பணம் குடுத்து இப்படி செய்யச் சொன்னாரு. இப்போ மட்டும் நீங்க விட்டீங்கனா திரும்ப உங்க பக்கம் தலைய கூட நீட்டமாட்டேன்"

"என்ன என்ன உண்மை சேகரிச்சிருக்க?" என்று கேட்டான் பரத்.
"சார் எல்லாம் என்னுடைய பையில இருக்கு. நீங்களே பாத்துக்கோங்க" என்றான் திவாகர்.

ஒருவன் திவாகரின் பையை எடுத்து வந்து கொடுக்க, அதனைச் சோதனை செய்தான் பரத். அதில் சில போட்டோக்களும் மற்றும் அவனது டிரைவிங் லைசென்ஸ், விசிட்டிங் கார்ட்ஸ் மட்டுமே இருந்தன. சோதித்த பின், பையைத் தனது ஆளை நோக்கி வீசினான். அவனும் சரியாகப் பிடித்துக்கொண்டான்.

"கடைசியா ஒரு கேள்வி" என்றான் பரத்.

"அதுக்கு பதில் சொன்னா விட்ருவீங்களா?" என்று ஆசையோடு கேட்டான் திவாகர்.

ஆமோதிப்பதாய் தலையசைத்து, "பில்லாவிற்கு மட்டும் அதிகமா முக்கியத்துவம் கொடுக்குற. நீ கொடுத்த மூணு செய்தியில பில்லா பேரு தான் இடம் பெற்றிருக்கு, எதனால?"

"அது தான் நேரம். நான் உங்களை கண்காணிக்க வந்தா, அவர் தான் மாட்டுறாரு. நான் என்ன செய்றது? பதில் சொல்லிட்டேன் சார். விட்ருங்க" என்று மன்றாடினான்.

"நீ இன்னும் முழு விவரமும் சொல்லல போலிருக்கே? பில்லாவ போலீஸ் துரத்திட்டு போயிருக்கிறது எல்லாம் போட்டோ பிடிச்சிருக்கியே?" என்று கிடுக்கிப்பிடி போட்டான் பரத்.

"சார் அன்றைக்கு ராத்திரியில இருந்தே பில்லாவ நான் பின்தொடர்ந்தேன். திடீர்னு அவரு எங்கோ கிளம்பிப் போனாரு. ஹார்பர்க்குப் போயிட்டு கடத்தல் பொருள அவரே வண்டில ஏத்தி, விக்டர் இருக்க இடத்துக்குப் போனாரு சார். ஆனா ஒண்ணு, அவரு இதை வேணும்னே பண்ணல. அது மட்டும் தெரியும். பின்னாடி ஏதோ நடந்திருக்கு. அவர் செஞ்சதுக்கெல்லாம் ஒரே ஒருத்தன் தான் காரணமா இருந்திருக்கணும். அது அந்த டிராகுலா தான் சார்"

டிராகுலா என்ற பெயரைக் கேட்டதும், பரத்தின் புருவங்கள் மேலுயர்ந்தன.

"அவன் தான் காரணம்னு எப்படி உறுதியா சொல்ற?"

திவாகர், "நான் விசாரிச்சேன் சார். கொஞ்சம் கீழ இறக்கி விட்டீங்கனா எல்லாத்தையும் சொல்லிடுறேன். முதுகு வேற அரிக்குது சார்" என்றான் கடுப்பாய்.

"கயிறு அறுத்து விடுறேன். கீழ சுத்துற சுறா வந்து சொறிஞ்சி விடும்" என்றான் அடியாள்.

> நீ
> என்னுடன் இல்லாத
> பொழுதுகளை எழுத்துக்களாய்
> மாற்றி வைத்திருக்கிறேன்.....
> என்றாவது உன்
> விரல்கள் அந்த
> எழுத்துக்களைத் தீண்டும்
> என்ற நம்பிக்கையுடன்.....
> - சோபியா -

திவாகர், "சார்ர்ர்ர்.." என்று பரத்தைப் பாவமான முகத்தோடு நோக்கினான்.

பரத்தும் அவனைக் கீழ இறக்குமாறு மற்றவர்களுக்கு சமிக்ஞை கொடுத்தான். திவாகரும் கீழே இறக்கப்பட்டான். கீழே இறங்கியவுடன் தான் திவாகருக்கு நிம்மதிப் பெருமூச்சே வந்தது. பரத்தின் விழிகளைச் சந்தித்த அவனது கண்கள் மேற்கொண்டு சந்திக்க முடியாமல் வேறு பக்கம் சென்றன.

"சொல்லு" என்றான் பரத் கூர்மையோடு.

திவாகர் கூறத் துவங்கினான். "சார், பில்லாவோட நண்பர் சஞ்சய் இறந்து போனது பத்தி விசாரிக்கும் பொழுது, சில உண்மைகள் தெரிஞ்சது. அவருக்கு சரியா ஏழு மணிக்கு ஆபீஸ் மீட்டிங் இருந்திருக்கு. அதுவும் முக்கியமான மீட்டிங். அத விட்டுட்டு அவசர அவசரமா பில்லா வீட்டுக்கு போயிருக்காரு. அன்றைக்கே ஆக்சிடென்ட் ஆகி இறந்திருக்காரு. இதையெல்லாம் சேர்த்துப் பார்க்கும் பொழுது டிராகுலா சஞ்சைய உபயோகப்படுத்தியோ மிரட்டியோ பில்லாவோட கோட்டைக்குள்ளே நுழஞ்சிருக்கான். அதோட வெளிப்பாடு தான் பில்லா விக்டர கொன்னது"

பரத் தீவிர யோசனையில் இறங்கினான். மௌனமாக குறுக்கும் நெடுக்குமாக சிறு நடை போட்டான்.

திவாகர் நிறுத்தாமல் பேசினான். "அது மட்டும் இல்ல சார். டிராகுலாவால மாஃபியா தலைவருக்கு எல்லாம் ஆபத்து வரும்னு நினைக்குறேன்"

"என்ன சொல்ற?" என்றான் அதிர்ச்சியோடு பரத்.

"என்னுடைய கணிப்பு அப்படித்தான் சார் சொல்லுது. என்னை எதுவும் செய்யாம விட்டீங்கனா, என்னால அவனைக் கண்டுபிடிக்க முடியும்"

பரத் அவனை விடலாமா வேண்டாமா என்று இருதலைக்கொள்ளி எறும்பாய்த் தவித்தான். ஆயினும் அவன் சேகரித்த விவரங்கள் அனைத்தும் அவன் ஒரு திறமைசாலியென நிரூபித்தன.

அதனால், மனதில் ஒரு திட்டத்தைத் தீட்டி, அது சரியென்று ஆமோதிப்பதாய் அவனே தலையசைத்து திவாகரை நோக்கினான்.

"சரி, உன்னைக் கொல்லாம விடுறேன். அதுக்கு பரிகாரமா எனக்கு டிராகுலா பத்தி தெரியணும். அவன் எங்க இருக்கான்னு கண்டுபிடிக்கணும். என்னுடைய ஆளுங்க இரண்டு பேரு உன் கூட எப்போவும் இருப்பாங்க. வேலை முடிஞ்சதும் அவங்களே போய்டுவாங்க. நீ எங்கள ஏமாத்த நினைச்சாலோ புத்திசாலித்தனமா சாகசம் செய்ய நினைச்சாலோ அது உனக்கு தான் ஆபத்து"

தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள வேறு வழியே இல்லாத காரணத்தால் ஒப்புக்கொள்ள வேண்டியதாய்ப் போயிற்று திவாகருக்கு. புத்திசாலித்தனமாக எதை எதையோ பேசி உண்மைக் கதைகளோடு கற்பனை கதைகளையும் இணைத்து ஒரு கதை சொன்னதால் தப்பித்தேன் என்று மனதில் எண்ணிய அவன், 'டிராகுலாவை எப்படி நான் கண்டுபிடிப்பேன்? கடவுளே என்னைக் காப்பாற்று' என்று மனதினுள் வேண்டிக்கொண்டான்.

♦♦♦

ஒரு பெரிய கூடம். அதன் நடுவினில் தொங்கிய விளக்கொன்று சிறிய பரப்பளவில் மங்கலான ஒளியைப் பரப்பிக்கொண்டிருந்தது. பில்லாவின் மனதில், டிராகுலா தப்பியது ஒரு புறம் மகிழ்ச்சியும் மறுபுறம் சோதனையும் கலந்திருந்தது. டிராகுலாவின் வரலாறு அவருக்கு மட்டுமே தெரியும் என்பதில் ஐயமில்லை. ஆனால், அதை மீண்டும் நினைத்துப் பார்க்கும் மனநிலையிலும் பில்லா இல்லை. சவரம் செய்யாமல் விட்டதால் சிறு சிறு முடிப்புற்கள் அவரது கன்னங்களில் எட்டிப்பார்த்தன.

கதவு திறக்கப்படும் ஓசை எரிச்சலாகக் கேட்டது. சத்யம் பில்லாவை நோக்கி நடந்து வந்தார்.

"எத்தனை நாளைக்குப்பா இப்படி தலைமறைவா இருக்கப்போற?" என்று நண்பன் என்னும் முறையில் வருத்தம் தோய்ந்த குரலில் வேதனையாகக் கேட்டார் சத்யம்.

அவர் கூற்றுக்கு மறுமொழி கூற பில்லா விரும்பவில்லை. "அலெக்ஸ் வர ஃபிளைட் எப்போ வருது?" என்று கேட்டார்.

அலெக்ஸிற்கு மீண்டுமொரு ஆபத்து நேர்ந்து, தன்னைப் பகடைக்காயாக மாற்ற விரும்பாத பில்லா, அலெக்சை உடனே பிரான்ஸிற்கு வருமாறு கட்டளையைப் பிறப்பித்தார். அலெக்சும் அதற்கு சம்மதித்து, குறுகிய காலத்திற்குள் தனது பிசினசை முடித்துக்கொண்டு பிரான்ஸிற்கு புறப்பட்டுவிட்டான்.

"சரியா ஏழரை மணிக்கு வருதுப்பா" என்றார் சத்யம்.

"நம்ம ஆளுங்கள ஏர்போர்ட்க்கு அனுப்பி வை"

"நீ சொல்றதுக்கு முன்னாடியே அதை செஞ்சிட்டேன்" என்று கூறினார் சத்யம் புன்முறுவலோடு.

பில்லா, "நம்ம ஏரியாவ சரியா கவனிச்சிக்க. விட்டுக்கொடுக்கக்கூடாது. அப்படி விட்டுப்போய்ட்டா அது நல்லா இருக்காது. இத்தன நாளா நான் கட்டிக் காப்பாத்தின கோட்டை அது. நான் சாகுற வரைக்கும் யாருக்காகவும் எதுக்காகவும் விட்டுக்கொடுக்க முடியாது" என்றார் சிறிது சினத்தோடு.

"நீ கவலைப்படாம இருப்பா. நான் எல்லாத்தையும் பார்த்துக்கிறேன். உன் இடத்தில இன்னொருத்தனுக்கு கால் வைக்க தைரியம் இருக்குமா என்ன?" என்று கூறியபடி விடைபெற்றார் சத்யம்.

பில்லா நாற்காலியில் அமர்ந்து, விட்டத்தை வெறித்தார். அவருடைய உள்ளம் ஒன்று மட்டும் சொன்னது. 'நான் தோற்கமாட்டேன். நான் தோற்கமாட்டேன்' என்று கூறிக்கொண்டே இருந்தது. அதற்கு சாட்சியாக அவரது விழிகள் சிவந்த நிறத்தில் காணப்பட்டன. மீண்டும் டிராகுலாவை எதிர்க்க வேண்டுமென்றால், தன் பலவீனத்தை முதலில்

பாதுகாக்கவேண்டும் என்று விரும்பியதன் விளைவு தான் அலெக்ஸ் பிரான்ஸிற்கு வருவது.

♦♦♦

அலெக்ஸ் பில்லாவை ஏர்போர்ட்டிலிருந்து அழைத்து வர இரண்டு கார்களில் அனுப்பப்பட்ட ஆட்கள் வழியில் கடும் போக்குவரத்து நெரிசலில் சிக்கிக்கொண்டனர். ஒரு பேருந்தும் காரும் விபத்துக்குள்ளானதால் ஏற்பட்ட நெரிசல் அது. தூரத்திலிருந்து பார்த்தால் வரிசையாகத் தீப்பெட்டிகளை அடுக்கி வைத்தார் போல் கார்கள் நின்றுகொண்டிருந்தன.

நேரம் சரியாக இரவு 7.15. இன்னும் பதினைந்து நிமிடங்களில் விமானம் வந்துவிடும். அலெக்சும் வந்துவிடுவான். சத்யம் அனுப்பிய ஆட்கள், அலெக்சை அழைக்க சரியான நேரத்திற்குள் எப்படி விமான நிலையத்தைச் சென்றடைவது? என்று போராடினர்; டிராபிக்கைக் கண்டு தங்களுக்குள்ளே வெந்துகொண்டிருந்தனர்.

இரவு தோன்றி நட்சத்திரங்களும் நிலவும் வானை அலங்கரித்துக்கொண்டிருந்தன. அலெக்ஸ் பில்லா வந்த விமானம் ஏர்போர்ட்டில் தரையிறங்கியது. ஏர்போர்ட்டின் சுங்கச் சோதனையையும் சம்பிரதாயங்களையும் முடித்துவிட்டு அலெக்ஸ் வெளிவர சரியாக மணி 8.30 ஆனது. கையில் ஒரு பெட்டியும் தோளில் ஒரு பையுமாக வந்த அலெக்சிற்கு தன்னை அழைத்துச் செல்ல ஆட்கள் இன்னும் வரவில்லை என்று தெரிந்ததும் அலுப்பும் வெறுப்பும் லேசாக மனதினுள் முளைத்தன. 'சரி, டாக்ஸி பிடித்து சென்றுவிடலாம்' என்றெண்ணி, பெட்டியைச் சுமந்துகொண்டு நடக்கலானான்.

அப்பொழுது அவன் முன்னே ஒருவன் தோன்றினான். அவனது கைகளில் மூன்று பலூன்கள் காற்றில் அசைந்தாட நூலினைப் பிடித்துக்கொண்டு பலூனால் முகத்தை மறைத்திருந்தான்.

'யாரிவன்?' என்று மனதினுள் எண்ணிய அலெக்ஸ் பில்லாவின் ஆவலை அதிக நேரம் வீணடிக்காமல் பலூன்களை வானில் பறக்கவிட்டு தனது முகத்தைக் காட்டினான் அவன்.

கோமாளி முகமூடியோடும் குறும்புப் பார்வையோடும் சிறு பிள்ளை நடையோடும் டிராகுலா நின்றுகொண்டிருந்தான். அவனது விழிகள் அலெக்சை கூர்மையோடும் அதே சமயம் குறும்போடும் நோக்கின. "நீங்க பில்லா சாரோட மகன் தானே?" என்றான் குதூகலமான குரலில்.

சிரித்த முகத்தோடு, "ஆமாம் " என்றான் அலெக்ஸ்.

"கைகுடுங்க, கைகுடுங்க.." என்று அலெக்சின் அனுமதி இல்லாமலே அவனது வலதுகையைப் பிடித்து வலுக்கட்டாயமாகக் குலுக்கினான். "வாங்க சார். நான் உங்களை கூட்டிட்டுப் போறேன்" என்று அவனது பெட்டியை வாங்கிக்கொண்டு ஓட்டமென ஓடி ஒரு காரின் டிக்கியில் வைத்து மூடினான்.

டிராகுலா செய்யும் சேஷ்டைகளை ரசித்தபடி, அலெக்ஸ் அவனது காரில் ஏறி, பின் சீட்டினில் அமர்ந்தபடி, "அப்பா கிட்ட தான் வேலை செய்றியா நீ?" என்று ட்ராகுலாவைப் பார்த்து கேட்டான்.

"இல்லை சார். என்னை அவரு வேலையிலேயே சேர்த்துக்க மாட்டேங்கறாரு" என்று பரிதாபமாக அலெக்சைப் பார்த்துக் கூறினான் டிராகுலா.

"கவலைப்படாத. நான் அப்பா கிட்ட பேசுறேன்" என்று ஆறுதல் மொழி கூறினான் அலெக்ஸ்.

அதைக் காதில் போட்டுக்கொள்ளாமல், "உங்க பக்கத்தில இருக்க கண்ணாடியை மூடிக்கோங்க சார்" என்றான் டிராகுலா.

"எதுக்கு?"

"உங்களைக் கொல்றதுக்கு இங்க சில பேரு சுத்திட்டு இருக்காங்க. பார்த்தாங்கனா உங்களுக்குத் தான் சார் கஷ்டம்"

டிராகுலா விளையாடுகிறான் என்று எண்ணிய அலெக்ஸ், "நான் பாத்துக்குறேன். நீ சீக்கிரம் கிளம்பு" என்றான்.

"அப்புறம் உங்க இஷ்டம் சார்" என்று கூறியபடி காரை முன்னே எடுத்தான் டிராகுலா.

ஏர்போர்ட்டைக் கடந்து பிரான்ஸின் பிரதான சாலையில் சென்றுகொண்டிருந்தது டிராகுலாவின் கார்.

விளக்கொளியில் பிரகாசித்துக்கொண்டிருந்த கடை வீதிகளை ரசித்தபடி இருந்த அலெக்சின் முன் ஒரு துப்பாக்கிக்குண்டு அவனைக் கடந்து சென்றது. 'என்ன நடந்தது?' என்று எண்ணுவதற்குள் டிராகுலாவின் காரைப் பல தோட்டாக்கள் தாக்கிச் சல்லடையென ஆக்கியது. ஆயினும் டிராகுலா பதற்றம் அடையாமல் அலெக்சை நோக்கிச் சிரித்தான். அலெக்ஸ் புரியாமல் அவனைப் பார்த்து விழித்தான்.

"நான் தான் சொன்னேனே சார், உங்களைக் கொல்லப் பாக்குறாங்கன்னு. நீங்க தான் கேக்கல" என்றான் அப்பாவி போன்ற குரலோடு டிராகுலா.

"யார் இவங்க? எதுக்கு என்ன சுடுறாங்க?"
"அது பெரிய கதை சார். நான் உங்களை காப்பாத்துறேன். நீங்க தலைய கீழ குனிஞ்சிக்கோங்க" என்று கூறியபடி காரை வேகமாக ஓட்டினான். வீதிகளின் உள்ளே புயலெனப் புகுந்து பறந்தது கார்.

அலெக்ஸ் ஆச்சர்யத்தில் மூழ்கினான். டிராகுலா கார் ஓட்டிய விதம் அபாரமாய் இருந்தது. அவன் சாதரணமானவன் அல்ல என்பதைப் புரிந்துகொண்டான்.

அப்பொழுது ஒரு வாலிபன் இருசக்கர வாகனத்தில் டிராகுலாவின் காரின் முன் வேகமாக சென்றுகொண்டிருந்தான். டிராகுலாவிற்கு கார் ஓட்டுவது இடைஞ்சலாக இருந்ததால் அவனைக்

காரில் முட்டிக் கீழே தள்ளினான். பிறகு, அலெக்சைப் பார்த்து, "சார் ஒண்ணு தெரிஞ்சிக்கோங்க. நம்ம குறுக்க யார் வந்தாலும் அடிச்சிடணும். இல்லனா தொல்லை" என்று தனது இதழ்களை மடித்து விஷமமாகச் சிரித்தான்.

அவனது நடவடிக்கைகளைப் புரிந்துகொள்ள முடியாத அலெக்ஸ், தப்பித்தால் போதும் என்ற மனநிலைக்கு வந்துவிட்டான்.மீண்டும் காரை குண்டுகள் தாக்கின.

"விடமாட்டாங்க போலிருக்கே"

"எப்படி சார் விடுவாங்க? உங்க அப்பா விக்டர்னு ஒருத்தர கொன்னுட்டாரு. அவரோட தம்பி, அவனோட ஆளுங்கள அனுப்பி உங்களை கொல்லப் பாக்குறான். உயிருக்கு உயிர் தான் விலை போல"

அலெக்சிற்கு, 'இவன் கிறுக்கனா? அல்லது மிகப் பெரிய புத்திசாலியா?' என்று புரியாமல் தத்தளித்தான்.

நீண்ட நேர போராட்டத்திற்குப் பிறகு, பின்தொடர்ந்த கார்களை ஏமாற்றி பில்லாவின் வீட்டுப் பக்கம் காரைக் கொண்டு வந்தான் டிராகுலா. அலெக்சின் உள்ளம் வெறுமையாகவும் அதே சமயம் குழம்பியும் இருந்ததை முகம் காட்டிக்கொடுத்தது.

டிராகுலா, "இன்னைக்கு எனக்கு கொலை பண்ற மூடே இல்ல சார். ஆனாலும் அவங்களா ஏமாத்திட்டு வந்தது நல்லா தான் இருந்துச்சு" என்றான்.

அவன் பேசுவதை அலெக்ஸ் கவனியாமல் அமைதியாக இருந்தான். பில்லாவின் வீட்டின் முன் காரை நிறுத்தினான், டிராகுலா. அலெக்ஸ் இறங்கினான். ஒரு கட்டுப் பணத்தை எடுத்து அவனிடம் நீட்டினான். "உயிரைக் காப்பாற்றியதற்கு நன்றி. இத வச்சி உன் காரை சரி பண்ணிக்கோ" என்றான்.

டிராகுலா குறும்பாக "தேங்க் யூ" என்றான்.

அலெக்ஸ் உள்ளே போனதும், டிராகுலா சிறிது தூரம் டாக்ஸியைச் செலுத்தி ஆள் அரவமற்ற இடத்தில் நிறுத்திவிட்டு, கார் டிக்கியைத் திறந்தான். ஓர் ஆள் கை கால்கள் கட்டப்பட்ட நிலையில், முகம் முழுதும் ரத்த வெள்ளத்தில் கிடந்தான். அவன் தான் உண்மையான டாக்ஸி டிரைவர் என்பதை அவனது ஆடை காட்டிக் கொடுத்தது. அவனிடம் பணத்தை வீசியெறிந்து, "இத வச்சி காரை சரி பண்ணிக்கோ" என்று கூறியபடி துள்ளும் நடையோடு அங்கிருந்து மறைந்தான் டிராகுலா.

♦ ♦ ♦

அலெக்சைக் கொல்ல வந்தவர்கள் ஏமாந்து, விக்டரின் தம்பி முன் நின்று விஷயத்தைக் கூறினர்.

கொதிப்பான அவன், துப்பாக்கியை எடுத்து வீட்டைச் சுற்றிச் சுட்டு தனது கோபத்தைக் காட்டினான்.

இறுதியாக, தனது அடியாட்களிடம் ஒன்றை மட்டும் கூறினான்.

"அலெக்ஸ் பிணமாகணும்..."

**தொடரும்...**

# என் காதல் கணவா

*கவியாழினி*



*அத்தை மகனே என் மாமனே*
*என் பிள்ளையின் தகப்பனே*

*நீ வேடிக்கை பார்க்கையில்*
*நான் விதையாக இருந்தேன்*

*நீ விளையாடும் பருவத்திலே*

*நான் வேடிக்கைப் பார்த்தேன்*

*நீ விறுவிறுப்பாய் வளர்ந்திடவே*
*நான் விளையாடித் திரிந்தேன்*

*நீ வில்அம்பாய் காதல் பார்வை வீச*
*நான் விறுவிறுப்பாய் வளர்ந்தேன்*

*நீ விசிய காதல்அம்பில் மனைவியாக்க*
*நான் காதல் பார்வையை ரசித்து கரைந்தேன்*

*நீவாழ்வின் விதையை உற்பத்தி செய்ய*
*நான் மனைவியென உன்னுள் மூழ்கிபோனேன்*

*நீ விதைத்த விதை வேரூன்ற பாடுபட*
*நான் விதைக்கு பதியமிட்டு மகிழ்ந்தேன்*

*நீ பாடுபட்ட விதை விருட்சமாக வளர்ந்திட*
*நான் விதைக்கும் உனக்குமாய் வாழ்ந்தேன்*

*நீ விதையுமற்று விருட்சமுமற்று என்னைகாக்க*
*நான் விசும்பல்களாய் உன்னுள் உறங்கிப்போனேன்*

*நீ நான் என்பதெல்லம் நீதானென்று மாற்றம்பெற*
*என்னையே நான் உண்ணுள்கண்டு மடிசாய்ந்தேன்*

*கல்லறையிலும் கைபிடித்தபடி கண்ணுறங்குவேன்*
*நீ என்னுடனிருப்பாய் என் காதல் கணவா*

# சிநேகிதியுடன் தனிமையில் சில நிமிடங்கள்

## 13 – கூச்ச சுபாவம் உள்ளவரா?

பூங்கோதை

வணக்கம் அன்புச் சிநேகித உள்ளங்களே...

இன்று இளைய நண்பர் ஒருவர் புதிய கேள்வியோடு சிநேகிதியை நாடியுள்ளார்.இது பல மாணவ மாணவியருக்கும் பொருத்தமாகவும் உபயோகமாகவும் இருக்கும் என நம்புகிறேன். இன்று

> பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு
> உறைபதி என்னும் உலகு.
>
> பிறர்க்கு வரும் பழிக்காகவும், தமக்கு வரும் பழிக்காகவும் நாணுகின்றவர் நாணத்திற்கு உறைவிட மானவர் என்று உலகம் சொல்லும்.

என்ற குறளை மனதில் தரித்துக் கொண்டு, சிநேகிதியோடு சில நிமிடங்கள் பயணிக்கலாம் வாங்க..

சிநேகிதியுடன்.......

வணக்கம் சிநேகிதி,

என் பெயர் கார்த்திக். நான் 10ம் வகுப்பில் கற்றுக் கொண்டிருக்கும் மாணவன்.எனது பிரச்சனை என்னவென்றால் என் கூச்ச சுபாவம் தான். பொதுவாக நான் யாருடனும் பேசுவதில்லை. இதனால் அதிகமாக நண்பர்கள் இல்லை.வகுப்பறையில் ஆசிரியர் எதையாவது வாசிக்கச் சொன்னாலோ அல்லது கேள்வி கேட்டாலோ என் நாக்கு புரள மறுக்கிறது. வார்த்தைகள் சிக்கி விடுகின்றன. என்னுடைய கூச்சத்தால் பொது இடங்களிலும் எனக்கு பெரும் அசௌகரியமாக இருக்கிறது. தனிமையிலேயே அதிகமாக இருக்கிறேன். இந்த நிலையில் இருந்து வெளிவர உங்கள் ஆலோசனையை எதிர்பார்க்கிறேன்.

தனிமையில் சில நிமிடங்கள்....

வணக்கம் கார்த்திக்,

நிச்சயம் உங்களுடைய இந்தக் கேள்வி உங்களுக்கு மட்டுமன்றி பலருக்கும் உபயோகமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

கூச்சம் அல்லது வெட்கம் என்பது பொதுவாக எல்லோருக்கும் இருக்கக்கூடியதே. ஆனால், சமூகத்தில் அகமுக நோக்காளர்கள்(introverts) மட்டுமே கூச்சசுபாவமுடையவர்கள் என்று எண்ணப்படுகின்றனர். ஆனால், அது முற்றிலும் தவறான கருத்து.எல்லோரிடமும் இருக்கும் கூச்சம் சந்தர்ப்பங்களிலும் விகிதாசாரத்திலும் ஆளுக்காள் வேறுபடுகின்றது என்பதே உண்மை. சொல்லப் போனால்,எனக்குள் கூட அதிகப்படியான கூச்சம் இருக்கிறது. பலர் முன்னிலையில்ல் எழுந்து நின்று ஒரு சிறு கேள்வி கேட்பதற்கு முன்னர் என் இதயம் அடித்துக் கொள்ளும் வேகம் எனக்கு மட்டுமே புரியும். ஆனால், என்னுடன் பழகுபவர்கள் இதை நம்பவோ ஏற்கவோ மாட்டார்கள். என்னைப் போன்றவர்கள் வெளிப்படுத்திக் கொள்வதில்லை. நீங்கள் வெளிப்படுத்தி விடுகிறீர்கள். அவ்வளவு தான் வித்தியாசம். எனவே இது உங்களுக்குள் இருக்கும் மிகப்பெரிய பின்னடைவாக நீங்கள் நினைக்க வேண்டியதில்லை.அத்துடன் இதிலிருந்து நீங்கள் வெளியில் வருவதும் இதனால் ஏற்படும் அமைதியான சுபாவத்தை நீங்கள் நல்லவழியில் பயன்படுத்தவும் வழிகள் உண்டு. அவை பற்றித் தொடர்ந்து நோக்கலாம்.

இதற்கு 3 பிரதான காரணங்களை உளவியலாளர்கள் சொல்கிறார்கள்.

1. அளவுக்கதிகமான தன்னுணர்வு (Excessive Self-Consciousness ) – சமூக சூழ்நிலைகளில் உங்களைப்பற்றி அளவுக்கு மீறிக் கவலைப்படுதல்
2. அளவுக்கதிகமான எதிர்மறையான சுய மதிப்பீடு (Excessive Negative Self-Evaluation ) - உங்களைப் பற்றிய தாழ்வான கருத்து
3. அளவுக்கதிகமான எதிர்மறையான சுய முன்னீடுபாடு (Excessive Negative Self-Preoccupation )– பலர் முன்னிலையில் நீங்கள் செய்யக்கூடிய தவறுகளைப் பற்றி முன்கூட்டியே அளவுக்கு மீறி கவலைப்படுதல்

கார்த்திக், மேற்குறிப்பிட்டவற்றில் ஏதோ ஒன்றில் நீங்கள் அடங்குவதை இனங்காண முடிகிறதா?

கூச்ச சுபாவம் என்று பொதுமைப்படுத்தாமல், உங்கள் பிரச்சனை என்ன என்பதை நீங்கள் இனங்காண முன்வர வேண்டும்.

தன்னுணர்வு அதிகமாக இருப்பதை உணர்ந்தால் அதை உங்களைப் பற்றிய விழிப்புணர்வாக மாற்றிக் கொள்ளலாம். தன்னைப் பற்றிய சரியான புரிதலே வாழ்க்கையின் பெரும் மாற்றங்களுக்கு முதல்படி.நீங்கள் எந்த எந்த சந்தர்ப்பங்களில் கூச்சமடைகிறீர்கள் என்பதை அவதானியுங்கள்.

அவற்றை ஒரு குறிப்புப் புத்தகத்தில் குறித்துக் கொள்ளுங்கள். இது நீங்கள் அந்த சூழ்நிலைகளைப் புரிந்து கொள்ள அவசியமானது. உதாரணமாக, நீங்கள் மற்றவர்கள் முன்னிலையில் பேசுவதற்குக் கூச்சப்படுகிறீர்கள் என்பது தான் உங்களுக்கு உங்களைப்பற்றிய கணிப்பு. ஆனால் சற்று சிந்தித்துப் பாருங்கள்.உங்கள் குடும்பத்தினர் மத்தியில் நீங்கள் அப்படி உணர்ந்ததில்லை அல்லவா? அல்லது ஒரு நெருங்கிய நண்பன் முன்னிலையில் நீங்கள் அப்படி உணர்ந்ததில்லை அல்லவா? அப்படியானால், அதற்கு நீங்கள் காரணம் அல்ல. சூழ்நிலையே காரணம். எனவே அதை அறிந்து கொண்டால் நீங்கள் அந்தச் சூழ்நிலைக்கேற்றவாறு உங்களைப் பயிற்றுவித்துக் கொள்ள வேண்டும்.

உங்களிடம் இருக்கும் பலமான விடயத்தை இனங்காணுங்கள். நீங்கள் உங்களைப்பற்றிய எதிர்மறையான விடயங்களைப் பற்றி எண்ணுவதை விட்டு, சாதகமான விடயங்கள் எவை என்பதைப்பற்றி அவதானிக்க ஆரம்பியுங்கள். உதாரணமாக, பலர் கூடியிருக்கும் ஒரு இடத்தில் நீங்கள் அமைதியை விரும்புபவராக இருந்தால், அதை உங்கள் கூச்ச சுபாவத்தால் தான் என்றோ அல்லது பலவீனம் என்றோ எண்ண ஆரம்பிக்காதீர்கள். எல்லோரும் கலகலப்பானவர்களாக இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. அதை உங்கள் சாதகமான விடயமாக, அல்லது பலமாக எடுத்துக் கொண்டு உங்களைப் பற்றி ஆய்வு செய்யுங்கள். நீங்கள் அமைதியான சுபாவம் உள்ளவராக இருந்தால் அநேகமாக உங்களிடம் செவிமடுக்கும் திறன் (Listening Skill), அல்லது அவதானிக்கும் திறன் (Observation skill)அதிகமாக இருக்கலாம். அத்தகைய திறன் உங்களுக்கு மட்டுமன்றி சமூகத்துக்கும் பயனுள்ளதாக அமையும். உங்களுக்கு இத்திறன்கள் அதிகமுள்ளதை பரிசீலிக்க, ஏதாவது ஒரு வைபவ விழாவில் நீங்கள் அமைதியாக இருக்கும் போது ஒவ்வொருவராக அவதானியுங்கள்.அப்பொழுது ஏதோ ஒரு பிரச்சனையோடு ஒருவர் உங்களுடன் பேச ஆரம்பிக்கலாம். அப்பொழுது அவருடைய பிரச்சனையை செவிமடுக்க ஆரம்பியுங்கள். அந்த நபர் உங்களிடம் பல விடயங்களை வெளிப்படையாகப் பேச ஆரம்பிக்கிறார்கள் என்றால் நீங்கள் நல்ல செவிமடுக்கும் திறன் உள்ளவர் என்று புரிந்து கொள்ளுங்கள். அதற்கான மேலதிக தகுதிகளை வளர்த்துக் கொள்ளுங்கள். நாளடைவில் உங்களிடம் உங்களைப் பற்றி இருக்கக் கூடிய தன்மதிப்பு உயர்ந்திருப்பதைக் காண்பீர்கள்.

உங்கள் வகுப்பறையில் 30 மாணவர்கள் இருக்கிறார்கள் எனின், நீங்கள் எழுந்து நின்று வாசிக்கும் போது அல்லது கேள்விக்குப் பதில் கொடுக்கும் போது மற்றவர்கள் உங்களைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணுவதை தவிர்த்து விடுங்கள். அவர்களில் பலர் அடுத்து தாம் வாசிக்க வேண்டும் என்ற பதட்டத்திலோ அல்லது அடுத்த கேள்விக்கு தாம் பதில் சொல்ல வேண்டுமென்ற பதட்டத்திலோ இருப்பர். அதுபோல் தான் பொது இடங்களிலிலும். ஒவ்வொருவருக்கும் தமது பிரச்சனைகளைப்பற்றி எண்ணிக்கொண்டிருக்கவே நேரம் போதாது.அப்படி இருப்பவர்களை உங்கள் பதட்டமான செயற்பாடுகளால் தான் நீங்கள் அவர்களை உங்கள் பக்கம் ஈர்க்கிறீர்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். எனவே உங்கள் பதட்டத்தைப் போக்குவதற்கான வழிமுறைகளைக் கையாளுங்கள். (கீழே கொடுக்கப்படும் வழிமுறைகளை முயன்று பாருங்கள்.

உங்களை நீங்கள் அன்பு செய்ய, பாராட்டக் கற்றுக் கொள்ளுங்கள்.நீங்கள் செய்யும் ஒவ்வொரு விடயத்தையும் உங்களுக்குள் நீங்களே மெச்சிக் கொள்ளும் பழக்கத்தைக் கொண்டு வாருங்கள்.பௌங்களுக்கு நீங்களே ஒரு பாராட்டுக் கடிதமோ அல்லது ஒரு காதல் கடிதமோ கூட எழுதிப்பாருங்கள். நீங்கள் சந்தோசப்படும் காரியங்களில் நீங்களாகவே அடிக்கடி ஈடுபடுங்கள்.

*(விரைவில் படத்தில்)*

*போதுமே இது போதுமே*
*உன் விழிப் பார்த்த அந்த ஒரு நொடி…*

*வேண்டுமே அது வேண்டுமே …*
*உன் குரல் கேட்க்கும் அந்த மறு நொடி…*

*நீ இமை அசைக்கும் அசைவிலே …*
*கசந்த இதயம் அசைத்து மலர்த்ததே…*

*உன் விரல் பேசும் அழகிலே…*
*என் இதயம் இடம் மாறி நகர்ந்ததே…*

*போதுமே இது போதுமே… (2)*

*கனவினில் நான் தூங்கையில் …*
*உன் நினைவாக தான் இருக்கிறேன்…*

*நிஜத்திலும் நான் இருக்கையில்*
*உன் நினைவாகவே தவிக்கிறேன்….*
*போதுமே இது போதுமே ….(2)*

*தமிழரசி*

உங்களை நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள். நான் முன்பே குறிப்பிட்டது போல எல்லோரும் கலகலப்பாக பேசுபவர்களாகவோ, சத்தமாக சிரிப்பவர்களாகவோ இருக்கவேண்டும் என்பதில்லை. எனவே நீங்கள் எப்படி இருக்கிறீர்களோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ளுங்கள்.மாற்ற வேண்டும் என்று நீங்கள் நினைப்பதை மாற்றிக் கொள்ள வேண்டிய

முயற்சிகளை செய்யுங்கள். மற்றப்படி அதைக் குறித்து உங்களை நீங்களே குற்றஞ்சாட்டிக் கொள்ளாதீர்கள்.

பலர் மத்தியில் இருக்கும் போது உங்களைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்காமல், உங்களைச் சுற்றி உள்ளவர்கள் மீது உங்கள் கவனத்தைக் குவியுங்கள். அவர்களது நடை, உடை, பாவனைகள்,நடத்தைகள் என்பற்றை அவதானித்துக் கொண்டிருங்கள்.மற்றவர்களைக் கற்றுக் கொள்வதில் ஆர்வம் செலுத்துங்கள். ஒருவருடன் பேசும் போது அவரைப் பற்றிப் பேசச் சொல்லுங்கள். இத்தகைய செயற்பாடு உங்களைப்பற்றிக் கவலைப்படுவதைக் குறைப்பதுடன்,அதனால் ஏற்படக்கூடிய பதட்டத்தைத் தவிர்க்கும்.

*(விரைவில் படத்தில்)*

*காணாத கணக்கத்தை மீனப் போல*
*உன்னை காணாமல் கண்டேன் அடி*
*தானே நானே...!!!!!*

*பூவோடு சேர்த்து இருங்கும் நாரைப் போல*
*அடி உன்னோடு*
*சேரத்தானே ஆசை மானே ..!!!*

*உன்னோடு வாழும் உன் நிழல்ப் போல*
*என்னோடு நீ வாழ*
*நான் ஆசைப்பட்டேன் ...!!!*

*காற்றோடு வீசும் தென்றல்ப் போல*
*உன் மூச்சோடு வாழ*
*நான் ஏக்கம் கொண்டேன் ...!!!!!*

*இருள்ளான என் வாழ்வில் ஒளியாக நீயும்*
*விள்க்கேற்றத் தானே*
*உன்னை சுற்றி வந்தேன்...!!!!!*

*நான் வாழ்த்தாலும் வாழ என்*
*வாழ்க்கையே நீதானு*
*முற்றுப்புள்ளிப் போல ஒரு முடிவுக்கு*
*வந்தேன்...!!!!!*

*தமிழரசி*

அடுத்து உங்கள் பதட்டத்தைத் தவிர்க்க நீங்கள் மூச்சுப் பயிற்சி செய்யுங்கள். மூச்சை ஆழமாக உள்ளே இழுத்து, மெதுவாக வெளிவிடுங்கள். இதையே யோகாசன முறைப்படியும் செய்யலாம்.அதாவது மூச்சை உள்ளிழுக்கும் போது எண்ணிக்கை முறையில் உள்ளிழுத்து, அதே எண்ணிக்கையில் வெளிவிடலாம். உதாரணமாக 1 இலிருந்து 4 வரை எண்ணிக் கொண்டே உள்ளிழுத்தால், அதே எண்ணிக்கையில் வெளியில் விடலாம். இதை தொடர்ச்சியாக பல முறை செய்து விட்டு ஓய்வெடுக்கலாம். தனிமையில் இருக்கும் போதும், தனி அறைகளிலும் இதை தினமும் பயிற்சி செய்தால், பதட்டம் நீங்கும் எனக் கூறப்படுகிறது.

உங்களைப்பற்றிய உங்கள் எண்ணங்கள், அபிலாசைகளைக் காட்சிப்படுத்துங்கள். நீங்கள் கூச்சப்படும், அல்லது பதட்டப்படும் ஒரு சூழ்நிலையைக் கற்பனை செய்யுங்கள். அந்த இடத்தில் நீங்கள் ஒரு தன்னம்பிக்கையோடும் மகிழ்ச்சியோடும் இருப்பவராகக் கற்பனை செய்து அந்தக் காட்சியை உங்கள் மூடிய கண்களுக்குள் கொண்டு வாருங்கள்.இதை செய்யும் போது வசதியாக சாய்ந்து அமர்ந்தவாறு கண்களை மூடிக் கொண்டு அந்தக் காட்சியைக் காணுங்கள். அந்தக் காட்சியின் போது நீங்கள் அடையும் உணர்வுகள், காட்சிக்கேற்ற ஒலிகள், நறுமணம்,உங்கள் நகர்வு என எல்லா வகையான உணர்வுகளையும் கற்பனையில் கொண்டு வந்து, அந்தக் காட்சியை உண்மையான காட்சியாக உணருங்கள். இதையும் அடிக்கடி செய்யுங்கள். இது கொஞ்சம் முட்டாள் தனம் போலத்தோன்றினாலும் இது ஒரு மிகவும் வலிமையான பயிற்சி.மனதின் எண்ணங்களே எம்மை வலுப்படுத்துகின்றன.

மேற்கூறிய பயிற்சி போலவே இதுவும், உங்களுக்குள் நீங்களே தட்டிக் கொடுத்துப் பேசிக் கொள்வது. அல்லது ஒரு கூச்சமான, மற்றும் பதட்டமான மன நிலையை மறுத்து அதற்கு எதிரான வார்த்தையைத் திரும்பத் திரும்பக் கூறுதல். உதாரணமாக, நாளைக் காலையில் பாடசாலைக்குச் செல்லும் போது “இன்றைக்கு நான் யாருக்கும் பயப்படப்போவதில்லை. யார் என்னைப் பார்த்து சிரித்தாலும் கவலைப்படப்போவதில்லை. நான் கற்பதற்காகவே செல்கிறேன்.அதனால் பிழை விட்டு படிப்பதில் எனக்கு எந்த சங்கடமும் இல்லை”போன்ற வார்த்தைகளைத் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டே இருங்கள். இப்படிச் சொல்வதன் மூலம் உங்கள் ஆழ்மனதை மாற்றிவிட முடியும் என ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். முரண்டுபிடிக்கும் உங்கள் மனத்தையே நீங்கள் ஏமாற்றிவிடலாம். எனவே இந்தப் பயிற்சியை எல்லா சூழலுக்கும் ஏற்ப நீங்கள் பயிற்சி செய்யலாம்.

அசௌகரியமான சூழ்நிலையில் நீங்கள் மாட்டிக் கொள்ளும் போது அந்த இடத்தை விட்டு வெளியே போய்விடத் தோன்றும். ஆனால்,போகாதீர்கள். சூழ்நிலையை எதிர்கொள்ளுங்கள். அப்பொழுது தான் அந்தச் சூழ்நிலைகளை நீங்கள் பழக்கப் படுத்திக் கொள்ள முடியும்.இத்தகைய சூழ்நிலையை உங்கள் ஆராய்ச்சிக்கேற்ற இடமாக மாற்றிவிடுங்கள்.

உங்களை நீங்கள் நிதானித்து ஆராயுங்கள்.இப்பொழுது எனக்கு இந்த சூழ்நிலை ஏன் அசௌகரியமாக இருக்கிறது?

எது என்னை வெளியே போகச் சொல்கிறது? நான் ஏன் வெளியே செல்ல வேண்டும்? என உங்களுக்குள் ஆராய்ந்து கொள்ளுங்கள்.

இதனால்,உங்களை ஆராய்வது மட்டுமன்றி சூழ்நிலை அவதானியாகவும் செயற்படுகிறீர்கள்.

மறுப்புக்களை ஏற்றுக் கொள்ளுங்கள். ஒரு கற்றலின் போது தவறுகள் ஏற்படுவது இயல்பு. எனவே சுட்டிக் காட்ட பட்ட தவறு தனிப்பட்ட உங்களைத் தாக்குவதற்காக அல்ல. மறுப்புக்கள் வருவது வாழ்க்கையில்/கல்வியில் ஒரு பகுதி என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இத்தகைய சூழ்நிலையில் உங்களுக்கு சுயபச்சாத்தாபம்(சுயபரிதாபம்) ஏற்பட்டால் அதனை உடனேயே இனம்கண்டுகொண்டு அதனை நீக்கி விடுங்கள்.சுயபரிதாபம் உடையவர்கள் வாழ்க்கையில் முன்னேற முடியாது.

எப்போதும் நாம் எம்மை மற்றவர்களோடு ஒப்பிட்டு நோக்கக் கூடாது.நாம் இயல்பாக காரணமேயின்றி பிரபலமானவர்களை எம்முடன் ஒப்பிட்டு நோக்குவதுண்டு. ஆனால் நாம் அவர்களைப்போல் இருக்க முடியாது. நமக்கென்று ஒரு தனித்துவம் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். தனித்தனி அச்சுக்களில் வார்க்கப்பட்ட பொம்மைகளைப் பாருங்கள். ஒரு பொம்மைக்குரிய அச்சில் வேறு அச்சில் வார்க்கப்பட்ட பொம்மையைப் பொருத்த முடியாது.அப்படித்தான் நாமும். எனக்கு உங்களைப்போல் பேசத் தெரியாது,எனக்கு அவனைப்போல் பாட வராது, எனக்கு அவர்களைப்போல் சிரிக்கத் தெரியாது என்றெல்லாம் மற்றவர்களோடு ஒப்பிடுவதை விடுத்து,நான் மற்றவர்களை விட வித்தியாசமானவன். என்னிடம் இருக்கும் பல விடயங்கள் மற்றவர்களிடம் இல்லை. அதனால் நான் தனித்துவமானவன் என்ற எண்ணத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள். இந்த எண்ணம் வலுப்படும் போது நீங்கள் மற்றவர்கள் முன்னிலையில் அடையும் கூச்சமும் பதட்டமும் இல்லாமல் போயிருக்கும்.

இதுவும் மேலே குறிப்பிட்டது போல் தான். உங்களை நீங்களே எதிர்மறையாக முத்திரை குத்திக் கொள்ளாதீர்கள். நான் கூச்ச சுபாவமுடையவன், எனக்குப் பயம், நான் பேச மாட்டேன், நான் சிரிக்க மாட்டேன், நான் எழுத மாட்டேன் என்று நீங்களே உங்களைச் சொல்லிக் கொள்வதால் அது ஆழ்மனதில் பதிந்து விடுகிறது. நீங்கள் நீங்கள் தான். 'உங்களுக்கென்று சில இயல்புகள் உண்டு' என்ற சிந்தனையோடு நிறுத்திவிடலாம் அல்லவா? மேலதிக சிந்தனை எல்லாம் எதற்கு?

பதட்டம் ஏற்படும் சூழ்நிலைகளில் உங்களுக்குள் மந்திரம் போல மூன்று கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருங்கள். இப்படிக் கேட்டுக் கொண்டிருப்பது, அந்த சூழ்நிலையில் இருந்து உங்கள் கவனத்தை திசை திருப்பும்.

நான் சீராக மூச்சு விடுகிறேனா?
நான் இயல்பாக இருக்கிறேனா?
இன்னமும் இயல்பாகச் செயற்படுகிறேனா?

நம்மால் முடியாது அல்லது தோல்வியடைந்து விடுவோம் என நினைக்கும் விடயங்களில் தலையிடுங்கள். இது உங்கள் கூச்சத்தை அல்லது பயத்தை நீங்கள் போக்க உதவும். இந்தக் காரியத்தில் நீங்கள் வெற்றியடையா விட்டாலும், நீங்கள் நினைத்த அளவுக்கு அது ஒன்றும் பூதாகாரமான பிரச்சனை இல்லை என்பதைப் புரிந்து கொள்வீர்கள்.ஒருவேளை முதலில் உங்கள் ஈகோ இதற்கு இடம் கொடுக்காது.ஆனால் பின்னர் அதை வெகு விரைவிலேயே விளையாட்டாய் எடுத்துக் கொண்டு சந்தோசமாய் இருக்க முடியும்.

எந்த நேரமும் நல்ல இருக்கை நிலையைத் தெரிவு செய்யுங்கள். பலர் இருக்கும் இடத்தில் நிமிர்ந்து இருத்தல், கைகளை விரித்து வைத்திருத்தல் போன்ற இருக்கை நிலைகளைத் தெரிந்து கொள்ளுங்கள். நிற்கும்போதும் வளைந்து நிற்காமல் நிமிர்ந்து நில்லுங்கள். யாருடனாவது பேசும் போது கையில் எதையும் வைத்து நோண்டிக் கொண்டிருக்காதீர்கள்.

கூச்ச சுபாவம் என்று முத்திரை குத்தப்பட்ட நிலையில் இருந்து நீங்கள் வெளியில் வரும்போது பல வெற்றிகளை அடைந்திருப்பீர்கள். நீங்கள் எங்கெல்லாம் வெற்றியடைந்தீர்கள் என்பதைக் குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள்.வெற்றிகளை மீண்டும் படிக்கும் பொழுது உங்கள் தன்னம்பிக்கை வளர்வது மட்டுமன்றி, உங்களுக்கு பயன் கிடைக்கக் கூடிய விடயங்களை நோக்கி உங்கள் கவனத்தை நகர்த்தும்

ஸ்ஸப்பா... எனக்கே முடியல... இவ்வளவு விசயம் செய்யணுமா... ஆனால் இவ்வளவையும் செய்தால் உங்களைப் போல ஒரு தன்னம்பிக்கையாளனை எங்கும் பார்க்க முடியாது.

நல்லது நட்பு நெஞ்சங்களே...

உங்கள் பன்முகக் கேள்விகளையும் எதிர்பார்க்கிறேன். கேள்விகளை poongothaichelvan8@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.



சுதா

© Sundar Narayanan

கும்மியடி பெண்ணே கும்மியடி
தமிழிலோர் பாட்டு பாடி
கும்மியடி பெண்ணே கும்மியடி ..!!!

சித்திரையும் பொறந்ததடி
சின்ன புள்ள உச்சியில
ஆங்கில உஷ்ணமும் ஏறுதடி
தணிக்க தமிழிலோர் பாட்டெழுதி
கும்மியடி பெண்ணே கும்மியடி ..!!!

வைகாசில வைபோகமும் காணலடி
விலைவாசியும் ஏறுதடி
விளைநிலத்தை வீடாக்காம
விவசாயத்தை வளர்ப்போமென
கும்மியடி பெண்ணே கும்மியடி ..!!!

ஆனியில ஊத காத்தும் வீசலடி
உச்சி வெயிலும் தணியலடி
ஊரோரம்
மரமொன்ன நடுவோமென
கும்மியடி பெண்ணே கும்மியடி ..!!!

ஆடிப்பட்டம் வந்ததடி
அரசியல் வெள்ளமும் ஓடுதடி
அதிலே
நல்லதொரு ஆட்சியை விதைப்போமென்று
கும்மியடி பெண்ணே கும்மியடி ..!!!

ஆவணியில புது நாத்தும் சாகுதடி
பூமியெல்லாம் மாசுதானடி
மண்ணை பொன்னாக்க
மாசெல்லாம் நீக்குவோமென
கும்மியடி பெண்ணே கும்மியடி ..!!!

புரட்டாசி விரதமெல்லாம்
துரிதமாக முடியுதடி துரித உணவிலே
அகமும் புறமும் அழகாக
மாதமொரு விரதமெடுப்போமென
கும்மியடி பெண்ணே கும்மியடி ..!!!

ஐப்பசி அடைமழையும் பொழியலடி
பொழிந்ததெல்லாம் போகுதடி வீணாக
சேகரிக்க குளமொன்னு வெட்டி
கும்மியடி பெண்ணே கும்மியடி ..!!!

இல்லத்தில் இன்பம் பொங்கிட
கார்த்திகையில்
வீடெங்கும் விளக்கேற்றி
கும்மியடி பெண்ணே கும்மியடி ..!!!

மங்கையரே மார்கழியில
மணி எட்டு வரை தூங்காதிங்க
அதிகாலையிலே துகிலெழுந்து
அழகு கோலமொன்னு போட்டு
கும்மியடி பெண்ணே கும்மியடி ..!!!

தை பிறந்தும்
தமிழினத்துக்கு வழி பிறக்கலடி
போராட
தமிழர்களை ஒன்று திரட்டி
கும்மியடி பெண்ணே கும்மியடி ..!!!

மாசியில் மாலையிட்டு
மறுநாளே விவாகரத்து கேக்காதிங்க
அன்போடு பேசி
ஆனந்தமாக வாழ்வோமென்று
கும்மியடி பெண்ணே கும்மியடி ..!!!

பங்குனியில்
பழந் தமிழ் பண்பாட்டிலே
ஊரெங்கும் விழாவெடுத்து
தெருவெங்கும் தேரோட்டி

கும்மியடி பெண்ணே கும்மியடி
தமிழிலோர் பாட்டு பாடி
கும்மியடி பெண்ணே கும்மியடி ..!!!

# இறைவா

கனகீஸ்



என் இதய வலிகளை வார்த்தைகளாக்கி
எழுத நினைக்கிறேன் கவிதையாக....
அவை கண்ணீர் வரிகளாய் காட்சி அளிக்கிறதே
என நீ காணாமல் இருந்துவிடாதே இறைவா...

☆

நான் பிறந்த இடம் விட்டு பிடிங்கி
நட்ட போது வாடித் தான் போனேன்.....
ஆயினும் என் வாட்டம் போக்கிய என் வீட்டு
படிக்கட்டுடன் எனக்கு உறவில்லையாமே....

☆

நான் சாய்ந்து நின்று கதை பேசிய தூணுக்கும்
நான் வண்ணமிட்டு அழகுபடுத்தி பார்த்தேனே
அதன் வண்ணம் காயும் முன் யாருக்கோ
சொந்தமாகிப் போய்விட்டதென்ன நியாயம்?....

☆

என் அம்மாவின் புகைப்படமும் கழட்டி
வீசப்பட்ட போது நான் கதறித் துடித்தேனே
அப்போதும் நீ கல்லாய் நின்று வேடிக்கை
பார்த்த தென்ன கருணையே இல்லாமல்.....?

☆

என் அழுகுரல் மொத்தமாய் சேர்த்து
வைத்திருக்கும் என் அறைக்கும்
எனக்குமான பந்தம் இனி அறுக்கப்படப் போகிறதே
சுவற்றில் நீ தொங்கியென்ன சாதித்தாய்?

☆

"யாமிருக்க பயமேன்" என நீ சிரித்தபடி
இருப்பதனால் நான் அழும் குரல் உன்
செவிகளில் எட்டாமலே போனதுவோ?.....
ஏனிந்த சோதணை என்னிடம் உனக்கு?

☆

காக்கை குருவிக்கும் வசிக்க இருக்குதே
ஒரு கூடு _எனக்கு மட்டும் இனி இருக்க
போவதில்லையோ என் வீடு ? உன்னுடன்
நான் வந்திடுவேனோ தெருவோடு?

☆

வெறும் கல்லாகி நீ இருப்பதினால் தான்
நீ கடவுளாக மாறிப் போனாயோ?
நானும் கல்லாகிப் போவேன் போலும்
உன் கருணையில்லா இச்செயலால்....

☆

நான் நட்ட செடி பூக்கிறாதே அம்மா
அதை நாம் கொண்டு செல்ல முடியாதா?
என கேட்கும், என் மகளுக்கு என்ன பதில்
நான் சொல்வேன் என் இறைவா......

☆

என் மகன் மூன்று வயதில் கிறுக்கிய கிறுக்கலை
ஓவியமாய் சேர்த்து வைத்தேனே சுவற்றில்
அதை நான் இனி எப்படி எடுத்து செல்வேனோ
சொல் இறைவா என்னுடன்?

☆

நான் இன்னும் எத்தனை இன்னல்களை
கடப்பதென உன் சித்தம்? நான்
நீந்தக் கற்கவில்லை என தெரிந்தும் நீ
தண்ணீரில் தள்ளிவிட்டு பார்ப்பதுவோ உன் திட்டம்?

☆

வாசனை தரும் மலர்கள் சூடி மகிழ்ந்ததில்லை
பாசங்கள் தந்து நான் பூத்திடும் மலரானேன்
வாடி போவேன் என தெரிந்தும் என்னை
வாசலில் நிறுத்துவதோ தர்மம்...?

☆

என் வார்த்தைக்கு மட்டுமில்லை என்
வாழ்க்கைக்கும் நீ தான் பொறுப்பேற்கிறாய்
படைத்தவன் நீ இருக்கையிலே என் மேல்
பகை வளர்ப்பவர்க்காய் நான் பயந்திடபோவதில்லை.....

☆

துணிந்தே இறங்குகிறேன் வாழ்க்கை என்னும்
ஆழ்கடலில் துடுப்பாய் நீ இருப்பாய் என
நம்பி நான் படகில், கரை சேர்ப்பதும்
கல்லறை சேர்ப்பதும் இனி உன் கரங்களில் தான்
இறைவா.....

☆

# என் மழைத் தோழியுடன்.!

சுதா



நேற்று
ஊரெங்கும் கதவடைப்பு
தென்றலது ஜன்னலை தட்டிட
எட்டி பார்த்தேன் ..!!!!

☆

என் தோழியவள்
விண்ணுலக தேவதை
மண்ணுலகம் வந்திருந்தாள்..!!!

☆

மகிழ்ச்சியில் மயிலாகி
தோகை விரித்து ஆடினேன்
ஆனந்தத்தில்
அகவை குறைந்தது கணிசமாக
பத்து வயது
பட்டாம் பூச்சியானேன்..!!!

☆

சிறகடித்து
கட்டியணைத்தேன் நெஞ்சோடு
அள்ளி முத்தமிட்டேன்
அவளின் கோள உடலெங்கும்..!!!

☆

தொட்டால் சிதைந்து போகும்
பளிங்கும் மேனி பாவையவள்
பிரம்மன் படைக்காத அதிசயமே..!!!

☆

வானுக்கும் பூமிக்கும்
நீர் பாலமமைத்து
நிலமகளை நீராட்ட வந்த
திரவ தேக முத்தவள்..!!!

☆

பயண களைப்பிலே
படுத்துறங்கினாள்
பூமகளின் மடியிலே..!!!
நொடியில் துயில் கலைத்து
புறப்பட்டாள்
கொஞ்சம் ஓய்வெடு என்றேன்..!!!

ஓய்வா ..?? எனக்கா..??

☆

நான்
வீட்டிலே அடைந்து கிடக்க
பூலோக கன்னியுமல்ல
படிக்கையிலே படுத்து கிடக்க
பொறுப்பில்லா பாலகனுமல்ல

படி தாண்டி வா என்னோடு
கடமைகள்
மலையாய் குவிந்துள்ளதென்று
கனத்த குரலில்
கன்னத்தில் அறைந்தாள் ..!!!

புறப்பட்டேன் அவளோடு..

☆

வழியில் நின்ற தடைகளை
உளியின்றி உடைத்து
தன்னோடு கட்டியிழுத்து
சீறிப் பாய்ந்தோடினாள்..!!!

☆

மனித கிருமிகளால்
தாவரங்களுக்கு இரத்தசோகை
வேர்களில் ரத்தமாய் பாய்ந்து
நோய் தீர்த்தாள்..!!!

☆

வெட்டிய மரத்தின்
உயிரில்லா விதைகளுக்கு
தன்னை மண்ணில் மரித்து
உயிர் கொடுத்தாள் ..!!!

☆

குளம் குட்டைகளில் நிரம்பி
பாலையான விவசாயின்
கண்களை சோலையாக்கினாள்..!!!

☆

கட்டியிழுத்து வந்ததை
தங்க துகளாக்கி
கரையெங்கும் தூவி
கடல் அன்னையோடு கலந்தாள்..!!!

☆

கடமை முடியவில்லை
மேக கன்னிகளோடு
மீண்டும் வருவேனென்று

பருதியின் பார்வையிலே
உடன்கட்டை ஏறி
ஆவியாகி பறந்தாள்..!!!

☆

கடற்கரையில் தனி மரமாய்
நின்றிருந்தேன்
தோழியவளின் வருகைக்காக..!!

☆

# நீயும் நானும்

விடிகாலைப் பொழுதில்

ஆதவன் கதிர்க் கரங்கள்
நீட்டித் துயில் எழுப்பவே

விழி திறந்த நிமிடமதில்
நிழலாடும் உன் முகம்
ஏக்கத்தின் காத்திருப்பு

நினைத்த நிமிடத்தில்
விழிகளில் துளிர்ப்பாய்
கனவில் கூட இருப்பாய்

முகர்ந்து நுகர்கிறேன்
மணமாய் உணர்கிறேன்
மயங்கியே மறுகினேன்

உன்னை மறக்கவே
புதைத்து மறைக்கிறேன்
முளைத்துப் பரவுகிறாய்

தனிமையில் யுத்தமின்றி
விலகுகிறேன் இதயத்தில்
சத்தமின்றி துடிப்பாய் நீ

மனம் உன்னிடம் ஓயாமல்
கொட்டித் தீர்ப்பதால் வாய்
வார்த்தைகள் மவுனமாகிறது

வீட்டு வாசலில் உப்பு
படிந்திருப்பதாக பலர் புகார்
தெளித்தது விழி நீர் அல்லவா

உன் நினைவின் ஆனந்தமும்
உன் பிரிவால் வரும் வலியும்
தருவது கண்ணீர் மட்டுமே

அஞ்சுகிறேன் என் கண்ணீரில்
மூழ்கியே மூச்சடைத்து
செத்து விடுவேனோ என்று

வரத் துடிக்கும் வார்த்தைகளை
நசுக்கி நசுக்கியே ஒருநாள்
குரல்வலை நசுங்கிச் சாவேன்

உன் நினைவு ஜுவாலைகளாய்
என்னைச் சுற்றிச் சூழ்ந்தாலும்
விரும்பியேக் கருகிச் சாவேன்

வாழச் சேர்ந்த உறவல்ல
வாடிப் போக நாம் மலரல்ல
ஒரு துடிப்பின் இரு உயிர்கள்

விழிகள் கண்ணீரை ருசித்து
உயிரின் தாகம் தீர்த்துவிடும்
பார்வைகள் பசியாற்றிவிடும்

நினைவும் கனவும் மட்டுமே
நம் உறவைத் தாலாட்டி
மடியில் உறங்க வைக்கும்

தூய்மைக்குத் தாய்ப்பாலாம்
மாசில்லா அன்புக்கு நாம்
நானும் நீயும் மட்டுமே ......

**- பாண்டிமா -**

# தலை வணங்கும் தாவரங்கள் !

காரை சீனு

**இயற்கையின் காதலன்**
**"நம்மாழ்வார்க்கு"**

இயற்கையின் காதலனே
இறந்துவிடவில்லை நீ !.
மண்ணின் கருவறைக்கு
மறுபடியும் சூலாய்
எப்போது முளைப்பாய் - நீ
என
தாவரங்கள்
தலைகுனிந்து
நிற்கின்றன !

✯ ✯ ✯

மருந்து புகட்டும்
மனிதர்கள் மத்தியில்
தாவரங்களுக்கு
தாய்ப்பாலை அளித்த
தலைமகன் !.

✯ ✯ ✯

உயிர் கொல்லிகளுக்கு எதிரான
ஒற்றை சூரியனும்
உதிர்ந்து போய்விட்டது !.

✯ ✯ ✯

இயற்கையை நேசிக்க
சொன்னாய் !
இயல்பில் வாழச்
சொன்னாய் !



விளைவிப்பதற்குகூட
விஞ்ஞானம்
வேண்டாம் என்றாய் !.
உயிரி விஞ்ஞானம்
உதவாது என்று
சொன்னாய் !.
பி. டி. பருத்தியும்,
பிறகு கத்திரியும்
தவிர்ப்போம் என்றாய் !.

✯ ✯ ✯

வயல்களை கீறி
வழி அமைப்பதை எதிர்த்தாய் !
கான்கீரிட்
கல்லறைகள்
விதைகளின்
மயானம்
என்றாய் !.

✯ ✯ ✯

கழனிகள்
கழிவுகால்வாய் அல்ல,
உயிர் வளர்க்கும்
கருவறை என்றாய் !.

✯ ✯ ✯

எண்ணை வழித்தடங்களுக்கு
எதிராய்
என்னையே எடுத்துக்கொள்
என்றவரே !.

✯ ✯ ✯

மண்ணை நேசித்த மகானே !
மண்ணே புசித்துவிட்டது !.
எங்கள் பாரம்பரியத்தின்
விதை - புதைக்கப்படவில்லை !
விதைக்கப்பட்டிருக்கிறது !!
வீறுகொண்டு எழும்
விருட்சங்களாய் !!!.

✯ ✯ ✯

உமது கொள்கை
வேர்பிடிக்க,
உமது பாதம்
பணிந்து
வணங்குகிறோம்
உம்மை !!.

✯ ✯ ✯

# பொங்கல் கவிதைகள்

## புத்தாண்டுப் பொங்கல்...

செந்தமிழ்தாசன்

வந்தது வந்தது தைப்பொங்கல்
மாவிலைத் தோரணம் கட்டி
கூரைப்பூ ஆவரம்பூ வேப்பந்தலை
சேர்த்துக்கட்டி
இல்லத்தில் சூட்டி
உள்ளத்தில் மகிழ்வு பொங்கும்
தமிழனின் பொங்கல்..

மனை அலங்கரித்து
பூசணிக்கோலம் வாசலில் இட்டு
மணம் கொண்ட மஞ்சள்
சுவை கொண்ட செங்கரும்பு
எடுத்து வந்து கதவில்சாத்தி
பரம்பரை வழிவந்த
பாரம்பரியப் பொங்கல்..

❖ ❖ ❖

தான்நின்று உலகியக்கும்
சூரியனின் வசந்த
அறிவிப்பு பொங்கல்..
ஏர்முனை தன்னில் தன்
வியர்வைத் தீர்த்தமிட்டு
உலகெல்லாம் உணவு தர
பயிர்செழித்து அறுவடை செய்யும்
உழவனின் பொங்கல்..

நித்தம் உழைத்து
உழவனின் தோழனாய்
தன்வீட்டு உறவாய் வாழும்
ஜீவனின் பொங்கல்..

❖ ❖ ❖

புத்தாடை உடுத்தி
புதுப்பானை தன்னில்
வண்ணக்கோலமிட்டு
புத்தரிசி அதிலிட்டு
சர்க்கரை கலந்தது போல்
வாழ்வில் இன்பம் சேர்க்க
பொங்கும் நேரம்பார்த்து
பொங்கலோ பொங்கல் யெனகூவி
இயற்கையெனும் இறைவனுக்கு
படைத்து தானுண்டு மற்றோருக்கும்
உற்றாருக்கும் தரும்
சமத்துவப் பொங்கல்..

❖ ❖ ❖

வீரம் நிலைநாட்டி
விளையாட்டுகள் ஆடிமகிழ்ந்து
பரிசுகள் பெறும்
வீரப் பொங்கல்..

பொங்குக பொங்கலே
இல்லத்தில் செல்வம்
பெருக ஏற்றமுடன்
கொண்டாடுவோம் இந்த
தமிழர் புத்தாண்டுப் பொங்கல்..

❖ ❖ ❖

இன்றைக்குத் தைப்பொங்கல் என்றாச்சு!
என்றைக்கும் இனிக்கும் பொங்கலாச்சு!
மழை தந்தவனுக்குப் பொங்கலாச்சு!
நெல் விளைந்ததுமே பொங்கலாச்சு!

பொங்கல் நாளே எங்கள் நாளாச்சு
பொங்கல் நாளே உழவர் நாளாச்சு
பொங்கல் நாளே புத்தாண்டு ஆச்சு
பொங்கல் நாளே தமிழர் நன்நாளாச்சு

எங்க தையே பிறந்த நாளாச்சு
நம்ம தமிழுக்கு முதல் நாளாச்சு
புத்தரிசி போட்டுப் பொங்கும் நாளாச்சு
ஞாயிற்றுக்கு நன்றி கூறும் நாளாச்சு

முற்றம் மெழுகுவது அப்பா ஆச்சு
கோலம் போடுவது அம்மா ஆச்சு
பொங்கிப் படைப்பதும் இருவரும் ஆச்சு
ஞாயிற்று வரவோடு நிறைவும் ஆச்சு

படைத்த பொங்கலை உண்பதும் நாமாச்சு
நன்நாளில் நல்லது செய்வதும் நாமாச்சு
உறவோடு அன்பைப் பகிருவதும் நாமாச்சு
நண்பரோடு சேர்ந்து மகிழ்வதும் நாமாச்சு

- யாழ்பாவாணன் -

## பொங்கடா தம்பி பொங்கு!

பூங்கோதை



கால்வயிற்று கஞ்சியுண்டு
கால்மிதித்து சேற்றினிலே
நாள் முழுதும் உழைப்பவர்க்கு
நன்றி சொல்லும் திருநாளாம்!

உதிரத்தை வியர்வையாக்கி
உரமாக்கி பயிர் செழிக்க
புதிரெடுத்து பொங்கலாக்கி
பகிர்ந்துண்ணும் திருநாளாம்!

❖ ❖ ❖

பெருமைதரும் தமிழர்க்கோர்
பெருநாளாய்இது இருக்க
பலருக்கு மறந்து போச்சு
பண்பாடும் தொலைந்து போச்சு!

ஆங்கிலேயன் புத்தாண்டு
அனைவருக்கும் பொதுவாச்சு
தங்கத் தமிழன் தைத்திருநாள்
தனி மதத்தின் சடங்காச்சு!

❖ ❖ ❖

சங்கடமே இல்லாமல்
இங்கிலீசில் பொங்கல் வாழ்த்து
எங்களுக்கும் பொங்கலோ என
சந்தேகத்தில் பலருண்டு!

கருத்துணர்ந்து பொங்கல் பொங்கும்
காலமின்று மாறிப்போச்சு !
பெருமையோடு பொங்கல் வைத்த
பெரும் பண்பு மறைந்து போச்சு!

❖ ❖ ❖

அடுத்தவீட்டு பொங்கல் உண்ண
என்பிள்ளை போகுமென்று
அதற்காக சிறுபானை
அடுப்பினிலே ஏறலாச்சு!

ஆங்கிலேயப் புத்தாண்டில்
சரக்கடித்து செலவு போச்சு
அடுத்துவரும் பொங்கலுக்கு
அரிசி வாங்க பணமில்லை!

❖ ❖ ❖

வந்தவரின் கால்தொழுதோம்
வந்தவழி மறந்து போனோம்
செந்தமிழன் மதிகலங்க
சொந்தநிலை தளர்ந்து போனோம்?

வேட்டி கட்டி வாடா தம்பி
பொங்கல் வைக்க வேண்டுமென்றால்
வெட்கப்பட்டு வெளியில் வரானாம்
பிள்ளைக்காரன் பேரனோஇவன்?

❖ ❖ ❖

பொங்கடா தம்பி பொங்கலைப்பொங்கு !
பொய்த்திடாப் பண்பை காத்திடப்பொங்கு! -தை
திங்களில் முதல் நாள் முற்றத்தில் பொங்கு !
தங்கத்தமிழ் தினம் நாவிலே பொங்கு !

தமிழர் பண்பு மறைத்த கங்குல்
தானாய் விலகும் துணிந்து பொங்கு !
மானமும் வீரமும் நெஞ்சில் கொண்டு
அறத்தமிழ் உரைத்த நெருப்பாய் பொங்கு !

❖ ❖ ❖

அன்னை மண்ணிலும் அன்னியம் போர்த்து
தன்னிலை மறந்தவர் பேடிமை போக்க
உண்மைத்தமிழனின் உயர்வினைக்காட்ட
உயிர்ப்புடன் மாபெரும் அலையெனப்பொங்கு!

நெஞ்சுதனை நிமிர்த்து நின்று
நான் தமிழனென்று பொங்கு !வஞ்சம் கொண்டு
அழித்த பகைவர்
வாய்பிளந்து வியக்கப்பொங்கு!

❖ ❖ ❖

இமயம் முதல் ஈழம் வரை
இசைத்த தமிழ் வாழப்பொங்கு!
இனியும் எங்கள் பெருமைப்பேண
இன்றே உறுதி கொண்டு பொங்கு!

மாண்டு போகிலும் மானம் பெரிதென
மாண்டவர் மேன்மை உணர்த்தப்பொங்கு
ஆண்ட பரம்பரை அடிமை ஆனதால்
சீண்டிய சிறுத்தையாய் சினந்து பொங்கு!

தங்களைத்தமிழராய் எண்ண மறந்தவர்
கண்கள் திறக்க தரணியில் பொங்கு!
மங்கலம் இழந்த தமிழனின் வாழ்வில்
மங்கள ஒளியை ஏற்றப்பொங்கு!

கங்குல் = இருள்

❖ ❖ ❖

# கவிதைக்குறள் திருக்குறள் தெளிவுரை

செந்தமிழ்தாசன்

## அறம்-பாயிரம்-முதல் அதிகாரம், கடவுள் வாழ்த்து

5. இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

இமை முடித்திறந்த
இருள் வெளிச்சமாய்
தீதென்றும் நன்றென்றும்
வினைஇரு கொள்ளா
இறைவன்....

மதிபிறழ்ந்த மாந்தர்தம்
நெறிபிறழ்ந்த வார்த்தைகள் - அடியார்தம்
பொருள் கொண்ட
சொற்போல் இல்லாதும்
மெய்நிறை இறையவன்
புகழிடம் சேராதும்
வெற்றாய் போய்விடும்.........

இறைமெய்கீர்த்தி நாடும்
அன்பர்

தெளிசொல்லாய்

தெளிந்து இறைமைக்குள்
அவ்விருவினை
அணைக்கா வரத்தால்
திளைப்பரே.......

6. பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ
ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்

இச்சைகள் நாடும்
சுவையது சுவைக்கும்
இனியது கூறா
கண்டதும் காணாததும்
கண்டு காட்சிப்படுத்தும்
தீயது வாங்கி
தீஞ்செயல் செய்யும்
நாற்றம் நாடும்
எதிர்நாற்றம் சாடும் -
இவ்வழி
ஆகும் ஐந்தவா வெறுத்தகற்றி
மெய்மை ஒழுக்கத்தில்
நிலைநின்று களித்திருப்போர்
நிலவுலகில் இறப்பினும்
பிறப்பாய் வாழ்வரே.......

7. தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க்
கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது.

தன்நிகர் தரணியில்
தேடும் மாந்தரே
நின்னிகர் கண்டால்
மனம் நில்லாது
கொள்ளுமே!..

தானென்றும் பிறரென்றும்
அதுவென்றும் இதுவென்றும்
காணாத
என்றும் நிகரில்லா
இறைவன் - அவன்
காலடி மனம் கனிந்து
சேராது போய்விடில்
மனத்துயர் தீராது நின்று
மாற்றம் உள்ள
வாழ்வு மாறாது
போய்விடுமே...

8. அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது.

எப்பிறவி எடுத்திங்கு
இப்புவியில் பிறப்பினும்
அப்பிறவிப் பெருங்கடல்
நீந்திக் கரைசேர
மரக்கலமாகும் அறமே!

பெரும்புயல் வந்தீங்கு
பேய்க்குணம் காட்டிடுமே
அறமெனும் அந்தமில்லா அவன்
தா`மத்தின் தாள்தனை பணியாது
நின் பாதை தெரியாதே...

இறையஅவன் வழிநீர்
தொழுது நின்றால்
அப்பிறவில் எக்கடலும்
கடக்கலாகும் அருள் பெறுவீரே...




## அறத்துப்பால் - பாயிரவியல் அதிகாரம் - 02. வான்சிறப்பு

சுந்தர் புருஷோத்தமன்

**11:** வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று.

வானின்று பெய்யும் மாரி – வந்திங்கு
பாருய்ய பரவிபின் வற்றாத வளம் சேர்க்கும்
நாநிலத்தில் வீழ்வதது நீரல்ல – மாந்தர்தம்
வாழ்வுய்ய வருவதினால் அமிழ்கின்ற அமிழ்ததுவாம்

**12:** துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

தரையினில் தானேயிறங்கும் - தரணியின்
உயிர்க்கெல்லாம் உணவாக்கும் உத்தமஞ்செய்யும்
உண்பார்க்குத் தானுமோர் உணவென்றே யுருமாறி
உன்னதஞ் செய்யும் மாரி

**13:** விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி.

தண்ணீரிரைய விரிந்திலங்கும் ஆழி – அது சூழ்ந்த
மண்ணில் வாழ் உயிர்க்கெல்லாம் உணவாக்கும்,
விண்நீர்ப் பொய்த்தால் பொறுக்காமலே வந்து
இன்னல் தருமிங்கே பசி

**14:** ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

மாரி பொழிதல் மண்ணுக்கு நன்றாம் - மாற்றாக
பொழியும் வளமது குன்றின்
ஏர்பூட்டிச் செய்யும் உழவது குன்றும் - பின்
உழவால் பெருகும் உணவதும் குன்றும்.

**15:** கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்
றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

பெய்யாமற் பொய்த்து - நிலந்தனில்
உய்வார்தம் வாழ்வதைக் கெடுக்கும்
கெட்டார்க்கு நன்றாகப் பெய் தவர்தம்
வாழ்வினிலே வளம்மிக கொடுக்கும் மழை

**16:** விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது.

மேகந்திரள பெய்கின்ற மாரி
பெய்யாமற் பாரிதில் பொய்த்துப் போயின்
உய்யாமல் நோகும் உலகத்து உயிரெல்லாம்
பயிரெல்லாந் தரணியில் தளிர்த்தோங்கல் அரிதாமே

**17:** நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின்

ஆடு மலைகடல் நீரதைப் பருகும் மேகம் – பின்னதன்
தாகம் தணிந் தது கடலதிற் பெய்யவும் பொய்ப்பின்
தேயுங் கடலதின் ஆழம் – தேய்ந்தது
ஆகும் அளவது கடுகளவாமே.

**18:** சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு

வான்மழை குன்றின் வளமது குன்றும்
வளமது குன்றின் வாழ்வது குன்றும்
வாழ்வது குன்றின் குன்றும் வழங்கலும்,
வானதில் வாழ்வரை வழுத்தி

**19:** தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்
வானம் வழங்கா தெனின்

தாரை தடைபடின் தரித்திரஞ் சூழும்
தானந் தரணியில் தளிர்க்கா தொடுங்கும்
வானின் மழையது பொழிவதை மறுப்பின்
தவமதுமிங்கே தழைக்கை யரிதாம்.

**20:** நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு.

யாவர்க்கும் நீரிங்கே உணவாக்கும் காரணி
யாவர்க்கும் நீரிங்கே உணவாகும் உயிர்ப்பொருள்
யாவர்க்கும் நீரின்றேல் அரிதிங்கே உயிர்வாழ்தல்
நீருக்குக் காரணி, மழை.

# சிநேகிதியுடன் தனிமையில் சில நிமிடங்கள்

## 14 - இலக்கியத்தில் மட்டுமா பசலை நோய்?

பூங்கோதை



வணக்கம் நட்பு நெஞ்சங்களே

சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறா
நோயும் பசலையும் தந்து - திருவள்ளுவர்

காம நோயையும் பசலை நிறத்தையும் எனக்குக் கைம்மாறாக கொடுத்து விட்டு, என் சாயலையும் நாணத்தையும் அவர் என்னிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

என்ற திருவள்ளுவரின் களவியல் சிந்தனையோடு சிநேகிதிக்குள் பயணிக்கலாம் வாங்க.

வணக்கம் சகோதரி,

நான் ஒரு ஏழை குடும்பத்து பெண். எனக்கு 2 அக்கா 1 அண்ணா இருக்கிறார்கள். அப்பாவுக்கு அரசு வேலை உள்ளது. அவர் எங்களை சரியாக கவனிப்பது இல்லை. அவர் அம்மாவை விட்டு விட்டு வேறு பெண்ணுடன் தொடர்பு வைத்துள்ளார். அவர் இப்போது வீட்டுக்கு வருவதே இல்லை. என்னிடம் அன்பு காட்ட யாரும் இல்லை.

நான் ஸ்கூல் லைப்ல நல்ல சந்தோசமாவும் கலகலப்பாவும் இருந்தேன். ஆனா இப்போ தனிமையை மட்டும் விரும்புகிறேன். வீட்டில சின்னதா சண்ட போட்டாலும் அம்மா சாபம் போடுறாங்க, ரொம்ப திட்டுறாங்க. ஆனா அம்மா ரொம்ப நல்லவங்க தான். அம்மா இப்படி சாபம் போடும்போது எனக்கு அழுகை வருது. என்ன நானே தனிமை படுத்திகுறேன். ஃபேஸ்புக் யூஸ் பண்ணா ஃப்ரென்ட்ஸ்ங்க கூட பேசிக்கலாம்னு நெனச்சன். என்ன ஃபேஸ்புக் ல எல்லாருக்கும் புடிக்கும்.

நான் ஃபேஸ்புக் யூஸ் பண்ண ஆரம்பிச்ச அந்த டைம், ஒரு பையன் என்கிட்ட நல்ல பேசினான். அன்பா இருந்தான். என்ன லவ் பன்றதா சொன்னான். நான் ஃபாஸ்ட் எவ்வளவோ வேணாம்னு சொன்னன். கேக்கல, அப்புறம் நானும் சம்மதிச்சன். ஒரு 3 மாதம் கழித்து அவன் என் கூட பேசுறது இல்ல. எனக்கு எதையோ எழந்துட்ட மாதிரி இருந்துச்சு. கெஞ்சி பாத்தேன், கேக்கல. கொஞ்சம் நாள் அழுதேன். இப்போ கூட அவன என்னால மறக்க முடியல. வேற ஃபேஸ்புக் அக்கௌண்ட் யூஸ் பண்ணி அவங்க எல்லார் கிட்டயும் நல்ல நண்பியா பேசுனன். அப்போ, இனி யாரு லவ் சொன்னாலும் சம்மதிக்க கூடாது அப்படிங்குற உறுதியோட இருந்தன்.

யாராவது அழுதாலோ இல்ல கஸ்ட பட்டாலோ மனசு இளகிப் போயிருது. ஆனா எனக்கு அதிகமாவே பிடிவாத குணமும் இருக்கு. மாத்திக்க ட்ரை பண்றன், முடியல. இந்த ஃபேஸ்புக் யூஸ் பண்ணப்போ, போலீஸ் வேலைல இருக்குற ஒரு ஆள் என்கிட்ட பேசுனாங்க . அவரு ஏற்கனவே ஒரு பொண்ண லவ் பண்ணி இருக்காரு. ஆனா பொண்ணு வீட்ல சம்மதிக்கல. வேற மாப்ள பார்க்க ஆரம்பிச்ச ஒடனே அந்த பொண்ணு கிணறில் விழுந்து தற்கொலை பண்ணிகிட்டா. இவங்களும் சாகுறதுக்கு ட்ரை பண்ணி இருக்காங்க. அப்புறம் அவங்க நண்பர்கள் தடுத்து இருக்காங்க.

ஒரு நாள் என்கிட்ட லவ் பண்றதா சொன்னாரு. நானும் உடனே சம்மதிச்சிட்டன். யார் கிட்டையும் இனி சம்மதம் சொல்லக் கூடாதுன்னு இருந்த நான் எப்படி சம்மதிச்சன்னு தெரியல. என்கிட்ட நல்ல பேசுறாரு, பழகுறாரு. ஆனா மனசுக்குள்ள ஏதோ ஒரு குற்ற உணர்வு இருக்குற மாதிரி இருக்கு.

நாங்க மூன்று நாள் சந்திச்சு இருக்கோம். என்ன நல்ல அன்பா கவனிச்சுகிட்டாரு. நாங்க 2 பேரும் வேற வேற ஜாதிகாரங்க. என் அம்மா சம்மதம் இல்லாம அவர் கூட போய்ருவன்னு பயமா இருக்கு. வீட்ல சம்மதிகலன்ன இவங்கள ஏமாத்திருவனோன்னு பயமா இருக்கு. இன்னொரு பயம், இப்போ லவ் திருமணம் பண்ணிகிறவங்க எல்லாரும் திருமணத்துக்கு அப்புறம் சண்ட போட்டுகிறாங்க. அது மாதிரி என் லைஃபும் மாறிடுமோன்னு பயமா இருக்கு. என் மனசில ஏதோ குழப்பம் மாறி மாறி வருது. பைத்தியம் பிடிக்கும் போல இருக்கு. சில நேரம் இவங்கள விட்டு பிரியணும் போல இருக்கு. சிலநேரம் இவங்கள பிரிஞ்சா என ஆகுமோன்னு இருக்கு.

நான் சில நேரம் அவங்கள ரொம்ப கஷ்ட படுத்துறன். ஆனா அவங்க எதுவுமே சொல்ல மாட்டாங்க. ஏன் திட்டக்கூட மாட்டாங்க. நானும் சந்தோசத்த இழந்து

அவரோட சந்தோசத்தையும் நாசம் பண்ணிருவனோன்னு பயமா இருக்கு. பசங்க எல்லாரும் லவ் பண்றப்போ நல்லா பாத்துப்பாங்க. ஆனா திருமணம் ஆகின அப்புறம் வெறுத்து தள்ளுவாங்க. அது மாதிரி இவரும் இருப்பாரான்னு எனக்கு தெரியல. என் அப்பாவோட நடத்தையுடைய ஒரு பையன் எனக்கு கெடச்சா, நிச்சயமா எனக்கு என்ன ஆகும்னு தெரியல. எனக்கு ஒரு நல்ல வழி சொல்லுங்க ப்ளீஸ் ப்ளீஸ் ப்ளீஸ்ஸஸ..

தனிமையில் சில நிமிடங்கள்ஸஸஸ.

வணக்கம் தோழி,

காதலனை பிரிந்து பசலை நோய் கொண்டு வாடும் உங்கள் நிலமை எனக்குப் புரிகிறது. இருதலைக் கொள்ளி எறும்பு போல தடுமாறிக் கொண்டிருக்கும் உங்களுக்கு என்னால் இயன்ற ஆலோசனையைத் தருகிறேன்.

என் முகத்தை
தொலைத்தேன்
உன் முகம் வருமென்று
என் முகமே இருந்தது ....!!!

ஞாபகங்களுக்கு
ஒரு வீடு கட்டினால்
அதில் நீ ஒரு ஒட்டடை
தட்டினாலும் வருவாய் ....!!!

என் உள் மூச்சு நீ
அதனால் தான்
வாழுகிறேன் உனக்கு
நான் வெளிமூச்சானேன் ....!!!

- இனியவன் -

பேஸ்புக்கில் பல நல்ல விடயங்கள் நடைபெறும் அதே வேளை, அதிகளவான தீமைகளும் நிறைந்திருக்கின்றன. அதிலும் பேஸ்புக் காதல் என்பது இப்பொழுது சர்வ சாதாரணமாகிக் கொண்டிருக்கிறது. இதில் மனமுடைவுகளும் துன்பங்களுமே அதிகமாக ஏற்படுகிறது. ஏற்கெனவே ஒரு தடவை பேஸ்புக் காதலில் ஏமாற்றம் கண்ட நீங்கள் மீண்டும் ஒரு பேஸ்புக் காதலுக்கு இடம் கொடுத்தது ஆச்சரியமாக இருந்தாலும், உங்கள் குடும்பச் சூழ்நிலையால் உங்களுக்கு ஏற்பட்ட தனிமையே உங்களை இந்த நிலைக்கு கொண்டு சென்றிருக்கிறது என்று நினைக்கிறேன்.
முதலில் உங்கள் குடும்பச் சூழ்நிலையைப் பற்றிப் பேசலாம். தோழி, உங்கள் அம்மா உங்களைத் திட்டுவதனால் நீங்கள் வருத்தமடைவதாகக் கூறியிருக்கிறீர்கள். உங்கள் அம்மா ஏற்கெனவே தன் கணவனின் செயலால் மனமுடைந்த நிலையில் இருந்திருப்பார். அதனால் அம்மா அவங்களுடைய மன விரக்தியையும் வெறுப்பையும் வெளிப்படுத்த வழி தெரியாமல் அதை உங்களிடம் வெளிப்படுத்தலாம். அதனால் அதை நீங்கள் உரிந்து கொண்டு, பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உங்கள் பிரச்சனையை அம்மா புரிந்து கொள்ள வேண்டும் என்பதுபோல், அம்மாவின் பிரச்சனையையும் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்து இந்தக் காதல் வேண்டும் என்று சொல்லும் அதே மனது, இது சந்தோசமாக அமையுமா என்ற மிகவும் நம்பிக்கையற்ற தன்மையில் தடுமாறுவது புரிகிறது. அம்மாவை மீறிப் போகக் கூடாது என்ற மன நிலையும், ஜாதி தடையாக இருக்கும் என்ற பயமும் ஒரு பக்கம் இருக்க, அந்தக் காதலும் வேண்டும் என்று நினைக்கிறீர்கள்.

முதலில் உங்கள் மன நிலையை நீங்கள் சரிப்படுத்த வேண்டியது அவசியம். குழப்பத்தில் எடுக்கும் ஒவ்வொரு முடிவும் ஆபத்தில் கொண்டுபோய் சேர்க்கும். ஜாதி, மதம், பெற்றோரின் கௌரவம் என்பனவற்றில் தடுமாறும் காதலர்களுக்காக நான் ஏற்கெனவே இதே தளத்தில் எழுதிய பதிலைப் படித்து பாருங்கள் உங்களுக்கு ஒரு தெளிவு பிறக்கும்.

முதலில், தடுமாற்றத்தில் இருந்து வெளியில் வாருங்கள். நீங்கள் நேசிக்கும் அந்தப் போலீஸ்கார நண்பனைப் பற்றி சரியாகப் புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் இருவரும் காதலில் உறுதியாக இருந்தால் யாரும் அதைத் தடுக்க முடியாது. அதே வேளை இருவருமே வரும் எதிர்ப்புகளை நின்று எதிகொள்ளக் கூடியவர்களாக இருந்தால் மட்டுமே காதலிக்கத் துணியுங்கள். அவருடைய முதல் காதலி கிணற்றில் விழுந்து தற்கொலை செய்யும் அளவுக்கு துணிச்சல் இல்லாத, அல்லது யாருடைய ஆதரவும் கிடைக்காத நிலையே காரணம். காதலர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் ஆதரவாக இருந்தாலே போதும். காதல் நிலைத்துவிடும். இருவரில் ஒருவர் நம்பிக்கை இழந்து வழுக ஆரம்பித்தால் அடுத்தவர் ஆதரவற்ற மனநிலைக்குத் தள்ளப்படுவார். அதனாலேயே தற்கொலைகள் அதிகம் சம்பவிக்கின்றன. எனவே, முதலில் நீங்கள் இருவருமே உறுதியானவர்களா என்பதைப் பேசித் தீர்மானித்துக் கொண்டு காதலைத் தொடருங்கள். காதலைப்பற்றி ஏற்கெனவே பல பதிவுகளில் நான் எழுதியிருஅதால், இங்கே அதிகம் எழுத வேண்டியதில்லை என்றே நினைக்கிறேன். நீங்கள் அவற்றைப் படித்துப் புரிந்து கொள்ள முடியும். தொடர்ந்தும் சந்தேகம் இருப்பின் கேளுங்கள். பதில் தருகிறேன்

நட்புடன் சிநேகிதி

சிஸ்டர், என் வயது 23 என் காதலின் வயது 4 மாதம் என் வீட்ல சொல்லிட்டன் அனா அவங்க வீட்ல சொல்ல பயபடுறாங்க அனா அவங்க அம்மாவுக்காக பயபடுறங்க வீட்ல போய் பேசுறன்னு சொல்லிட்டு

போனாங்க இப்போ செல் சுவிச் ஆப் ஆகி இருக்கு என ஆச்சுன்னு தெரியல. அவங்க எனக்கு எப்படியாவது வேணும் ப்ளீஸ் எனக்கு உதவி பன்னுங்க. இந்த நன்றிய நான் ஒருநாளும் மறக்க மாட்டன்.
என் வீட்ல இன்னும் கொஞ்சம் நாள் கழிச்சு சொல்லி இருப்பன் அனா அம்மாவை ஏமாத்த மனசு வரல அம்மாவுக்கும் கொஞ்சம் சம்மதம். சின்ன வயசுல அப்பாவோட அன்ப எழந்த, இப்போ என்னால இவங்கள எழக்க சக்தி என்கிட்ட இல்ல ப்ளீஸ் சிஸ்டர் ஹெல்ப் பன்னுங்க. அவரை தனிமைல சந்தித்த மூணு நாள் மனைவி போலவேவே வாழ்ந்திட்டன்.

எனக்கு என்ன பன்னுறதுன்னு தெரியல என்ன நானே தனிமைபடுத்திகுறன் ஹெல்ப் பன்னுங்க சிஸ்டர்

வணக்கம் சகோதரி,

முன்னர் நான் எழுதிய பதிலுக்கு நீங்கள் மீண்டும் எழுதியிருந்த மின்னஞ்சலைப் படித்தேன். உங்கள் மனக்குமுறலை மின்னஞ்சலில் அப்படிக் கொட்டியிருந்தீர்கள் சகோதரி. படிக்கும் போதே உங்களை நினைத்து வருந்தினேன். மிகவும் மென்மையான உணர்வுகளுடன் நீங்கள் போராடிக் கொண்டிருக்கிறீர்கள் என்று புரிகிறது.

அப்பாவிடம் இழந்த அன்பை இன்னொரு ஆணிடம் நீங்கள் பெற முடியும் என்று நினைக்காதீங்க. அது பொய். பல வேளைகளில் சில அப்பாக்களிடம் இருந்தே உண்மையான அன்பு கிடைப்பதில்லை. அப்படியிருக்க இன்னொரு ஆணிடம் அந்த அன்பு கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது முட்டாள் தனம். இது காதல் மட்டும் தான். ஆனால் அது கூட ஒரு வேளை உங்கள் பக்கத்தில் மட்டும் உண்மையாக இருக்கலாம். அவர் என்ன மன நிலையில் உங்களோடு பழகுகிறார் என்று 4 மாதங்களுக்குள் நீங்கள் தீர்மானத்துக்கு வர முடியாது.

கண் முன்னே தீக்குளிப்பதை பார்த்தும்..
கண்ணீர் அஞ்சலிக்கு
கவிதை எழுதும் கவிஞாய் தான் தெரிகிறது
எனக்கு இந்த சமூகம்..
- கவிதாயினி சத்யா -

இப்பொழுது உங்களுக்கு 23 வயது தானே. உங்க அக்காங்க, அண்ணா எல்லாரும் கல்யாணம் பண்ணிட்டாங்களா? பண்ணியிருந்தாலும் இப்பொழுதே உங்களுக்கு உடனடியா மாப்பிளை பார்க்க ஆரம்பிச்சிட்டாங்களா? ஏன் கேட்கிறேன் என்றால்.. அதுவரைக்கும் உங்களுக்கு சிந்திக்கவும் முடிவெடுக்கவும் அவகாசம் இருக்கு.

இப்போதைக்கு எல்லாமே முடிந்து விட்டது என்று முடிவெடுக்க வேண்டாம். அவர் என்ன காரணத்துக்காக ஸ்விட்ச் ஆஃப் பண்ணினார் என்பதை ஒரு சில நாட்களுக்குள் முடிவெடுக்க முடியாது. தனது தொலைபேசியை ஸ்விட்ச் ஆப் பண்ணிய உங்கள் அன்புக்குரியவர் மீண்டும் உங்களோடு பேச வேண்டுமென்று கூட முடிவெடுக்கலாம். ஆனால், அது தான் நடக்கும் என்றும் 100 வீதம் நம்பாதீர்கள். எது நடந்தாலும் உங்கள் நல்லதுக்காக நடக்கிறது என்றே நம்புங்கள். உடனடியாக எந்த முடிவுக்கும் வர வேண்டாம். கொஞ்சம் பொறுத்திருங்க.

ஒரு பெண் என்ற வகையில் எனக்கு உங்கள் மனநிலை நன்றாகப் புரிகிறது.. ஒரு பெண்ணுக்கு தன்னுடைய உடலை ஒரு ஆண் தொடுவதோ அல்லது அல்லது இச்சையோடு பார்ப்பதோ மிகவும் சென்ஸிட்டிவான விடயம். ஆனால் அதை ஆண்கள் எப்பொழுதுமே புரிந்து கொள்வதில்லை. ஒரு ஆடவனைத் தன் உடலைத் தொட அனுமதிக்கிறாள், அல்லது உடலைப் பார்க்க அனுமதிக்கிறாள் என்றால், அவனில் அந்தப் பெண் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறாள் என்பதை ஆண்கள் எண்ணிப் பார்ப்பதில்லை. பெரும்பான்மையான ஆண்கள் அந்த சில நிமிட சந்தோசத்துக்காக எப்படிப் பேசியும் பெண்ணைச் சம்மதிக்க வைக்க வேண்டுமென்றே முயற்சி செய்கிறார்களே தவிர, அந்த நம்பிக்கைக்குப் பாத்திரமானவனாக தான் வாழுவேனா என்பதைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை. மிகச் சில ஆண்கள் மட்டுமே இந்த விடயத்தில் தாம் நம்பிக்கைக்கு உரியவனாக வாழ வேண்டுமென்று நினைக்கிறார்கள். அத்தகைய ஆண்களை நாம் சந்திப்பது மிகக்குறைவே.

சகோதரி, உங்கள் அந்த நண்பர் என்ன சொல்லி உங்களைச் சம்மதிக்க வைத்தார் என்று தெரியவில்லை. ஆனால் நான்கு மாதங்களுக்குள் அவரை நம்பி நீங்கள் மனைவியாக நடந்து கொண்டமை மனவருத்தத்துக்குரியது. ஒன்றை மட்டும் மனதில் கொள்ளுங்கள். அவர் உண்மையில் நல்லவராக, மனச்சாட்சி உள்ளவராக, உங்களை வைத்து நல்லபடி குடும்பம் நடத்துபவராக இருந்தால், நிச்சயம் இன்னும் சில நாட்களிலோ, வாரங்களிலோ மீண்டும் உங்களைத் தொடர்பு கொள்வார். ஆனால், இந்த அளவிற்கு உங்களோடு பழகி விட்டு, உங்களை உதறிவிட்டுப் போகும் மனம் உள்ளவர் என்றால், அவரை நீங்கள் எப்படியாவது திருமணம் செய்ய வேண்டும் என்று நினைப்பது முட்டாள்தனம் என்றே சொல்லுவேன். அவர் திருமணம் செய்த பின் உங்களை விட்டு விட்டு வேறு பெண்களோடு போக மாட்டார் என்பது என்ன நிச்சயம்? எனவே, ஒருவேளை அவர் மீண்டும் உங்களைத் தொடர்பு கொள்ளவில்லை என்றால், அவர் தொடர்பு கொள்ளாததையிட்டு வேதனைப்படாதீர்கள். அப்படிப்பட்ட ஒரு அயோக்கியனின் அன்பு உங்களுக்குத் தேவையா என்று சிந்தியுங்கள்.

சகோதரி, நான் என்ன சொன்னாலும் செய்வேன் என்று சொன்னீர்கள் அல்லவா‌ இப்பொழுது நான் சொல்வதை செய்ய முயற்சித்துப் பாருங்கள். உங்களை நீங்கள் ஒரு புரட்சி பெண்ணாகக் கற்பனை செய்யுங்கள். ஒரு வீர மங்கையாகக் கற்பனை செய்யுங்கள். நீங்கள் கூச்ச சுபாவம் உடையவர் என்பதோ, பயந்த சுபாவம் உடையவர் என்பதோ வெளி உலகுக்குத் தான். ஆனால் உங்களுக்கு உள்ளே உங்களைப் பற்றி எல்லாமே தெரியும் அல்லவா‌ எனவே உங்களை ஒரு முரட்டுப் போக்குடைய பெண்ணாக கற்பனை செய்து கொள்ளுங்கள்.

எந்த ஆண் துணையும் இன்றி நீங்கள் வாழும் மனத் தைரியம் உள்ளவர், ஏமாற்றும் ஆண்களை துளியேனும் மதிக்க மாட்டீர்கள், அந்நிய ஆண்களைக் கண்டால் அவர்களிடம் இருந்து எட்ட நிற்க வேண்டும் என்ற மனமுடையவர். எந்தப் பெண்ணுக்கு அநீதி நடந்தாலும் தட்டிக் கேட்கும் மனத் தைரியம் உள்ளவர்‌ இப்படி உங்களைப் பற்றி ஒரு தைரியசாலியாக, போராட்ட குணமுள்ள பெண்ணாகக் கற்பனை செய்யுங்கள். அடிக்கடி நீங்கள் தனிமையில் இருக்கும் சந்தர்ப்பத்தில் எல்லாம் கண்ணை மூடிக் கொண்டு இப்படிக் கற்பனை செய்து பாருங்கள். அப்பொழுது உங்களுக்குள்ளே இருக்கக் கூடிய இந்தப் பெண்தன்மைக்குரிய வேதனைகள் (அதாவது, அவனுக்கு மனைவி போல வாழ்ந்து விட்டேனே.. இனி இது தானா வாழ்க்கை.. போன்ற ஏக்கங்கள்) இருந்த இடம் தெரியாமல் பறந்து போகும். அது மட்டுமன்றி வரும் நாட்களிலும் எந்த ஆண்களிடமும் உடனடியாக வளைந்து கொடுக்கும் தன்மை இல்லாமல் போகும்.

சகோதரி, இது மட்டும் தான் வாழ்க்கை என்று இல்லை, உங்கள் வாழ்க்கை உங்கள் கையில் தான் இருக்கிறது. நீங்கள் தான் அதை உங்களுக்கு ஏற்றவாறு வடிவமைக்க வேண்டும். நீங்கள் இப்பொழுது என்ன செய்கிறீர்கள்? ஏதாவது படிக்கிறீர்களா? அல்லது வேலை செய்யும் முயற்சி உண்டா.. ஏற்கெனவே வேலை செய்பவர் என்றால், வேலையில் அதிக ஈடுபாடு காட்டுங்கள். இப்போதைக்கு நாவல்கள், காதல் கதைகள் படிப்பதை நிறுத்திவிட்டு, அதற்குப் பதிலாக, சமயம் சம்பந்தமான நூல்கள், தத்துவக் கதைகள், அல்லது அரசியலில் ஈடுபாடு இருந்தால் அது பற்றிய நூல்கள் எடுத்துப் படியுங்கள்.

சகோதரி, நான் உங்களை ஒரு புரட்சிப் பெண்ணாகப் பார்க்க வேண்டும், ஒரு தோழியாக, ஒரு சகோதரியாக நான் இதை உங்களிடம் எதிர்பார்க்கிறேன்‌ அப்படி வாழ்ந்து காட்ட முடியுமா? உங்களின் இந்த மனநிலை மாறிய பின்னர் அடுத்த கட்டமாக திருமணம் பற்றி யோசிக்கலாம். சரியா.. அமைதியாக இருங்கள். கடவுளை நன்றாக வேண்டிக் கொள்ளுங்கள். நீங்கள் எந்த மதத்தவர் என்று தெரியாது. ஆனால் எல்லா மதத்திலும் விரதம் பிடிப்பார்களே உங்களால் முடிந்தால் விரதம் இருந்து கடவுளை வேண்டிக் கொள்ளுங்கள். ஆனால் அது அந்த போலீஸ்காரரை அடைய வேண்டும் என்ற வேண்டுதலோடு அல்ல‌ உங்கள் மன அமைதிக்காக இருங்கள். ஒரு ஆணிடம் மனைவிபோல் நடந்து கொண்டேனே என்ற உறுத்தல் இல்லாமல் போக உங்கள் மனதைச் சுத்தம் பண்ணுவதாக எண்ணி விரதம் இருங்கள். இப்படி பக்தி முயற்சிகளில் உங்களை ஈடுபடுத்துவதன் மூலமும் உங்கள் மனதில் இருக்கும் சஞ்சலங்கள் நீங்கும். எல்லாவற்றுக்கும் மேல் நான் உங்களிடம் மீண்டும் கேட்பது.

ஒரு பயந்த, கூச்சசுபாவமுள்ள பெண்ணாக அல்லாமல், ஒரு புரட்சிப் பெண்ணாக வாழ்ந்து காட்டுங்கள்.

மிக்க நன்றி அன்பு சிநேகித உள்ளங்களே....
மீண்டும் அடுத்தவாரம் இன்னொரு சிநேகிதியின் கருத்தில் சந்திக்கலாம்.

நட்புடன் சிநேகிதி.

நீ பிரிந்தாய்
காதல் இலைதான்
உதிர்ந்ததே தவிர
காதல் மரமல்ல ....!!!

உன் நினைவுகளை
கனவு வலையாய்
பின்னி வைத்திருக்கிறேன்
நீ சிக்காமலா விடுவாய் ...!!!

உன் மௌனம்
தான் என் இதயத்தில்
காயத்தை ஏற்படுத்தியது
மருந்தும் நீதான் ...!!!

- இனியவன் -

# சொந்தக்காறன்

பசுந்திரா சசி

நான் எதிர் பாராத நேரம் ஏதோ ஒன்று எங்கிருந்தோ வந்து என் முகத்தில் விழுந்தது. 'என்ன இது மோசமாக நோகிறதே. ? ' என அந்த பக்க கண்ணை மூடிக்கொண்டு சாபிட்ட கையாலே கன்னத்தை தடவிய போது முன்னால் இருந்த ராசன் படீரென என் முகத்தில் மூக்கடியில் குத்தினான்.

அவன் கோபமாக பேசிய போதுதான் புரிந்தது இது அவனின் இரண்டாவது அடி என்று. எனக்கு என்ன செய்வ தென்று தெரிய வில்லை. வலித்த இடத்தை உரஞ்சி விட்டு கையை எடுத்தபோதுதான். மூக்காலும் நெற்றியாலும் ரத்தம் வருவது தெரிந்தது. ரத்தத்தை கண்டதும் எனக்கு கோவமும் அழுகையும் அதிகமாக வந்தது. ரத்தத்தை பார்த்து பார்த்து அழுதேன். பெரிதாக அழுதாலும் அடிப்பான் என்று வேறு பயமாக இருந்தது. அடித்த அடியில் என்முகம் வீங்கி சொண்டும் - நாக்கு போல் வந்து விட்டது. நான் முடிந்தவரை அழுகையை அடக்கி அழுதேன். ஆனால் விம்மலை அடக்க முடியவில்லை. எதற்காக அடித்தான் என்று கேட்கவும் முடியவில்லை. அவனாகவும் சொல்ல வில்லை. இதனால் இன்னொரு முறை அடிவாங்கித்தான் காரணத்தை அறிந்து கொள்ளப்போகிறேன் அவ்வேளையில் யாக்கிரதையாக இருந்து காரணத்தை கண்டு பிடித்து விட வேண்டும் என எண்ணிக் கொண்டேன்.

அம்மா , அப்பா , அண்ணா யாருக்கும் நான் அடி வேண்டுவது தெரியாது. தெரிந்தாலும் என்ன செய்வார்கள் என்றும் தெரியாது. இது எல்லாவற்றிற்கும் காரணம் என் பிறப்புதான் உருவத்தில் அவனை விட சிறிதாகவும் பலத்திலும் அவ்வாறே இருந்தேன். என்னக்கொன்றும் பத்து வயதில்லை 26 வயதாகிறது ராசனுக்கு என்னை விட நாலு வயதுதான் அதிகம். ஆனாலும் மலைபோல இருப்பான். நான் நின்று கொண்டு அவன் தலையை தொடுவேன் உச்சியை தொட எட்டாது. எனக்கு ரத்தம் வந்ததை பார்த்த பின்புதான். அவனின் குரலில் சற்று கனிவு வந்தது. எனக்குள்ளும் இரத்தம் ஓடுகிறது என தெரிந்து கொண்டான் போலிருக்கிறது. அவனை திருப்பி ஏன் நான் அடிக்கக் கூடாது என என்னால் சிந்திக்கவே முடிய வில்லை. ஒரு வேளை அப்படி அடித்தால் அவன் என்னுள்ளும் ஒரு உயிர் இருந்திருக்கிறது என தொரிந்து கொள்ளும் நிலை வந்தாலும் வரும். அப்படியான முறடன் அவன்.

இப்படி வந்து மாட்டுப்பட்டதை நினைக்கவே அழுகை வந்தது. அந்த இடத்தை விட்டு எங்காவது ஓடிவிட வேண்டும். அது படு குழியாய் இருந்தாலும் பறவாய் இல்லை என மனம் தவித்தது. ஆனால் இந்த ஊரில் எனக்கு யாரையும் தெரியாது. தெரிந்தவர்கள் எல்லோரும் ராசனது நண்பர்களே. போனாலும் திருப்பி இவனிடமே அனுப்பி விடுவார்கள். இவனுக்கு அவர்கள் எல்லோரும் பயம். ஆனால் அதனை ராசன் - அவர்கள் எல்லோரும் தன் விசுவாசிகள் என்றும் நல்ல நண்பர்கள் என்றும் எண்ணி பெருமை அடைந்தான்.

பல சமயங்களில் அவர்கள் தனித்தனியே இவனிடம் வேண்டிக்கட்டுவார்கள். அதன் பின்னாலே தான். நல்ல நண்பர்கள் ஆகியிருப்பார்கள். ஒவ்வொரு முறை ராசன் யாருடனாவது சண்டை போடும் போது இம்முறை ராசன் வாங்கிக் கட்டப் போகிறான் என அவரவர் மனதுக்குள் எண்ணி ஆனந்தப்படுவார்கள். ஆனால் முடிவு ஏதோ அவர்களுக்கு பாதகமாகத்தான் இருக்கும். இறுதியில் அந்த நபரும் ராசனின் எதிராளிகள் படையில் இணைந்து கொண்டு ராசனோடு ஐக்கியமாகி விடுவான். இவ்வாறு இணைந்தவர்களோடு சில சமயம் ராசன் மனம் விட்டுப் பேசுவான். மூன்றாமவர் ஒருவரை குறிப்பிட்டு " அவர் அன்று என்னிட்ட நல்லா வேண்டி கட்டினவர் " என பிரச்சனையை சொல்லாமல் தண்டனையை மட்டும் ஏளனமாக சொல்லிக் கொண்டு இருப்பான். அவரும் " அப்படியா அவனுக்கு கொடுக்கத்தான் வேண்டும் கதைக்கப் பேசத் தெரியாதவன் " என பிற்பாட்டு பாடுவார் எங்கே தன்னை பார்த்து ' நீயும் வேண்டின நீ தானே ' என்று சொல்லி விடுவானோ என்ற ஏக்கமும் - ஒருவேளை வெறியில அடிச்சதால தான் அவனிடம் அடி வேண்டியதை இவன் மறந்து விட்டானோ என்ற எண்ணமும் அவரக்கு தலை தூக்கப் பார்க்கும். ராசனின் இந்த கை நீட்டும் பழக்கம் அவன் தன் தந்தையை விட உயரமாக வளர்ந்ததும் வந்தது. தன்னை விட பல சாலிகளிடம் இவன் வைத்துக்கொள்வதில்லை.

எப்போது மற்றவர்களை அடிக்க ஆரம்பித்தானோ அன்றில் இருந்து அவனை அறியாமலே நல்லது கெட்டது எல்லாம் அவனுக்கு தெரிய வந்தது. ' எப்போதுமே அவசரப்பட்டு தவறாக நடந்து கொள்வதாக கூறி வந்த சுற்றம் இப்போது அவன் செய்வதுதான் சரி என தலை ஆட்ட தொடங்கி இருந்தால் அவனுக்கு இந்த ஆச்சரியம் வந்தது. தன்னை சூழ்ந்தவர்கள் எல்லோருமேதான் படு முட்டாளாக இருந்திருக்கிறார்கள். என எண்ணி வியந்தான். எல்லோரும் அவரவர் வீட்டில் இருந்து கொண்டு தெருவில் இவனை கண்டாலே பௌவியமாக நடந்து கொள்ள வேண்டும். நான் அவன் இருக்கும் வீட்டிலேயே இருக்கவேண்டியாயிற்று காரணம் இவன் என் நெருங்கிய சொந்தக்காரனாம் ஏதோ ஒரு முறையும்

## எதை தின்று அடக்கிடுவேன் என் பசி?

கனிகீல்



பசி கண்டு பாலூட்ட அன்னையில்லை
பிணி கண்டு மருந்து தர தந்தையில்லை
பக்குவமாய் பரிமாற தங்கயில்லை
என் ஒட்டிப் போன வயிற்றையும்
சதையில்லா உடம்பையும் கட்டிக்
கொள்ள துணிந்தவள் எவருமில்லை

அதனால் கட்டிக்கொள்ள மனைவியுமில்லை
பேருந்து நிலையமே என் வசிப்பிடமாய்
மீந்து போன உணவுகளுக்கு போட்டியிடும்
நாய்களுடன் நானும் ஒரு அங்கமாய்

நான் பசியென்று கையேந்திடும் போதெல்லாம்
உழைத்து பிழைக்க கூடாதா? எனச் சொல்வோரும்
சில்லறயில்லை என சைகை காட்டிடுவோரும்,
என் சிந்தை கலைத்ததே இல்லை இது வரை
பசி தவிற ஒன்றுமே நான் அறிந்திலேன்...

கைக்குழந்தை தவர விட்ட ரொட்டியும் என்
வயிற்று தீ மட்டுப்பட உதவிடுமே
பெருங்குடிகாரன் வாந்தியோடு விட்டுச்
சென்ற மிக்சர் கூட எனக்கு சில நேரப் பசி
போக்குமே...
பள்ளிக் கூட மணியோசை என் உயிர் வாழும்
அடுத்த நொடி உருதி செய்திடுமே...

தினம் தினம் பசியோடு எழுகிறேன்
எழுப்பிட யாருமே வேண்டாம் என் வயிறு
போதும்
அனுதினமும் அனலாய் தவிக்கிறேன் நான்
எதை தின்றால் அடங்கிடுமோ என் பசி?

சொன்னார்கள். ஊரில் அம்மா அப்பா நான் இவனோடு இருப்பது தான் எனக்கு நல்லது என அடிக்கடி சொல்லி வந்தார்கள். இது வேறு ஒரு தேசம் என்பதால் இவனை விட்டால் வேறு ஆக்களையும் தெரியாது.

இவனை எனக்கு இதற்கு முன் தெரியாது. நான் இவனிடம் வரவும் இல்லை இவன் தான் என்னிடம் வந்தான். நகரத்திற்கு வந்து கூட்டிக் கொண்டு தன் வீட்டிற்கு வந்தான். இவன் என்ன குடிக்கிறான் என்று எனக்கு தெரியவே இல்லை. அதை குடித்தால் தான் அவனக்கு பல குறை நிறைகள் கண்ணுக்கு தெரிகிறது. அவன் குடித்தால் நான் காமதேனு என நினைத்துவிடுகிறான். அவன் நினைத்தது எல்லாம் நான் வைக்க வேண்டும். பல முறை அடி வேண்டியும் நான் திருந்த வில்லை என அடிக்கடி சொல்லி அவனின் செயலுக்கு நியாயம் கற்பித்தான். எனக்கும் உடலில் எங்காவது மூளை இருக்கும் என்று நினைக்கிறானே இல்லை. இதில் நான் இவனை விட மிக அதிகம் படித்திருக்கிறேன் என்பது இன்னும் வேதனை. அவனுக்கு காதுகள் இருப்பது ' தான் சொல்லுவது வெளியில் கேட்கிறது ' என தான் அறியவே ஒழிய மற்றவர் சொல்வதை கேட்டு அதிலும் நியாயம் இருக்கிறதா என்று புரிந்து கொள்வதற்கில்லை.

ஒரு முறை இதை நான் ' ஊருக்கு சொல்லிவிட்டேன் ' அதற்கும் அடித்தான். வீங்கிய சொண்டு மாறும் வரை அடிக்கமாட்டான் என்று நினைத்தேன். மறுநாள் குடிதத்தால் அவனுக்கு மறந்து போயிற்று.

அடி வேண்டுவது எனக்கு மட்டுமே தெரிவதால் வெளியாட்களிடம் மரியாதை இருந்தாலும் சில சமயம் நான் அடி வேண்டவது ஒருவருக்குக் கூட தெரியாமல் போய்விடுகிறதே என்ற வேதனை என்னை வாட்டியது.

என்னால் முடிந்தது எல்லாம் காந்தியால் முடிந்ததே சத்தியாக்கிரகம் இருப்பது. சாப்பிடாமல் அவனிடம் பேசாமல் இருந்தேன். அதுவும் அவனுக்கு நன்றாக தெரியும் ஆனால் அது பற்றி அவன் கருத்தில் எடுப்பதாக இல்லை. பசி வந்தால் நானாக சாப்பிடுவேன் என எண்ணியிருப்பான் போலிருக்கிறது. அவன் எண்ணமும் சரியாகவே இருந்தது. காந்தி இறுதியில் வென்றார் இங்கே இவன்தான் வென்றான்.

இதை நான் உணர்ந்த போது விசத்தையாவது சாப்பிட்டு விடலாம் என்று தோன்றியது.

" உன் வாழ்க்கையில் இவ்வளவு காசை பார்த்திருக்கிறியா ?" என கேட்பான் , எனக்கு மனதில் ' உன் வாழ்க்கையில் இப்படி வலியை அனுபவித்திருக்கிறியா ?' என கேட்க தோன்றும்.

ஆனால் - இல்லை - என அங்கும் இங்கும் தலையை ஆட்டுவதோடு அவனை பற்றி அவன் நண்பர்களிடத்தில் பெருமையும் பேச ஆரம்பித்து விட்டேன்.

பல சமயங்களில் கேள்வி விளங்காமலே பதில் 'ஆம் ' என்று செல்லுகிறேன் என்னில் திருத்தம் தெரிவதாக கூறுகிறான்.

கதைக்கிறேன் - திரிப்பிக் கதைக்காமல். ஏன் பார்க்கக் கூட செய்கிறேன் திரும்பிப்பார்க்காமல். நான் சிரிப்பதை அவன் உண்மையிலேயே சிரிப்பதாக நம்பி விடுகிறான் என்பதே என் ஆச்சரியம். என்ன செய்கிறேன் என்று தெரியாமலே சில வற்றை செய்கிறேன். என்னை பற்றி நினைக்க எனக்கே வெக்கமாக இருக்கும் '. சீ.. என்ன பிழைப்பு ' என்பதே என் தேசிய கீதமாகியது.

வெறியில் கூட 'உனக்கு அடித்த போது நொந்ததா ?' என்று கேட்டதில்லை. ஆனால் அடித்தால் நோகும் என்று அவனுக்கு நன்றாக தெரியும். முதுகை , கன்னத்தை , வயிற்றை நான் தடவித் தடவி அழும் போது அவன் கண்ணில் - எனக்கு நோகிறது - என அவன் அறிந்து கொள்வதை நான் பார்த்திருக்கிறேன். அடிக்கும் போது மட்டும் அவ்வளவு ஆனந்தம் அடைகிறான். சில வேளைகளில் அடிக்குப் பதிலாக ஏதாவது வேண்டித் தருவான். அது உடலெங்கும் கடிப்பது போல் இருக்கும். அடிக்கும் போது உடல் நோகும் பின் மனம் நோகும்.

வெளியில் சிரித்து பேசி போய்வருவோரை - இப்போது வியப்போடு பார்க்க ஆரம்பித்து விட்டேன். இவர்களும் இப்படி என்னைப் போல் யாரிடமாவது அடி வேண்டி விட்டுத்தான் இப்படி சிரித்துப் பேசி மறைக்கிறார்களா என ஆராய்வேன்.

விற்கும் கடை போவதா ?
தைக்கும் கடை போவதா?
விநாடிக்கொரு முறை
வீட்டு பட்ஜட்டை
வித விதமாய் மாற்றி மாற்றி
போட வைத்தது
அறுந்து விடப் போகிறேன்
என அபாய அறிவிப்பு செய்த
என் அறுபது ரூபாய் செருப்பு.

- நற்பவி மகேந்திரன் -

இந்த வீட்டை நம்பி ஒரு பூனை ஒன்று இருகிறது. அதுவும் அவ்வப்போது அடி வேண்டும் ஆனால் அதன் பின் ஓடிவிடும் இவனின் முன் நிக்காது. அதனை பொறுத்தவரை கதவுகள் வெளியேறவே இருக்கிறது. அதன் வாழ்க்கை கூட எனக்கு இல்லை.

கனவுகளில் மட்டும் நான் தான் ராஜா , ராணி எல்லாம் அவ்வப்போது கண்டு மகிழ்வேன்.

வேலை செய்து விட்டு 'கூலி குறைவாக தருகிறார்கள் 'என்பது எனக்கு சிரிப்பை உண்டு பண்ணும். நான் என் வேலைகளுக்கு பதில் இடி வேண்டுவது அவர்களுக்கு தெரியாது.

அவன் வீட்டில் இல்லாத வேளைகளில் தான் மூச்சுவிடுவேன் மற்றைய தருணங்களில் என்னை தொலைத்து யாரோ ஒருவர் போல் நடித்துக் கொண்டு இருந்தேன். நான் சிந்திப்பது அவனக்கு தெரியவில்லை என்பது மட்டுமே என் சுகந்திரமாக இருந்தது.

அவனக்கு வேண்டிய தெல்லாம் நான் செய்து கொடுப்பதற்காக எனக்கு சாப்பாடும் படுப்பதற்கு ஒரு துண்டு இடமும் கிடைக்கும். விலங்குகள் கூட கட்டி வைத்து தாக்குவதில்லை சில சமயங்களில் சிலர் என்னை - இவனிடம் 'இது யார் ? ' என்று கேட்டால். ஆனந்தமாக , பெருமையோடு " நான் கட்டியவள்" என்கிறான்.

## மறுத்து விட்டாயடா...

நண்பனாய் வந்து
நட்பைக் கற்றுக் கொடுத்தாய்...
காதலனாய் வந்து
காதலைக் கற்றுக் கொடுத்தாய்...
பிரிவாய் வந்து
தோல்வியைக் கற்றுக் கொடுத்தாய்...
ஆனால்...
நினைவாய் வந்து
மறக்கக் கற்றுக் கொடுக்க
மறந்து விட்டாய்...
இல்லை... இல்லை...
மறுத்து விட்டாயடா...

- ரத்னா தேவி -

# சாம்ராட் சம்யுக்தன்

*சிவாஜி தாசன்*

## 12. காட்டுவாசியின் சந்திப்பு




இரவின் குளிர் எங்கும் படர, செடி கொடிகள் குளிரில் நடுங்கியபடி மெதுவாக அசைந்தாடிக்கொண்டு இருந்தன. பட்சிகளின் இன்னிசை காதுகளுக்கு இதமாக இருந்தாலும், மனதினுள் ஒரு கிலியோடு கானகத்தின் வழியே சென்றுகொண்டிருந்தான் வீரபுரத்தின் இளவரசன் ரவிவர்மன்.

அவனுடைய குதிரை களைத்துவிட்டதால் ஓடுவதை நிறுத்திவிட்டு மெல்ல நடைபோட்டபடி செல்ல ஆரம்பித்தது. குதிரையை அவன் விரட்டவில்லை. அவனது எண்ணங்கள் அலைமோதிக்கொண்டிருந்தன. சம்யுக்தன் இறந்ததை அவனால் இன்னும் முழுமையாக நம்பமுடியவில்லை. ஒருவருடைய பலம் அவனுடைய எதிரிக்குத்தான் தெரியும் என்பது போல் சில காலம் அவனை எதிரியாக நினைத்து வாழ்ந்த ரவிவர்மனுக்கு சம்யுக்தனின் திறமை மேல் பொறாமை என்னும் தீய மலர்க்கொடி படர்ந்திருந்ததை எண்ணினான்.

சம்யுக்தன் வீரன் மட்டும் அல்ல; சிறந்த சாணக்கியன்; இடத்திற்குத் தகுந்தார் போல் நடந்துகொள்ளும் தந்திரசாலி; எப்பேர்பட்ட தடங்கலையும் தன் மனோபலம், அறிவுபலத்தால் தகர்த்தெறிந்து பீடுநடை போடக் கூடியவன். அப்பேர்பட்டவனைக் கொல்வது எளிதான காரியம் அல்ல. இவ்வாறு, மன ஓட்டத்தினுள் எழுந்த எண்ணங்களோடு குதிரையில் சென்றுகொண்டிருந்தான்.

பூச்சியினங்களின் ரீங்காரத்தில் காடே மிரட்சிக்கோலம் பூண்டது. தன்னைச் சுற்றி ஆங்காங்கே சல சலப்புகள் எழுந்ததால் ரவிவர்மனின் சிந்தனையோட்டம் தடைபட்டது. ஓநாயின் கூக்குரலும் யானையின் பிளிறலும் சிங்கக் கூட்டத்தின் உறுமலும் அவன் மனதினுள் கிலியை உண்டு பண்ணியது. உடனடியாக தீப்பந்தத்தை பற்றவைத்து, அதிலிருந்து பரவிய ஒளியால், தன்னை ஏதேனும் ஆபத்தான மிருகங்கள் பின்தொடர்கிறதா? அல்லது கண்காணிக்கின்றதா? என்று எண்ணியபடி சுற்றும் முற்றும் நோட்டமிட்டான். அப்படியொன்றும் இல்லையென்று மனது கூறியதால் நிம்மதிப் பெருமூச்சுடன் தன் பயணத்தைத் தொடர்ந்தான்.

பூதாகரமாக வளர்ந்திருந்த மரங்களும் மண்டிக்கிடந்த செடி கொடிகளும் அவன் சென்ற பாதைக்குத் தடங்கலாக வழிமறித்தன. இருக்கும் பிரச்சனைகள் போதாதென்று இது வேறு என்று மனதினுள் கருவிக்கொண்டு தீப்பந்தத்தின் உதவியால் வழி தேடிக்கொண்டு சென்றான். சில்லென்ற காற்றும் சலசலப்புகளையும் கண்டு சிறிது பயம் முளைத்தாலும் மிதமிஞ்சிய தைரியத்தோடு ஒரு கை பார்த்துவிடுவோம் என்ற துணிச்சலோடும் சென்றுகொண்டிருந்தான்.

அவன் செல்வதை செடிகளில் மறைந்திருந்த கண்கள் கூர்மையாக நோக்கின. அவனது முதுகுப் பகுதியை நோக்கி வீசி எரியும் வேல்களைப் போன்ற கூரிய விழிகள் துளைத்தன. தன்னைச் சுற்றி யாராவது கவனிக்கிறார்களா என்று திடீர் எண்ணம் தோன்றி தலையைத் திருப்பினான். இருளின் போர்வையில் மறைந்திருந்தவனை ரவிவர்மனால் காணமுடியவில்லை.

இரண்டு நாழிகைகளாய்க் குதிரையைச் செலுத்திக்கொண்டிருந்த ரவிவர்மனுக்குத் தன் தந்தையின் நினைவும், காதலியின் நினைவும் மனதினுள் முட்டி மோதின. அவர்கள் வருத்தப்படுவார்களே என்றெண்ணியபோது அவன் மனதினுள் கத்தியால் கீறும் வலி உண்டானது. குதிரையும் அவனும் களைத்துவிட்டதால் சிறிது நேரம் ஓய்வெடுத்துச் செல்லலாம் என்று அவன் உள்ளம் கூறியதாலும் ஓய்வெடுக்கும் இடம் எங்கிருக்கிறதென்று கண்களையும் குதிரையையும் மேயவிட்டான்.

தீச்சுடரின் ஒளி செடி கொடிகளைத் தங்க நிறத்தில் மிளிரச் செய்தது. பட்சியினங்களின் ஓசையைக் காதில் வாங்காமல் எங்கு ஓய்வெடுக்கலாம் என்று மனது அலைமோதியது ரவிவர்மனுக்கு. அப்பொழுது நதியின் சலசலப்பு அவன் காதுகளில் விழுந்து, கூடவே பூச்சிகளின் ரீங்காரமும் சேர்ந்து இனிய தாள சந்தத்தை உண்டாக்கின.

ரவிவர்மன், குதிரையை நதியை நோக்கிச் செலுத்தினான். குதிரையும் அவனைச்

சுமந்துகொண்டு சில மணித்துளிகளில் நதியின் அருகில் சென்று நின்றது. இருளை விழுங்கியிருக்கும் கானகத்தின் நடுவே இருந்த நதியின் மேல் நிலவு தண்ணீரின் மேல் வெள்ளி முலாம் பூசிக் கண்களைக் கவர்ந்தது. ரவிவர்மன், குதிரையிலிருந்து கீழிறங்கி நதியினில் சிறிது தூரம் இறங்கி, கை கால்களையும் முகத்தையும் அலம்பினான். இரண்டு கைகளால் தண்ணீரை அள்ளி அருந்தி குளிர் காற்றைச் சுவாசித்து மனதினுள் எரியும் அடங்கா நெருப்பிற்குச் சிறிது இதம் கொடுத்தான். ஆயினும், பழி உணர்ச்சி அடங்காமல் கொழுந்துவிட்டெரிந்தது. ரவிவர்மனின் குதிரை அனல் மூச்சை வெளியிட்டபடி தண்ணீரை அருந்தி இளைப்பாறிக்கொண்டிருந்தது.

ரவிவர்மன், சிறிது மனசாந்தி அடைந்து, சிந்தனயில் வீழ்ந்தான். பாதிக் கிணற்றைத் தாண்டி விட்ட மகிழ்ச்சி முகத்தில் படர்ந்தாலும் மீதிக் கிணறையும் சரியாகக் கடக்க வேண்டுமே என்ற வாட்டம் அவன் முகத்தைச் சோகமயமாக்கியது. சம்யுக்தனை எண்ணும் போதெல்லாம் அவன் உள்ளம் கலங்கி, அவனை வஞ்சம் தீர்த்தவர்களைத் தானும் வஞ்சம் தீர்க்கவேண்டும் என்ற உணர்வு அவன் உள்ளத்தில் பாய்ந்து வெறி மூட்டியது. சுட்டெரிக்கும் சூரியனின் வெப்பத்தை உள்ளத்தில் இறக்கி எதிரியை எரித்துவிடவேண்டும். சம்யுக்தன் ஆத்மாவிற்குச் சாந்தி கொடுக்கவேண்டும் என்று உறுதி பூண்டான்.

இத்துணை எண்ணியும் அவன் மனதினுள் லேசான நம்பிக்கை இருக்கவே செய்தது. எதிரியின் பலம் எதிரிக்குத் தெரிவது போன்று சில காலம் சம்யுக்தனை எதிரியாக எண்ணி வாழ்ந்த ரவிவர்மனுக்கும் நன்றாகத் தெரியும். அவனது வீரமும் சாதுர்யமும் பிறந்து கற்றுக்கொண்டதல்ல. கருவிலேயே கற்றுக்கொண்டது. இடத்திற்குத் தகுந்தாற்போல் தனது திட்டங்களை மாற்றி வெற்றிகரமாகச் செயல்படுத்தக் கூடியவன். தந்திரமாக நடந்து வீர தீரச் செயல்களைப் புரியும் சம்யுக்தனா எளிதாக வீழ்ந்தான்? அமாவாசையன்று நிலவு இல்லாவிட்டாலும் மீண்டும் வளர்பிறையாய் முளைக்குமே அது போன்று அதிசயம் நிகழ்ந்து சம்யுக்தன் மீண்டும் வரமாட்டானா என்று சிறு நம்பிக்கையில் கோட்டை கட்டிக்கொண்டிருந்த ரவிவர்மனை செடியினுள் எழுந்த சலசலப்பு திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கச் செய்தது.

'யாரது?' என்றெண்ணி ஒரு கையில் வாளும் மறுகையில் தீப்பந்தமும் ஏந்தியபடி சலசலப்பு வந்த திசையை நோக்கிச் சென்றான். தனது உடலைச் செடி கொடிகளின் நடுவே மறைத்து தலையை மட்டும் நீட்டியபடி இருந்தான் ஒருவன். அவனது கேசம் தோள்பட்டையில் தவழ்ந்திருக்க, இறுக்கமான முகத்தோடும் கூரிய விழிகளோடும் மேலாடை இல்லாமலும் இருந்த அவனைக் கண்ட ரவிவர்மன் திடுக்கிட்டான். சப்த நாடிகளும் ஒடிந்து சிலையாகிப்போனான். கையில் ஏந்தியிருந்த வாள் மெல்ல நழுவ, தீப்பந்தத்தின் மங்கிய வெளிச்சத்தில் அவனது முகத்தை உற்றுநோக்கிய ரவிவர்மனுக்கு மயக்கமே வந்துவிட்டது.

"சம்யுக்தன்...!" என்று அவனையறியாமல் ஒரு முறை கூறிக்கொண்டான். இமைகள் மூடாமல் அவனது முகத்தை வெறித்தான். இது என்ன மாயையா? அல்லது நான் கனவு காண்கின்றேனா? என்று தனக்குள்ளாகவே கூறிக்கொண்டிருந்த ரவிவர்மனை நோக்கி அவ்வுருவம் மெல்ல நடந்து வந்தது. சிலையாக நின்று கருவிழிகளை மட்டும் உருவத்தின் மேல் மேயவிட்டு உற்றுநோக்கிக்கொண்டிருந்த ரவிவர்மனின் கண்களிலிருந்து, அந்த உருவம் ஒரு மரத்தின் பின்னால் மறைந்தது. பிறகு, மரத்தின் பின்னாலிருந்து வெளியேவந்து தீப்பந்த வெளிச்சத்தில் நன்றாய் தெரியும்படி சலனமற்ற முகத்தோடு நின்றான் அவன்.

அவனைக் கண்டதும் ஆச்சர்ய ரேகைகள் மறைந்து, ரவிவர்மனின் முகத்தில் அசட்டைப் பார்வை முளைத்து, இகழ்ச்சியோடு நோக்கினான். 'இவனையா சம்யுக்தன் என்று எண்ணிவிட்டோம். எனது மடமையை என்னவென்று சொல்வது?' என்று தன்னையே கடிந்துகொண்டு துளைத்திடும் பார்வையை அவன் மீது படரவிட்டான்.

...அலங்கோல கேசம் ,மேலாடை இல்லை, இடுப்பில் மிருகத்தின் தோல், கையில் யானைத் தந்தத்திலான ஆயுதம், தோளில் சிறு குடுவை... ரவிவர்மன், அதிகாரத் தோரணையில், "யார் நீ?" என்று கடுமையோடு கேட்டான்.

"ஐயா ! நான் காட்டுவாசி இனத்தவன்"
"இங்கு என்ன வேலை உனக்கு?"
"வேடிக்கையாய் கேட்கிறீரே, ஐயா! நான் நகரத்திற்கு வந்தால் தங்கள் கேள்வியில் நியாயம் இருக்கிறது. நானோ காட்டுவாசி. காடு தானே என் ஜீவாதாரம்"

அவன் ஆடையும் கையிலிருந்த ஆயுதமும் அவன் காட்டுவாசி என்பதை உணர்த்தின. பதில் கூறாமல் அசட்டை நடையோடு வாளைத் தன் உடையில் சொருகியபடி, சில அடிகள் முன்னே வைத்தான் ரவிவர்மன்.

"தாங்கள் யாரென்று நான் தெரிந்துகொள்ளலாமா?"
"அதைத் தெரிந்து நீ ஒன்றும்

செய்யப்போவதில்லை. உனது வேலையை முதலில் கவனி" என்று முன்னே நடந்த ரவிவர்மனைக் காட்டுவாசி பின்னே தொடர்ந்தான்.

ரவிவர்மன், காட்டுவாசியைப் பார்த்து, "ஏன் என்னைப் பின் தொடர்கிறாய்?" என்று கடுமையோடு கேட்டான் .
"ஐயா ! தாங்கள் நாகவனத்தைச் சேர்ந்தவரல்ல என்று தெரிந்த பின் தங்களுக்கு உதவுவதற்குத்தான்"

ரவிவர்மன் திடுக்கிட்டான். "நாகவனமா...? உதவியா...?" என்று இணைப்பில்லாத சொற்களை உதிர்த்து காட்டுவாசியை நோக்கினான். "இதில் ஒன்று மட்டும் உண்மை. நான் நாகவனத்தைச் சேர்ந்தவன் அல்ல என்பது உனக்கெப்படித் தெரியும்?" என்றான் ரவிவர்மன்.

"நாங்களும் நாகவன சாம்ராஜ்யமும் கீரியும் பாம்பும் போன்று. நான் காட்டுவாசி என்று கூறியும் என்னைத் தாக்காமல் சென்றீர்களே. அதை வைத்துத்தான் கூறினேன் ஐயா"

காட்டுவாசியின் மதிநுட்பத்தைக் கண்டு வியந்த ரவிவர்மன், ஆமோதிப்பதாய்த் தலையசைத்து "நாகவனத்திற்கு ஒரு முக்கியக் காரியமாக செல்கிறேன். இங்கிருந்து எவ்வளவு தூரம்?" என்று காட்டுவாசியைக் கேட்டான்.

ரவிவர்மனையும் அவனது குதிரையையும் அவனது உடைவாளையும் மீண்டும் அவனது முகத்தையும் மாறி மாறிப் பார்த்தான் காட்டுவாசி
"ஏன் அப்படிப் பார்க்கிறாய்?"

"ஐயா ! ஒரு நாழிகையில் நீங்கள் இங்கிருந்து கிளம்பினால், நடுசாமத்தில் நாகவனத்தை அடைந்துவிடலாம்"

மேலும் பேச்சை வளர்க்க விரும்பாமல், "நன்றி" என்றான் ரவிவர்மன்.
"ஐயா! நீங்கள் மிகச் சிறந்த வீரராக இருப்பீர் போல? என் முன், வாளைப் பிடித்த தோரணை ரசிக்கும்படியாக இருந்தது" என்றான் காட்டுவாசி.

ரவிவர்மனுக்குப் பெருமித உணர்வு முகத்தில் தாண்டவம் ஆடியது. ஆயினும், காட்டுவாசியைச் சிந்தனையோடு நோக்கினான்.
"ஏன் ஐயா, என் மேல் விசித்திரப் பார்வையைப் பாய்ச்சுகிறீர்கள்?" என்று கேட்டான் காட்டுவாசி.

"நீ நடந்துகொள்வது நகரத்துவாசி போலிருக்கிறதே? பண்பும் சாந்தமும் உனது முகத்தில் தெரிகிறது"
காட்டுவாசி சில வினாடிகள் சிரித்தான்.

## அறுவடை

*settu.l*



காற்றினோடு கைக்கோர்த்து செல்லும்
வெண்மேகமே
கண்ணீர் சிந்த ஒன்று கூடுகிறாய்
கருநிறமாகவே !
காற்றும் நகர்ந்திட கண்ணீரும் நீ சிந்திட
சிந்தும் மழைத்துளி ஒவ்வொன்றும்
மண்ணை முத்தமிட !
முத்தங்கள் ஒவ்வொன்றும் முத்துகளாய் மாற
இறுகிய நெஞ்சங்கள் மகிழ்ச்சியில் ஆள !
பட்டான கதிர்கள் பட்டுபோல் ஆக
மண்ணில் புதைந்த உயிர் தலைமுறையாக
எழ !
நச்சுகள் அழித்து தலைமுறைகள் படர
செழிமையாய் நடந்தது இவ்வாண்டு
"அறுவடை" !

"காட்டுவாசிகள் என்றால் பண்பற்றவர்கள் என்று முடிவு கட்டிவிட்டீர்களா? நாங்களும் மனிதர்கள் தானே?" என்றான்.

அந்த சொற்கள் ரவிவர்மனுக்கு குற்ற உணர்ச்சியைக் கொடுத்தது. மேலும் அங்கிருக்க பிடிக்காமலும் இரவு முடிவதற்குள் நாகவனத்திற்குள் இருக்கவேண்டும் என்ற உந்துதலிலும், எழுந்து குதிரையின் அருகே சென்றான்.

"என்னை மன்னித்துவிடு! என்னையறியாமல் உன்னைக் கீழ் சொற்களால் காயப்படுத்திவிட்டேன். உன் பேச்சுத் துணைக்கு நன்றி" என்று குதிரையில் ஏற முற்பட்ட சமயத்தில் காட்டுவாசியின் குரல் அவனைத் தடுத்து நிறுத்தியது.

"ஐயா ! ஒரு நிமிடம் பொறுங்கள். இந்த முத்துமாலையை என் நட்பின் அடையாளமாக ஏற்றுக்கொள்ளுங்கள். இந்தக் குடுவையிலிருக்கும் வாசனைத் திரவியத்தை உடலில் பூசிக்கொள்ளுங்கள். வழியில் எந்த ஆபத்தும் உங்களை நெருங்காது. அப்படியும் மீறி நெருங்கினால் உடனே விலகி விடும்" என்று கூறிக்கொண்டே குடுவையை நீட்டினான்.

மனதையே மயங்கச் செய்யும் ரோஜா மல்லிகை மலர்களின் சாறைப் பிளிந்திருப்பதாக மணத்தது வாசனைத் திரவியம். அவனை மேலும் காயப்படுத்த விரும்பாத ரவிவர்மன் குடுவையில் இருந்த திரவியத்தைச் சந்தனம் பூசுவது போன்று உடலில் பூசிக்கொண்டு மீண்டும் ஒரு முறை நன்றி தெரிவித்துவிட்டு குதிரையிலேறி புறப்பட்டுச் சென்றான். அவன் இருட்டில் மறையும் வரை கவனித்துக்கொண்டிருந்த காட்டுவாசி, ரவிவர்மன் கண்பார்வையிலிருந்து மறைந்ததும் ஓரிடத்தை நோக்கிப் புன்னகை புரிந்தான். மரத்தின் பின்னாலிருந்து ஒரு முதிய காட்டுவாசி தோன்றி அவனருகில் வந்தார்.

காட்டுவாசியின் சந்திப்பு ரவிவர்மனுக்குப் புதிய அனுபவத்தைக் கொடுத்தது. அவர்களின் பழக்க வழக்கங்களும் உடைகளும் வித்தியாசமாக இருக்கிறதே! என்றெண்ணிக்கொண்டே செல்லுகையில் திடீரென்று அவனைச் சுமார் பத்துப் பதினைந்து காட்டுவாசிகள் சூழ்ந்தனர்.

ரவிவர்மன் ஸ்தம்பித்தான். என்ன செய்வதென்று குழம்பினான். காட்டுவாசிகளின் முகத்தில் கொலைவெறி குழுமி இருந்தது. ஒருவன் ரவிவர்மனைத் தாக்கிக் கீழே விழ வைத்தான். விழுந்த ரவிவர்மன் தன் உடைவாளை உருவி தாக்கத் தயாரானான். இரண்டு காட்டுவாசிகளை உதைத்துக் கீழே தள்ளி மற்றவர்களை வீழ்த்தப் போராடத் தொடங்கினான். காட்டுவாசிகளும் சளைத்தவர்கள் அல்ல என்பதைப் போல் அவனைத் தாக்குவதற்காக நெருங்கியபோது திடீரென மகுடிக்கு மயங்கிய நாகத்தைப் போல மயங்கி நின்றார்கள். ஒருவரையொருவர் புதிராய்ப் பார்த்து ரவிவர்மனைத் தாக்காமல் விலகினர். தாக்கியதற்கு மன்னிப்பு கோரும் முறையில் ஒருவன் கீழே முட்டிபோட்டு வருத்தம் தெரிவித்தான்.

என்ன நடக்கிறதென்று குழம்பினான் ரவிவர்மன். தாக்கியவர்கள் எதற்கு வணங்குகிறார்கள்? என்று மேலும் குழம்பி அனைவரையும் நோட்டமிட்டான். தாக்கியவன் மன்னிப்பு கேட்டமையால் அவனைத் தாக்க விரும்பாமல் குதிரையிலேறி சிட்டெனப் பறந்தான். வழியில் சந்தித்த காட்டுவாசி சொன்னது நினைவிற்கு வந்தது ரவிவர்மனுக்கு. 'இந்த வாசனைத் திரவியத்தைப் பூசிக்கொள்ளுங்கள். வழியில் ஆபத்து நேராது. அப்படி நேர்ந்தால் விலகும்' என்று அவன் கூறியது ரவிவர்மனின் காதுகளில் ஒலித்துக்கொண்டேயிருந்தது.

நாம் தப்பியதற்குக் காரணம் இந்த வாசனைத் திரவியமா? அப்படியானால், வழியில் சந்தித்தவன் யார்? எதற்கு அவன் நம்மைக் காப்பாற்ற எண்ண வேண்டும்? என்று சிந்தித்துக்கொண்டிருந்த வேளையில், ஓர் அம்பு அவன் முகத்தைக் கடந்து சென்றது.

'ஒரு வினாடி தாமதித்திருந்தாலும் தனது உயிர் போயிருக்குமே. அம்பை எய்தவன் யார்?' என்று திரும்பிப் பார்க்கும் வேளையில் குதிரையின் மீது இன்னோர் அம்பு குத்தியது. குதிரை தடுமாறிக் கீழே விழுந்து, ரவிவர்மனையும் தள்ளியது. கீழே விழுந்த ரவிவர்மன், 'யார் நம்மைத் தாக்கியது?' என்றெண்ணி சுற்றும் முற்றும் பார்த்தான். தாக்கியவன் தூரத்தில் சென்றுகொண்டிருந்தான். அவனது குதிரையின் குழம்பொலி மட்டும் மெலிதாக ரவிவர்மனுக்குக் கேட்டது.

*தொடரும்...*

காதல் உனக்கு
கற்பூரம் எனக்கு
தீபம்
நிலைத்திருக்கிறேன் ...!!!
யோசித்து வருவதில்லை
காதல்
யோசிக்காமல் உன்னை
சந்தித்தேன்
உணர்ந்து கொண்டேன்
தவறை ....!!!
இளநீர் போல் உன்னை
இதயத்தில் வைத்திருக்கிறேன்
நீ கண்ணீராய் வருகிறாய் ...!!!

- இனியவன் -

## கவிஞன் விஞ்ஞானியானால்..!!!

சுதா



== பூமி ==

இருபத்தி மூன்றரை
சாய்வு கோணத்தில்
பரதமாடும் பெண்..!!!

பரதத்தின் பாத சுவடுகள்
நீள்வட்ட கோலம்..!!!

== நிலா ==

சுழல் ஆணியின்றி
அந்தரத்தில்
சுழலும் பம்பரம்..!!!

கதிரவனின் கதிரொளியை
குளிர்விக்கும்
கோல குளிர்விப்பான்..!!!

தினகரனை பூமிக்கு
எதிரொளிக்கும்
பாதரச கண்ணாடி ..!!!

== வானம் ==

கணக்கில்லா உயிர்கோலங்களை
உள்ளடக்கிய
எல்லையில்லா அமேசான் காடு..!!!

பகலவன் ஒளிக் கீற்றில்
வேய்ந்த
நீலக் கற்பனைக் கூரை ..!!!

ராகத்தோடு பூமியின் தாகம்
தணிக்கும்
மேகக் குடங்களின் தோட்டம் ..!!!

== வானவில் ==

திரவ தேகத்தை சிதைத்து
கார்மேகமது
சிந்துகிறது திரவ முத்தை..!!!

பரிதியவன் பார்வை
திரவ மேனியில் தெறித்து
ஏழு வண்ண வட்டமானது ..!!!

== கடல் ==

பூமகள் உடலில்
படர்ந்துள்ள
உவர்ப்பு நீர்படலம்..!!!

அறிவியல் அறியாத
உயிர்களின்
அதிசய உலகம்..!!!

சரித்திரத்தை கரைத்து
கரையாத
சரித்திரமான கரைப்பான்..!!!

== அணுக்கரு பிளவு ==

கவிஞனின் கற்பனைப் போல
துகளொன்று இரண்டாகிறது
இரண்டு நான்காகி எட்டாகி
.
.
தொடர்கிறது முடிவிலியாக

கட்டுபடுத்தினால்
அணு உலையெனும் கவிதை
கட்டுபடுத்தாவிட்டால்
வெடி குண்டெனும் அழிவு ..!!!!

கண்ணாக இருந்தாய்
கண் இமையாக -நான்
இருந்தேன் ....!!!
நான் கண்ணாக இருந்த
வேளை - நீ
கண்ணீராக
வெளியேறுகிறாய் ....!!!

- இனியவன் -

# அருள்தரும் ஆயிரம் தமிழிசைப்பாடல்கள்

வேதாந்த கவியோகி நாகசுந்தரம்

வடமொழியில் உள்ள ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமங்கள் அன்பர்கள் அறிந்ததே! எல்லாம் வல்ல குருவடிவான இறைவியின் அருளால் ஸ்ரீலலிதா சஹஸ்ரநாமம் என்ற ஸ்ரீ தேவியின் 1000 பெயர்களுக்கும் ஒவ்வொரு பெயருக்கும் ஒரு தமிழ் கவிதைப் பாடல் இயற்றப்பட்டுள்ளது.

### 1. ஸ்ரீமாதா

அம்மா உனக்கு நமஸ்காரம்
அன்பும் அருளும் தரவேண்டும் (அ)
ஸ்ரீஎன்ற திருவின் அவதாரம்
ஸ்ரீஎன்றால் அமுதவடிவாகும் (அ)

அழகாய் தந்தாய் ஞானானந்தம்
பழமைப் பொருள் நீ பரமானந்தம்
குழந்தை நானே அன்னை நீயே
அமுதுண்ண பெறுவேன் அன்புடனே (அ)

விடமுண்ட சிவனார் உயிர் பிழைத்தார்
திடமான உந்தன் திருவடிவால்
தடையில்லா ஞானம் நான் பெறுவேன்
கடத்தினுள் உன்னை வரவழைத்தேன் (அ)

### 2. ஸ்ரீமஹாராக்ஞீ

பக்தி செய்தேன் உந்தன் பாதத்திலே
புவனம் 14ம் ஆளும் புவநேச்வரியே (ப)
பேரரசி நீ படைத்து காத்து அருளும் பேரரசி
பக்குவமான பரந்த மனதுடன் (ப)

ஞானாநந்த நிலை அளித்தாய் பரமானந்த பர வெளியில்
ஞாலம் தன்னை பரிபாலித்தாய் நலமுடனே
தன்னைத்தான் அறிந்திடவே அறிவளித்தாய்
பின்னை பிறப்பறுத்த பராசக்தி (ப)

திருவருள் தந்திடும் தத்துவத் தாய் நீ
அருள்சக்தி வடிவான ஸத்குரு ரூபிணீ
கருவினை காக்கும் கரத்தவள் நீ
தருவாய் விளங்கும் திருவே நீ (ப)

### 3. ஸ்ரீமத் ஸிம்ஹாஸனேச்வரி

ராகம் - ஆனந்த பைரவி

அரியணை மீதமர்ந்த ஆதிசக்தியே
அறியாமை நீக்கிடுவாய் ஆதிசக்தியே (அ)
நிலையான மனமருளும் நித்யையே
அலைந்து திரியும் என் மனமெனும் (அ)

ஞானமெனும் சிம்மம் நான்கு கால்கள் அதற்கு
கனமான மனம் புத்தி சித்தம் அஹங்காரம்
தினமும் பணிய தரவேண்டும் வரம்
அன்னை உந்தன் அருளே நிரந்தரம் (அ)

மஹிமை உனக்கிங்கே ஸ்ரீமத் ஸிம்;மாசனம்
அகில உலகும் இங்கே உன் இமை அசைவு
துகளாகும் துன்பங்கள் திருவடி பணிந்தால்
ஜகமாளும் ஜகன்மாதா உனக்கே நமஸ்காரம் (அ)

### 4. ஸ்ரீசிதக்னி குண்ட ஸம்பூதா

ராகம் - மோஹனம்

சித்தாம் அக்னி குண்டத்திலே
சீரிய லலிதை உதித்திட்டாள் ஸமபுத்தி எனும் (சி)
தேவர்கள் செய்தார் பெரும் யாகம் அதில்
திருவருள் தந்தது திரிபுரையாம் அங்கு (சி)

அசுரர்கள் கொட்டம் அடங்கிடவே
திசையெங்கும் ஒளிர அவதரித்தாள்
கசடற கற்ற முனிவரெலாம் அவள்
இசையினை முழங்க உயர் ஞான (சி)

அசையும் சித்து அவளேதான் மனம்
அசையும்போதில் அவள் மறைவாள் நல்
இசையாம் ஞான ஆனந்தம் அந்த
விசையில் வேத ஒலியாவாள் (சி)

### 5. ஸ்ரீதேவ கார்ய ஸமுத்யதா

ராகம் - கல்யாணி

தவத்தினை செய்தது தேவக்கூட்டம் அந்த
தவத்திற்கு மகிழ்ந்தது அன்னை உள்ளம் (த)
அசுரரை அழிக்க அவள் வந்தாள் நல்
சுரராம் தேவர்களை காத்து நின்றாள் (த)

காமக்ரோதம் என்பது கொடு அசுரர் அதை
காமேச்வரி வந்து மாற்றி அமைத்தாள்
சேமங்கள் சேர்ந்தது தேவர் மனத்தில் நல்
காமமாம் ஞானாநந்த பேறு தந்தாள் (த)

ஸாத்வீக செயல் எல்லாம் தேவராவார்

ஆத்மீக வாஸனைதான் அமராவதி
சுத்த மனமிங்கே இந்திரனாம் அவரை
காத்திடும் கைக்கிங்கே நமஸ்காரம் (து)

**6. உத்யத்பானு ஸஹஸ்ராபா**

ராகம் - ஆனந்தபைரவி

ஆயிரம் ஞாயிறு உதித்தது போல்
அன்னை இங்கே விளங்குகிறாள் (ஆ)
அருளின் சக்தி அவளே முக்தி
ஆயிரம் பெயரில் அவளின் பக்தி (ஆ)

அறிவில் மகிழ்வு அவளால் வந்தது
பெரிதாம் சூரியப் ப்ரகாசம் கொண்டது
துரிதமாய் அக்ஞான தொல்லை தீர்ப்பது
மரணத்தை நீக்கும் மங்களம் கொண்டது(ஆ)

ப்ரகாசம் விமர்சம் இணைந்தால் சக்தி
தரமான பக்தருக்கு தந்திடும் அருளை
அறத்தினை செய்ய விரும்பிடும் மனமும்
வரத்தினை நல்கும் வாக்கின் குணமும்(ஆ)

**7. சதுர்பாஹு ஸமன்விதா**

ராகம் - மோஹனம்

ஸந்ததம் எனக்கு அருள் தா
சதுர்பாஹுஸமன்விதா (ஸ)
நால்வகை ஸாதனம் நான் செய்ய
நால்வேத நூலும் நாவிலுற (ஸ)

ஸ்ரீகுரு வந்து ஸோஹம் பாவனை தந்தார்
ஸ்ரீநாத கத்யத்தை நாவிலுற மொழிந்தார்
ஸ்ரீநதரம் தன்னில் சிறப்புடன் விளங்கும்
சீரான ஞானாநந்தம் சிரந்தன்னில் நின்றிட (ஸ)

கையில் புஷ்பம் கருணையாய் கொண்டாய் மறு
கையில் கரும்பை மனமென தரித்தாய்
வாயிலாம் முக்திக்கு விதவித தர்மம்
தாயாய் வந்து தயைகுணம் கொண்டு (ஸ)

**8. ராகஸ்வரூப பாசாட்யா**

ராகம் - ராகமாலிகா

ராகமெனும் பாசம் நம் ராகத்வேஷ நாசம்
ராஜராஜேச்வரி கையிலுள்ள (ரா)
மனமே ஆசையை துறந்து விடு அவள்
இனத்தில் நீ இன்று சேர்ந்து விடு (ரா)

சரணத்தை பிடித்துவிட்டால் நம்
சங்கடங்கள் தொலைந்துவிடும்
மரண பயம் நீங்கிவிடும் அவள்
ஸ்மரணம் மனம் பெற்றுவிடும் (ரா)

உலகத்தின் ஆசையை உந்தன் மனம் துறந்துவிட்டால்
உயர்வான ஆனந்தம் நல் ஞானத்தில் லயித்துவிடும்
அயர்வெல்லாம் இற்றுவிட ஆனந்தம் மனதிலுற
பயத்தினை போக்கிடவே பராசக்தி கையிலுள்ள (ரா)

**தொடரும் ...**

## எங்க குடும்பம்

grapes mahendran

பிள்ளைகளுக்கு
பக்குவமாய் சமைத்து
பரிமாறவேண்டிய அம்மா
பத்து வீட்டில்
பத்து பாத்திரம் தேய்க்கிறாள்...

பிரசவத்திற்கு
பிறந்த வீடு வரவேண்டிய அக்கா
வரதட்சனை பாக்கிக்காக
வாழவெட்டியாக...

வாய்ப்பாக
வரன் அமைந்தும்
வசதிகுறைவால்
வயதாகிப்போன சின்ன அக்கா...

அதிகாரி ஆகவேண்டிய அண்ணன்
ஏதேதோ படித்தும் ஏதேதோ எழுதியும்
மாலைநேர உணவு விடுதியில்
எடுபிடியாகத்தான் எடுபட்டார்....

சத்துணவு சாப்பிட
பள்ளிக்கூடம் போகும்
கடைக்குட்டி நான்...

இன்றாவது குடிக்காமல்
இருக்கலாம்
குடிகார அப்பா.

# தமிழ் தேசம்

கனிகீஸ்

பாட்டன் பூட்டன் காலத்துல
பண்போடு இருந்த நேரத்துல
பொழப்பு தேடி வந்தாங்க
அண்டிப் பிழைக்க வந்தவங்க
அடிமையாக்கி விட்டாங்க...

* * *

படை எடுத்து வந்தவங்க
வித்துப் பொழைக்க வந்தவங்க
கொட்டிக் கிடக்கும் செல்வம் கண்டு
கொள்ளை அடிச்சுப் போனாங்க

* * *

நாட்டை பிடிச்ச அன்னியன் தான்
நம்மை ஆட்டிப் படைக்க பாத்தாங்க
அவன் ஆங்கில மருத்துவம் பரப்பியதால்
நம் அத்தனை மருத்துவம் மறந்துவிட்டோம்...

* * *

சித்த ஆயுர் வைத்தியரை அவன்
அழித்துக் கொன்று விட்டதினால் நாம்
ஆங்கிலேயே டாக்டர்களின்
காலில் விழுந்து கிடக்கின்றோம்...
பழந்தமிழ் உணவு மறந்து
நோய்பிடித்து சாகிறோம்

* * *


அத்தோட அவனும் நிக்கலியே
அவன் சொந்த மதத்தை பறப்பிவிட
நாம் நம் பாரம்பரியம் மறந்துவிட்டோம்
நம்மை படைத்த வனையும் மறந்துவிட்டோம்

* * *

தாய்தமிழை ஈனபாசை என்றான்
தமிழ்த்தாய் கண்ணீர் விடுகிறாள்
ஆங்கிலம் வளர்த்தான் அவன்
ஆதிக்கம் விதைத்தான்

* * *

எத்தனையோ நாட்டையெல்லாம் அவன்
அடிமைபடுத்தி, இரத்தக் குழியல் குளித்துவிட்டு
அன்பு என்று வேடமிட்டான்... அவன்
அரசியல் மதத்தை நம்மேல் திணித்துவிட்டான்...



* * *

கருப்பை திட்டிய வெள்ளையனோ நம்
கருப்பன் காந்தியின் முன்னே தோற்றான்...
விடுதலை பெற்றும் நாம்
ஆங்கிலமொழிக்கும் அவன் அரைகுறை
நாகரீகத்திற்கும் இன்னும்
அடிமையாக இருப்பதுவோ?

* * *

நாம் அன்னிய துணியை எறித்தது போல்
அன்னிய மொழி மோகம் மறந்து
அன்னை தமிழை வளர்த்திடுவோம்

* * *

கண்ணாக இருந்தாய்
கண் இமையாக -நான்
இருந்தேன் ....!!!
நான் கண்ணாக இருந்த
வேளை - நீ
கண்ணீராக
வெளியேறுகிறாய் ....!!!

- இனியவன் -

# என் பேருந்து பயணம்...

கனிகீஸ்



அதிக தூரம் நடந்து விட்டேன். என் கால்கள் வலிக்க ஆரம்பித்து இனி என்னால் ஒரு எட்டு கூட நடக்க முடியாதென என் மூட்டுகளின் வேதனை என்னை அமரவைத்துவிடுவதென அடம்பிடிக்க ஆரம்பித்திருந்தது. உச்சி வெயில் வேறு என் ஈரப்பதம் முழுதும் உறிஞ்சியதால் என் நாக்கு வரண்டு தாகம் எடுக்க ஆரம்பித்தது. இனி என்ன செய்வதென மடங்கிப் போய்விடவும் மனம் விரும்பிடவில்லை எப்படியேனும் இலக்கை அடந்தே தீரவேண்டும். இன்னும் கொஞ்ச தூரம் எப்படியாவது நடந்துவிட்டால் என் காட்டுப் பாதை பயணம் முடிந்துவிடும் அதன் பின் ஊருக்கு செல்லும் ஒற்றை பஸ் மட்டும் பிடித்துவிட்டால் போதும்.

என் மகனையும் பேத்தி, பேரனையும் பார்த்துவிட்டு நாளை திரும்பி விடலாம். என் மகன் சுகந்தன் என்னை விட்டு போய் இன்றொடு பத்து வருடம் முடிந்து விட்டது. ஒவ்வொரு வருடமும் நான் மட்டுமே போகிறேன் சுகந்தனை பார்க்க, அவர் என்னுடன் வருவதேயில்லை, எத்தனை முறை சொல்லிப் பார்த்தாகி விட்டது, முடியாது என்று மட்டுமே பதிலாய் வரும். அவரை போல இருந்துவிடவும் மனம் ஒப்புக் கொள்ள மறுக்கிறது. எப்படியோ பேருந்து நிருத்தம் வந்து விட்டேன். அங்கே ஒரு வாலிபர் அமர்ந்திருந்தார், அருகில் போய் நின்றேன்.

" தம்பி பஸ் போயிடுச்சா" என்றதும்,

அவன் என்னை ஏற இறங்க பார்த்துவிட்டு

"கிழவிக்கு என்ன நக்கலு பஸ் போனா நா இங்க என்ன வெட்டியாவா உக்காந்திருக்க போறேன்"

என்றான். அவன் பேசுகையில் சாராய வாடை மூக்கை துளைத்தது. தள்ளி வந்து நின்று கொண்டேன், எங்க இருந்து தான் இத கண்டு பிடிச்சாங்களோ எத்தனை குடும்பம் வீணாப் போகுது, என நினைவோடுகையில் என் குடும்பம் கூட இதனால் தான் பிரிந்து போனதே என நினைக்கையில் வேதணை என்னை பதம் பார்தது.நான் அசந்து போய் உக்கார்ந்து விட்டேன் அழுப்பில் அறுபத்திரண்டு வயதில் இத்தனை தூரம் நடந்து வந்ததே என் அழுப்பிற்கு காரணம்.

"ஏய் கிழவி பஸ் வந்துடுச்சு கனவு கண்டுகிட்டு இருந்தீனா இனி ராத்திரி வரை இங்க தான் நிக்க வேண்டியிருக்கும்"

என்று கூக்குரல் இட்ட படியே அவன் ஓடிப் போய் மறித்தான் பேருந்தை, நான் வேகமாய் எழும்ப நினைத்து இயலாமல் சருக்கி மீண்டும் எழும்பினேன், அவன் அதற்குள் பேருந்தை நகர்த்தி விட்டான்,

"அச்சோ நிருத்துங்க தம்பி"

என்று சத்தமிட்ட படியே என் சக்தியெல்லாம் திரட்டி ஓடிப் போய் நெருங்கினேன்.

"ஏன் பாட்டி வயசான காலத்துல உசுர எடுக்கற நீ பாட்டுக்கு வந்து வண்டி டயர்ல விழுந்துட்டா என் வேலை போறதுக்கா?"

என திட்டியபடியே நடத்துனர் என் கரம் பற்றி படிக்கட்டில் ஏற்றினார். அத்துடன் முன் சீட்டில் இருந்தவர்களை எழும்பச் சொல்லி விட்டு எனக்கு இடம் கொடுத்தார் அமர. மகராசனா இருப்பா என சொல்லியபடியே என் மகன் ஊருக்கு டிக்கட் வாங்கினேன். என் நினைவுகள் பின்னோக்கி சென்றது.

எனக்கு ஒரு மகன் ஒரு மகள், மகள் சிறுவயதில் மலேரியா கண்டு இறந்து விட சுகந்தன் மட்டுமே என் சொந்தமாகிப் போனான். அவனும் ஆயி அப்பன் மேல் மிகுந்த பாசம் கொண்டவன் தான், படிக்கவென்று பட்டனம் போனவன் அங்கே தனக்கு பிடித்த மல்லிகாவையே திருமணம் செஞ்சுகிட்டான், மனசுக்கு ஒப்பாட்டியும் இருக்கறது ஒரு புள்ளனு அவரும் நானும் ஒத்துகிட்டோம் ஆனா மல்லிகாவுக்கு எங்களை கண்டாலே ஆவல, எப்பவும் ஏதாவது சொல்லித் திட்டிக்கிட்டே இருப்பா, அவ பேசும் போதெல்லாம் அவருக்கு கோபம் வரும்.

சும்மாவா அவர் வயசுக்கு ஒத்தவங்களே அவர் முன்ன நின்னு பேச பயப்படுவாங்க ஆனா இவ எப்பவும் ஏச்சும் பேச்சுமாவே அவர நோகடிச்சா, அவர் வாய்திறந்து பேசினா மரியாதை கிடைக்காதுனு கம்முனு இருந்துடுவாரு. எப்படியோ பேரன் பேத்திக பிறந்து கொஞ்ச காலம் எங்ககூட தான் இருந்தாங்க, அன்னைக்கு மட்டும் அது நடக்காம இருந்திருந்தா இப்படி எட்டு வருசமா கஷ்டப்பட்டு ஓடி வந்து

# இயற்கையின் காதல் மறுசுழற்சி

## கவியாழினி



மேகமகளிடம் காதல் கொண்ட
காற்று வாலிபன்
காதல் ஆசையில் தீண்டிட
கருவாக உருவாகும்
மழைத்துளி மகள் அவள்

வாழ ஆசைகொண்டு பூமிநோக்கிட
வரும் வழியில்
காலங்கள் மாறிவர பூப்பெய்தும்
அவளை தீண்டிடாமல்
மக்கள் குடைகளுக்குள் தஞ்சமுற
மீறியும் தீண்டிவிட்டால் நடக்கிறது
தலை குளியல்

அவளின் வருகையில் மகிழ்ந்து
ஆற்றங்கரைகளிலும் ஓடைகளிலும்
நடக்கிறது மகிழ்ச்சி திருவிழாக்கள்
பருவக்காதல் அவளையும்
எட்டிவிட நிகழ்கிறது சூரியனோடு
காதல் திருமணம்

மணந்த அவனோடு சங்கமித்து
மகிழ்ச்சி வாழ்வில்
ஆவியாகி அவனை சென்றடைய
காதல் கணவன்
அன்பில் மறந்து போகிறாள்
வாழ்ந்த பூமி
காய்ந்து கொண்டிருப்பதை

பூமி ஈன்ற மகள்களாம்
மரங்கள் தாயைகாக்க
மேக மகளுக்கு முறையாக
ஈன்றெடுக்கின்றன காற்றென்னும்
மகனை மீண்டும் நடக்கிறது
இயற்கையின் காதல் மறுசுழற்சி

பார்த்துட்டு போற நிலமை வந்திருக்காது என நினைத்த போது என் கண்கள் கலங்க ஆரம்பித்தன.

"பாட்டி நீங்க எறங்க வேண்டிய எடம் வந்திருச்சு சீக்கிரம் இறங்குங்க"

என என் கரம் பற்றி இறக்கி விட்டார் நடத்துனர். நான் இறங்கியதும் கணேசன் வந்து என் பையை வாங்கிக் கொண்டான்.

"குடுங்க பாட்டி நா கொண்டாரேன்"

என்றவனை தலையை வருடி உச்சி முகர்ந்தேன்.

"ஏன் பா இப்பிடி எழைச்சு கருத்து போய்ட்ட" என நான் கேட்கவும்,

"போ பாட்டி நா எப்பவும் இப்படி தான் இருக்கேன் உன்னையாட்டம் கருப்பாச்சே "

என்றவன் என்னை ஒரு தரம் பார்த்துவிட்டு

"தாத்தா இந்த தடவையும் என்னை பார்க்க வல்லியா"? என்றான்.

என்ன சொல்வதென தெரியாத போதும்

"நீ தான் வாயேன்டா உங்கப்பனுக்கு தெரியாமயாச்சும், வந்து பாத்துட்டு போனாலாவது அவருக்கும் பாசம் புரிபடுமோ என்னமோ"? என்றேன்.

"கண்டிப்பா பாட்டி இந்த தரம் பரிச்சை லீவு விட்டா நான் வாரேன் "

என்றவனை இறுக தழுவி கட்டிக் கொண்டேன். கணேசன் மட்டும் தான் இப்படி இவன் தங்கை ரம்யா போனாள் பேசக் கூட மாட்டாள், அருகில் சென்றாளே ஓடிப் போய் அவள் அம்மா புடவையில் ஒழிந்து கொள்வாள்.

"வறுலீனா விடுங்களேன் அவளை ஏன் பயமுருத்துரீங்க" என பரிந்து பேசுவாள் மல்லிகா.

ஒவ்வொரு முறையும் இங்கு வந்து போனபின் அவரிடம் கதையாய் விவரிப்பேன் கேட்டு விட்டு ஒன்றும் சொல்லாமலே எழுந்து போய்விடுவார். ஆனால் அவர் கண்களின் ஓரம் நீர்த்துளி கசியும் அதை தன் அழுக்கு துண்டால் துடைத்தபடி எழுந்து போவார். அத்தனை ஏக்கம் இருக்குமாயின் வந்து பார்த்து விட்டு போக வேண்டியது தானே என சுகந்தன் சொன்னதாய் சொன்ன போதும் கூட அவர் வர மறுத்து விட்டார்.

"அவ இங்க இருக்கறப்பவே அத்தனை பேசினவ அங்க போனா என் மானம் போயிரும் அவ வூட்டுவாசல்ல போயி அவமானப் பட நா தயாராயில்லை"

என்று சொல்லுவார். சுகந்தனின் வீட்டை நெருங்கினேன்.

"பாட்டி பாத்து வா வீட்டு வேலை செய்றோம் ஒரே கல்லா கிடக்குது தட்டி விட்டு விழுந்துராத"

என என் கரம் பற்றி கூட்டிப் போனான் கணேசன். முன்னாடி இருந்த வீட்டை இடித்து விட்டு பெரிய வீடு கட்டிக் கொண்டிருந்தான் சுகந்தன். இன்று

ஞாயிற்றுக் கிழமை ஆகயால் வீட்டில் அனைவரும் இருந்தனர்.

"வாமா"

என்றான் சுகந்தன். உக்கார பிரம்பு நாற்காலி எடுத்து போட்டான். சத்தம் கேட்டு எட்டிப் பார்த்த மல்லிகா

"வாங்க என்றதுடன் என்னங்க அந்த டீப்பாய எடுத்து போடுங்க பக்கதுல அவுக கொண்டு வந்ததை வைக்கட்டும்"

என நாக்கில் சுட ஆரம்பித்தாள். தான் எதுவுமே வாங்கியாரவில்லை என சொல்லிக் காட்டுகிறாள்.

என் பெயரின் ஒவ்வொரு
எழுத்தும் நீ
எழுத்து பிழை இல்லாமல்
இருந்தால் ....!!!

கண்ணீரைப்போல்
திடீரென வருகிறாய்
வழிந்தே போய்
விடுகிறாய் ...!!!

பகலில் இருக்கும்
நட்சத்திரம் போல்
இருக்கிறது உன்
ஞாபகம் .....!!!

- இனியவன் -

"ஏம்மா பாட்டி பாரு மாங்காய், கொய்யாக்காய், மாதுளம்பழம் எல்லாம் பரிச்சுட்டு வந்திருக்காங்க "

என்றான் கணேசன் விட்டுக் கொடுக்காமல்.

"ஆமா தோட்டதுல விழையரதுல கொஞ்சூண்டு பரிச்சுட்டு வந்து கொடுக்க என்ன கொல்ல காசா செலவாகும்?"

என்றாள். சுகந்தனுக்கு கோபம் வந்த போதும் அடக்கிக் கொண்டான். இதே பழங்கள் வாங்க நாம் எப்படியும் குறைஞ்சது நானூறு ரூபாயேனும் செலவழிக்க வேண்டியிருக்கும் ஆனால் இது போல் ஆரோக்கியமானதாய் கிடைக்குமா என்பது சிரமம் தான். அவளிடம் சொல்லிப் புரிய வைக்க முடியாது எனவே அமைதியாய் வேடிக்கை பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

"ஏம்பா ரம்யா குட்டி எங்க?"

என நான் கேட்டதும்

"அவ உள்ளதான் இருக்கா பாட்டி நீ வர்ரீனு அப்பா சொன்னதும் உள்ள போயி கதவ சாத்திக்கிட்டா வரவே மாட்டேங்கரா"

என கணேசன் சொன்னதும் நான் வருந்தினேன். இதே மடியில் போட்டு தான் தாலாட்டி வளர்த்தேன் ஆனால் இன்று என்னை பார்த்தே பயப்படுகிறாள் என்று நினைத்துக் கொண்டு,

"கணேசா அவ மாங்கானா நல்லா திம்பா நீயே கொண்டு போயி குடு "

என எடுத்து நீட்டினேன்,

அவன் "சரி பாட்டியென" உள்ளே எடுத்து போனான்.

"ஏம்மா அப்பா எப்புடி இருக்காரு ?"

என கேட்டான் சுகந்தன்,

" நல்லாயிருக்காரு டா" என சொன்னேன்,

"சரி இரு சாப்பிட எதாவது கொண்டு வரேன் "

என எழுந்து உள்ளே போனவன், கையில் தட்டில் கொஞ்சம் கறிக்குழம்புடன் சோறு கொண்டாந்தான். எனக்கு சாப்பிட மனம் இல்லை.

"அவரை விட்டு விட்டு நான் மட்டும் கறிசோறு உம்பேனா வேணாம்டா குடுக்கறதுனா தூக்கு சட்டியில போட்டுகுடு நான் கொண்டு போய் அங்க அவருக்கும் குடுத்துபுட்டு சாப்புட்டுகறேன்" என்றேன்.

"சரிம்மா"

என உள்ளே எடுத்து போனவன் கையில் காபியுடன் வந்தான். அதை வாங்கி குடித்து விட்டு நான் கிளம்ப தயாரானேன்.

"இன்னைக்கு ஒரு நாளைக்கு இருந்துட்டு போயேன் மா"

என சொன்னவினின் முகம் தடவி முத்தமிட்டேன்.

"வேண்டாம் டா ராசா உங்கப்பாரு பசி தாங்க மாட்டாரு நான் போயிதான் ஆகணும் இருக்கற ஒரு பஸ்சும் போயிடுச்சுனா அப்புறம் எப்படி நா போறது?"

என சொல்லிவிட்டு எழுந்து கொண்டேன். ஏனோ எனக்கு இங்க வந்தாலே இருப்புக் கொள்வதில்லை வரும் வரைக்கும் பார்க்க வேண்டுமென துடிப்பேன் ஆனால் வந்த பின் மீண்டும் திரும்பி போய்விட வேண்டுமென்றே என் மனம் அடம்பிடிக்கும்.

"நான் கிளம்பறேன் தாயி "

என சொல்லவும், எட்டிப் பார்த்தவள்,

"சரி சரி போயிட்டு வாங்க"

என வாசல் படியில் நின்றபடியே வழியனுப்பினாள் மல்லிகா, இந்த முறை பஸ் ஏற்றிவிட சுகந்தன் வந்தான். நான் கொண்டு சென்ற காய்கறி, பழங்களை எடுத்து வைத்து விட்டு குழம்பு ஊற்றி வைத்த பாட்டில் என் பைக்கு இடம் மாறியது.

என்னை கரம் பற்றி கூட்டி வந்தவன்,

"அம்மா என்னை மன்னிச்சிடு அவ பேசினப்ப என்னால ஒன்னும் சொல்ல முடியலை" என தேம்பினான்.

"அட விடுடா உங்க அக்கா உசுரோட இருந்திருந்து அவ பேசினா நா தாங்கிக்க மாட்டனா மல்லிகாவும் எனக்கு மக தான்டா விடு"

என சமாதானம் சொன்னேன்.

"எப்ப ராசா உங்கப்பார வந்து பாக்குற?" என நான் கேட்டேன்.

"இல்லைமா நான் வர மாட்டேன் அவரு அன்னைக்கு கள்ள குடிச்சுபுட்டு வந்து பண்ணுன கூத்த நீ பார்த்ததானே அப்புறம் எப்படி நான் வருவேன்?"

என கேட்டவனை சாமாதானப் படுத்தி விட்டு வந்த பேருந்தில் ஏறினேன். என் மனம் அச்சம்பவத்தை நினைவுகோரியது, அன்று நோம்பி வீட்டில் தம்பி மகன் மனைவி பேரன் பேத்தியென வந்ததில் அவர் மிகச் சந்தோசத்தில் இருந்தார், தம்பி மகன் வடிவேலு கள்ளு வாங்கி வந்து அவருக்கு கொடுத்தான்.அவர் வேண்டாமென மருத்த போது,

"ஏன் பெரியப்பா நான் உங்க மகன் இல்லையா நா குடுத்தா குடிக்க மாட்டியா?"

என கேட்டதால் வாங்கி குடித்தார். வழக்கம் போல் மல்லிகா பேசவும் அவருக்கு அன்றும் கோபம் வந்தது அடக்கி வைக்க முடியாமல் கள் வெறி வேறு அவரை உசுப்பி விட வேகமாய் போனவர் அவளின் தலைமுடியை பற்றி தர தர என இழுத்து வாசலில் தள்ளிவிட்டார், நான் சுதாரிச்சு எழும்பும் முன் அது நடந்தே விட்டது இனி என்ன செய்ய? அத்தோடு கோபித்துக் கொண்டு வந்தவன் தான் இன்று வரை அப்பாவை பார்க்க அவன் வருவதேயில்லை.

அவரும் இங்கு வருவதேயில்லை, நான் அவளை மகளாய் நினைத்து அவள் பேசியதை பொருத்துக் கொள்கிறென் ஆனால் அவள் ஏன் அவரை தகப்பனாய் நினைத்து மன்னிக்க மறுக்கிறாள் என நினைத்தபடி நான் அழுது கொண்டிருந்தேன். என் சுய நினைவு மெல்ல இழக்க ஆரம்பித்தது. நான் மயங்கியபடி சாய்ந்தேன் மரணப் படுக்கையில்..

❖ ❖ ❖

## கனவுக் கற்பனை

**பாண்டிமா**

விழி வழிப் புகுந்து
விதையெனப் புதைந்து
கிளைகள் பரப்பி
பலம் பெற்றுவிட்டாய்
பிடுங்கித் தூர எறிய
வேரறியாதுத் தோற்கிறேன்

சிந்தையிலும் நின்
நினைவுகளின் நிழல்கூட
தொடர்ந்திடாமல் இருக்க
மறதியைத் தேடுகிறேன்
என் விலாசம் இன்றியே
தொலைய முயல்கிறேன்

நீ தேடி அலையாதே
நான் தொலையவில்லை
எரிந்து சாம்பலானதாய்
எண்ணப் பழகிக்கொள்
வெறும் காற்றில் சுவாசம்
தேடாதுக் கலைந்துபோ

விதி மீறிப் புக நினைந்து
ரணமாகிப் புலம்பாதே
பார்த்தால் போதுமென்று
பாதையில் வந்திடுவாய்
பார்த்தவுடன் உயிர்க்குமிழ்
உடைந்து சிதறிப் போகுமே

விலக நினைத்து முகம்
திருப்பி பாதை மாற்றிட
துவண்டு போவாய் என்றே
பதறி உள்ளே பதைப்பேன்
இறுக்கி முகம் காட்டியே
வெறுப்பதாய் நடிப்பேன்

நான் வியந்துப் பார்க்கும்
என் உயிரின் உருவம் நீ
மனத் திரையில் நிறுத்தி
அகம் பூரித்து மகிழ்வேன்
நாம் சந்தித்தது கடவுள்
தந்த ஒருக் கொடையல்ல

திசைக்கொரு பாதையை
பிரித்துப் போட்டதும்
காலம் தாழ்த்தி வந்து
கண்களில் நம் பிம்பம்
காட்டியதும் விதிதான்
நம் மதிச் சரியலாகாது

சிந்தை தெளிவு கொள்
சிதறாது முழுதாயிரு
கடமை முடித்து நமக்காய்
சொல்லி வருவேன் என்பாய்
கனவுக்கும் எல்லையுண்டு
கற்பனை சாத்தியமில்லை

தீராக் கனவுகள் சுமந்தபடி
அவரவர் தம் கடமைகள்
செழிவுறச் செயலாக்கி
காலம் கடந்து போகட்டும்
பயணத்திற்கு காத்திருக்கும்
குழந்தமைத் துள்ளலோடு

# உறவைத் தேடும் உயிர் – 13

சிவாஜி தாசன்




வெண்மேகங்கள் சாளரத்தின் வழியே நுழைந்து முகுந்தனின் முன்னால் மெதுவே காற்றில் நகர்ந்து சென்றன. அந்த அருமையான காட்சியை ரசிக்காதவராயிருந்த முகுந்தனின் தீய கண்கள் சுயம்புவின் மீது பாய்ந்து அவருள் சிறு பய உணர்வை ஏற்படுத்தியது. முகுந்தன் இருக்கையிலிருந்து எழுந்து சாளரத்தின் வழியே கடலெனப் படர்ந்திருக்கும் மேகங்களையும் முடிவேயில்லாத வானுலகையும் அருகினில் தெரியும் நிலவு மற்றும் ஜொலிக்கும் நட்சத்திரக் கூட்டத்தையும் சில நிமிடங்கள் வெறித்துவிட்டு மீண்டும் சிந்தனையோடு அறையின் குறுக்கும் நெடுக்குமாக சிறுநடை போட்டபடி இருந்தார்.

"அரசே ! " என்ற சுயம்புவைப் புருவங்களை உயரே தூக்கி அனல் விழிகளோடு "என்ன சுயம்பு?" என்று கேட்டார்.

"தாங்கள் ஏன் இத்துணை கவலையாக உள்ளீர்கள்?"

"மெமோரியல் உலகம் அங்கு வேலை செய்யும் வேலையாட்களின் கண்களுக்கு மட்டும் தானே தெரியும்?"

"ஆமாம் பிரபு"

"இன்று யாரோ ஒரு வெளியாள் வந்து சென்றிருக்கிறான். நான் ஏவிய மிருகத்தையும் அடக்கி, துரத்தியிருக்கிறான். அந்த மிருகம் அவ்வளவு எளிதில் அடங்காதே. அப்படியென்றால் வந்தவன் மாயாவியாக இருக்கும். இல்லையென்றால்..?" என்று தன் முகவாயை மெதுவே தடவியபடி சிந்தனை உலகில் நுழைந்துகொண்டார்.

சுயம்புவும் தன் சிந்தனை உலகில் நுழைந்துகொண்டு சிறிது யோசித்துவிட்டு, விடைகிடைக்காமல், மன்னர் முகுந்தன் கூறப்போகும் பதிலுக்காகக் காத்துக்கொண்டிருந்தார்.

"சுயம்பு, இளவரசி தான் வந்தவனுக்கு உதவி புரிந்திருக்கவேண்டும். அவள் சக்தியால் அவனை மெமோரியல் உலகத்திற்கு அழைத்து வந்து நம்மை எச்சரிப்பதாய்த் தோன்றுகிறது" என்று சீறும் பாம்பாய்க் கூறி முடித்தார்.

"அரசே, இதனை முளையிலேயே அழிக்கவேண்டும். இல்லையேல் நாம் அழிவதற்குக் காரணமாகிவிடும்"

"அழிக்கத்தான் வேண்டும்" என்று அழுத்திக் கூறினார் முகுந்தன். "அதற்குச் சில தீய சக்திகளின் உதவியை நாடவேண்டியதைத் தவிர வேறு வழியில்லை"

"பிரபோ! என்ன சொல்கிறீர்கள்?" என்று அதிர்ச்சிக் குரலில் கேட்டார் சுயம்பு.

"இத்துணை காலமாய் அமைதி காத்தவள் நேற்று தன் விளையாட்டைத் தொடங்கிவிட்டாள். அவளுக்கு இணையாகக் காய்களை நாமும் நகர்த்தினால் தான் வெற்றி காண முடியும்"

"தங்கள் சித்தம் அரசே! ஆனால், சிறையினில் தான் பெரும்பாலான தீயசக்திகள் அடைந்திருக்கின்றன. காவல் பொறுப்பும் இளவரசியிடம் தான் உள்ளது. அவரை மீறி நாம் உள்ளே நுழைய முடியாது"

"அது எனக்குத் தெரியும். ஆனால், இன்னும் தீய சக்தியின் தலைவன் மறைந்திருக்கிறான். சிறையிலிருந்து தப்பிய இன்னும் சில தீய சக்திகளும் அவனிடம் தான் இருக்கின்றன"

சுயம்புவும் ஆமோதிப்பதாய்த் தலையசைத்தார்.

"தீயசக்திகளைச் சந்திக்க உடனடியாக ஏற்பாடுகளைச் செய். தாமதிக்காதே" என்று சுய்மபுவிற்கு உத்தரவிட்டார்.

"உத்தரவு மன்னா!" என்று கூறிய அடுத்த வினாடி சுயம்பு மறைந்து போனார்.

அதைக் கவனியாது கொதிப்படைந்த மனதோடு போராடிக்கொண்டிருந்த முகுந்தன், மீண்டும் சாளரத்தின் வெளியில் நடக்கும் அழகில் மனதை உலாவவிட்டுக் கோப அனலைக் குறைக்கப் போராடினார். ஆனாலும் அவர் உள்ளம் அனலை அடக்கியபாடில்லை. அவரது மனக்கண் முன் ஒல்ட்மனின் முகமும் இளவரசியின் மலர் முகமும் மாறி மாறி மேகங்களில் தோன்றிக் கோப அனலைக் கொழுந்துவிட்டெரியச்செய்தது.

வெறிகொண்ட முகுந்தன் மேகத்தை நோக்கி ஒரு வித ஒளியைப் பாய்ச்சி அதனைக் கலைத்தார். மேகங்கள் பஞ்சுகளாகப் பிய்ந்து ஆங்காங்கே சிதறி ஓடியது அவருக்குச் சற்று நிம்மதியைத் தந்தது. இதே போல் தன்னிடம் மல்லுக்கு நிற்கும் இவர்களை ஒழித்துக்காட்டுகிறேன் பார் என்ற சாபப் பார்வையை வானை நோக்கி வீசியபடி முகுந்தன் சாளரத்தின் ஓரத்திலேயே நின்றுகொண்டிருந்தார்.

***   ***   ***

கடல் அலையின் சீற்றம் வெகுவாகக் குறைந்து வாடைக் காற்று கடல் அலையின் இன்னிசையில் சுதி சேர்த்து காதிற்கு இனிமையைத் தந்தது. அந்த இனிமையில் தன் மனத்தைக் கொடுத்துவிட்டு, சிலையென மரக்கலத்தினுள் படுத்து வானிலிருக்கும் நட்சத்திரக் கூட்டங்களையும் பொன்னிற மேகங்களையும் நோக்கியபடி படுத்துக் கிடந்தான் வசந்தன்.

அவன் எண்ண ஓட்டத்தினுள் சிறு எதிர்பார்ப்பு முளைத்தது. யாராக இருக்கும் அந்தப் பெண்ணினத்தவள்? எதற்காக நம்மை மிருகத்திடமிருந்து காப்பாற்றவேண்டும்? ஓல்ட்மனிடம் கொடுக்கும் படி ஒரு பொருளையும் நம்மிடம் கொடுத்திருக்கிறாள். நான் இங்கு வந்து நாட்கள் கடக்க கடக்க வினோதங்கள் பெருகிக்கொண்டே செல்கின்றனவே என்று எண்ணியபோது சிறு சலிப்பு அவனைச் சோர்வடையச் செய்தது.

மரக்கலத்திலிருந்து எழுந்து கடற்பரப்பைக் கண்டான். கடலின் நடுவே ஆங்காங்கே பவளப் பாறைகள் சிவப்பு நிறத்தில் மின்ன, பல வண்ண மீன் படைகளின் வருகையும் தூரத்தில் கடற்கரையின் ஓரத்தில் படர்ந்திருக்கும் புஷ்பச் செடிகளின் ஒளியும் அவற்றின் மணம் காற்றில் பரவ அவற்றுடன் லேசான தென்றல் அவன் உடலை மெல்ல வருடி புத்துணர்வை வழங்கியது. கடலின் நிறம் நீல நிறத்தில் ஒளிர்ந்து மரக்கலத்திற்கு வழிகாட்டியது.

கையிலிருக்கும் வைரத்தாலான சிறு பெட்டியைச் சிறிது நேரம் உற்றுநோக்கினான், வசந்தன். எப்படி வடிவமைத்திருப்பார்கள்? என்ற யோசனையில் சில நாழிகைகளைக் கடந்தான். மீண்டும் அலுப்பு; அலுப்புடன் கடற் பயணம்; நடுவே தன் தோழியின் சிந்தனை; அவளை எப்படியும் கண்டுபிடித்துவிடுவேன் என்ற உறுதி இப்படி பல சிந்தனைகளின் மடியில் தவழ்ந்த அவனை மரக்கலம் கரையை நோக்கிக் கொண்டுவந்து நிறுத்தியது.

மரக்கலத்திலிருந்து இறங்கிய வசந்தனின் கால்களை கடல் அலைகள் தழுவி இதழுட்டியது. அதனைக் கண்டுகொள்ளாமல் கரையை அடைந்து நடக்கத் துவங்கினான் வசந்தன். உடலையே உறையவைக்கும் குளிர் கவ்வியிருக்குமென்று முன்னமே தெரிந்திருந்ததால் தடித்த ஆடையை உடுத்தி எச்சரிக்கையோடு தன் பயணத்தை மேற்கொண்டிருந்தான் அவன்.

## நான் வரைந்த ஓவியம்

**காவ்ய**



என் கண்ணே!
உன் கற்குழலின்
மென்மை கண்டு வெட்கித்து வெடித்தோ
இலவம் பஞ்சு,
என் கண்ணுமணியே!
உன் பிறை நிலா
நெற்றியை கண்டு வெட்கித்தோ
மேக உடை பூணுகிறாள்
நிலா பெண்,
என் பொன்னே!
உன் கண்களின் ஜொலிப்பை
கண்டவர்கள் வியகுகிறார்களே !
நட்சத்திரம் இரண்டு சிதறி
வந்து உன் முகத்தில் ஒட்டிகொண்டதோ!
என் பொன்மணியெ!
தாமரை மொட்டு மலர்ந்ததில்
இரண்டு இதழ்கள் உன் கன்னங்களாக
கண்டவங்கள் வியகிறார்களே,
என் தங்கமே!
உன் செவ்விதழ்கள்
வள்ளுவனின் சிக்கனமான
இரட்டைவரிகளைப் போன்று
குழலினிது, யாழினிது
தன் மக்கள் மழலைசொல் கேளாதோர்,
ஆனால் எனக்கு உன்
அழுகுரல்கூட அமிர்தமாகிறதே,

இத்தனையும் மொத்தமான
பூ பந்தொன்று என் மடியில்-கிடக்க
அள்ளியெடுத்து இதழ்பதிக்கும் நேரம்

எங்கிருந்தோ ஓர் குரல்
நாழியாச்சு மகளே துயிலெழு
துயர்கொண்ட நெஞ்சம் துள்ளியெழுந்தது.

கையில் ஒரு விளக்கைப் பிடித்து, செந்நிற மலரின்

இதழ்களை விளக்கின் கூண்டுக்குள் திணித்தான். இரண்டு நொடிகளில் மலர் தீப்பற்றி எரிந்து அவனுக்கு வழி காட்டியது. அடர்ந்த மரக் கூட்டங்களின் நடுவே பனி சாலையில் ஓல்ட்மனை தேடி பயணம் மேற்கொண்டான் வசந்தன். மரங்களின் மேல் அடர்ந்த பனிக் கட்டிகள் படர்ந்து ஆடையாய் மரங்களை அணைத்திருந்தன. பனி வெள்ளி நிறத்தில் மிளிறி அவன் கண்களைக் கூசச் செய்தது. மரங்களிலிருந்து வடிந்த பனித் துளிகள் கீழே எரியும் பூக்களாய் விழுந்து ஒளியடங்காமல் ஒளிர, அதைக் கீழே குனிந்து ஆசையோடு கையிலேந்தி அழகு பார்த்தபடி நடந்தான் வசந்தன்.

'ஓல்ட்மன் எங்கிருப்பார்? எவ்வாறு அவரைத் தேடுவது? துணைக்கு ராஜீவ் கூட இல்லையே' என்ற சிந்தனை ஓட்டத்தில் நீண்ட தூரம் நடந்து சென்றுகொண்டிருந்தான். பாதை நீண்டது; பயணமும் தொடர்ந்தது; அவனது கால்கள் களைத்தன. அதற்கு மேல் ஓரடி கூட எடுத்துவைக்க முடியாதவனாய் அருகிலிருக்கும் மரத்தின் அடியில் படர்ந்திருக்கும் வெண்ணிறப் பனியின் மேல் அமர்ந்து அனல் மூச்சை நன்றாக வெளியேற்றி, சுற்றும் முற்றும் பார்த்தான். ஒரு வீடு கூட தென்படவில்லை அவன் கண்களுக்கு. குளிர்காற்று அவன் நாசியில் நுழைந்து அவனது சுவாசத்தைத் தடை செய்தது.

வேதனையோடு, 'இனி தேடிப் பலனில்லை; நாம் திரும்பிவிடலாம்' என்று எழுந்து இரண்டடி முன்னே வைத்தபோது, ஓர் அலறல் அவன் காதுகளில் விழுந்தது. அது ஒரு கொடிய பனி ஓநாயின் அலறல் என்பதை ஊகிக்க அவனுக்கு வெகுநேரமாகவில்லை. பயக் கண்களோடும் திகில் எண்ணங்களோடும் தன் கண்களை நாலாபுறமும் சுழலவிட்டான். காரணம், ஓநாயின் அலறல் தூரத்தில் கேட்கவில்லை. அவன் அருகிலேயே கேட்டது.

பெட்டியைத் தூக்கிக்கொண்டு தன் நடையின் வேகத்தைக் கூட்டி வேகமாக நடந்து சென்றான் வசந்தன். அப்பொழுது மீண்டும் ஓநாயின் அலறல் அவனை உறைந்து ஓரிடத்தில் நிற்க வைத்தது. மீண்டும் சுயநினைவு வர சில நொடிகள் ஆனது அவனுக்கு. இனி இங்கிருப்பது ஆபத்து என்று ஓடினான். திடீரென்று அவன் முன் குதித்து அவன் ஓட்டத்தைத் தடை செய்தது ராட்சதப் பனி ஓநாய் ஒன்று.

உடல் முழுதும் வெண்ணிற கேசங்கள் சிலிர்த்தெழ கண்கள் கரு நட்சத்திரம் போல் ஜொலித்து வசந்தனைப் பார்த்து முறைத்தபடி கோரமாக ஊளை ஒன்றை வெளியிட்டது. வசந்தன் நடு நடுங்கிப் போனான். முகம் வெளிறித் தப்பிக்க வழி தேடி ஓட ஆரம்பித்தான். ஓநாய் அவனைப் பின்தொடர்ந்து ஓடி அவனைக் கீழே தள்ளி அவன் நெஞ்சில் கால் வைத்து மீண்டும் வானை நோக்கி ஓர் ஊளையை சத்தமாக வெளியிட்டது.

இனி நாம் தப்பிக்க முடியாதென்று எண்ணிய வசந்தன், தன் கண்களை இறுக மூடிக்கொண்டான். ஓநாய் தன் உடலைக் கடித்துத் தின்னும் என்று எதிர்பார்த்து பயந்துகொண்டிருந்தவனுக்கு ஆச்சர்யம். பனி ஓநாய் அவனை கடித்துக் குதறவில்லை!!! தன் இமைகளை மெலிதாகத் திறந்து பேராச்சர்யத்தில் விழுந்து போனான். அவன் நெஞ்சின் மேல் ஓல்ட்மன தன் காலை வைத்தபடி அவன் முகத்தைப் பார்த்துப் புன்முறுவலை பூத்துக்கொண்டிருந்தார்.

"ஐயா! நீங்களா?" என்று ஆச்சர்யக் கண்களால் ஓல்ட்மனை ஆராய்ந்தான்.

சிரித்த முகத்தோடு அவன் நெஞ்சிலிருந்து காலை எடுத்து, அவன் எழுவதற்கு உதவி புரிந்தார் ஓல்ட்மன்.

"நீங்கள் தான் ஓநாயாக மாறி என்னைப் பயமுறுத்தியதா?"

ஓல்ட்மன் சிரித்தமுகத்தோடு அவனை நோக்கி, சில வினாடிகள் கழித்து, "சிறிது விளையாடினேன்" என்றார்.

ஓல்ட்மனை மனதினுள் லேசாகக் கருவிக்கொண்டான் வசந்தன். பின்னர், "இந்தாருங்கள், ஐயா! ஒரு பெண் உங்களிடம் இந்தப் பெட்டியை ஒப்படைக்கச் சொன்னார்" என்று வைரப் பெட்டியை அவரிடம் நீட்டினான்.

அதனை வாங்கிக்கொண்டு முன்னே நடந்தார் ஓல்ட்மன். அவரைப் பின்தொடர்ந்து வசந்தனும் சென்றான்.

அவரின் உடை அன்று வித்தியாசமாகவும் அவருக்கு நன்றாகப் பொருந்தி இருந்ததையும் கவனிக்கத் தவறவில்லை வசந்தன். வெண்ணிற ஆடையை உடலெங்கும் போர்த்தியபடி..கையில், அவர் தோள்களின் உயரத்திற்கு வித்யாசமான தடியும், தடியின் முனையில் தேய்பிறை நிலவின் வடிவமும் இருந்ததைக் கவனித்துக்கொண்டே பின்தொடர்ந்திருந்த வசந்தனை நோக்கி, புதிரான பார்வையை வீசினார் ஓல்ட்மன்.

"என்ன தம்பி, உன் வேலைதான் முடிந்தாயிற்றே. ஏன் என்னைப் பின்தொடர்கிறாய்?"

"வேலை முடிந்துவிட்டது. ஆனால், சில சந்தேகங்கள் முளைத்திருக்கிறதே ஐயா"

"என்னைக் காணும் போதெல்லாம் சந்தேகத்தோடுதான் வருவாயா? சரி, கேள். முடிந்தால் உன் சந்தேகத்தை நான் தீர்த்து வைக்க முயற்சி செய்கிறேன்"

"இன்று ஒரு பெண்ணை சந்தித்தேன்"

"அப்படியா? மேலே கூறு"

"ஒரு பெரும் ஆபத்திலிருந்து என்னைக் காப்பாற்றினாள்"

"ம்ம்.." என்று ஒரு சிறு முனகலோடு கேட்டுக்கொண்டிருந்த அவரை உற்றுநோக்கிய வசந்தன். "உங்களிடம் இந்தப் பெட்டியைத் தரச் சொன்னாள். அவள் யார்?"

"அவள் என்று ஏக வசனத்தில் பேசாதே. அவள் தான் மெமோரியல் உலகத்தின் இளவரசி!அதீத சக்தியை உடைய அவளின் தரிசனம் கிடைப்பது அரிதினும் அரிது"

"நீங்கள் சொல்வதைப் பார்த்தால் கடவுளைக் குறிப்பிடும்படி இருக்கிறதே"

"கடவுளைக் கூறவில்லை. மலரைக் கூறினேன்"

"நீங்கள் பேசுவது மட்டும் எனக்கு புரியவேமாட்டேன்கிறது" என்று சலிப்புடன் கூறினான்.

சிறிது நேரம் மௌனமாக பனியில் நடந்து சென்றவர், தனக்குள் ஒன்றை எண்ணி ஒரு புன்முறுவலை உதிர்த்துக்கொண்டார்.

"நீ விஞ்ஞானத்தின் நிழலிலிருக்கிறாய். நான் மெய்ஞானத்தின் மடியிலிருக்கிறேன். விஞ்ஞானத்திற்கும் மெய்ஞானத்திற்கும் சிறு வித்தியாசம் தான். விடை தெரிந்தால் விஞ்ஞானம்; தெரியாத விடையைத் தேடிக்கொண்டேயிருந்தால் மெய்ஞானம்"

"புரியவில்லையே" என்றான் வசந்தன் குழம்பிய விழிகளோடு.

வழியில் முளைத்திருக்கும் பூச்செடியிலிருந்து ஒரு மலரை எடுத்து அவனிடம் கொடுத்தார்.

"இந்த மலர் எப்படி மலர்ந்தது?" என்றார்.

"மொட்டினிலிருந்து"

"மொட்டுக்கள்?"

"செடிகளிலிருந்து"

"செடிகள்?" என்றார் மீண்டும்.

**"**விதைலிருந்து.விதை, இன்னொரு செடியிலிருந்து இப்படிக் கூறிக்கொண்டே போகலாம் ஐயா"

"அப்படியென்றால் முதல் செடி எவ்வாறு எங்ஙனம் தோன்றியிருக்கும்?" என்று ஊடுருவும் பார்வையோடு வசந்தனைக் கேட்டார் ஓல்ட்மன்.

வசந்தன் பதில் கூற முடியாமல் விழித்தான்.

## கல்லூரி வாழ்க்கையின் கடைசி நாள்..

உடனிருந்தபொழுது
வார்த்தைகள் ஊமையானது...
இதழ்கள் மௌனித்தது...
கண்கள் விழி தாழ்த்தியது...
எதிரெதிரே நின்றாலும்...
முகம் பார்த்ததில்லை...
புன்னகை சிந்தியதில்லை...
நலம் விசாரித்ததில்லை...
ஏன்???
தெரியவில்லை... புரியவும் இல்லை...
ஆனால்...
இன்றுடன் இவற்றுக்கெல்லாம்
முற்றுப்புள்ளி என்பதுபோல்...
வந்தது பிரியும் நிமிடம்...
அந்த நொடியில்தான்...
முழுமையாக உன்னை...
பார்த்தேன்.. சிரித்தேன்... பேசினேன்...
சந்திப்போம் மீண்டும்
என்று கை குலுக்கிக் கொண்டபொழுது...
என் விழிகளின் நீர் உன் கரங்களில்...
ஏன் இந்த கண்ணீர்...
உணர்ந்தேன் அந்த நொடி...
கண்ணீரின் வழி நட்பு தன்னை
அடையாளப்படுத்திக் கொண்டது
"உங்கள் இருவரில் வாழ்கிறேன் நான்" என்று...

- ரத்னா தேவி -

"அந்த முதல் செடி தான் மெய்ஞானம். விரைவிலேயே என்னைப் புரிந்துகொள்ளும் காலமும் வரும்"

வசந்தன் சிந்தனையோடு அவருடன் நடையைத் தொடர்ந்தான். வழியில் பனிக் குதிரைகளையும் இன்னும் சில மிருகங்களையும் கண்டனர் இருவரும். சில நாழிகைகள் கழிந்த பிறகு, ஓல்ட்மனும் வசந்தனும்

வீட்டை அடைந்தனர். வீட்டினுள் சென்றதும், வசந்தன் ஓர் இருக்கையில் அமர்ந்து அவர் கூறிய அனைத்து பதிலையும் நினைவில் அசைபோட்டு விடை கிடைக்காமல் பெருமூச்சை விட்டு, நிஜ உலகிற்குள் வந்தான்.

கதவைத் தாழ்ப்பாள் போட்டுவிட்டு, ஓல்ட்மன் வசந்தனை நோக்கி, "தம்பி சிறிது பொறு. இதோ வந்துவிடுகிறேன்" என்று கூறி ஓர் அறையினுள் நுழைந்துகொண்டார்.

அந்த அறையில் கும்மிருட்டு சூழ்ந்திருந்தது. அந்த கும்மிருட்டின் நடுவே ஓல்ட்மன் பெட்டியைத் திறந்தார். அதிலிருந்து ஒளி அலைகள் அவ்வறை எங்கும் பரவி ஜொலிக்கச் செய்தது. அதில் மன்னர் முகுந்தனின் முகமும் சுயம்புவின் முகமும் தெரிந்தது. வசந்தனின் உருவம் அதில் ராஜ உடையுடனும் கையில் மந்திர வாளுடனும் தோன்றியது. அதையெல்லாம் புன்முறுவலோடு புரிந்துகொண்ட ஓல்ட்மன், அந்த அறையை விட்டு வெளியே வந்தார்.

வசந்தன் சாளரத்தின் வழியே பொழிந்துகொண்டிருக்கும் பனிமழையை வெறித்துக்கொண்டிருந்தான். அவனைப் பார்த்து விஷமப் புன்னகையோடு ஒரு சிரிப்பை உதிர்த்து குடுவையிலிருந்த சூப்பில் அவரின் உடலில் இருந்து வெளியேறிய ஒளியலையைக் கலந்து அவனிடம் கொடுத்தார். குளிருக்கு இதம் என்றெண்ணிய அவனும் அதை வாங்கிப் பருகினான்.

"உனக்கு நல்ல காலம் ஆரம்பித்துவிட்டது தம்பி. உன்னுடைய குழப்பத்திற்குத் தெளிவான விடைகளை நீ காணப் போகிறாய்"

திடீரென்று ஏன் தன்னிடம் இப்படிக் கூறவேண்டும் என்று வியந்த வசந்தன், "எனக்கு எனது தோழியைச் சந்தித்தாலே போதும் ஐயா. அது தான் எனக்கிருக்கும் குழப்பம். அடுத்து எனது காதலி யார்? எதற்காகப் பிரிந்தோம்? என்றும் தெரிந்துகொள்ளவேண்டும்" என்றான்.

"நிச்சயம் நடக்கும்" என்று புன்னகை புரிந்தார் ஓல்ட்மன். அதில் பல அர்த்தங்கள் இருந்த போதும் வசந்தன் அதைக் கவனிக்கத் தவறிவிட்டான். சூப்பைக் குடித்து முடித்து குடுவையை மேசை மீது வைத்த வசந்தன்.

"ஐயா! நான் வந்து வெகு நேரமாகிவிட்டது, புறப்படுகிறேன்" என்றான் அவசரத்தோடு.

"சரி தம்பி, நீ புறப்படு" என்றார் ஓல்ட்மனும்.

வசந்தன் விடைபெற்று பனி மழையினுள் கரைந்து செல்வதைக் கவனித்துக்கொண்டிருந்த ஓல்ட்மன், 'நிச்சயம் என் உதவியைத் தேடி நீ திரும்பி வருவாய்' என்று தனக்குள் கூறிக்கொண்டார்.

பனிப் பொழிவில் நடந்து சென்ற வசந்தனுக்கு ஓல்ட்மன் வீட்டில் பருகிய சூப்பைக் குடித்ததிலிருந்து வசந்தனின் உடலில் ஏதேதோ மாற்றங்கள் நிகழத் துவங்கின. ஏதோ மயக்கத்திலிருந்து எழுந்து நடப்பவனைப் போன்று தடுமாறியபடி நடந்து சென்றான். வழியில் முளைத்திருந்த சோலையைப் பார்த்த அவன் உள்ளத்திற்கு மலர்கள் மலர்ந்திருந்தால் இன்னும் அழகாக இருக்குமே என்றெண்ணியபடி நடந்து போனான். உடனே மலர்கள் மலரத் தொடக்கி பூத்துக் குலுங்கியது. அதைக் கவனிக்காமல் மரக்கலத்தினுள் சென்று படுத்துக்கொண்டான். மரக்கலம் அவனை இழுத்துக்கொண்டு சென்றது.

நன்றாக உறங்கிய அவன் காதுகளில் மெல்லிய கானம் கேட்டது. அது அவன் கவலையைக் கூறும் சோக கீதமாகவும் இருந்தது. தேன் குரலில் பாடிய அந்த மங்கை யாரென்று அவன் மனது நாடவில்லை. பாட்டிலுள்ள பொருளின் மீது தான் அவன் எண்ணம் இருந்தது. உறக்கத்தைத் தழுவிய அவன் காதுகளில் அந்த கானம் நுழைந்தது. திடீரென்று விழித்த அவனது கண்கள் அதிர்ச்சியில் மின்னின.

மெமோரியல் உலகத்தில் அவனைக்
காப்பாற்றியவளும் ஓல்ட்மன் கூறிய
இளவரசியுமாகிய அந்த ஏந்திழை மரக்கலத்தினுள்
அவன் முன்னே அமர்ந்திருந்தாள்.

தேடல் தொடரும்...

சிரிக்கும் போது கூட்டத்துடன்
சேர்ந்து சிரி
அழும்போது தனியாக இருந்து
அழு -அய்யா கண்ணதாசன்
சொன்ன தத்துவம் இது ....!!!

என் சிந்தனை ...!!!

சிரித்தபோது கூடி இருந்த
உறவுகள்
அழும் போது தனிமையாக்கி
சென்று விட்டன ...!!!

உணர்ந்தேன் இப்போ ....?
சிரிக்கும் போது
உறவுகளை ரசித்துக்கொள்
அழும்போது உறவுகளை
புரிந்து கொள்....!!!

- இனியவன் -

## ஆங்கில புத்தாண்டு…

கனிகீஸ்




வருடத்தின் முதல் நாள் புத்தாண்டாம்…
எதிர்பார்த்தே ஏமாந்த எத்தனையோ
ஆண்டுகள் போல் மீண்டும்
எதிர் நோக்கி ஏக்கம் கொள்வோம்…
நாட்காட்டியின் முதல் ஆடை
குறைப்போ, நாளைய தினமது?

★ ★ ★

ஈழத்தமிழனுக்கு படுகொலை
அநீதி இழைத்த போது
வேடிக்கை பார்த்த அரசியல் தலைவன்
இங்கீலீசுகாரனின் புத்தாண்டுக்கு
வாழ்த்துவான் கேட்டுக்கொள்வோம்…
நாம் தமிழன் என்பதை மறந்துவிட்டு…

★ ★ ★

காட்டைக் கழனியாக்கி,
கள்ளுக்குள் நீர் கொணர்ந்து
நெல் விளைவித்த பாட்டன்,
முப்பாட்டன் தொழில் மறந்து,
விளை நிலத்தை விற்று
விவசாயம் மறந்த நாம்
வேடிக்கையாய் வரவேற்போம்
அன்னியனின் புத்தாண்டு தினத்தை…

★ ★ ★

இனம் மறந்து, மொழி மறந்து
நம் அடையாளம் தொலைத்தோம்
என மறந்து வருந்தாமல்
வரவேற்போம் ஆண்டின் முதல் நாளை…

★ ★ ★

விடிய விடிய பட்டாசு வெடிச்சு,
விதவிதமா சினிமாவும் பார்த்து,
நடுரோட்டில் தண்ணியடிச்சு நல்லாவே
கொண்டாடிடுவோம் நாளைய தினத்தை…
டிசம்பருடன் பழைய குப்பையை மறந்துவிட்டு
புதிதாய் சேர்ப்போம் புத்தாண்டில்…

★ ★ ★

நுனி நாக்கில் ஆங்கிலமும்,
பீசா பர்க்கருமே உணவாய்
மாறிப் போனபின்னே
புத்தாண்டு முக்கியம் தான்…
இருக்கும் நிலங்களையும் அன்னியனின்
கம்பெனிக்கு விற்றுவிட்டு
அவன் தரும் பிச்சை காசுக்காய்
கை கட்டி நின்றிடுவோம்
கவலைகள் எதற்கு இனி?

★ ★ ★

எதையெல்லாம் இழந்து விட்டோம்
என்று எண்ணி வருந்திடும் நாள்
வரும் வரையில் வகையில்லா
புத்தாண்டை வரவேற்போம்
வாழ்த்து அட்டையுடன்…

★ ★ ★

விட்டு போன நட்புகளுக்கும்
பிரிந்து போன உறவுகளுக்கும்
இனி புதிதாய் இணையப் போகும்
நட்புகளுக்கும் வாழ்த்துச்சொல்லவேணும்
கொண்டாடிடுவோமே புத்தாண்டை…

★ ★ ★

## வெந்து துடிக்கும் எண்ணங்களுடன்

வாழ்க்கையில்...
நடந்து வந்தபாதையை
திரும்பி பார்க்கிறேன்
வாழ்ந்த காலத்தில்
வாசமும் இருந்தன
துர் நாற்றமும் இருந்தன
வலிகளும் இருந்தன
துடிப்புகளும் இருந்தன .....!!!

☆ ☆ ☆

பாசத்தோடு உறவாடிய
உறவுகள்....
பாசத்தை ஒரு முகமூடியாய்
அணிந்து உறவாடிய
உறவுகள்.....
தோள் கொடுக்கும் நண்பர்கள்....
தோன்றியதை சுருட்டிய
நண்பர்கள் ....!!!

☆ ☆ ☆

கண்ட இடத்திலே கைகுலுக்கி
இவன் ஏதும் உதவி
கேட்டிடகூடாது
என்று எங்கும் உறவுகள் .....
கஷ்டத்தில் கை கொடுக்கும்
உண்மை உறவுகள்
இப்படியே ஏராளம்.....!

☆ ☆ ☆

பிறந்த உடன் பிறப்புக்களை
சொல்லாமல் விடுவேனா ..?
பேசி திருமணம் செய்த அக்கா
குடும்பம் பாசத்தில் இமயம்
பாசத்தின் இமயத்தில்
கொடுத்த
சீர்வரிசை ......!!!

☆ ☆ ☆

ஓடிப்போய் திருமணம் செய்த
தங்கையின் குடும்பத்தில்
பாசத்தை காணோம் ...
கொடுத்தால் தானே பாசம் வர
....!!!

தான் மட்டும் வாழ்க்கையில்
உயர்ந்திட நினைக்கும்
தம்பியின்
குடும்பம் .....!!!

☆ ☆ ☆

தங்களை விட உயர்ந்திட
கூடாது
என்பதில் மிக கவனமாக
இருக்கும்
அண்ணியின் குடும்பம் .....
சற்று உயந்தால் என்
மனைவியின்
குறையை குத்திக்காட்டும்
அண்ணி
இப்படியே ஏராளம்.......!!!

☆ ☆ ☆

இத்தனையை பார்த்துகொண்டு
பேசவும் முடியாமல்
-நியாயத்தை
சொல்லாவும் முடியாமல்
இன்றோ நாளையோ என்று
ஏங்கிகொண்டிருக்கும்
பெற்றோர்
அக்காவின் வீட்டில் வசிக்கும்
உயிர்கள் ......!!!

☆ ☆ ☆

இத்தனை துயரங்களுக்கும்
அவர்கள் தான் காரணம்
என்று
சொல்லிவிட மாட்டேன் ...
எனது பங்கு என்ன என்பதை
அறியாமலும் இல்லை ...
மனதுக்குள் வெந்து துடிக்கும்
எண்ணங்களுடன் வாழ்கிறேன்
.....!!!

☆ ☆ ☆

- இனியவன் -

# விட்டு விடேன் என்னை (நீ) வாழ..

நற்புவி மகேந்திரன்

நண்பா..!
ஏன் எனைக்
கொன்றிடத் துணிந்தாய்..?
நான் இறந்தாலிங்கு
நீ இறப்பாயே
தலையசைத்தே
உனக்குத்
தண்ணீர் தந்தேன்.
தகிக்கும் பொழுதினில்
நிழலைத் தந்தேன்
சுவாசிக்க
உயிர்க் காற்றினைத்
தந்தேன்
சூழலைக்
குளுமையாய்
மாற்றியும் தந்தேன்

என் தோழன்
கார்மேகனனை
இழுத்து வந்து
இருப்போர்க் கெல்லாம்
உணவைக் கொடுத்தேன்.

வேறென்னக் கொடுமைகள்
நான் இங்கு செய்தேன்
நண்பா..ஏன் எனைக்
கொன்றிடத் துணிந்தாய்..?

போகட்டும்..
உனக்காகத் தானிங்கு
நானே
இறந்தாலும்
உன் உறவாகவே
எந்நாளும் இருப்பேனே.

உன் பிள்ளைக்கு நானே
தொட்டிலும் ஆவேன்
உனக்கென நானே



கட்டிலும் ஆவேன்
உன் வீட்டுக்கு
நல்ல கதவென
இருப்பேன்.

நீ இசைத்திட
ஒரு இசைக் கருவியும்
ஆவேன்.
நீ இறந்திட்டால்
உனை சுமக்கும்
பெட்டியுமாவேன்.
இல்லையேல்
உனை எரிக்க
விறகுமாவேன்

என் கடன் எப்படியாயினும்
தீரும் ..ஆனால்
உன் கடன் தீர்த்திட
நீ வேண்டும் நண்பா..!

ஆகையினால் தான்
வேண்டுகிறேன் உனை
விட்டு விடேன்
சில காலம் என்னை
உன் இனத்தை
வாழ்விக்க
என் இனத்தை
விருத்தி செய்தப் பின்
நானே ....
விரும்பி சாகிறேன்....!



# விறகல்ல வீணை!!!

தாமரைச்செல்வன்

காமத்தின் சுவை தேடி
விலைமகளின் அவை நாடி
இளைஞன் வந்தான் ஓடோடி!!!

விலை கொடுத்தும் – அதிக
விலை கொடுத்தும்
விழியில் ஒளியில்லாமல்
விறகாய் வீழ்ந்திருந்தாள்
அலட்சியமாய் !!!.

○ ○ ○

நிந்திக்க வந்தவன்
சிந்தித்து நின்றான்
தழுவ வந்தவன்
தயங்கி நின்றான்

அலட்சியம்
இஷ்டமில்லை என்பதாலோ!
இன்பமில்லை என்றுணர்ந்தாளோ!
இவளுக்கு
ஈடில்லை என்ற ஏளனமோ!!
குழம்பி தவித்தான்.

○ ○ ○

உறவாட வந்தவன்
உறையாடி பார்த்தான்

உடல் தூண்டி
பார்த்தவர்கள் மத்தியில்
உள்ளம் தூண்டி
பார்த்தான்

○ ○ ○

உள்ள கிளர்ச்சியில்
உச்சம் பெற்று
உண்மை உளறினாள் . . .
மெழுகு உடல்
என்பதால்
மேனிகாட்ட
வரவில்லை !!

வளைவு சுழிவு
உள்ளதால்
வளைத்துப்போட
வரவில்லை !!

○ ○ ○

சோறு சாறு
இல்லாமல்
சூழ்நிலையால்
வரவில்லை !!
வாழ்வியல் படித்து
வாழ்வாதாரமாய்
வேலை தேடிச்
சென்ற இடமெல்லாமல்
இவள் சேலை
தேடப் பார்த்தனர் .

○ ○ ○

வாழ்வியல்
படித்தவளாயிற்றே!!!
ஏன் என்று இவள்
தேட செல்கையில்
மீட்டெடுத்தாள்

○ ○ ○

பச்சை மாமிசத்தை
பலர் இச்சை
ஆசைக்காக
விற்கும் பச்சிளங்களை !!!
பண்டமாற்றுமுறை
மாறவில்லை போலும்
பாசம் தேவையில்லை - இங்கே
பதிலுக்கு தேவைப்பட்டது

○ ○ ○

இனிப்பைத் தேடி
வரும் எறும்புகள்
சீனி வட்டத்தால்
திருப்திகண்டு
திரும்புவதைப் போல்

தனது மேனிவட்ட
வேலிபோட்டு
காத்து நின்றாள்....
என்று
விவரம் கூறி
முடித்த அவள்
விலைபெற்ற
காரணத்தால்
விறகாய் படுத்திருந்தாள் .....

○ ○ ○

அவள் விழி பார்த்து
வீதி நடந்தான்
காமம் உடலில்
இல்லை என்பதை புரிந்து
மனதில் எண்ணிக்கொண்டான்
இவள்
விறகல்ல வீணை!!!


○ ○ ○

# சாம்ராட் சம்யுக்தன்

சிவாஜிதாசன்

### பாகம் 2.

### 13. சிறையில் வைத்தியர்




கானகத்தின் ஓரம் தென்னங் கீற்றுகளால் அமைக்கப்பட்ட சிறு குடிசை. அக்குடிசையைச் சுற்றி எண்ணற்ற மூலிகைச் செடிகள்; அவற்றிலிருந்து கமிழும் வாசம் அவ்விடத்தையே மயங்க வைத்திருந்தது. பட்சிகளும் மான்களும் மயில்களும் அக்குடிசையின் ஓரத்தில் விளையாடிக்கொண்டிருக்க உள்ளே மூலிகை அரைக்கும் ஒலி வாசல் வரை கேட்டது.

அந்த ஆள் நடமாட்டம் இல்லாத பயங்கர அமைதியில், தன் வாழ்நாளில் நீண்ட காலம் மூலிகைகளுடனே கழித்துக்கொண்டிருந்தார் வைத்தியர் சாரங்கன். குஷ்டம், காயங்கள், அம்மை நோய், மாலைக்கண் இப்படி எண்ணற்ற நோய்களின் பிடியில் சிக்கித் தவித்திருக்கும் நோயாளிகளுக்கு நிவாரணியாக விளங்கும் சாரங்கனைத் தேடிப் பல மன்னர்களும் எண்ணற்ற மக்களும் வந்து போவதுண்டு. இத்துணை பெருமைக்கும் சொந்தக்காரரான அவர், எதன் மேலும் பற்றுக்கொள்ளாமல் தானுண்டு, தன் தொழில் உண்டு என்ற மனநிலையில் காட்டிலேயே வாழ்கிறார். அவர் மனதிற்கும் அது தான் இஷ்டம். காட்டில் மூலிகை பறிப்பதிலும் தன்னுடனே சீடர்கள் போலிருக்கும் பட்சிகளுக்கும் சிறு சிறு உயிர்களுக்கும் உணவளிப்பதிலேயேயும் பேரானந்தம் கொண்டார்.

காட்டினில் குதித்தோடும் அருவியில் குளித்து, தன் குடிசையைச் சுற்றியிருக்கும் மூலிகைச் செடியின் நடுவே அமர்ந்திருக்கும் பிள்ளையாருக்குப் பூஜை செய்து தன் பணியான வைத்தியத் தொழிலைச் செவ்வனவே செய்து, இறைவனுக்கும் மனிதர்களுக்கும் தொண்டாற்றி வந்த அவர், அன்று ஏதோ சொல்லமுடியா துயரில் அமர்ந்து மூலிகைச் செடிகளை ஆராய்ந்துகொண்டிருந்தார்.

அவரின் சீடன் மூலிகைகளை அரைத்தபடி தன் குரு என்ன செய்துகொண்டிருக்கிறார் என்று வாசலின் வழியே தன் பார்வையை ஓட்டியபடி இருந்தான். மூலிகைச் செடியைப் பறித்துத் தன் கையிலிருந்த கூடையில் வெறுப்பாய்த் திணித்துக்கொண்டு உள்ளே வந்த வைத்தியர் சாரங்கனை, தலையை உயர்த்தி மூலிகை அரைத்தபடியே நோட்டமிட்டான் சீடன்.



தாமரையின் ரசிகன்
கதிரவன்
தாமரை கதிரவன் ரசிகன்
கவிஞன்
கவிஞனின் ரசிகன்
வாசகன்

வாசகன்
காதலியின் ரசிகன்
காதலி
தாமரை முகத்தினள் !
(மீண்டும் மேலே...)

கல்பனா பாரதி

அவர், அவனைப் பார்க்காமல் மூலிகைக் கூடையை ஓரிடத்தில் வைத்துவிட்டு சிறிய சாளரத்தின் வழியே தேடும் பார்வையை சிறிது நேரம் வீசி பெருமூச்சை வெளியேற்றித் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ள முயற்சி செய்து கொண்டிருந்தார். அவரின் முகத்தில் தோன்றிய அறிகுறிகள், 'தன்னைத் தேடி ஆபத்தான சில பேர் வரப் போகிறார்கள்' என்ற பாவம் பரிதாபமாக படர்ந்திருந்தது. ஆனால், சீடனோ எதைப் பற்றியும் கவலையின்றி தன் வேலையைச் செய்து கொண்டிருந்தான்.

மாலை நேர சூரியன் தங்கமென மிளிரச் செய்திருந்த தன் பொன்னிறக் கதிர்களை மெல்ல தனக்குள் இழுத்துக்கொண்டு மலையின் நடுவே மெதுவாக

மறைந்து இருளுக்கு வழிவிட்டான். இருளும், வெண்ணிலாவையும் விண்மீன்களையும் துணைக்கு அழைக்க, அவைகளும் துணைக்கு வந்தாற்போல் வானெங்கும் பரவி தங்கள் உடலை மின்னிக் கொண்டு பூமியைப் பார்த்துக் கொண்டிருந்தன.

வெண்ணிலவின் பால் கதிர்கள் குடிசையெங்கும் பரவி தென்றலோடு உறவாடிய போதும், சாரங்கனின் முகத்தில் கவலை தன் கிளையைப் பரப்பிக்கொண்டிருந்தது. தூரத்தில் எங்கோ குதிரைகளின் குளம்பொலி அவர் காதுகளுக்கு எட்ட, உடம்பெங்கும் தீ ஊடுருவுவதைப் போன்று திடுக்கிட்டார். தன் சீடனைக் கேள்விக்குறியோடு நோக்கினார். அவன் வரப் போகிறவர்களை எதிர்பார்த்து வாசலின் வழியே நோக்கிக்கொண்டிருந்தான்.

அவன் எதிர்பார்த்தபடியே சில வினாடிகளில் சுமார் பத்து குதிரைகளில் வீரர்கள் வந்தனர். அவர்களின் பின்னே சிறிய ரதம் ஒன்றும் குடிசையை நோக்கி வந்தது. குடிசையை அடைந்ததும், மற்ற வீரர்கள் வாசலிலேயே நிற்க, ஒருவன் மட்டும் குடிசையினுள் நுழைந்தான். வந்தவன் வைத்தியரை வணங்கி, தன் நாடான நாகவனத்தின் முத்திரையைக் காட்டினான்.

தான், 'மன்னர் மார்த்தாண்டனின் நம்பிக்கைக்கு உரியவன்' என்று அறிமுகப்படுத்திய அடுத்த வினாடியே, "தங்களை அழைத்து வருமாறு மன்னரின் கட்டளை. உங்களுக்கு முன்னமே தகவலும் கொடுத்திருக்கிறோம். செல்லலாமா?" என்றான்.

வைத்தியரின் நிலையையோ அவரின் பதிலையோ பற்றி அவன் கவலைப்படவில்லை என்று அவன் பேச்சிலேயே உணர்ந்த வைத்தியர் அவர்களுடன் செல்லத் தீர்மானித்தார். எதிர்த்துப் பேசினால் தலையை கொய்துவிடுவார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள அதிக நேரம் எடுத்துக்கொள்ளாத வைத்தியர், தான் அரைத்து வைத்திருந்த மூலிகையையும் தன் சீடனையும் அழைத்துக்கொண்டு வெளியே வந்தார்.

சில்லென்ற குளிர் காற்று அவர்களின் உடலைத் தழுவியபோதும் அதை ரசிக்காமல் வாசலில் நின்றிருந்த வீரர்களின் அருகில் சென்றனர். வீரர்கள் வைத்தியரை வணங்கி தாங்கள் கொண்டு வந்திருந்த ரதத்தினுள் ஏறி அமருமாறு பணித்தனர். அவரும் விதியின் போக்கிலேயே போகட்டும் என்ற மனதுடன் ஏறி அமர்ந்தார். அவரது சீடனும் வைத்தியரின் அருகில் அமர்ந்துகொண்டான்.

எல்லோரும் புறப்பட்டனர்.

காட்டினுள் காட்டுவாசிகளால் வைத்தியருக்கு எந்த வகையிலும் ஆபத்து நேரக்கூடாது என்ற கட்டளை மன்னர் மார்த்தாண்டனிடமிருந்து வந்திருந்ததால், காட்டினைச் சுற்றி வைத்தியரை அழைத்துச் சென்றனர். முன்னே இரண்டு வீரர்கள் கையில் தீப்பந்தத்தை ஏந்தியபடி வழிகாட்ட ரதத்தின் பின்னே இரண்டு வீரர்கள் வைத்தியருக்குக் காவலாக அவர்களும் தீப்பந்தத்தை ஏந்தியபடி வந்தனர்.

குதிரையின் வேகத்தைக் கூட்டவில்லை. அதனால், குதிரை மிதமான வேகத்தில் அவர்களை அழைத்துச் சென்றது. சீடனின் முகம் மிகவும் இறுக்கமாக இருந்தது. தீப்பந்தத்தின் ஒளியில் பொன்னிறமாகத் தெரியும் வீரர்களை நோக்கியபடி இருந்தான் அவன்.

வைத்தியர் நீண்ட நெடு சிந்தனைக்குள் இறங்கினார். சில வாரங்களுக்கு முன் நடந்த சம்பவம் அவர் நினைவில் மீண்டும் முளைத்தது.

நாகவன வீரனொருவன் திடீரென்று அவர் வீட்டினுள் வந்தான். யார்? என்று கேட்பதற்குள் கையிலிருந்த ஓலையை அவரிடம் நீட்டினான்.

## காதல் கூட்டணி

ராம்குமார் ஜெயராமன்



உன் வீட்டு ஜன்னல் என்னுடன் கூட்டணி
உன்னை நான் பார்க்க....
உன் வீட்டு ஜன்னல் கதவு உன்னுடன் கூட்டணி
என்னை நீ மறுக்க...
உன் வீட்டு ஜன்னல் கதவு கூட்டணி மாறியது
காதல் ஆட்சி அமைக்க....
எதிர்கட்சியான உனக்கு தான் என்
அமைச்சரவையில்
முதலமைச்சர் பதவி...

குழப்பத்தோடு அதை வாங்கிப் படித்த வைத்தியரின் முகத்தில் இடி இறங்கியது.

ஒருவருக்கு உங்கள் உதவி தேவைப்படுகிறது. அடுத்த வாரம் எங்கள் வீரர்களை அனுப்புகிறேன். நீங்கள் வரவும். மீறினால் உயிர் பறிக்கப்படும்.

நாகவன அரசர் மார்த்தாண்டன்

என்று எழுதியிருந்தது அவ்வோலையில்.

ரதம், பள்ளத்தினுள் இறங்கி ஏறி லேசாகக் குலுங்கியபோது வைத்தியரின் நினைவுகள், இறந்தகாலத்தை விடுத்து நிகழ்காலத்தில் நுழைந்தன.

குதிரைகளும் ரதமும் ஓரிடத்தில் நின்றன. 'ஏன் நின்று விட்டது?' என்று எண்ணியபடி பட்டுத் திரையை விலக்கிப் பார்த்தார். ஓர் அருவியைத் தான் அடைந்திருக்கிறோம் என்பது புரிந்தது அவருக்கு. வானிலிருந்து தொப்பென்று ஆகாய கங்கை மேகத்தைக் கிழித்துக் குதிப்பது போன்று குதித்த நீர் தரையில் காட்டாறாய்ப் பெருகி பாறைகளை

உரசியபடி சென்றுகொண்டிருந்தது. அதில் சில படகுகள் கரையில் கட்டப்பட்டு நதியோரம் தவழ்ந்தபடி இருந்தன.

"வாருங்கள் அய்யா! இப்பொழுது நாம் படகில் செல்லவேண்டும்" என்று ஒருவன் பணிவான குரலில் வைத்தியரை அழைத்தான்.

பெருமூச்சை விட்டெறிந்தபடி ஒரு படகில் வைத்தியரும் சீடனும் ஏறினர். வீரர்களில் ஒருவன் அவர்களின் படகை நதியினில் செலுத்தினான். மற்றொரு வீரன் தீப்பந்தத்தைப் பிடித்துக்கொண்டு அவர்களுக்குக் காவல் புரிந்தான். காவல் புரிந்தவனின் கண்கள் சீடனின் மேல் ஓடியது. அவனது இறுகிப்போன முகமும் மெலிந்த தேகமும் அதில் ஒளிந்திருக்கும் வலுவும் சீடனை வித்தியாசப்படுத்திக் காட்டியது.

சீடன் தன் கூரிய விழிகளைத் தன்னைக் கண்காணித்துக்கொண்டிருந்தவனின் மேல் நிலைநிறுத்தினான். பிறகு, 'நாம் எங்கே சென்றுகொண்டிருக்கிறோம்?' என்று ஒரு முறை தனக்குள்ளாகவே கூறிக்கொண்டிருந்த சமயத்தில் படகு நின்றது. சீடனும் குருவும் சுற்றும் முற்றும் பார்த்தனர்.

பெரிய மலைகள் இரண்டு. அதைச் சுற்றி ஓடிக்கொண்டிருக்கும் நதியின் பாதை ஐந்தாகப் பிரிந்திருந்தது. சிறு சிறு அலைகள் லேசாக எழும்பியபடி இருந்தன. அந்த ஐந்து வழி நதியின் பாதையின் கடைசி வழியில் படகு புறப்பட்டது. பட்சிகளின் சந்தங்களும் பூச்சியினங்களின் பேரிரைச்சலும் அவர்களின் உடலை நடுங்கச் செய்தன. அவ்வப்போது நதியின் ஓரத்தில் ஏற்பட்ட சலசலப்பும் அவர்கள் மனதைத் திடுக்கிடச் செய்தது. சிறிது நேரத்தில் படகு கரையை அடைந்தது.

கரையின் ஓரத்தில் நாகவன ஆட்கள் தீப்பந்தத்தைப் பிடித்து அதன் ஒளியில் தங்களை நனையவைத்து நாங்கள் இங்கு தான் இருக்கிறோம் என்று சொல்லாமல் தீப்பந்தத்தை இருமுறை அசைத்தனர். படகு நின்றதும் கரையில் துள்ளிக் குதித்தான் சீடன். சிறிய பல்லக்கு ஒன்று வைத்தியருக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் ஏறி அமர்ந்துகொண்டார் வைத்தியர். சீடன், வீரர்களுடன் வேடிக்கை பார்த்தபடி நடந்து வந்தான். அலட்சிய விழிகளால் அசட்டைத்தனமாக கண்டுகொண்டே வந்த அவனை யாரும் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

எட்டு நாழிகைகள் இப்படியே கடந்து நாகவன சிறைச்சாலையின் முகப்பை அடைந்தனர். கரும் பாறைகளால் மதிற் சுவர் அமைக்கப்பட்டு நூற்றுக்கணக்கான வீரர்கள் சுவரின் மேல் நின்று காவல் புரிய, ஆங்காங்கே தீப்பந்தங்கள் ஏற்றப்பட்டிருந்தன. இவர்களைக் கண்டதும் நெடு உயர கதவு ஒன்று அசுரனின் வாய் போல் பிளந்து இவர்களை உள்ளே அழைத்தது. உள்ளே நுழைந்ததும், பல்லக்கிலிருந்த வைத்தியர் கீழிறங்கினார். அவர்கள் சிறைச்சாலையின் உள்ளே அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களை அழைத்துச் சென்ற பாதைகளிலெல்லாம் சிறை அறைகளும், அதில் கைதிகளும் நிரம்பி இருந்தனர். அவர்களின் முகத்தில் சோகமும் வெறுப்பும் ஒரு சேர கலந்து இவர்களை நோக்கினர். அவர்களை கண்டுகொள்ளாமல் வைத்தியர் முன்னே செல்ல, சீடனும் கைதிகளைப் பார்த்தபடி பின்னே வந்தான்.

சிறைச்சாலையின் பாதாள அறைக்கு அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். அதில் மூன்று அறைகள் மட்டுமே இருந்தன. இரண்டு அறைகள் வெறுமனே இருந்தன. ஒரு அறையில் ஒருவர் சுயநினைவின்றி படுத்துக் கிடந்தார். தான் சிகிச்சை அளிக்கப்போவது இவராகத் தான் இருக்கும் என்றெண்ணி அவர் முகத்தையே உற்றுநோக்கினார் வைத்தியர்.

"வாருங்கள் வைத்தியரே!" என்ற சிம்மக்குரலைக் கேட்டு வைத்தியர் அவ்வறையின் ஒரு மூலையில் நோட்டமிட்டார்.

மார்த்தாண்ட சக்ரவர்த்தி நின்று வைத்தியரைப் பார்த்து புன்முறுவலை வழங்கிக்கொண்டிருந்தார்.

"அரசே!" என்று தன்னை அறியாமல் மார்த்தாண்டனைப் பார்த்து நா தழு தழுக்கும் குரலில் கூறினார் வைத்தியர்.

"உங்களை வற்புறுத்தி அழைத்தமைக்கு என்னை

## (MONEY)தம்

காவியன்

"அறம் செய்ய விரும்புகிறார்கள்"
80 G DEDUCTION க்காக மட்டும்…

"யாதும் ஊரே யாவரும் கேளீர்"
TWENTY 20 இல் மட்டும்…

வள்ளாரின் "வாடிய பயிர்"
இன்று FIGURE ஆகி விட்டது…

FIXED DEPOSIT
செய்யும் பொழுது மட்டுமே,
தாத்தா பாட்டியின்
ஞாபகம் வருகிறது…

போதும் போதும்
பட்டம் வென்றோம்…
பல்கலை கற்றோம்…
பார் வியக்கும் புகழும் பெற்றோம்…
ஆசை வென்றோம்…
அகிலம் வென்றோம்…

மனிதம் மட்டும்
ஏனோ தோற்றே போனோம் ?

மன்னியுங்கள். இதோ படுத்திருக்கிறாரே இவர் சுயநினைவின்றி சில காலம் கிடக்கிறார். உங்கள் சிகிச்சை இவரைக் குணப்படுத்தும் என்று நம்புகிறேன்"

"யார் இவர்?" என்றார் வைத்தியர்.

"அது உங்களுக்குத் தேவையில்லாதது. நீங்கள் சிகிச்சை மட்டும் செய்யுங்கள்" என்றார் மார்த்தாண்டன் சற்றே கடுமையான குரலில்.

வைத்தியர் மறுபதில் கூறாமல் படுத்திருந்தவரைப் பரிசோதித்தார். நாடித் துடிப்பைக் கவனித்தார். நெஞ்சினில் பெரிய காயம் ஏற்பட்டிருப்பதையும் அவருடைய முகத்தில் ராஜகளை உள்ளதையும் கவனித்தார். வைத்தியர் பரிசோதித்துக்கொண்டிருந்த நேரம் மார்த்தாண்டனின் கொடிய விழிகள் சீடனை ஆராய்ந்துகொண்டிருந்தது. அவரின் விழிகளை நோக்க பிரியப்படாமலிருந்த சீடன் என்ன செய்வதென்று விழித்தான்.

வைத்தியர் சீடனைப் பார்த்து சில பச்சிலைகளை அரைத்துத் தருமாறு கேட்டுக்கொண்டார். உடனே சீடனும் தான் கொண்டு வந்த பொருட்களைச் சரிபார்த்து பச்சிலைகளை அரைக்கத் துவங்கினான். அவன் அரைத்த விதம் ஒரு வைத்தியருக்கு உரித்தான சாயலில் இருந்ததால் மார்த்தாண்டனின் சந்தேகப்பார்வை திசை திரும்பியது. சிறிது நேரத்தில் அரைத்த பச்சிலையை வைத்தியரிடம் கொடுத்தான். அவர் காயத்திற்கு மருந்திட்டு மன்னரை நோக்கினார்.

"அரசே! இவர் சுய நினைவுக்கு வர சில காலம் பிடிக்கும். அது வரை எனது சீடன் இங்கேயே இருந்து இவரைக் கவனித்துக்கொள்ளட்டும். அவ்வப்போது நானும் வெளியிலிருந்து மருந்துகளைக் கொண்டுவருகிறேன். உங்களின் ஆசைப்படியே விரைவில் இவர் எழுந்து நடமாடுவார்" என்றார்.

மன்னரும் சிறு யோசனைக்குப் பின் வைத்தியர் கூறியதை ஒப்புக்கொண்டார்.

"ஆகட்டும் வைத்தியரே. அவ்வாறே செய்வோம்" என்று கூறி பணியாளை அழைத்தார்.

பணியாளன் வந்ததும் வைத்தியரை அழைத்துச் செல்லுமாறு சமிக்ஞை கொடுத்தார். வைத்தியர் செல்லும் முன் சில சிகிச்சை குறிப்புகளை தன் சீடனிடம் சொல்லி அவ்வாறே தினமும் பணிவிடை செய்யவேண்டும் என்று கூறிவிட்டு அங்கிருந்து அகன்றார்.

மார்த்தாண்டன், துளைக்கும் பார்வையை சீடனின் மேல் வீசி, "வைத்தியர் சொன்னது நினைவிருக்கிறதா?" என்று மிரட்டும் குரலில் கேட்டார்.

"இருக்கிறது அரசே" என்று தலை தாழ்த்தினான் சீடன்.

மன்னர் அங்கிருந்து புறப்பட்டார். சீடன் அவ்வறையிலேயே பூட்டப்பட்டான். பூட்டப்பட்ட கதவின் வழியே விஷமப் புன்னகை வீசியபடி, 'தான் எடுத்த வைத்த முதல் அடி வெற்றி' என்று தனக்குள்ளே பெருமிதம் கொண்டான் வைத்தியரின் சீடனான, பூபதி.

இத்துணை காலமும் ராஜகுருவின் பராமரிப்பில் கடும் போர் பயிற்சிகளை மேற்கொண்டான் பூபதி. வாள் வீசுதல், எதிரிகளிடமிருந்து தற்காத்துக்கொள்ளுதல், தந்திரமாய் நடந்துகொள்ளுதல், போன்ற பல பயிற்சிகளை அவரின் மேற்பார்வையில் மேற்கொண்டான். முதலில் கடினமாக உணர்ந்தாலும் பிறகு சாமாளித்துக்கொண்டு ஒரு வீரனாக உருவெடுத்தான் பூபதி. அவனது உடல் வலுப்பெற்று

## நாம் ஏன் நம்ப வேண்டும்.?

நற்புவி மகேந்திரன்

நுகர்வுக்காக மட்டுமே
நகர்ந்து திரியும்
உயிரிகளை
மனிதர் என நம்பச் சொன்னால்
நாம் ஏன் நம்ப வேண்டும்?

வர்த்தகம் நடத்துமோர்
வணிகச் சந்தையை
வளமிகு உலகென நம்பச் சொன்னால்
நாம் ஏன் நம்ப வேண்டும்.?

முதலாளியிடம்
கூலி நிமித்தம்
கேட்கும் கோரிக்கைகளை
முக்தியைத் தேடிடும்
பக்தி வேண்டுதல் என நம்பச் சொன்னால்
நாம் ஏன் நம்ப வேண்டும்..?

முதலீடு செய்துவிட்டு
பதிலீடு பார்ப்பதற்கு
முழு வேகமாய் முயலும்
போட்டியாளர்களை
மக்கட் சேவையாளர் என நம்பச் சொன்னால்
நாம் ஏன் நம்ப வேண்டும்.?

பொருள்களின் மீதும்
புற உடல் மீதும்
ஈர்த்திழுக்க
போதிக்கும் கூச்சல்களை
புனிதக் கலை வெளிப்பாடு என நம்பச்
சொன்னால்
நாம் ஏன் நம்ப வேண்டும்..?

வெறிகளைத் தீர்த்திட
குறி வைத்துத் தயாரிக்கும்
பொறிகளைக் காட்டி
விஞ்ஞான வெற்றி என நம்பச் சொன்னால்
நாம் ஏன் நம்ப வேண்டும்.!

*சுடர்விடத் தொடங்கியது.*

*அயோத்தியவன அரசர் போரில் பயங்கர காயமுற்றிருப்பதை ஒற்றர்கள் மூலம் தெரிந்துகொண்ட ராஜகுரு, மார்த்தாண்டன் சிறந்த வைத்தியனைத் தேடி வருவதையும் தெரிந்துகொண்டார். ஆதலால் முக்கிய வைத்தியர்களைக் கண்காணிக்க ஒற்றர்படையை ஏவி விட்டார். சாரங்கனைச் சந்தித்த நாகவன வீரனைப் பற்றி ராஜகுருவிற்கு ஒற்றர்கள் மூலம் தகவல் கிடைத்தது. தக்க தருணத்தை எதிர்பாத்திருந்த ராஜகுரு, பூபதியை வைத்தியர் சாரங்கனிடம் அழைத்து சென்றார். தங்கள் நாட்டுக்கு மார்த்தாண்டனால் ஏற்படவிருக்கும் ஆபத்தை விளக்கிக்கூறியும்அதனால், பூபதியை சிஷ்யனாக ஏற்றுக்கொண்டு, அவன் நாகவனத்திற்குள் ஓர் ஒற்றனாக தங்கு தடையின்றி நுழைய உதவி செய்யுமாறும் கேட்டுக்கொண்டார். முதலில் வைத்தியர் இதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. 'சித்தவைத்தியத்தில் களவு இருக்கக்கூடாது' என்று மறுத்தார். ஆனால், பூபதி சில காலம் வைத்தியத் தொழில் கற்றுக்கொண்டான் என்று தெரிந்த பின்பு அரைமனதோடு ஒப்புக்கொண்டார்.*

இதையெல்லாம் எண்ணிப் பார்த்துக்கொண்டிருந்த பூபதி விஷமப் புன்னகையை உதிர்த்துக்கொண்டே இருந்தான்.

✡ ✡ ✡

## மழை

grapes மகேந்திரன்

ஒரு மழைநாளில்

குடை பிடித்தபடி நீ

லேசாக நனைந்தபடி நான்.

கூப்பிட்டாலும் போகக்கூடாது என

உறுதி எடுத்துக்கொள்கிறது மனது

உன்னை நோக்கியே நடக்கின்றன

கால்கள்..

நடுசாம அமைதி மனதினை நடுங்கச் செய்யும் நேரத்தில், ரவிவர்மன் நாகவனத்தை அடைந்தான். நாகவன வாயில் மூடப்பட்டிருக்கும் என்றும் கட்டுக்கடங்கா காவல் அமைக்கப்பட்டிருக்கும் என்றும் முன்னமே தெரிந்திருந்த அவன், வடக்கு திசையை அடைந்து நாகவனத்தில் நுழைய முற்பட்டுக்கொண்டிருந்தான். ஒரு நாள் பசியும் பட்டினியுமாக காட்டிற்குள் அலைந்து திரிந்து ஒரு வழியாக நாகவனத்தை அடைந்த ரவிவர்மனுக்கு முன் தினம் நடந்தவையெல்லாம் கனவாகத் தோன்றின. தன் குதிரையை அம்பு எய்திக் கொன்றவன் யாரென்ற சிந்தனையின் விடை தான் கிடைத்தபாடில்லை அவனுக்கு.

## இச்சைக்கொண்ட மானிடமே

நிலாசூரியன்

நித்தம் எமக்கு போராட்டம்
நீலக்கடலோ நிற மாற்றம்
ரத்தம் சிந்தும் வாழ்வோட்டம்
செங்கடலாகும் பரிமாற்றம்..

உண்டுபிழைக்க உயிர்வாழ
உப்பு நீரே ஆதாரம்
அதற்கும் அனுமதி தாராமல்
தடுக்கும் சிங்கள பரிவாரம்..

தமிழனின் அனுமதியில்லாமல்
கச்சத்தீவு தானமடா
பிச்சையிட்டக் கைகளையே
உடைப்பதுயென்ன நியாயமடா..

உப்புக்கண்ணீர் கடலாக
சுரக்குது எங்கள் கண்களிலே
அதுதான் பாலோ என்றெண்ணி
பருகுது பசியில் குழந்தைகளே..

எத்தனை ஆட்சிகள் வந்தாலும்
எங்களுக்கில்லை வாழ்வுரிமை
எத்தனைத் தலைவர்கள் வந்தாலும்
எங்களுக்கில்லைக் கடல் தலைமை..

தினம் தினம் செத்துப் பிழைப்பதற்கு
வேதனைத் தீயில் எரிவதற்கு
யார்தான்யிட்ட கட்டளையோ
எமக்கான வாழ்வு இங்கில்லையோ..

கட்டுமரங்கள் கைகளடா
கடலே எங்கள் கடவுளடா
வலையே எங்கள் உலகமடா
வாழ்க்கைத் தந்து உதவுங்கடா..

பிச்சையிட்டக் கைகளுமே
பிச்சைக்காக நீள்கிறது
இச்சைக்கொண்ட மானிடமே
இன்றே
எமக்கொரு முடிவை எடு..!!!

மரக்கூட்டத்தின் நடுவே நடந்து வந்த அவனை யாரோ பின்தொடருவது போன்ற பிரம்மையால் அடிக்கடி திரும்பிப் பார்த்து

உறுதிப்படுத்திக்கொண்டான். நீண்டு உயர்ந்த மதில் சுவர் ஒன்று அவனைத் தடுத்து நிறுத்தியது. தன்னை யாரும் கண்காணிக்கிறார்களா என்று ஒரு முறை பார்த்துக்கொண்டு மடியில் கட்டியிருந்த ஒரு கயிற்றில் ஒரு சுருக்கு முடிச்சு போட்டு வீசி எறிந்தான். முதலில் அது எங்கும் சிக்கவில்லை. ஆனாலும் அவன் தளரவில்லை. மீண்டும் மீண்டும் முயற்சி செய்த அவனுக்கு அதிர்ஷ்டம் கிட்டியது. சுவற்றின் மேல் கூரிய கல்லில் முடிச்சு சிக்கியது. தன்னைத் தாங்கும் சக்தி கயிற்றுக்கு உள்ளதா என்று கையிற்றை ஒரு முறை இழுத்துப் பார்த்து நம்பிக்கை வந்தவனாய் சுவரின் மேல் ஏறத் துவங்கினான்.

கால் பாகம் ஏறிய ரவிவர்மன் சுற்றும் முற்றும் நோட்டமிட்டான். ஆனால், இருள், ஒரு மரத்தின் பின்னால் ஒளிந்திருந்த நாகவன வீரர்களை அவன் கண்களுக்குப் புலப்படாமல் செய்துவிட்டது. ஒருவனின் கையில் வில்லும் அம்புகளும், இன்னொருவனின் கையில் கூரிய வாளும் இருந்தன. வில்லைத் தாங்கியிருந்த வீரன் ரவிவர்மனை நோக்கி குறிபார்த்த சமயம் சடாரென்று இரு கூரிய கொம்புகள் அவர்களின் உடலில் நுழைந்து அலறக் கூட நேரம் கொடுக்காமல் அவர்களின் உயிரைப் பறித்தது. கீழே விழுந்த உயிரற்ற உடல்கள் புதரின் மறைவில் மறைக்கப்பட்டன.

ஏதோ சலசலப்பு எழுகின்றதே என்று வேக வேகமாக சுவரின் மேல் ஏறி மறு பக்கத்தில் குதித்தான், ரவிவர்மன். அவனது கால் ஒடிந்து விட்டதைப் போன்று வலி பிடுங்கியது. வியர்வைத் துளிகள் முத்துக்களாக முகமெங்கும் பரவ ஐந்து நிமிஷங்கள் அங்கேயே கிடந்தான். பசி வயிற்றைத் தின்ன, எழுந்து நடக்கத் துவங்கினான். வீதியின் ஓரம் இருளிலேயே நடந்தான். இரவு காவலர்கள் வீதிகளில் வலம் வரும் அரவம் கேட்டால் பதுங்கிக்கொண்டு முன்னேற அவனுக்கு நாழிகைகள் பிடித்தன. இவ்வாறு மறைந்து மறைந்து இரண்டு வீதிகளைக் கடந்து விட்டான். 'இன்றிரவு தங்குவதற்கு ஓரிடம் கிடைத்தால் நன்றாக இருக்குமே' என்று மனதினுள் ஏங்கினான்.

நிலவு கூட மேகத்தினுள் மறைந்திருந்த நேரம். கும்மிருட்டு வீதியெங்கும் பரவியிருக்க மெல்ல நடந்த அவனை இரவுக் காவலன் ஒருவன் பார்த்துவிட்டான். உடனே அவனை நோக்கிக் குதிரையை விரட்டினான். இதை உணர்ந்துகொண்ட ரவிவர்மன், தான் ஒதுங்கியிருந்த ஒரு சிறுவீட்டினுள் நுழைந்துகொண்டான். அவன் அதிர்ஷ்டம் அந்நேரத்தில் வீட்டின் கதவு தாளிடப்படாமல் கிடந்தது தான். உள்ளே சென்று பதுங்கிக் கொண்டான்.

நாகவன வீரன் அவ்வீட்டின் முன் குதிரையை நிறுத்தினான். வீட்டுத் திண்ணையில் ஒரு பெண்மணி படுத்திருந்தார்.

## பெற்றோரே ஒருமுறை வாரீர்

கே இனியவன்

வெளி நாட்டு மணமகன்
வெளிநாட்டில் தான் திருமணம்
சுற்றத்தார் மத்தியில் புகழாரம்
திருமணம் சிறப்பாய் நடைபெற்றது
வாழ்க்கையும் வெளிநாடு பறந்தது ..!!!

சுற்றத்தாரின் பேச்சில்லை
உற்ற நண்பியின் ஆதரவுமில்லை
ஆறுதல் வார்த்தை சொல்ல
ஆனந்தமாய் வார்த்தை சொல்ல
அருகில் யாரும் இல்லை ...!!!

நான்கு சுவருக்குள் இன்பம்
அதே சுவருக்குள் துன்பம்
மாறி மாறி வாழும் சுவர்
வாழ்க்கை தான் வெளிநாட்டு
வாழ்க்கை வெறுத்தே போகிறது ..!!!

உற்ரத்தாரின் கொண்டாட்டம் இல்லை
சித்திமகளின் காதுக்குத்து இல்லை
மாமாவின் மகளின் பூப்புனிதம் இல்லை
கூட்டத்தோடு கோயில் செல்லும்
சுகமில்லை
வாழ்த்துக்களுடன் கழிந்தன இவை ..!!!

ஊரில் நல்ல வரன் வந்தும்
என் பிள்ளையை வெளிநாட்டில் தான்
வாழவைப்பேன் என்று பெருமை போடும்
பெற்றோரே ஒருமுறை வாரீர்
மகளின் இயந்திர வாழ்க்கையை பாரீர் ..!!!

என்று தணியும் இந்த வெளிநாட்டு
மோகம் எப்போது நம்புவர் -இவர்கள்
உள்ளூர் உற்பத்தி நன்று என்று
கூடி வாழ்ந்த சமூகம் இப்போ
சிதறிக்கிடக்கும் அவலநிலை பாரீர் ..!!!

"யார் படுத்துக்கொண்டிருப்பது? எழுந்திரு!" என்றான் அதிகாரக் குரலோடு.

அந்தப் பெண்மணி முனகியபடியே எழும்பினார். இந்நேரத்தில் வீரன் வந்திருப்பது அவருக்கு அதிர்ச்சியையும் குழப்பத்தையும் கொடுத்தது.

"இங்கே ஒருவன் பதுங்கி வந்தானே, எங்கே அவன்?" என்றான்.

"அப்படி யாரும் வரவில்லையே" என்றார் அவர் குழப்பத்துடன்

"இல்லை நான் கண்டேனே" என்றான் அவன் மீண்டும்.

"நான் தான் கெட்டுவிட்ட பழைய உணவை இங்கு கொட்ட வந்தேன். அதை பார்த்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்" என்றார் அவர்.

"பழைய உணவா?" என்று கேட்டபடியே கீழே நோக்கினான் வீரன். பெண்மணி சொன்னபடி அங்கே உணவு கொட்டப்பட்டிருந்தது. தான் தான் தவறாக எண்ணிவிட்டோமா? என்று சிந்தித்தபடி அவரிடம் கூட சொல்லாமல் குதிரையில் ஏறிக் கிளம்பினான் அவன்.

அவன் சென்ற உடன், உள்ளே சென்ற பெண்மணி ஒரு விளக்கை ஏற்றினார். விளக்கு சரியாக எரிகிறதா என்று நோக்கியபடியே, "ஒளிந்திருந்தது போதும். உன்னைத் தேடி வந்த ஆபத்து சென்றுவிட்டது" என்றார்.

இருளில் மறைந்திருந்த ரவிவர்மன் தீபத்தின் மங்கிய ஒளியை நோக்கி வந்தான்.

✡ ✡ ✡

*சாம்ராட் சம்யுக்தன் இரண்டாம் பாகம் நிறைவுற்றது*

**விரைவில் மூன்றாம் பாகம் ஆரம்பம்**

✡ ✡ ✡

# கவிதைக்குறள் திருக்குறள் தெளிவுரை...

செந்தமிழ்தாசன்

**பாயிரம் - கடவுள் வாழ்த்து**

குறள் 9. கோளில் பொறியிற் குணமிலவே
யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை.

புலன் ஐந்தாம்
அதன் வழியாகும்
செயல்தன்
வழியாய் கொள்ளும்
கருவியாம் மனது...

தன்வயத்தாகி தூய்உடம்பாகி
இயற்உணர்வினனாகி
முற்றுமுணர்ந்தவனாகி
பாசத்திற்கு இணங்கினானாகி
பேரருள் கொண்டும்
முடிவிலா ஆற்றல் கொண்டும்
எல்லையிலா இன்பமாகித்
திகழும் இறைவன்....

இவ்வெண்குணத்தான்
தாள்பற்றி
வணங்காச் சிரம் கொண்டோர்
கண்ணிருந்தும் பார்வையின்றி
நாவிருந்தும் பேச்சின்றி, சுவையின்றி
செவியிருக்க கேட்பதன்றி
நாசியிருக்க உணர்வின்றி
உடலிருக்க உயிரின்றியும்
தன்குணம் கொள்ளுமே குற்றம்....

குறள்.10 பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார்.

புனையில் நீந்திக்
களித்திருக்க வேண்டுமே
பயிற்சி - ஆதுபோல்
இறைவன் அடிசேர
வேண்டுமாம் பக்தி...

பக்தியெனும் குளத்தில்
நீந்திக் கரைசேர்ந்தார்
என்பார்க்கு பிறவிப்
பெருங்கடல் கடத்தல் தூசு
மற்றோர் கரைகாணாது
வீணாய் அழிவரே....

முதல் அதிகாரம் நிறைவு.

# வாழையடி வாழை

**காவியன்**



ஊருக்குள்ள பெரிய பண்ணை,
வீட்டுக்குள்ள அடங்கி நின்னு,
இள ஆட்டு சதைக்கறி
இளையவளுக்கு புடிக்குமுன்னு
கேட்காம எடுத்து வரும்
அப்பங்காரனையும்...

○ ○ ○

பல்லு கூட விளக்காம
துயில் முறித்த கையோடு,
நாட்டு கோழி ரசத்தோடு,
ஊட்டி விட்ட அம்மாவையும்
மறந்து விட்டு...

○ ○ ○

ஆட்டு குட்டி, மாட்டு குட்டி
அத்தனையும் விட்டுப்புட்டு
என்னை நம்பி
ஓடி வந்த,
உன்ன எப்படி கண்ணு
பார்த்துப்பேன் !
கண்ணுக்குள்ள வைச்சாலும்
பத்தாது ரத்தினமே !!

○ ○ ○

தலையணை நனைக்கும்
உன் கண்ணீரை- எனக்கு
தெரியாம மறைச்சுப்புட்டா,
உன் எண்ணம்
உன் அப்பன் தான்னு- எனக்கு
தெரியாம போயிடுமா ?

புள்ள ஒன்னு பெத்துப்புட்டா,
மொத்த கணக்கு தீருமுன்னு
மன கணக்கு
போட்டு வைச்சேன்.
என் கணக்கு தப்பலையே !
ஐயிரண்டு மாசத்துல,
ராசாத்தி பொறந்துடுச்சே !!

○ ○ ○

அப்பனுக்கு சொல்லலையான்னு-
நீ
கேட்காம கேட்கையிலே ,
உன் அப்பங்காரன் மீசை மட்டும்
கண்ணுக்குள்ள நிக்குதடி...
உன் மாமங்காரன் விட்ட அடி
தலும்பின்னும் மறையலையே...
உன் ஆத்தாக்காரி விட்ட சாபம்
நெஞ்சம் இன்னும் மறக்கலையே...

○ ○ ○

தந்தி கிடைக்கும் முன்னே
வந்து சேர்ந்தான்
அவன் அப்பங்காரன்...
"வாங்க மாமா" ன்னு
சொல்லயில,
மதிக்காம உள்ள போனான்...

○ ○ ○

நீ உருப்படாம தான்
போவேன்னு
திட்டிய மாமங்காரன்
அடங்கிய காளைய போல்
தூக்கி முத்தமிட்டான்...

○ ○ ○

இம்புட்டு அழகான்னு
உச்சி முகர்ந்து பார்த்துப்புட்டு,
அப்படியே அவ ஆத்தா மாறீன்னு
புகழாரம் சூட்டிப்புட்டு,
எவன் தூக்கிட்டு போவானேன்னு-
கிழவி நையாண்டி பேசுகையில்,
**நானும் ஒரு அப்பனாகி**
**பயம் வந்து ஒட்டிடுச்சே !!!**

○ ○ ○

# நிழலாகிய நான்!!!

தாமரைச்செல்வன்



தனிமை இரவு!!!
மின்வெட்டு!!!
செவியுணரா ஓலமிடும் சத்தம்!!!
இருட்டறையில் கருவறைக்
குழப்பம்??!!!

பிரசவித்து வெளிப்பட்டேன்
பால்நிலா பல்லிளித்து பரிகசித்தது
படிவழி ஏறிப் பார்த்தேன்
கண்கூச்சமற்ற நிலவொளி!!!
உடல் கூசியது

ஓலமிடும் சத்தம் ஓய்யார
சிரிப்பாய் இப்போது!
பயந்து பின்வாங்கினேன்
வாமன அவதாரம் எடுத்தது
என் நிழல்!!!

மயான அமைதி
நிழல் நிசப்தம் கலைத்தது . . . . . . . .

உன்னுடன் சில நிமிடங்கள்??!!
சில கேள்விகள்??!! முதிர்த்து
தெளித்தது வார்த்தைகளை
மௌனியாய் நான் . . . . .
உன்னுடன் இறுதிவரை வருபவர்
யார்?!!!
காடுவரை பிள்ளை
கடைசிவரை???
தயங்கினேன் . . . .
நான்தான் என்றது நிழல்
உண்மை!! மீண்டும் மௌனித்தேன்
எங்கே ஓடிக்கொண்டிருக்கிறாய்???
எதை நோக்கி
ஓடிக்கொண்டிருக்கிறாய்???
உன் அவசர பயணத்தின் நோக்கம்
யாது???
நாம் காலார நடை பயின்றது
எப்போது???
இறுதியாய் எனை உற்றுக்
கவனித்தது எப்போது???
மாணவன் உள்ளுணர்வறிந்த
ஆசானாய்
கேள்விகளை நிறுத்தி விளக்கம்
அளித்தது

நோக்கமற்ற உன் பயணத்தில்
அடிபட்டு நான் கிழிந்த நாட்கள்
சொல்கிறேன் கேள்!!!

உன் பின்னால் கத்திக் கொண்டு
குத்துயிரும் கொலையுயிருமாய்
அலைந்த நாட்கள்
என்சொல்வேன்!!

உன்இருகரம் பற்றி இழுத்து
ஏங்கிப்போன நாட்கள்
என்சொல்வேன்!!

உன்முன் வந்து மயக்கியும்
வாகனசக்கரத்தில் சிக்கி மடிந்தும்
மண்றாடிய நாட்கள் என்
சொல்வேன்!!

தொலைக்காட்சிப் பெட்டியில்
தொலைந்து நீ போகையில்
தோள் உரசி நான் அழுத
அவல நாட்கள் என் சொல்வேன்!!

உறக்கத்தின் உச்சத்தில் நீ
புரண்டு புரண்டு படுத்திருக்க
நான் துவண்டு துவண்டு
துடித்தது என்சொல்வேன்

குளியலறையிலேனும் உன்னுடன்
குலாவியிருக்க
ஆசைப்பட்டிருந்தேன்
குளியலுனக்கோர் குலவழக்கமாய்
போனதென் சொல்வேன்!!

இறுதியில் ஒன்று
தெளிந்தேன் என்றேன்!!!
குறுநகையில் கொன்று
தொடர்ந்தது!!

என்றேனும் கண்ணாடி முன்
நீ ரசித்து பார்க்கும் போதுதான்
நிழலாகிய நான் உன்
உடலணிந்து
உயிர்பித்திருக்கிறேன்
என்று இன்பமுரைத்து
வேண்டியது

பிம்பம் என்பதால் பிணம் என்று
எண்ணாதே !!!
உயிர்கொண்டதால் நீ உண்மை
என்று ஆகிவிடாய்!!!
இனியேனும் எனை உயிர்பித்து
மகிழ்விப்பாயா!!! என்று

மின்வெட்டிற்கு நன்றி சொன்னது

நிழலுடன் நிலவு ரசித்திருந்தேன்
தெருவிளக்கு உயிர்பித்து
நிழலை விழுங்கியது!!
மின்(னை) வெட்ட வேண்டும்
போலிருந்தது

நிழலாய் படியிறங்கி
குளியலறை விளக்கிட்டு
உட்புகுந்தேன்! வெளியே
தொலைக்காட்சி தொடர்
நாடக ஒளிபரப்பு ஓசை!!

குளியலறையில் கும்மாளமிட்டு
குதூகளித்தது நிழல் !!

செவிடனாய் !!!
வெளியே சென்றேன். . . . . . . .
ஒவ்வொருமுறையும்
நிழல் கழுவி நிஜமுடுத்த
முற்பட்டு தோற்றுக்கொண்டே
இருக்கிறேன்
நிழலாகிய நான்!!!

இந்த இருளில்
எதில் இருந்து எது வரை
என்னுடைய நிழல்.

கல்யாண கண்ணன்

# வரந்தரும் தெய்வம்!

சுந்தர் புருஷோத்தமன்

“பண்போட அன்போட நலமோட வளமோட நூறு வருஷம் நீடூழி வாழணும்டா கண்ணா ”

தாத்தா பொக்கைவாய் சிரிக்க மலர்தூவி, பேரன் வருணை
ஆசிர்வாதம் செய்தார்.

“தாத்தா! பூப்போட்டு ஆசிர்வாதம் பண்ணி எஸ்கேப் ஆகற டக்கால்ட்டி வேலைலாம் இங்க செல்லாது. அண்ணாக்கு வருஷா வருஷம் பர்த்டே கிஃப்ட் வாங்கித்தருவியே? இந்த வருஷம் எதும் இல்லியா..ம்ம்?!”

நர்மதா தாத்தாவிடம் கேட்டுவிட்டுக் கண்சிமிட்டினாள்.

“யாருடி சொன்னா எதும் இல்லனு? இப்ப சொல்றேன் கேட்டுக்க… என் சொத்தே அவனுக்குத்தான். பத்திரம் எடுத்துட்டு வர சொல்லு உங்கப்பனை. இப்பவே கையெழுத்து போடறேன் எல்லாத்துலயும்”

தாத்தா மேற்கண்ட வசனத்தை சிவாஜி கணேசன் கணக்காய்
சொல்லிவிட்டு, மேல்மூச்சும் கீழ்மூச்சும் வாங்க, நர்மதா சிரித்தாள்.

“தாத்தா, எல்லாம் சரி. நிமிஷத்துல பேத்தி நானொருத்தி இருக்கறதயே மறந்துட்டயே நீ!? எல்லாம் பேரனுக்குன்னா… அப்போ பேத்திக்கு என்னவாம்”

“ஏண்டி கண்ணு, உனக்கு தான் தாத்தா நான் இருக்கனே அப்புறம் என்னவாம்?”

தாத்தா… மீசையை முறுக்கிக்கொண்டே பேத்தியை கேட்டுவிட்டுச் சிரித்தார்.

“நல்லா தான் நீ ஏமாத்தற என்னை…” என்றுவிட்டு நர்மதாவும் சிரிக்க, அந்த இடமே கலகலப்பாயிருந்தது. தாத்தா அன்புடன் நர்மதாவின் தலையைக் கோதி உச்சிமுகர்ந்தார்.
நர்மதா தாத்தாவின் கன்னத்தைச் செல்லமாய்க் கிள்ளினாள்.

“இந்தா… நீயே இத வருண் கிட்ட குடு” என்று பிறந்த நாள் பரிசாகத் தான் வாங்கி வைத்திருந்த பைக்கின் சாவியை சட்டைப் பைக்குள்ளிருந்து எடுத்து நர்மதாவிடம் கொடுத்தார் தாத்தா.

நர்மதா விழிவிரிய அதை வாங்கி, வருணிடம் நீட்ட, வருண்
வாய்பிளந்தான்.



“தாத்தா ஐ லவ் யூ! ஐயோ தாத்தா! என்ன இப்டி எனக்கு சர்ப்ரைஸ்- லாம் குடுக்கற நீ?! எவ்ளோ சந்தோஷமா இருக்கு தெரியுமா? எதிர்ப்பார்க்கவே இல்ல. யு ஆர் க்ரேட் தாத்தா…”

இன்ப மழையில் நனைந்தவன் சட்டென்று தாத்தாவைக் கட்டியணைத்து அவர் கன்னத்தில் முத்தமிட்டுவிட்டு துள்ளலாய் பைக்கை நோக்கி ஓடினான்.

தாத்தா, அவன் ஓடுவதை சிரித்தவாறே பார்த்துக் கொண்டிருந்தார்.

“டேய், என்னை ஒரு ரவுண்டு கூட்டிட்டு போடா…” நர்மதா திரும்பிப் பார்த்து அவனை நோக்கிக் கத்தினாள்.

“கூட்டிட்டு போய்ட போறான். அது யாரு நிஷாவா? உஷாவா? அவ கேக்காமலேயே இந்நேரம் ஒம்பது சுத்து சுத்தியிருப்பான். நான் என் வயசுக்கு எப்படி இருந்தேனோ அதே மாதிரி இருக்கான் இவனும். உங்கப்பன் தான் எதுக்கும் லாயக்கில்ல. என்ன பண்ண…. தவறி, அவன் அவனோட அம்மா மாதிரி பொறந்துட்டான்” என்றபடி தாத்தா மீண்டும் மீசையைத் தடவ,

divya vasan

நிகழும்
நிகழ் காலத்தில்,
நிகழாத நிகழ்வுகளால்,
நெகிழ்கிறேன்..
உன்
நினைவுகளின்,
நிழல்களில்.

“என்ன நடக்குது இங்க?” என்றவாறு நர்மதாவின் தந்தை அங்கே வந்து சேர்ந்துகொண்டார்.

“ஒன்னுமில்லடா. உம்பிள்ளை, அடுத்த வருஷம் கணக்குல ஃபர்ஸ்ட் மார்க் வாங்கினான்னா, அவனுக்கு கார் வாங்கித் தரலாமான்னு நர்மதா கிட்ட கேட்டுட்டு இருந்தேன். அதுக்குள்ள நீ வந்துட்ட அவ்ளோதான்.
என்ன நர்மதா?”

தாத்தா நர்மதாவைப் பார்க்க, நர்மதா சிரித்தாள்.

“சரி சரி பாஸாட்டும் பாப்போம். அப்பா! கோயில்ல வருண் பேருக்கு அர்ச்சனை பண்ணனுமாம். அவ அம்மா ப்ரசாதம், அர்ச்சனைக்கு தேவையானதெல்லாம் எடுத்துவச்சிருக்கா. கொஞ்சம் நீங்களும் நர்மதாவும் போய்ட்டு வந்துருங்களேன்?! எனக்கு போர்ட் மீட்டிங் இருக்கு காலைல. சாயந்தரம் வரும்போது நானும் அப்டியே கோயிலுக்கு போய்ட்டு வந்துடறேன்.”

வருணின் அப்பா, தாத்தாவிடம் விண்ணப்பித்தார். தாத்தா
ஏற்றுக்கொண்டார்.

“சரிப்பா. அத விட்டா எங்களுக்கு வேற என்ன வேலை. கொழுந்தே, போய்ட்டு அர்ச்சனை சாமான்-லாம் எடுத்துட்டு வாம்மா. போய்ட்டு வந்துடுவோம்”

“சரி தாத்தா!” நர்மதா சமையல் கட்டுக்குள் ஓடினாள்.

தாத்தாவுக்கும் நர்மதாவிற்கும் இடையே எப்போதும் இவ்விதமான உரையாடல்கள் உற்சாகம் நிறைந்ததாய் நடந்தவாறே இருக்கும்.
இருவரின் உரையாடலும் சொல்லப்போனால் இரு சம வயதொத்த நண்பர்கள் தமக்குள் சீண்டிச் சிரித்து மகிழும் உரையாடலைப் போல் தான் இருக்கும். சூரியன் மலர்ந்தால் எவ்விதம் நிலமெல்லாம் பகலில் ஜ்வலிக்குமோ… அவ்விதமே தாத்தாவும் அவளும் இருக்குமிடத்தில் சிரிப்புக்கும் சந்தோஷத்திற்கும் குறைவேயிருக்காது.

இருவரும் வருண் பேரில் அர்ச்சனை செய்யவேண்டி அதற்கான பொருட்களுடன் காரில் கோயிலுக்குப் பயணப்பட்டனர்.

நர்மதா காரை ஸ்டார்ட் செய்ய, தாத்தா உள்ளிருந்த சிடி-ப்ளேயரில் தருமபுரம் சுவாமிநாதன் உருகிப்பாடும் திருவாசகத்தை இழைய விட்டார்.

தாத்தா சில போதுகளில் மட்டும் மிகுந்த மௌனம் காப்பது உண்டு.

அதில் ஒரு பொழுது, திருவாசகம் கேட்கும் பொழுது!

மனிதர்… இந்த பாடல் இசைக்கப் படும்போது மட்டும் அப்படியே இமைமூடி அதன் வரிகளில், வரிகளின் உருக்கத்தில் தானும் கரைந்து மறைந்து போவார்.

இன்றும் அப்படித்தான். தன்னை மறந்த நிலையில் அமுதத்து இனிப்பில் கட்டுண்ட எறும்பாய் மோன நிலையில் கண்மூடி அமர்ந்திருக்க, நர்மதா அவர்நிலை கண்டு இளநகை பூத்தாள்.

“இந்த பாட்ல என்னமோ இருக்கு தாத்தா! ஆளை

## நகம்.

ratna devi



நகம்...

மோட்சம்தான் உனக்கு....

என்னவனின் இதழ் பட்டு

மடிவதால்...

என்னமா
உருக்கிடறது? நானும் எனக்கு நினைவு தெரிஞ்ச நாள்லேர்ந்து
பாக்கறேன். இந்த பாட்டு போட்டா, நீ அப்டியே சைலன்ட் ஆய்ட்ற.
எனக்கு முழுக்க புரியலன்னாலும் கூட எனக்கும் இத கேக்கும் போது என்னவோ பண்ணுது.”

தாத்தா பேத்தியின் வார்த்தைகளை உள்வாங்கியவராய் புன்னகையோடு அவள் பக்கம் திரும்பினார்.

“ஆமாம்மா. ஒருத்தர் இதுக்கு மேல தன்னைத் தாழ்த்திகிட்டு கடவுள் கிட்ட உருக முடியுமான்னு இத ஒவ்வொருவாட்டி கேக்கும் போதும் தோணும். நமக்கு அந்த மாதிரி பக்குவம் என்னைக்கு வாய்க்குமோ-னு இத கேக்கும்போதெல்லாம் நெனச்சுக்குவேன். மனசு மும்முரமா வேல செய்யும் போது வாய் மௌனமாய்டறது சகஜந்தானே? அதான் அப்பப்போ தூங்கினா மாதிரி உக்காந்துடறேன்” சிரித்தார்.

அவளும் பதிலுக்குச் சிரித்தாள்.

“ம்ம்… இந்த பாட்டுக்கு பொருள் என்னனு படிச்சு தெரிஞ்சுக்கணும்னு இருக்கு. தினசரி வாழ்க்கைக்கும் இதுமாதிரி பாட்டுங்கள்லாம் அந்த காலத்துல இருந்திருக்கும் தானே? குழந்தைங்களுக்கு ஆத்திச்சூடி மாதிரி?!”

“ம்ம். இல்லாம என்ன? பிறந்ததிலேர்ந்து நாம கண்ண மூடற வரைக்கும் நம்ம வாழ்க்கைய முறைபடுத்திக்கன்னு நெறய பாட்டுங்க பாடி வச்சிருக்காங்கம்மா. என்ன பேசணும், எப்படி பேசணும், எப்படி உடுத்தணும், எப்படி சாப்பிடணும்னு நெறய்ய நெறய்ய…

திருக்குறள் மாதிரி, திருமூலர் எழுதின திருமந்திரம்ங்கறதும் அதுல ஒன்னு. ஔசத்தியானதும்

கூட அன்பு தான் கடவுள். அதனால எல்லார்க்கிட்டயும் அன்பு செலுத்து; மனுஷங்க தான் நடமாடும் கோயில். அவங்களுக்கு உதவி செய். அது கடவுளுக்குப் போய்ச்சேரும்; ஒன்னுதான் கடவுள்; ஒன்னுதான் குலம் இப்டியா அற்புதமான விஷயங்கள் நெறய்யவும் ஆயிரம் ஆயிரத்தைநூறு வருஷத்துக்கு முன்னமே ஒருத்தர் பாடி இருக்கார்ங்கறது எத்தனை பெரிய விஷயம்?! அதை நாம சரியா புரிஞ்சுகிட்டு சரியா வாழ்ந்தோம்னாக்க அதவிட ஒசத்தியான வாழ்க்கை
இந்த உலகத்துல வேற என்ன இருக்கமுடியும்?"

நர்மதா, தாத்தாவைப் பார்த்து மீண்டும் புன்னகைத்தாள். மௌனமே வார்த்தையாய் அங்கே பல நிமிடங்கள் உரையாடல் நிகழ, இதற்கிடையில் சீராய் சென்றுகொண்டிருந்த வாகனம் சட்டென நின்றதும் மௌனம் கலைந்தது.

"என்னம்மா வண்டிய நிறுத்திட்ட?"

"கோயில் வந்துருச்சி தாத்தா. இப்போ தான் பாத்தேன்"

"என்னம்மா சொல்றே? இன்னும் அதுக்கு நாம நாலஞ்சு கிலோமீட்டர் போகணுமே?!"

"ஐயோ தாத்தா. பேசிக்கிட்டே இருக்காம சட்டுனு எறங்குங்க.
இல்லையானா கோயில் போயிடும். சீக்ரம் சீக்ரம்"

"என்னம்மா சொல்ற? எனக்கு ஒன்னும் புரியலயே?!" கேட்டுக்கொண்டே தாத்தா இருக்கையினின்று விடுபட்டுக் கீழிறங்கினார்.

அதற்குள் நர்மதா காரின் பின்புறத்தில் வந்த வழியே ஓடிக்கொண்டிருந்தாள். இந்த பெண்ணுக்கு என்னவாயிற்று? ஏன் இப்படி நடந்துகொள்கிறது என்று குழம்பியவாறே.. அவள் போகும் திசையில் விழிகளைச் செலுத்த, சட்டென பொறிதட்டியது.

அட நாம் தான் முட்டாள் தனமாய் நின்றுகொண்டிருக்கிறோம் என மனதுள் எண்ணியவாறே உள்ளேயிருந்த பைகளைச் சுமந்துகொண்டு நர்மதாவை நோக்கித் தானும் ஓடினார்.

மூச்சிரைத்தது அவருக்கு. அவளருகில் சென்றதும் முகம் முழுதும் பூரிக்க நர்மதாவை நோக்கிச் சிரித்தார்.

நர்மதாவும் புன்னகையுடன் அவரிடமிருந்து பையை வாங்கிக்
கொண்டாள். பிறகு அங்கே துரிதமாக செயல்கள் அரங்கேறின.

கொண்டு வந்திருந்த வாழை இலையில் பிரசாதம் பரிமாறப்பட்டது. பழங்கள் பரப்பப் பட்டன. கொண்டு வந்த நீரை அருகில் வைத்தாள் நர்மதா. வைத்தது தான் தாமதம், நடமாடும் கோயில் தெய்வம், தன் அகோரப் பசியால் வெடுக் வெடுக்கென வைத்திருந்ததையெல்லாம் கணமும் தாமதியாமல் வேகமாய் விழுங்கிற்று.

## என் தமிழே என்றும் நிலைக்கும்

நிலாசூரியன்

தமிழை என்றும் காக்க
தலையையும் தானம் தருவேன் - செந்
தணலில் எரித்தால்கூட - செந்
தமிழை நானும் மறவேன்..

ஈன்றவள் தந்தது தாய்ப்பால் - அட
தமிழும் எனக்குத் தாய்ப்பால்
குறளில் குடித்தேன் முப்பால் - முத்
தமிழில் சுவைத்தேன் தேன்பால்..

என்னிலம் நன்னிலம் என்பேன் - அட
என்னுயிர் தமிழே என்பேன்
எங்கும்தமிழை விதைப்பேன் - எனை
புதைத்தாலும் தமிழாய் முளைப்பேன்..

பாரில் பலமொழி இருப்பு - அதில்
பைந்தமிழேத் தனிச் சிறப்பு
காரில் குதிக்கும் மழையும் - அட
கவிதைகள் இசைக்கும் தமிழில்..

சொல்வளம் கொண்டது தமிழாம் - இல்லை
பல்வளம் நிறைந்தது என்பேன்
தேனாய் இனிக்கும் தமிழாம் - இல்லை
அதைவிட இனிக்கும் என்பேன்..

எழில்வளம் கொண்டது தமிழாம் - இல்லை
பேரெழில் நிறைந்தது என்பேன்
இலக்கியம் கொண்டது தமிழாம் - பல்
இலக்கணம் தந்ததும் அதுதான் என்பேன்..

குன்றி லேறி உரைப்பேன் - என்
தமிழே வாழ்க வென்று
குறும்பா நெடும்பா தொடுப்பேன் - என்
தமிழே உயர்ந்தது என்று..

நாற் றிசைகளும் ஒலிக்கும் - என்
தமிழே என்றும் நிலைக்கும்
இவ்வுலகம் அழிந்தால்கூட - அது
இன்னொரு உலகம் படைக்கும்..!!!

தெய்வத்தின் பசியுணர்ந்த இருவரின் கண்களிலும் கண்ணீர் தளும்பியது.

அப்போது தான் அலைபேசியில் மகளை அழைத்திருந்தாள் அவள் அம்மா.

"நர்மதா கோயிலுக்குப் போயிட்டீங்களாம்மா?"

"போய்ட்டோம்மா!"

"கூட்டம் நெறய்ய இருக்குமே. சாமி நல்லா பாத்தீங்களா?!"

“இந்த கோயிலுக்கு நெறய்ய கூட்டம் வர்றதில்ல போலிருக்கு. நானும் தாத்தாவும் மட்டும் தான் இருக்கோம். நல்ல தரிசனம்! ரொம்ப சந்தோஷமா இருக்கும்மா”

தாத்தாவைப் பார்த்துக் கொண்டே அம்மாவுடன் பேசினாள் நர்மதா. தாத்தா புன்னகைத்தார்.

உண்டு முடித்த பின்னர் தெய்வத்திற்குக் கை கழுவ நீர் ஊற்றினார் தாத்தா.

கைகளைத் துடைத்துக் கொண்டு, மீதமிருந்த சில பழங்களைத் தன் கிழிந்த பையில் போட்டுக் கொண்டது அந்த வயோதிகக் கந்தலாடைத் தெய்வம். பின் இருவரையும் நோக்கிக் கண்ணீர் மல்க, “ஐயா நீங்க நல்லா இருக்கணும்! அம்மா நீங்க நல்லா இருக்கணும்! உயிர் போற நேரத்துல சாப்ட குடுத்து உதவுறீங்களே… ஐயா நீங்க நல்லா இருக்கணும்! அம்மா நீங்க நல்லா இருக்கணும்!” என்றவாறே பலமுறைத் தன் கரங்கள் கூப்பி, வாய் குழறக் கும்பிட்டவாறே தள்ளாடித் தள்ளாடி மெதுவாய் நடக்க,

நடக்கும் தெய்வத்திடம் அதன் பெயர் கேட்டார் தாத்தா. தன் பெயர் சுருக்கிச் சாமி என்றது, சாமிக்கண்ணு என்கின்ற அந்த தெய்வம்.

சிலிர்த்தார்கள் இரண்டு பேரும். தெய்வம் அவர்களைப் பார்த்துச் சிரித்தது.

“சாமி ஆசிர்வாதம் பண்ணிருச்சும்மா!”

அம்மாவிடம் சொல்லிவிட்டு அழைப்பைத் துண்டித்தாள் நர்மதா.

## ஒன்று பட்டால் உண்டு வாழ்வு

சுதா

வரலாற்றை தின்று செரித்த
கறையானுக்கு தெரியும்

கன்னித்தமிழில் எழுதியதால்
பனை ஓலையும்
கற்கண்டாய் இனித்ததென்று..!!

மறத் தமிழனை கண்டால்
மதக்களிறு மண்டியிடும்
வேங்கை வெகுண்டோடுமென்று..!!!!

அன்று
வாளும் உறையுமாய் தமிழர்கள்

அதோ அந்த இமயம்
தமிழ்க் கொடியை தாங்கி நின்றது
இதோ இந்த வங்காள விரிகுடா
தமிழெல்லையாய் படர்ந்திருந்தது..!!!!

இல்லையென்ற குறையின்றி
அள்ளி கொடுத்து வாழ்ந்தனர்..!!!

இன்று
இரைத் தேடிப் போன
பறவைகளைப் போல பிரிந்துள்ளோம்

நம் கோட்டையிலே
நரிகள் ஊளையிடுகிறது...!!!

ஓநாய்கள் வேட்டையாடுகிறது
தமிழ் சிங்கங்களை
பூனைகள் விரட்டுகிறது
புலியை விரட்டிய மங்கையரை..!!!

தங்கமது மண்ணில்
மறைந்துள்ளதைப் போல
மக்களோடு மக்களாய்
உலகெங்கிலுமுள்ள தமிழர்களே..!!!

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
மறந்தாயோ ?

அணுக்களிரண்டு சேர்ந்ததால்
அண்டத்தை ஆளும்
கதிரவன் தோன்றினான்

தமிழர்கள் ஒன்று சேர்ந்தால்
அகிலத்தையே ஆளலாம்..!!!

அலை
கூடி .. கூடி ..
வந்ததால் உடைகிறது கரை

தமிழர்கள் கூடினால்
எதிரிகளின்
இடுப்பொடித்து அடுப்பெரிக்கலாம்..!!!!

காற்று கைகோர்த்து
ஓடி.... ஓடி....
வளைக்கிறது மரத்தை

தமிழர்கள் கைகோர்த்தால்
ஈழத்தில் கண்ணீர் மறையும்
தமிழீழம் பிறக்கும்..!!!

தமிழர்கள் பாதரசம் போல
புறத்திலே சிறு துளியாயினும்
அகத்திலே
உச்ச உஷ்ணத்திலும்
உருகாத உலோகம்
என்று சொல்லி ஒன்று கூடுங்கள்..!!!

இல்லையன்றால்
நாளை நம்
குஞ்சுகள் வாழ கூடு இருக்காது..!!!

# குறளின் குரல்

சுந்தர் புருஷோத்தமன்




அறத்துப்பால் – பாயிரவியல்

03. நீத்தார் பெருமை

**21:** ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு.

*ஒழுக்க மோம்புதல் மேலோர்க்கழகாம் – அஃதோம்பி*
*ஒவ்வாதன ஒழித்தார்தம் ஒப்பிலா குணமதை*
*உவப்புடன் துணிந்தே உலகுக் குரைக்கும்*
*உயர்ந்தோர் வாய்மொழி நந்நூல்.*

**22:** துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று.

*விருப்பு வெறுப்பதைத் துறந்தார் பெரியார்-அவர்தம்*
*பெருமையி னளவும் பெரிதஃது*
*பெருநிலமிதனில் பிறந்திறந்தா ரெண்கணக்கைப் போலும்*
*அளவிடற்கரிதா மறிவீர்.*

**23:** இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு.

*இம்மையினின்னலு மறிவார்; மறுமையினின்பமு மறிவார்;*
*துறக்கு மறமதைத் துணிந்துகைக் கொள்வா ரவர்புகழ்,*
*அளவிற் பெரிதென அழியா திலங்கி*
*உலகிதில் நிலைபெறு முணர்வீரே.*

**24:** உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்தது.

*திண்மனத் தோட்டியால் பொறிகளாம்*
*ஐங்களிறடக்குவன் வல்லோன் – அவனே*
*துறவெனும் நிலந்தனில் துளிர்விடத் தகுந்ததோர்*
*முதிர்ந்தநல் வித்தென விளங்குவனாம்.*

**25:** ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி.

*ஐந்து புலன்களி னாசை யஃதறுத்தவன்*
*அனைத்தையு மறுப்பவ னவன் திறமஃது*
*அவ்வுலகென்னும் வானதற் கரசாம்*
*இந்திரன் செறுக்கது மறுக்கு மஃதறிவீர்.*

**26:** செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

*துறப்பன துறப்பார்; துறந்து பின்*
*செயற்கருஞ் சீரிய செயல்செய்வா ரவரே பெரியாராம்*
*துறப்பன துறந்தும் பெரியாரோடே கூடித்திரினுங் குணமின்றி*
*அருஞ்செயலேது மாற்றார் சிறியா ரெனப்படுவர்.*

**27:** *சுவைஒளி ஊறுஓசை நாற்றமென ஐந்தின்*
*வகைதெரிவான் கட்டே உலகு.*

*சுவையுணர் நாவும் ஒளியுணர் விழியும் செவியும்*
*நாற்றமறி பொறியும் தோலுமைம்புலனாம்.*
*ஆய்ந் தவற்றின் ஆசையஃதறுப்பான் - உலகிதை*
*யாள்வா னடக்கி.*

**28:** நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

*துறப்பன துறந்தாரைச் சான்றோரென்பர்*
*சான்றோரே நன்மொழிபேசும் நலமுடையார்*
*நலமுடையாரவர் புகழ்தன்னை வாழ்வாங்குவாழுமவர்*
*மந்திரச்சொல்லே மறைக்காமற் சொல்லும்.*

**29:** *குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி*
*கணமேயும் காத்தல் அரிது.*

*பண்பெனும் மேருவின் மீதிருப்பர் மேன்மக்கள்*
*அவரே சினமேதுங் கொள்ளா குணமுடையாரவர்*
*சினமேதுங் கொண்டாராயினு மச்சினம்*
*கணமேது மாங்கே நிலைத்த லரிதாம்.*

**30:** *அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்*
*செந்தண்மை பூண்டொழுக லான்.*

*அறமதை யணியெனக் கொள்வார்*
*அருளுட னுயிர்க்கெல்லா மன்பினைப் பொழிவார்*
*அறம்நிறை அருள்நிறைச் சான்றோ ரவரே*
*அந்தணராவது மறிவீர்.*

- தொடரும்

# நட்பில் ஒருவகை

கனிகீஸ்



உண்ணும் போதும் உனக்கொரு
வாய் பிரித்தெடுக்கிறேன்..
உறங்கும் போதும் எனக்கரிகலோர்
இடம் கொடுக்கிறேன்..
உந்தன் பெயர் மந்திரமாய்
தினம் உச்சரிக்கிறேன்..
உதட்டுச்சத்தம் கேட்டே
நானும் நச்சரிக்கிறேன்..
○ ○ ○

கொஞ்சிக்கொஞ்சி உந்தன்
மார்பில் முகம் புதைக்கிறேன்..
வஞ்சிஎந்தன் வளையல் சத்தம்
கேட்கத்தானே தவம் கிடக்கிறேன்...
மிஞ்சிப்போகையில் கெஞ்சியே
நானும் அடம் பிடிக்கிறேன்..
தஞ்சம் உந்தன் நெஞ்சம்
என்று உடன் வருகிறேன்..
○ ○ ○

மூச்சுக்காற்று வீசிடமறுத்தால்
சுவாசங்கள் இல்லையடா...

வார்த்தைகள் கொண்டு வாழ்ந்திடும்
வாழ்க்கையில் மௌனங்கள் தொல்லையடா...
பார்வைகளின்றி பரிசங்களின்றி
நெஞ்சைத் துளையிட்டாய்...
நேற்றையநாளும் இன்றையநாளும்
வலிகொண்டு நகர்கின்றதே...
○ ○ ○

கூட்டுப்புழுவாய் என்னைச்சுருக்கி
உன்னில் புகுத்திவிட்டேன்...
முன்போல் இல்லா ஏக்கங்கள் கொண்டு
தூக்கங்கள் தொலைத்துவிட்டேன்...
தலையணையோடும் தனியுறவாடும்
தவிப்புகள் கொண்டுவிட்டேன்...
நீ பேசிட மறுக்கையில் வார்த்தைகள்
எல்லாம் நெஞ்சில் கனக்கிறதே...
○ ○ ○

வாழ்ந்திடும் காலம் குறைவென நினைத்தே
உன் வார்த்தைகள் சேர்க்கின்றேன்...
உதட்டுப்பிரிவில் ஒற்றியெடுக்கும்
ஒற்றைச்சொல் தாயேன்..
நட்பில் நானும் நாணயம் கொண்டே
நடந்திடவில்லையடா - உன்
ஒப்புதல் இன்றியே என்னில்
உன்னை சேர்த்துக்கொண்டுவிட்டேன்..
○ ○ ○

நான் தந்த துயர்கள் தாய்மை
கொண்டே தாங்கிக்கொண்டுவிடு..
இனி வந்திடும் காலம் வசந்தங்கள்
வீசிடும் என்று நீ நம்பிவிடு..
என்னுயிர்த்தோழா என்னுயிர்த்தோழா
என் தனிமை போக்கிவிடு ..
உன்மனம் தந்தே என்னை முழுதாய்
ஏற்றுக் கொண்டுவிடு...
○ ○ ○

## மழை

pvlkanthan

வானமென்னும்
வீட்டினிலே
இடியென்னும்
பேச்சினிலே
மின்னலென்னும்
சிரிப்பினிலே
கரு மேகத் தம்பதிகள்
உறவு கொண்டதினால்
பிறந்த குழந்தையின
கண்ணீர்!

## ஹைக்கூ

கார்த்திகா

என்ன எழுதவென்று
யோசித்து யோசித்து
மனம் குழம்பும் வேளையிலும்
என் கரங்கள் கிறுக்குகின்றன..
மிகத் தெளிவாய் ,
உன் பெயரைமட்டும் !

ஒரு பக்கம் முழுதும்
சிறிதும் இடைவெளி என்பதின்றி
நன்பொருள் உள்ளடக்கிய
மிகச்சிறிய ஓர் வார்த்தை
ஹைக்கூவாய்
நீ புன்னகைக்கிறாய் அதில் !..

# பொம்முவும் அமிர்தப் பானையும் – தொடர்

லோகேஷ் ஜெயகோபி



### அத்தியாயம் -1

### பிறந்தநாள் பரிசு

"ஹேப்பி பர்த்டே " என்று எல்லாரும் பாட ஆரம்பித்தனர் . வீடே தோரணங்களால் ஜொலித்துக் கொண்டிருந்தது . ஏனென்றால் இன்று அரவிந்தின் பிறந்தநாள் . 13 வயது தொடங்கும் அரவிந்தின் பெற்றோர் இம்முறை அவன் பிறந்த நாளை கோலாகலமாக கொண்டாட ஏற்பாடு செய்திருந்தனர் .

அரவிந்த் கேக்கை வெட்டி தன் பெற்றோருக்கு மகிழ்ச்சியுடன் ஊட்டினான். ஆனால் சஞ்சய் மட்டும் முகத்தில் வெறுப்போடு நின்றிருந்தான் . அவன் தான் அரவிந்தின் ஒரே தம்பி, வயது 10. சஞ்சய்க்கும் அரவிந்துக்கும் எப்போதும் போட்டியும் சண்டையும் தான். அரவிந்த் சஞ்சையை பார்த்து பல்லிளித்தான். சஞ்சய் முறைத்தபடி தன் அண்ணனை மிரட்டினான்.

பிறந்த நாளுக்கு வந்திருந்த விருந்தினர்கள் அரவிந்துக்கு பரிசை குடுத்து விட்டு செல்ல ஆரம்பித்தனர். அன்று அரவிந்த் மிகவும் சந்தோஷத்துடன் இருந்தான். அவன் தன் பிறந்தநாள் பரிசுகளை பிரித்துப் பார்க்கும் நேரம் வந்தது.

நேரம் 9.30, அரவிந்த் உணவு உண்டப்பின் தன் அறைக்கு சென்றான். தன் படுக்கை நிறைய பரிசுகள் காத்திருப்பதை கண்டு புன்னகைத்தான். படுக்கை மேல் அமர்ந்து தன் பரிசுகளை பிரித்துப் பார்க்க ஆரம்பித்தான் அரவிந்த். விடியோ கேம்ஸ் , புத்தகங்கள் , அழகு கடிகாரம் என்று ஒவ்வொரு பரிசுகளையும் வியப்புடன் கண்டான். எல்லா பரிசை பிரித்து பார்த்து முடித்தான் அரவிந்த்.

குடுகுடுவென அவன் அறைக்கு ஓடிவந்த சஞ்சய் "நான் வர்றதுக்குள்ள எல்லாப் பரிசையும் பிரிச்சிடியா?" என்று கோவது கேட்டான்.

"இதெல்லாம் என்னோட பரிசு கண்ணா ! உனக்கு எதுக்கு காட்டணும்?" - அரவிந்த்

"ரொம்ப பண்ணிக்காத ! எனக்கும் அடுத்த வர்ஷம் பிறந்த நாள் வரும். அப்போ பாத்துக்கிறேன்! கீழே ஒரு பரிசு கிடக்கு பாரு! அதையும் நீயே பிரிச்சிடு !" என்று கோவத்துடன் சஞ்சய் கூறிவிட்டு அங்கிருந்து சென்றான்.

அரவிந்த் தன் படுக்கை கிழே குனிந்து பார்த்தான். அவன் பார்த்த மற்ற பரிசுகளை விட கொஞ்சம பெரிதான பரிசு அங்கே இருந்தது. வேகமாக சென்று அதை எடுத்தான் அரவிந்த். இவ்வளோ பெரிய பரிசை இவ்வளவு நேரம் தான் காணவில்லை என்று நினைத்தான். காகிதத்தால் சூழப்பட்ட அந்த பரிசின் மேல் ஒரு பொம்மை கடையின் விலாசம் மட்டும் இருந்தது.

அரவிந்த் அது என்ன பரிசாக இருக்குமென ஆர்வத்துடன் அதை பிரிக்க ஆரம்பித்தான். கடைசியில் அதில் ஒரு அழகான பெண் பொம்மை ஒன்று இருந்தது. சிவப்பு கவுனும் , ரெட்டைக் ஜெடைகளும், அழகான கண்களும் கொண்டிருந்தது அந்த பொம்மை. ஆனால் அந்த பொம்மையை கண்டு அரவிந்துக்கு எந்த மகிழ்ச்சியும் இல்லை.

"வெறும் பொம்மையா?" என்று அரவிந்த் அந்த பொம்மையை தன் அலமாரியில் போட்டு அதன் கதவை மூடினான்.

அரவிந்த் படுகையில் படுத்து உறங்க ஆரம்பித்தான். அலமாரியில் இருளில் கிடந்தது அந்த பொம்மை.

✡ ✡ ✡

வழக்கம் போல அரவிந்த் பள்ளி சென்றான். வகுப்பிலேயே நண்பர்கள் இல்லாமல் தனியாகவே இருக்கும் ஒரே ஜீவன் அரவிந்த் மட்டும் தான். எப்போதும் தனியாகவே பள்ளியில் இருப்பான். இதன் காரணமாகவே அவனை ஏமாற்றும் மாணவர்கள் சிலர் இருகின்றனர். அதில் ஒருவன் தான் அன்பரசு.

அன்பரசு ஒரு முரட்டுச் சிறுவன். தனக்கென ஒரு நான்கு சிறுவர்களை விட்டுக்கொண்டு வகுப்பையே மிரட்டி வருபவன். அவனுக்கு யார்ரும் அடிப்பணியவில்லை என்றால் அடி உதைதான்.

அன்று உணவு நேரம் வந்தது. அரவிந்த் தன் உணவு டப்பாவை பையிலிருந்து எடுத்தான்.

“என்ன தம்பி? இனிக்கு என்ன லஞ்சு?” என்று அன்பரசு அரவிந்தை மிரட்டியபடி கேட்டான்.

“இனிக்கு எனக்கு ரொம்ப பசிக்குது.நான் உனக்கு

நாளைக்கு லஞ்ச்சு கொண்டு வறேன்" என்றான் அரவிந்த் பாவமாக.

துவளாதே
தொலையாதே

aro...



இதோ...
இனியேதும் இல்லை;
இருள் மட்டும் மிச்சம்

தற்கொலைக்கு தவிக்கிறாயோ...?!
ஏதும் இல்லை
எண்ணம் உனக்கா.....?

நன்றாக சிந்தி...

எரிச்சல் எரிக்குச்சி;
விரக்தி விறகு;
இவை
இருக்க உடல்;
உடலை உசுப்ப உயிர்;
கடந்து செல்ல கால்கள்;
கன்னம் தாங்க
கவலையில் கசியும்
கண்ணீர் வாங்க
உனக்கு துணையாய் கைகள்:

இப்போது பார்...
எத்தனை உன்னிடம்.

தோல்வியில்
கோபம் வந்தால்
முறையாக்கு; வேல் முனையாக்கு
வீரன் என்பார்கள்

அழுகையா....?
அடக்கு
அப்போ அப்போ அழு;
நடிகனாக்கி ரசிப்பர்கள்;

இன்னும் உனக்குள்
தற்கொலை தாத்துவமா...?

நிறுத்து உன் வாதத்தை;
பிரச்சனைக்கு தீர்வெல்லாம்
பிணம் தான் எனில்
பிணங்களின் பிறப்பு விகிதம்
நூற்றுக்கு நூறு;

உன்னை தாண்டி பார்
வெவ்வேறாய் எத்தனை பேர்;
உண்மை புரியாமலா போய்விடும்

போராடு.....
காத்திருக்கு வரலாறு;
மிச்சமிருக்கு
உனக்கும் சில
ஏடு

"ஒழுங்கா நீயே குடுத்திடு! இல்லனா தேவை இல்லாம அடிவாங்குவ " என்று தெனாவட்டாக கூறினான் அன்பரசு. அரவிந்த் தயங்கிபடி பார்த்தான்.

உடனே அன்பரசின் நண்பன் ஒருவன் அரவிந்தின் உணவு டப்பாவை பிடுங்கினான். தடுக்க நினைத்த அரவிந்துக்கு மூக்கில் அடிப்பட்டு லேசாக இரத்தம் சொட்ட ஆரம்பித்தது.

"சொன்னா கேக்கணும் இல்லனா இப்படிதான் ஆகும்" என்று கேலிசெய்து விட்டு அன்பரசு கிளம்ப அவன் நண்பர்கள் அவன் பின்னே சென்றனர்.

அரவிந்துக்கு அன்பரசு மட்டும் ஒரு பிரச்னை என்று சொல்ல முடியாது. தனக்கு நண்பர்கள் யாருமே இல்லை இல்லை என்று பள்ளிக்கு சேர்ந்த நாளில் இருந்தே வருந்தி வருவான். என்றாவது தனக்கு நிறைய நண்பர்கள் கிடைப்பார்கள் என்ற நம்பிக்கை மட்டும் அரவிந்துக்கு இருந்ததது.

நாட்கள் இப்படியே சென்றது. அன்று வழக்கம் போல சோகமாகவே வீட்டிற்கு வந்த அரவிந்த் தன் அறைக்கு சென்று தன் பையை இறக்கி வைத்தான். தன் அறையே குப்பையாக இருப்பதைக் கண்டான் அரவிந்த்.

"அய்யயோ அம்மா பார்த்தா திட்டிட்டே இருப்பாங்களே.சீக்கிரம் சுத்தப்படுதணும்" என்று புலம்பியபடி அறையை சுத்தப்படுத்த ஆரம்பித்தான்.

தன் அலமாரியை எதிர்ச்சியாக திறந்த அரவிந்த் தான் வைத்த அந்த பொம்மை இருட்டில் இருப்பதை கண்டான்.தன் உணர்வை போல அந்த பொம்மைக்கும் இருக்கும் என்ற எண்ணத்தில் அதை எடுத்து தன் படுக்கை மேல் அமரவைத்தான்.

இம்முறை அரவிந்துக்கு அந்த பொம்மை அழகாக தெரிந்தது. அதனிடம் பேச வேண்டும் என்று நினைத்தான்.

"என்னை மன்னிச்சிடு! உன் உணர்வு எனக்கு தெரியும். என்னை போல நீயும் தனியாக இருக்கணு இப்பதான் புரிஞ்சுது" என்றான் அரவிந்த்.

எந்த உணர்வும் இல்லாத அந்த பொம்மையிடம் பேசுவது அரவிந்துக்கு பிடிக்க ஆரம்பித்தது.

"உன் கூட பேசறது எனக்கு ரொம்ப நிம்மதியா இருக்கு. இனிமே நீயும் நானும் நண்பர்கள்! சரியா?" என்று அந்த பொம்மையின் கன்னத்தை கிள்ளி முத்தமிட்டான் அரவிந்த்.

"ஒய் சின்ன பையா! என்ன பொம்மைக்கிட்ட பேசிக்கிட்டு இருக்க? என்று சஞ்சய் அரவிந்தின் அறை வாசலில் நின்று கேலி செய்தான்.

"உனக்கு என்ன வேணும் இப்போ ?"என்றான் அரவிந்த் வெறுப்பாக.

"அம்மா உன்னை தோட்டத்துக்கு தண்ணி ஊத்த சொன்னாங்க!" என்று சொல்லிவிட்டு சென்றான் சஞ்சய்.

"ஆனா என் ரூம் ரொம்ப குப்பையா இருக்குடா.நான் சுத்தப்படுத்தணும். நீயே அதை செஞ்சிடுடா ப்ளீஸ்" என்று மெல்ல கூறினான் அரவிந்த்.

"அது உங்க பிரச்சனை சார்! "என்று சிரித்துக்கொண்டே சென்று விட்டான் சஞ்சய்.

அரவிந்த் தோட்டத்துக்கு சென்று தண்ணீர் ஊற்ற ஆரம்பித்தான். சிறிது நேரம் சென்றது.

"அரவிந்த் ! நான் சஞ்சயைதான தண்ணீர் ஊத்த சொன்னேன்! அவன் எங்க?" என்று சமையில் ஜன்னல் வழியாக அரவிந்தின் அம்மா தேவி குரல் கொடுத்தார்.

"டேய் குட்டி பிசாசே!"என்று அரவிந்த் தம்பியை தேடி ஓடினான்.

வெளியே மற்ற சிறுவர்களோடு சஞ்சய் விளையாடுவதை கண்டான் அரவிந்த். அரவிந்துக்கு மீண்டும் ஏக்கம் வந்தது. தானும் அவனை போல நண்பர்களோடு விளையாட முடியவில்லை என்று நினைத்தபடி தன் அறைக்கு சென்றான்.

ஆச்சர்யத்தில் வாயை பிளந்தான் அரவிந்த். அவனுடைய அறையே சுத்தமாகவும் பளபளப்பாகவும் இருந்தது. பொருட்கள் அங்கங்கே இருக்க வேண்டிய இடத்தில் இருந்தது.

காதல் என்னும்
கண்ணாம்பூச்சி ஆட்டத்தில்
தோற்றுவிட்டேன் !!!!
என்னவளை கண்டுபிடித்தும் !!!!!

- பார்த்தீபன் -

அரவிந்துக்கு காபி கொண்டு வந்தார் அவன் அம்மா தேவி.

“பரவா இல்லையே அரவிந்த் உன் ரூமை சுத்தமா வச்சிருக்கியே..”என்றார் தேவி.

“என்ன சொல்றீங்க? ரூமை நீங்கதான சுத்தம் செஞ்சிருக்கணும்?” என்று புரியாமல் கேட்டான் அரவிந்த்.

“முளை குழம்பிடுச்ச்சா? இப்பதான் உன் ரூம் பக்கமே நான் வறேன்” என்று தேவி எந்தவித உணர்வில்லாமல் சொல்லிவிட்டு சென்றார்.

“என்ன இது ? ரூமை யார் சுத்தம் செஞ்சிருப்பாங்க?”என்று குழப்பத்தில் தன் அறையை சுற்றிச் பார்த்துக்கொண்டே இருந்தான் அரவிந்த்.

அவன் படுக்கை மேல் அமர்ந்திருந்த அந்த பொம்மை உணர்வில்லாத சிரிப்பை காட்டியபடியே இருந்தது.

✡ ✡ ✡

## அத்தியாயம் - 2

## குழப்பங்கள் ஆரம்பம்

அன்று இரவு நேரம். அரவிந்துக்கு மறுநாள் முழு ஆண்டுத்தேர்வு இருந்தது. அதனால் அவன் தன் அறையில் படித்துக் கொண்டிருந்தான். அருகிலே அந்த பொம்மை இருந்தது. ஏனென்றால் அவன் இப்போதெல்லாம் அந்த பொம்மை தோழியுடன் தான் நிம்மதியாக இருக்கின்றான்.

“அரவிந்த் உன்னோட ஹால் டிக்கெட்டை பத்திரமா உன் பையில வை! நாளைக்கு மறந்திட்டு போய்ட போற” என்றார் தேவி.

“வச்சுகிறேன் அம்மா..”என்றான் அரவிந்த். ஆனால் அவன் தற்போது கணக்கு பாடத்தில் தீவிரமாக இருந்தான்.

“கருக் ! முருக்!” என்று ஏதோ சத்தம் கேட்டது. அது ஒரு ஒரு சாக்குலேட் கவரின் சத்தம். அரவிந்த் மெல்ல எழுந்து தன் அறைக்கு வெளிய எட்டிப் பார்த்தான். குளிர் பெட்டியில்ருந்து அரவிந்தின் சாக்குலேட்களை திருட்டுத்தனமாக சாப்பிட்டுக் கொண்டிருந்தான் சஞ்சய்.

“அம்மா ! இந்த குட்டி பிசாசு என்னோட சாக்குலேட்கள தின்னுடான்.”என்று கோவத்தோடு சஞ்சை பிடிக்க ஓடினான் அரவிந்த். அதற்குள் சஞ்சய் அலறியடித்துக் கொண்டு அவனுடைய அறைக்கு சென்று கதவை மூடிக் கொண்டான். அரவிந்துக்கு கோவத்தில் கண்ணீரே வந்துவிட்டது. சத்தம் கேட்டு அங்கே அவசரமாக வந்தார் தேவி.

“அரவிந்த் விடுப்பபா. சாக்குலேட் தான? உனக்கு நாளைக்கு வாங்கி தரேன்” என்று சமாதானப் படுத்தினார். தேவி.

“அது எனக்கு பிடிச்ச சாக்குலேட். நாளைக்கு எக்ஸாம் முடிஞ்சு பஸ்ல வரும்போது சாப்பிட்டுகிட்டே வரலாம்னு நினைச்சேன்.”என்று அரவிந்த் ஏக்கத்தோடு சொன்னான். அவன் கண்ணீர் நிற்கவில்லை.

“விடுப்பா. அவன் தம்பிதானே?..விட்டுக்குடுக்கலாம்ல?”என்று தேவி அரவிந்த் கன்னத்தை தொட வர அவரின் கையை தட்டி விட்டான் அரவிந்த்.

“எப்பவுமே நான்தான் விட்டுக் குடுக்கணுமா?” என்று அரவிந்த் கோவமாக தன் அறைக்கு சென்று தாழ்பாள் போட்டுக்கொண்டான்.

மறுநாள் காலை பள்ளிக்கு வேகவேகமாக கிளம்பினான் அரவிந்த். வழியில் சஞ்சய் தன் சாக்குலேட்களை தின்று போட்ட கவர்களை கண்டான். அரவிந்துக்கு கோவம் குறையவில்லை.

“ஹே அரவிந்த் ! பாலாவது குடிச்சுட்டு போடா..”என்று அவன் அம்மா தேவி எவ்வளவோ கத்தியும் காதில் வாங்காமல் விட்டாய் விட்டு பள்ளிக்கு கிளம்பினான் அரவிந்த்.

தன் பள்ளிப் பேருந்து வந்ததும் அதில் ஏறி பள்ளிக்கு சென்றான். தேர்வு நேரம் ஆரம்பிக்க சில நிமிடங்களே இருந்தது. மாணவர்கள் அனைவரும் பள்ளி வளாகத்தில் ஆங்காங்கே கையில் புத்தகத்துடன் நின்றுக்கொண்டு படிக்க ஆரம்பித்தனர்.

“ட்ட்ரீங்” என்று பள்ளி மணியடித்தது. மாணவர்கள் தேர்வு அறைக்கு செல்ல ஆரம்பித்தனர். தேர்வு அறைக்கு வெளியே நின்றிருந்த அரவிந்த் தன்னுடைய ஹால் டிக்கெட்டை எடுக்க பையை திறந்தான். அரவிந்த் அதிர்ந்து போனான். ஹால் டிக்கெட்டை வீட்டிலேயே மறந்து வைத்தாது அப்போதுதான் அவனுக்கு நியாபகம் வந்தது.

அரவிந்துக்கு பயத்தில் உடன் நடுங்க ஆரம்பித்தது. மற்ற மாணவர்கள் அரவிந்த் தயங்கியபடி அறைக்கு வெளியே நிற்பதின் காரணம் புரியவில்லை.

## அவள்

அனில் ராஜ்

கரையில் விழுந்த மீன் போல்

துடிக்கின்றேன்

அவள் காதல் எனும் இதயகூட்டில் நான்

காத்துக்கொண்டிருக்கிறேன்....

அவள் பார்வை எனும் அலை

அடித்து செல்லுமென....

தேர்வு ஆரம்பிக்க இன்னும் 2 நிமிடங்களே உள்ளன. உள்ளே கண்டிப்பாக அனுமதி கிடையாது என்று தெரிந்தும் தேர்வரியின் ஆசியர் கண்ணில் படும்படி நின்றான் அரவிந்த். ஆசிரியர் அவனை நோக்கி வந்தார்.

“என்னப்பா ஏன் வெளியே நிக்கிற?” என்று கேட்டார் ஆசிரியர்.

இதயம் படபடப்பாக இருந்த அரவிந்த்க்கு பேச வாய் வரவில்லை. இருந்தாலும் சொல்லிவிட வேண்டுமென்று சொல்ல முன் வந்தான்.

“அரவிந்த்!” என்று ஒரு குரல் அவனை கூப்பிட உடனே திரும்பி யாரென்று பார்த்தான் அரவிந்த். பள்ளியின் காவலாளி .அவனை நோக்கி வந்தார்.

“இந்தாப்பா உன்னோட ஹால் டிக்கெட்! என் டேபிள்ள கிடந்தது. உங்க அம்மா தான் கொண்டு வந்து வச்சிருப்பாங்கன்னு நினைக்கிறன்!” என்று காவலாளி அரவிந்தின் ஹால் டிக்கெட்டை அவனிடம் குடுத்தார்.

உயிர் போய் வந்தது போல இருந்தது அரவிந்துக்கு.

“”ஓ ! அதான் வெளிய நின்னுகிட்டு இருந்தியா? சரி சரி. சீக்கிரம் போய் எக்ஸாம் எழுத ஆரம்பி!” என்றார் ஆசிரியர்.

“ரொம்ப தேங்க்ஸ் வாட்ச் மேன்!” என்று புன்னகையுடன் தேர்வறைக்கு சென்று தேர்வு எழுத ஆரம்பித்தான் அரவிந்த். பிறகு தேர்வை வெற்றிகரமாக முடித்து விட்ட .அரவிந்த் மதியம் பள்ளி பேருந்தில் விடு திரும்பிக் கொண்டிருந்தான். அப்போது அரவிந்த் தன்னுடைய சாக்குலேடின் நியாபகம் வந்தது.

பள்ளி பேருந்தின் சிறைய அதிர்வில் அரவிந்தின் பையில் கரகரவென சத்தம் கேட்டது. உடனே தன்

## தாயுமானவன்

pvlkanthan

தாலாட்டு பாடி கண்ணே
உன்னை தூங்க வைத்தால்
நீ தூங்காமல் என்னையும்
தாயாக்கி பார்க்கிறாயே?

தாயாகி நானும்
தாலாட்டிசை இசைக்கிறேன்!
சேயாகி உன்னுடன் சேர்ந்திருக்கிறேன்!
தாயவளும் இங்கிலலை யென்று
தாளாமல் நீயும் ஏங்குகிறாயோ?

தளராதே பொன் மானே!
விடியல் வெகுதூரமில்லை விண்மீனே!
விளையாடி பார்த்தது விதி தானே!
வினையை முறிக்குது மதிதானே!

பெற்றவளை தேடித்தேடி கண்ணே
உன் விழிகளும் கலங்கித்தான் போனதோ?
பெற்றவன் நானும்
மனதிற்குள் அழுது கொண்டனே!
புன் சிரிப்பாலுன்னை தேற்றுகின்றேனே!

பூவாகி என் தோள்மீது
சாய்ந்து கொள்ளம்மா!
தாயவளும் வருவாளம்மா
தாளாத துயரத்தையும் தீர்ப்பாளம்மா!

சின்னஞ் சிறு கிளியே
கண்ணுறங்கம்மா கண்ணுறங்கு!!!

பையை திறந்து ஆராய்ந்தான் அரவிந்த். அவன் பையில் அவனுக்கு பிடித்த அந்த சாக்குலேட்கள் இருந்தன. அரவிந்துக்கு ஒரே சந்தோஷம்தான். தன் தம்பி தன் உணர்வை புரிந்து இந்த காரியத்தை செய்திருகின்றான் என்று எண்ணி மனம் குளிர்ந்த அரவிந்த் சாக்குலேட்களை சுவைக்க ஆரம்பித்தான்.

பள்ளி பேருந்திலிருந்து வீடு வந்து சேர்ந்தான் அரவிந்த். வாசலில் சஞ்சய் தேம்பி அழுதுக் கொண்டிருக்க அவன் அம்மா தேவி அவனை சமாதானப் படுத்திக் கொண்டிருப்பதை கண்டான் அரவிந்த்.

“என்னமா ஆச்சு?” என்று கேட்டான். அரவிந்த். “சஞ்சயோட உண்டியல் உடிஞ்சுப்ப் போச்சாம் அதான் அழுதுக் கிட்டு இருக்கான்.”என்று தலையில்

கை வைத்தபடி கூறினார் தேவி.

“சஞ்சய் உனக்கு என்னோட உண்டியல் தரேண்டா!”என்றான் அரவிந்த்.

“வேணாம் போடா !”என்றான் சஞ்சய் அழுதபடி.

“நீ எனக்காக சாக்குடேட்லாம் வாங்கி பையில வச்சிருந்தியே..நான் உனக்கு உண்டியல் தரக்கூடாதா?”என்றான் அரவிந்த் சிரித்தபடி.

“போடா லூசு! எனக்கு சாக்குலேட் வாங்கிகவே காசில்லை உனக்கு எவண்டா வாங்கி வாங்கித் தருவான்” என்றான் தேம்பியபடி சஞ்சய்.

“அப்போ நீ வாங்கி வைக்கலயா? அம்மா நீங்க வச்சீங்களா?”என்றான் குழம்பிய படி அரவிந்த்.

“காலைல வீடு முடிச்சிட்டு உன் சித்தி வீட்டுக்கு சஞ்சயோட போயிட்டு இப்பதான் வந்தேன்.உனக்கு சாக்குலேட் வாங்க எனக்கு ஏது நேரம்?”என்றார் தேவி.

“என்ன சொல்றீங்க? அப்போ நீங்க என் ஸ்கூலுக்கு வரவே இல்லையா?” என்றான் அரவிந்த் அதிர்ச்சியாக.

“உனக்கு நெறைய கற்பனை சக்தி ஜாஸ்தி ஆயிடுச்சு போல..போய் முகத்தை அலம்பிட்டு வா “என்று சிரித்தபடி கூறினார் தேவி.

மீண்டும் ஒரு குழப்பத்தில் சிக்கினான் அரவிந்த்.

தொடரும்

## மாமனுக்கு ஒரு பாட்டு...

பூங்கோதை

மாமன் உந்தன் பாட்டு கேட்டு
மனசு நொந்து தவிச்சிருக்கேன்
ஏமஞ்சாம நேரத்தில
எழுந்திருந்து தவிச்சிருக்கேன்

பாசம் வைச்ச மாமன் உன்ன
பரிதவிக்க விட்டேனே
மோசக்காரி ஆனேனே- தலைய
மோதி அழத் தோணுதையா

சாதிசனம் புரிஞ்சுக்கல
சாமி என்னைத் தெரிஞ்சுக்கல
ஊதி விட்ட உசிருக்குள்ள
உன் முகம் தான் நிறைஞ்சிருக்கு

சத்தியமா மனசுக்குள்ள
சாமியாட்டம் நீயிருக்க
சாக மனசு கேட்கலையே
சோகமாகிக் கெடக்கிறேனே

சிறுகச் சிறுக உன்காதல்
சித்தெறும்பா சேமிச்சேனே
சிறுக்கி இவ உன் நெனப்ப
சிலைபோல செதுக்கி வைச்சேன்

தேங்கி நின்ற பாசம் தனை
கோடை வெயில் குடிச்சிருச்சே
தேம்பியழும் கார்முகிலும்
தூர தேசம் போயிருச்சே

மாமன் உன் நெனப்பால
மனசெல்லாம் வரண்டிருச்சே
சாமக்கோழி கூவிருச்சே
சாய்ஞ்சு இன்னும் தூங்கலயே



சீமத்தொர போல உன்ன
சீராட்டி வளர்த்தவக
சிரம் கவுந்து நடக்க வைக்க
சித்தமெனக்கு தோணலயே

பாசக்கார மாமன் உன்ன
பெத்தவங்க கவுரவத்த
பாழ்படுத்த விரும்பலயே
பாவிமக தவிக்கிறேனே

இஞ்சிச்செடி நட்டு வைக்க
மஞ்சக் கெழங்கு விளையலாமா
வஞ்சி இவ கரம்பிடிச்சு
வஞ்சவிதி மாற்றலாமோ

சேர்த்து வைக்கும் ஒலகமில்ல
சேர்ந்து வாழ விதியுமில்ல
சென்மம் ஒண்ணு மீண்டும் வந்தா
சேர்ந்திடுவேன் மாமன் உன்ன

# வா மச்சான் வா!

கனிகீஸ்



வா மச்சான் வா வாழ்ந்து பார்க்கலாம்
வாழ்க்கைல கஷ்டம் வந்தா முயன்று ஜெயிக்கலாம்
மண்ணுலதான் பிறந்துவிட்டோம் மனுஷப்பிறவியா
இன்பங்கள தள்ளி வச்சு எதுக்கு வாழணும் துறவியா
வா மச்சான் வா வாழ்ந்து பார்க்கலாம்!

♥ ♥ ♥

நீ ஆசப்பட்ட வாழ்க்க அமையலைன்னு வருத்தப்படாத
தினம் அத நினச்சு துன்பப்பட்டு துரும்பிடிக்காத
வந்ததெல்லாம் ஏத்துக்க விட்டுப்போனா விலகிக்க
இன்பதுன்பம் அத்தனையும் சரிசமமா நீ ஏத்துக்க
வா மச்சான் வா வாழ்ந்து பார்க்கலாம்!

♥ ♥ ♥

சொத்து சுகம் சேர்த்திருந்தா சொந்தமெல்லாம் கூட வரும்
வெட்டிப்பயலா நீ இருந்தா வேதன தான் மிச்சம் வரும்
தினத்திற்கு செலவு பண்ண அளவா நீ காசு சேர்த்திடு
அன்போடு உறவாட அளவில்லா நீ நட்பு சேர்த்திடு
வா மச்சான் வா வாழ்ந்து பார்க்கலாம்!

♥ ♥ ♥

கூடவே இருந்திடுவாங்க குத்தம் சொல்லி பிரிஞ்சிடுவாங்க
நாடக மேடையடா வாழ்க்க தினம் நல்லா
நடிக்கத்தெரிஞ்சவனுக்கு ஏகப்பட்ட சேர்க்கை
எதையும் நீ லேசா எடுத்துக்க எவ பிரிஞ்சாலும் நீ தூசா நெனச்சுக்க
வா மச்சான் வா வாழ்ந்து பார்க்கலாம்!

♥ ♥ ♥

நல்லவனா நீ இருந்தா நம்பினதும் ஏமாத்தும்
கெட்டவனா நீ இருந்தா விரும்பி வந்து ஏமாறும்
புத்தி மட்டும் இல்லையினா புத்தகப்படிப்பும் வீணடா
புத்தியுள்ள மனுசனுக்கு பூமிப்பந்தும் சிறுவீடடா
வா மச்சான் வா வாழ்ந்து பார்க்கலாம்!

♥ ♥ ♥

பட்டப்படிப்பு படிச்சபோது வேலையில்லா திண்டாட்டம்
பாதிபேரு உழைக்கிறாங்க இராப்பகலா மாடாட்டம்
வாங்குற சம்பளம்தான் குறிக்கோளு லட்சியமில்ல
விருப்பப்பட்ட வேல செய்ய யாருக்கும் விதியுமில்ல
வா மச்சான் வா வாழ்ந்து பார்க்கலாம்!

♥ ♥ ♥

தலைக்கு மேல வெள்ளம் போனா சாண் என்ன முழமென்ன
தடிக்கு விழுந்த பின்னால உனக்கு தன்மானம் தான் என்ன
கண்ட தோல்வி நிரந்திரமில்ல நீ நிலைகுலைந்திருக்க
வெற்றி கண்டாலே விரட்டிடலாம் அதனையும் மெல்ல
வா மச்சான் வா வாழ்ந்து பார்க்கலாம்!

♥ ♥ ♥

வா மச்சான் வா வாழ்ந்து பார்க்கலாம்
வாழும் போதே இன்பமெல்லாம் அள்ளிப்பருகலாம்
போனதெல்லாம் போகட்டும் நீ புதுசா பிறந்திடு
தினம்தினம் உனக்காய் வாழ்ந்து பார்த்திடு
வா மச்சான் வா வாழ்ந்து பார்க்கலாம்!

♥ ♥ ♥

# வெண் நிலவுகள்

- பசுந்தரா சசி -

"பிச்சை எடுக்கிறதுக்காகவே பிள்ளையை பெறுவது , பிறகு - பேத்தி ,பேத்தி - எண்டு சொல்லித்திரியிறது 'பேத்தியின்ர அப்பாவும் நான் தான் ! 'எண்டு சொல் வேண்டியது தானே…" என எரிந்து கொண்டு பெருமாள் கோயில் படி ஏறினார் ஒரு நடுத்தர வயது பெண் – அந்த பிச்சைக்காற முதியவருக்கு இது ஒன்றும் புதிதில்லை . சேற்றில் தோய்த்தெடுத்த கோலத்தில் இருந்தாலும் பார்ப்பதற்கு அழகான சிலை போல் ஒரு கையில் பிள்ளையும் மறு கையில் பிச்சைத்தட்டும் ஏந்திய படி இருக்கும் மகளையும் , மனம் கல்லாகி மரத்துப் போய் எதற்கும் பதிலோ இல்லை கேள்வியோ கேட்காத அவரையும் இப்படி ஊரார் எள்ளி நகை யாடுவது இன்று நேற்று அல்ல இரண்டு வருடத்திற்கு மேலாக நடக்கிறது . 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை கொழுத்துவோம் ' என்ற பாரதியின் கூற்றுக்கு 'மாதர் தம்மை (தாமே ) இழிவு செய்யும் மடமையைகொழுத்துவோம் ' . என்ற எழுத்தாளர் ஜெயகாந்தனின் விபரிப்பை எண்ணி மனதில் நகைத்தபடி . தாடியை தடவிக் கொண்டு அனேகமாக காதலிக்காக காத்திருந்த அந்த இளைஞனை நோக்கி நடந்தார் பேச்சு வேண்டிய பிச்சைக்காற முதியவர் .

யாழ் மாநகரிலே பிரசித்திவாய்ந்த கோயில்களில் பெருமாள் கோயிலும் ஒன்று . அழகான சுற்றுசூழலில் இருக்கும் இந்த கோயிலில் தினமும் பூசைகள் தவறாது நடைபெறும் . இவ் ஆலயம் அதிக பக்தர்கள் சூழும் இடம் என்பதால் காதலர்கள் முதல் வியாபார நிலையங்கள் வரை ஏன் பிச்சைக்காறர்களுக்கு கூட பஞ்சமில்லை .

எதையுமே கண்டு கொள்ளாமல் அவனது காணாக் காதலி மோகனா ' எப்ப வருவாள் ? , நேரில் எப்படி இருப்பாள் ? , என்னை இனம் காணுவாளா..? , கண்டால் நாணுவாளா , இல்லை பிரமிப்பாளா …? பெரியோரால் திருமணமே நிச்சயிக்கப்பட்டு . இரண்டு வருடம் தொலைபேசியில் மணிக்கணக்கில் பேசிய பின்னும் ஏன் நாண வேண்டும் ! . ஓடி வந்து கட்டிக் கொண்டாலும் தப்பில்லை . - இந்த கோயில் முன்றலிலா ? , முதல் சந்திப்பை வேறு எங்காவது வைத்திருக்கலாமோ… , பெருமாள் கோயிலில் வைத்தது தப்பாகி விட்டது . ஒரு வேளை அவள் அப்படி நினைத்தாலும் இந்த கூட்டத்தின்முன் எப்படி கட்டிக் கொள்வாள்…? - சீ… என் கற்பனைக்கு இங்கிதமே இல்லை. ' தலையை குனிந்த படி தன்னை தானே கடிந்து கொண்டான் ஜோன் . ஏறக்குறைய அவன் இவ் உலகில் இல்லை. வெளிநாட்டில் இருந்து திருமணத்திற்காக வந்திருக்கிறான் . மனைவி பற்றிய கற்பனைகள் இருக்காதா என்ன ?.

அவன் முன்னால் ஒரு அழகிய பூங் கொத்து நீண்டது 'மோகனா'என உச்சாடனம் செய்துகொண்டு பிரமிப்போடு நிமிர்ந்தான். முன்னால் ஒரு வயோதிபர் பூச் செண்டுடை நீட்டிய படி நின்றார் . அவர் கையில் பிச்சைப்பாத்திரமும் இருந்தது ஜோன் புரியாமல் விழித்தான் .



அன்பை தந்தேன்
காதலை தந்தாய்
தண்ட வாளத்தில்
காதல் பயணம் ….!!!

காதல் சுவர் நீ
காதல் படம் நான்
தூசி பிடிக்கிறது காதல்

நினைவில் கோலம்
போட்டேன் -கனவில்
புள்ளி போட்டேன்
கண்ணீர் கோலத்தை
அழிக்கிறது ….!!!

கே இனியவன்

" மன்னிக்க வேண்டும் தம்பி ! என்ர பேத்தி உங்கட மோட்டார் வண்டியில் இருந்த பூச் செண்டை இழுத்து விழுத்தி விட்டாள். " என்று பூங்கொத்தை அவனிடம் நீட்டினார் . திரும்பி பார்த்தான் பூவை தவிர மோகனாவுக்காக வாங்கி வந்த மீதிப் பொருட்கள் எல்லாம் இருந்தது.

பின்னால் குழந்தை ஒன்று பலமாக வீரிட்டு அழுது கேட்டது அத்திசையில் திரும்பினான் . " சைலஞ்சர் நல்லா சுட்டுப்போட்டுது " என்றபடி பிள்ளையை மடியில் வைத்து நெற்றியை உரஞ்சிக்கொண்டு இருந்தார் தாய்.

"அதுதான் என்ர பேத்தி , அது மகள். இந்த

பூங்கொத்தை எடுக்க வந்து பூவையும் விழுத்தி , தானும் தடக்கி விழுந்து விட்டது. வண்டியின் சைலென்னர் நெற்றில நல்லா சுட்டு போட்டுது . நானும் மகளும் பிச்சை தட்டை குலுக்கிக் கொண்டு இருந்ததால பிள்ளையை கவனிக்க இல்லை" . என்றார் அந்த பிச்சைக்காற முதியவர் .

"பறவாய் இல்லை ஐயா .. " என்று விட்டு மலரை வேண்டினான். தான் காதலிக்காக வெளிநாட்டில் இருந்து கொண்டு வந்த 'கற்பறி கன்டோஸை 'அவரிடம் கொடுத்து பிள்ளையிடம் கொடுக்கச் சொன்னான்.
அவ் வீதியால் கோயிலுக்கு சென்ற இளைஞர்களில் ஒருவன். பிள்ளையோடு இருந்த அவ் இளம் பிச்சைக்காறியை காட்டி
" டேய்.. தொங்கல்ல இருக்கிறத பாத்தியா..? மணித்துண்டு " என்றான் . இன்னொருவன் இந்த முதியவரைப் பார்த்து " தாத்தா கொடுத்து வைச்ச கட்டை !" என்றான்.

ஜோன் முதியவரை பற்றுதல் இன்றி பார்த்தான் . சற்று முன் அவன் காதுகளில் விழுந்து அவன் கிரகிக்காமல் போன அந்த பெண்ணின் தூற்றல் மீண்டும் எதிரொலித்தது .
" இந்த வயதிலும் கிழடுக்கு .. சீ.. கறுமம் , கறுமம் . போயும் போயும் இதுகளை கோயில் வாசல்ல விட்டுக்கிடக்கு ..." .

ஜோன் முகத்தை சுளித்துக்கொண்டு மறு பக்கம் திரும்பி நெற்றியை தடவினான். பிச்சைக்காற முதியவர் புளுப் போல நெளிந்தார் . அவன் கொடுத்த சொக்லேட் கையில் இருந்து நழுவியது. பேத்தியை கூப்பிட்டு அதை கொடுத்து விட்டு .

"தம்பி உம்மை பார்த்தால் நல்ல பிள்ளை மாதிரி தெரியுது . யாருக்கும் சொல்லத்தேவை இல்லை என்று விட்டதை ஏனோ என் மனம் உமக்கு சொல்ல வேண்ணும் எண்டு நினைக்குது . நான் உண்மையை சொல்லிப் போடுறன் தம்பி ! இவையள் சொல்லுறது உண்மை தான் ; அது என்ர மகளும் இல்லை , இது என்ர பேத்தியும் இல்லை . இரண்டும் என்னை காப்பாற்றும் கடவுள் ! " என்று கண்ணீர் உருகினார்.

' பின்பு ஏன் பேத்தி என்று பொய் சொல்ல வேண்டும் ? ' என எண்ணிக்கொண்டு முதியவரை மேலும் கீழும் பார்த்தான் ஜோன் . முதியவர் தொடர்ந்தார்.

"அவளை நான் முதன் முதலாக பார்த்தது ஒரு வெள்ளிக்கிழமை ."

" பாரு.. பாருகுட்டி ... அடி பார்கவி ! நான் மினக்கட்டு கதை சொல்லுறன் நீ என்னடா எண்டால் நித்திரை கொள்ளுறியா..? " என்ற படி கதையை நிறுத்தி விட்டு மடியில் நித்திரை கொண்ட மகளை உலுப்பினான் இந்திரன் . அவளோ மடியில் கிடந்த படி யன்னல் ஊடாக நட்சத்திரங்கள் ஊடே கதையின் பாத்திரங்களை மனக்கண்ணில் உலாவ விட்டிருந்தாள் . தந்தை கதையை நிறுத்தியும் அவள்
சிரிஷ்டித்த பாத்திரங்கள் திரையில் நின்றும் மறையாமல் நீண்டு கொண்டு போயின . அந்த இளம் பிச்சைக்காறியின் தட்டில் கிடந்த வெள்ளிக்காசுகளாய் வான் வெள்ளிகள் மின்னின - திடீரென திடுக்கிட்டவளாய் .

## மன்னித்து விடு

திவ்யா ஸ்ரீநிவாசன்

நான் உருவாக,
உனது உயிரில்
பாதி பகிர்ந்தேன்..
நான் சுயநலவாதி,
என்னை,
மன்னித்து விடு!

பூமியில்,
பாதம் பதிக்க,
உனக்கு,
வலி கொடுத்தேன்..
நான் சுயநலவாதி,
என்னை,
மன்னித்து விடு!

உனது
இரத்தத்தை உணவாக,
பருகினேன்..
நான் சுயநலவாதி,
என்னை,
மன்னித்து விடு!

எனது
வாழ்க்கையை,
நானே தேடிக்
கொண்டேன்..
நான் சுயநலவாதி,
என்னை,
மன்னித்து விடு..

உனது
பாசத்தை
விற்றேன்,
முதியோர்
இல்லத்திற்கு..
நான்,
மிகவும் சுயநலவாதி,
என்னை,
மன்னித்து விடு!

அம்மா, என்னை,
மன்னித்து விடு!

"அப்பா ஏன் கதையை நிப்பாட்டிப்போட்டீங்கள்." என்றாள். "உனக்கு நாளைக்கு பள்ளிக்கூடம் நேரத்திற்கு சாப்பிட்டு விட்டு படுக்க வேண்டும்" என்றான் இந்திரன் . " சனிக் கிழமையில யாரப்பா பள்ளிக்கூடம் வைக்கிறது" என்று விட்டு சிரித்தாள். ஆறே வயதான மகள் பார்கவி.

"சரி சரி சாப்பிட்டாப்பிறகு மிச்சத்தை செல்லுறன்" என்றான் .

"அப்பா.. அந்த இளம் பெண் எப்படி இளம் பிச்சைக்காறி ஆனாள் ? அதை இன்னும் நீங்கள் சொல்லவே இல்லை ! " என்றபடி தந்தையின் நாடியை பிடித்து அங்கும் இங்கும் ஆட்டினாள். இருவரும் மாடியால் இறங்கி கீழே வந்தார்கள்.

" இண்டைக்கு இங்க லண்டன் - M 25 - ரோட்டில விபத்தாம் தம்பி கேள்விப்பட்டனியளோ.. ? " என்றபடி தொலைக்காட்சியை நிறுத்தி விட்டு எழும்பி சமையல் கட்டை நோக்கி வந்தார் இந்திரனின் மனைவி நிலானியின் தந்தை யோசப்பர் . "ஓம் மாமா அதுதான் நானும் வேலையால வர சுணங்கியது அண்டகிறவுண்ட ரெயின் எண்டால் கெதியா வந்திருக்கலாம் கார் எண்டதால பெரிய கஸ்டமாப் போச்சு"என்றான். கத்தரிக்காய் கறி வாசனை மூக்கோடு சேர்த்து அவனையும் இழுத்தது .

சமையல்கட்டுக்குள் நுழைந்தான்- நிலானி பொரித்து காச்சிய கத்தரிக்காய் குளம்பை அடுப்பை விட்டு இறக்கிக் கொண்டு இருந்தாள்.

" தம்பி எழும்பீற்றானா என்று ஒருக்கா பாரம்மா.. " என்றாள் நிலனி மகள் பார்கவியிடம் .

கத்தரிக்காய் கறியை பார்த்துக்கொண்டு " தக்காளிக் கறி எப்படி சமைத்தாள் ..? இப்படி ஆளை மயக்குது.. " . என்றபடி நிலானியை நெருங்கினான் இந்திரன். " தக்காள் - இக்கறி - சமைத்த முறை எல்லாம் இருக்கட்டும். தக்காள் - தகாதவள் ஆகமுதல் உடுப்பை மாத்துங்கோ.. நாளைக்கும் இதைத்தான் வேலைக்கு போட வேணும் ; கறி மணக்கப்போகுது . தமிழ் பள்ளிக்கூடத்தில கொஞ்சம் வேலை இருந்ததால வீட்ட வர நேரமாகிப்போட்டுது நாளைக்குதான் உடுப்பு தோய்க்க வேண்டும் . " என்றபடி அகப்பையை காம்போடு திரும்பினாள் நிலானி.

✡ ✡ ✡

- 2 -

வெளியில் மழை சிலு சிலு வென சிணுங்கிக் கொண்டு இருந்தது. " ஐரோப்பாவில் இது பனிக்காலம் என்றாலும், இந்த மழைக்கு காலமே இல்லை வருடம் பூராகவும் இப்படித்தான் வடிக்கிறது " என அலுத்துக் கொண்டு இரா போசனத்தை முடித்து மாடியில் உள்ள தன் படுக்கை அறைக்கு சென்றார் இந்திரனின் மாமா. மறு அறையில் தாய்க்கும் தம்பிக்கும் இடையில் கிடந்தபடி

" அப்பா விட்ட குறையில இருந்து கதையை சொல்லுங்கோ... " என்று அடம் பிடித்துக்கொண்டு அழுதாள் பார்கவி .

"சரி சரி.. எங்க விட்டனான்." " அந்த பிச்சக்காற ஐயா முதல் முதலா இளம் பிச்சக்காறியை எப்ப பாத்தார்.. என்ற இடத்தில "

## வானவில் தொடுத்த போர் !

கல்பனா பாரதி

வளைந்திருப்பதன் மாயம் என்னவோ
வண்ணமிகு வானவில்லே ?
என்று கேட்டேன்
மாயம் என்ன மாயம் ?
வண்ணங்கள் ஒருங்கிணைந்து
நீலவானத்திற்கு எதிராக
ஒரு விற்போர் என்று சொன்னது.
எண்ணங்களை புத்தகத்தில் குவித்துவைத்து
உறங்கிக் கிடக்கும் மனிதா !
எழுவது எப்போது ?
எதிர்த்துப் போரிடப் போது எப்போது ?
என்றும் சொல்லிச் சென்றது.

அந்த பிச்சிக்கார முதியவர் ஜோனிடம் சொன்னார் -

" அது ஒரு வெள்ளிக்கிழமை மாலைப் பொழுது . 2009 சித்திரை முதல் பகுதி , கிளிநொச்சியின் கரையோர புதுமாத்தலன் கிராமம் - நாலா புறமும் புகையும் , வெடிச்சத்தமும் , ஓலக் குரலும் , பிஞ்சு போன அங்கங்களும் , பெரு வாரியான பிரேதக் குவியல்களுமாய் இருந்தது . விளக்கில் விழுந்து சாகும் விட்டில் பூச்சிகள் போல மக்கள் பாதுகாப்பு என ஓடிய இடமெல்லாம் படு குளிகள் ஒளித்திருந்தன . தணலில் விழுந்த நண்டு தாவி அணைச்செதெல்லாம் நெருப்புக் கட்டிகள் என்பது போல் ஒதுங்கிய இடமெல்லாம் குண்டுகள் இருந்தது . நான் - செல் விழுந்து இறந்த என் மனைவி கற்பகமேரியின் கால்களை பிடித்தபடி கதறிக் கொண்டு இருந்தேன். அவ் வழியால் ஓடிய சனம் எல்லாம் ' இந்த கிழவன் இதில இருந்து அழுது சாகப்போகுது 'என என்னை திட்டியது . நான் காதில் போட்டுக்கொள்ள வில்லை . எனக்கு பின்னால் - இறந்த தாயின் மார்பை முட்டியபடி ஒரு குழந்தை - அழுது கொண்டு கிடந்தது . எங்கள் பக்கமாக ஓடி வந்த ஒரு பெண் அந்த குழந்தையை கையில் எடுத்தபடி என்னிடம் " இதில இருந்தால் நீங்களும் சாக வேண்டியது தான் எழும்பி வாங்கோ " என்றாள். "

நான் மாட்டேன் என் மனைவியோடு நானும் போறன் இனி எனக்கு யார் இருக்கு " என அழுதேன் . "

அப்பா.. ! பிச்சை எடுத்தெண்டாலும் நான் உங்களுக்கு கஞ்சி ஊத்துறன் எழும்பி என்னோட

வாங்கோ…" என்ற அவள் வேறு யாருமல்ல - அதோ பிச்சையே எடுத்துக்கொண்டு இருக்ககும் அந்த பெருமாள் கோயில் இளம் பிச்சக்காறி தான் ' என கண்ணீர் வடித்தார் .

காய்ந்து வெடித்த தரையில் பாச்சிய நீர் போல அழுக்கேறிய அவரின் கன்னதோலில் கண்ணீர் உருண்டோடி நரைத்த தாடியை நனைத்து வடிந்தது . ' என்ர ஒரே ஒரு பிள்ளையும் சுனாமியில போயிற்றான் . அவள் எப்ப என்னை அப்பா..! என்றாளோ… அப்பவே அவள் என் மகள் ஆகி விட்டாள் . இங்கால வந்து என்னை தன் அப்பா என்றும் , குழந்தையை தன் மகள் என்றும் , கணவன் செல்லடியில் செத்தப் போயிற்றார் என்றும் பதிவு செய்தாள்.

இரண்டு வருசமா செட்டிகுளம் கதிர்காமர் முகாமில இருந்தோம் . பிறகு மீள் குடியேற்றம் எண்டு மாங்குளத்தில கொண்டு வந்து ஒரு காட்டுக்குள்ள இறக்கிப் போட்டுப் போயிற்றாங்கள் . நான் கடல் தெழில் செய்யிறனான். வீடு வளவு , காணி ஒண்டும் இல்லை . அவளோ செஞ்சோலையில இருந்து வளர்ந்த பிள்ளை உறவினர் யாருமே இல்லை. குழந்தைக்கு எங்கள் இருவரையும் தவிர யாரும் இல்லை . வீடு வீடா ,கடை கடையா , வேலை கேட்டு திரிஞ்சம் . எனக்கு வேலை இல்லை என்று விட்டு அவளின் மேலைப் பார்த்து ' வேலை தரலாம் பின்னேரம் வீட்ட வா..' என்றார்கள் . போனால் வேலையை மறந்து விட்டு சேலையை பிடித்தார்கள். உதறி விட்டு வந்துவிட்டாள் .

அரை வயிறு கால் வயிரோட கிடந்தோம். வாழ வழி இல்லை . யாரோ ஒருவர் யாழ்ப்பாணம் கோயில்ல கஞ்சி ஊத்துறார்கள் என்றார் . இங்கு வந்தால் வெள்ளிக்கிழமையில மட்டும் தான் ஏதாவது எங்காவது கொடுக்கிறார்கள். பசியால் பிள்ளை வதங்கியது அதன் முகத்தை பார்க்கவே முடியவில்லை . பிள்ளையின் பசிக்காக நான் கை நீட்டினேன் , எனக்காக அவள் கை நீட்டினாள் , எங்கள் இருவருக்குமாக பிள்ளை கை நீட்டியது - இதோ இன்று பிரபல்யமான பெருமாள் கோயில் பிச்சைக்காரர்கள் ஆகிவிட்டோம்.

'பிள்ளை வரம் வேண்டும் என்று தவம் கிடக்கும் பல தாய்களுக்கு மத்தியில் எத்தனை பிள்ளைகள் ஒரு தாய் வேண்டும் என ஏங்கி நிற்கிறார்கள் ' என்று தன்னையே தாயாக்கிக் கொண்டு வாழும் அந்த தெய்வ விக்கிரகத்திற்கு எத்தனை இழிசொல் ! , எத்தனை வசைகள் ! . தம்பி… உங்களை கை எடுத்து கும்பிடுறன் ஏதாவது ஒரு தொழில் செய்து பிழைக்க எங்களுக்கு ஒரு வழி காட்டுங்கோ… " என கண் கலங்கினார் முதியவர்.

அதற்குள் ஜோனின் கை தொலைபேசி சிணுங்கியது , எடுத்தான் அவன் காதலி மோகனா. " கலோ… , கலோ… , நான் ஜோன் கதைக்கிறன்."

கே இனியவன்

என் இதயத்தில் நீ போட்ட அழகு
கோலம் தான் என் இதய நரம்புகள்
அழித்து விடாதே இறந்து விடுவேன்

◆ ◆ ◆

தூண்டில் கண்ணால் தூண்டில் போடுகிறாய்
துடித்து போகும் மீனாய் தவிக்கிறேன்
பாவம் காதல் மண்புழுவாய் இறக்கிறது

" ஜோன் நான் உங்களை பார்க்க வாறது அம்மாவுக்கு தெரிஞ்சு போச்சு . கலியாணத்திற்கு முதல் தனிய உங்களோட வெளிய போக வேண்டாம் எண்டு சோல்லிப் போட்டா ! நாளைக்கு இதே நேரம் எப்படியும் கோயிலுக்கு வருவன் , நாம் ஒருவரை ஒருவர் முதல் முதல் கோயில்ல தான் பார்க்க வேண்டும் . நீங்கள் திரும்பி விடுதிக்கு போங்கோ இரவு போன் பண்ணுறன். " என்று விட்டு வைத்தாள் மோகனா .

இன்னும் அந்த முதியவர் அவன் முன்னாலே நின்றார். " ஐயா ஒன்றுக்கும் யோசிக்காதேங்கோ , எனக்கு தெரிஞ்ச ஒரு ஆள் கனடா கோயில் ஒன்றில தலைவரா இருக்கிறார் . அவை இங்க உள்ள பல கைவிடப்பட்ட ஆட்களை பராமரிக்கினம் , உங்கிட பெயர் விபரத்தை தாங்கோ , நான் அவரோட கதைச்சுப் போட்டு உங்களுக்கு சொல்லுறன்." என்று விட்டு தானே விபரத்தை எழுதி வேண்டினான். மெதுவாக மழை தூற ஆரம்பித்தது. " சரி ஐயா நான் கொஞ்ச நாளைக்கு இங்க தான் நிப்பன் பிறகு உங்களை பார்க்கிறேன் " என்று விட்டு கிழம்பினான்.

✡ ✡ ✡

- 3 -

மறுநாள் அதே இடத்தில் அவனின் எதிர்கால மனைவிக்காக வந்து நின்றான் . இன்று - நேன்றை விட பொலிவாக இருந்தான் . உள்ளத்தில் ஒரு அழகிய உணர்வும் கண்ணில் எதிர்பார்ப்புமாக அந்தரத்தில் நின்றான். படத்தில் பார்த்தவளை நேரில் பார்க்கப்போகிறோம் - என்ற பதைப்பு அவன் கால்களிலும் தெரிந்தது . அவனுக்கு இடப்பக்கமாக ஆட்டோ ஒன்று வந்து நின்றது . அதிலிருந்து ஒரு சட்டை போட்ட சாமரம் இறங்கி வந்தது .மோகனமாக வந்தவள் தன் மோகனாவா என பார்த்தான் . அவளேதான் வந்தாள் . அவன் மோகனா ! அவள் அருகில் வர முன் அவளின் வாசம் சுவாசத்தில் கலந்து வந்தது ' அடடா ! நல்ல பெண்ணைதான் தெரிவு செய்திருக்கிறார்கள் .

இரண்டு வருடமாய் நம்முடன் இவளா கதைத்தாள்? ' என நினைத்தபடி மெய் மறந்து நின்றான்.

"ஜோன் தானே நீங்கள்.? ." அவன் சிரித்தவாறே வலிந்து வார்த்தைகளை வரவழைத்துக் கொண்டு
" ஓம் நான் தான் ஜோன் , ஆனால் நான் உங்களை உடனே அடையாளம் கண்டு விட்டேன். " என்றான் .

" கொஞ்சம் தனிய போய் பேசலாமா.? "என்றபடி தேர்முட்டிக்கு அருகில் சென்றாள். அவன் பரிசுப் பொருட்களையும் எடுக்காமல் அவளை பின் தொடர்ந்தான். அவள் சன நடமாட்டம் இல்லாத இடத்திற்கு வந்ததும் .

" இஞ்ச பாருங்கோ ஜோன் . இனியும் நான் உங்களை ஏமாற்ற விரும்ப வில்லை ! நான் ஒருவரை காதலிக்கிறேன் . இனி நீங்கள் எனக்கு போன் பண்ண வேண்டாம் . இத பெரிசு படுத்தினா என்னை ஏமாத்திப்போட்டார் என்று சொல்லுவன் . பிறகு யாரும் உங்களுக்கு பொண்ணு தர மாட்டார்கள் . இதை இதோட விட்டிருங்கோ " என்று விட்டு பதிலை எதிர்பாராமல் தோளை சிலுப்பிக்கொண்டு அதே ஆட்டோவில் ஏறிப் போய் விட்டாள்.

தேர் சில்லோடு சாய்ந்து இருந்து விட்டான் . அதன் சில்லு அவன் கழுத்திலும் வயிற்றிலும் ஏறி கடந்து போவது போல் இருந்தது . கண்கள் திறந்திருக்க காட்சிகள் இறந்து கிடந்தன . சில கணங்கள் அவன் இல்லாமல் இருந்தான். கட்டெறும்பு ஒன்று பொலிதீன் துகளை தூக்கிக்கொண்டு தேர் சில்லுக்குள் புகுந்தது ." சீ.. " என்று விட்டு எழுந்தான் .

பெருமாள் சன்னிதானத்திற்குள் புகுந்தான். சிம்மை களட்டி எறிந்துவிட்டு போனை பெருமாள் உண்டியலுக்குள் போட்டான். கிணற்று நீரில் அவளோடு பேசிய வாயை கழுவினான். வண்டிக்கு வந்தான்.

வண்டிச் சீற்றில் இருந்த புதிய பூங்கொத்தை எடுத்துச் சென்று முளங்காலில் நின்றபடி "என்னை திருமணம் செய்து கொள்கிறாயா ..?" என்று அந்த பிச்சைக்காறியிடம் நீட்டிக் கொண்டு கேட்டான்.

அந்த வரிசையில் இருந்த எல்லா பிச்சைக்காரர்களும் தட்டை கீழே போட்டு விட்டு அவனையே பார்த்தனர் . கோயிலுக்கு வந்தவர்கள் வாயிலுக்கு போகாமல் வாயை பிளந்தபடி நின்றனர் . அவள் - அருகில் இருந்த தந்தையை பார்த்தாள். பின் மடியில் இருந்த பிள்ளையைப் பார்த்து விட்டு மீண்டும் தந்தையை பார்த்தாள்.

" நமது கதை எல்லாம் தம்பிக்கு தெரியும். எனக்கு சம்மதம் இனி உன் விருப்பம் " என்றார் தந்தை .

சுற்றி இருந்தவர்கள். " ஓம் எண்டு சொல்லு




புள்ள.. இப்ப நீ வாழும் வாழ்க்கையை விட எதுவும் கேவலமா இருந்து விடாது " என்றார்கள்.

அவள் தந்தையையே பார்த்துக்கொண்டு இருந்தாள் . அவர் " நீ என்ன முடிவு எடுத்தாலும் அதில் எனக்கு முழு சம்மதம் " என்றார். அவளின் மௌனம் கலைய வில்லை . கண்ணில் இருந்து ஒரு துளி பல காலத்திற்கு பின் கனிந்து தட்டில் கிடந்த வெள்ளிக்காசின் மேல் விழுந்து தெறித்தது.

அருகில் இருந்த கால் இல்லாத அம்மா " தம்பி ! பிள்ளை ஓம் எண்டு சொல்லி போட்டுது நீங்கள் ஆக வேண்டியதை கவனியுங்கோ " என்றார். அவன் பூச் செண்டை நெருங்கி நீட்டினான். அவள் இரு கையாலும் வாங்கி அந்த பூக்களிடையே முகத்தை புதைத்தாள் . என்ன ஆச்சரியம் அவள் முகமும் ஒரு பூவாக மாறியது . பின் பூச் செண்டை மடியில் இருந்த பிள்ளையிடம் கொடுத்தாள். அது அவளை பார்த்து சிரித்ததுக் கொண்டு வேண்டியது .

வீதியில் நின்ற மினி வான் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி மணப்பெண் , முதியவர் , குழந்தை உட்பட அந்த கோயிலில் இருந்த எல்லா திக்கற்றோரையும் வண்டியில் ஏற்றி தான் தங்கி இருந்த விடுதிக்கு கொண்டு சென்றான். பின் ஒவ்வொருவருக்கும் சுமாரான விலையில் உடுப்பு எடுத்து தந்தான். தான் கொண்டு வந்த திருமண புடவையையும் ஏனைய பரிசுப் பொருட்களையும் அவளிடம் கொடுத்து பதிவுத்திருமணத்திற்கு தயாராகுமாறு கூறினான். யாழ் கச்சேரியில் அந்த முன்னாள் செல்வந்தர்கள் முன்னால் ஆடம்பரமின்றி ஆனால் அழகாக திருமணம் நிறைவேறியது. விருந்து முடிந்த பின் அவளின் சக தொழிலாளிகளை ஆதரவற்றோர் காப்பகத்தில் சேர்த்து விட்டு மனைவி , குழந்தை , முதியவருடன் வீடு சென்றான் .

- சுபம் -

" சரி கதை முடிஞ்சு போச்சு ..! தூங்கம்மா " என்றபடி மகளை தூக்கிக் கொண்டு அவனின் அறைக்கு நடந்தான் இந்திரன் . அறையின் வாசலிலேயே " தம்பி என்னிட்ட தாங்கோ நான் தூங்க வைக்கிறேன் என வேண்டிக்கொண்டார் அவனின் மாமா . அவரிடம் கொடுத்து விட்டு கதவை பூட்டிக்கொண்டு திரும்பினான். அவனின் காலை பிடித்துக் கொண்டு அழுதாள் மனைவி நிலானி . "ஏன் என்னத்திற்கு இப்ப அழுறீர் ? உமக்கும் கதை சொல்ல வேணுமோ ? " என்றான் சிரித்தபடி .

" நீங்க மட்டும் அண்டைக்கு பெருமாள் கோயிலுக்கு வந்திருக்காட்டி இப்பவும் எத்தனை நாள் பட்டினியோட , எந்த கோயில் வாசல்லயோ.... தெரியாது " என விம்மி விம்மி அழுதாள். அவளை இரு கையாலும் அள்ளி எடுத்து கன்னத்தில் வழிந்த கண்ணீரை துடைத்துக்கொண்டு

." யோகேந்திரன் எப்படி ஜோன் ஆனேன் தெரியுமா ? " என்றான். அவள் அழுதபடியே இல்லை என்று தலையை ஆட்டினாள்.

" யோகேந்திரத்தின் , இந்திரன் எல்லாம் பழைய பேரா இருக்கு நல்லா இல்லை எண்டு - யோகேந்திரத்தின் - இல் உள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நடு -கேந்திர - த்தை வெட்டி சுருக்கி 'யோன் ' எண்டு அந்த ஏமாற்றுக்காறி தான் வைத்தாள் " என்றான் . முதியவர் அவருக்காக கை ஏந்திய பேத்தி பார்கவியின் கையை முத்தமிட்டுவிட்டு சிரிப்பது கேட்டு நிலானியும் சிரித்தாள்.

- முற்றும் -

## வருட வழி(விழை)யும்... மனதின் துளிகள்

சுந்தர் புருஷோத்தமன்



**கண்மான்!**

மங்கையவள் மானன்ன
நீள்விழிகள்
மருளுமன்றோ?
வேங்கையை
என்விழிகள்
கண்டவுடன்,
வேகமாய் மாற்றினேன்
தொலைக்காட்சி அலைவரிசை.



**முத்து நகை(க்கும்)!**

முத்துக்களாயிரம்
கோர்த்தெடுத்து -நான்
அற்புதமென் றன்று
ஆர்ப்பரித்தேன்!
வாய்ச் சிரித்தாளென்
அன்பு மங்கை – அவள்
வாய்ச்சிரிப்பில் கண்ட
நாலெட்டு முத்துக்கள்
நாவினைச் சுழற்றி நகைக்கின்றன!!

**மழை!**

நீ குடைபிடிக்க,
குற்றாலச் சாரலாய்
மழையடிக்க,
மின்னலினூடே
யுன்பிம்பம்!
கொட்டும் மழையில்
தேவதையாய் நீ!
சொட்டச் சொட்ட
நனைகிறதென் நெஞ்சம்!



**தேன்!!**

ஈக்கள் கொட்டின!
கொட்டும் வலியில்
சொட்டும் துளிகளைச்
சேகரித்தேன்!
சேர்த்தத் துளிகளை மாது
சுவைத்தாள்!
சுவைத்துப் பின் சிரித்தாள்!
பருகினேன் விழிகளால் - அவள்
சிரிப்பெனுந்தேன்...நாத்துணையின்றி!



**9.** க்ரோதாகார அங்குசோஜ்வலா

ராகம் - பைரவி

கோபம் கொள்வாய் அம்மா எந்தன்
கொடிய மனம் மீது நீ அங்குசமாம் (கோ)
மனம் குரு சொன்னதை கேட்பதில்லை
மாதா உன்னை எப்போதும் நினைப்பதில்லை (கோ)

ஞானாநந்தத்தை நான் நாடிட வேண்டும் பரி
பூரணமான பதத்தை பெற்றிட வேண்டும்
ஆணவ கன்மங்கள் அழிந்திட வேண்டும் என்
மனம் என்றும் உன்னடி பணிந்திடவேண்டும் (கோ)

குரு சொன்ன வழியில் சென்றிடவும் தாய்
கரு குழிதன்னை கடந்திடவும்
திருவாம் உன்னை தெரிந்திடவும் மன
வருத்தங்கள் மண்ணில் மடிந்திடவும் (கோ)

**10.** மனோருபேக்ஷு கோதண்டா
ராகம் - சாவேரி

மனமே வில்லாய் மாறிவிடு
மங்கள அம்பிகை கையினிலே (ம)
வளைத்த படியெல்லாம் வளைந்து விடு
வகையாம் கரும்பு ருசியுடனே (ம)

ஞானாநந்த சாறு உண்டு அதில்
ஞாலத்தின் சாயை விழுவதுண்டு
காலத்தை கடந்த கழுத்துண்டு அதை
கருத்துடன் கையாள உரமுண்டு (ம)

மாயையாம் அசுர வதம் செய்ய
தாயவள் மனத்தை கை தரித்தாள்
தூயதாய் வைத்தால் தயை புரிவாள் பாபம்
காய்ந்திடநினைத்து அருள் புரிவாள் (ம)

**11.** பஞ்ச தன்மாத்ர ஸாயகா
ராகம் - கானடா

ஐந்தான புலன்களே அன்னை கை மலர்களே
அதை அறிந்தால் உயர்வு மனதிலே (ஐ)
மனமெனும் வில்லுக்கு தொடுத்திடும் பாணம் வேண்டும்
மலர்களே அவை நம் புலன்களே (ஐ)

ஞானாநந்த மணம் அதில் வீசிடுமே உயர்
வானத்தில் வேகமாய் சென்றிடுமே
பாணங்கள் உள்முகம் திரும்பி விட்டால்
பாதாள அசுரபகை அழிந்திடுமே (ஐ)

மனம் சுத்தமானால் மலர் சுத்தமாகும் அவள்
இனம் என்று உணர்ந்தால் இறை சித்தமாகும்
தனமுடன் மூவாசை தான் தீர்ந்து விட்டால்
கனமின்றி மோக்ஷம் தான் ஸித்தமாகும் (ஐ)

**12.** நிஜாருண ப்ரபாபூர மஞ்சத் ப்ரம்மாண்ட மண்டலா
ராகம் - பைரவி

அண்டங்கள் அனைத்துமிங்கே உந்தன் படைப்பு அது
அருணமாய் ஒளிர்வது உந்தன் சிறப்பு (அ)
சிறிது கண்ணை முடினால் சிவப்பான உருவம் அதில்
பெரிதாக தெரிவது பரப்ரம்மம் (அ)

உள்ளே இருப்பதுதான் வெளியேயும் அங்கு
துள்ளிதிரிவதுதான் அங்குஷ்ட மாத்ரம்
வெள்ளை வெளேரென்ற சிவ ருபம் அங்கு
சுள்ளென்று தெரிவதுதான் நிஜ அருணம் (அ)

ஞானாநந்த மிங்கே சிவப்பானது அதை
தானாய் அடைவதுதான் உயர்வானது
ப+ணாய் விளங்குவதே ப்ரம்ம ரந்த்ரம் அதை
பேணிக் காப்பதுதான் யோக வைபவம் (அ)

13. சம்பகாசோக புன்னாக ஸௌகந்தித லசத்கசா
மணம் மிக்க மலர்களை சூடி நின்றாள் வாழ்வு
மணம் வீச மங்களம் அருளிடுவாள் (ம)

சம்பக அசோக புன்னாகம் அவை
சீக்கிரம்; மணம் பெறுவதவ ளாலே (ம)

ஞாலத்தில் பல பல மலருண்டு அதில்
ஞானத்தின் மணமிங்கே எதற்குண்டு ?
ஞானத்தில் மகிழ்;ந்தால் நலமுண்டு அதை
ஞானிக்கு தந்திட அவள் அருளுண்டு (ம)

அருள்சக்தி தந்து ஆட்கொள்வாள் மன
மருள் தன்னை நீக்கிட மனம் தருவாள்
தருவதில் அவளுக்கு நிகரில்லை அன்னை
கருவிலே பிறப்பது அவள் லீலை (ம)

# பில்லா III: பில்லா Vs டிராகுலா

சிவாஜிதாசன்

பகுதி - 10




உலகம் என்னும் பாடசாலையில் மனிதர்களுக்கு தினம் தினம் புது பாடங்கள் அரங்கேறிக்கொண்டே இருக்கும். அதிலிருந்து யாரும் தப்பமுடியாது. ஆண்டி முதல் அரசன் வரை யாராக இருந்தாலும் உலகத்திடம் பாடம் கற்றே ஆகவேண்டும் என்பது எழுதப்படாத விதி. அதில் அலெக்ஸ் பில்லா மட்டும் தப்பிவிடுவானா என்ன? அவன் தன் தந்தையைச் சந்திக்கப்போகும் மகிழ்ச்சியில் இருந்தாலும், மும்பையில் தான் தப்பி வந்ததை எண்ணிப்பார்க்கையில் அவன் மனம் லேசாக நடுக்கம் கொண்டது. தன் தந்தைக்கு, தான் அந்த நிலையிலிருந்தது எப்படித் தெரியும் என்ற கேள்விக்குச் சிறிது நேரத்தில் பதில் தெரிந்துவிடும் என்ற எதிர்பார்ப்பில் தன் தந்தையின் கோட்டைக்குள் சென்றான். அவன் உள்ளே செல்லச் செல்ல மீண்டும் ஒரு புது எண்ணத்தினுள் வீழ்ந்தான்.

'யாரந்த ஜோக்கர்? நம்மைக் கொல்ல நினைத்தவர்கள் யார்? அத்துணை பேரிடமிருந்தும் தன் உயிரை வெகு சாதாரணமாய்க் காப்பாற்றினானே? அவன் நிச்சயமாக சாதாரணமானவன் அல்ல' என்று எண்ணியபடி உள்ளே நுழைந்தார்.

யாருடனோ செல்பேசியில் பேசியபடி நடந்து வந்த சத்யம், அலெக்ஸ் பில்லாவைப் பார்த்ததும் செல்பேசியை அணைத்து அலெக்சை நோக்கி ஓடி வந்தார்.

"அலெக்ஸ்.." என்று முகம் மலர அவனை ஆரத் தழுவிக்கொண்டார்.

அலெக்சும் சந்தோசத்தோடு அவரை அரவணைத்துப் புன்னகை பூத்தான்.

"பிரயாணம் எல்லாம் நல்லபடியா இருந்ததா?" என்று கேட்டார் சத்யம்.

"ம்ம்.. இருந்தது" என்று துன்பப் புன்னகையை மகிழ்ச்சிப் புன்னகையாக மாற்றியபடி, "அப்பா எங்க இருக்காரு? அவர பாக்கணும்" என்றான் அலெக்ஸ்.

சத்யமின் சந்தோஷ முகம் லேசாக வாடத் துவங்கியது. சில வினாடிகள் மௌனத்தோடு அலெக்ஸ் பில்லாவை வெறித்துவிட்டு, "நீ முதல்ல குளிச்சிட்டு சாப்பிடு. அப்பாவ போய் பாக்கலாம்"

சரி என்பது போல் மேலே உள்ள தனது அறைக்குச் சென்று பெட்டியை வைத்துவிட்டு, இளஞ் சுடுநீரில் தன் உடலையும் எண்ணங்களையும் நனைத்து சாதாரண ஆடையை உடுத்தி, சாப்பிட கீழிறங்கி வந்தான். அவன் படிகளில் இறங்க இறங்க சத்யமின் அனல் பறக்கும் சொற்கள் அவன் காதுகளில் விழுந்தன. யாரையோ திட்டித் தீர்த்துக்கொண்டிருந்தார் அவர்.

"உங்களுக்கு அறிவில்லை? உங்களிடம் எவ்வளவு முக்கிய பொறுப்பைக் கொடுத்திருந்தேன்? தவற விட்டுவிட்டோம் என்று சாதாரணமாக சொல்கிறீர்கள்? ஏதாவது ஆபத்து நேர்ந்தால் என்னவாகி இருக்கும்?" என்று திட்டியபடி இருந்தார்.

அலெக்ஸ் படிகளில் இறங்கியபடி, யாரை வசைபாடிக்கொண்டிருக்கிறார் என்ற பார்வையை அங்கே நடக்கும் காட்சியின் மீது வீசினான். சத்யமின் எதிரே ஐந்து வேலையாட்கள் தலை கவிழ்ந்து நிற்க, சத்யம் கர்ஜித்துக்கொண்டிருந்தார்.

"அங்கிள், ஏன் அவங்கள திட்டிட்டு இருக்கீங்க?"

அலெக்சின் குரல் அவர் காதுகளில் விழுந்ததும், சத்யம் பில்லாவை நோக்கி, "நீ எப்படி வந்த அலெக்ஸ்? உன்ன அழச்சிட்டு வர சொல்லி இவங்க கிட்ட சொன்னேன். இவங்க போற வழில டிராபிக் ஆக்சிடெண்ட்னு ஸ்கூல் பசங்க போல காரணம் சொல்றாங்க"

அலெக்ஸ் சிரித்துக்கொண்டே அங்கிருக்கும் டைனிங் டேபிளில் உட்கார்ந்து, என்னென்ன உணவு இருக்கிறது என்று பார்த்தபடி, "நான் டாக்ஸியில வந்தேன். ஆக்ஷன் படம் நேர்லயே பாத்துட்டு வந்தேன்" என்றான்.

"என்ன?" என்று அதிர்ச்சியோடு கேட்டார் சத்யம்.

தன்னைக் கொல்ல வந்தவர்களைப் பற்றி இப்பொழுதே கூறி, சத்யமை சங்கடப்படவைக்க விரும்பாத அலெக்ஸ் பேச்சை மாற்ற எண்ணினான். "அங்கிள் எனக்கு பசிக்குது" என்றான்.

சத்யம், தன்னிடம் வசைகள் வாங்கிக்கொண்டிருந்தோரை, நீங்கள் செல்லலாம் என்பது போன்று சமிக்ஞை செய்துவிட்டு, அலெக்சிற்கு உணவு பரிமாறினார். சப்பாத்தியும் வறுத்த கோழியும் வைத்து சாப்பிடுமாறு பணித்தார். அதன் வாசம் அலெக்சின் நாசி துவாரத்தில் நுழைந்து, சுவை அரும்புகளை மலரச் செய்தன. அலெக்ஸ் உணவினை ஒரு கை பார்த்தான்.

பின் கை அலம்பிவிட்டு, சத்யமிடம் "இப்பொழுதாவது

அப்பாவைப் பார்க்கப் போகலாமா?" என்றான்.

"தாராளமா. வா போகலாம்" என்று சத்யம் கூறிக்கொண்டு அலெக்ஸ் பில்லாவை ஓரறைக்கு அழைத்துச் சென்றார்.

அந்த அறையில் பழைய பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. 'எதற்கு இங்கு அழைத்து வந்திருக்கிறார்' என்று அறையில் உள்ள பொருட்களை நோக்கியபடி யோசித்தான் அலெக்ஸ் பில்லா. சத்யம் அறைக்கதவைத் தாழிட்டு, தன் சட்டைப் பையிலிருந்து ரிமோட் போன்ற ஒன்றையெடுத்து அதிலுள்ள பட்டனை அழுத்தினார். உடனே, "கிர்ர்ர்.." என்ற சத்தத்துடன் தரையில் பதிக்கப்பட்டிருந்த கல் ஒன்று மெதுவே நகர்ந்தது. அலெக்ஸ் விக்கித்துப் போனான். இதுநாள் வரையில் தன் வீட்டினுள் இப்படியொரு சுரங்கப் பாதையைக் கண்டதில்லை என்பதே அவனடைந்த பிரம்மிப்பிற்குக் காரணம். தன்னைப் பின்தொடர்ந்து வரும்படி அலெக்சிற்கு சத்யம் சமிக்ஞை செய்தபடி அந்த சுரங்கப் பாதையினுள் மரத்தாலான படிக்கட்டுகளில் இறங்கினார். அலெக்சும் சத்யமை பின்தொடர்ந்தான்.

கீழே இறங்கியதும், அலெக்ஸ் அவ்விடத்தைச் சுற்றும் முற்றும் நோக்கினான். மரத்தாலான சுவர்களும் அதில் மஞ்சள் நிற ஒளியை உமிழ்ந்தபடி இருக்கும் விளக்குகளையும் பார்த்து, புது உலகிற்குள் தான் சஞ்சரித்துவிட்டதாக எண்ணினான். அந்த இடம் சிறிய கூடம் போலிருந்தது. அந்தக் கூடத்தில் ஒரு நாற்காலியும் ஒரு மேஜையும் போடப்பட்டிருந்தது.

"பில்லா.." என்றார் சத்யம்.

அந்த நாற்காலி சுழன்றது. அதில் பில்லா தோன்றினார். அலெக்ஸ் அதிர்ச்சிக்குள்ளானான். எப்போதும் மலர்ந்த முகத்தோடு இருக்கும் தன் தந்தையின் முகம் சோர்வாக இருக்கிறதே! முகத்தில் சவரம் செய்யாததால் படர்ந்திருக்கும் முடிகள் நுரை போன்ற எட்டிப்பார்த்தன; சாதாரண ஆடை அணிந்திருந்தார்; ஆனால், மிடுக்கும் கூரிய பார்வையும் சீற்றம்கொண்ட முகமும் இன்னும் மாறவில்லை.

தன் மகனைக் கண்ட சந்தோசத்தில் இருக்கையிலிருந்து துள்ளியெழுந்த பில்லா, அலெக்சை நோக்கி வந்து வாஞ்சையோடு அணைத்துக்கொண்டார். அலெக்சின் முகம் தான் வாடிய மலராய்ப் போனது.

"ஏன்பா இங்க இருக்கீங்க?" என்றார் எடுத்த எடுப்பிலேயே.

பில்லா லேசான புன்னகையை விடையாய் அளித்து, "இதெல்லாம் சாதாரணம்" என்றார்.

"அப்பா, உங்க நிலைய பார்த்தா, பெரிய பிரச்சனைல சிக்கி இருக்கீங்க போலிருக்கே" என்றான் மெல்லிய கலக்கத்துடன் அலெக்ஸ்.

பெருமூச்சை வெளியேற்றி இருக்கையின் முன் போடப்பட்டிருந்த மேசையின் ஓர் ஓரத்தில் அமர்ந்து தன் இரு கைகளையும் பிணைத்தபடி அலெக்சை நோக்கினார். 'நீ சொல்றது உண்மை தான்' என்று அவர் பார்வையில் பிரதிபலித்தது அவரின் விடை.

தெளியா மழலை
நீளாச் சுருள் முடி
கொழுக் கன்னங்கள்
மைக் கரு விழிகள்
துறுத் துறு பார்வை
தாய்மைத் தூண்ட
மனதாலே கொஞ்சி
அள்ளி அணைக்க
அருகாய் நெருங்க

துள்ளி ஓடி தாயின்
முந்தானை மூடி
ஒழிந்து மெல்ல
மேகத்துள் முகம்
காட்டும் நிலவாய்
ஏமாந்து ஏங்கினேன்
பேருந்தில் இறங்குமிடம்
வந்து விட்டதால்

- பாண்டிமா -

"எப்பவும் வரது தான். கொஞ்ச நாளுல சரியாய்டும்" என்று தன் மகனுக்கு தைரியமூட்டினார் பில்லா.

"உங்க கிட்ட ஒரு விஷயத்த பத்தி கேக்கணும்"

"என்ன?" என்று தன் கூரிய விழிகளை இன்னும் கூர்மையாக்கி அலெக்சை பார்த்தார் பில்லா.

"நான் இந்தியாவில இருக்கும் போது அங்க நான் பிரச்சனைல மாட்டிக்கிட்டேன். அதுல இருந்து நீங்க தான் என்னை காப்பாத்துனீங்க. எப்படி?" என்றான் அலெக்ஸ்.

பில்லா அதிர்ந்தார். பதில் கூற முடியாமல் சிறிது நேரம் சத்யமை வெறித்தார். பில்லாவின் பார்வையை எதிர்கொள்ள முடியாமல் சத்யம் தன் தலையைத் தாழ்த்திக்கொண்டார்.

"ஏன் அமைதியாவே இருக்கீங்க?" என்று சீறும் பாம்பாய்க் கேட்டான் அலெக்ஸ்.

இதற்கு மேல் உண்மையை மறைத்துப் பயனில்லை என்றுணர்ந்த பில்லா, நடந்தவை அனைத்தையும் கூறத் துவங்கினார்.

முதலில் தன்னுடைய நாய் இறந்து போனது, அடுத்து தன் நண்பன் சஞ்சயும் பலிகடாவானது, டிராகுலா தன்னிடம் சவால் விட்டது, அலெக்சை காப்பாற்ற தான் கொடுக்கும் வேலையை முடிக்கவேண்டும் என்று டிராகுலா கட்டளையிட்டது என எல்லாவற்றையும் கூறினார். ஆனால், டிராகுலாவிடம் தான் நேருக்கு நேர் மோதியதைப் பற்றிக் கூற ஏனோ அவர் விரும்பவில்லை.

அலெக்சின் கண்கள் ஆச்சர்யத்தில் விரிந்தன. புருவங்கள் மேலெழும்பி ஆச்சர்யத்தை இன்னும் விரிவுபடுத்தின. 'தன்னுடைய தந்தையின் கவலைக்கு இது தான் காரணமா? யார் அவன்?' என்று தன் மனதினுள் கேள்விகளை எழுப்பிக்கொண்டான்.

எல்லோரும் நிழலுடன் தான் பயணிக்கின்றனர்
அவர் அவர் உயரத்திற்க்கேற்ப
அவர் அவர் மேல் படும் ஒளிக்கேற்ப

ப.கல்யாண கண்ணன்

பில்லா, "நீ எதுக்கும் கவலைபடாத. இது சின்ன விஷயம். நான் பாத்துக்குறேன். உன்ன எதுக்கு வர சொன்னேனா, இனி நம்ம பிசினஸ நீ தான் பாத்துக்கணும். உனக்கு உதவியா சத்யம் இருக்கார். இரண்டு நாட்கள் கழித்து மாபியா கூட்டத் தலைவர் ஜோசப் எல்லாருக்கும் விருந்து கொடுக்குறாரு. என் சார்பா நீ கலந்துக்க. இது தனி ஒரு ஆளா கட்டின சாம்ராஜ்யம். அத தகர்க்க யார் வந்தாலும் அவங்கள சும்மா விடமாட்டேன்" என்றார்.

பில்லா கூறியதையெல்லாம் தன் மூளையில் ஏற்றிக்கொண்டிருந்தான் அலெக்ஸ். "சரிப்பா நீங்க சொன்னது போலவே செய்றேன்"

பில்லா ஆதரவாய்த் தன் மகனின் தோள்களைப் பற்றினார். "நான் முடிக்கவேண்டிய வேலை ஒண்ணு இருக்கு. அத நிறைவேத்துற நேரம் வந்திடுச்சி" என்றார் பில்லா.

பில்லா கூறியது அலெக்சிற்கு விளங்கவில்லை. அதனால் தன் முகத்தினில் கேள்வி ரேகைகள் படர பில்லாவை நோக்கினான். அப்போது, பில்லாவிற்குத் திடீரென்று இருமல் வந்தது.

அலெக்ஸ் பதறி, தன் தந்தையைத் தாங்கிப் பிடித்து அருகிலிருந்த இருக்கையில் கிடத்தினான். பில்லாவிற்கு மருந்து கொண்டுவர சத்யம் ஓடினார். அலெக்ஸ் செய்வதறியாது கலங்கிய கண்களோடு தன் தந்தையின் நெஞ்சினை மெல்லத் தடவியபடி, "என்னாச்சுப்பா?" என்று கதறினான்.

பில்லா இருமியபடியே, "என் ரூம்ல இருக்க பீரோவில ஒரு துப்பாக்கி இருக்கு. அத எடுத்திட்டு வா" என்றார்.

'இந்நிலையில் எதற்காக துப்பாக்கி கேட்கிறார்?' என்று அலெக்ஸ் முழித்தான்.

"சொன்னத செய்!" என்று பில்லா இருமியபடியே கர்ஜித்ததால், வேறு வழியின்றி தன் தந்தையின் கட்டளையை நிறைவேற்ற அவசர அவசரமாக ஓடினான். விரைவிலேயே தன் தந்தையின் ரூமை அடைந்து அவரின் பீரோவைத் திறந்து பார்த்தான். பில்லா கூறியது போலவே ஒரு துப்பாக்கி இருந்தது. அதை எடுத்துக்கொண்டு தன் தந்தையை நோக்கி ஓடினான்.

சுரங்க அறையில் இறங்கி தன் தந்தையை நோக்கிச் செல்லும்போது சத்யம் கையில் மருந்தோடு மரமென நின்றிருந்தார். அவர் நின்றிருந்த காட்சி அலெக்சிற்கு பீதியைக் கிளப்பிவிட்டது. தன் தந்தைக்கு ஏதேனும் ஆகிவிட்டதா என்று பதற்றத்தோடு இருக்கையைப் பார்த்தான்.

அங்கு பில்லா இல்லை!!!

✡ ✡ ✡

பில்லா காணாமல் போன பின்பு சரியாக இரண்டு நாள் கழித்து காவல் நிலையம் முன்பு ஒரு கார் வந்து நின்றது. கார் கதவைத் திறந்துகொண்டு ஆறடி உயரம் கொண்ட மனிதன் வெளியில் வந்து, காவல் நிலையத்திற்குள் சென்றான். அந்த பிரம்மாண்ட போலீஸ் கட்டிடத்திற்குள் பல பொதுமக்களும் போலீஸ்காரர்களும் குழுமி இருந்தனர். புகார் கொடுக்க வந்திருந்தவர்கள், கைதிகள் இப்படி பல பேர் முதல் கட்டிடத்தில் இருக்க, அவர்களைக் கடந்து மேல் மாடியை நோக்கி படியில் ஏறினான்.

சில போலீஸ்காரர்கள் அவனைப் பார்த்ததும் 'யாரிவன்? இவ்வளவு மிடுக்காக நடந்து வருகின்றான்' என்ற எண்ணம் கொண்டனர்.

இரண்டாவது மாடியை அடைந்து அவன் எதிரே வந்த ஒரு போலீஸ்காரரிடம், "அசிஸ்டண்ட் கமிஷனர் ஆன்சனைப் பார்க்கணும்" என்று ஒரு சீட்டை போலீசாரிடம் நீட்டினான்.

சீட்டை பெற்றுக்கொண்ட போலீஸ், "காத்திருங்கள் சார்" என்று கூறி ஆன்சனின் அறைக்குள் நுழைந்தான்.

வந்தவன், காத்திருக்கும் நேரத்தை வீணடிக்க விரும்பாமல், அங்கு வேலை செய்துகொண்டிருந்த காவல் அதிகாரிகளை நோட்டமிட்டபடி தன் சிந்தனையை ஓடவிட்டுக்கொண்டிருந்தான்.

சில நிமிடங்கள் கடந்த பின் ஆன்சன் அறைக்குள்ளிருந்து வெளியே வந்த கான்ஸ்டபிள், "அசிஸ்டன்ட் கமிஷனர் உங்களை உடனடியா வர சொன்னாரு சார்" என்று கூறினான்.

வந்தவன், "நன்றி!" என்று கான்ஸ்டபிளிடம் புன்முறுவல் பூத்துவிட்டு, ஆன்சனின் அறையின் அருகே சென்று, கதவைச் சற்று விலக்கி தன் தலையை மட்டும் உள்ளே நுழைத்து, "எக்ஸ்கியுஸ் மீ சார்" என்று சொன்னான்

"உள்ள வாங்க " என்று தன் மேஜையில் இருந்த ஃபைலை பார்த்தபடி சொன்னார் ஆன்சன்.

உள்ளே சென்றான் அவன்.

ஆன்சன், தன் தலையை உயர்த்தி, வந்தவனைப் பார்த்து, "ஹலோ மிஸ்டர் ஸ்டீபன்! வாங்க வாங்க" என்று கூறியபடி இருக்கையிலிருந்து எழுந்து ஸ்டீபனின் கைகளைக் குலுக்கினார்; தன் எதிரே இருக்கும் இருக்கையில் உட்காருமாறு கை காட்டினார்.

## உயிர் போனால் அது உன்மடியில் போகனும்

கே இனியவன்

எனக்கு உயிர் நண்பன் இல்லை
உயிராய் இருந்தவனும் முதுகில்
குற்றி விட்டான் - பதிலாக
இதயத்தில் குற்றியிருக்கலாம்
என்னை கொண்றிருக்காலாம்...!!!

வந்தாய் நீ தந்தாய் அன்பை
உன் அன்பை என்றாலும்
சற்று சந்தேகம் -நீ
நீர் குமிழியா ..? நீர் வீழ்ச்சியா ..?
சற்று தடுமாறியது மனம் ....!!!

உணர்ந்தேன் உன் அன்பை
என்னை விட என் குணங்களை
நன்றாக புரிந்து கொண்டாய்
எனக்கே இருந்த குணத்தை எனக்கே
தெரியாமல் அற்புதமாய் சொன்னாய் ...!!!

உள்ளத்தால் உண்மை சொன்னாய்
உள்ளத்தால் அன்பு தந்தாய்
உள்ளத்தால் கண்ணீர் விட்டாய்
உள்ளத்தால் என்னை வாழ்த்தினாய்
உள்ளமே உள்ளத்தை உயிராய் தந்தாய் ...!!!

உன்னுடைய அன்பால் உயிர் பெற்றேன்
உயிரே போகும் வரை உன்னுடம்
உயிர் நண்பனாய் இருக்க துடிக்கிறேன்
உயிர் போனால் அது உன்மடியில் போக
உயிராய் துடிக்கிறேன் அன்பே நட்பே ...!!!

ஆன்சன் சுட்டிக் காட்டிய இருக்கையில் அமர்ந்த ஸ்டீபன், ஆன்சனின் முகத்தை சிறிது நேரம் நோக்கினார்.

"உங்களைப் பத்தி நிறைய கேள்விப்பட்டிருக்கேன் மிஸ்டர் ஸ்டீபன். இன்ஸ்பெக்டராய் இருந்து பல சட்ட விரோதிகளைப் பிடிச்சி தண்டனை வாங்கிக் கொடுத்திருக்கீங்க. இப்போ இந்த ஏரியாக்கு மாத்தலாகி வந்திருக்கிறதுல ரொம்ப சந்தோசம். ஆனா நீங்க நினைக்குற மாதிரி இருக்காது இந்த இடம்.." என்று கூறிக்கொண்டிருக்கும்போதே இடைபுகுந்தார் ஸ்டீபன்.

"எனக்கு தெரியும் சார். இங்க மாஃபியாக்களின் அராஜகம் தான் நடந்துட்டு இருக்கு. மொத்தம் ஒன்பது பேர் மாஃபியா தலைவர்கள். அவர்களுக்கு மேல் ஒரு தலைவன். அவனுடைய பேரு ஜோசப். அவங்களுக்கு கீழ விஷக் கிருமிகள் போல சொன்னா செய்ற ஆட்கள். இவங்க நினச்சா யாரா இருந்தாலும் கொன்னுடுவாங்க. எதுவா இருந்தாலும் அடஞ்சிடுவாங்க. சொல்லப்போனா ஒரு கடவுள் போல இங்க ஆட்டிப்படைக்குறாங்க" என்று மூச்சு விடாமல் கூறிக்கொண்டே போனார் ஸ்டீபன்.

வேலைக்கு சேரும் முன்னே எல்லாவற்றையும் தெரிந்து வைத்துக்கொண்டிருக்கும் ஸ்டீபனின் மதிநுட்பத்தை எண்ணி வியந்தார் ஆன்சன்.

"எல்லாத்துக்கும் ஒரு முடிவு இருக்கும் சார். இவங்களுக்கும் அது உண்டு. முதல்ல இவங்களுடைய பழைய கேஸ் எல்லாம் தோண்டி நெருக்கடி குடுத்து கூண்டோட பிடிக்கணும். அந்த சந்தர்ப்பத்த உருவாக்கணும். டேவிட் பில்லா, மாஃபியா தலைவன் விக்டர கொன்னதுக்கு ஆதாரம் இருக்கு. நம்ம அதிரடிய அவர் கிட்ட இருந்து ஆரம்பிக்கணும்.." என்று கூறியபடி இருக்கையிலிருந்து எழுந்தார் ஸ்டீபன்.

"வெல் டன் மிஸ்டர் ஸ்டீபன். உங்களைப் பாத்தா எனக்கு கொஞ்சம் நம்பிக்கை வருது. அதை காப்பாத்துவீங்கன்னு நினைக்குறேன்" என்று மீண்டும் கைகுலுக்கினார்.

"நிச்சயமா சார்" என்று கூறிவிட்டு அங்கிருந்து விடைபெற்றார் ஸ்டீபன்.

ஸ்டீபனின் இளமை துள்ளலும் சாதுர்யமும் கண்டிப்பாக மாஃபியா கூட்டத்திற்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்று எண்ணியபடி ஆன்சன் தான் படித்துக்கொண்டிருந்த ஃபைலில் மீண்டும் மூழ்கினார்.

ஸ்டீபன் தன் காரை சாலையில் வேகமாய் ஓட்டிக்கொண்டு சென்றார். அவ்வப்போது சாலையோரம் நடக்கும் மனிதர்களை வேடிக்கை பார்த்தபடி இருந்தார்.

அப்பொழுது ஒரு கண்பார்வையற்றவர் சாலையோரத்தில் நின்றுகொண்டு இசைக்கருவியை வாசித்திருக்க, போகிறவர் வருவோர் எல்லாம் தங்களால் முடிந்த உதவியாக பணத்தை அவரின் அருகில் இருந்த உண்டியலில் போட்டுவிட்டு சென்றுகொண்டிருந்தனர்.

பார்வையற்றவரின் அருகில் நின்றிருந்த ஜோக்கர், ஸ்டீபனின் காரை பார்த்தபடி பிஸ்கட் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். அவனையே உற்றுப் பார்த்த ஸ்டீபன் சலிப்போடு மீண்டும் சாலையைப் பார்த்தபடி தன் வாகனத்தைச் செலுத்தினார்.

ஆனால், ஜோக்கரின் கண்கள் ஸ்டீபன் செல்லும் காரின் மீதே பதிந்திருந்தது...

**தொடரும்...**

# முத்தமிழ்!

அகரம் அமுதன்

முத்துமிழ் கடல்கள் மூன்று
முப்புறம் சூழ்ந்தி ருக்க
இத்தரை தன்னில் தோன்றி
இன்றள வும்மெம் நாவில்
புத்தமிழ் தெனச்சு ரந்து
புத்துயிர் ஊட்டு கின்ற
முத்தமிழ்த் தாயே! மூல
முதல்மொழி ஆனாய் நீயே!

○ ○ ○

நாவினில் கனிகள் மூன்றாய்
நனிசுவை கூட்டி;க் காற்றில்
மேவிய கொடிகள் மூன்றில்
வீரமாய்ச் செறிந்து; சூழுங்
காவினைப் பெற்ற மூன்று
கவினுறு நாட்டை யாண்ட
ஓவிய வேந்த ரெல்லாம்
ஓம்பிய கழகம் மூன்றில்

○ ○ ○

நித்தமும் சிந்த னைக்குள்
நிறுத்தியே பண்ணி யற்றும்
வித்தக புலவர் நாவில்
விளைந்துகோ லோச்சு கின்ற
முத்தமி ழுண்ட தாலோ
முத்துமிழ் கின்ற தாழி?
அத்தமிழ் கொண்ட தாலோ
அமிழ்தினை வழங்கிற் றூர்க்கே?

○ ○ ○

‘**இயல்**'வதைக் கரந்தி டாமல்
ஈவதே ‘**இசை**’யா மென்று
நயம்பட ‘**நாட கம்**’நீ
நவின்றிட வேண்டி யன்றோ
**இயல்,இசை, நாட கம்**மாய்
இலங்கினை; உன்மீ துற்ற
மையலால் தன்ன லத்தை
மறந்ததால் வாழ்வா ருண்டே!

○ ○ ○

தமிழினை ஆள வேண்டி
தரணியாள் ஆசை விட்டான்
நம(து)'**இளங் கோ**';அ வன்போல்
'**நந்தி**'யும் செவிம டுத்தான்
நமனெனச் சூழ்ந்து நின்ற
நற்றமிழ்க் காய்;தான் உண்ணா(து)
அமைவுறு தமி(ழ்)'**ஔ வை**'க்கே
'**அதியனும்**' கனியை ஈந்தான்!

○ ○ ○

‘இருந்தமி ழாலி ருந்தேன்’
என்றனன் ஒருவன்; அந்தப்
பெருந்தமிழ் தன்னிற் குற்றம்
பிறங்கிடின் கோலால் குத்திச்
சிரங்குறு தலையன் ஆனான்
சீர்மிகு '**சாத்தன்**'; '**கம்பன்**'
அருந்தமிழ்க் கீந்து வள்ளல்
ஆனவன் '**சடையப் பன்**'காண்!

○ ○ ○

பழியினாற் பிறந்த போர்கள்
பாரினிற் பலவாம்; கூர்வேல்
விழியினால் விளைந்த போர்கள்
மிகப்பல; தொன்மை நாளாய்
அழிவினுக் கமைந்த போர்கள்
அளவிடற் கரிதால் தன்வாய்
மொழியினால் மூண்ட போரை
தடுத்தபேர் தமி(ழ்)'**ஔ வை**'க்கே!

○ ○ ○

வாடிய பயிரைக் கண்டு
வாடிடும் நெஞ்சம் உன்னால்
கூடிய தென்றால் உன்னை
குறைசொலத் துணிவா ருண்டோ?
தேடிய செல்வ மிங்கே
செந்தமிழ் மூன்று மானால்
நாடிய திசையி லெல்லாம்
நற்புகழ் பெருகு மன்றோ!

○ ○ ○




அறத்துப்பால் – பாயிரவியல் - அதிகாரம் – 04. அறன்வலியுறுத்தல்

சுந்தர் புருஷோத்தமன்

குறள் 31: சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு.

வேண்டுஞ் சீர்மையை அறம் நல்கும் – அஃது
வேண்டுஞ் செல்வமும் நல்கும் - அஃதன்றி
வேண்டும் பொருளும் அருளும்
வேறென்ன வேண்டு முயிர்க்கு.

குறள் 32: அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு.

அறமே யனைத்திற்கும் மேலா மதனினும்
ஆக்கந் தருவது வேறொன்றுமில்லை
அறந்தனை மறந்தார்க் கஃதினு மேலாய்,
தீங்கொன்று மிங்கில்லையாம்.

குறள் 33: ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாஞ் செயல்.

செய்யுஞ் செயலது எவையெவை யாயினும்
செய்யு மிடமது எதுவெது வாயினும்
செய்வன வெல்லாஞ் செய்வீர தனுளே
அறமெனும் நலமது விளங்கிடுமாறே

குறள் 34: மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.

அகமெனு மாலய மழுக்கிலா திருத்தலே
அறமெனப் படுமதை யகந்தனில் கொள்வீர்
அகமெனு மாலய மழுக்கினால் நிரம்பிடின்
அறமது அழிந்தாங்கு ஆரவாரம் நிற்குமே.

குறள் 35: அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

மாற்றார் பெருமையில் பொருமலும் - ஐம்புலன்
மேலே  வலம்வரு மாசையும் - ஆசை
தடைபடின் வெளிப்படுஞ் சினமும் - சினத்தால்
விளையுங் கடுஞ்சொலுங் களைவதே அறமாம்

குறள் 36: அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை.

பிறகிதைச் செய்வோ மென்றெண்ணி யறமதை
பின்தள்ளும் பிழையதைப் பின்தள்ளி யறமதை
இன்றே செய்தல் நலந்தரு மதுநம்
மரிக்குங் காலத்தும் மரிக்காமல் துணை நிற்கும்

குறள் 37: அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை.

அறமதைக் கொள்வார் சிவிகைமீதூர்வோர் போலாமவர்
இன்ப மின்னலை எளிதெனக் கொள்வர் - கொள்ளார்
அனைத்தையுஞ் சுமையெனக் கொள்வாரவரே
சிவிகையைச் சுமப்பவர் போலாம்.

குறள் 38: வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்.

பயனிலா நாளெனப் பாழ்படும் நாளிலா
பயனுறும் நாள்பெற நல்லறம் நாளுங் கொள்வீர்
நினைவினில் கொள்வீரதுவே பிறவிப் பிணியெனும்
வழிதனை யடைக்குங் கல்லாமாம்.

குறள் 39: அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல.

நல்லறத்தால் நமைநாடி வருவதுவே யின்பம் – அதுவன்றி
பொல்மறத்தால் வருவதொன்றும் புகழாகா - புரையோடு
கொல்பொருளாம் இன்னலதை அதுநல்கும் - அஃதோடு
இன்பமதை மின்னலெனக் கொல்லுமாம்.

குறள் 40: செயற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி.

நல்லறந்தன்னை நயந்து நாளுஞ்செய்க – நல்லறமே
நிலந்தனில் நற்புகழ் பெருக்கும் –அதுவன்றி
மறஞ்செய்தல் மாண்பினைக் கெடுக்கும் - கெடுத்து
பிறவிப் பிணியையுங் கொடுக்கு மறிவீர்.

- தொடரும்

# கவிதைக்குறள் திருக்குறள் தெளிவுரை

செந்தமிழ் தாசன்

அறம்-பாயிரம், இரண்டாம் அதிகாரம் - வான்சிறப்பு

**குறள். 11** வானின் றுலகம் வழங்கி வருதலாற்
தானமிழ்த மென்றுணரற் பாற்று.

உண்டார் உலகில்
நிலைபெறச் செயும்
அமிர்த பானம்..

தான் நில்லாது
உலகுயிர் எல்லாம்
நிலைபெறச் செய்யுமே
வான்மழை..

தேவபானமாய்
உலகை இயக்கும்
அமிழ்தம் என்றுணர்த்தும்
நிலையாய் வரும்
வான்மழை..

**குறள். 12** துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை.

வான்மழை
ஞாலம் முழுதிற்கும்
நல்உணவு தரும்
வான்களஞ்சியம்..

பசித்தோர்க்கு உணவு
பயிர்விக்கும்
பண்டகசாலை..

தாகத்திற்கு நீராய்
வறுமையின் உணவாய்
தான்நின்று அமுதுதரும்
அட்சயப்பாத்திரம்..

**குறள். 13** விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி.

சூழ்கடல் நில
உலகில் மாரி பொய்த்தால்
மயங்கும் உயிரே..

மெத்தப் பெய்யும் மழை
மொத்தமாய் பெய்யாது
நின்றால் நிலம் சுடும்
பசிநின்று வருத்தும்
உயிர் உழன்று கெடும்.......

**குறள். 14** ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

மழை நின்றால்
நிலம் பழுது..

ஏர்தொழுது
நிலம் பிளக்கும்
உழவர் தன்
தொழில் மறப்பர்
ஆதாரம் தரும்
வான்மாரி தான்மாறி
தன்வழக்கு குறைபட
பெய்தால்..

# மதங்களின் பிடியில்.. - 3

பூங்கோதை

**இஸ்லாம் பற்றிய எனது புரிதல்.**



இஸ்லாமை மதம் என்று சொல்வதை விட மார்க்கம் (வழி) என்று சொல்வதே பொருத்தமானதாகும். அப்படியே இஸ்லாமியர்களும் சொல்லிக் கொள்கிறார்கள். இஸ்லாம் மதத்தில் அதிகமாக அவர்களுடைய வாழ்க்கை முறை எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றிப் போதிக்கப்படுகின்றது. அவர்களுடைய கலாச்சாரமானது முழுக்க முழுக்க வேதத்தை (திருக் குர்-ஆன்) அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஒருவனுடைய சமூக வாழ்க்கை முதல் குடும்ப வாழ்க்கை வரை எப்படி வாழ வேண்டும் என்று இஸ்லாமியம் சொல்லிக் கொடுக்கிறது.

இவர்களது வேதம் அல்லாவிடம் இருந்து நேரடியாக அருளப்பட்டதாக ஒவ்வொரு இஸ்லாமியர்களும் மறு கேள்விக்கு இடமின்றி நம்புகிறார்கள். இது ஏனைய மதத்தவர்களுக்கு கேள்விக்குறியாக இருக்கலாம். ஆனால் இது தான் இஸ்லாமியர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாக இருக்கிறது. அதனால் தான் இவர்கள் வேதத்தை முழுமையாகக் கடைப்பிடித்து வாழ வேண்டும் என்பதில் மிகவும் தீவிரமாக இருக்கிறார்கள்.

> பசி இல்லை,
>
> புசிக்க கற்றுகொடுத்தது
>
> நாகரிகம்!!!
>
> கிருஷ்ணா மு.அ. ரமேஷ் முத்துவேல்

இஸ்லாமியத்தில் ஒரே கடவுட்கொள்கை தான் அடிப்படை. அல்லாவைத் தவிர வேறு தெய்வம் இல்லை என்பதும் நபிகள் நாயகம் மட்டுமே கடைசி இறை தூதர் என்பதும் இவர்களது மாற்ற முடியாத கருத்து.

இஸ்லாமியத்தின்படி திருமணம் செய்யும் போது ஆண் தான் பெண்ணுக்கு சீர் வழங்க வேண்டும். அதை மஹர் என்று சொல்கிறார்கள். இலங்கையில் புத்தளத்தில் நண்பர் ஒருவரின் திருமணத்துக்குப் போயிருந்தேன். திருமணத்துக்கு மறுநாள் மாப்பிள்ளை வீட்டில் விருந்து (வலிமா). அது எப்படியென்றால், மாப்பிள்ளை தான் சொந்தமாக சம்பாதித்து சேமித்து வைத்திருந்த பணத்தில் விருந்து கொடுக்க வேண்டுமாம்... அட.. இது நல்லாருக்கே என மனதுக்குள் தோன்றியது. பெண்ணிடம் இருந்து வாங்கித் தான் கல்யாணச் செலவு செய்யவும், குடும்பம் நடத்தவும், தன் தங்கைகளுக்கு திருமணத்துக்கு சேமிக்கவும் எண்ணும் சில ஆண்களுக்கும் மாமியார்களுக்கும் இது எதிர்மறையாக இருக்கிறதே என ஆச்சரியமாக இருந்தது.

எமது வைபவங்களும் விருந்துபசாரங்களும் உறவை மேம்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டவை. இஸ்லாமியர்களது விருந்து வைபவங்களின் போது மிகப்பெரிய தட்டுக்களில் நான்கு அல்லது ஐந்து பேர்கள் உட்கார்ந்து உண்ணும் வழக்கத்தைப் பார்க்கும் போது (சஹன்), இன்னும் ஒருபடி கூடுதலாக உறவுபலப்படுவதற்கான ஒரு செயல்முறையாகவே எண்ணத் தோன்றுகிறது.

திருமணம் என்ற விடயத்தில் இஸ்லாமியர்கள் எத்தனை திருமணமும் செய்யலாம் என்று ஏனைய சமூகத்தார் மூக்கில் விரல் வைத்துக் கொண்டிருக்க, அதற்குள் எத்தனை சூட்சுமம் இருக்கிறது என்று இஸ்லாமியர்கள் மட்டுமே அறிவார்கள். அதாவது, மனைவியர்களிடம் பக்கச்சார்பில்லாமல் நடந்து கொள்ள வேண்டும். அது மட்டுமன்றி மனைவியின்/ மனைவியர்களின் சம்மதமின்றி இன்னொரு திருமணம் செய்து விட முடியாது.

திருமணம் செய்யாமல் ஒரு பெண்ணுடன் உறவுகொண்டால் அது விபச்சாரம் என்ற மிகப்பெரும் பாவமாகக் கொள்ளப்படுகிறது. அதற்குக் கடுமையான தண்டனை மற்றவர்கள் முன்னிலையில் வழங்க குர்-ஆன் அனுமதிக்கிறது.

> "விபசாரியும், விபசாரனும் - இவ்விருவரில் ஒவ்வொருவரையும் நூறு கசையடி அடியுங்கள்; மெய்யாகவே, நீங்கள் அல்லாஹ்வின் மீதும், இறுதி நாள் மீதும் ஈமான் கொண்டவர்களாக இருந்தால். அல்லாஹ்வின் சட்டத்(தை நிறைவேற்றுவ)தில், அவ்விருவர் மீதும் உங்களுக்கு இரக்கம் ஏற்பட வேண்டாம்; இன்னும் அவ்விருவரின் வேதனையையும் முஃமின்களில் ஒரு கூட்டத்தார் (நேரில்) பார்க்கட்டும்." 24:2 குர்-ஆன்

எனவே அப்படியான துன்பத்தில் எல்லாம் மாட்டிக் கொள்ளாமல் கல்யாணம் பண்ணிக் கொள் என்கிறது இஸ்லாம். ஆனால் சும்மா அல்ல, அந்தப் பெண்ணையும் வைத்துக் குடும்பம் நடத்தும் அளவுக்கு போதிய வருமானம் இருக்க வேண்டும். எல்லா மனைவியரிடமும் சரி சமமாக நடந்து கொள்ள வேண்டும். (அது கொஞ்சம் கஸ்டமான விடயம் தான் ஆனால் முடிந்த வரைக்கும் அப்படி இருக்க வேண்டும் என்றும் அல்லாவுக்கு பயந்து நடவுங்கள் என்றும் கு-ஆனே சொல்கிறது)

முக்கியமாக அநாதை பெண்களுக்கு அநீதம் இழைக்காமல் இருக்கவும், அது உன்னால் முடியாதென்றால், மற்றப் பெண்களில் இரண்டோ, மூன்றோ நான்கோ... கல்யாணம் பண்ணிக்கொள், ஆனால் அவர்களுக்கிடையே சமமாக (நீதியாக) நடந்து கொள்ள முடியாவிட்டால் ஒரு பெண்ணையே கல்யாணம் செய்து கொள், அல்லது உனக்கு சொந்தமாக்கிக் கொண்ட அடிமைப் பெண்ணோடு நிறுத்திக்

கொள் என்று (அந்தக் காலத்தில் தமது வீட்டில் வேலைக்காரியை எஜமானன் சொந்தமாக்கிக் கொள்ளும் வழக்கம் இருந்தது) ஆண்களுக்கு நன்றாகவே குர்-ஆன் கற்பிக்கிறது.

## சங்கத் தமிழனைத்தும் தா!

அகரம் அமுதன்

கரையென்னும் மன்னவனைக் கட்டி அணைக்கத்
திரையென்னும் கைநீட்டித் தீதில் –நுரையென்னும்
முத்தம் இடுகின்ற மூவாக் கடலே!நல்
முத்தம் பிறக்கும் முதலிடமே! –மொத்தஉடல்

உப்பாய் விளங்கும் உவரியுனை நாடியவர்க்(கு)
உப்பிடும் வள்ளலே! ஓங்குமழைக்(கு) –அப்பனே!
நீரலையைப் பேரலையாய் நீட்டி நிலமழிக்கப்
பாரினிலே வாய்த்த பகையரசே! –நேரெதிர்த்(து)

அந்நாளில் எங்கள் அருங்குமரிக் கண்டத்தை
எந்நாளும் தோன்றா இடரலை –தன்னால்
அழித்துக் களிப்புற்(று) அருந்தமிழ் நூல்கள்
செழித்த சுவடழித்துச் சென்ற(து) –எழிலாமோ?

பண்ணுக் கினியமொழி பால்மழலைக் கேற்றமொழி
எண்ண உவகைதரும் இன்பமொழி –மண்ணுலகில்
முன்தோன்றி மூத்தமொழி முச்சங்கம் கண்டமொழி
தன்னேரில் லாத தமிழ்மொழியாம் –நன்மொழியின்

எண்ணிறந்த ஏடழித்(து) ஏதும் அறியாத
பெண்ணெனவே வீற்றிருத்தல் பேறாமோ? –
கண்ணினிய
எங்கள் தமிழழித்த இன்கடலே! நீயழித்த
சங்கத் தமிழனைத்தும் தா!

நம் நாட்டு பொருளாதார நிலையில் ஒரு பெண்ணை வைத்து குடும்பம் நடத்துவதற்கே வருமானம் போதவில்லை, அதைவிட மாமியார், நாத்தனார் பிரச்சனைகளுக்கே ஈடுகட்ட முடியவில்லை, இந்த லட்சணத்தில் சக்காளத்திகள் சண்டையில் நீதமாக நடந்து கொள்வதா… போதுமடா சாமி என்று தலையைப் பிச்சுக் கொள்ளும் நிலைமை வந்து விடாதா? அது மட்டுமன்றி இவை எல்லாவற்றையும் தாண்டி பல திருமணங்களச் செய்பவன் இந்த சமூகத்துக்குத் தன்னை அதிக பாலியல் நாட்டமுள்ளவனாக, ஒரு பலவீனனாக, அல்லது தன்னைக் கட்டுப்படுத்த முடியாதவனாக வெளிப்படுத்துகிறான் என்பதை எந்த ஒரு ஆணும் புரிந்து கொண்டே இதை செய்ய முடியும். அதனால் தான் இஸ்லாம் இவ்வளவு இலகுவாக பலதார முறையை அனுமதிக்கிறது. இப்போ சொல்லுங்க, இஸ்லாமில் எத்தனை கல்யாணமும் பண்ணிக் கொள்ளலாம் என்பது அத்தனை சுலபமான விடயமா?

இஸ்லாம் மார்க்கம் தன் துணையை தேடிக் கொள்வதில் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் அவர்களுக்கு என்று சுதந்திரத்தை வழங்குகிறது. ஆனால் அதே சமயம்; திருமணம் செய்வதாக இருந்தால் சாட்சியை வைத்து திருமணம் செய்ய வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறது. அத்துடன் விவாகரத்து செய்த பெண்/ஆண் எப்படித் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பது பற்றிய முழுமையான விளக்கம் கொடுக்கப்படுகிறது. இது மட்டுமன்றி இன்னும் பல விடயங்களும் மருத்துவரீதியாகவும் விஞ்ஞானரீதியாகவும் பொருந்தி வருகின்றமை வெளிப்படை.

இஸ்லாமிய முறைப்படி ஆண் பெண் இருவருக்கும் ஒரே மாதிரியான சட்டமாக இருந்தாலும் பெண்ணை விட ஆண் ஒருபடி உயர்ந்தவன் என்று பெண்ணியவாதிகளுக்கு கடுப்பேத்தும்படியான ஒரு கருத்து இருக்கத்தான் செய்கிறது…

### தீவிரவாதம் இஸ்லாமில் போதிக்கப்படுகிறதா?

குர்-ஆன் மற்றும் கிறீஸ்தவர்களின் பழைய ஏற்பாட்டிலும் அதிகமாக போர் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. அடிப்படையில் போர்க்குணம் கொண்டவர்களாகவே இந்த வேதங்கள் காட்டுகின்றது. இதனால் இதைக் கடுமையாகக் கடைப்பிடிப்பவர்களும் போர்க்குணம் கொண்டவர்களாக இருப்பார்கள் என்றோ இருக்க வேண்டுமென்றோ அவசியம் இல்லை. ஆனால் இதை சரியாக அறிந்து கொள்ளாமை தான் ஒரு சில முஸ்லீம் இயக்கங்களின் தீவிரவாத செயற்பாட்டுக்கு காரணமாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. அதாவது, எகிப்தில் பாரவோன் (ஃப்ரௌன்) மன்னனுடைய ஆட்சியில் எகிப்தியரிடத்தில் அடிமைப்பட்டுக் கிடந்த இஸ்ராயேல் மக்கள் அங்கிருந்து மோசேஸின் (மூஸா நபியின்) வழிகாட்டலில் தப்புவிக்கப் படுகிறார்கள். அவர்கள் 40 வருடங்களாக பாலைவனத்தில் பொடிநடையாகப் பயணித்து தமக்கென்றொரு இடத்துக்கு வந்து சேர்கிறார்கள். 40 வருடங்கள் என்றால் கற்பனை செய்து பாருங்கள்…. எத்தனை சிறு சிறு நாடுகளைக் கடந்து சென்றிருப்பார்கள்? அங்கெல்லாம் ஒரு பெரிய சனத்தொகை தமது நாட்டை நோக்கி வருவதைக் கண்டதும் அந்தப் நாட்டு மன்னர்கள் சும்மாவா இருந்திருப்பார்கள்? அவர்களைக் கண்ட இடங்களில் எல்லாம் வழிமறித்து தாக்கப்பட்டார்கள். இதனால் இவர்கள் எப்பொழுதும் யுத்தத்துக்குத் தயாரானவர்களாக இருக்க வேண்டியவர்களாக இருந்தார்கள். பயணத்தின் போது தங்கள் பெண்கள் குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டியவர்களாக இருந்தார்கள். எனவே இவர்கள் தற்காப்பாளார்களாக எந்த நேரத்திலும் விழிப்பு நிலையில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதுமட்டுமன்றி இவர்களுக்காக யாருமில்லாத ஒரு வெற்றுப் பிரதேசம் காத்திருக்கவில்லை. இவர்கள் தாம் பாதுகாப்பாக வாழுவதற்காக தமக்கென்றொரு தேசத்தைக் கைப்பற்றவேண்டியிருந்தது.

விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் இறைவன் பாலும் தேனும் ஓடும் ஒரு தேசத்தை வாக்களித்திருந்தார் என்றும் அதைத் தேடியே அவர்கள் பயணித்தார்கள் என்றும் சொல்கிறது. பாலும் தேனும் அந்த நாட்டில் ஓடியதோ இல்லையோ, அதற்கு முன்னராக நிறைய இரத்த ஆறுகள் ஓடியது என்பது தான் உண்மை. அந்தளவுக்கு அவர்கள் போர்களைச் சந்தித்தார்கள். எ

கிப்திலிருந்து புறப்பட்டவர்களின் அடுத்த தலை முறையே அந்த தேசத்துக்கு சென்று சேர்ந்ததாக சொல்லப் படுகிறது. அந்தக் காலத்தில் இருந்து அவர்கள் போர் புரிகிறவர்களாக போர்களை எதிர்நோக்கியவர்களாக வாழ்ந்தார்கள். எனவே போர் தவிர்க்க முடியாத ஒன்றாக அவர்களது வாழ்க்கையில் பின்னிப் பிணைந்திருந்தது என்பது தான் உண்மை. ஆனால் தற்கால சூழ்நிலையிலும் இவர்கள் போர்க்குணம்

கொண்டவர்களாக வாழ்வதென்பது அவர்களே பரிசீலிக்க வேண்டிய ஒன்று.

அம்மாவும், அப்பாவும்,

என்ன ஆனார்கள் ?

மம்மியும், டாடியும்

கொன்று புதைத்தார்கள்.

ஜெயராமன்.p.s

நபிகள் பிற உயிர்களிடத்தில் கருணையும் அன்பும் காட்டச் சொல்வதில் எந்த இடத்திலும் குறை வைக்கவில்லை. இஸ்லாமும் ஏனைய மதங்களைப் போலவே அன்பை போதிக்கிறது. ஆனால் ஏதோ ஒரு நாட்டு அரசில் கொண்ட பகையைத் தீர்க்க பொது மக்களையும் குழந்தைகளையும் கொல்லத் துணிவது மார்க்கத்தின் பெயரால் செய்யப்படுவதாகக் கூறப்பட்டாலும் உண்மையில் அது குறிப்பிட்ட சில குழுக்களின் குரூர குணமாகவே நான் பார்க்கிறேன். ஏனென்றால் இத்தகையை இஸ்லாமியர்கள் எல்லோருமே ஏற்றுக் கொள்ளவில்லை என்பது வெளிப்படை.

> இஸ்லாமியர்கள் வேதத்தைக் கொண்டு ஒழுகுகிறவர்களே. ஆனால் அவர்களில் குழப்பவாதிகளும் நம்பிக்கையற்றவர்களும் இருக்கிறார்கள் என்பதைத் திரு குர்- ஆனே வெளிப்படுத்துகிறது . (அல்பகறா 2 வசனம் 6-14)

சிலபல சந்தர்பங்களில் பேஸ்புக் போன்ற சமூகத் தளங்களில் இஸ்லாமிய சகோதரர்களும் கிறீஸ்தவ சகோதரர்களும் மதம் தொடர்பான வாக்குவாதங்களில் ஈடுபடுவதைக் கண்டிருக்கிறேன். வாக்குவாதம் முற்றும் போது இவர்கள் கொள்கைகளை/ நம்பிக்கைகளை விமர்சித்துக் கொண்டிருந்தவர்கள் திடீரென யேசுவைப் பற்றிக் கீழ்த்தரமான வார்த்தைகளில் பேச ஆரம்பித்தனர். அப்பொழுது அந்த குறிப்பிட்ட சகோதரர்கள் பற்றி, தமது குர்-ஆனையே முழுதாகப் படிக்காதவர்களா இவர்கள் என்ற பரிதாபம் தான் ஏற்பட்டது. ஏனென்றால் எத்தனை கொள்கை வேறுபாடுகள் இருந்தாலும் யேசுவைத் தமது நபிகளில் ஒருவராக (ஈஸா நபி) இஸ்லாம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அப்படியிருக்க, தமது நபியைப் பற்றிக் கீழ்த்தரமான வார்த்தைகளில் விமர்சிக்க இவர்களால் முடிகிறது என்றால் எத்தனை அறியாமை…

மொத்தத்தில் குர்-ஆன் என்ற வேதத்தின் பெறுமதியை ஏனைய மதத்தவர்களுக்கு உணர்த்த வேண்டியது இஸ்லாமியர்களின் நடத்தையும் அவர்களது வாழ்க்கை முறையுமே என்பதை இஸ்லாமியர்கள் உணர்ந்தே இருக்கிறார்கள். எனவே, ஒரு உண்மையான இஸ்லாமியனின் வாழ்க்கையைக் கொண்டே அந்த வேதத்தின் மதிப்பை உணர்ந்து கொள்ள முடியும். ஆனால் அந்த வேதத்தின் மதிப்பை உயர்த்தும்படி உண்மையான இஸ்லாமியர்களாக எத்தனை பேர் வாழ்கிறார்கள் என்பது தான் கேள்விக் குறி!!!.

> *இங்கு கடவுளை எதிர்த்துக் கேள்வி கேட்க, அல்லது ஆராய மனிதனுக்கு தடை உள்ளது. "அவன் செய்பவை பற்றி அவனை எவரும் கேட்க முடியாது" (அல்குர்ஆன், 21:23)*

**இறைவனுடனான உறவு**

இறைவனுக்கும் மனித குலத்துக்கும் உள்ள தொடர்பு: இறைவன், அடியார்கள் என்பதே இஸ்லாத்தின் ஏகத்துக் கொள்கையின் அடிப்படையாகும். மனித சக்தியால் எதுவும் முடியாது என்ற நிலை வரும்போது இறைவன் அதை செய்யக் கூடியவராக இருக்கிறார் என்பதை இஸ்லாமியர்கள் நம்புகிறார்கள்.
இன்னும் இஸ்லாம் பற்றி விரிவாக பார்க்க எத்தனையோ விடயங்கள் இருந்தாலும் கட்டுரையை சுருக்கும் படிக்கு சில விடயங்களை மட்டுமே குறிப்பிடக் கூடியதாக உள்ளது.

*அப்பா: ஏன்டா அழுகுற?*
*மகன்: அம்மா அடிச்சுட்டாங்கப்பா.*
*அப்பா: அம்மாதான அடிச்சாங்க அழாதடா.*
*மகன்: உனக்கு பழகிப்போச்சு. எனக்கு வலிக்குதுப்பா.*
*அப்பா: ?!...*

எனினும் , ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல இந்தக் கட்டுரை மதங்கள் பற்றிய ஒரு புரிதலையும் நல்லிணக்கத்தையும் மற்றவர்கள் மத்தியில் ஏற்படுத்தும், நோக்கத்திலேயே எழுதப்படுகிறது. எனவே எந்த மதத்துக்கும் எதிரான விமர்சனங்களையோ, ஏனைய மதங்களோடு ஒப்பிட்டு உயர்த்தியோ தாழ்த்தியோ கருத்திடாமல், கட்டுரையின் நோக்கத்தோடு பயணிக்கும்படி அனைத்து மத சகோதரர்களையும் கேட்டுக் கொள்கிறேன். மீண்டும் இன்னொரு மதம் பற்றிய புரிதல்களோடு அடுத்த தொடரில் சந்திப்போம்.

தொடரும்



**முகப்பு படம்**

*பத்மனாபபுரம் அரண்மனை, கன்னியாகுமரி*
*படம்: விநோத் கன்னியாகுமரி*

நீங்களும் நீங்கள் எடுத்த சிறந்த படங்களை மின்னிதழுக்காக அனுப்பி வைக்கலாம்.

## கனவிலோர் கவியரங்கம்

### எம் வை இமாம்தீன

கரும்பிலுமினிய
கற்கண்டு அனைய
சொற் கொண்ட
நற்றமிழே !

○○○

கனிமொழி நீயென்று
உரைத்தனரே !
உலகீன்ற தனிமொழி- நீ
சரித்திரப் படுக்கையின்
சுதந்திர ஒளிக்கை -நீ

○○○

அஞ்சுகிறேன் நான்
என் சொல் பஞ்சத்தை நீக்கி- என்னில்
நெஞ்சம் வைத்து விடு
கொஞ்சம் தஞ்சம் தந்து விடு

○○○

வந்துவிடு
கெஞ்சுகிறேன் - நீ
என் நாவில் சுளுக்கெடுக்க

○○○

ஒப்பில்லா உன் மூப்பில்
உப்பில்லாப் பண்டம் நான்
தப்புகள் நான் செய்திருந்தால்
தணித்துவிடு என் கண்டத்தை

○○○

தமிழன்னை பிரசவித்த
கொச்சை மொழிப்
பிச்சைக்காரன் நான்

○○○

இச்சையில்
உனைப் பாட நுழைந்தேன்
உன் தணியாத தமிழ்வேட்டை
தந்துதவு
தமிழ் வேட்கை கொண்டவனுக்கு

○○○

தமிழின் உதிரத்தவன் - நான்
நாடியும் நாளமும்
என் உயிர்மெய்கள்
நீ என்னை
சந்தேகிக்காமல் வா! வா!

○○○

அமிழ்தினும் இனிதென்பார்கள் -உன்னை
அமிழ்துக்கே இனிதானது
நீ மட்டும் தான்
என்கிறேன் வா!

○○○

நீட்டி நிமிர்ந்த என் நாவை
வளைத்துப் புரட்டி
மொழி தந்து களி தீர்க்க வா!

○○○

குழி வெட்டும் மொழிக்கெல்லாம்
குவிவின்றி
உளி கொண்டு
சிற்பித்து மொழி காணும்
விழியாக்கினாய்.

○○○

நான் கவி புனைய
உன் வனைதிறன்
அழகைத் தா!

○○○

நுண்புலம்மிக்க நற்றமிழ்
நுண்மதி கொண்ட தீந் தமிழ்
நீயானாய்...

○○○

கடிதங்கள் எழுதிக் கொட்டிய காதலி
மறந்தாலும்
காகிதம் சுமந்து வந்த
தாய்மொழி தரத்தினில் இனிதே
கரத்தினில் நகையாய் நீ
சுரத்தினில் இதமாய் நீ

○○○

அழகினில் இனிய நிலவினும்-நீயே
ஒளிமுதல் ஆனாய்
தேயாத வரமும்
ஓயாத ஒளியும்
மடியாத அழகும்
உனக்கே சொந்தம்....

வாழிய தமிழ்! வாழியவே!

○○○



## ஒரு நாள் மலரும்..

ஜெயராமன்.p.s

இடுப்பிலும் நிறை குடம்,
வயிற்றிலும் நிறைமாதம்.
குளத்தில் குளித்த
ஈரக் கருங்கூந்தல்.
ஈரம் காயுமுன்
சொட்டு சொட்டாய் வடியும் நீர்,

ஈரப் புடவையை
இரட்டிப்பு ஆக்கிட
மெல்ல நடந்து வந்த அவள்
எதிர் வந்த
சிங்கள சிறு நரிகள் கண்டும்
அச்சமில்லா நடையுடன்
கடந்து போனாள்.

பத்து எட்டு தூரத்தில்
பந்தயம் ஆரம்பம்.
போகின்ற தமிழச்சி வயிற்றில்
ஆணா. பெண்ணா ?
வெற்றிக்கு ஒரு பீடி
முடிவுக்குப் பின்,

இரு சுமையேந்தி
மூச்சிறைக்க நடந்தவளை
கை காட்டி
வாவென்றழைத்தனர்.

மறுத்துச் சென்றவளை
வழி மறித்து குடம் பிடுங்கி
தெருவில் எறிந்தான் ஒருவன்.
இடை மறித்தவன் கைகளில்
ஈரப்புடவை.

வீரத் தமிழ் மகளை
பிறந்த மேனியாக்கி
வான் பார்த்து கீழே தள்ளி
துப்பாக்கி முனைக் கத்தியால்
பாதகச் சண்டாளன்
வெறி கொண்டு வயிறு பிளந்தான்.
கருப்பை சிதைத்து, சிசுவை
கைகளால் தோண்டியெடுத்தான்.

ஆணென்று அறிந்ததுமே
தோல்வியின் கோபத்தில்
தூர எறிந்தான்.
செயற்கை பிரவசமாய் வந்த சிசு
செத்து விழுந்தது.
தமிழ்த் தாய் அவள்
அலறிய குரல்

தமிழ் நாடு வரை கேட்டிருக்கும்.
வாய் பொத்தி அறுத்ததனால்
உதிரம் வெளியேற
ஈன சுரத்தில்
மெளனமாகிப் போனது.

வெற்றிப் பரிசாக ஒரு பீடி
கை மாறி வந்தது.
வெற்றியாளன் பற்ற வைத்த
பீடிப் புகையினால்
இடமே மயானமாகிப் போனது.

இதையொத்த நிகழ்வுகள்
ஆயிரமாயிரமாய் அங்கே
அரங்கேற்றம்.
எனினும்,
தமிழீழம் ஒருநாள் மலரும். அன்று,
நீதியின் முன்னே
சிங்களனும், சில இந்தியனும்
கை கட்டி கைதிகளாய்
நிச்சயம் காண்போம்....

## மௌனங்கள் உயிர்த்தெழுந்தால்

மணிகண்டன்

பகுதி 23

உனது காதோர நீர் வீழ்ச்சி
முடி கற்றையினை கைவிரல் கொண்டு
காதின் கரை தாண்டி ஒதுக்கையிலே
காற்றின் சிணுங்கல் சத்தம்
எங்கு சேமித்து வைக்கப்
படுகின்றனவோ !
***

மௌன குறிப்புகளின் திசுக்களுக்கு
நின் விழி வெளிச்சத்திலிருந்தே
அணுக்களின் அல்லல் இல்லாதொரு
சத்துக்கள் அனைத்தும் வந்து
சேர்கின்றனவாம் !
***

என் வீட்டு தோட்டத்தில்
நின் கால் தடம் பதிந்த
பூமியின் தேகத்தில் மட்டும் புற்களின்
வளர்ச்சி
கண்ணா பின்னாவென்று காண
முடிகின்றது !
***

எனை விழி குறிப்பெழுதும்
விஞ்ஞானி என்கிறாய்
எனக்கு மட்டுமே மருத்துவ பட்டம்
கொடுத்த நின் விழிகளை
என்னவென்று சொல்வது !
***

மின்னியல் படித்தும்
நின் விழி கையாளும்
மின்சார குறிப்புகள்
இன்னும் தொடர் கடத்தியாய்
எனது பாக்களில் !
***

நின் விழி கொஞ்சும்
பித்தன் நான் !
உனது விழிகளால் கொஞ்சப்படும்
சித்தன் நான் !
***

புதிர்களை சுவர்களுக்குள்
இட்டும் அவிழ்த்தும்
விடை தேடுகிறோம் !
சில முறை விடை நான்
பல முறை நீயே புதிர் !

***

வெறும் கற்பனைக்குள் அல்ல
எனது வரிகள்
பெரும் மழையினில்
உதிரா பூவின் வாசமாகவே
படைக்க விரும்புகிறேன்
உனக்காக என்றதும்
மழை இன்னும் சாரலிட்டப்படி !
***

காகித பண்பாடு முடிந்து
கணினி பயன்பாட்டில்
உனக்கென காகித தீட்டலும்
ஓர் பேரானந்தம்தான் !
***

புரிதல்
மனிதனுக்கு இயற்கை
நமக்குள்ளானது சாதாரண நிகழ்வின்றி
சரித்திரம் பேசும் !
மௌனமாய் !
***

# நெஞ்சம் பொறுக்குதில்லையே..!!!

சுதா

தீராத நோயாக
மாறாத சாபமாய்
பணமெனும் விஷம்
மனித ஜாதிக்குள் !!

வாக்குகள் கால் குப்பி
மதுவிற்கு விற்பனையாகிறது
தேசமோ கட்சிகளிடம்
அடகு போகிறது !!

கட்சிகளோ உரிமைகளையும்
நசுக்கி நம்மை
அடிமையாக்கி ஆளுகிறது !!

உயிர் நீத்து பெற்ற
சுதந்திரம் எங்கே ?

நல்ல தலைவனை
பொம்மையாக அரியணையில்
அமர்த்தி பொம்மலாட்டம்
ஆடும் அரக்கர்கள் காலிலே !!

விழுப் புண்ணை அணிகலனாக
அணிந்த வீரம் எங்கே ?

தூங்குகிறது நிம்மதியாக
மெத்தையிலும் மதுவிலும்
வீறுகொண்டு எழுகிறது
தெருவிலே மங்கையிடமும்
சாதிச் சண்டையிலும் !!

எல்லையிலே அத்து மீறல்
கோட்டையிலே நாட்டை
விற்க பேச்சு வார்த்தை
ஆனால்
காதலுக்காக போராடும்
குருட்டு சமூகம் !!

மதத்தை மைதானமாக்கி
சாதியை இரையாக்கி
தேசத்தை வேட்டையாடும்
அரசியல் ஓநாய்கள் !!

தேசியக் கொடியை
தலைக் கீழாக தொங்கவிடும்
தேசபிதாக்கள் !!

இவர்களின் மத்தியிலே நான்
என்ன செய்வது ?

ஊழலை தட்டி கேட்க
நாதியில்லை
விஸ்வரூபம் படத்திற்கு
விஸ்வரூபமெடுக்கும் !!

தாய் மொழி காக்க
வக்கில்லை
தலைவா படத்திற்கு
தீக்குளிக்கும் !!



இந்த மூடர் கூட்டமே
நாடெங்கிலும் !!

வேர்வை சிந்தியும்
வயிறு நிறையாமல் சாகும்
உழைப்பபாளியின் மரணத்தில்

மகிழ்ச்சியுறும் முதலாளிகள் !!

சாமிகளையெல்லாம்
கண்ணைக்கட்டி
காட்டுக்கு அனுப்பிவிட்டு
காவியணிந்து
களியாட்டமாடும்
போலிச் சாமியார்களுக்கு

சிறையும் அந்தபுரமாம்
நீராட கங்கை நீராம் !!

இன்னும் எத்தனை எத்தனையோ
அவலங்கள்
கண் முன்னே கணக்கிட்டு
எழுத முடியவில்லை
தீர்ந்தது என் பேனாவின் மை !!

இவையெல்லாம்
காணும் போது என்
நெஞ்சம் பொறுக்கு தில்லையே !!

வீர வாளாய் பிறந்தும்
உறையிலே உறங்குவதா ?

மறக்குடி மங்கையெனக்கு
வேண்டாம்
அந்த அவப் பெயர் !!

நான்
எழுதுகோலை வாளாக்கி
எழுத்துக்களால் பட்டைதீட்டி
போராடப் போகிறேன் !!

நீங்கள் எப்படி ??

இனியொரு மாகத்மாவோ
நேதாஜியோ பகத் சிங்கோ
பிறக்க மாட்டார் மண்ணில்
எல்லோரும் உன்னில் !!

விருப்பம் உங்களுடையது
ஆனால்
தேசத்தின் தலையெழுத்து
உன் கையில்
மறந்துவிட வேண்டாம்!!

# பொம்முவும் அமிர்தப் பானையும்

லோகேஷ் ஜெயகோபி

**அத்தியாயம் - 3 - பொம்மு**



பிறகு அதையெல்லாம் மறந்து விட்டு தன் அறைக்கு சென்று அடுத்த பரிட்சைக்கான வேலைகளை செய்யத் தொடங்கினான் அரவிந்த். இரவு 12 மணி வரை படித்துக் கொண்டிருந்தான். பிறகு தூங்குவதற்காக தன் படுக்கை பக்கம் போன அரவிந்த் மேஜை மீது இருக்கும் தன் பொம்மையை கண்டான்.

ஆசையோடு அந்த பொம்மையை கையில் தூக்கிய அரவிந்த் வழக்கம் போல அதனுடன் பேச ஆரம்பித்தான்.

“நீ வந்த பிறகு எனக்கு ஆச்சர்யமான விஷயங்கள் நெறைய நடக்குது “

“சரி…உனக்கு நான் ஒரு பெயர் வைக்கிறேன்.”என்று யோசிக்க ஆரம்பித்தான் அரவிந்த்.

“நீ ரொம்ப அழகா இருகிறதால உனக்கு ஒரு செல்லமான பெயர்தான் வைக்கணும் !…அழகினு வைக்கலாமா?….வேண்டாம் கிண்டல் பண்ற மாதிரி இருக்கு….வேற என்ன வைக்கலாம்?”என்று நீண்ட நேரம் யோசித்த அரவிந்த்க்கு பளிச் என்று ஒரு பெயர் தோன்றியது.

“கண்டுபுடிச்சிட்டேன்!!…உனக்கு நான் வச்சிருக்கிற பெயர் …..பொம்மு!!”என்று புன்னையுடன் கூறினான்.

“பெயர் நல்லாருக்கா?”என்று ஆசையாக கேட்டான் அரவிந்த்.

“நல்லாருக்கு அரவிந்த்!”என்று புன்னகைத்தது அந்த பொம்மை.

“ஹா” என்று பயத்தில் அலறி கத்தினான் அரவிந்த். உடனே பொம்மு அவன் முதுகு பக்கம் தாவி தன் கைகாளால் வாயை இருக்கமாக பொத்தியது

“அரவிந்த் ..கத்தாதே….நான் ஒன்னும் பேய் இல்லை…ஒரு வித்யாசமான பொம்மைதான்” என்று அவன் வாயை இருக்க பிடித்தபடி கெஞ்சியது பொம்மு.

தன் வாயை விட சொல்லி சைகை காட்டினான் அரவிந்த்.

“சரி…நான் விடறேன்! ஆனா கத்திடாத..அப்புறம் வீட்ல எல்லாருக்கும் என்னை பத்தி தெரிஞ்சிடும்! சரியா?” என்றது அந்த பொம்மு.

அரவிந்த் அதற்கு தலை அசைத்தும் பொம்மு அவன் வாயை விடுவித்து தரையில் குதித்தது.

அரவிந்துக்கு உடல் பயங்கரமாக நடுங்கியது. அவன் அந்த பொம்மையை பயவெறியுடன் பார்த்தான்.

*கதவு, ஜன்னல், மேஜை, நாற்காலி*
*எல்லாவற்றிற்கும் மரம் தேடினேன்.*
*எளிதில் கிடைத்துவிட்டது.*

*களைப்பாய் இருப்பதால்*
*இளைப்பாற தேடினேன்*
*மரத்தின் நிழலை,*
*கண்ணுக்கு எட்டிய தூரம்வரை*
*காணவில்லை ஒரு மரத்தினையும்*

*மனிதர்கள் வளரவிடாதது*
*மரங்களை மட்டுமல்ல,*
*அவர்களின் மனங்களையும்தான்…*

செ.சக்கரவர்த்தி

ஆனால் பொம்முவோ அழகான பொன் சிரிப்புடன் அவனை பார்த்தது.

“உன் பயம் எனக்குப் புரியுது! தயவு செய்து என்னை நம்பு என்னை நம்பு….நான் பேய் இல்லை!”என்றது பொம்மு.

“நீ…நீ ..எப்படி பேசுற?”என்றான் அரவிந்த்.நடுக்கத்துடன்.

“தெரியாது…எனக்கும் உன்ன போல ஒன்னும் புரியாமதான் இருக்கேன்!. ஆனா நீ இல்லலனா எனக்கு உயிர் வந்திருக்காது” – பொம்மு

“என்ன சொல்ற” –அரவிந்த்

“ஆமா நீ என்னை முதன்முதலில் தொட்டதுக்கு அப்புறம்தான் எனக்கு உயிர் வந்துச்சு! நான் உயிர் பெற்றவுடன் பார்த்த முதல் விஷயம் உன்னதான்!”

“என்ன சொல்ற? நான் தொட்டதால உனக்கு உயிர் வந்துச்சா? அப்புறம் ஏன் அப்பவே என்கிட்டே நீ பேசல?”

“எனக்கு அப்ப ஒன்னும் புரியல….எனக்கு அப்ப உன்ன பார்த்தவுடன் பயமா இருந்துச்சு! ஒரு பாம்பை கண்டு கொல்லத் துரத்துற மனிஷன் போல என்னை கொன்னுடுவியோனு நினைச்சேன்!…உன்கிட்ட மெல்ல பேச ஆரம்பிக்கலாம்னு முடிவு பண்ணேன் ”

“இனிக்கு மட்டும் ஏன் என்கிட்டே பேசணும்?”

“நீ தினமும் என்னை உயிர் இல்ல பொம்மைன்னு நினைச்சு பேசுவ..எனக்கு உன்னை பத்தி அப்பதான் உன்னை பற்றி புரிஞ்சுது…உனக்கு சந்தோஷத்தை கொடுக்கலாம்னு நினைச்சேன்..அதனால உனக்கு உதவிகள் செஞ்சேன்…”

“என்ன சொல்ற? உதவிகளா?”

## மனைவிக்குக் கல்யாணம்

இரமேஷ்

என்னால்
என் மனைவிக்கு
குழந்தை பாக்கியம் இல்லையென்று
மருத்துவம் கைவிட்டுவிட்டது.

என்ன செய்வேன்
என் மனைவிக்கு
வேறொரு திருமணம்
செய்து வைப்பதைத் தவிர!

அவள் வாரிசு
தரணியில் தவழட்டும்
அவளின்
பெண்மை
புனிதமாகட்டும்!!

'மாங்கல்யம் தந்துநானே'!!!
முடிந்ததும்
செய்திகள் பரபரத்தன
இப்படியுமா செய்வான்
அவனுக்குப்
பைத்தியம் கீய்த்தியம்
பிடிச்சிப்போச்சா என்று
பெண்களும் பெண்ணியவாதிகளும்
பேசிக்கொண்டிருக்கும்
அதே வேளையில்

ஆண்கள் சிலர்
நானும்
என் மனைவிக்குத்
திருமணம் செய்துவைப்பேன் என்று
சபதம் ஏற்றார்கள்.

புதுப் பால் புரட்சி துவங்கியது!

"ஆமாம்..அன்னிக்கு ஒருநாள் உன் அறையை சுத்தம் செய்தேன்...உன் எக்ஸாம் ஹால் டிக்கெட்டை உன் கைக்கு வர செய்தேன்..உனக்கு பிடித்த சாக்குலேட்களை வாங்கி வந்து உன் பையில் வைத்தேன்!"

அரவிந்துக்கு தற்போது மெல்ல பயம் தெளிந்தது.

"எனக்காக ஏன் இத்தனையும் செய்யணும்?"என்றான் அரவிந்த்.

"நீதானே என்கிட்டே சொன்ன? இனிமே நீயும் நானும் நண்பர்கள்னு" என்றது பொம்மு.

அரவிந்த் தற்போது பொம்முவை நம்பினான். அவன் சிரிப்பை கண்ட பொம்மு சந்தோஷத்தி;ல் துள்ளி குதித்தாள்.

"அரவிந்த் எனக்கு இங்கே உன் வீட்டில் இருக்க அனுமதி குடுப்பியா?" என்றது பொம்மு.

"கண்டிப்பா... ஆனா நீ ஒரு உயிர் உள்ள பொம்மைங்கறது

ஏமாற்றுவதற்காகவாவது
யாராவது என்னை காதலியுங்கள்,
இல்லையென்றால்
காதலில் ஏமாறுவது
எப்படி என்றுகூட
எனக்கு தெரியாமல் போய்விடும்.
காத்திருக்கிறேன்
யாரையும் ஏமாற்ற தெரியாமல்...

செ.சக்கரவர்த்தி

என்னை தவிர யாருக்கும் தெரியக் கூடாது.."என்று மெல்ல கூறினான் அரவிந்த்.

பொம்மு நன்கு தலையை அசைத்தது.

"சரி இப்போ நாம தூஙுற நேரம் வந்திடுச்சு! போய் தூங்கலாம் வா!"என்று அரவிந்த் தன் படுக்கைக்கு சென்று படுத்தான்.

பொம்மு துள்ளி குதித்தபடி மேஜை பக்கம் சென்று மேஜை மேல் ஏறி அமர்ந்தாள். அவளுக்கு அமர்ந்தபடி தொங்கி பழக்கம் ஆகிவிட்டது.

அரவிந்த் ஆச்சர்யமாக பொம்முவை பார்த்தபடி படுத்துக் கொண்டிருந்தான்.

"சரி..எனக்கு சாக்குலேட்களை வாங்க உனக்கு ஏது காசு?"என்று கேட்டான் அரவிந்த்.

"அதுவா..உன் தம்பி சஞ்சயோட உண்டியலை உடைச்சது நான்தான். அப்பப்பா...அதுக்கப்புறம் அவன் அழுகலை கேட்டு எனக்கு தலைவலியே வந்துடுச்சு...பாவம் உன் அம்மா " என்று கண்களை மூடியபடி கூறியது பொம்மு.

அரவிந்த் பொம்மு சொன்னதை கேட்டு சிரித்தபடி தூக்கத்திற்கு சென்றான்.

அரவிந்தும் பொம்முவும் அன்றிலிருந்து ரகசிய நண்பர்கள் ஆனார்கள். போம்முவுடன் அரவிந்த் வெளியே சுற்றினான். புதுப் புது விஷயங்களை அவளுக்கு சொல்லிக் குடுத்தான். பொம்முவும் அரவிந்திடம் மிகவும் நட்புடன் இருந்தால். அனால் பொம்முவின் குறும்புக்கு மட்டும் எல்லையே இல்லை.

நபர்1: டேய் நீ நல்லாத்தானே பைக் ஓட்டுவ
அப்புறம் எப்படி கீழே விழுந்த டா?
நபர்2: போலீசை பார்த்த உடனே, என் பின்னாடி
இருந்த அருமை நண்பன்கிட்ட ஹெல்மெட்டை
தலையில கவுத்த சொன்னேன், படுபாவி
ஹெல்மெட்டை அப்படியே திருப்பி
மாட்டிட்டான்டா.

அன்று அரவிந்த் இன்னொரு தேர்வு வந்தது. அரவிந்த் தேர்வறையில் எழுதிக் கொண்டிருந்தான். தேர்வரை மிகவும் அமைதியாக இருந்தது.

# வருட வழி(விழை)யும் மனதின் துளிகள்! - 2

சுந்தரேசன் புருஷோத்தமன்

**யாதும் ஒன்றே!**



தழல்
தகிக்கும் வெயில்
உலை
உச்சிக் கதிரவன்
உருக்கின பொன்
கோபத்தில் அவள் கண்!


**ரசவாதம்!**



இறுக்கும் உணர்வுகளால்
இறுகிப் போனதுள்ளம் – அது
எத்தனை முயன்றாலும்
சிரிக்க மறுக்கும்!
சிரிக்க மறுத்தாலும்
கண்ணே உன் மென்சிரிப்பால்,

பட்டெனச் சிறைப்பட்டுச்
சட்டெனச் சிரிக்கிறதே?!

**மயக்க(கு)ம்!**



காடு மேடெல்லாம்
கடந்தோடுகிறேன்!
கல்லையும் முள்ளையும்
கடந்தோடுகிறேன்!
சீறும் ஆழியைக் கடந்தோடுகிறேன்! - என்
சின்னக் குழந்தையின் கன்னக் குழியினில்
கால் தடுமாறிநான் விழுகின்றேனடி!!

**முத்தம் முத்தமே!!**



மாட்டேன் என்றாள்!
வேண்டும் என்றேன்!
முறைத்தாள்!
சிரித்தேன்!
போவென் றதட்டினாள்!
புலம்பத் துவங்கினேன்!
விரும்பி நான் தர 'யார் நீ'
என்றாள்!
"நக்கீரன்!"
"என்ன? எப்படி?" என்னிடம் வினவினாள்!
"குட்டிக் கருவிழி என்னை முறைப்பினும் –உன்
கமல வாயிதழ்க் கடிந்தபோதிலும் - உன்
பட்டு மேனியென் தோள்பட மறுப்பினும்
வேண்டும் எனக்குன் முத்தம் முத்தமே!"
சொன்னதும் சிரித்தாள்!
கேட்டது கிடைத்தது!!

"ஸ்...ஸ்..."என்று யாரோ அரவிந்தை ஜன்னல் வழியாக கூப்பிட்டனர். அரவிந்த் சட்டென அங்கே திரும்பி பார்க்க பொம்மு ஜன்னல் கம்பியை பிடிது தொங்கியபடி சிரித்துக் கொண்டிருந்தாள். அரவிந்த் சற்று பதறினான். ஆனால் தேர்வாசிரியருக்கு தெரியாமல் மெல்ல பேச நினைத்தான்.

மகன் ; அம்மா எனக்கு பல் ஆடுது ....???

தாய் : எத்தனை முறை சொன்னேன் இயர்போன் வைத்து பாட்டு
கேக்காதே கேக்காதே என்று ,,,!!!
பார்த்தியா பல் ஆடுது ...!!!

மகன் ;..???

கே இனியவன்

"ஏய் பொம்மு...எப்பிடி ஸ்சூலுக்கு வந்த?"என்று மெல்ல அரவிந்த் கூறினான்.

"உன் ஸ்கூல் பையில்தான் ஒளிஞ்சிகிட்டு இருந்தேன்...."என்று பொம்முவும் மெல்ல பதிலளித்தாள்.

"சரி..சரி..இங்கிருந்து போ...நான் எக்ஸாம் முடிஞ்சு உன்ன வந்து பாக்குறேன்!"என்றான் அரவிந்த்.

"நான் போய்டுவேன்...நீ முதல எக்ஸாம் எழுது!"என்றது பொம்மு.

அரவிந்த் மீண்டும் தேர்வு எழுத ஆரம்பித்தான். பொம்மு தேர்வறையில் நடப்பவைகளை கவனித்துக் கொண்டிருந்தாள்.

அரவிந்திடம் எப்போதும் பிரச்சனை செய்யும் சிறுவன் அன்பரசு , ஏதோ ஒரு துண்டு காகிதத்தை பார்த்து எழுதிக் கொண்டிருப்பதை கண்டாள் பொம்மு. அன்பரசும் அவன் நண்பர்கள் பரிட்சையை ஏமாற்றி எழுதுவதை அறிந்த பொம்மு அவர்களுக்கு ஒரு பாடம் புகட்ட முடிவு செய்தாள்.

தொடரும்





# இனி ஒரு விதி செய்வோம் ..!!!

சுதா

சுயநல வாரிசுகளால்
உதிரத்திலே வளர்த்து
நெஞ்சிலே சுமந்த
தெய்வங்களெல்லாம் தெருவிலே..!!

◆◆◆

தொப்புள் கொடியோடு உறவையும்
அறுக்கும் மிருகங்களால் நாளை
பூத்து பூங்காவனமாகும்
மழலைகளெல்லாம் குப்பையிலே.. !!

◆◆◆

புறத்திலே புன்னகையும்
அகத்திலே அழுக்குமான
உறவுகளால் மன
நோயாளிகளெல்லாம் வீதியிலே..!!

◆◆◆

நாளுக்கு நாள் வீதிக்கு வீதி
இவர்கள் படும் இன்னல்களை
ஆயிரம் ஆயிரம் சொல்லி மாளாது.. !!

◆◆◆

விதியினாலே பட்டுப்போன இந்த
மரங்களெல்லாம் பசியெனும்
அரக்கனின் பசியாற்ற
கையேந்துகிறது சாலையெங்கிலும் !!

◆◆◆

ஆடையின்றி கந்தலும் கிழிசலுமாய்
பிறந்த மேனியுடன்
அரவணைக்க யாருமின்றி
வலம் வருகிறார்கள் தேசமெங்கிலும்..!!

◆◆◆

பசிக்கு யாசிப்போரை
வயிற்றில் அடிக்கின்றார்கள்
மன நோய் மங்கையவளின்
கற்பை பறிக்கிறார்கள்..!!

◆◆◆

உறங்க இடமும் போர்வையுமின்றி.
மணக்க வேண்டிய இம்மலர்கள்
இறுதியில் மாண்டு போகின்றன
சாக்கடையிலும் சந்துகளிலும்..!!
இனி ஒரு விதி செய்வோம்

◆◆◆

யாரோ விதைத்த இவ்விதைகள்
நாதியற்றுக் கிடக்கின்றன நாடெங்கிலும்
கண்டும் காணாமல் போகாதீர்கள்
பக்குவமாய் பேசி அவர்களை
சேர்த்திடுங்கள் காப்பகத்தில்..!!

இனி ஒரு விதி செய்வோம்

◆◆◆

# உறவைத் தேடும் உயிர்

Sivaji dhasan




**தேடல் - 14**

தன்னை மறந்திருந்த மயக்கத்தில் கேட்ட இனிய இன்னிசையின் மடியில் தவழ்ந்திருந்த வசந்தன் விழித்தபோது எதிரே கண்ட காட்சி திடுக்கிட வைத்தாலும் அவனை ஆச்சர்யப்படவைத்தது. ஓல்ட்மன் கூறிய இளவரசி அவன் முன்னே புன்சிரிப்போடு அமர்ந்திருந்தாள். அவளது விழிகள் இரண்டும் மீன்களாகத் தெரிந்தன; கார்கூந்தல் தென்றலில் தவழ்ந்து குழல்கள் அவள் நெற்றியில் விளையாடிக்கொண்டிருந்தன. வசந்தன் பிரம்மை பிடித்தவனாய் எழுந்து உட்கார்ந்து அவளின் முகத்தையே கூர்மையாக நோக்கினான். அவர்கள் இருவருக்குள்ளும் மௌனம் சூழ்ந்து அமைதியை ஏற்படுத்தியது. ஒரு நாழிகை இப்படியே கடந்ததும் வசந்தனே பேச்சைத் துவங்கினான்.

"இளவரசி தானே நீங்கள்?"

அவளின் இதழ் புன்னகைப்பூவை உதிர்த்தபடியே இருந்தது. "எல்லோரும் அப்படித்தான் ஒரு காலத்தில் என்னை அழைத்தார்கள்" என்றாள் அவள். அதைக் கூறியபோது குரலில் சிறிது சோகம் ஒளிந்திருந்ததைக் கவனிக்கவே செய்தான் வசந்தன். மீண்டும் அவள் முகத்தின் அழகையும் அந்த அழகில் மறைந்திருந்த பனித்திரை போன்ற சோகத்தையும் இமைக்காமல் நோக்கிக்கொண்டிருந்தான் அவன். அவளின் சலனமில்லா முகத்தையும், அமைதி கலந்த புன்னகையையும் நாள் முழுக்க ரசித்துக்கொண்டே இருக்கலாம் என்று தோன்றியது அவனுக்கு. அவளின் காந்த விழிகள் வேறு பக்கம் வெறித்தபடி இருந்தன.

திடீரென்று கடலினுள் சில நீர்க்குமிழிகள் தோன்ற ஆரம்பித்தன. தண்ணீராலான செடி கடலினில் முளைக்கத் துவங்கியது. நீர்த் துளிகளான கொடிகள் கடலெங்கும் பரவ பால் நிலவின் வெண்ணிறக்கதிர்கள் செடிகளின் மேல் ஊடுருவி ஒரு புதிய வண்ணத்தைச் செடிகளின் மீது தீட்டியது. அதில் நீர்ப்பழங்கள் பன்னீர் முத்துக்களுடன் முளைத்தன. அவளை நோக்கிக் கொடி ஒன்று படர்ந்து அவளின் முன் ஒரு பழத்தை நீட்டியது. அதை அவள் ஆர்வமுடன் பறித்துச் சாப்பிடத் துவங்கினாள். உண்டு கொண்டிருக்கும் சமயம் செடியிடம் சமிக்ஞை செய்தாள். அந்தக் கொடி வசந்தனை நோக்கிச் சென்றது. வசந்தன் புரியாமல் விழித்தான். சிறிது பயப்படவும் செய்து ஒதுங்கவும் முற்பட்டான். மீண்டும் கொடியில் ஒரு நீர்ப்பழம் தோன்றியது. அதைப் பறித்துக்கொள்ளுமாறு லேசாக அசைந்தது. வசந்தன் பயந்தபடியே அதைப் பறித்தான். செடி அவர்களை விட்டு மறைந்துபோனது. கையிலிருக்கும் நீர்ப் பழத்தைச் சில நிமிடங்கள் உற்றுநோக்கினான். அதிலிருந்து அற்புத வாசம் அவன் நாசியில் நுழைந்து பழத்தைச் சுவைக்கும்படி கூறியது. அவளைப் பார்த்தபடி பழத்தைக் கடித்தான். புளிப்பும் இனிப்பும் கலந்த சுவையாக இருந்தது. விரும்பிச் சாப்பிடத் துவங்கினான். 'இவளிடம் அற்புத சக்தி ஒளிந்திருக்கிறது' என்று மனதினில் கூறிக்கொண்டான். 'தன் நிலைமையைக் கூறி இவளிடம் உதவி கேட்கலாமா' என்று எண்ணியபடி பழத்தைச் சுவைத்துக்கொண்டிருந்தான்.

அவள் கடற்பரப்பைச் சுற்றி நோக்கியவாறே, "என்னிடம் ஏதேனும் கூற விழைகிறீர்களா?" என்றாள்.

தான் மனதினில் எண்ணியதைத் தெரிந்துகொண்டாளே என்று சற்று பிரம்மிப்பை விழிகளில் காட்டி, "உங்கள் பெயர் என்ன?" என்றான்.

## கேளாய் பெண்ணே !!

கார்த்திகா AK



என் ராகத்தில்
உன் பாடல் இசைக்கிறாய்
நீ!!

என் வானத் திரையில்
வானவில் வரைகிறாய் நீ ,
ஒரு தூரிகையாய் !!

என்னைச் சுற்றிய
காரிருள் விலக்க வந்த
பொன் மஞ்சளில்
குழைத்து எடுத்த
தங்கத் தாரகை நீயே !!

என் செய்கைகள் ஆனால்
உன் உணர்வுகள் !!

என் இதய ஓசை
கேளாய் நீ !அங்கே உன்
ஸ்வரங்கள் சப்திக்கின்றன
ஓர் உயிரின் ஓசையென!!

அவளிடம் சில வினாடிகள் மௌனம். "அபர்ணா" என்றாள்.

"அழகான பெயர்" என்றபடி புன்னகை புரிந்து, "நீங்கள் என்னிடம் கொடுத்த வேலையைச் சரியாக முடித்துவிட்டேன்" என்றான்.

"தெரியும்"

"எப்படி?"

"ஓல்ட்மன் சொன்னார்"

## தேர்தலும் தமிழ் காலச்சாரமும்

தமிழ்நதி

தமிழர் பண்பாடு மாறிப்போச்சு
வேட்டி, சேலையெல்லாம் இப்போ குறைத்து
காணப்போச்சு...
சில பெண்களுக்கு தலைவார
மறந்துப் போச்சு
பல ஆண்களுக்கு முடி வளர்க்க பிடிச்சுப் போச்சு

கண்ணாடி வளையல் உடைச்சுப் போச்சு
காணத கருமம் எல்லாம் வந்துடுச்சி..
குங்குமம் பொட்டும்,
பூவும் எங்கப் போச்சு??
ஸிடிக்கர் பொட்டும், பிளாஸ்டிக்கு பூவிலும்
ஒழிச்சுப் போச்சு

வார் செருப்பு என்ன ஆச்சு???
ஹய் ஹில்ஸ்க்கு விலைப்போச்சு
துணி வாங்கி கிழிச்சி தைத்த காலம் போச்சு..
கிழிச்ச துணி வாங்கி மாட்டும் மார்டன் ஆச்சு..

டீக்கடை பென்ச் எங்கப் போச்சு???
பல காப்பி ஷாப்புக்கு கன்வெர்ட் ஆச்சு..
விலை வாசி எல்லாம் ஏறிப்போச்சு
காசு, பணம், துட்டு பத்தாமால் போச்சு

நான் பஸ் பாஸ் எடுக்க கொஞ்சம்
நேரம் ஆச்சு...
அதுக்குள்ள் 600 ரூபாய் பாஸ் 1000 ம் ஆச்சு..
அட ஷேர் ஆட்டோவில் போக முடிவு பண்ணியாச்சி
நான் போகும் நேரம் பார்த்து பெட்ரோல் டீசல் விலை
உச்சிக்குப் போச்சு
ஆட்டோ கட்டணமும் அதிகம் ஆச்சு

கேரட் விலை கோல்டு கேரட்டுக்கு
நிகராட்ச்சி
சிலிடர் வருடம் 7 அப்படினு
அக்கிமண்ட் போட்டாச்சு

இடையில மாறுதல்
நடக்குமா??
நடக்காத என்று தெரிவதற்க்குள்
இடைத் தேர்தல் வந்தாச்சு..

யார் யாரோ ஆட்சி பிடிக்க மக்கள் கிட்ட போயாச்சி
என் தாத்தேன் பாட்டேன்
ஓட்டையெல்லாம் காசு கொடுத்து சில கட்சி
வாங்கியாச்சு

ஓட்டையும் வித்துப்புட்டு
ஓட்டாட்டியா
நிக்குதடா
இந்த பழாப் போன மக்கள் கூட்டத்துக்கு
சுய புத்தி தான் மக்கிப் போனதுடா....

**என் ஓட்டு விற்பனைக்கு அல்ல**

"என் நிலையைப் பற்றியும் கூறினாரா?" என்று தன் நிலையை உணர்த்துவதற்காக துன்பச்சிரிப்பை உதடுகளில் உலவவிட்டான்.

அவள் அவனின் முகத்தில் தன் சலனமில்லாப் பார்வையை நிலைநாட்டினாள். "உங்கள் நினைவுகள் அழிந்துபோனதைப் பற்றி கேட்கப்போகிறீர்களா? அல்லது உங்கள் தோழி எங்கிருக்கிறாள்? என்று கேட்கப்போகிறீர்களா?" என்றாள்.

வசந்தனுக்கு மயக்கமே வந்துவிட்டது. 'எப்படி நான் கேட்கப்போவதை உடனே கண்டுகொள்கிறாள்?' என்று மீண்டும் தனக்குள் கேட்டுக்கொண்டான். "உங்களால் உதவ முடியுமா?" என்றான் அவன் உதவி கோரும் குரலில்.

"நிச்சயமாக. ஆனால் அதற்குள் சில வேலைகளை எனக்காக நீ செய்ய வேண்டும்"

"என் குழப்பத்திற்கு விடை கிடைக்குமானால் எது வேண்டுமானாலும் நான் செய்கிறேன்" .

வசந்தன் கூறிய பதிலைப் புன்னகையோடு ஏற்றுக்கொண்டாள்.

"சாதாரண வேலையாக இருக்கும் என்று எண்ணிவிடாதே. துன்பங்கள் நிறைந்த வேலை. அதில் உறுதி வேண்டும். பலவீனமாக இருக்கிறாய் நீ. முதலில் உன்னைத் தயார் செய்துகொள். நீ தயாரானதும் நானே உன்னைத் தேடி வருவேன்"

*உனக்கு ஒருநாள்,*
*உலகத்தில்*
*ஒன்றுமட்டுமே தெரியும்.*

*அந்த ஒன்றை கண்டபின்,*
*ஒன்றுகூட உனக்கு தெரியாது.*
*அதன் பெயர் "காதல்".*

செ.சக்கரவர்த்தி

"நீங்கள் சொல்வது விளங்கவில்லையே?"

"விளங்கும் நேரம் வரும் வரை பொறுத்திரு"

குழப்பத்தோடு, "சரி" என்று தலையாட்டினான்.

"எனக்கொரு நீர்ப்பழம் வேண்டும். உன்னால் அதை வரவழைத்துக் கொடுக்கமுடியுமா?" என்றாள்.

வசந்தன் விழித்தான். "நானா? என்னிடம் அவற்றை வரவழைக்கும் சக்தி இல்லையே" என்று வேதனை கலந்த சிரிப்பை வீசினான்.

"நிச்சயமாக உன்னால் முடியும். மனதினில் நினைத்து அதைக் கூப்பிட்டால் உன்னைத் தேடி வரும்"

"விளையாடாதீர்கள்" என்றான் அவன் கேலிச் சிரிப்போடு.

"முயன்று பார்" என்றாள்.

பெருமூச்சை விட்டெறிந்தபடி, நீர்ப்பழம் வரவேண்டும் என்று சில வினாடிகள் மனதினில் வேண்டி சுற்றும் முற்றும் பார்த்தான். கொடிகளும் முளைக்கவில்லை. நீர்ப்பழமும் தோன்றவில்லை.

"நீங்களே பார்த்தீர்கள் அல்லவா?" என்று அபர்ணாவைப் பார்த்து கூறினான்.

"சரி, புறப்படு. கடலைச் சுற்றிப் பார்க்கலாம்" என்றாள் அவள்

வசந்தன் அவளை ஒரு முறை நோக்கிவிட்டு, மரக்கலத்திற்கு கட்டளையிட்டான். மரக்கலமும் வேகமாக நகரத் துவங்கியது. மரக்கலத்தின் ஓரம் உட்கார்ந்துகொண்டு கடலை வெறித்தாள். மரக்கலம் சிறிது தூரம் சென்றுகொண்டிருந்த சமயத்தில் கடலினுள் நீர்க் குமிழிகள் தோன்றி நீர்ச் செடிகள் முளைக்கத் துவங்கின. மரக்கலத்தை நோக்கி வேகமாகப் படர்ந்து வந்தன. அவளருகே ஒரு பழத்தை நீட்டின. அதை அவள் பறித்துக்கொண்டு மரக்கலத்தைச் செலுத்திக்கொண்டிருக்கும் வசந்தனைப் புதிரான சிரிப்போடு நோக்கினாள்.

அப்பொழுது தூரத்திலிருந்து ஒரு குரல் வசந்தனை நோக்கிப் பறந்து வந்தது. "வசந்தா! வசந்தா!" என்று இரு முறை கத்திக் கூப்பிட்டது அந்தக் குரல். வசந்தனும் அபர்ணாவும் யாரென்று பார்த்தார்கள். தூரத்தில் ராஜீவ் வசந்தனை நோக்கி வந்துகொண்டிருப்பது தெரிந்தது. அதைக் கண்டவுடன் அபர்ணா தண்ணீரில் குதித்து மீனாக உருப்பெற்று நீந்தி மறைந்தாள்.

## என் தேடல்...

pandima

என் தேடலும் என் காலமும்
என் கூடவே போட்டியிட்டு
பயணிப்பதால் என் பயணம்
தொடர்கிறது ...

இன்றும் சலியாமல் தளராது
தொடரும் என் வாழ்வானது
ஒரு நாள் நின்று போய்விடும்
என் தேடலும் ...

வலிக்கா நிமிடங்கள் என்னை
கடக்கும் தருணமதில் விழிகள்
இமைக்காமல் இறந்திருக்கும்
ஈரம் கசியாது ...

என் இதயமதில் பொதிந்திட்ட
நீங்கா நினைவுகள் எல்லாம்
உலரும் முன் எரிந்திடுவேன்
ஜுவலையாகி

ராஜீவின் வருகை வசந்தனின் உள்ளத்தில் இன்பத்தைக் கூட்டியது. ராஜீவை நோக்கி 'இங்கு வா' என்பது போல் கையாட்டினான். ராஜீவின் படகும் வசந்தனின் படகின் அருகில் வந்தது. வசந்தன் தன் நண்பனின் படகையும் தன் படகையும் ஒரு கயிற்றில் கட்டி, ராஜீவைத் தன் படகில் வருமாறு பணித்தான்.

ராஜீவ் வசந்தனின் மரக்கலத்தினுள் இறங்கி, பொய்யான கோபத்தை முகத்தில் வரவைத்து, "எங்கே சென்றாய் நீ? நேற்றெல்லாம் உன்னைக் காணவில்லையே" என்றான்.

## அனைத்தும் நானாகி இருக்கிறேன்

செந்தமிழ் தாசன்




*அணியும் யாப்பும் கொண்டு
பாவகையாலும் இலக்கணம்
கண்டு பாடிச்சிறப்பித்த
கவிதைகள் நான்...*

*செய்யுள் வழக்கை சொல்வழக்காய்
மாற்றியெனை எளிமையுறத் தந்த
உரையாசிரியர்கள் திறத்தால்
எல்லோருக்கும் புரிந்தவன் நான்...*

*காலச் சுழற்சியில்
வசனநடைக் கவியாகி
புதுக்கவிதைகளாய் பரிமாணமித்தவன் நான்...*

*தெளிபொருளாய் நின்றும்
மறைபொருளாய் உற்றறிப்பட்டுக்
காணும் வகையாய்
கவிஞனின் எண்ணங்களில் தோன்றி
அவன் கரங்களில் கட்டுண்டேன்...*

*சமுதாயமென பெண்ணியமென ஈழமென
துயர்கண்டு துவேசம் கொண்டேன்
நவரசமென வடிவம் கண்டேன்...*

*கண்டோரும் கொண்டோரும்
எனை விழுங்கிச் சென்றனர்
அவர்கள் மழுங்காமல் இருக்க
ஆறுதலாய் நின்றேன்...*

*நித்தம் அரங்கேறும் கவிதைநாயகி
நான்தான்
கவிஞன் சித்தத்தில் காதலியும்
நான்தான்...*

*எனைத் தாண்டிச் செல்வோர் பலர்
தட்டிக் கொடுப்போர் பலர்
ஆரத் தழுவிக் கொள்வோர் பலர்
அனைவருக்கும்
வலியும் சுமையும் விடையும்
மகிழ்வும் நெகிழ்மாகி
அனைத்தும் நானாகி இருக்கிறேன்....*

"ஒரு முக்கிய வேலை வந்துவிட்டது. அதை நிறைவேற்றச் சென்றிருந்தேன்" என்று கூறியபடி அபர்ணா உட்கார்ந்திருந்த

இடத்தில கண்களை ஓட்டினான். அங்கு அபர்ணா இல்லாததைப் பார்த்து திடுக்கிட்டு கடலின் நான்கு திசைகளிலும் தேடுதல் பார்வையை வீசினான்.

"என்ன தேடுகிறாய்?" என்றான் ராஜீவ்.

சில வினாடிகள் தேடுதல் பார்வையை வீசியபடியே ராஜீவைப் பார்க்காமல், "ஒன்றுமில்லை" என்று கூறினான்.

"உன்னிடம் ஒன்று கேட்கவேண்டும்" என்றான் ராஜீவ்.

வசந்தன் மரக்கலத்தைச் செலுத்தியபடியே அவனைப் பார்த்து, 'என்ன கேட்கப்போகிறாய்' என்பதைப் போன்ற பாவத்தோடு ராஜீவை நோக்கினான்.

"நீ மெமோரியல் உலகிற்குள் நுழைந்தாயா?" என்று கேட்டான் ராஜீவ்.

"யார் சொன்னது அப்படி?"

"ஷோபனா தான் கூறினாள்"

ஆமாம் என்பது போன்று தலையசைத்தான் வசந்தன்.

"யார் கண்ணிற்குள் புலப்படாத அந்த உலகம் உன் கண்ணிற்கு எப்படி தென்பட்டது?" என்று புதிரான பார்வையோடு கேட்டான் ராஜீவ்.

"எனக்கே விளங்கவில்லை மர்மமாக உள்ளது"

"மெமோரியல் உலகத்தைப் பற்றிக் கூறு. இது வரை நான் பார்த்ததுமில்லை அதைப் பற்றிக் கேட்டதுமில்லை" என்று ஆவலோடு கேட்டான் ராஜீவ்.

வசந்தன், மெமோரியல் உலகின் அழகையும் தான் கண்ட காட்சிகளையும் அவனிடம் விளக்கினான். ஆனால், தான் சந்தித்த ஆபத்தையும் அபர்ணாவையும் ஓல்ட்மனிடம் அவள் கொடுக்கச் சொன்ன தங்கப்பெட்டியைப் பற்றியும் மறைத்துவிட்டான் வசந்தன்.

*டாக்டர் : ஏனப்பா ஆம்புலன்சில போய் மோதின ?*

*நோயாளி : அப்பதானே டாக்டர் வேகமா ஆஸ்பத்திரி*
*வரலாம் ஃபிக் ஜாம் இருக்காதே ...!!!*

ஜே இனியவன்

மெமோரியல் உலகின் பிரம்மாண்டத்தையும் அழகையும் கற்பனை செய்து சிலாகித்தான் ராஜீவ். அதை ஒரு முறையேனும் தான் காணமாட்டோமா என்று ஏங்கினான். மரக்கலம் அவர்களை எங்கோ அழைத்துச் சென்றுகொண்டிருந்தது. இருவரும் மௌனமாகவே இருந்தார்கள். 'அபர்ணா திடீரென்று ஏன் மறைந்துபோனாள்' என்ற குழப்பத்தோடு இருந்த வசந்தனையும் மெமோரியல் உலகின் கற்பனையில் திளைத்திருந்த ராஜீவையும் சுமந்துகொண்டு சென்றுகொண்டிருந்த படகை மீன் வடிவில் அபர்ணா பின்தொடர்ந்ததை அவர்கள் கவனிக்கவில்லை.

★ ★ ★

மரக்கலம் எங்கு செல்கிறது என்று கூட தெரியாமல் இருவரும் மெய்மறந்து தங்கள் கற்பனையில் மிதந்திருந்த நேரத்தில் ஒரு அபாயகரமான காட்சியைக் கண்டான் வசந்தன். கடலின் நடுவே சிதலமடைந்த பிரம்மாண்ட கடற்கோட்டை. அதன்

## ஒரு தாயின் அறைகூவல்...

செ.சக்கரவர்த்தி

*ஒரு தாயின் அறைகூவல்*
*அறைகளற்ற வெட்டவெளியில்*
*எல்லா மகன்களையும் குறைகூறவில்லை*
*என்மகனைப்போல் உள்ளவனைத்தவிர*
*ஓர் தாயின் உள்ளார்ந்த சபதம்*
*மகனே! எங்கிருந்தாலும் வாழ்க நீ!*

*இதயத்தில் நீ குத்தினாலும்*
*உன் கரங்களையே பார்ப்பேன்*
*என்னை நீ குத்தியதால்*
*உன் கரங்கள் வலிக்குமோவென*

*அன்று என்னுள்ளே நீயிருந்தாய் தனியாக*
*இன்று என்னைத் தனியேவைக்க நீ துணிந்தாய்*
*மோகம் உனக்கு மூச்சடைக்க*
*தேகம்தந்த தாயையே மறந்துவிட்டாய்*

*தென்றல் உன்னை தீண்டிவிட்டால்*
*தெருநோய்கள் தாக்குமோவென*
*மாரணைப்பில் மறைத்துவைத்து உன்னை*
*மறவாது தினம் காத்துவந்தேன்*
*அத்தனையும் உனக்கு செய்துவைத்த*
*அன்புத்தாயை ஏன் மறந்துவிட்டாய்*

*பெண்மகளை பெற்றிருந்தால்*
*பேச்சிற்காவது துணைவருவாள்*
*ஆண்மகனை பெற்றுவிட்டேன்*
*அழுதுதானே ஆகவேண்டும்.*

*சிவசிவ என்றிருந்தால்*
*அவனருள் கிடைத்திருக்கும்*
*மகன்மகன் என்றிருந்தேன்*
*மறந்துவிட்டு சென்றுவிட்டான்.*

*ஏசுநாமம் கேட்டிருந்தால்*
*எல்லாமே கிடைத்திருக்கும்*
*என்மகன்போதும் என்றிருந்தேன்*
*ஏமாற்றிச் சென்றுவிட்டான்.*

*அல்லாவை தொழுதிருந்தால்*
*அல்லலின்றி வாழ்ந்திருப்பேன்*
*அன்புமகன் காப்பான் என்றிருந்தேன்*
*அனாதை ஆக்கிவிட்டுச் சென்றுவிட்டான்.*

*கோயில்குளம் சுற்றிவந்து*
*குழந்தையாக பெற்றெடுத்து*
*கொள்ளிவைக்க வேண்டுமென்று*
*கூறிக்கூறி வளர்த்தாலும்*
*தள்ளிவைக்க நினைக்கிறானேதவிர*
*மூப்பின் தாகம்தீர்க்க மறுக்கிறான்.*

மேல் கொடூர பறவைகள் வட்டமிட்டுக்கொண்டிருந்தன. கோட்டையைச் சுற்றி செடி கொடிகள் அழுகிய நிலையில் படர்ந்துகொண்டிருந்தன.

"ராஜீவ் இதைக் கண்டாயா?" என்றான் வசந்தன் மிதமிஞ்சிய பிரம்மிப்புடன்.

வசந்தன் எந்தத் திசையில் வெறித்துக்கொண்டிருந்தானோ அத்திசையில் தன் பார்வையைப் பதித்தான் ராஜீவ். ஆனால்,

அவன் கண்களுக்கு எதுவும் தென்படவில்லை.

"இங்கே என்ன இருக்கிறது கண்டுகளிக்க?" என்றான் ராஜீவ்.

"உன் பார்வையில் என்ன கோளாறா? எதிரே நின்றிருக்கும் கோட்டை கூட உன் கண்களுக்கு புலப்படவில்லையா?"

தன்னை ஏளனம் செய்கிறான் என்று எண்ணிய ராஜீவ், "ஆமாம்! ஆமாம்! இருக்கிறது! இருக்கிறது!" என்று சொன்னான்.

அதைக் காதில் வாங்கிக்கொள்ளாமல் அந்த கோட்டையின் நடுவே தன் மரக்கலத்தைச் செலுத்தினான் வசந்தன். சிதலமடைந்த கோட்டையின் நடுவே மரக்கலம் சென்றுகொண்டிருக்க அதன் உட்புற அழகைத் தன்னிலையிழந்து ரசித்துக்கொண்டிருந்தான் வசந்தன். ராஜீவ் அவனைக் கண்டுகொள்ளாமல் மரக்கலத்திலேயே படுத்து நீண்ட நெடு உறக்கத்திற்கு சென்றுவிட்டிருந்தான்.

கருநிற கற்களால் அமைக்கப்பட்டிருந்த அந்த கோட்டையின் உள்ளே படகு செல்ல செல்ல மேலே இருக்கும் பால் நிலா அவர்களைத் தொடர்ந்துகொண்டு வந்தது. அங்கே அழுகிய வாசம் அவனை இருப்புக்கொள்ளாமல் ஒரு வித மயக்கநிலையை அடையச் செய்தது. ஏதோ ஒரு தீயது இங்கே உலவுகின்றது என்று அவன் மனம் கூறியது.

*படித்தும் பிச்சை எடுக்கிறேன்..*
*Target achievement ல் தான்*
*மாத சம்பளம் நிர்ணயம்*
*செய்யப்படுகிறது..*

*நான் படித்த பிச்சைக்காரண்*

*இப்படிக்கு*

*தமிழரசி*

மரக்கலத்தை வேகமாகச் செல்லுமாறு கட்டளையிட்டான். ஆனால், மரக்கலம் நகரவில்லை. என்ன நடக்கிறது என்று பயந்தபடியே சுற்றும் முற்றும் பார்த்தான். காரிருள் அந்த இடத்தை ஆக்கிரமிக்க வானிலிருந்து பறந்து வந்தது. அதில் ஓர் உருவம் அவர்களை நோக்கி வந்தது. பார்ப்பதற்கு வௌவால் போன்றிருந்த அந்த உருவத்தை வசந்தனால் பார்க்க முடியவில்லை. வசமாக சிக்கிக்கொண்டோம் என்று அவன் மனம் கூறியது.

அப்பொழுது அவர்கள் பின்னால் வந்துகொண்டிருந்த மீன் திமிங்கலமாக மாறி அவர்களின் மரக்கலத்தை இழுத்துச் செல்லத் துவங்கியது. வசந்தன் திமிங்கலத்தின் வேகத்தில் மரக்கலத்தில் நிற்க முடியாமல் கீழே விழுந்தான். பிறகு, சற்று சுதாரித்துக்கொண்டு திமிங்கலத்தை ஆச்சர்யத்தோடு நோக்கினான். பின்னால் திரும்பி அந்த மர்மக் கோட்டையை பயக்கண்களோடு பார்த்தான். அதில் இருள் முழுவதுமாக சூழ்ந்து கோட்டை மறைக்கப்பட்டிருந்தது. 'தப்பித்தோம்' என்று பெருமூச்சை விடுவதற்குள் திமிங்கலம் மாயமாய் மறைந்திருந்தது.

நொடிப்பொழுதில் எல்லாம் நடந்து முடிந்து விட்டதால் தன்னை ஆசுவாசப்படுத்திக்கொள்ள கரையைத் தேடின அவனது கண்கள். தூரத்தில் பச்சைப் பசேலென்ற கரை அவனுக்குத் தென்பட்டது. காணாமல் போன திமிங்கலம் இருக்கிறதா என்று சுற்றி நோட்டமிட்டு தன் மரக்கலத்தை கரையை நோக்கி விரட்டினான்.

## அடுக்குமாடி

கிரேப்ஸ் மகேந்திரன்



*அடர்ந்த ஆலமரத்தில்*
*மூன்றாவது கிளையில்*
*அவசரமாய் காக்காய் கட்டிய கூடுபோல்*
*நான்காவது தளத்தில்*
*காலம்தள்ளும் அடுக்குமாடியாளன் நான்.*

*இடநெருக்கடியால்*
*அப்பாவை முதியோர் இல்லத்திலும்*
*வாகனத்தை படிக்கட்டு மறைவிலும்*
*குடியமர்த்தினேன்.*

*அலுவலகம் விட்டு*
*களைத்து படியேறி வருகையில்*
*பார்க்காமல் விட்டுப்போன*
*மெகாத்தொடர் குறித்து*
*கைப்பேசியில் விசாரித்து அழுதாள் மனைவி.*
*தொடரில் துக்கம் நிகழ்ந்திருக்ககூடும்.*

*"அடுக்குமாடி அவஸ்தை" என*
*காரணம் காட்டி*
*எப்போதோ தீர்ந்து போன*
*எண்ணெய் வாங்க என்னை*
*கடைக்கு விரட்டினாள்.*

*குழந்தைகளுக்கு படிப்பு*
*டியுசன் நேரம்போக*
*எப்போதாவது விளையாட வேண்டுமென்றால்*
*கடற்கரை கூட்டிப்போகிறேன்.*

*துணி உலர்த்த*
*காற்று வாங்க*
*வானம் பார்க்க*
*முற்றத்திற்கு பதில்*
*பால்கனி.*
*என்னைப்போல் புதிதாய்*
*நூறு பேரை சிறைபிடிக்க அருகில்*
*புதிய அடுக்குமாடிக்கு*
*அஸ்திவாரம் போட்டுள்ளனர்.*

***நெல் விளையும்***
***வயல்களாக வைத்திருந்தார்களாம்***
***ஒருகாலத்தில்!!***

இத்துணை நேரம் துயிலிலிருந்த ராஜீவ் லேசாக கண்களைத் திறந்து எழுந்தான். "நாம் எங்கே சென்றுகொண்டிருக்கிறோம்?" என்றான் தூக்க விழிகளோடு

வசந்தனைப் பார்த்துக் கேட்டான்.

வசந்தன் பதில் கூறாமல் கரையை வெறித்தபடி கிடந்தான். கரையை நெருங்க நெருங்க ஒரு கானம் அவனை இசை வெள்ளத்தில் மூழ்கச் செய்தது. 'தேனில் குழைத்த குரலை உடையவள் பாடுகிறாள். யாரவள்? இந்த குரலை நான் எங்கோ கேட்டிருக்கிறேனே!' என்று எண்ணிய அவனது சிந்தனையில் நொடிப்பொழுதில் விடை கிடைத்தது. 'ஆம்! ஆம்! நாம் மரக்கலத்தில் துயில்கொண்டிருந்த சமயம் ஒரு கானம் கேட்டதே!அதே கானம் போன்று இருக்கிறதே! குரலும் அதே குரல் தான்!' என்று எண்ணியபடி கரையை அடைந்தான். மரக்கலத்திலிருந்து குதித்து குரல் வந்த திசையை நோக்கி ஓடினான். அவன் பின்னால் ராஜீவும் ஓடினான். பாடல் ஒலித்துக்கொண்டேயிருந்தது. அதில் சோகமும் வாழ்க்கையின் வெறுப்பும் கலந்திருந்தன.

சிறிது நேரத்தில் பாடலுக்கு சொந்தக்காரி இருக்கும் இடத்தை அடைந்து விட்டிருந்தனர் இருவரும்.

வசந்தனின் முகத்தில் புன்சிரிப்பு துளிர்த்தது. ஷோபனா அவளோடு இருக்கும் குழந்தைக்கு தாலாட்டு பாடிக்கொண்டிருந்தாள். அவளின் அருகே சென்றான் வசந்தன்.

அவனைக் கண்டதும் பாடுவதை நிறுத்தி அவனை வெறித்தாள் ஷோபனா. ராஜீவையும் ஒரு நொடி நோக்கிவிட்டு, "என்ன இருவரும் இவ்விடத்திற்கு என்னைக் காண வந்துள்ளீர்கள்?" என்று வினவினாள்.

"உன்னைக் காண வரவில்லை. உன் பாடலைக் கேட்டு வந்தோம்" என்றான் ராஜீவ்.

ஷோபனா புன்முறுவல் செய்தாள். பின்னர் வசந்தனைப் பார்த்து, "மெமோரியல் உலகிலிருந்து தப்பித்துவிட்டீர்கள் போலிருக்கிறது" என்றாள்.

"ஆம்" என்று ஆமோதித்தான். அவனது கண்கள் அவள் தோளில் தவழ்ந்திருந்த குழந்தையின் மீதே இருந்தது. அக்குழந்தையும் அவனைப் பார்த்து மழலைச் சிரிப்பை உதிர்த்தது. குழந்தையை அவளிடமிருந்து வாங்கி கொஞ்சி மகிழ்ந்தான் வசந்தன்.

அப்பொழுது ஒரு பெண்ணின் குரல் அவர்களைத் திசை திருப்பியது. அபர்ணா அங்கே கையில் ஒரு சிறு பெட்டியோடு நின்றுகொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் வசந்தன், "வாருங்கள்! வாருங்கள்!" என்றான். ராஜீவிடமும் ஷொபனாவிடமும் தன்னுடைய தோழி என்று அறிமுகப்படுத்தினான்.

"உன்னுடைய தோழியைக் கண்டுபிடித்துவிட்டாயா? இவர் தானா அது?" என்று கேட்டான் ராஜீவ்.

வசந்தன், "இல்லை. இவர் வேறு" என்று சிரித்தபடி ஷோபனாவைப் பார்த்தான். அவள் முகத்தில் சிரிப்பு மறைந்திருந்தது.

"இந்தப் பெட்டி உங்களுக்குத் தேவைப்படும். இதை வைத்துக்கொள்ளுங்கள்" என்று கூறி வசந்தனிடம் பெட்டியை நீட்டினாள். அவனும் வாங்கிக்கொண்டான்.

அப்பொழுது குழந்தை நிலவை நோக்கிக் கை நீட்டி மழலை மொழியில் எதுவோ கூறியது.

## விலை மகள்.....

கனகீஸ்வரி



கண்ணீர் விழிகள் நான் கொண்டேன்
கரம் நீட்டிட யாருமில்லை.......
தினம் கட்டில் சுகம் காண்கின்றேன்
தொட்டில் கட்டும் யோகமில்லை....

நாளை அழுகிப் போகும் என் உடலுக்கு
அலங்காரங்கள் துளி குறைவில்லை......
சதைப் பற்றுடன் என் உடல் இருக்கும் வரை
சக்கரைக்கட்டியாய் இனிக்கின்றேன்.....

சாகசம் சொல்லிடும் வார்த்தைகள்
தாகம் குறைந்ததும் காணவில்லை.....
அழுக்கு உடை நான் அணிந்திருந்தாள்
துவைத்து கட்டிடும் வாய்ப்புண்டு....

எச்சில் பழமாய் நானிருக்க இனி
எதைக் கொண்டே அழுக்ககற்ற?....
ஒட்டி உரசி நீ போனாலும் என்
உடலில் ஏதும் சிலிர்ப்பில்லை.......

காவியம் சொல்லிடும் காதலெல்லாம்
அட காசுக்கிங்கே விலைபோகும்.....
தினம் கள்ளப் பார்வைகள் காணுகையில்
என் இதழோரம் இளநகையோடும்.....

உள்ளம் என்ற சொல்லெல்லாம் என்
உதட்டுக் எட்டா சொல்லன்றோ......
அட என்ன பாவம் செய்தேனோ...
உடலை விற்றே உயிர் வளர்க்க.....???

மானம் ஈனம் என்பதெல்லாம்
வயிற்றுப் பசிக்கு பின் தானோ?
மாத்திக் கட்ட உடையில்லை
மானம் காத்திட முயல்வதுவோ?

இந்த பிறவி போதுமடா நான்
இன்பம் தந்திடும் பெண்ணாக.....
அடுத்த பிறவியேனும் நான்
ஆண் மகனாய் பிறப்பெடுப்பேன்.....

# சமையல்: கூட்டாஞ்சோறு

லதா பாலு

**தேவையான பொருட்கள்**

சாப்பாடு அரிசி 2 ஆழாக்கு, துவரம் பருப்பு 1/2 ஆழாக்கு

**காய்கறிகள்:**

நன்கு முற்றிய வாழைக்காய் 1, கத்திரிக்காய் 1/4 கிலோ, அவரைக்காய்1/4 கிலோ, கொத்தவரங்காய் 1/4 கிலோ, முருங்கைக்காய் 1, அரைக்கீரை 1 சிறியகட்டு, முருங்கக்கீரை 1 கைப்பிடி அளவு, சிறிய வெங்காயம் 1/4 கிலோ, பச்சைமிளகாய் 4/5 புளி 1 பெரிய எலுமிச்சை அளவு.

**அரைக்க தேவையானவை:**

தேங்காய் 1/2 மூடி சிறியவெங்காயம் தோலுரித்தது 1 கைப்பிடி அளவு சீரகம் 1 டீஸ்பூன்

**தாளிக்க:**

கடுகு, உளுந்தம் பருப்பு, கறிவேப்பிலை, நல்லெண்ணை 2 குழிக்கரண்டி

உப்பு தேவைக்கேற்ப

**செய்முறை**

அரிசியை கழுவி சுத்தம் செய்து 6 டம்ளர் நீர் ஊற்றி, பருப்பில் 1/2 டம்ளர் நீர் ஊற்றி குக்கரில் வைத்து வேகவைத்துக் கொள்ளவும்

கீரைகளை கழுவி சுத்தம் செய்து பொடியாக அரிந்துகொள்ளவும். காய்கறிகளை கழுவி நீளவாக்கில் நறுக்கி [1 விரல் அளவுக்கு], வெங்காயம் பச்சை மிளகாய் அரிந்துவைத்துக் கொள்ளவும்.

அரைக்க கொடுத்துள்ள பொருட்களை மிக்ஸியில் போட்டு கொஞ்சம் கரகரப்பாக அரைத்துக்கொள்ளவும்.

புளியை 1 டம்ளர் அளவுக்கு கரைத்துக் கொள்ளவும்.

வாணலியை அடுப்பிலேற்றி சிறிது எண்ணை ஊற்றி காய்ந்ததும் வெங்காயம், பச்சை மிளகாயை போட்டு நன்கு வதக்கிக் கொண்டு குக்கரைத்திறந்து அதில் காய்கறிகள், அரைத்த விழுது புளிக்கரைசல் எல்லாவற்றையும் சேர்த்து தேவையான உப்பு, மஞ்சள்தூள், காய்ந்த மிளகாய்தூள் சிறிது பெருங்காயம் எல்லாம் போட்டு நன்கு கலந்து மீண்டும் குக்கரை அடுப்பில் வைத்து வெயிட் போட்டு 5 விசில் வரும் வரை வேகவைக்கவும்.

குக்கர் ஆறியதும் திறந்து நன்றாக கிளறி வாணலியில் 2 குழிக் கரண்டி எண்ணை ஊற்றி கடுகு உளுந்தம்பருப்பு, கறிவேப்பிலை தாளித்து சூடாக பரிமாறவும்.

வசந்தன் சிரித்தபடி, "நிலவிடம் போகவேண்டுமா? வா போகலாம்" என்று குழந்தையைத் தூக்கிக்கொண்டு சிறிது தூரம் முன்னே நடந்தான். அவனைப் பின்பற்றி ராஜீவும் சென்றான்.

ஷோபனாவும் அபர்ணாவும் அருகருகே நின்றுகொண்டிருந்தனர். குழந்தையைக் கொஞ்சிக்கொண்டிருந்த வசந்தனை நோக்கியபடியே அபர்ணா, "குழந்தை சேரவேண்டிய இடத்தில சேர்த்துவிட்டாய் போலிருக்கிறது?" என்று ஷோபனாவைப் பாராமல் கூறினாள். ஷோபனா விக்கித்து அபர்ணாவை நோக்கினாள்.

"உன் தோழிக்கு உதவுகிறாயோ?" என்று ஷோபனாவைப் பார்த்து புன்முறுவல் புரிந்தபடி அங்கிருந்து மறைந்து போனாள் அபர்ணா.

தேடல் தொடரும்...

## அவள் ஒரு நந்தவனம்

கல்பனா பாரதி

*சிந்தனையில் --அவள்*
*நந்த வனம்*
*சிரிப்பதில் ---அவள்*
*முல்லை வனம்*
*கன்னத்தில் --அவள்*
*மாவினம்*
*கண்களில் ---அவள்*
*பூ வினம்*
*அஞ்சுவதில் ---அவள்*
*மானினம்*
*அஞ்சாமையில் ---அவள்*
*காவல் துறை இனம்*
*கொஞ்சும் தமிழில் ---அவள்*
*புதுக் கவிதை இனம்*
*கவிதை என்றால் ---அவள்*
*இன்னும் தா தா என்று*
*கேட்கும் இனம்*
*காதல் என்றால் ---அவள்*
*ஒரு நீண்ட மௌனம்*
*பெண்களில்_அவள்*
*ஒரு புதுமை இனம்*

# குப்பை மேனி

கிரிகாசன்

என்னநினைத்து மண்ணில் மாந்தர் - சிலர்
இகழ்ந்து பிறரை நகையாடும்
தன்மை எடுத்தனரோ அறியேன் -அந்தோ
தவிக்கும் உளமும்கொண்டு நின்றேன்
மின்னும் மகிழ்ச்சி கொண்டமுகமும் - அவர்
மேனி மினுக்கும் விதம் கண்டால்,
இன்னும் குழந்தை மனம்தானோ - இவர்
இருக்கும் நிலை கிணற்றில் மீனோ

★★★

நேசமுடைத்த இந்த உடலும் - அதில்
நெய்யில் எரியும் நெருப்புணர்வும்
கூசும் ஒளிகதிரி னுதயம் - வரக்
கொள்ளுந் துயில் கலையக் காணீர்
கேசம் கலைந்தவிதம் வாயின் -கடை
கிடப்பில் வழிந்தஎச்சில் தோற்றம்
வீசும் வாடை சிறுநீரும் - உண்டு
விளைந்து கழித்த வகையாவும்

★★★

காணச் சகிக்காத நிலையும் -அதைக்
கண்டும் மனம்கொள்ளும் கர்வம்
நாணமெழும் குடலின் நாற்றம் - விரல்
நகமும் முடியும் கழிவாக்கம்
வீணே பூசி மெழுகேற்றி - வழி
வியர்வை துடைத்து மனம் மாற்றி
ஆணும்பெண்ணும் கொண்ட அவலம் - இது
அழகுவாழ்க்கை எனும் மாயம்

★★★

மேனி கொளும் அழகை போற்றும் - இந்த
மாந்தர் குடல் புழுக்கள் வாழும்,
தேனின் உதடு கசப்பாகும் - உள்ளே
தீனும் கிடந்து வாய் நாறும்
தானிவ் வுடலுணர்வு காதல் - கொண்டு
தன்னைத் தரும் இளமை இன்பம்
ஏனோ கழிவுகளின் இறக்கம் - அவை
இருக்கும் பாதைகளின் மோகம்

★★★

கூடிக் கொண்டியற்றும் செயலும் - ஒரு
குழந்தை குடும்பமெனப் போற்றும்
ஆடி திரியுமிந்த உலகில் - இந்த
ஆகத்திமிர் பிடித்த நிலையும்
கோடியெனக் காலம்போயும் - இவர்
கொள்ளும் கனவுகலையாதோ
தேடித் திரிந்து பணம் கொண்டும்- கொள்ளத்
தேவையற்ற வழிபோவர்

★★★

சாலச் சிறந்த பொய்கள் கூறி - இங்கு
தானே அழகென்றிவர் ஆடும்
காலக் கருமை கொண்டமனிதா - நின்
கண்கள் திறப்பது மெப்போது
நீலம் நிறைந்த விண்ணில் நின்று - கீழே
நீயும் சிந்தைகொண்டு பாராய்
கோலம் மனித வாழ்வெதுவோ -மனம்
கூட்டிக் கழித்தும் உண்மை பாராய்

★★★

பூமி யென்றசாக் கடையில் - இங்கு
புழுக்களாய் நெளியும் மனிதர்
தாமிக் கழிவுஎனும் குருதி - கொண்டு
தன்னில் கிடந்தழியும் சதையும்
போமிவ் வுணர்ச்சி கொளும் பாவம் -அதில்
பிறரைக் கெடுக்கு மனபாவம்
நாமிவ் வழியில் சொல்லும்பொய்கள் -இன்னும்
நலிவு களவு பெருமச்சம்

★★★

ஆன தொரு வாழ்வைகொண்டு - உளம்
அகந்தை நிறைந் தயலைக் கெடுக்கும்
தானேஎனும் கர்வம் மீறித் - துள்ளும்
தன்மை வெறுமை எனும் ஞானம்
ஏனோ இதைமறந்து காணும் -இந்த
இயல்பு புரியவில்லை நானும்
வீணே உரைத்துமென்ன உலகில் - அட
விந்தை மனம் இருளின் குகையே

★★★

# தாயே உன் மடி போதும் !!!

கே இனியவன்

தாயே....!!!
உன் கடைசி நேர வாழ்க்கையை
வலிகளுடன் மீட்டு பார்க்கிறேன்...!!!

இருகண் பார்வை குறைந்து..
எழுந்து நடக்கும் வலு இழந்து...
கேட்கும் திறன் குறைந்து ...
பேசும் அளவும் குறைந்து ....
வாட்டத்துடன் தோளும்
இருந்தாலும்........?

நான் அருகில் ...
வந்தபோது என் பெயரை....
மறக்காமல் வினாவாக
கேட்பாய் .....
என் பெயரை வினாவாக
கேட்பதன் மூலம்
ஏங்கி கொண்டிருந்தாய்
என் வரவுக்காய்
என்றுணர்ந்தேன் .....!!!

உன்னருகில் நானிருக்க
பிறவிப்பலன் .....
செய்திருக்க வேண்டும் .....!!!
செய்யவில்லையே -என்
பிறப்பு .....
தொழில் என்றும் குடும்பம்
என்றும் இருசுமைகளை
விரும்பியோ விரும்பாமலோ
சுமந்து கொண்டிருப்பதால்
உன் அருகில் நான் இருக்க
முடியவில்லை .....!!!

உன்னை பார்க்க வரும்
உறவினர் போல் நானும்
அவ்வப்போது வந்து போகும்
நல்ல நடிகனாக நடித்து வந்தேன்
வலிக்குதம்மா நடித்தவைகள்
முள்ளாய் குற்றும் போது......

இன்றுதான் உன்னை நான்
பார்த்த இறுதி நாள் .....!!!

மாலை பொழுது......
பகலாகவே இருந்தாலும்...
தெரியாது கண் உனக்கு....
உன் பேச்சில்லை ...
அசைவு இல்லை ..
யார் என்று கேட்க ..
சக்தியில்லை ....
உன்னருகில் நான் அமர்ந்தேன்
என் கரத்தை பற்றி பிடித்தாய்
உன் கண் ஓரத்தில்
கண்ணீர்துளிகள் -என்
இதயத்தில் கண்ணீர் துளிகள் ....!!!

தாயே நீ தந்த பாலை
கண்ணீரை சமர்பிக்கிறேன்
நான் தந்த அன்பை நீ
கண்ணீரால் சமர்பித்தாய்....
பிடித்தகையை எடுக்க
முடியவில்லை
எடுத்து கொள்ள உன்னாலும்
முடியவில்லை ...!!!

உன்
தலைமாட்டில் குத்து விளக்கு
என் தலையில் இடி விழுந்தது
தாயே என்றும் சொல்வேன்
படைப்பு தொழிலை செய்பவர் கடவுள்
என்றால் நீயார் ..?
என்னை படைத்தவள் ...!!!
கடவுளுடன் உறவாடி சிரித்து
மகிழ கோயில் வேண்டாம்
தியானம் வேண்டாம் ...
தாயே உன் மடி போதும் .....!!!



## பில்லா III: பில்லா Vs டிராகுலா

Sivaji dhasan

**பகுதி - 11**




தன் தந்தை காணாமல் போனது அலெக்சை வாட்டமுறச்செய்தது. எதிர்பார்க்காத திருப்பங்கள் தன் வாழ்க்கையில் கடந்துபோகிறதே என்று எண்ணுகையில் அவனுடைய மனப்பாரம் பெருகிக்கொண்டே போனது. தன் தந்தை கூறிய டிராகுலா எப்படி இருப்பான்? எதற்காக இவ்வாறு செய்கிறான்? என்ற சிந்தனையில் நீண்ட நேரம் செலவிட்டான். பின் களைப்பின் மிகுதியால் சிறிது நேரம் படுக்கையில் உறங்கினான்.

மாஃபியா கூட்டத்தின் தலைவர் ஜோசப் கொடுக்கும் விருந்திற்குச் செல்லுமாறு தன் தந்தை கூறியது அலெக்சின் காதுகளில் மெல்லிய ஒலியாக ஒலித்துக்கொண்டிருந்தது. உறக்கத்திலும் அவனுக்கு நிம்மதியில்லை. கெட்ட கனவுகள் வரிசையாக வர, சீக்கிரத்திலேயே விழித்துக்கொண்டான். படுக்கையின் அருகில், மேசையிலிருந்த தன் கைக்கடிகாரத்தை எடுத்து பார்த்தான். மணி சரியாக ஐந்தரையைக் காட்டியது. விருந்திற்குச் செல்ல இன்னும் ஒரு மணி நேரத்திற்கு மேல் இருந்தது.

சலிப்பாய் உணர்ந்த அவன் தன் மாளிகையின் பால்கனிக்கு வந்து சிறிது நேரம் வெளிப்புற அழகை ரசித்தான். குளிர்காலமாக இருந்ததால் மாலைப் பொழுதிலேயே இருள் குழுமியிருந்தது. வீட்டின் வெளியே வாசலில் தன் ஆட்கள் அங்கும் இங்கும் நடந்துபோவதை அலெக்ஸ் கவனித்தபடி இருந்தான். சில மணித்துளிகளில் விருந்து நிகழ்ச்சிக்கு தன்னை தயார்படுத்திக்கொண்டு வெளியே வந்தான். சத்யம், அலெக்ஸ் விருந்தில் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும், என்னென்ன பேசவேண்டும், தந்தையைப் பற்றி யாரேனும் விசாரித்தால் அவர்களுக்கு என்ன பதில் கூறவேண்டும் என்பதைச் சிறிது நேரம் பாடம் நடத்திக்கொண்டிருக்கையில் ஒரு பணியாளன் அவர்களின் முன் வந்து நின்றான்.

"சார், உங்களை பார்க்க இன்ஸ்பெக்டர் ஸ்டீபன் வந்திருக்காரு" என்று பணிவோடு கூறினான்.

அலெக்சும் சத்யமும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். பிறகு, பணியாளனைப் பார்த்து, "வரச் சொல்" என்று சத்யம் கூறினார். சில வினாடிகளில் ஸ்டீபன் அவர்களின் முன் பிரவேசித்தார். அவரின் மிடுக்கான தோற்றத்தின் மேல் அன்புப்பார்வை பொழிந்தான் அலெக்ஸ்.

"இன்ஸ்பெக்டர் ஸ்டீபன்" என்று தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டார் இருவரிடமும்.

"இங்க எதுக்கு வந்திருக்கீங்க மிஸ்டர் ஸ்டீபன்" என்று சத்யம் தன் முதல் கேள்வியை வைத்தார்.

அதற்கு மறுமொழி கூறாமல் புன்னகை சிந்தினார் ஸ்டீபன். அவரின் கண்கள் அலெக்சின் முகத்தையே விஷமத்துடன் வெறித்துக்கொண்டிருந்தது.

"உங்க அப்பா போலவே இருக்கீங்க" என்று விஷமத்தோடு கூறினார் ஸ்டீபன்.

"அப்படி இல்லன்னா தான் ஆச்சர்யம்" என்று சலனமில்லாமல் கூறினான் அலெக்ஸ்.

"குற்றம் செஞ்சி தலைமறைவா இருக்குற உங்க அப்பாவ பத்தி விசாரிச்சா கொஞ்சம் ஆச்சர்யமா தான இருக்கும்?"

அலெக்ஸ் அதிர்ந்தாலும் அதை வெளிக்காட்டாமல் நடந்துகொண்டான். "அப்படியா?"

"ஆமாம். விக்டர்னு ஒரு ஆள உங்க அப்பா கொன்னுருக்காரு. அதுக்கு போதுமான ஆதாரங்கள் போலீசிடம் இருக்கு" என்ற கூறிய ஸ்டீபன் சற்று நிறுத்தினார்.

"அற்புதம்" என்றான் அலெக்ஸ்.

> *இரவு திருப்பும் புத்தகம்*
> *நிலவு*
> *தென்றல் திருப்பும் புத்தகம்*
> *மலர்*
> *உணர்வு திருப்பும் புத்தகம்*
> *மனது*
> *மனம் திருப்பும் புத்தகம்*
> *மௌனம்*
> *மௌனம் எழுதும் புத்தகம்*
> *நீ விழியில் சொன்ன*
> *அதுதான்*
> *திருப்பத் திருப்பத்*
> *தொடரும்*
>
> கல்பனா பாரதி

"சொல்லுங்க மிஸ்டர் அலெக்ஸ். உங்க அப்பாவ எங்க மறச்சி வச்சிருக்கீங்க?"

"இவ்வளவு நேரம் எங்க கூட தான் பேசிட்டு இருந்தாரு. இன்ஸ்பெக்டர் வந்திருக்காருன்னு சொன்னதும் பயந்து ரூமுக்குள்ள போய் ஒளிஞ்சிகிட்டாரு" என்று மீண்டும் பரிகாசத்தை தன் சொற்களில் உதிர்த்தான் அலெக்ஸ்.

"நல்லா தான் பேசுறீங்க மிஸ்டர் அலெக்ஸ். குற்றவாளியோட சொத்துக்கள முடக்குறதுக்கு சட்டத்தில இடமிருக்கு தெரியுமா?"

"தாராளமா எங்க அப்பா பேர்ல இருக்கிற சொத்துக்கள முடக்கிக்கோங்க மிஸ்டர் ஸ்டீபன்" என்று அலெக்ஸ் சிரித்தான்.

## மாமா நாம் வாழ்ந்திடவே...

கனிகீலவரி

எங்கே நான் போவேன்
என் மாமா உன்ன விட்டு?
பசி தூக்கம் மறந்தாச்சு
பகலெல்லாம் நோவாச்சு......
அவரச் செடியோரம் அருகம்
புல் மொளைச்சிடுமே......
அந்தி சாஞ்சாலே உன்
நெனப்பு துளிர்விடுமே.....

அகவை குறைவில்லை உன்ன
அடிச்சேதான் இழுத்துவர......
தினம் காணும் தொலைவில்லை
கண்டே நாம் உறவாட.....
பேசும் மொழியெல்லாம் தமிழ்
போல அமிழ்தில்லை......
யார் பேசிக் கேட்டாலும்
உன் குரலோசைக் ஈடில்லை.......

மாமா உன் பாட்டு
மனச்சத்தான் உலுக்கிடுதே...
உள்ளம் சிலிர்த்திடுதே
உள்மனசு ஏங்கிடுதே...
வெத்தலதான் போட்டாலும்
செவக்காத என் நாக்கு
மாமா உன் பேர் சொன்னா
விரசாதான் செவந்திடுதே ....

வாசக்கதவோரம் வந்தே தான்
நீ நின்னா வசந்தம் வந்திடுதே
என் கன்னம் சிவந்திடுதே
காதோரம் நீ முத்தம் தந்தா....
உன் முகத்து வேர்வைத்துளி
என் முந்தாணை துடைச்சிடுதே...
நீ குடிச்சு மிச்சம் வெச்சா
நீச்சுதண்ணி இனிச்சிடுதே....

சொல்ல வார்த்தையில்லை
சொல்லுக்கொரு அர்த்தமில்ல
தூணும் துரும்பாச்சு இப்போ
துன்பம் எல்லாம் தீந்தாச்சு.....

எண்ணம் மாறாது இனி
எவர் சொல்லும் கேளாது
வந்தே சேர்ந்திருப்போம்
வாட்டமெல்லாம் தீர்த்திடுவோம்...

ஒரு ஜென்மம் பத்தாதே
ஒன்னா நாம் சேர்ந்திருக்க
மறு ஜென்மம் எடுப்போமா?
மாமா நாம் வாழ்ந்து முடிக்க....

அவன் சிரிப்புக்கு அர்த்தம் புரிந்தது ஸ்டீபனுக்கு. 'குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் தங்களின் பினாமிகளின் பெயர்களில் தான் சொத்துக்களை வாங்குவர். இதில் பில்லா மட்டும் விதிவிலக்கா என்ன?' என்று தன்னுள் நினைத்துக்கொண்டார். இனிமேலும் தான் அங்கிருந்தால் மேலும் அவமானப்படவேண்டும் என்று உணர்ந்த ஸ்டீபன் விஷமப் புன்னகையை இதழ்களில் தவழவிட்டு, "நான் வருகிறேன் மிஸ்டர் அலெக்ஸ். எப்பவும் சிரிச்சிட்டே இருக்கமுடியாது" என்று கூறினார்.

"உங்க கருத்துக்கு நன்றி" என்று கூறினான் அலெக்ஸ்.

⋆ ⋆ ⋆

பில்லாவின் வீட்டைவிட்டு வெளியேறியதும் நேராக கடற்கரையை நோக்கி தன் காரை கிளப்பினார் ஸ்டீபன். கடற்கரைக் காற்று அவரின் மேல் தழுவி குளிரை ஏற்படுத்தியபோதும் அவருக்கு அதில் நிம்மதியில்லை. 'எத்தனை குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி இருக்கிறோம். இன்று ஒரு குற்றவாளியின் மகன் தன்னை அவமானப்படுத்திவிட்டானே?' என்று மனதினுள் எரிமலைக் குழம்பு போல கொதித்துக்கொண்டிருந்தார்.

காரிலிருந்து விஸ்கி பாட்டிலை எடுத்து கட கடவென குடிக்கத் துவங்கினார். கால்பாகம் குடித்து முடித்த சமயத்தில் அவரை நோக்கி ஒரு போலீஸ் கார் வந்து நின்றது. அதிலிருந்து கான்ஸ்டபிள் ஒருவன் இறங்கி வந்தான். அவன் பெயர் ஜான்.

நேராக ஸ்டீபனை நோக்கி வந்த ஜான் கேலிப் புன்னகையோடு, "என்ன சார், நீங்க நினச்ச காரியம் கை கூடல போலிருக்கே" என்றான்.

தன் விஷமப் பார்வையை அவன் மீது திணித்த ஸ்டீபன் எதுவும் பேசாமல் மௌனம் காத்தார்.

"நான் தான் சொன்னேனே சார். இது நீங்க நினைக்குறா போல இல்லன்னு. இங்க இருக்க குற்றவாளிகள் எல்லாம் விவரமானவங்க"

அதற்கு மேல் அவன் பேச்சை சகித்துக்கொள்ள முடியாத ஸ்டீபன், "நான் கொடுத்த வேலை என்னாயிற்று?" என்று கேட்டார்.

"என்கிட்ட கொடுத்த காரியம் எப்பவுமே சுபம் தான் சார். இன்னைக்கு மாஃபியா தலைவர் ஜோசப் விருந்துக்கு ஏற்பாடு பண்ணிருக்காரு. அதுல எல்லா மாஃபியா கூட்ட தலைவர்களும் கலந்துக்குறாங்க"

"ஒன்பது பேருமா?"

"ஆமாம் சார்"

"சரி, அடுத்து என்ன? விசேஷமான தகவல் தெரிஞ்சி வச்சிருக்க"

"ஒரே ஒரு தகவல் மட்டுமிருக்கு. ஆனா அதுவும் விசேஷம்னு சொல்லமுடியாது சார்"

"என்ன?"

"இன்னைக்கு பெரும்பாலும் கடத்தல்பொருள வரவழைக்கமாட்டாங்க. ஏன்னா எல்லா ஆட்களும் விருந்துல கலந்திருப்பாங்க. ஆனா இதுல விதிவிலக்கா இருக்கார் கிறிஸ்டின்"

"கிறிஸ்டின்" என்று ஒரு முறை தனக்குள் கூறிப் பார்த்துக்கொண்ட ஸ்டீபன், "வடக்கு பக்கமிருக்க மாஃபியா கூட்டத் தலைவர் தான?" என்று கேட்டார்.

"ஆமா சார் அவரே தான். இன்னைக்கு அவர் போதை மருந்து கடத்துறாருன்னு நமக்கு தகவல் வந்திருக்கு சார்"

"என்ன சொல்ற?" என்று ஆத்திரத்தோடு கேட்டார் ஸ்டீபன்.

"நான் சொல்றது உண்மை சார்"

ஸ்டீபனின் போலீஸ் மூளை துரு துறுவென்று வேலை செய்ய ஆரம்பித்தது. இதை தடுத்தால் மாஃபியா கூட்டம் சற்று கதி கலங்குமே என்று எண்ணினார். "இது போன்ற தகவல் உங்களுக்கு இதுக்கு முன்ன வந்திருக்கா?" என்று கேட்டார் ஸ்டீபன்.

## முழுமதி !!

காா்த்திகா AK

கோடி நட்சத்திரங்களின்
காவலில் பவனி வரும்
முழுமதியவள்,
அழையாமலே விருந்தாளியாகிறாள்
ஓலைக் குடிலினுள்.. அங்கு
வயிறு காயும் மக்களை
நினைத்து நினைத்து
நிலாத்தோழி காய்கிறாள் ,
வெட்டவெளியில்
ஒற்றையாய் நின்று !
தேய்ந்த அவள்
தொலைந்து போனாள்,
ஓர் அமாவாசையில் ..
பௌர்ணமியைப் பெற்றெடுக்க !!

"நிறைய தடவ வந்திருக்கு சார்"

"அப்போ ஏன் இதுக்கு தகுந்த நடவடிக்கை எடுக்கல?"

"சிலருக்கு உயிர் மேல பயம். இல்லனா பணத்து மேல ஆசை சார். அதனால இத பெருசா கண்டுக்கமாட்டாங்க"

"எதுல கடத்துறாங்க?"

"அது தெரியல சார். ஆனா இன்னைக்கு போதை மருந்து கடத்தல் நிச்சயமா நடக்கப்போகுது"

ஸ்டீபன், "நம்ம போலீஸ் ஃபோர்ஸ உடனே கூப்பிடு" என்று அதிகாரத்தோடு கூறினார்.

'சரி' என்பது போன்று தலையசைத்து போலீஸ் காரிலுள்ள வாக்கி டாக்கியை எடுக்க ஓடினான் ஜான்.

ஸ்டீபன் இருந்த இடத்திலிருந்து ஐம்பது அடி தொலைவில் ஒரு படகு தலை கீழாகக் கவிழ்க்கப்பட்டிருந்தது. அதன் ஓரத்தில் ஜோக்கரின் தலை மட்டும் மணலின் மேலிருந்தது. கண்களை மூடியபடி இருந்த அவன் திடீரென்று கண்களை விழித்தான். அதில் குரூரம் கொந்தளித்தது. தன் உடல்

## முதாட்டியின் புலம்பல்

கிரேஸ் மகேந்திரன்



கண்ணு தெரியலயே
காது கேட்கலயே
கட்டையில
போறதுக்கு காலமின்னும் வரலியே!!

மீசைக்கார என் மவராசா..
நீ இருந்த காலமெல்லாம்
உள்வீட்டில் உட்கார வெச்சு
உபசரிச்ச ஊருசனம்
இப்போ ஒட்டுத்திண்ணையில
ஒண்ட கூட விடுதில்லையே!

எஞ்சோட்டு கிழவியெல்லாம்
சுமங்கலியா போய்ச்சேர்ந்தப்போ
பேச்சுதுணைக்குன்னு இருந்த
முருங்கைமர வீட்டு முனியம்மாவும்
முதியோர் இல்லம் போயிட்டாளே
ஒத்த மாடா நாதியத்து கெடக்கிறேனே!!

உறவு விட்டுபோன என் ஆசைமக
நாணிருக்கேன்னு விசனமா ஆக்கிபோட்டு
ஆதரிச்சப்போ அசந்து போனேனே...
என்கழுத்து இரட்டைவடச் சங்கிலி
அவ கழுத்து போறதுக்கு ஆசைப்பட்டாளுன்னு
அப்புறந்தான் தெரிஞ்சது.
அழக்கூட முடியலயே.!!

கடைசி காலத்தில கஞ்சி ஊத்துவான்னு
பொத்தி வளர்த்த என் மகன்
தன் வயித்து கஞ்சிக்கே
பொஞ்சாதி முன் கையேந்தி
பொட்டிபாம்பா நிக்கிறானே!!

ஏ..ஏதோ.. வகையில
மிச்சமான பணத்தை கொடுத்து
விதவை பணம் வாங்க
விண்ணப்பம் போட்டேனே
மழையில்லா வெள்ளாமையா
வீணாகிப் போச்சே!!

கண்ணு தெரியலியே
காது கேட்கலியே
கட்டையில போறதுக்கு
கஷ்டமில்லா வழிஒண்ணு
சொல்லி போங்க..

முழுவதையும் கடற்கரையின் மணலில் புதைத்து, தலையை மட்டும் வெளியே நீட்டிக்கொண்டிருந்தான் அவன்.

⋆ ⋆ ⋆

பாரிஸின் முக்கிய இடத்தில ஜோசப்பின் விருந்து நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பத்திரிக்கையாளர்கள் அத்தெருவினில் நுழையமுடியாதபடி ஆட்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர்.

விருந்திற்கு அழைக்கப்பட்டிருந்த ஆட்கள் மட்டுமே உள்ளே அனுமதிக்கப்பட்டனர். அதுவும் தீவிர சோதனைக்குப் பின் தான் உள்ளே செல்ல அனுமதித்தனர்.

அலெக்சின் காரும் அப்படித்தான் உள்ளே நுழைந்தது. மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த ஜோசப்பின் மாளிகை நவீன அரண்மனையைப் போலவே காட்சி தந்தது. வெளியில் உள்ள கார்டனில் மேசைகள் போடப்பட்டு விருந்து சாப்பிட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் பல பேர் அரட்டை அடித்தபடி உணவைச் சுவைத்துக்கொண்டிருந்தனர்.

அலெக்ஸ் பில்லாவிற்கு துணையாக.சத்தியமும் சில ஆட்களும் வந்திருந்தனர். முதல் முறையாக ஒரு பொது நிகழ்ச்சிக்கு தன் தந்தை இல்லாமல் வந்திருந்த அலெக்சிற்கு மனதினுள் சிறு சங்கடத்தை ஏற்படுத்தியது. விருந்து நடந்த இடத்தை சுற்றி வெறித்துக்கொண்டிருந்தான். அவனைக் கண்ட ஜோசப் நேராக வந்து அலெக்சை கைகுலுக்கி வரவேற்றார்.

"வா அலெக்ஸ் வா. சின்ன வயசுல பாத்தது" என்று அன்போடு குசலம் விசாரித்தபடி அலெக்சின் கைகளைப் பற்றிக்கொண்டு மற்ற மாஃபியா தலைவர்களிடம் அழைத்துச் சென்று அறிமுகம் செய்து வைத்தார். அலெக்சைப் பார்த்ததும் எல்லா மாஃபியா தலைவர்களும் மலர்ந்த முகத்தோடு விசாரிக்கத் துவங்கினர்.

"இது வரை உன் அப்பா பொத்திப் பொத்தி வளர்த்த மகன் நீ




தானா?" என்று கிண்டலாக ஒருவர் கூற அதைக் கேட்ட ஏனையவர்கள் சிரிக்கத் தொடங்கினர். ஒருவன் மட்டும் கடு கடுத்த முகத்தோடு அலெக்சையே முறைத்துக்கொண்டிருந்தான். அவன் விக்டரின் தம்பி.

எல்லாரும் சிரித்து முடித்த பின் ஜோசப் பேசத் துவங்கினார். "எல்லாத்தையும் நான் கேள்விப்பட்டேன் அலெக்ஸ். உன் அப்பா மேல எந்த தப்பும் இருக்காதுனு நினைக்கறேன். காலம் அவருக்கு சாதகமா அமையாம போனது வருத்தமா இருக்கு. கூடிய சீக்கிரம் எல்லாம் சரியாகும் என்று நம்புவோம்" என்றார்.

## பொறுமை...

ரத்னா தேவி

**வறண்ட நிலம்...**
**வற்றிய நதி...**
**காய்ந்த சருகுகள்...**
**அழுக்கடைந்த காற்று...**
**மழையில்லா வானம்...**
**இத்தனையும் தாண்டி**
**தாங்கிக் கொண்டிருக்கிறாள்**
**பூமித்தாய் பொறுமையாக...**
**அவளும் பெண்ணென்பதாலோ...**

அலெக்ஸ் பில்லா துன்பசாயையை முகத்தில் படரவிட்டு ஆமோதிப்பதாய் தலையசைத்தான்.

விக்டரின் தம்பி ஹர்ரியின் முகம் எண்ணையில் விழுந்த கடுகு போல் பொரிந்தது. ஜோசப்பை கொலை செய்யும் அளவிற்கு கோபம் வந்தது. ஹர்ரியின் முகம் கலவரமானதை கிறிஸ்டின் தெரிந்துகொண்டு ஹர்ரியின் தோள்களை ஆதரவாய் கர வளையமிட்டார்.




"கவலைப்படாத ஹர்ரி. இவன கொல்லுறது ரொம்ப சுலபம். உனக்காக நானே பண்ணுறேன்" என்று சொன்னார் கிறிஸ்டின்.

"என் முன்னாடி அவன் உயிரோடு நிக்குறத பாத்தா..." என்று நற நறவென பற்களைக் கடித்தான் ஹர்ரி.

"பொறுமையா இரு. இன்னும் கொஞ்ச நாளு தான வாழப்போறான். இருந்துட்டு போகட்டும்" என்று கூறிவிட்டு அங்கிருந்து அகன்றார் கிறிஸ்டின்.

அந்த இடத்தில அழையா விருந்தாளியாக வந்திருந்தவன் திவாகர் தான். அவன் எங்கும் போகாதபடி பார்த்துக்கொள்ள இரண்டு ஆட்களை நியமித்திருந்தான் பரத். அவன் எங்கு போனாலும் அவர்களும் கூட சென்றார்கள். தன் அந்தரங்கம் பாதிக்கப்படுவதை எண்ணுகையில் திவாகருக்கு ஆத்திரம் பீறிட்டு வந்தது.

டிராகுலா எப்படியும் நிச்சயமாக இந்த நிகழ்ச்சிக்கு வருவான் என்று அவர்களை ஏமாற்றி நிகழ்ச்சியில் கலந்துகொண்டான். அதுவுமிலாமல் அவன் மூளை வேறொரு கணக்கு போட்டது. மொத்த மாஃபியா தலைவர்களையும் போட்டோ எடுத்தும் அவர்கள் என்ன திட்டம் போடுகிறார்கள் என்பதையும் தெரிந்துகொண்டு பத்திரிக்கைக்கு கொடுத்தால் ஒரு பெரிய தொகை தனக்குக் கிடைக்கும். அதை வைத்து இவ்வூரை விட்டுச் சென்று வேறு தொழில் செய்து பிழைத்துக்கொள்ளலாம் என்று எண்ணியபடியே அவன் சட்டை பட்டனில் பொருத்தி இருந்த மைக்ரோ காமெராவில் எல்லோரையும் புகைப்படம் எடுத்துக்கொண்டிருந்தான்.

அவனின் மனம் ஒரு விபரீதம் நிகழப்போகிறது என்பதை மட்டும் கூறிக்கொண்டேயிருந்தது.

**தொடரும்...**

## கசங்கிய மலர்

ஜெயராமன்.p.s

*பூப்பு நீ அடைந்ததுமே*
*சேதி சொல்லி,*
*வந்த தாய் மாமன்.*
*கட்டிய குடிசையிலே*
*கண்ணே, நீ இருக்க,*
*உச்சி முகர்ந்து*
*கன்னத்தில் திருஷ்டி வைத்து,*
*கண்குளிர*
*பார்த்திட நினைத்தோமே.*

*ஓநாய்க் கூட்டம் உன்னை*
*உருக்குலைத்த பின்னாலே*
*பச்சை ஓலைப் பாடையிலே*
*பார்ப்பதற்கா தவமிருந்தோம்.*

*செங்குருதி புனலாய் ஓட*
*குதறிய வெறி நாய்க்கூட்டம்,*
*உயிர் பிரிந்த பின்னாலும்*
*பிணமாய்ப் போன உன்னை*
*பிய்த் தெறிந்த காமக் கொடுமை.*

*பத்தே வயதுப் பாலகியே,*
*பருவமடையா மலர் மொட்டே,*
*உன்னைக் கசக்கிட*
*எப்படியம்மா மனம் வந்தது ?*

*செய்வதறியாது*
*தேம்பியழ முடியாது*
*கத்திக் கதறிட வழியின்றி*
*என்ன நினைத்தாயோ,*
*யாரை அழைத்தாயோ ?*

*பெற்றோர் உடன்பாட்டில்*
*ஊர் கூடிக் களித்த திருமணத்தில் ,*
*பற்றாக் குறையென்று*
*முப்பத்து முக்கோடி தேவர்களை*
*வாழ்த்து சொல்ல அழைப்பாரே.*

*சின்னஞ்சிறு மலரே,*
*உன்னைச் சீரழிக்கும் வேளையிலே*
*எங்கே போயினர் தேவர்கள்.*
*உனைக்காக்க*
*ஒருவரும் வரவில்லையே.*

*ஒருவேளை - நீ,*
*தமிழ் கூவி அழைத்ததனால்*
*மொழி புரியாது போயினரோ?*
*தேவர்களெல்லாம்,*
*திருமணத்திற்கு மட்டும்தானா?*

*நட்ட நடு வீதியிலே*
*நடுச்சாம வேளையிலே*
*நகையோடு பெண்ணொருத்தி*
*நடமாடும் காலம்தான்*
*சுதந்திரம் , எ ன்று சொன்ன*
*மகாத்மாவே !*
*சுதந்திரம் நகைகளுக்கு மட்டும்தானா,*
*மங்கையரின் கற்புக்கு இல்லையோ?*

*தலைநகரில் நிகழ்வென்றால்*
*நாடே கொந்தளிக்கும்.*
*தமிழ் நாட்டில் நிகழ்வென்றால்*
*ஏடுகளை நிரப்பிட*
*கிடைத்த ஒரு செய்தி, அம்மட்டே*

*பெண் பிஞ்சே!*
*உன்னைப் பிணமாக்கி*
*தூக்கில் தொங்கவிட்ட*
*சண்டாளப் பாவிகளுக்கு*
*மரண தண்டனை வேண்டாம்,*
*சில மணித்துளியில்*
*உயிரற்றுப் போய் விடுவர்.*

*ஊரறிய வீதியிலே*
*உறவினர் கண் முன்னே அவர்தம்,*
*ஆணவக் குறிகளை*
*அறுத்தெறிய வேண்டுமம்மா...*

# காற்று எங்கே அழைத்துக் செல்லுமோ அங்கே

கவியாழினி



என் முன்னோர்களின்
எத்துனை தலைமுறைகள் தாண்டி
இன்று நானிருக்கிறேன்?

இந்த உலகம் ஐம்பூதங்களில்
குடிகொண்டு வாழ்வதை
ஆன்மீகம் என்கிறார்கள்

இந்த உலகின் ஐம்பூதங்களை
ஆராய்ந்து வாழ்வதை
அறிவியல் என்கிறார்கள்

தியானித்து உலகை மறந்து
சமாதி நிலை அடைவதுதான்
ஆன்மீகத்தின் உச்சமென்றால்

எப்படியும் மனிதன் ஒரு
தருணத்தில் சமாதி நிலைக்குத்
தானாகவே செல்கிறானே

நித்தம் கண்டுபிடிப்புகளும்
அழிவுகளும் ஆராய்ச்சிகளும்தான்
அறிவியலின் உச்சம்மென்றால்

ஒவ்வொரு கணத்திலும்
இவ்வுலகில் ஒன்று
அழிவுக்குள்ளாகியும்
புதிய கண்டுபிடிப்பாகவும்
உருவாகிறதே !

ஒரு துளி விந்தின்
வெளியேற்றந்தான்
ஆழ்ந்த அன்பின்
உச்சமென்றால்

அதுவும் சிலநேரங்களில்
திருப்தியடையாத ஒன்றாக
மாற்றம் பெருவதேன்?

இங்கே ,
இறப்பையும் பிறப்பையும் தாண்டி
சூரிய சந்திர உதயமறைவை தாண்டி
ஆண் பெண் அன்பை தாண்டி
ஆன்மிக அறிவியலை தாண்டி

உலகமென்னும்
நாடக மேடையில்
மனிதர்களென்னும்
கதாபாத்திரத்தில்
நித்தம் ஒரு நாடகம்
அரங்கேறிகொண்டே
இருக்கிறது

தனக்கு எதிரே ஒரு சபை
தம் நடிப்பை கண்கொட்ட
பார்த்து கொண்டிருப்பதை
உணர்ந்து நடிப்பவன்
உச்சம் பெருகிறவனாகவும் ,

தானே நடிகன்
தானே பார்வையாளனென
நடிப்பவனை எச்சமாக
நினைக்கவைத்தும்
இந்த உலகம் என்றும்
சாதா(சதா)ரணமாகவே
இயங்கிக்கொண்டிருக்கிறது.

காலங்கள் முடிந்த பின்பு
ஆடிய ஆட்டங்கள் மறைந்து
அமைதியாக செல்கிறான்
காற்று எங்கே அழைத்துக் செல்லுமோ
அங்கே ...

# ரம்மி

kaaviyan



அப்பா காப்பாத்துன்னு....
முதலாங்கார்டெடுத்தேன்
7 ஆ நம்பர் கார்டு வந்து
ஏழுமலைய நினைச்சுக்கிட்டேன்...
அடுத்து வந்ததெல்லாம்
ஏழரையா ஆயிடுச்சே !!

1,2,3.... என 13 அட்டையினு
இருந்தென்ன லாபமடா ?!!
சக்காலத்தி மூஞ்சிய போல்
ஒன்னுக்கொன்னு சேராம
முறைச்சுக்கிட்டு நிக்குதடா !!

பங்காளி இறக்குவான்னு
வாய பொழந்து
பார்த்து நின்னேன்.
படுபாவி மக்கா
நல்ல கார்டு போடலையே !!

“ரம்மி”அ காட்டாம,
மூடி வச்ச கோமாளி
யாருன்னு தெரியலையே ?

ரெண்டு ரெண்டா
இருந்த அத்தனையும்
ஒன்னு ஒன்னா
இறக்கி வைச்சேன்
ரம்மி ஒன்னு சேரும்முன்னு...

இறக்குனது கோமாளின்னு
தெரியாம போயிடுச்சே !!!
போனது மட்டும் கோமாளி இல்ல
நானுந் தான்னு புரிஞ்சிடுச்சே !!!

அஞ்சற பெட்டியில
சேர்த்து வைச்ச காசயெல்லாம்
திருடிட்டு வந்தோமே,
திருப்பிக்கொண்டு வைக்கலனா
கேவலமா போயிடுமே !!
சந்தி சிரிச்சாலும் பரவாயில்ல- பத்தினி
முந்தி விரிக்காம போயிடுவா !!!
மகராசி நல்லவ தான்
மறந்துட்டா தேவலையே?? ...

அடுத்த ரவுண்டுக்காவது
நல்ல கார்டு சேர்ந்திடுமா ?
நம்பி நானும் உட்காருறேன்
காத்திடுப்பா
“காத்தவராயா”

ரெண்டா மாட்டத்துல
ஒன்னாங்கார்டெடுத்தேன்
3 னா நம்பர் வர
ராசியான நம்பருன்னு
கண்ணுக்குள்ள ஒத்திக்கிட்டேன்-
ஆனா!!!!!!
வந்தது பட்டையல்ல
நாமமுன்னு புரிஞ்சிடுச்சே !!!

# அருள்தரும் ஆயிரம் தமிழிசைப்பாடல்கள் - 4

nksonline

**14. குருவிந்த மணிச்ரேணி கனத்கோடீர மண்டிடதா**
ராகம் - முகாரி

குருவிந்த மணியை அணிந்தவளே அம்மா
கும்பிட்டோம் உந்தன் திருவடியை (கு)

அரவிந்த முகத்தை கொண்டவளே அம்மா
தரவேண்டும் உந்தன் திருவருளை (கு)

ஞானாநந்தம் நான் அடைய இந்த
கானத்தில் கருத்தாய் வந்திடுவாய்
பானத்தில் உன்னை ஆவஹித்தோம்
தானமாய் தருவாய் நல் அறிவை (கு)

க்ரீடத்தில் கொண்டாய் உயர் மணியை
வேரிடம் எனக்கில்லை வேண்டிடவே
ஆரிய சிவனின் அருந்துணையே
பாரிலே பிறப்பை நீக்கிடுவாய் (கு)

**15. அஷ்டமீ சந்த்ர விப்ராஜ தளிகஸ்தல சோபிதா**

அஷ்டமீ சந்த்ரன் உந்தன் அரைவட்ட நெற்றி முகம்
இஷ்டத்தை தருவதில் ஏன் தாமதம் ? (அ)

நிலவைபோல குளிர்ச்சி கொண்டாய் எந்தன்
நிலைமையை பார்த்து இரக்கம் கொள்வாய் (அ)

ஞானமே ஆனந்தம் என அறிந்தேன் அந்த
ஞானம் உள்ளத்தில் நிலைத்திடச் செய்
தானாக ஒளியில்லை நிலவினுக்கு அந்த
திங்களளைப்போல நான் உந்தனுக்கு (அ)

மதியின் மதியை சீராக்கினாய் அவன்
விதியை நீ நன்கு சரியாக்கினாய்
அதிகம் அறியாத பாமரன் நான் என்
விதியை மாற்றி ஆட்கொள்ளுவாய் (அ)

**16. முகசந்த்ர களங்காப ம்ருகநாபி விசேஷகா**
ராகம் - தோடி

கஸ்தூரி திலகம் தரித்தவளே அது
சந்த்ரனின் களங்கம் போன்றதுவே (க)

அன்புக்கு இணைஇங்கே யாருமில்லை உந்தன்
பண்பினால் பகையிங்கே யாருமில்லை (க)

பொட்டாகும் நெற்றியில் ஞானாநந்தம் அது
இஷ்டத்தை அருள்வதில் பரமானந்தம்
பட்டபகல் எனவே ப்ரகாசிக்கும் ஆசை
கட்டுக்கள் அனைத்தையும் பிரி;த்துவிடும் (க)

அஸ்திபாதி ப்ரியம் என்பது அவள் நெற்றி அந்த
கஸ்தூரி பொட்டுதான் நாம ரூபம்
வஸ்துவில் உறைந்திட்ட சைதன்யம் அந்த
கஸ்தூரி பொட்டதற்கு உயிர் கொடுக்கும் (க)

**17. வதனஸ்மர மாங்கல்ய க்ருஹதோரண சில்லிகா**
ராகம் - கேதாரகௌளம்

முகமெனும் வீட்டுக்கு தோரணமாம் புருவம் நல்
அகமுடை சிவனுக்கு ஆதரவாம் (மு)

ஞானானந்தம் காரணமாம் நல்
கானத்தில் உறையும் பூரணமாம் (மு)

உண்மை உரைப்பது ஆரணமாம் உயர்
தண்மையானது அவளின் குணமாம்
பண்டை முனிவரின் அனுபவமாம் இது
விந்தையான விழுப்பொருளாம் (மு)

அருள்சக்தி அருளும் அன்புருவாம் அது
வருகின்ற துன்பத்தை விலக்கிடுமாம்
தருகின்ற ஞானம் நிலைத்திடுமாம் அது
திருவாம் அன்னையின் திருவுருவாம் (மு)

**18. வக்த்ரலக்ஷ்மீ பரீவாஹ சலன்மீனாப லோசனா**
ராகம் - தர்பார்

மீனலோசனீ அம்பா
முகமெனும் தடாகத்தில் ஓடும் (மீ)

மீனைப்போல பசியாற்றும் மீனாக்ஷீ
தன்னைத்தான் அறியவே தயைபுரி (மீ)

ஞானாநந்தத் தடாகம் அதில்
நீள ஓடும் மனமீன்கள்
வானமென்னும் வேதம் அதில்
ஞானமென்னும் நிலவு (மீ)

உந்தன் பார்வை பட்டால் இந்த
உலகம் உயர்வை நாடும்
கலகம் எல்லாம் ஓயும் மனக்
கலக்கம் தெளிந்த நீராம் (மீ)

(தொடரும்......)

# வீணை விறகாச்சே!

அகரம் அமுதன்

'புலி'கண்டால் வயிற்றினிலே
புளிகரைக்குஞ் சிங்களரே!
கிலிபிடித்து நிற்கின்ற
கிளியென்னைப் பிடித்தவரே!

சாவுக் கஞ்சி
சமராடுந் துணிவின்றிப்
பூவுக்குக் குறிவைக்கும்
போர்த்தொழில் கற்றவரே!

ஆடை கிழித்தென்றன்
அங்கங்கள் மொய்ப்பவரே!
பாடையில் ஏற்றும்முன்
பதம்பார்க்கத் துடிப்பவரே!

அம்மணமாய் எனையாக்கி
ஆனந்தம் கொள்பவரே!
அசிங்கத்தை அரங்கேற்ற
ஆரூடம் பார்ப்பவரே!

வெம்பியழும் எனைக்குதற
வெறிபிடித்து நிற்பவரே!
தேம்பியழும் எனைச்சிதைக்க
தினவெடுத்துச் சூழ்பவரே!

கைகள் இரண்டிருந்தும்
கைவிலங்கு பூட்டியதால்
மெய்மறைக்க முடியாமல்
மேனி கூசுகின்றேன்...

தேம்பி அழுதே
திரள்கின்ற கண்ணீரைத்
தேக்கி அதிலென்
தேகம் மறைக்கின்றேன்...

காற்றையே ஆடையாய்க்
கட்டப் பார்க்கின்றேன்...
கூற்றையே அழைத்தென்னைக்
கூட்டிப்போ என்கின்றேன்...

உங்களைப்போல் கூற்றிற்கும்
உள்ளம் கிடையாதோ?
மங்கை நான்தேடும்
மரணம்வரத் தடையாதோ?

எச்சில் இலையாகி
இழிந்துநான் போகும்முன்
எமனேறும் எருமையேனும்
எனைமுட்டிச் சாய்க்காதோ?

ஈசனோ புத்தனோ
ஏசுவோ அல்லாவோ
இச்சமயம் எனைக்காக்க
இங்குவரக் கூடாதோ?

பாஞ்சாலி துகிலிழக்கப்
பதறிய கண்ணனே!
ஏஞ்சாமீ? துகிலிழந்த
எனக்குதவ மாட்டாயா?

புத்தனுக்குப் பயந்து
போயொளியப் பாக்குறியா?
குத்தமிழைப் பாரோடு
கூட்டுச்சேரப் போகிறியா?

எச்சில்கள் என்மேல்
இச்சை கொள்கிறதே...
ஈழப் புலித்தலைவா!
இதைத்தடுக்க வாராயா?

தமிழனா(ய்)ப் பொறந்தா(ல்)
தப்பா? அதனினும்
தமிழச்சியா(ய்)ப் பொறந்தா(ல்)
தண்டனை கற்பழிப்பா?

இடுப்பிலே கொம்பு
முளைத்த விலங்குகள்
எதிரே வந்து
எனைமுட்டிச் சாய்க்கிறதே...



படுக்கைக் கிழுக்கப்
பலகைகள் நீள்கையிலே
உடுக்கை இழந்தஎனக்(கு)
உதவவொரு கையிலையே...

உள்ளூர் தெய்வங்களோ
உலகத் தமிழர்களோ
உள்ளம் பதறலையே...
ஓடிவந்து தடுக்கலையே...

விரியன் பாம்பொன்று
விழுந்து கடிக்கிறதே...
சனியன் ஒன்றென்னைச்
சாப்பிட்டு முடிக்கிறதே...

கூவம் மிகவிரைந்து
கங்கையில் கலக்கிறதே...
பாவக் கடலிங்கு
புண்ணியத்தை விழுங்கிடுதே...

இடியே வந்தென்றன்
மடியில் இறங்கிடுதே...
நொடியில் என்கற்பு
நோய்பட்டு இறந்திடுதே...

கொடிய இருட்டொன்று
விடியலை மேய்கிறதே...
கடிய விஷமென்றன்
காயத்தில் பாய்கிறதே

உயிரில்லை என்றாலும்
உடல்கிடந்து துடிக்கிறதே...
இதயம் துடிக்கவில்லை
துடிப்பதுபோல் நடிக்கிறதே...

தாயே! கண்ணகியே!
தமிழ்மதுரை எரித்தவளே!
திருகி முலையெறிந்து
தீயரைச் சரித்தவளே!

களையிழந்து கற்பிழந்து
கதறுமெனக்(கு) உதவாயோ?
முலையெறிந்து ஊரெரிக்கும்
மருமத்தை உரைக்காயோ?

சொல்லால் சுடவும்என்
சொல்லுக்கு வலிவில்லை...
தள்ளி விடவும்என்
தேகத்தில் தெம்பில்லை...

கற்பென்னும் திண்மையைக்
கறைபடியச் செய்பவரே!
அற்புதம் என்றனை
அற்பமாய்க் கொய்பவரே!

தட்டிக் கேட்கவெம்
தலைவன்வராக் காரணத்தால்
கட்டிப் போட்டென்னைக்
கற்பழிக்கும் காமுகரே!

பூமகள் என்றனைப்
புலிமகளா? என்பவரே!
கலைமகள் என்றன்
களையழித்துக் களிப்பவரே!

போட்டாப் போட்டியிட்டுப்
பூந்தேனைச் சுவைப்பவரே!
தோட்டா ஒன்றால்என்
உயிர்சுவைக்கக் கூடாதா?

போச்சு! எல்லாம்போச்சு!
போகலையே உயிர்மட்டும்...
ஆச்சு! பொறுத்தாச்சு!
அடங்கலையே இவர்கொட்டம்...

வீணையை விறகாக்கி
வெறிதீர்க்கும் வீணர்களா!
ஓவியத்தைச் சிதைச்சுத்தான்
ஊரையாளப் போறிகளா?

அழுக்கை என்மீது
அப்பிவிட்ட இழுதைகளா!
சுமையை என்மடியில்
இறக்கிவைத்த கழுதைகளா!

இன்னும் பசியெடுத்தா(ல்)
என்னோட பிணமிருக்கு...
கண்ணகிபோல் சினந்தெரிக்க
கற்பு(இ)ங்கே எனக்கிருக்கு?

# பட்டறையில் எழுதப்பட்ட கவிதைகள்

*கடந்தமாதம் வள்ளல், மள்ளல், விள்ளல், கொள்ளார், நள்ளார், உள்ளி, கிள்ளி, கொள்ளி, தெள்ளி, நள்ளி, பள்ளி, புள்ளி, கள், புள், தொள்ளை, மள்ளர் போன்ற சொற்களை கொடுத்து அதை வைத்து கவிதை வடிக்கக் கேட்டிருந்தோம். அதற்கு நண்பர்கள் எழுதிய சில கவிதைகளை இங்கே தருகிறோம்.*

## தமிழ்த்தாய்

வேணுகோபாலன்

கள்ளையும் தீயையும் சேர்த்து - நல்ல
காற்றையும் வான வெளியையும் சேர்த்து
தெள்ளு தமிழ்ப்புலவோர்கள் நல்ல
தீஞ்சுவைக்காவியம் செய்து கொடுத்தார்
(இதுவும் தலைப்பும் பாரதியுடையது)

பள்ளுப்பாடலினாலும் பல வில்லுப்பாடலினூடும்
பண்ணுடன் அன்னையர் பாடி உறக்கும்
விள்ளரி வித்தகப் பாடலினூடும் -
நொண்டிக் களித்திடும் எம் சிறு பெண்டிர்

எள்ளல் கதைகளினூடும் - மற்றவர்
மயனைப் பழித்து எழிலுறப் புனையும்
வள்ளன்மை கொண்ட புனைவுகளூடும்
வெள்ளைக்கமல நாமகளே போல்
தீந்தமிழ் நல்கிய ஆசான்களூடும்

உள்ளிடும் உள்ளம் உவகையில் மிதக்கும்
ஓராயிரமாயிரம் பாக்களினூடும்
வள்ளுவன் வாய்மொழியாலும் அந்த
அக்கினிக்குஞ்சின் அனல்மொழியாலும்

பள்ளிகள் தோறும் தமிழ்ச்சுவை காட்டல்
படித்திடும் சிறார்க்கு நற்றமிழ் சேர்த்தல்
தெள்ளிய தமிழை செல்லும்வாய் சொல்லல்
தெரிந்திடு நண்பா இவை நாம் செய்யின்

தள்ளிடும் கால வெள்ளத்தை எள்ளி
தரணியில் வாழ்வள் எம் தாய்

## உள்ள உள்ள உருகுதே உள்ளம்

சபா வடிவேலு

மள்ளல் மாஞாலம் வள்ளலும் ஆமே
புள்ளும், புள்ளியும், தெள்ளியும் போன்றாங்கே
எண்ணாயிரம் கோடி உயிரினம் உண்டெனினும்

மூன்றிலிரு பெரும்பரப்பு முந்நீர் மூடினும்
கொள்ளார் நள்ளார் நல்லார் என்னாது
பல்லுயிர் ஒருங்கே தாங்கிடக் கண்டு
உள்ளிட வியப்பும் மிகுந்திடும் அன்றோ ?
மண்ணும் மாந்தரும் தாகம் தணிந்திட
உண்ணும் உணவுப் பயிர்கள் செழித்திட
கிள்ளி போற்றிய காவிரி இன்று
பள்ளி கொண்ட அரங்கன் முன்பும்
பாலையென வறண்டு கிடப்பது கண்டும்
நீரைப் பிரிந்து வாடும் மணலும்
நித்தம் கொள்ளை போதல் கண்டும்
வஞ்ச மனிதர் நெஞ்சம் போன்றே
வானமும் சுரக்க மறுத்தல் கண்டும்
உள்ளிட உள்ளம் கொள்ளியாய் ஆகுதே
தொள்ளை ஏந்தி மீனம் ஈட்டிட
எல்லை சென்று எளிதில் மீண்டிட
மள்ளர் காக்க மறுப்பது கண்டு
உள்ளி உருகுதல் விள்ளல் ஏலாதே

## வள்ளல் தமிழ்! எல்லாம் வல்ல தமிழ்!!

சுந்தர் புருஷோத்தமன்

வள்ளல் தமிழின்பத் தேனள்ளி நான் கொள்ள
மள்ளல் போமெந்தன் மனத்தின்கண் விடுபட்டே
விள்ளல் தமிழ்ப் பேற்றை யாவர்க்கு மிங்கென்றால்
கொள்வீர் நள்ளாரு மிங்கிதனைப் போற்றுவராம்.
உள்ளி உள்ளி எந்தன் உள்ளெல்லாங் களிப்பூறி
கிள்ளிச் சோழர்கோ போலஃதும் நிமிர்ந்ததுவாம்
தெள்ளி அசைந்தாடி நடைபயிலும் அழகைப்போல்
கள்ளாய் மயக்குதுவே தமிழெங்கள் தீந்தமிழே.
பள்ளி செல்கின்ற பாலகராய் இருக்குங்கால்
நள்ளி கொண்டெங்கள் நாவினிலே விளையாடி
புள்ளி பெருக்கிற்றே தமிழ்ப்புதல்வர் எமக்கெல்லாம்
புள்ளினமாய் வான் தவழ்ந்தோம் தமிழெங்கள் தாயாலே
தொள்ளை மீதேறிப் பேராழிக் கடந்திங்கே
வெள்ளை மாந்தெரெலாந் தமிழ்நாட்டில் திரிந்தாலும்
பிள்ளைத் தமிழெங்கள் செந்தமிழின் தரந்தாழ்த்தல்
மள்ளர் கூட்டத்துள் மாடுமேய்ப்போன் நுழைதற் போலே....

## தமிழீழத் தற்கொடை வள்ளல்கள்

பூங்கோதை

தமிழீழத் தற்கொடை வள்ளல்கள்
கிள்ளி நற்படையார் கொடியேந்தி நின்ற
மள்ளர் தமிழீழ மானத்தின் மைந்தர்தமை
உள்ளி நெஞ்சிருத்தித் தொழுகின்ற போது
மள்ளல் மனம் கொண்டு சிந்தும் விழிநீரே
துள்ளி நடை போட்ட தூங்காத கண்மணிகள்
கொள்ளார் சொப்பனத்தில் சிம்மமாய் நின்றவர்கள்
வெள்ளியாய் ஈழத்தின் வான்பரப்பு எங்கும்
விள்ளல் கொண்டனரோ விழி தேடியலையுதையா
உள்ளம் நினைந்துருகத் தம்மை ஈந்தவர்கள்
தெள்ளியணைய பலம்கொண்டு பொருதியவர்
தெள்ளிய கொள்கையுடன் தம்முயிர் ஈந்த
வள்ளல்கள் இவர்போல இனியாரைக் காண்போமோ...

# சாம்ராட் சம்யுக்தன்

சிவாஜிதாசன்

பாகம் 3 - 1. ஆண்டாள்




விண்மீன்களின் அழகையே ரசித்துக்கொண்டிருந்த ரவிவர்மனுக்கு பசி வயிற்றைத் தின்ன, எழுந்து நடக்கத் துவங்கினான். வீதியின் ஓரம் இருளிலேயே நடந்தான். இரவுக் காவலர்கள் வீதிகளில் வலம் வரும் அரவம் கேட்டால் பதுங்கிக்கொண்டு முன்னேற அவனுக்கு நாழிகைகள் பிடித்தன. இவ்வாறு மறைந்து மறைந்து இரண்டு வீதிகளைக் கடந்து விட்டான். 'இன்றிரவு தங்குவதற்கு ஓரிடம் கிடைத்தால் நன்றாக இருக்குமே' என்று மனதினுள் ஏங்கினான்.

நிலவு கூட மேகத்தினுள் மறைந்திருந்த நேரம். கும்மிருட்டு வீதியெங்கும் பரவியிருக்க மெல்ல நடந்த அவனை இரவுக் காவலன் ஒருவன் பார்த்துவிட்டான். உடனே, அவனை நோக்கிக் குதிரையை விரட்டினான். இதை உணர்ந்துகொண்ட ரவிவர்மன், தான் ஒதுங்கியிருந்த ஒரு சிறு வீட்டினுள் நுழைந்துகொண்டான். அவன் அதிர்ஷ்டம் அந்நேரத்தில் வீட்டின் கதவு தாளிடப்படாமல் இருந்தது தான். உள்ளே சென்று பதுங்கிக்கொண்டான்.

நாகவன வீரன் அவ்வீட்டின் முன் குதிரையை நிறுத்தினான். வீட்டுத் திண்ணையில் ஒரு பெண்மணி படுத்திருந்தார்.

"யார் படுத்துக்கொண்டிருப்பது? எழுந்திரு!" என்றான் அதிகாரக் குரலோடு.

அந்தப் பெண்மணி முனகியபடியே எழும்பினார். இந்நேரத்தில் வீரன் வந்திருப்பது அவருக்கு அதிர்ச்சியையும் குழப்பத்தையும் கொடுத்தது.

"இங்கே ஒருவன் பதுங்கி வந்தானே, எங்கே அவன்?" என்றான்.

"அப்படி யாரும் வரவில்லையே" என்றார் அவர் குழப்பத்துடன்

"இல்லை நான் கண்டேனே" என்றான் அவன் மீண்டும்.

"நான் தான் கெட்டுவிட்ட பழைய உணவை இங்கு கொட்ட வந்தேன். அதை பார்த்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்" என்றார் அவர்.

"பழைய உணவா?" என்று கேட்டபடியே கீழே நோக்கினான் வீரன். பெண்மணி சொன்னபடி அங்கே உணவு கொட்டப்பட்டிருந்தது. தான் தான் தவறாக எண்ணிவிட்டோமா? என்று சிந்தித்தபடி அவரிடம் கூட சொல்லாமல் குதிரையில் ஏறிக் கிளம்பினான் அவன்.

அவன் சென்ற உடன், உள்ளே சென்ற பெண்மணி ஒரு விளக்கை ஏற்றினார். விளக்கு சரியாக எரிகிறதா என்று நோக்கியபடியே, "ஒளிந்திருந்தது போதும். உன்னைத் தேடி வந்த ஆபத்து சென்றுவிட்டது" என்றார்.

"ஆம் எம்மொழி ஆனாலும் நம்மொழி
என நன்மொழி என பழகு -பின்
நம்மொழியே திண் மொழியென,
செம்மொழி இனம் காணும் உலகு..
சிவகவி

அப்பெண் அழைத்ததைக் கேட்டு, இருளில் மறைந்திருந்த ரவிவர்மன் மகுடிக்கு மயங்கிய சர்ப்பம் போல் தீபச்சுடரின் ஒளியில் வந்து நின்றான். 'எப்படி இவர் என்னை கண்டுபிடித்தார்? நாம் இங்கு வந்து ஒளிந்திருப்பது இவருக்கு முன்னமே தெரிந்திருக்கிறது என்பதில் ஐயமில்லை. ஆனால், ஏன் தன்னைக் காட்டிக்கொடுக்காமல் அந்த வீரனிடம் அவ்வாறு பேசினார்?' என்று ரவிவர்மன் குழம்பிய முகத்துடன் அப்பெண்ணின் முகத்தை ஏறிட்டான்.

முகத்தில் சாந்தமும் புன்முறுவலும் தவழ அவர் ரவிவர்மனின் கலங்கிய முகத்தையே நோக்கிக்கொண்டிருந்தார். அவர்கள் இருவருக்கும் மௌனமே தூது போய்க்கொண்டிருந்தது. இது வரை யார் முன்னாலும் தலை நிமிர்ந்தே பழக்கப்பட்ட ரவிவர்மனின் உடலோ சொல்லமுடியா குற்ற உணர்ச்சியில் குறுகியது.

சலனமற்ற குரலோடு, "யார் தம்பி நீ?" என்றார் அப்பெண்.

'என்ன விடை கூறுவது? அப்படியே கூறினாலும் அது உண்மை என்று நம்புவார்களா?' என்ற எண்ண ஓட்டத்தினுள் போராடியபடி தன் முகத்தைத் திருப்பிக்கொண்டான்.

"நான் தவறாக ஒன்றும் கேட்டுவிடவில்லையே?" என்றார் மீண்டும் அப்பெண்.

ரவிவர்மன் தழதழக்கும் குரலோடு பேசத் துவங்கினான்.

"தாயே என்னைக் காட்டிக்கொடுக்காமல் காப்பாற்றியதற்கு எனது நன்றிகள். நான் யார்? எதற்காக வந்தேன்?.என்று கேட்காதீர்கள். என்னால் பதில் கூற முடியாது" என்று அவரைப் பார்க்காமல் வேறு திசையைப் பார்த்துக்கொண்டு கூறினான் ரவிவர்மன்.

## ஈழத்தில் சூரியன்

**ஜெயராமன்**

ஈழத்து மண்ணில்
இன்றைக்கும் ஓர்
குருச்சேத்திரம்.
பாரத யுத்தம்
பதினெண் நாட்களே
ஈழ யுத்தமோ...

பத்து வயது
பள்ளிச் சிறுவன்
புத்தகப்பையில்
எரிகுண்டு வகைகள்.

புத்தகக் கட்டை
தூக்கி யெறிந்து
துப்பாக்கி தூக்கிடும்
வீரங்கள் அங்கே
கருவிலேயே
விதைக்கப் படுகின்றன.

அங்கே
அபிமன்யுக்கள் மட்டுமே
பிறக்கிறார்கள்.- அவர்கள்
வித்தைகள் கற்பதும்
கருவிலேதான்.

அங்கே
யுத்தத்திற்காகவே
கற்பைச் சுமக்கும்
வீரத்தமிழச்சிகள்.

ஈழத்தமிழனின்
ரத்தத் துளிகள்
அடிவானத்தில்
தெரித்து விழுந்ததால்
ஈழத்தில் சூரியன் கூட
சிவந்தே பிறக்கிறான்...

மீண்டும் அவர்களுக்குள் மௌனம். தன்னைக் காப்பாற்றியவரை மதியாமல் நடந்துகொள்கிறோமே என்ற உணர்வு அவனை வதைக்க, அவனை வறுபுறுத்தும் விதமாக மேலும் கேளவிகளைத் தொடுக்க விரும்பாத அந்தப் பெண்மணிக்கோ ஆபத்திலிருந்து அவனைக் காப்பாற்றிய திருப்தி. குடிசையினுள் வீசிய லேசான தென்றல் தீபச்சுடரைத் தழுவியது. அதனால் லேசாக அசைந்தாடிய சுடர் அணைந்துவிடுமோ என்ற அச்சத்தால் திரியைச் சிறிது வெளியிலெடுத்து சுடர் நன்றாக எரிய வழிவகுத்தார் அப்பெண்.

அப்போது, ரவிவர்மன் தன் வாளை உருவினான். பெண்மணி திகைத்தார். கண்களை அகல விரித்து, சுடரின் ஒளியில் பொன்னிறமாக மின்னும் வாளையும் அவனது முகத்தையும் மாறி மாறிப் பார்த்தார்.

"என்ன தம்பி இது?" என்று அவர் ஏதோ கூற அவர் முற்படுகையில் 'எதுவும் பேசாதீர்கள்' என்பதைப் போன்று சமிக்ஞை செய்தான் ரவிவர்மன். ரவிவர்மனின் செய்கைக்கு அடிபணிந்த அப்பெண்ணின் மனமோ விபரீதம் ஒன்று நிகழப்போகிறது என்று மட்டும் கூறியது.

ரவிவர்மன் அடிமேல் அடி வைத்து அக்குடிசையிலுள்ள சாளரத்தின் வழியே வலது புறமும் இடது புறமும் தன் பார்வையை உலாவவிட்டான். அப்பொழுது அவன் கண்ட காட்சி லேசாக அவனை நடுக்கமுறச் செய்தது. சிறிது தூரத்தில் ஒரு குதிரை மட்டும் தனியாக நின்று குடிசையையே வெறித்துக்கொண்டிருந்தது. அக்குடிசையின் கதவு அருகே நிலவின் ஒளியில் ஒரு நிழல் தெரிந்தது. அதையே சில வினாடிகள் பட படப்போடு வெறித்தான் ரவிவர்மன். அவன் இதயத்துடிப்பு அதிகரித்தது.

நிழல் இயங்கத் துவங்கியது. உறையினிலிருந்து வாளை உருவியது. 'வாசலில் ஒருவன் மறைந்திருக்கிறான்; அவன் வாளையும் உருவிவிட்டான்; இதற்கு மேல் தாமதிக்கக்கூடாது' என்று உணர்ந்த ரவிவர்மன் துரிதமாக இயங்கினான். வாசலில் ஒளிந்திருந்தவனின் முன்னால் மின்னல் வேகத்தில் தோன்றி அவன் குரல்வளையை அறுத்தான் ரவிவர்மன்.

நொடிப்பொழுதில் இவ்வளவு வேகத்தில் ஒருவனை சாதரணமாக கொன்று தீர்த்த ரவிவர்மனை அதிர்ச்சியாகவும் பயந்த முகத்தோடும் பார்த்தார் பெண்மணி. அவரால் கத்தமுடியவில்லை. அவன் குரல்வளையை அறுக்கும்போது வந்த லேசான மரண ஓலம் அவர் கண்களில் நீர் துளிர்க்க வைத்தது. இறந்த உடலை குடிசையினுள் தூக்கி வந்து ஓரிடத்தில் வைத்தான் ரவிவர்மன். பிறகு, பயந்து வெளிறிப்போன அப்பெண்ணின் முகத்தை உறுதியான பார்வையுடனும் மன்னிப்பு கோரும் பாவத்துடனும் பார்த்தான் ரவிவர்மன்.

"தாயே! என்னை மன்னியுங்கள்! நான் இவ்வாறு செய்யாவிடில் இவனுக்கு ஏற்பட்ட கதி நமக்கு நேர்ந்திருக்கும்"

பெண்மணி கீழே கிடத்தப்பட்டிருக்கும் உடலை நோக்கினார். சிறிது நேரத்திற்கு முன் தன்னிடம் விசாரித்த அதே வீரன் தான் அவன் என்பதை நொடிப்பொழுதில் தெரிந்துகொண்டார். பிரேதத்தின் கண்கள் இன்னும் மூடாமல் இருப்பதையும் அவனுடைய கண்கள் குடிசையின் விட்டத்தை வெறித்தபடி இருப்பதையும் கண்ட அவர், சகிக்கமுடியாமல் பிரேதத்தின் மீதிருந்து பார்வையை விலக்கிக்கொண்டார்.

"தாயே! இந்த உடலை இரவு முடிவதற்குள் மறைத்துவிடவேண்டும். இங்கு புதைப்பதற்கு மறைவான இடமிருக்கிறதா?"

பெண்மணி, ரவிவர்மனை கொதிக்கும் மனதோடும் எரியும் விழிகளோடும் முறைத்தார். ஆண்டவன் கொடுத்த உயிரைக் கொல்வதற்கு இவனுக்கென்ன உரிமை இருக்கிறதென்று தனக்குள் கேட்டுக்கொண்டார். ஆகையால், எதுவும் பேசாமல் மௌனமாகவே இருந்தார். அவன் கையிலுள்ள வாளையும் அதில் வழிந்துகொண்டிருக்கும் குருதியையும் நோக்கினார்.

"வாளை எடுத்தோம்; கழுத்தை அறுத்தோம் என்று கொன்றுவிட்டாயே? வீரபுர வீரனுக்கு இது தான் அழகா?"

ரவிவர்மன் திகைத்தான். 'இவர் எனன சூனியக்காரியா? அல்லது மாய மந்திரம் புரிபவரா? தான் வீரபுரத்தவன் என்பதை எதை வைத்துக் கண்டுகொண்டார்?' என்று

தனக்குள்ளாகவே கேட்டுக்கொண்டான்.

## கவிதைக்குறள் திருக்குறள்தெளிவுரை

செந்தமிழ்தாசன்

அறம்-பாயிரம், இரண்டாம் அதிகாரம் - வான்சிறப்பு

**15.** கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை.

பெய்யாது கெடுத்து
யாரும் வையாது
கொடுக்கும் மழை...

வையத்துள் வாழ்வாரை
தான் பொழியாது
துவளச் செய்து
பொதிந்து கிடப்பதும்
அப்போது பழித்தோரை
மெத்தப் பெய்து
ஆட்கொள்வதும் எல்லாம்
உடையது மழையென்பதே........

**16.** விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

மழைநீர் மேகக்கூட்டம்
மண்ணிற்குத் துளி
துளியும்
தராது போனால் - ஈங்கு
பசும்தளிரும் புல்லும் பூண்டும்
மண்ணில் துளிர்க்காது
பச்சைநிற ஆடை
மரணமேற்கும்....

ஓரறி உயிர் முதலாய்
முடக்கம் கொள்ளும்
ஏதுயிர்க்கும் ஏழ்மை
வந்துசேரும்...

"தாயே!" என்றான் கலங்கிய கண்களோடு.

"உனது வாளின் முத்திரையை வைத்து நீ வீரபுரத்தைச் சேர்ந்தவன் என அறிந்துகொண்டேன். குடிசையின் கொல்லைப்புறத்தில் மரங்கள் நிறைந்த காடு இருக்கிறது. அதில் உடலைப் புதைத்துவிடு. வெகு தூரத்திலிருந்து வந்திருப்பாய் போலிருக்கிறது. சிறிது கண்ணுறங்கு" என்று கூறியபடி வெளியில் உள்ள திண்ணைக்குச் சென்றார்.

திடீரென்று அவரின் மாற்றத்திற்கு காரணம் புரியாமல் விழித்தான் ரவிவர்மன். அவர் தனக்கு உதவி செய்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள வெகுநேரமாகவில்லை அவனுக்கு. காரணம் தெரியவில்லையென்றாலும் நிச்சயம் அதில் காரணம் ஏதோ ஒளிந்திருக்கிறது. இப்பொழுது நமக்கு உறக்கம் தேவை தான் என்று மனதினில் எண்ணியபடி துயிலில் இறங்கினான். அவனது வலது கரம் வாளின் மீதும் அவனது எண்ணங்கள் அடுத்து என்ன நடக்கப்போகிறதோ என்ற மாய சுழற்சியிலும் இருந்தன.

நடுசாமம் கடந்து இரண்டு நாழிகைகள் கடந்த சமயம் அவன் தோளினை யாரோ உலுக்குவதைப் போலவும் துயிலை யாரோ கலைப்பது போலவும் கனவு கண்டான். அவனது இமைகள் திறந்தன. அது கனவில்லை நிஜம்; பெண்மணி தான் அவன் துயிலைக் கலைக்கப் போராடிக்கொண்டிருந்தார்.

"தம்பி, சீக்கிரம்! இவ்வுடலை மறைக்கும் நேரம் வந்துவிட்டது. இப்பொழுது காவல் வீரர்களின் ரோந்து குறைந்திருக்கும். இந்த உடலை நீ கொல்லையின் பின்புறமாக உள்ள காட்டினில் புதைத்து விடு" என்றார்.

மறுபேச்சு பேசாமல் உடலைத் தன் தோளில் சுமந்து குழி தோண்ட உதவும் கருவிகளை எடுத்துக்கொண்டு வாசலை நோக்கிப் புறப்பட்டான்.

"நில்!" என்றார் அவர்.

ரவிவர்மன் திரும்பிப் பார்த்தான்.

"மறவாமல் உன் வாளையும் இவ்வுடலுடன் சேர்த்துப் புதைத்துவிடு" என்றார்.

அவனும் 'சரி' என்பது போன்று தலையசைத்து குடிசையின் பின்னாலிருக்கும் காட்டினுள் சிறிது தூரம் நடந்து ஓரிடத்தில் உடலை வைத்தான். புதர்கள் மண்டிக் கிடந்த ஓரிடத்தைத் தேர்வு செய்து அவசர அவசரமாக குழி தோண்டினான். வியர்வைத் துளிகள் உடலை நனைத்தன. பயமும் எரிச்சலும் ஒரு சேரக் கலந்து ஒரு வழியாக குழி தோண்டி முடித்தாகிவிட்டது. உடலைக் குழியில் கிடத்தி தன் வாளையும் அக்குழியினுள் போட்டு மண்ணை மூடினான். பின்னர் மீண்டும் குடிசைக்கு வந்தான். அவன் வரும் வரை அப்பெண்மணி வாசலிலேயே உட்கார்ந்துகொண்டிருந்தார். ரவிவர்மன் வந்தவுடன் அவனை உள்ளே அழைத்துச் சென்றார்.

"எல்லாம் நல்லபடியாக முடிந்தது தானே?" என்றார் அவர்.

'ஆமாம்' என்பது போன்று தலையாட்டினான் ரவிவர்மன். பெண்மணியின் முகத்தில் நிம்மதி பிறந்தது. ரவிவர்மன் சுவற்றின் மேல் தலை சாய்த்தபடி அமர்ந்திருந்தான்.

"தாயே, எனக்கு சில சந்தேகங்கள் முளைத்திருக்கின்றன. அதற்கு பதில் கூறுவீர்களா?"

"கேள் தம்பி"

"நான் உள்ளே ஒளிந்திருந்தை எவ்வாறு கண்டுகொண்டீர்கள்?"

"நான், உணவு கேட்டுவிட்டதால் அதைக் கொட்ட வெளியில் வந்தேன். அப்பொழுது நீ ஒரு மரத்தின் பின்னால் ஒளிந்திருந்ததைக் கவனித்தேன். நீ மெல்ல மெல்ல குடிசையின் அருகே வந்தாய். காவல் புரிந்திருந்த ஒரு வீரன் உன்னைக் கண்டுகொண்டான். நீ உடனே இங்கு வந்து ஒளிந்துகொண்டாய். அதன் பின் நடந்தவை

அனைத்தும் உனக்கே தெரியுமே"

ரவிவர்மன் அவர் கூறிய அனைத்தையும் மனதினுள் ஏற்றிக்கொண்டான்.

"ஏன் என்னைக் காட்டிக்கொடுக்கவில்லை என்ற கேள்விக்கு நீங்கள் இன்னும் விடை தரவில்லையே தாயே"

"குழந்தாய்! நானே சபிக்கப்பட்ட பிறவி போல் வாழ்ந்துகொண்டிருக்கிறேன். இதில் உன்னையும் காட்டிக்கொடுத்து மேலும் பாவத்தைத் தேடிக்கொள்ள நான் விரும்பவில்லை" என்று கூறியபடி கண்களில் பெருகிய நீரைத் துடைத்தார்.

"நீங்கள் யார் தாயே? உங்களைப் பற்றி தெரிந்துகொள்ளலாமா?" என்று கேட்டான் ரவிவர்மன்.

"நான் அயோத்தியவன நாட்டைச் சேர்ந்தவள். இப்பொழுது நான் நாகவனத்தில் அடிமையாக வாழ்ந்துகொண்டிருக்கிறேன். எனது பிள்ளை காணாமல் போய்விட்டான். எனது பெண்ணோ என்னுடன் சேர்ந்து அடிமையாகிவிட்டாள்" என்று கூறியபடி மேலும் கண் கலங்கினார்.

"மன்னித்துவிடுங்கள் தாயே! உங்களின் நிலை தெரியாமல் கேட்டுவிட்டேன்"

"பரவாயில்லை தம்பி" என்று சிறிது நேரம் நிறுத்தினார் அவர். "நீ ஒற்றர் வேலை பார்க்க வந்திருக்கிறாயா?" என்று கேட்டார்.

'தான் வந்த விஷயம் இதுவென்று ஊகித்து விட்டாரே இவர்' என்று எண்ணிய ரவிவர்மன் அவர் தனக்கு செய்த உதவியை எண்ணிப்பார்த்து 'இவர் ஆபத்தானவர் அல்ல. ஆதலால் தனக்கு உதவி புரிந்த இவரிடம் உண்மையைச் சொல்வதில் தவறில்லை' என்று எண்ணியபடி, "ஆமாம் தாயே! அதற்குத்தான் வந்திருக்கிறேன்" என்றான்.

அதை அவர் ஏற்கனவே ஊகித்திருந்ததால் அதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளாமல் மீண்டும் அணையத் துடித்த தீபத்தை அணையாதவாறு பார்த்துக்கொண்டார்.

"தாயே, எனக்கு ஒரு உதவி செய்வீர்களா?" என்று கேட்டான் ரவிவர்மன்.

கல்லை செதுக்கினேன் உன் உருவம்
கண்ணால் செதுக்கினேன் நம் காதல்
இதயம் சலவை கல்லாய் அடிவாங்குகிறது ...!!!

கே இனியவன்

"என்னால் முடிந்த உதவியைச் செய்கிறேன் குழந்தாய்" என்றார் அவர்.

"உங்கள் பெயர் என்ன?"

சிறிது தயக்கத்துடன் "ஆண்டாள்" என்ற அவர் "இதுவா நீ கேட்ட உதவி?" என்றார் நகைப்பின் ஊடே.

## வற்றிப் போகும் வாத்தியார்

இமாம்தீன்

வாத்தியார் என்கிறோமே - இவர்
வசதிகாரர் இல்லை
ஒரு வைத்திய நிபுணர்
விண்வெளிக்கான வழிகாட்டி
பல நூற்று வகிபாகி ....

தலைகாக்கும் இரத்த வழங்கி
இவர் சேமித்த அறிவை
பிறர் கணக்கில் வைப்பிலிடும்
'மாணவ' வங்கி
மானசீகத் தாங்கி.

மாற்றான் பிள்ளைக்கு
அறிவினைக் கொடுக்க
செலவழித்த காலங்களில் -இவர்
'நினைத்திருந்தால்'
மாடமாளிகைகளை
கட்டி மாட்சிமையோடு வாழ்ந்திருக்கலாம்

வெண்கட்டிப் பொடிகள்
எத்தனை முறை
இவர் இதயத்தை அடைத்திருக்கும்
'என்றாலும்'
தன்னுடல் பொடியாகும் வரை
கல்வியினை செவ்வனே கொடுக்க
போராடும் மனிதர் இவர்.

உயிரற்ற மெழுகுவர்த்திக்கு ஏன் இவரை
ஒப்பிட வேண்டும்.
உயிரை உருக்கி அறிவைப் பெருக்கி
ஒளி தரும்
இம்மனிதர்க்கு யாரும் ஈடில்லை.
குரல்வளை கிழியக் கத்திக் கத்தியே
கழிந்து போகிறது இம்மாமனிதர் வாழ்வு.

மூளைகளைச் சுத்தப்படுத்தி
நாளைய பிரஜைகளை உருவாக்கும்
மூலிகை இவர்.
கருவெல்லாம் இனி குருக்களை
கூப்பியே உருவாகட்டும்
சிசுக்கள் பிறக்கையில்
'அம்மா' என்பதற்கு அடுத்தபடியாக
'ஆசான்' என அழைத்துக்
கொண்டே பிறக்கட்டும்.

தன்னிலையில் உயர்வு இல்லை
இவர் மூலம் தனக்கு மேல்
எத்தனை எத்தனை அறிவாளிகள்
அங்கும் இங்கும்

மூளைக்கு விருந்தளிக்கும் இவர்
மூலையில் முடங்கிக் கிடந்தால்
மடியும் வரை மடியிலில்லை யாரும்
மாய்ந்த பிறகே
வாயிலை நாடும் சிலர் மட்டும்.

"இல்லை தாயே! என்னை உங்களால் அரண்மனைக்குள் அழைத்துச்செல்ல முடியுமா?"

ஆண்டாள் சிறிது யோசித்தார்.

"என்ன தாயே யோசிக்கிறீர்கள்?"

"ஒன்றுமில்லை குழந்தாய். காலையில் அயோத்திய வனத்தை சேர்ந்தவர்கள் அரண்மனை தோட்டத்திற்கு வேலைக்கு செல்வார்கள். அவர்களுடன் கலந்து நீ செல்லலாம். ஆபத்து நேராமல் பார்த்துக்கொள். இப்பொழுது நீ கண்ணுறங்கு" என்று கூறியபடி எழுந்து சென்றார்.

ரவிவர்மன், 'இது வரை நமக்கு பாதகமில்லாமல் எல்லாம் நடக்கிறது' என்ற நிம்மதியினில் தன் மனதினை நுழைந்து சிறிது மன சாந்தியோடு உறங்கிப்போனான்.

⋆ ⋆ ⋆

வீரபுர அரண்மனை நிசப்தத்திலும் இருளிலும் மூழ்கியிருந்தது. அரண்மனை முகப்பிலும் மதில் சுவரின் மேலேயும் ஏற்றப்பட்டிருந்த தீப்பந்தத்தின் ஒளியில் சில வீரர்கள் அரண்மனைக்கு காவல்புரிந்துகொண்டிருந்தனர். வீதிகளிலும் காவல் வீரர்கள் பரபரப்போடு வலம் வந்து தங்கள் பணியைச் செவ்வனவே செய்துகொண்டிருந்தனர்

அரண்மனையே அமைதியாக இருந்த நேரத்தில் மணியம்மையின் உள்ளம் மட்டும் அமைதியாக இல்லை. எதையோ நினைத்து வெந்துகொண்டிருந்தார் அவர். சாளரத்தின் வழியே பால் நிலா வெண்ணிற கதிர்களை பொழிந்தபடி இருந்ததையும் அவர் கவனிக்கவில்லை; விரும்பவுமில்லை.

படுக்கையின் அருகிலிருந்த மேஜையில் தட்டு நிறைய பழங்களும் அதை அறுத்துச் சாப்பிட கத்தியும் வைக்கப்பட்டிருந்தது. அதைச் சிறிது நேரம் அனல் ததும்பிய விழிகளோடு உற்றுநோக்கிய மணியம்மை கத்தியை எடுத்துக்கொண்டு அவ்வறையை விட்டு வெளியே வந்தார்.

நீண்ட கூடத்தினுள் நடந்து போன அவரை தூணின் பின்னால் மறைந்திருந்த ஓர் உருவம் மெல்ல எட்டிப் பார்த்தது. அவர் கையிலிருந்த கத்தியையும் நோக்கியது. தன்னை யாராவது கவனிக்கிறார்களா? என்று ஓரிருமுறை சுற்றும் முற்றும் நோக்கியபடி சென்ற மணியம்மையின் கண்களை சுவற்றில் மாட்டப்பட்டிருந்த ஒரு சித்திரம் கவர்ந்தது. சித்திரத்தை உற்றுநோக்கினார்.

அரசரின் தாயாருடைய சித்திரம் அது. ஓர் ஆசனத்தில் அவர் அடக்கமாய் உட்கார்ந்திருப்பதைப் போன்று வரையப்பட்டிருந்த அச்சித்திரத்தை ஏளனத்தோடு பார்த்துவிட்டு நேராக அரசர் இருக்கும் அறையை நோக்கி நடந்த மணியம்மையை தூணின் பின்னால் மறைந்திருந்த இன்னோர் உருவம் வேவு பார்த்தது. அது வெறும் யாரும் அல்ல; ராஜகுருவே தான். விஷமப் புன்னகையோடு மணியம்மை என்ன செய்கிறார் என்று மறைந்திருந்து கவனித்துக்கொண்டிருந்தார் ராஜகுரு.

மணியம்மை, மன்னரின் அறையின் அருகே சென்று அதைத் திறக்க கதவினில் கைவைத்தபோது ஒரு சலசலப்பு மணியம்மையையும் ராஜகுருவையும் திடுக்கிடச் செய்தது. சலசலப்பு வந்த இடத்தை நோக்கி மணியம்மை ஓடினார். சித்திரம் மாட்டப்பட்டிருந்த சுவற்றை கலவர விழிகளோடு நோக்கிவிட்டு தன் அறையை நோக்கி ஓடி கதவினைத் தாழிட்டுக்கொண்டார்.

அந்த சித்திரத்தில் என்ன இருக்கிறதென்று குழப்பத்தோடு அங்கே சென்று பார்த்த ராஜகுரு அதிர்ச்சிக்குள்ளானார். அந்த சித்திரம் காணாமல் போயிருந்தது.

*தொடரும்...*

## பரிணாமம்

**மருதூரான்**

குத்தகைக்கு நிலமெடுத்து
முத்துசம்பா விதவிதச்சி
குருத்தரும்பி வருகையில
குளிர்ந்திருச்சி என் மனசு

⋆⋆⋆

குளத்தோரம் நீ நடக்க
குனிஞ்சி நானும் களை பிடுங்க
உச்சிமண்ட காயயில
பச்சத்தண்ணி தாறபுள்ள

⋆⋆⋆

வச்ச கறிக்குழம்பும்
வறுத்த கருவாடும்
வந்து நீ பரிமாறையில

வாழ்க்கை முடிஞ்சாலும்
வாய்க்கு ருசி போகாது

⋆⋆⋆

கோடையில ஓடை கட்டி
மாரியில மதகு வெட்டி
வெள்ளாமை வெட்டயில
வெட்டி போட்டான் பல உசிர

⋆⋆⋆

மூவிரண்டு மாசத்துல
மொத்தமா தாரனெண்டு
வட்டிக்கு வாங்கினது
வயலோட போயிரிச்சி

⋆⋆⋆

வெளஞ்ச நெல்லு வேர் பிடிக்க
நாவரண்டு நான் தவிக்க
நட்டாற்றில் விட்ட நிலை
என்கதையாய் ஆயிரிச்சி

⋆⋆⋆

அர்த்தசாமத்தில அயர்ந்த
நேரத்தில
விரட்டிச் சொன்னாங்க
விடியுமுன்ன எல்லாரும்
விட்டெழும்போனும் எண்டு


⋆⋆⋆

மூட்டமுடிச்செல்லாம்
முண்டிக்கிட்டு வண்டிகட்டி
மூடின வீட்ட மட்டும்
முடியாமல் விட்டுவிட்டு
மூச்சிறைக்க வெளிக்கிட்டு
முகாமுக்கு வந்துசேர்ந்தோம்
அகதியானோம்...!

⋆⋆⋆

## உயிர் மூன்றெழுத்து கவிதை மூன்று வரி

கே இனியவன்



என் இதயத்தில் குடியிருப்பவளே
மெதுவாக மூச்சு விடுகிறேன் -என்
மூச்சுகாற்று சுட்டுவிடகூடாது

***

கல்லை செதுக்கினேன் உன் உருவம்
கண்ணால் செதுக்கினேன் நம் காதல்
இதயம் சலவை கல்லாய் அடிவாங்குகிறது ...!!!

***

காதலித்து பார் உள்ளம் சுத்தமாகும்
கவிதை எழுது உலகம் சுத்தமாகும்
இரண்டையும் செய்பவன் ஞானி

***

உலக போதையிலேயே கொடூரம்
உன் போதை கண் தான் -இன்னும்
போதையில் இருந்து மீளவில்லை

***

நெற்றி கண் திறந்தபோது நக்கீரன் எரிந்தார்
நீ கண் திறந்த போது நான் எரிந்தேன்
முதலாவதில் மீட்சி இருந்தது உன்னில் ...?

***

நீ வேறு நான் வேறு இல்லை
வாழ்க்கை வேறு காதல் வேறுமில்லை
உன் நினைவு வேறு உணர்வு வேறுமில்லை

***

நான் ஒருதலை காதலாக இருந்திருந்தால்
வலியை உனக்கு தந்திருக்க மாட்டேன்
இருதலையாக உனக்கும் வலியை தருகிறேன்

***

உன்னை மறக்கும் இதயம் வேண்டும்
என்னை மறக்கும் இதயம் வேண்டும்
மரத்துப்போகும் வாழ்க்கை வேண்டும்

***

பெண்ணை புரிந்து கொள்ளவது இன்பம்
புரிந்து கொள்ளாமல் இருப்பது அதைவிட இன்பம்
காதல் இவை இரண்டுக்கும் நடுவில் ஒரு யுத்தம்

***

சின்ன சின்ன சண்டை போட்டு ஒத்திகை
பார்த்தவளே - சொல்லியிருந்தால் நானும்
பயிற்ற பட்டிருப்பேன் வழியில் இருந்து தப்ப, ,,!!!

***

நீ வானவில் போல் அழகாகவும் இருக்கிறாய்
அழிந்து போகும் கலை பொருளாகவும் இருக்கிறாய்
பாவம் என் இதயம் வளைந்து போகிறது...!!!

***

நான் காதல் புறா உன்னை சுற்றி சுற்றி வருகிறேன்
நீ காதல் கழுகு கொத்தி கொத்தி கலைக்கிறாய்
நம் காதல் செத்து செத்து பிழைக்கிறது, ,,,!!!

***

# குறளின் குரல்

அறத்துப்பால் - இல்லறவியல். அதிகாரம் - 05. இல்வாழ்க்கை

சுந்தர் பருஷோத்தமன்




*41: இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.*

இல்வாழ்வா னென்போன் நல்லாளோடியைந்து
நல்லறம் பேணுபவன் - அவன் கடனோ
பெற்றார்க்குந் தான்பெற்ற பிள்ளைக்கு முற்றார்க்கும்
நற்றுணையாய் நிற்பதுவே யாம்.

*42: துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.*

பற்றிலா துறவிக்குந் துணையாவான் – பசிநிறைந்து
வாடும் வறியோர்க்குந் துணையாவான் – திக்கற்று
திரிந்திவனைச் சேர்ந்துபின் னிறந்தார்க்குந் துணையாவான்
மனையாளோ டுடன்வாழ்ந்து இல்லறம் பேணுபவன்.

*43: தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.*

தென்புலந்திகழ்கின்ற முன்னோர்; வீடுநல்குந் தெய்வம்;
விருந்தினர்க்கூட்டம், கூடிவாழுஞ் சுற்றமொடு தானுமாய்
ஐவர்க்குஞ் செய்யும் அறநெறி போற்றுதல்
இல்வாழ்வு கொள்வானின் சீர்.

*44: பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்.*

பழிக்கஞ்சி நந்வழி நாடுவான் நாடி
தேடின பொருளதை உற்றார்க்குப் பகுத்துண்ணும்
பண்புடை வாழ்வினன் பரம்பரைப் பாழாகா - வாழுமது
நிலந்தனில் வளங்கொண்டு நலங்கண்டே.

*45: அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.*

மனைவிக்கு மக்கட்கு மன்பு நல்கி
மற்றோர்க் குதவு மறம் படைத்து
வாழ்கின்ற வாழ் வதுவே – இல்வாழ்வை
சூழும் பண்பும் பயனுமாகும்.

*46: அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவது எவன்.*

அறவழி தன்னிலில் வாழ்வது வாற்றுவார்
பெறற்கரும் பயன்தனைப் பெறுவராம் – அஃதன்றி
பிறவழி தன்னிலில் வாழ்வது வாற்றிடின்
பயனொன்று மில்லையாம் கொள்.

*47: இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை.*

இல்வாழ் வதன்கண் அறநெறியில் நின்றோன் - பிறவழியில்
பொல்லாப் பிறப்புய்ய மெனக்கெடும் பிறர்க்கெல்லாம்
திறத்தாலே மேம்பட்டுத் திகழ்வானாம் – அவனே
அத்தன்மைக் கொண்டார்க்குந் தலை.

*48: ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.*

தானு மறந்தனில் வழுவாது நின்று
மற்றோர்க்கும் மறமில்லா நந்நெறியூட்டி
வாழும் வகையோனின் இல்வாழ் வதுவே
தவஞ்செய்வார் வாழ்வுக்கும் மேல்.

*49: அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று.*

இல்வாழ்வும் துறவாழ்வும் நல்வாழ்வா மதிலே
அறமெனப்பட்டது இல்வாழ்வாம் – துறவாழ்வும்
பிறர் பழிப்பிற் கிடமின்றி இருத்தலின் அஃதும்
நல்லற மெனப் பட்டது.

*50: வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.*

வாழும் வாழ்வதை இல்லாளோ டறநெறியில்
வாழ்வாங்கு வாழும் இல்வாழ்வா னவனும்
வானில் வாழும் வானோருள் ஒருவனாய்
வாழும்போதே வழுத்தத் தக்கவன்.

- தொடரும்

# சிநேகிதியுடன் தனிமையில் சில நிமிடங்கள்

15 - அமானுஷ்ய சக்தியும் மனதின் சக்தியும்

பூங்கோதை

வணக்கம் நட்பு நெஞ்சங்களே...

*பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்*

*பற்றுக பற்று விடற்கு - திருக்குறள்*

பற்றில்லாதவனாகிய கடவுளுடைய பற்றை மட்டும் பற்றிக் கொள்ள வேண்டும், உள்ள பற்றுக்களை விட்டொழிப்பதற்கே அப் பற்றைப் பற்ற வேண்டும்.

என்ற திருவள்ளுவரின் களவியல் சிந்தனையோடு சிநேகிதிக்குள் பயணிக்கலாம் வாங்க.

அன்புள்ள சிநேகிதிக்கு

என்னுடைய பெயர் ஹரி நான் ஒரு நல்ல பொறியியல் கல்லூரியில் 3-ம் ஆண்டு படித்து கொண்டிருக்கிறேன். எனக்கு அமானுசிய சக்திகளை பற்றி ஆராய்வதில் ஆர்வம் அதிகம். கடவுள், பேய் உள்ளதா இல்லையா? இதை பற்றி தங்களுக்கு தெரிந்த உண்மை பற்றி கூறுங்கள். இல்லை நான் என்னுடைய காலத்தை விரயமக்கி கொண்டிருக்கிறேனா?

வணக்கம் நண்பா...

முதலில் உங்களுக்கு நான் எழுதிக்கொண்டிருக்கும் 'மதங்களின் பிடியில்..' என்ற பதிவை அறிமுகம் செய்கிறேன். இது முழுக்க முழுக்க உங்கள் கேள்விக்கான பதில் இல்லாவிட்டாலும், கடவுள், பேய் என்பவற்றில் எனக்கு நம்பிக்கை இருக்கிறதா என்பது பற்றி உங்கள் கேள்விக்கான பதிலுக்கு சிறு விளக்கமேனும் கொடுக்கும் என நம்புகிறேன்.

நண்பா, இயற்கையில் எமக்கு மீறிய சக்திகள் இருக்கின்றன என்பதில் எனக்கு ஓரளவு நம்பிக்கை இருக்கின்றது. ஆனாலும் மற்றவர்கள் அதை பார்ப்பது போல் பூதாகாரமாக அதை நான் பார்ப்பதில்லை. அமானுஷ்யம் என்று ஒன்று இருந்தால் அது சுவாரஷ்யமானதாகத்தான் இருக்கும் என்ற எதிர்பார்ப்பைப் பல எழுத்தாளர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். திகிலூட்டும் மர்மங்களும், பரபரப்பும், எதிர்பார்ப்புகளும், எப்படியோ எமக்குள் குடியேறிவிட்ட சில அனுபவங்களும் கூட அமானுஷ்யத்தை சுவாரஷ்யமானதாக ஏற்படுத்தியிருக்கிறது என்று நினைக்கிறேன்.

என்னுடைய பார்வையில் கடவுள், பேய் என்பன பற்றி நான் அறியும் பல கதைகள் அல்லது சம்பவங்கள் பெரும்பாலும் யாரோ ஒருவருடைய அல்லது ஒரு குழுவினருடைய மனத்தோற்றங்களே என்று நம்புகிறேன். சிறு குழந்தையாக இருக்கும் போது எனக்கு நிறைய பேய் பிசாசு பயம் இருந்தது. ஆனால், மனோதத்துவ மருத்துவர் டாக்டர் கோவூர் எழுதிய 'மனக்கோலங்கள்' என்ற நூலை என்னுடைய 8 வது வயதில் படித்த போது அந்த நம்பிக்கைகளில் 50% தகர்ந்து போனது. (அந்த நூலைப் படித்து நீண்ட காலம் ஆகிவிட்டதால் பல விடயங்களை மறந்துவிட்டேன். அந்த நூல் இப்பொழுது எங்கேனும் கிடைக்கும் என்றால் அதை வாங்கவேண்டும் என்றா ஆவல் உண்டு. உங்களில் யாருக்கேனும் கிடைக்குமானால் எனக்கும் தெரியப்படுத்துங்கள்...)

நண்பா, அமானுஷ்யம் என்பது எத்தனை சுவாரஷ்யமானதாக இருந்தாலும், அது நமக்கு வாழ்வில் பயன்படுமா என்று சிந்தித்துப் பார்த்தால் பெரும்பாலும் இல்லை என்றே தோன்றுகிறது. எனவே அது பற்றி ஆராய்வது நேர விரயம் தான் என்பதே என் அபிப்பிராயம்.

நண்பா, அமானுஷ்ய சக்திகளை விட மனத்தின் சக்தி மிகப்பெரியது. அதை நீங்கள் ஆராய்வதும் அடைவதும் மிகப்பெரும் பலனை அடைய முடியும். இதை எங்கே போய் ஆராய்வது என்று யோசிக்கிறீர்களா? நண்பா, நீங்கள் எங்கேயும் தேடி அலையத் தேவை இல்லை. அது உங்களுக்குள்ளேயே இருக்கிறது. அதைவெளியில் கொண்டு வருவது எப்படி என்பதற்கான வழிமுறைகளையே நீங்கள் தேடி அறிய வேண்டும். உங்கள் மனத்தை ஆராயுங்கள், அதையே அமைதிப்படுத்துங்கள், ஆற்றுப்படுத்துங்கள், கட்டுப்படுத்துங்கள்... இங்கே நீங்கள் அமானுஷ்யத்தில் எதிர்பார்ப்பதை விட அதிக சக்தியை அடைந்து கொள்ள முடியும்.

மனத்தின் சக்தி பற்றி இணையத்தளங்களில் தேடிப்பாருங்கள். ஏராளமாகக் கொட்டிக் கிடக்கின்றன. நீங்கள் அடைவது உங்கள் வாழ்க்கைக்கு பயனுள்ளதாக அமையும். இதற்கு மனத்தைக் கட்டுப்படுத்தும் பயிற்சிகளும் தியானப்பயிற்சிகளும் மிகவும் உதவும்.

மனதின் சக்தியைக் கொண்டு சாதனை நாட்டிய பலர் உலக வரலாற்றில் இருக்கிறார்கள். அவர்களைபற்றி சில விடயங்களைத் தருகிறேன்.

நமது இந்தியாவைச் சேர்ந்த யோகி ஸ்வாமி ராமா என்பவர் தன் மனோ சக்தியால் தன் உடலில் மாற்றங்களை ஏற்படுத்த வல்லவராக இருந்தார். மெனிங்கர் ஃபௌன்டேஷன் என்ற அமெரிக்க மனவள ஆய்வு நிறுவனம் அவரை 1070 ல் 3 நாட்கள் பரிசோதனை செய்த போது ஒரே நேரத்தில தன் வலது கையிலும் இடது கையிலும் 11 டிகிரி(F) வித்தியாசத்தில் இருக்கச் செய்து காட்டினாராம்.

அதே மெனிங்கர் ஃபௌன்டேஷன் ஹொலண்டைச் சேர்ந்த ஜேக் ஷ்வார்ஸ் என்பவரையும் ஆராய்ச்சி செய்தது. அவருடைய கையில் பெரும் ஊசி ஒன்றால் குத்தியும் இரத்தம் கசியாததைக் கண்டார்கள். பின்னர் அவரை இரத்தத்தைக் கசிய விடும்படி சொன்ன போது அடுத்த கணம் இரத்தம் பெருகத் தொடங்கியது. பின்னர் மீண்டும் அதை நிறுத்தும்படி ஆராய்ச்சியாளர்கள் சொன்னார்கள். உடனே அவர் இரத்தம் பெருகுவதை நிறுத்திக் காட்டினார். இதுபோலவே சிகரெட்களால் கையில் சுட்ட போது எரிகாயம் ஏற்பட்டதே தவிர உடலில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. எந்த காயமோ அல்லது தழும்போ 24

முதல் 48 மணிநேரங்களுக்குள் அவரது உடலில் இருந்து மறைந்தது. அவருடைய தோல் பல வருடங்களாக எந்த ஒரு வடுவும் இல்லாமல் குழந்தையில் தோல் போல இருந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

அறுவைச்சிகிச்சையின் போது தற்பொழுது பாவிக்கப்படும் மயக்க மருந்துகள் (அனெஸ்தீஸியா) கண்டுபிடிக்கப் படும் முன்னர் ஸ்கொட்லாண்டைச் சேர்ந்த டாக்டர் ஜேம்ஸ் எஸ்டெய்ல் (Dr. James Esdale) நோயாளிக்கு எந்த வலியும் தெரியாதபடி இயற்கைக் கோமா நிலைக்குக் கொண்டு சென்று சுமார் 400 அறுவைச்சிகிச்சைகளை செய்திருக்கிறாராம்.

விஞ்ஞானத்தில் மிகப்பெரும் வளர்ச்சியடைந்திருந்த வல்லரசு நாடான அமெரிக்காவின் சீஐஏ உளவுத்துறை நிறுவனம் கூட மனத்தின் சக்தியைப் பயன்படுத்தியதாக வரலாறு சொல்கிறது. விண்வெளிக்கலங்கள் போன்ற வசதி இல்லாத காலத்தில் ரஷ்யாவுடனான பனிப்போர்க் காலத்தில் ஒரு அபூர்வ சக்தி கொண்ட மனிதரின் உதவியுடன் ரஷ்யாவின் அணுஆயுத உற்பத்திக்கிடங்கை வரைந்ததாம். பனிப்போர் முடிவடைந்தபின் அந்த அணுவாயுத உற்பத்திக் கிடங்கை நேரில் படம் எடுத்துப் பார்த்த போது அதிகாரிகள் திகைத்துப் போனார்களாம். பாதுகாப்புக் காரணம் கருதி அதை வரைந்த நபரின் பெயரை அவர்கள் வெளியிடவில்லை.

உன் நினைவுகளின்
வலியினால் -என்
இதயமும் கல் ஆனது
இப்போது புரிகிறது இறைவன்
ஏன் கல்லாக இருக்கிறான் என்று...
பிரியமானவன்

இது போலவே அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மிக் காட்டரின் காலத்தில் ஒரு அமெரிக்க விமானம் ஆபிரிக்கப்பகுதியில் காணாமல் போயிற்று. ஆமெரிக்காவின் விண்வெளிக்கலங்களால் அதனைக் கண்டு பிடிக்க முடியவில்லையாம். அபொழுது அமெரிக்காவின் உளவுத்துறை அமைச்சர் ஸ்டான்ஸ் பீல்ட்டர்னர் ஒரு அபூர்வ சக்தி கொண்ட பெண்மணி மூலம் அந்த விமானம் இருக்கும் இடத்தை அறிந்து கொண்டு அந்த இடத்தைக் கமிராக்கள் மூலம் மையப்படுத்தி கூர்ந்து நோக்கிய போது விமானம் விபத்துக்குள்ளாகி இருந்தது கண்டு பிடிக்கப் பட்டதாம். இன்று இத்தகைய மனத்தின் சக்தி கொண்ட ஒருவர் இருந்திருந்தால் தொலைந்து போன மலேசியா விமானம் எப்பொழுதோ கண்டுபிடிக்கப் பட்டிருக்கும்...

இப்படி பல சாதனையாளர்கள் மந்த்தின் சக்தியைப் பயன்படுத்தி உலகை அதிசயிக்க வைத்திருக்கிறார்கள். மந்த்தின் சக்தியை பயன்படுத்துவதன் மூலம் நமக்கும் உலகுக்கும் நன்மை செய்யமுடியும் என்பதற்கு இவர்கள் சாட்சிகளாக இருக்கின்றனர்.

பெரும்பாலும் கடவுளை அடைய வேண்டி செய்யப்படும் தியானங்களில் மனது ஒருநிலைப்படுத்தப்படுவதால் மனத்தின் சக்தி அதிகரிக்கிறது. ஆனால் அந்த சக்தி



தூங்கடா தம்பி தூங்கு
நீ விழித்தால் பசி என்று
சொல்வாய் அதை கேட்கும்
கொடுமையை விட நீ
தூக்கமாய் இருகிறாய்
என்ற நிம்மதியில்
இருப்பேன்
தூங்கடா தம்பி தூங்கு ...!!!

அண்ணா நீ பேசும்
இதய ஓசை எனக்கு
கேட்கிறது
உனக்காகவே நான்
தூங்குவது போல்
நடிக்கிறேன்
எழுதிருக்க மாட்டேன்
நிம்மதியாய் இரு .....!!!

கே இனியவன்

ஆனால் இவற்றில் நாட்டம் செலுத்த ஆரம்பிப்பவர்களால் கடவுளை அடைய முடியாது. அந்த சக்திக்குள்ளேயே கட்டுப்பட்டுப் போய்விடுவார்கள்.

இதற்கு என் சிநேகிதன் ஒரு அழகான உதாரணம் சொன்னான். ஒரு பிள்ளை தன் தாயிடம் தூக்கி அணைக்கும்படி கேட்டு அழுகிறது. அந்தப் பிள்ளையின் தாயோ வீட்டுவேலையில் மும்முரமாக இருக்கிறாள். அதனால் அழுகின்ற பிள்ளைக்கு தற்காலிகமாக ஒரு விளையாட்டுப் பொம்மையைக் கொடுக்கிறாள். குழந்தை அழுகையை நிறுத்திவிட்டு அந்த பொம்மையோடு விளையாட ஆரம்பிக்கிறது. அந்த பொம்மைக்குள் கட்டுப்பட்டுப் தாயை தற்காலிகமாக மறந்துவிடுகிறது.

இந்த உதாரணக் கதை போலவே. கடவுளை நெருங்கும் போது ஏற்படும் மனத்தின் சக்தியைக் கண்ட மனிதன் கடவுளை அடையும் நோக்கத்தில் இருந்து வழுவி, மனசக்தியின் அற்புதங்களில் நாட்டம் கொண்டு அதிலேயே மூழ்கிவிடுகிறான். எனவே கடவுளை அடையும் நோக்கில் செய்யப்படும் ஆன்மீகச் செயல்களால் மனத்தின் சக்தி அதிகரித்தால் அப்பொழுது ஏற்படக்கூடிய அற்புதங்களில் நாட்டம் கொள்ளாமல் நிராகரித்து விட வேண்டும்.

## கண்ணீர்...

**பத்மா சுந்தர்**

*அழுகை ஒவ்வொன்றிற்கும்*
*அர்த்தங்கள் புதுப்பிக்க வேண்டும்,*
*அழகானதாய் அர்த்தப்படும்*
*வாழ்க்கையின் அதீதம்...!*

*கண்ணீருக்குள் கதைகள்*
*கண்ணீருக்கான கதைகள்,*
*கண்ணீர்த் துளிகளும் சுடுகிறது*
*இதயங்களின் விளிம்புகளின் வேதனைகளால்...!*

*கசிந்து கசிந்து உருகியதோ -*
*மனம் கண்ணீராய் வெளிப்படுகிறதே..!*
*வெந்து வெந்து வெதும்பியதோ -*
*மனம் வெந்நீராய் கண்ணீர்த்துளிகள் - என்*
*கண்களில்...!!!*

எனவே நண்பா, அமானுஷ்ய சக்தியில் ஆர்வம் கொள்வதை விட உங்களுக்கும் சமூகத்துக்கும் பயன்படக்கூடிய மனத்தின் சக்தியில் நீங்கள் ஆர்வம் கொண்டால் அது நல்லது என்று நினைக்கிறேன்.

மற்றப்படி, அமானுஷ்யம் பற்றி ஆராயும் ஆர்வம் உங்களுக்கு உண்மையிலேயே அதிகமாக இருந்தால், அதை ஒரு பொழுது போக்காக எப்போதாவது கிடைக்கும் ஓய்வு நேரங்களில் மட்டும் மேற்கொண்டால் நலமே. மற்றும்படி இதற்கென்று நேரம் செலவழித்து, நீங்கள் தொழில் துறையிலோ அல்லது உங்கள் வளர்ச்சியிலோ செலவழிக்க வேண்டிய பெறுமதியான நேரத்தை வீணாகக் கரைத்துவிட மாட்டீர்கள் என்றே நம்புகிறேன்.

அமானுஷ்யம் என்ற ஒன்று இருந்தாலும் அதுபாட்டுக்கு இருந்துவிட்டுப் போகிறது என்று இருந்து விடுங்கள்.

ஒரு நல்ல பொறியியலாளராக உருவாக என் வாழ்த்துக்கள்.

மிக்க நன்றி அன்பு சிநேகித உள்ளங்களே....

தயை செய்து தங்கள் கருத்துளை யார் மனதையும் புண்படுத்தாதபடி போடுங்கள் அத்துடன் உங்கள் கேள்விகளை பின்னூட்டத்தில் போடாமல் poongothaichelvan8@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

மீண்டும் சந்திக்கலாம்.

## பெண்களே வாழ்வின் உயிரோட்டம்

**கிரிகாசன்**

காற்றும் காற்றுடை வாசம் கனிகளின் கூட்டம்
கனவெனும் மனவுணர்வும்
ஊற்றும் குளிர்தரு மோடை உறைபனிக் கூட்டம்
இயற்கை யென்றாக்கியவள்
மாற்றம் மனதுகொள் வேட்கை மலர்வினில் நாட்டம்
மகிழ்வெழ இன்பமிட்டும்
தோற்றும் துயரெழும் தாக்கம் துடித்திடும் இதயம்
துவளென உணர்வளித்தாள்

நாற்றம் மதுமலர் தேக்கம் நனையிதழ் ஊட்டம்
நாடிடும் வண்டினமும்
போற்று மெழில்சுனை ஆட்டம் புதிதெழும் காற்றும்
புரள் அலையோட்டமென
சாற்றும் மொழிதரும் பாட்டும் முழவொலி கேட்டும்
மனமெழும் தீரமுடன்
நேற்றும் இன்றுடன் நாளை நிகழ்வது யாவும்
நிலைகொள வழிசமைத்தாள்

சீற்றம் இடியொளி மின்னல் சொரிமழை வானம்
சிதறிடும் மர இலைகள்
ஆற்றும் செயலிவை யாவும் அவனியில் சேரும்
இயற்கையின் கடமைகளே
ஏற்கும் உடைகளும் உண்ணும் உணவுடன் இனிமை
உறவுகள் அவள்தரவே
கூற்றன் கொடிதெனும் பாசக் கயிறிட கொள்ளும்
கணம்வரை உயிரளித்தாள்

ஏற்றம் எழவிழும் தாக்கம் இழிமையின் துச்சம்
இவைதரும் உணர்வழிய
மேற்கும் மறைகதிர் போக்கும் மதியின் பொன்கீற்றும்
மகிழ்வுள்ளம் ஆக்கிவிட்டு
நூற்கும் நூலிழை சேர்க்கும் நாற்குணப் பெண்மை
நினைவுகள் இனிமை யென்றாள்
போற்றும் செயலதும் புகழும் இயற்கையின்
புலமை கவிஞரின் வழக்கமன்றோ

பெண்ணும் பெண்ணவள் பேச்சும் பேச்சினில் மாற்றம்
பெரிதெழ ஆக்கியவள்
மண்ணும் மண்விழை பொன்னும் பொன்முடி அரசும்
படையுடன் போரெனவும்
எண்ணும் மனதினில் இன்பம் இளமை யின் எண்ணம்
இவைகளில் சாம்ராஜ்ஜம்
திண்ணம் விழநிலை கொள்ளும் திறனுடை பெண்ணும்
தேர்ந்திட அழகீந்தாள்

முன்னும் கண்விழி அம்பும் மெய்யிடை போரும்
மூளென தீயிடுவாள்
என்னும் வலிமையும் கொண்டால் இகமதில் இன்னும்
எழும் வலி இவள் கொண்டால்
தன்னும் தன்நிலை- பேணுந் தன்மையில் ஆளும்
தகமையைக் கொள்வளெனில்
மின்னும் தாரகையல்லள் மேதினி கொள்ளும்
இன்னொரு சுடராவாள்

# பெண்ணொருத்தி புலம்புகிறாள்

கனகீஸ்வரி



போட்ட மஞ்ச காஞ்சிருச்சு
வெச்ச பூவும் வாடிருச்சு
விரல் நகமா என நினைச்சு
வெட்டி போட்டு போனதென்ன?

★

காத்தோடும் கடலோடும்
கற்பனையில் நான் பேசி
கட்டி வச்ச என் கோட்ட
காலடியில் சரிஞ்சதென்ன?

★

உள்ளத்தை திரியாக்கி
உணர்வால நெய் ஊத்தி
உனக்காக தீபம் வச்சேன்
ஊதியே நீ அணைச்சதென்ன?

★

அழகான பின்னலிட்டு
ஆசைப்படி சேலைகட்டி
அன்போடு காத்திருந்தேன்
அத்து விட்டு போனதென்ன?

★

உப்புக் கண்ணீர
உனக்காக நான் வடிக்க
தப்புக் கதை சொல்லி
தட்டி விட்டு போறதென்ன?

★

நீ ஒத்த சொல் பேசிடத்தான்
நடுநிசியும் முழிச்சிருக்கேன்
சித்தமெல்லாம் உறஞ்சி இப்போ
வெத்துடல நான் கிடக்கேன்..

★

பாய் விரிச்சு படுப்பதில்ல
பந்த பாசம் ஏதுமில்ல
நொந்து போன என் மனச
புரிஞ்சு நீயும் சேரவில்ல

★

புத்தி சொல்லி கேட்டிடல
புதுசா நான் பேசிடல
கசப்பான மருந்தானேன்
கண் உருத்தும் துரும்பானேன்....

காசு பணமெல்லாம் உன்
கால் தூசு பெற்றிடுமா?
உன் அன்பு சொல் போல
தேன் கூட இனிச்சிடுமா?

★

நிழலா நீ இருந்தா
நித்திரையும் இன்பமடா
அனலா நீ எரிஞ்சா
ஆயுசுக்கும் துன்பமடா.....

★

நா வரண்டு அழுதாலும்
நாதியில்ல கேட்டிடத்தான்....
நீயும் விட்டு போனபின்ன
யாரிருக்க  வாழ்ந்திடத்தான்......

★

காலம் எல்லாம் உன்னோட
கற்பனையில் சேந்திருப்பேன்
கட்டையில நான் படுத்தா
உன் காலடிய சுத்திடுவேன்.....

★

நித்தம் நித்தம் போராட்டம்
நினைவுகளே உயிரோட்டம்
சுத்தம் உள்ள உன் மனச
சுமந்த படி வாழ்வோட்டம்.....

★

அத்தனையும் தாங்கிவிடு
குத்தம் குறை சொல்லாத
கூறுகெட்ட என் மனச
குத்தி நீயும் போகாத.....

★

உன் அன்பான மொகம்பாக்க
ஆயுசுக்கும் காத்திருப்பேன்
உன் ஆசை மொழிகேட்க
அனுதினமும் பேசிடுவேன்.....

# தமிழீழம்...தமிழீழம்...

ஜோஷி




தமிழீழம்
நாங்கள் விலைக்கு
வாங்கிய பூமியில்லை
எங்கள் சகோதர சகோதரிகளின்
குருதியினை விலையாக கொடுத்து

அடைந்த புண்ணிய பூமியடா.......!
குனிந்தே இருந்த
தமிழனை நிமிர்ந்து
நடக்கச் செய்த பூமியடா!!

பழம்பெருமை பேசி பேசி
வீணாய் சென்ற வாழ்வினில்
வீரத்தின் மதிப்பினையும்
தியாகத்தினையும்
காணச் செய்த பூமியடா........

ஜாதி மத மோதல்களில்லாது
தமிழராய் தமிழராக
வாழச் செய்த பூமியடா.....
தூய தமிழ் மொழியினையும்
வளரச் செய்து
தமிழரின் பண்பினையும்
காத்திட பூமியடா!!!!

யாசகம் கேட்போரில்லாது
வரதட்சனை சாவுகளில்லாது
வீரத்தில் விளைந்த
புண்ணிய பூமியடா!!!!

உலகமே எதிர்த்தாலும்
தமிழர் வாழ ஒரு

சிறந்த கட்டமைப்பினை
பசியினால் மரணமில்லாத
வாழ்வு கொடுத்த பூமியடா!!

காமத்தை வளர்க்காது
தூய காதலை வளர்த்த
புண்ணிய பூமியடா........

தமிழ் தமிழென்று
மேடைப் பேச்சினில் மட்டுமல்ல
இலக்கியத்திலும் வாழ்வியலிலும்
சமூகத்திலும் தமிழினை
வளர்க்கச் செய்த பூமியடா......

பணத்திற்காய் அல்லாது
இனத்திற்காய்
உயிரையும் கொடுத்து
தமிழினத்தினை காத்திடும்
புலிகள் கொண்ட பூமியடா...

மரணமே என்றாலும்
தமிழினத்திற்காய்
புன்னகையுடன் ஏற்றிடும்
மாவீரர்கள் கொண்ட பூமியடா...

உலகிலுள்ள ஒவ்வொரு
தமிழரும் வாழ
நினைத்திடும் ஒரு
புண்ணிய பூமியடா...

இன்றுமென்றும்
தமிழரினை தூய
மொழிப் பற்றுடனும்
இனப் பற்றுடனும்
காதல் உணர்வுடனும்
தூய கலாச்சாரத்துடனும்
தூய தோழமையுடனும்
வாழ வளர வைக்க
களம் காண
துடித்திடும் பூமியடா
எங்கள் தமிழீழம்!!!
புண்ணிய பூமியடா!!!

# பொம்முவும் அமிர்தப் பானையும்

**லோகேஷ் ஜெயகோபி**

அத்தியாயம்-4. பொம்முவின் அதிர்ச்சி

பொம்மு மெல்ல நகர்ந்து யார் கண்ணிலும் படாமல் வகுப்பில் நுழைந்து அன்பரசுவின் மேஜைக்கு அடியில் சென்றாள். அன்பரசுவும் அவன் நண்பர்களும் துண்டுக் காகிதங்களை முன்னும் பின்னும் மாற்றி பகிர்ந்து பரிட்சையை ஏமாற்றி எழுதுவதை கண்டாள் பொம்மு.

காகிதங்களை மேஜைக்கு அடியில் மாற்றப் படுவதை கண்ட பொம்மு, அன்பரசுக்கு வரும் எல்லா காகிதங்களையும் அவள் கிழே வாங்கி ஆசிரியரின் மேல் தூக்கி போட்டாள்.

ஆசிரியர் உடனே திரும்பி அன்பரசுவை கையும் களவுமாக பிடித்தார்.

“என்னடா இது?...இதுக்கு தான் படிக்க வரியா?” – ஆசிரியர் கோபமாக.

“சார்...நான் இல்லை சார்...இவன் தான் அத கொண்டு வந்தான் சார்.” என்று அன்பரசு தனக்கு முன் அமர்திருப்பவனை மாட்டிவிட்டான்.

“சார் எனக்கும் எதுவும் தெரியாது சார்...இவன் தான் அத கொண்டு வந்தான்” என்று அவன் வேறொருவனை காட்ட இப்படியாக அன்பரசுவுடன் அவன் நண்பர்கள் அனைவரும் மாட்டிக்கொண்டனர்.

அரவிந்த் பொம்முவை மேஜைக்கு அடியில் கண்டான். பொம்மு சிரித்துக் கொண்டிருந்தான். அரவிந்தும் மெல்ல சிரித்தான். ஆனால் அதை அன்பரசு பார்த்துவிட அரவிந்தை அவன் கோபமாக அரவிந்தை முறைக்க ஆரம்பித்தான்.

“உங்கள சும்மா விடக்குடாது. வாங்க முதல ஹெச்.எம் ரூம்க்கு போயிட்டு எக்ஸாம் எழுதலாம்.” என்று ஆசிரியர் அன்ப்ரசுவையும் அவன் நண்பர்களையும் வெளியே அழைத்து சென்றார். அன்பரசு அரவிந்தை முறைத்துக் கொண்டே அங்கிருந்து சென்றான்.

நிச்சயம் அன்பரசு இதற்காக எதோ செய்ய போகிறான் என்று அரவிந்துக்கு தெரியும். பொம்மு யாருக்கும் தெரியாமல் அந்த தேர்வு அறையை விட்டு வெளியே சென்றாள்.

தேர்வு முடிந்தது. எல்லா மாணவர்களும் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். அரவிந்த் தன் பள்ளிப் பேருந்தை நோக்கி சென்றுக் கொண்டிருந்தான். எப்போதும் போல அவன் பையில் பொம்மு அமைதியாக இருந்தது.

அரவிந்த் தலையில் யாரோ தட்ட உடனே அவன் திரும்பினான். அன்பரசுவின் நண்பர்கள் இருவர் அரவிந்தை பிடித்தனர்.



“ஹே ...அன்பரசு உன்ன கூட்டிட்டு வர சொன்னான். வா “என்று அவர்கள் அரவிந்தை மிரட்டினர்.

## காதல் தவிப்பு

**அனுரிதா**

கருவேலங்காட்டுக்குள்ள கத பேச வாடி புள்ள
ஏன் மனச அள்ளி போன அழகான நெறத்து முல்ல
மனச வருடி போன
ஏன் உசுர உருகி போன
தனியா தவிச்சு நின்னேன்
ஏன் தாகம் தணியவில்ல (2)

நீ காட்டுல வெளயும் வாச சந்தன கட்ட
நான் தீயில எப்பயும் எரியும் வேகுற வெறகு கட்ட
உன்ன நம்பி வந்தேன்
நீ என்ன வெம்ப விட்ட
கண்ணுல தெரியுங் காட்சி
ஒன் கனவுக்கேன்ன  சாட்சி? (2)

கருவேலங்காட்டுக்குள்ள கத பேச வாடி புள்ள
ஏன் மனச அள்ளி போன அழகான நெறத்து முல்ல
மனச வருடி போன
ஏன் உசுர உருகி போன
தனியா தவிச்சு நின்னேன்
ஏன் தாகம் தணியவில்ல (2)

புன்னகையால் மனச பிசையும் பூ போன்ற பெண்ணே
ஏன் உசுர அடிச்சு தொவைக்குதடி இரண்டே இரண்டு கண்ணே
ஒன்ன நானும் மதிச்சேன்
நீ தீயா என்ன எரிச்ச
நான் வெந்து வெந்து துடிச்சேன்
நீ தண்ணீ தர மறுத்த(2)

கருவேளங்காட்டுக்குள்ள கத பேச வாடி புள்ள
ஏன் மனச அள்ளி போன அழகான நெறத்து முல்ல
மனச வருடி போன
ஏன் உசுர உருகி போன
தனியா தவிச்சு நின்னேன்
ஏன் தாகம் தனியவில்ல (2)

“இல்ல நான் போகணும் . இன்னும் கொஞ்ச நேரத்துல ஸ்கூல் பஸ் கிளம்பிடும்!” என்று அவர்களிடம் இருந்து நழுவ பார்த்தான் அரவிந்த்.

“ஒரு நாள் நடந்து போனா ஒன்னும் ஆவாது...கிளம்பு” என்று அவர்கள் அரவிந்தை இழுத்து செல்ல ஆரம்பித்தனர். அரவிந்த் பள்ளியின் மறைவான இடத்துக்கு கொண்டு வரப்பட்டான். அங்கே ஒரு மரத்தடியில் நின்றிருந்த அன்பரசுவும் அவன் நண்பர்களும் ஆக்ரோஷமா அவனை கண்டனர்.

“ஹே...என்ன நக்கலா? திமிரா சிரிச்ச? இப்ப சிரிடா..” என்று அன்பரசு அரவிந்தின் சட்டையை பிடித்தான்.

“இல்லடா...நான் உன்ன பாத்து சிரிக்கல!” என்று பதறினான் அரவிந்த்.

“தனியா சிரிக்க நீ லூசாடா? சொல்லுடா” என்று அன்பரசு அவன் சட்டையை உள்ளுகினான்.

“இல்ல....சாரி.. இனிமே அப்படி பண்ணமாட்டேன். “ என்று நடுங்கியபடி அரவிந்த் கூறினான்.

“உன் சாரி எனக்கு ஒன்னும் தேவ இல்ல! உன்ன வாயில மட்டும் ரத்தம் வரமாதிரி அடிக்கிறேன்! சரியா?” என்று அன்பரசு தன் கையை உயர்த்தினான்.

திடிரென அரவிந்த் பின்னே நின்றிருந்த சிறுவன் அவிந்தின் பையிலிருந்து பொம்முவை எடுத்தான்.

“இங்க பாரேன்! பொம்மை!” என்று அந்த சிறுவன் அன்பரசுவிடம் தூக்கி போட்டான். அரவிந்த் பொம்மு அசைவில்லாமல் பொம்மையை போலவே நடிப்பதை கண்டான்.

“இந்த பொம்மை ரொம்ப கேவலமா இருக்குதே! இதை சரிபண்ணி தரட்டுமா?”என்று அன்பரசு பொம்முவின் கைகளை உடைக்க கைகளை வளைத்தான்.

“வேண்டாம்! அத ஒன்னும் பண்ணிடாத!” என்று அரவிந்த் பதறினான்.

“இந்த கேவலமான பொம்மைய உடைச்சு குடுத்துடறேன்! அப்புறமா இத வச்சு அழுதுக்கோ!” என்று அன்பரசு வெறித்தனத்துடன் பொம்முவின் கழுத்தை உடைக்க முயன்றான்.

சர்ர்! என்று பொம்மு அன்பரசுவின் கையிலிருந்து தாவி தரையில் நின்றது. அனர்சுவும் அவன் நண்பர்களும் சற்று திகைத்து நின்றனர். அரவிந்த் பொம்மு அவர்களை. கோபமாக முறைப்பதை கண்டான்.

“என்னடா? இது ரோபோவா?” என்று பயந்தபடி அன்பரசு கேட்டான்.

“யார பாத்து கேவலமா இருக்குனு சொல்ற? “ என்று பொம்மு அன்பரசுவை முறைத்தபடி கையை உயர்த்தியது. பொம்மு கையிலிருந்து ஒரு பிரகாசமான ஒளி வெளியேறி அன்பரசுவை தாக்கியது. அன்பரசு பறந்து போய் அவன் நண்பர்கள் மேலே விழுந்தான். அரவிந்த் அதிர்ந்தான். பொம்முவும் அதிர்ச்சியில் தன் கைகளை கண்டது.

“ஆஆ! இது பேய் பொம்ம! ஓடுங்கடா!” என்று கத்திக்கொண்டு அன்பரசுவும் அவன் நண்பர்களும் ஓட ஆரம்பித்தனர்.

அரவிந்த் பொம்மு செய்த மாயாஜாலத்தை கண்டு அதிர்ச்சியுடன் பார்க்க பொம்மு தன்னால் எப்படி மாயாஜாலத்தை செய்ய முடிந்தது என்று பெரும் குழப்பத்துடன் அரவிந்தை பார்த்தது..

(தொடரும்)

## என் தேவதை

ஜோவியல்பாலா



இதோ வந்துவிட்டாள் எனது
குழந்தையைப் பெற்றெடுக்கும்
என் வாழ்க்கைத் துணைவி,

தாய்மை ஒரு பெண்ணை இவ்வளவு
அழகானவளாக மாற்றுமா
வியக்கிறேன் நான்!

இன்றோ நாளையோ பிள்ளை
பெற்றுக்கொள்ளப் போகும்
நிலையில் அவள் முகம்
"கர்பகிரகத்தில் வீற்றிருக்கும்
அம்மன்" போல் உள்ளது.

தளிர் நடையும்,
வெளித் தள்ளிய வயிறுமாக
சாந்தமான முகத்தோடு
வீற்றிருக்கிறாள் என் தேவதை
எனது கைவிரல்களைப் பற்றிக்கொண்டு!

# தூக்கணாங்குருவியின் கனா

துருவன்

5 பைசா மிட்டாயை சப்பி திண்ணா சந்தோஷம்;
சட்டை ஓரத்தில் மடித்து காக்கா கடிகடித்து நண்பனுக்கு கொடுக்க ரொம்ப சந்தோஷம்

ராசக்கா கண்மாயில ஆடை மறந்து குளிக்க சந்தோஷம்;
அப்ப மீன்குஞ்சு அடிவயித்த கடிச்சா ரொம்ப சந்தோஷம்

மாரியம்மன் பொட்டலில கபடி விளையாட சந்தோஷம்;
5 ரூபாய் பந்தயம் கட்டி ஜெயிச்சா ரொம்ப சந்தோஷம்

மாடு மேய்க்க மாவடுவோட கஞ்சிகட்டி கொண்டுபோன சந்தோஷம்;
பக்கத்து தூக்குச்சட்டியில கருவாட்டு வாசம் வந்தா ரொம்ப சந்தோஷம்

பக்கத்துவீட்டு தோட்டத்துல பூப்பூத்தா சந்தோஷம்;
அதைப்பறிச்சு அத்தைபொண்ணு அருந்ததிக்கு கொடுக்க அவ சிரிச்சா ரொம்ப சந்தோஷம்

தினமும் கோழி பிடிக்க ஓட்டுமேல ஏற சந்தோஷம்;
அதே கோழி மறுநாள் கொழம்புல கொதிச்சா ரொம்ப சந்தோஷம்

பல்லிமுட்டையை பாம்பு முட்டைன்னு சொல்லிபயமுறுத்த சந்தோஷம்;
அதைபார்த்து பயந்து ஓட்டமூக்கு சோலையம்மா அழுதா ரொம்ப சந்தோஷம்

வண்டிகட்டிபோய் பக்கத்தூர் சந்தைல அப்பன் சொக்கா எடுத்துதந்தா சந்தோஷம்;
அதை கொடியில மாட்டிவச்சி அழகுபார்க்க ரொம்ப சந்தோஷம்

அப்பனோட சண்டைபோட்டு தம்பிய பள்ளிக்கூடம் அனுப்ப சந்தோஷம்;
பைமுட்டைய தோளில் போட்டுக்கிட்டு அவனை இடுப்பில் தூக்கிட்டு பள்ளிகூட வாசல் விடுறது ரொம்ப சந்தோஷம்

அருந்ததி வயதுவந்த சேதிகேட்டு பாதிசோத்துல எந்திரிக்க சந்தோஷம்;
குச்சிகட்டும் வேளையில கீத்து ஓலையில அவ வெட்கத்துல நான் சிவக்க ரொம்ப சந்தோஷம்

வைகாசி மாசத்துல மழையில நனைய சந்தோஷம் ;
என் அப்பன் வாய்க்கால் முதல்ல நிறைஞ்சா ரொம்ப சந்தோஷம்

என் ஆத்தா போட்டோ முன்னாடி படுத்துதூங்க சந்தோஷம்;
ஆத்தாவே வந்து தாலாட்டு பாடுனா ரொம்ப சந்தோஷம்

நிலாவைக்காட்டி தம்பிக்கு சோறுட்ட சந்தோஷம்;
அந்த வேளையில அவன் தந்த முத்தம் ரொம்ப சந்தோஷம்

டூரிங்க் டாக்கிஸ்ல தலைவர் படம் பார்க்க சந்தோஷம்;
இடைவேளைல இஞ்சிமரப்பாக்கு காலணா இருந்தா ரொம்ப சந்தோஷம்

கூட்டாஞ்சோறு ஆக்கயில அருந்ததிய லேசா இடிக்கையில சந்தோஷம்;
மாடு மேய்க்கையில தினமும் படுக்கையில அருந்ததிய நினைக்க ரொம்ப சந்தோஷம்

பெரியாத்தாக்கிட்ட பேய் கதை கேட்டு பயந்து தூங்க சந்தோஷம்;
அந்த கதைய தம்பிகிட்டச் சொல்லி பயமுறுத்த சந்தோஷம்

யாருமில்லா வேளையில அருந்ததிக்கு முத்தம் வைக்க சந்தோஷம்;
சத்தம் போடாம சந்ததிய சம்மதிச்சா ரொம்ப சந்தோஷம்

பட்டுபுடவை கட்டி அருந்ததி மனமேடையில இருந்தா சந்தோஷம்;
மணமகனா பக்கத்துல நான் இருந்தா ரொம்ப சந்தோஷம்

இது எதுவுமே நடக்கலைனா சந்தோஷம் ;
நான் இந்த பூமியில பொறக்கலேன்னா ரொம்ப சந்தோஷம்

## உலகத்தை அழிக்கவில்லையா ...?

கே இனியவன்

உலகம் அழியப்போகிறது
இந்த ஆண்டு அழியப்போகிறது
அடுத்த ஆண்டு அழியப்போகிறது
இன்னும் பத்து ஆண்டில்
அழியப்போகிறது ....
என்றெல்லாம் அலட்டும்
உலகமே - இப்போ மட்டும்
உலகம் அழியவில்லையா...?

சுயநல அரசியல் வாதிகள் ...
பேராசை தொழிலதிபர் ...
போலி சமய வாதிகள் ...
அரைகுறை அறிவுள்ளோர் ...
என்பதால் அந்த நாடு
அழிந்து கொண்டு
வரவில்லையா ...?

உலக வல்லாதிக்கம் ....
உலகமயப்படுத்தல் ......
உலக பயங்கரவாதம் ....
உலக அரச பழிவாங்கல் ...
உலகத்தை அழிக்கவில்லையா ...?

# உள்ளிருந்து ஒரு குரல்

*ராஜரமணி*

காலில் அடிபட்டிருந்ததால் என்னால் நகர முடியவில்லை. நான்கு நாட்கள் ஆகியும் வலி இன்னும் விட்டப்பாடில்லை. அன்று மட்டும் நான் கொஞ்சம் கவனமாக இருந்திருந்தால் இன்று இந்த நிலைமைக்கு ஆளாகியிருக்க மாட்டேன். ஆனால் என்ன செய்வது...?

இனி என்னால் முன்பு போல் வேகமாக ஓட முடியுமா..? ஓட வேண்டாம். நடக்கவேணும் முடியுமா..? சந்தேகமே. நினைத்தாலே அழுகை வருகிறது. ஆனால் ஆறுதல் கூறவோ, கண்ணீர் துடைக்கவோ யாருமில்லை. அதனால் அழுகையை அடக்கி கொள்ள வேண்டியதுதான். இதோ என் அருகில் அமர்ந்திருக்கும் இவன் மட்டும் அன்று இல்லை என்றால் ரத்தம் கசிந்தே நான் உயிர்விட்டிருப்பேன். இவனுக்கு நான் மிகவும் நன்றிக்கடன்பட்டுள்ளேன்.

மிகவும் துயரமான அந்த நாள் நான் நன்றாக சாப்பிட்டிருந்தேன். உடல் பெருத்து விடும் என்பதால் சமீபகாலமாக உணவைக் குறைத்துக் கொண்டேன். ஆனால் சம்பவத்தினத்தன்று மதியம் வீட்டில் நல்ல சமையல். ருசியும் தூக்கலாக இருந்ததால் அளவுக்கதிகமாகவே உண்டு விட்டேன். சாப்பிட்ட உணவு செரிக்க வேண்டும் என்பதற்காக வீட்டு வராந்தாவில் நடந்தபடி இருந்தேன்.

மற்ற எல்லோரும் உண்ட களைப்பில் மதிய உறக்கத்திற்கு சென்று விட்டனர். மெதுவாக நடந்தபடி இருந்த என்மீது வராந்தாவை ஒட்டியிருந்த மல்லிகை செடியில் இருந்து திடீரென பூக்கள் உதிர்ந்தன. தோட்டச் செடிகளை தொட்டு வந்த தென்றல் என் உடல் உரசிச் சென்றது. "என்ன இது" என்ற வியப்பு மேலிட திரும்பி வாசல் பக்கம் பார்த்தேன்.

வாசலில் ஒரு கார் நின்று கொண்டிருக்க அதன் ஜன்னல்களுக்கு வெளியே மஞ்சள் நிற மேனியுடைய அவளைப் பார்த்தேன். உடம்பில் புது ரத்தம் பாய்ச்சியதை போன்றதொரு உணர்வு. உண்ட உணவு செரித்து விட்டதை போன்றதொரு உணர்வு. இதயம் நடனமாடத் தொடங்கியது. மகிழ்ச்சியின் உச்சத்தில் இங்கே நான் மதி மயங்கிக் கிடந்த வேளையில் கார் மெதுவாக நகரத் தொடங்கியது. கல்லாய் நின்றிருந்த நான் திடீரென உயிர் பெற்றேன்.

அந்த காரைப் பின்தொடர்ந்து அவளின் இருப்பிடம் அறிந்து கொள்ள முயன்றேன். அவளைப் பார்த்த பொழுது செரித்து விட்டதை போன்ற உணவு ஓடும் பொழுது என் வேகத்தை தடை செய்தது. அந்த காரைப் பின்தொடர்ந்தப்படியே வீட்டில் இருந்து மிக அதிக தொலைவு வந்துவிட்டேன். அதைக் கூட ரோட்டைக் கவனிக்காமல் கடக்க முயன்ற போது ஒரு வண்டி என்னை மோதித் தள்ளிய பின்பே உணர்ந்தேன். கீழே விழுந்ததும் தெரிந்துக் கொண்டேன். அடிபட்டு நான் கிடப்பது மெரீனா பீச் அருகே என்று. ப்ரணிக்காவுடன் அடிக்கடி அங்கே சென்றிருக்கிறேன்.

ப்ரணிக்கா என்னிடம் வந்து "நாம மெரீனா பீச் போகப் போறோம்" என்றதுமே என்னிடம் உற்சாகம் தொற்றிக் கொள்ளும். ஜாலியாக கிளம்பி விடுவேன். காரணம் என் வயதுடைய பெண்கள் நிறைய பேர் அங்கே வருவார்கள்.

சிலர் என்னை பார்த்து புன்னகை செய்வார்கள். அழகாய் இருந்தால் நானும் காது வரை சிரித்து வைப்பேன். இல்லையென்றால் முகத்தை திருப்பிக் கொள்வேன். இது போன்ற காரணங்களால் மெரீனா பீச்சை அடையாளம் காண்பது சுலபமாக இருந்தது. ஆனால் மெரீனா வந்தால் என்னிடம் என்றும் இருக்கும் உற்சாகம் அன்று இல்லை. காரணம் அடிபட்டதால் காலில் வடிந்து கொண்டிருந்த ரத்தம்.

## அரசி(யாள்)யல்

**வைஷ்ணவ தேவி**

*நாட்டின் அரசி நான்*
*அவலநிலை எனக்கே...*
*ஆளுமை என்னுடன் இருந்தும்*
*ஆளும் வர்க்கமே ஆளுகிறதே...*

*உன்னத நிலை இருந்தும்*
*ஒட்டையாய் சட்டங்கள் ...*
*உச்சியில் ஆளுபவர்களால்*
*ஊசலாடும் ஏழைமக்கள் . ..*

*ஊடகங்களும் பிறழும்*
*ஊக்குவித்து உவகைகொள்ளும்*
*எகினன் படைத்த பிறவிகள்*
*ஏகபிழை செய்கிறார்கள்*

*என் கீழ்நிலை சிதைந்து*
*கீர்த்தி பெறுவது எப்போது ....*
*ஏக்கமுடன் காத்திருக்கிறேன்*
*காக்க வருவார்கள் என்பிள்ளைகள்...*

*எழுதி வைத்த காகிதத்தை*
*கரையான்கள் அழிக்கும் முன்னே*
*தூய்மையான உள்ளம் கொண்டு*
*தூக்கிவிட வாருங்களேன்...*

வலி தாளாமல் நான் கத்தினேன். ரோட்டில் சென்று கொண்டிருந்த நிறைய வண்டிகள் சற்று நின்று வேடிக்கை மட்டும் பார்த்து விட்டு சென்றன. ஆனால் ஒருவரும் வந்து எனக்கு உதவவில்லை. என் உயிரைக் காப்பது அவ்வளவு முக்கியம் அல்ல என்று எல்லோரும் நினைத்து விட்டார்கள் போல. அப்பொழுதுதான் என் அருகில் அமர்ந்திருக்கும் இவன் வந்தான். காலில் வடிந்துக் கொண்டிருந்த என் ரத்தத்தை நிறுத்த ஒரு அழுக்கு துணிக் கொண்டு மூடினான். பிறகு அலேக்காக என்னை தூக்கினான்.

"அடடே.. பரவலையே.. என்னையே தூக்கி விட்டானே" என்று நான் எண்ணிய போது வலி என்னை சுய நினைவுக்கு

கூட்டி வந்தது. என்னை மருத்துவமனைக்கு தூக்கிச் சென்று காயத்திற்கு மருந்து தடவி கட்டு போட்ட பின் இந்த வீட்டிற்கு அழைத்து வந்தான்.

இதை வீடு என்று சொல்ல முடியாத அளவிற்கு மிகவும் அழுக்காக வைத்திருந்தான். இன்னும் வைத்திருக்கிறான். கடந்த நான்கு நாட்களாக நான் அவனிடம் "உன் உதவிக்கு மிக்க நன்றி. ஆனால் என் வீட்டிற்கு என்னைக் கொண்டு போய் விட்டுவிடு.. இருக்கும் இடத்தைச் சொல்கிறேன்" என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டேன்.

நான் பேசும் போது என்னை திரும்பி பார்க்கிறானே தவிர அதைப் புரிந்து கொண்டதாக காட்டிக் கொள்ளவேயில்லை. எனக்கு கோபமாக வந்தது. ஆனால் என்ன செய்ய.. என்னால் தான் நடக்க முடியவில்லையே.. என்னால் நடக்க முடியாத வரை இங்கிருந்து அவனுடைய உதவியில்லாமல் செல்வது சாத்தியமேயில்லை. பொறுத்திருக்க வேண்டியதுதான். ஆனால் தினமும் இரண்டு வேலை மட்டுமே சாப்பிடக் கொடுக்கிறான். அதுவும் பிரட், பிஸ்கட், பழைய சாதம் மட்டுமே. காலையில் உணவு கொடுத்துவிட்டு சென்றுவிடுவான். சாப்பாடு இரவு தான்...பசி கொல்லும்..

## ஜாதிகள் இல்லையடிப் பாப்பா...

### தமிழ்நதி

ஜாதிகள் இல்லையடிப் பாப்பா... பின்பு
ஜாதி சான்றிதழ் எதற்க்கடி பாப்பா..???

அரசாங்க தேர்வு ஏழுத முடியல பாப்பா...
ஜாதி சான்றிதழ் இருந்தால் முன்னுரிமை பாப்பா..??

பெரியாரின் விதி செய்வோம் பாப்பா...?
அது காதல் திருமணமாய் இருந்தாலும் பாப்பா..?
கண்டிப்பா ஜாதிக் கேட்டு காதலிக்கணும் பாப்பா..?

மணம் இனைத்தாலும்
பிரிப்பாங்க பாப்பா???
அப்படிப் பட்ட மாணம் கெட்ட மனித மிருகம்
இருக்காங்க பாப்பா..??

காதல்னு சொன்னாலும்
நம்பாத பாப்பா..?
கடைசியில கைவிரிச்சி
நிப்பாங்க பாப்பா..?
நம்மல கண்கலங்க வைப்பாங்க பாப்பா..?

ஜாதிகள் இல்லையடி பாப்பா..?என்று
பொய்ச் சொல்லி தான் பாடம்
நடத்துறாங்க பாப்பா..?

இனியாவது யோசிப்போம் பாப்பா.?
நம்ம மனிதனா இல்லை ஜாதி மிருகமானு
இனிவொரு விதி செய்வோம் பாப்பா..?

ஆனால் எதுவும் செய்ய இயலாமல் அவன் வரும் வரை அறையில் சுருண்டு கிடப்பேன்.

இன்று எங்கும் செல்லாமல் அறையிலேயே கிடக்கிறான். மீண்டும் பேசிப்பார்ப்போமா என்று ஒரு ஒரு யோசனை தோன்றியது. ஆனால் நன் பேசுவதைப் புரிந்துக் கொள்ளாமல் கோபம் கொண்டு விட்டால் என்ன செய்வது என்று தோன்றியதால் அமைதியாக இருக்கிறேன்.

ஏதோ பேப்பர் படித்துக் கொண்டிருந்தவன் திடீரென எதற்கு என்னை உற்றுப் பார்க்கிறான்.. என்ன மீண்டும் பேப்பரைப் பார்க்கிறான். சிரிக்க வேறு செய்கிறான். அப்படி என்ன பேப்பரில் இருக்கிறது.

மெதுவாக அருகில் போய் எட்டிப் பார்ப்போம்.

ஆ.. என் படம். ப்ரணிகா முகம் பார்க்கும் கண்ணாடியில் அடிக்கடி நான் பார்த்த என் முகம். காரில் செல்லும் போது ஜன்னல் கண்ணாடியில் நான் பார்த்து ரசித்த என் முகம். மழை ஓய்ந்த பின்பு தேங்கி நிற்கும் தண்ணீரில் குளிர்ச்சியோடு நான் பார்த்து நின்ற என் முகம். ஆனால் எப்படி இந்த பேப்பரில்.? ச்சே.. அதில் என்ன இருக்கிறது என்று படிக்க முடியவில்லையே. இவனாவது வாசித்து காட்டுவானா என்று பார்ப்போம்.

என்ன இவன். என்னைப் பார்த்து சிரித்துக் கொண்டே இருக்கிறான்?.

அடிச்சதுடா அதிர்ஷ்டம்

அதிர்ஷ்டமா.. என்ன அதிர்ஷ்டம். எதற்காக இதைச் சொல்கிறான். என் படம் இருக்கும் பகுதியை மட்டும் ஏன் கிழிக்கிறான்.

என்ன திடீரென எங்கயோ கிளம்புகிறான் போல. "ஏய்..ஏய்.." எதற்காக என்னை வெளியே அழைத்து வந்தான்.. ஓ.. வீட்டை பூட்டுவதற்கா..?? ஆனால் இதெல்லாம் எதற்க்காக...? ஒன்றும் புரியவில்லையே ..

"டேய்.. என்னை வெளியே அழைத்து வந்துவிட்டு நீ எங்கே தனியே ஓடுகிறாய்.." - - - ----------- ஓ.. வழக்கம் போல நான் பேசியது புரியவில்லையா ..? ம்ம்.. அவன் வரும் வரை காத்திருக்க வேண்டியது தான்.

இதோ வந்துவிட்டானே.. ஓ .. ஆட்டோ அழைத்து வர சென்றாயா...? அதை சொல்லிவிட்டு செல்ல வேண்டியது தானே..? "ஏய்.. என்னை எதற்கு ஆட்டோவில் ஏற்றுகிறாய்..." - - -

பார்ப்போம். என்னை எங்கே அழைத்து செல்கிறான் என்று.- - - -

"டேய்.. எங்க சார் போகணும்னு வண்டி ஓட்டுபவன் கேட்குறான் பார்.."------------ இதோ... அவன் கிழித்து வைத்திருந்த என் படம் போட்ட பேப்பர். அதில் என்ன இருக்கிறது..?

இந்த அட்ரசுக்கு போகணும்

அட்ரசா..? அப்படி என்றால் என்ன..? நான் இது வரை கேட்டதில்லையே.. ஆ.. தலை சுற்றுகிறது.. சற்று நேரம் அவன் மடியில் தலை வைத்து தூங்குவோம்.

ம்.. அதற்குள் எழுப்பி விட்டானே.. ரொம்ப நேரம் தூங்கிவிட்டோமோ...? இல்லை.. இல்லை.. கனவு கூட வரவில்லையே. கொஞ்ச நேரம் தான். எந்த இடம் இது..?

**மழையின் வருகைக்காக**

காயத்ரி கேசவன்



*வானில் மேகத்தின் கண்ணீராய் வருகிறாய் நீ...*

*பூமியில் பயிர்களுக்கு உயிர் தரும் தண்ணீர் ஆகிறாய் நீ....*

*என் முகத்தில் பன்னீராய் விழுகிறாய் நீ....*

*விண் தூவும் மழைத்துளியே....*

*என் மனம் மகிழ வைக்கும் உளி நீயே....*

*நீ என்ன மற்றவரை மயக்கும் மாய வலையா..?*

*உன்னில் நனைகையில் என் குழந்தைத்தனம் துளிர்விடுகிறதே ...!*

*சாரலாய் வந்தென்னை சாய்த்தாய்....*

*துரலாய் வந்தென்னை துள்ள செய்தாய்...*

*மேகத்திற்குள் ஒளிந்து இருக்கும் மழையே...*

*நீ பொழிவது எப்பொழுது..?*

*நான் நனைவது எப்பொழுது..?*

*என்றும் உன் இனிய வருகைக்காக.......!!!*

ஆ.. ப்ரனிக்காவின் வீடு. நான் ஓடி விளையாடிய வீடு. ருசியான சாப்பாட்டை எனக்கு மூன்று வேளையும் கொடுத்த வீடு. என் உயிர் காப்பற்றியவானே... உனக்கு மிக்க நன்றி.. என்னை இங்கு கொண்டு வந்து சேர்த்ததற்கு.. நல்ல வேளை..

சார்..

"இன்னும் சத்தமாக கூப்பிடு... அப்பொழுதுதான் எல்லோரும் வெளியே வருவார்கள்.. "

அட.. நான் பேசுவது தான் ப்ரனிக்காவிற்கு புரியுமே.. "ப்ரனிக்கா.. இதோ நான் வந்துவிட்டேன் பார்.. வெளியே ஓடி வா.."

எங்கே.. யாரையும் காணோம். அதோ என் ப்ரனிக்கா ஓடி வருகிறாள். அவளுடன் ப்ரனிக்காவின் அப்பாவும், அம்மாவும் கூட வருகிறார்களே.. இதோ வந்து விட்டாள்.. இதோ இதோ.. - - - "ஏய் ஏய்.. ப்ரனிக்கா பார்த்து.. என் காலில் அடிபட்டிருக்கிறது.." அது சரி.. அவள் எதையும் கேட்கும் நிலையில் இல்லை போல... ஆஹா.. நான்கு நாட்கள் இந்த முத்தம் இல்லாமல் எத்தனை கொடுமையாக இருந்தது..

ரொம்ப நன்றி சார்.. 4 நாளா எங்க டாமி இல்லாம ரொம்ப கஷ்டபட்டுடோம்.. நல்ல வேளை எங்ககிட்ட கொண்டு வந்து சேர்த்துட்டிங்க.. உங்க பேரு சார்..?

என் பேரு சரவணன் சார்.. 4 நாளைக்கு முன்னாடி பீச்சுக்கு போயிருந்தேன்.. அப்போதான் உங்க நாய் அடிபட்டு ரோட்ல கிடந்தது.. நான் தான் ஹாஸ்பிட்டல் தூக்கி போய் காயத்துக்கு கட்டு போட்டு என் வீட்ல வச்சிருந்தேன்..

"ஹலோ சரவணன்.. என் பேரு டாமி.. மறுபடியும் நாய்னு சொன்ன கடிச்சி வச்சிடுவேன்.."

ச்சே.. இவனுக்கு மட்டும் நான் பேசுவது புரியமாட்டேங்குதே.. ப்ரனிக்கா மட்டும் தான் நான் பேசுவதை சரியாக புரிந்து கொள்கிறாள்.. ஆஹா.. ப்ரனிக்காவின் அணைப்பு தான் எத்தனை சுகம்..

**தமிழ்**

**ஜோவியல்பாலா**

இதோ என்றும்போல இன்றும் கதிரவன்
துயிலெழுந்துவிட்டான்
இனியெல்லோரும் எறும்புக்கூட்டமாக
கொத்துக் கொத்தாக அலைவார்கள்.

நானும் தான் அலைகிறேன் எனது
வாழ்வாதாரமான வேலைக்காக,
பட்டம் பெற்ற பின்பும் அப்பாவின்
காசிலமர்ந்து சாப்பிடும்
நிலைக்குள்ளானவன் நான்.

காலம் இப்படியோடிக்கொண்டிருக்க
என் மனமோ காதல் வயப்பட்டுவிட்டது,
ஆம் நானும் காதலில் விழுந்துவிட்டேன்,

கவிதைகளேனும் எழுதிப் பிழைத்துக்
கொள்வோமென
காதல் வயப்பட்டுவிட்டேன்

"எனது தமிழ் மொழி"யின் மேல்.
இனி தமிழ் எனக்கு சோறுபோடும்.

உங்க உதவிக்கு ரொம்ப நன்றி சார்.. டாமி காணாம போனதுல இருந்து என் பொண்ணு ப்ரனிக்கா ஒரே அழுகை.. இதோ இவதான்.. 5th படிக்குறா.. டாமி கூட்டி வந்ததுக்கு அங்கிளுக்கு தாங்க்ஸ் சொல்லு ப்ரனிக்கா.

தேங்க்ஸ் அங்கிள்..

பரவால.. ப்ரனிக்கா..

வேற டாக் வாங்கி கொடுத்தோம்.. ஆனா இவளுக்கு டாமி தான் வேணும்னு அடம் பிடிச்சா.. எனக்கு என் பொண்ணு சந்தோசம் தான் முக்கியம்.. அதான்.. பேப்பர்ல விளம்பரம் கொடுத்தேன்

## எப்பவெல்லாம் தோன்றும்...

**யாழ்பாவாணன்**

*உடனுக்குடன்*
*எல்லாம் தெரிந்து விட*
*நம்மாளுகள் எவரும்*
*கடவுள் அல்ல!*
*வயிறு கடிக்கும் போதே*
*பசியைத் தெரிந்து கொள்கிறான்*
*பசியைப் போக்க நினைக்கையிலே*
*வருவாயீட்டத் தெரிந்து கொள்கிறான்*
*நாலுகாசு கையில் இருக்கையிலே*
*செலவு செய்யத் தெரிந்து கொள்கிறான்*
*கட்டுப்பாடு இல்லாத வேளை*
*(சுதந்திரமாக உள்ள போது தான்)*
*தவறு செய்யத் தெரிந்து கொள்கிறான்*
*தவறு செய்யும் போது தான்*
*நன்மை, தீமை எதுவென*
*நம்மாளுகள் மறந்து விடுகின்றனரே!*

*தேவை வந்த போது தான்*
*தோழமையைத் தேடுகின்றார்*
*விருப்பம் வந்த போது தான்*
*உறவைப் பேணுகின்றார்*
*துன்பம் வந்த போது தான்*
*சூழலைப் படிக்கின்றார்*
*இன்பம் வந்த போது தான்*
*சூழலையே மறக்கின்றார்*
*சூழலை விட்டு ஒதுங்கினால் தான்*
*நம்மாளுகள் தம்மையே உணருகின்றனரே!*

*சூழலே தம்மை ஒதுங்கினால் தான்*
*நம்மாளுகள் தெளிவையே பெறுகின்றனரே!*
*தெளிவைப் பெற்ற பின்னர் தானே*
*எப்பவெல்லாம் தோன்றும்*
*எல்லாவற்றையும்*
*எண்ணிப்பார்க்கத் தவறிவிட்டால்*
*எதிர்காலமே இருளாகிவிடுமென்றே*
*நம்மாளுகளும் எண்ணிப்பார்க்கின்றனரே!*

"ப்ரனிக்கா.. என் மேல உனக்கு அவ்வளவு அன்பா.. ஆஹா.. மறுபடியும் அதே முத்தம்.."

உள்ள வாங்க சார்..

பரவால சார்.. எனக்கு வேற வேலை இருக்கு.. நான் கிளம்பனும்.. விளம்பரத்துல சொல்லி இருந்தபடி அந்த பரிசுத் தொகை..

பரிசுத் தொகையா..? தொகை என்றால்..?

ஒரு நிமிஷம் சார்.. இதோ வந்துடுறேன்..

டாமி.. எங்க போன என்னை விட்டுட்டு.. ஐயோ.. காயம்.. ரொம்ப வலிக்குதா டாமி..

"வலிச்சது.. ஆனா இப்ப இல்ல.. உன்னை பார்த்ததும் வலியெல்லாம் பறந்து போச்சி ப்ரனிக்கா.. "

இந்தாங்க சார்.. அம்பதாயிரதுக்கு செக் எழுதி இருக்கேன்..

ரொம்ப நன்றி சார்.. பாய் ப்ரனிக்கா.. பாய் டாமி.. வரேன் சார்..

"பாய் சரவணன்.. உன்னோட உதவிக்கு ரொம்ப நன்றி" ச்சே.. என் நன்றியை அவனுக்கு புரியும்படி சொல்ல முடியாமல் போய்விட்டதே..

வா டாமி.. உள்ள போலாம்..

ஆ.. வேறு ஒரு டாக் வாங்கியதாக ப்ரனிக்காவின் அப்பா சொன்னாரே.. எங்கே என் எதிரி..

"டாமி.. உனக்கு புதுசா ஒரு ப்ரெண்ட் கிடைச்சிருக்காங்க.."

"அவன் என் நண்பன் அல்ல.. என் எதிரி.. என் சாப்பாட்டை பங்கு போட வந்திருப்பவன்.. என் மீது நீ காட்டும் அன்பை குறைக்க வந்திருப்பவன்.. எங்கே அவன்.. அவனை காட்டு.."

டாடி.. அந்த டாக் தூக்கிட்டு வாங்க..

இதோ தூக்கிட்டு வரேண்டா..

வரட்டும் அவன்.. எப்படியேனும் அவனை இங்கிருந்து துரத்திவிட வேண்டும்..

டாமி.. இதோ பார் உன் நியூ ப்ரெண்ட்..

ஆ.. இது கனவா இல்லை நிஜமா.. அன்று யாரைக் காரில் பார்த்து விரட்டிக் கொண்டு போய் அடிபட்டேனோ அவளைப் போலவே இருக்கிறாளே இவள்.. அதே மஞ்சள் நிற மேனி.. மயக்கும் பார்வை..

ஆஹா என்னை பார்த்து சிரிக்கிறாள்.. கடவுளே.. என்னைக் காப்பாற்றி மீண்டும் இங்கே நீ சேர்த்தது இந்த அழகியப் பெண்ணைக் காண தானா..? இனியும் நான் தனியன் அல்ல.. இதோ வந்துவிட்டாள் என்னவள்..

லொள்.. லொள்... லொள்..

அருள்தரும் ஆயிரம்
தமிழிசைப்பாடல்கள்

வேதாந்த கவியோகி நாகசுந்தரம்



**19.** நவசம்பக புஷ்பாப நாஸாதண்ட விராஜிதா

*ராகம் - மோஹனம்*

லலிதை அவளின் ரூபம் நவ

சம்பக பூவின் நாசி (ல)
வாஸனை உணரும் நாசி துர்
வாஸனை தன்னை அழிக்கும் (ல)

நல்லதை மட்டுமே நுகரும் அது
அல்லதை அறவே ஒழிக்கும்
கற்றவர் சம்பக பூவாம் அது
கொற்றவை அவளின் மூக்காம் (ல)

ஞானாநந்தம் பெற்றிடவே நல்
கானத்தில் அவளை தொழுதோம்
தீனராம் நம்மை காப்பாள் உயர்
வானோர் நிலையை அருளுவாள் (ல)

**20.** தாராகாந்தி திரஸ்காரி நாஸாபரண பாஸுரா

*ராகம் - பைரவி*

நிலவின் ஒளிக்கிங்கே ஓர் போட்டியுண்டு அது
லலிதையின் மூக்கணி அழகாகும் (நி)
அஞ்ஞான இருள் இங்கே அகன்றுவிடும்
ஞானாநந்த ஒளியிங்கே வீசிவிடும் (நி)

ஸமாதி விருத்திதான் தாரகைகள் ஸம
தமாதி ஸாதனங்கள்தான்அவள் அணிகள்
தாமாக வராது தத்துவங்கள் குரு
முகமாக வருவதே அனுபவங்கள் (நி)

திங்களின் ஒளியோ இரவல் ஒளி நம்
அம்பிகை அணியோ ஸ்வயமாகும்
ஆயிரம் நாமத்தால் போற்றிடுவோம் அந்த
தாயவள் தரணியை காத்திடட்டும் (நி)

**21.** கதம்ப மஞ்சரீ க்லுப்த கர்ண பூர மனோஹரா

*ராகம் - காம்போதி*

சிரவணம் என்னும் காது அதில்
மனனம் என்னும் கதம்பம் அம்மா உனக்கு (சி)
தரணும் உந்தன் அருளை தாயே உன்னை பணிந்தேன்
பரத்தின் சக்தி நீயே (சி)

குருவின் பாதம் அறிந்தேன் அவர்
திருவாம் உன்னை தந்தார்
சப்த ப்ரபஞ்சம் நீதான் பக்த
ஸப்த ரிஷிகள் வடிவம் (சி)

ஞானம் தரும் மகிழ்வு பர
ஞானம் வந்தால் தெளிவு
காதில் சூடும் மலர்கள் அது
வேதம் பாடும் கிளிகள் (சி)

**22.** தாடங்கயுகளீப+த தபனோடுப மண்டலா

*ராகம் - சாமா*

தாடங்கம் தரித்தனளே அன்னை
சூரிய சந்திரரை (தா)
பாட்டிதில் வந்தனளே அன்னை வழி
காட்டிட நின்றனளே (தா)

ஞானமே சூரியனாம் அந்த
ஞானமகிழ்ச்சியே சந்திரனாம்
வானத்தில் நிறைந்தனளாம் அவள்
கானத்தில் மகிழ்பவளாம் (தா)

அருள்சக்தி அவள் உருவாம் மாய
இறுக்கத்தை தொலைப்பவளாம்
குருவழி செல்பவர்க்கே அவள்
திருவருள் தருபவளாம் (தா)

**23.** பத்மராக சிலாதர்ச பரிபாவி கபோலபூ:

*ராகம் - சங்கராபரணம்*

பத்மராககமும் நாணும் பராசக்தியின் கன்னம் பார்த்து
பாங்காக வாக்தேவி உரைத்தாள் (ப)
ப்ரகாசத்திற்கு ஓர் ஈடு இணை இல்லை ஆன்ம
ப்ரகாசத்தை தந்தருளும் அவளின் (ப)

திடமாக வேண்டும் வைராக்யம் மண்
குடம் போலே குயவனும் நிமித்தமும்

உடல் பற்று நீங்கினால் உண்மை
படமாக புரிந்திடும் அவளழகு (ப)

ஞானத்தின் மகிழ்ச்சி ஓர்புறம் அக்
ஞானத்தின் அழிவு மறு புறம்
ஞாலத்தில் இதனை உணர்த்தவே
ஞாபகம் தந்த புலவர்கள் கூறும் (ப)

## பிஞ்சு மனம் கெஞ்சிக்கேட்கிறது ....!!!

கே இனியவன்



அம்மா ஒருதிசையில் வாழ்க்கை ....!!!
அப்பா ஒரு திசையில் வாழ்க்கை ....!!!
நான் சிறு வயதில் என் தோழியோடு ....
கூட்டாஞ்ச்சோறு விளையாட்டில் ....
அம்மா அப்பா விளையாட்டில் பெற்ற....
சந்தோசத்தை கூட அனுபவிக்காத ....
என் பெற்றோரின் வாழ்க்கையை ....
நினைத்து வெம்பிக்கொண்டிருக்கிறேன்....
தட்டிக்கேட்கும் வயதும் இல்லை ....
இந்த சூழலில் வாழவும் முடியவில்லை ....!!!

ஏன் இவர்களிடம் இந்த மனமுறிவு ...?
புரிந்து கொள்ளும் அறிவும் இல்லை ....
அதற்கான அனுபவமும் இல்லை ....
அடிக்கடி அம்மா சொல்லும் வார்த்தை...
அவள் வேண்டும் என்றால் எங்களை....
விட்டு விடு எங்களை வதைக்காதே ....
நான் பிச்சை எடுத்தாயினும் என் ....
குழந்தையை காப்பாற்றுவேன் ....!!!

அடுத்து அம்மாவுக்கும் அப்பாவுக்கும்....
இடையில் என்ன நடக்கும் என்ற பயத்தில் ....
போர்க்களத்தில் வாழுகிறான் நான் ....
அம்மாவின் முகத்தில் சிரிப்பு இல்லை....
அப்பாவின் நெஞ்சில் அரவணைப்பு இல்லை ....

ஒப்பந்த திருமணத்தில் வாழ்க்கை வியாபாரம்....
செய்வதுபோல் வாழ்கிறார்கள் என் பெற்றோர் ....
எனக்கு வேலை மூலையில் நின்று அழுவது ....!!!

அம்மாவின் பாசத்துக்கு ஏங்குகிறேன் ...
அப்பாவின் அரவணைப்பிற்கு துடிக்கிறேன்....
அம்மா விவாக ரத்துக்கு ஏங்குகிறார்....
அப்பா தனிமையை விரும்புகிறார் ....
உச்ச கட்ட மனமுறிவில் என் குடும்பம்....
என் கற்றல் முற்றாக தடைப்படுகிறது....
கண்டு கொள்ள யாரும் இல்லை....
உறவுகள் வரும்போது மட்டும் ...
சந்தோசம் நிலவும் போலி ....
வாழ்கையில் என் குடும்பம் ....!!!

பெற்றோரே எனக்கு...
புது ஆடை வேண்டாம் ...
சுற்றுலா பயணமும் வேண்டாம் ....
என் வீட்டில் சிரிப்பு சத்தம் கேட்கனும்...
அம்மா சிரிக்கணும் ..
அன்போடு என்னை முத்தமிடனும் ....
அப்பா சிரிக்கணும் பாசத்தோடு
என்னை தூக்கணும் ...
எங்கள் வீட்டில் சிரிப்பு சத்தம் கேட்டு ...
பலமாதங்கள் ஆகிவிட்டது ....!!!

பெற்றோரே ..
வேண்டாம் விவாக ரத்து ...
வேண்டாம் தொலைக்காட்சியில் ....
குடும்ப பிரச்சனை தீர்வு நிகழ்ச்சி ....
முடிந்தால் எனக்காக வாழுங்கள் ....!!!
என் தோழிகளின் பெற்றோர்
போல் வாழுங்கள்
முடியவில்லையம்மா
என்னால் தாங்க...!!!
இரு கரம் கூப்பி கேட்கிறேன்
" பிஞ்சு மனம் கெஞ்சி கேட்கிறேன் "
எங்கள் வீட்டில் சிரிப்பு சத்தம் கேட்கட்டும் ....???

# ஆணவம் என்கிற அறியாமை

பூமலை

ஆணவம் என்கிற அறியாமை நம்மிடம் உள்ள ஆணவமே அறியாமையைத் தருகிறது. அதாவது ஆணவமே அறியாமையாக வெளிப்படுகிறது. இதை அறியாமை ஆணவம் என்கிறது உண்மை விளக்கம்.

தமிழில் ஆணவம் " இருள் " எனப்படும். வெளி இருள் ( ஆணவம்) நம் அறிவை மறைக்கும். அறிவு மறைய அறியாமை வெளிப்படுகிறது.

வள்ளுவரும் ஆணவத்தை இருள் என்கிறார்.

ஒரு கோயில் மிதியடி காப்பகத்தில் மிதியடிகளை எடுப்பதற்கு டோக்கன் கொடுத்து மிதியடிகளை வேண்டினேன் அப்போது அங்குள்ள பணியாளர் எனக்கான மிதியடிகளை எடுத்து என்முன் வீசினார், இவரோ சிவனாடியார்கள் மிதியடியை காக்கிறோம் என்ற எண்ணம் இன்றி தூக்கி எறிவது அவருடைய ஆணவம் தந்த அறியாமையை காட்டுகிறது.

தென்காசி காசி விசுவநாதர் ஆலயம் கட்டிய ஒரு மன்னன் கோவிலுக்கு வரும் சிவனடியார்கள் அவர்கள் தம் பாதம் என்மீது படவேண்டும் என எண்ணி அக்கோவிலின் படியருகில் தன் உருவத்தை தரையில் செதுக்கியுள்ளான் அவனல்லாவோ சிவத்தொண்டன்?

அட்டணக்கால் போடுவர் சிலர். தனக்கு மேல் ஒருவர் வயதிலோ படிப்பிலோ அதிகாரத்திலோ, வந்துவிட்டால் அட்டணக்காலை எடுத்து விடுவர். யாவருக்கு மேல் ஆண்டவன் ஒருவன் உள்ளானே அவனுக்கு முன் நாம் எம்மாத்திரம் அவர் நம்முடன் என்றும் இருக்கிறார் என்று உணராத அறியாமையே இந்த ஆணவத்தின் காரணம்.

இவை போன்ற நம் அறியாமை ( ஆணவத்தை) நிரம்பி அறிவு என எண்ணி வாழ்கிறோம். நம் அறியாமையே நான், எனது, எனவும், கோபம், காமம், பிடிவாதம், வஞ்சம், எனவும், பலவடிவில் நம்மிடம் வெளிப்படுகிறது. நம் அறியாமை நீங்குவது எந்நாளோ?

நாம் அனைவரும் ஒன்றை அறிகிறோம். பின் அதிலேயே முழ்கிறோம். அதில் முதனிலை அடைகிறோம். பிறவற்றை அறிவதில்லை. அதுவே ஆணவம் என்கிற அறியாமையைத் தருகிறது. பின் நம் வாழ்நாள் முழுவதும் அதிலேயே போய்விடுகிறது.

மாறாக அறியவேண்டியதை அறியவேண்டும். அதிலேயே மூழ்கிவிடாது இறைவனை பற்ற வேண்டும். அது ஒன்றே அறிவுடைமை, ஆணவமின்மை, அதுவே பணிவைத்தரும். இறைவனை உண்மையாக, எளிமையாக "எண்ணுவது ஒன்றே அறிவுடைமை" அதுவே நம் ஆணவம் தரும் அறியாமையை போக்கும் வழி.

எனக்கு வாடி பிடிக்கவில்லை

ஆனால்

என் தமிழை விட்டுவிட்டு சாக பிடிக்கவில்லை

அதனால் தான்

வாழ்தலை நேசிக்கிறேன்

தமிழை மூச்சாய் சுவாசிக்கிறேன்

சுப்பாலா

### வாழ்த்துகிறேன் உயிராய்...

பாண்டிமா

தானாய் வந்தத் தங்க மயிலே
தேனாய்ப் பேசும் இனியவளே
மைத் தீட்டாக் கரு விழியாளே
அன்பில் அட்சயப் பாத்திரமாய்
குறையாக் குணம் பெற்றவளே

வெண்பற்கள் சிரிப்பழகியிவள்
முதிர்ந்த அறிவில் சிறந்தவள்
பாசத்தில் பரவசம் கொள்பவள்
நிதான நடைக் கொண்டேயிவள்
வெற்றிகளை எட்டிப் பிடிப்பவள்

சின்ன கோபத்தில் சினுங்கியே
மவுனத் திரையில் மறைந்திட்டு
மேகத்துள் புதைந்து பதுங்கியே
மெல்ல துள்ளியோடி வருமென
நிலவாய் ரசிப்பேன் உன்னையே

இதயம் திறந்து காட்டவியலாது
விழி பார்த்து அறிந்திடா அன்பை
உச்சரிக்க வார்த்கள் வாய்த்திடாது
தத்தளித்து என் கரங்கள் கூப்பியபடி
இறைவா உன்னிடம் வேண்டியபடி

மலரத் துடித்த மலர்கள் யாவுமிங்கு
உன்னையே வாழ்த்திப் பூத்ததம்மா
அலைகடலும் கூட ஆர்ப்பறித்தபடி
ஆடிப்பாடி வந்தே வாழ்த்துதேம்மா
யாவுமே சிறப்புடன் பெருகுமம்மா

இறைவனை பற்றிய நம் அறியாமைதான் உலகப் பொருள்களை விரும்ப வைக்கிறது. அது கல்வி, செல்வம், பதவி, புகழ், என வேறுதிசைகளில் நம்மை இழுத்துச் செல்கிறது. ஒருவரைப் பார்த்து ஒருவர் என உலகப் பொருள்கள் மீது விருப்பத்தை வளர்த்து விட்டோம், உலக பொருள்களை ஒரளவுதான் அனுபவிக்க முடியும், அனைத்தையும் நாமே அனுபவிக்க முடியுமா? முடியாது. அளவுக்கு மீறி ஒன்றை விரும்ப அதுவே நம் வாழ்க்கை என்றாகிவிட்டது.

அனைத்து நபர்களிடமும் ஆணவம் உள்ளது. அதில் கூடுதல், குறைவு இருக்கலாம். என்னிடம் ஆணவம் இல்லை என யாரும் கூற முடியாது. ஏனெனின் ஆணவத்தை குறைக்க எழுந்ததே இப்பிறப்பு.

இறைவன் ஆணவமுடைய உயிர்களை கொண்டு உலகில் பலகாரியங்களை நடத்துகிறான். அவர்களது ஆணவத்தை கொண்டே அவர்களை ஒரு கருவியாக்குகிறான். உலகம் இயங்கவேண்டும் அல்லவா? ஆணவமுடைய பலரைப் பார்க்கின்றோம். அப்போது இது அவரது அகங்காரம், கர்வம் என்று எண்ணாது, இரு அவரது அறியாமை எனச் சிந்தித்தால் நம் உயிர் முன்னேற வழி பிறக்கும். உலகில் ஆணவத்தை சைவ சித்தாந்தம் மட்டுமே விளக்கிறது.

திருச்சிற்றம்பலம் ஓம் சிவாய நம

## காத்திருப்புகள்

ஜெயராமன்

உயிர் மூச்சின்
இறுதிக்காக
மரணம் இங்கே
காத்துக் கிடக்கிறது.

வெந்து தணிந்திடும்
செங்கோள் சூரியன்
மறைவிற்காக
இருட்டும் இங்கே
காத்துக்கிடக்கிறது.

துளை வழி வெளிவரும்
ராகங்களுக்காக
காற்றின் வரவை நொக்கி
புல்லாங் குழல் - இங்கே
காத்துக் கிடக்கிறது.

இரவு முழுவதும்
பனி நீர்ச் சுமைகளை
சுமந்து வெறுத்த புல்வெளி
சுமைகள் இறக்கிட
கதிரவன் வரவிற்காக
காத்துக்கிடக்கிறது.

தினசரி இருமுறை
விழுந்திடும் இரைகளுக்காக
இமையாக் கண்களில்
தொட்டி மீன் - இங்கே
காத்துக்கிடக்கிறது.

பசித்த பிள்ளை வயிறு,
சுருக்குப் பைகளாய்
துவண்ட முலைகளின்
அடுத்த சுரப்பிற்காக - இங்கே
காத்துக்கிடக்கிறது.

ஓடையில் ஓடிடும்
சிறுமீன் ஓட விட்டு
உறுமீன் வருமென
ஒற்றைக்காலில் கொக்கு
இங்கே - காத்துக்கிடக்கிறது.

இளமைத் துள்ளல்கள்
முடிந்த பின்னே
காலனின் வரவை நோக்கி
வயோதிகம் - இங்கே
காத்துக்கிடக்கிறது.

சிந்தனைப் பொறியில்
சிக்கிடும் கருவிற்காக
கவிஞனும் - இங்கே
காத்துக்கிடக்கிறான்...

# இரயில் பயணங்கள்...!!!

காயத்ரி கேசவன்

ஓடிக் கொண்டிருக்கும் இயந்திர வாழ்க்கையில்,

உருண்டோடிக் கொண்டிருக்கும் என் தினசரி இரயில் பயணங்கள்...

விடியலில் எழுந்து வியர்க்க, விறுவிறுக்க

ஓடிவருகிறேன் உன்னை பிடிக்க...

சிறிது தாமதம் என்றாலும், சென்று

விடுகிறாய் என்னை விட்டு....

15 நிமிட பயணத்திற்கு, தினமும்

ஏங்குகிறேன் ஜன்னலோர பயணத்திற்கு,

ஜன்னலோரம் கிடைத்து விட்டால், மெய்

மறந்துவிடுகிறேன் என்னையும், அறியாமல் உன்னில்...

உன்னிடம் விடைபெற்று விட்டு,

பேருந்து பயணத்திற்கு காத்து இருக்கிறேன்...

பேருந்தில் இடிபாடுகளில் சிக்கி,

கால் வைக்க இடம் தேடி நிற்கையில்,

கிடைக்காதா இங்கும் உன் பயணம் என ஏங்குகிறேன்...

அலுவலகம் சென்று வேலையில் மூழ்கி,

பணிச் சுமைகளை முடிக்கிறேன்...

மாலையில் மறுபடியும் பேருந்து பயணம்,

கூட்ட நெரிசலை கடந்து, உன்

இனிய பயணத்திற்காக காத்திருக்கிறேன்...

இரைத் தேடி சென்ற ஒரு கூட்டு, பறவைகள்

மரத்தில் ஒன்றாக இணைவது போல...

பணி முடிந்து வரும் என்னையும், என் தோழிகளை,

ஒன்றாக இணைக்கிறாய் உன் பயணத்தில்...



பள்ளி தோழமை, கல்லூரி தோழமை போல,

நீயும் தருகிறாய் நீங்கா இரயில் சிநேகம்...

வயது வித்தியாசமற்ற தோழமையுடன்,

கவலைகள் மறந்து அரட்டை அடித்து,

களிப்புறுகிறோம் உன் பயணத்தில்...

வளைந்து நெளிந்து சென்றாலும்,

தடம் மாறி செல்லாமல்,

தாங்கி செல்கிறாய் எங்களை பாதுகாப்புடன்...

நீயே வாழ்க்கை பாடம் கற்பிக்கிறாய், இதன் மூலம்...

வாழ்க்கையில் ஏற்ற இறக்கம் வந்தாலும்,

தடைகள் பல வந்தாலும்,

தாங்கி செல்ல வேண்டும் புன்னகையுடன் என்று...

விருப்பம் இல்லாமல் விடை பெறுகிறேன்,

உன் பயணத்தில் இருந்து,

மறுநாள் உன் பயணத்திற்கான காத்திருப்புடன்...

தினசரி இயந்திர வாழ்க்கையில்,

தித்திக்க வைக்கும் உன் பயணங்கள்,

திரும்ப பெறா இனிய தருணங்கள்....

# பகடி வெண்பா!

அகரம் அமுதன்

*"இவ்வெண்பாக்களின் வடிவம் மாறாமல் விரும்பினால் தங்களின் தோழர், தோழிகளின் திருமண நிகழ்வில் இவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம்."*

தீட்டிய பாவில்தான் தீஞ்சுவையோ? இல்லை'மை'
கூட்டிய பார்வையில்தான் கொங்(கு)உளதோ?–கேட்டவுடன்
நேற்றுவரை பாவென்றாய்; நேரெதிராய் நாளை'மை'
ஊற்றிய பார்வையென்பாய் ஓர்ந்து! (1)

சித்திரம் சின்னச் சிலையொத்த மேனியினாள்
பத்திரம் அப்பாநீ பார்த்துக்கொள்; -அத்திரங்கள்
போடட்டும் காமன்; புதுமண மக்காள்!நன்(கு)
ஆடட்டும் கட்டில் அசைந்து! (2)

இடம்மாறும் பெண்ணால் இடம்மாறும் நெஞ்சம்;
இடம்மாறும் பெண்ணில் இயைவால்; -இடம்மாறும்
யாவும் அணைப்பால்;யார் ஆண்பெண்ணென்(று)
யார்சொல்வார்?
ஓவும்பூங் காற்றும் உணர்ந்து! (3)

சந்தியா காலத்திற் சந்தித்து நீரிருவர்
சந்தியாக் காலத்தைச் சாடுவிரோ? –சிந்தைநீ
செய்கும் தமிழ்மொழி தேமொழிக்கீ டில்லையென்று
வைகுமோ நண்பா!உன் வாய்! (4)

'நான்'என்று சொல்கின்ற நாள்ஓடிப் போச்சு(து)இனி
'நான்'அன்று 'நாம்'என்று நாமொழியும்; –தேன்இப்போ(து)
உள்ளங்கை தன்னில்; உணத்தான் தடைபோடும்
உள்ளபடி நாணம் உயர்ந்து! (5)

நங்கை தலைசாயும் நாணத்தால்; அப்பவும்என்
பங்கைத்தா என்றே பகர்வாயோ? –நுங்குநிகர்
நாவால் அவள்பேர் நவின்(று)அரு கேஅழைத்துத்
தேவாய் சுவைக்கையில் தேர்ந்து! (6)

உண்ணா வறண்டே உடலம் உதறுமப்பா;
உண்ணாய் பசித்தும் ஒருவாய்; -எண்ணாய்
எதையும்; அணங்கின் எழில்கண்(டு) உளறும்
அதையும் இதையும்வாய் ஆம்! (7)

பாயே இலையாக பாவை உணவாக
நீயோ பசியில் நெலிவாயே; -நீயாக
அள்ளித்தான் உண்ணவும் ஆகாதே; நாணத்தால்
உள்ளந்தான் நோகும் உடைந்து! (8)

பசிக்கும்; பசும்பால் பழம்பக்கம் இருந்தும்
புசிக்கும் நினை(வு)அற்றுப் போகும்; -புசிக்கின்
புளிக்கும்; உளம்அந்தப் பூவை இடம்மேவிக்
களிக்கும் தடைகள் கடந்து! (9)

முத்தம் பிறக்குமிடம் முந்நீரோ? செவ்விதழோ?
பித்தத்தால் நீயும் பிதற்றுவாய்; -அத்தானின்
ஐயத்தைப் போக்க அவளும் வழங்குவாள்
செய்யவாய் மேலும் சிவந்து! (10)

கச்சிருக்கும் போதும் கரும்புவில்லோன் அம்பிலொன்று
தச்சிருக்கும் போதும் தழும்பேறி –மொச்சிருக்கும்
கொங்கை மிகவாட்டம் கூட்டாதோ? உன்னிரண்டு
செங்கை படத்தான் திரண்டு! (11)

எட்டிக்காய் பற்றி இழுத்துச் சுவையாமல்
எட்டிக்காய் என்றே இகழ்வாழோ? –எட்டிக்காய்
கின்றமதி இன்முகத்தாள் கேள்வா! அவளிரண்டு
நின்றமுலை தெங்கிள நீர்! (12)

தப்பெல்லாம் இங்கே சரியாம்; சரிதப்பாம்;
எப்போதோ நான்கண்ட உண்மையிது; -இப்போது
காணத் துடிப்பவனே! காலை அதைக்கேட்டால்
நாணித் துவள்வாயோ நன்று! (13)

தோல்வியில்லாத் தோல்வியிது; தொல்லையில்லாத்
தொல்லையிது;
வேல்வியில்லா வெல்வியிது; வேல்வியந்த –
வேல்விழியாள்;
ஊற்றும்நெய் நீ;உன்னை ஊற்றின் வரமாக
ஈற்றில் விளைந்திடும் இன்பு! (14)

அழகான பெண்ணை அணைப்பாய்; அவளும்
பழகாத பாடம் பயில்வாள்; -அழகில்
அழுந்திக் கிடந்தே அமுதம் எடுக்க
எழுந்து நடக்கும் இரா! (15)

சேவல் எழுப்பச் செழுங்கதிரோன் வான்மேவ
போவதேன் அல்இப் பொழு(து)?என்றே –ஆவல்
தணியா மனத்தாய்! தவிதவிப்பாய்; மற்ற
பணியாவும் போகும் மறந்து! (16)

இராமல் அகலும் இயல்பால் இரவை
இராவென்(று) எவரும் இயம்ப –இராமலே
வைகலும் வைகல் வரக்கண்டு நீநொந்து
வைகலை வைகுவையோ வந்து? (17)

உடலே விறகா; உளமே உலையா;
அடடா விழியே அனலா; –நடக்கும்
சமையல் முடிவில் சனிக்கும் மழலை;
உமையே உருவாய் உரித்து! (18)

# மரணத்தின் கடைசி நொடி...

**கனீஸ்வரி**



மலையின் உச்சியில் நான் நின்று கொண்டு இருக்கிறேன், இனி வாழக்கூடாதென முடிவெடுத்து விட்டேன், என் வாழ் நாளில் நான் சில மணித்துளிகள் கூட மகிழ்வுற்றதாய் நினைத்ததே இல்லை, இது போல வாழ்வதை காட்டிலும் மலையின் உச்சியில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொள்வதென முடிவெடுத்துள்ளேன்.....

நான் இன்று இம்முடிவை ஏதோ அவசரத்தில் எடுக்கவில்லை, நிதானமாய் யோசித்து சில நாட்களாய் எப்படி சாவதென மனதுக்குள் பலமுறை ஒத்திகை பார்த்தே நான் இம்முடிவை எடுத்துள்ளேன்...நான் இறந்த பின் எனக்காய் யாரெல்லாம் அழுவார்கள் என்று நான் நினைக்கவில்லை, நான் இருக்கும் போது யாருமே எனக்காய் இல்லையென்றே நினைக்கிறேன....

## அகம்தீயாய்

**சுபபாலா**

ஒவ்வொரு ஈழத்தமிழனும்
அகதியாக மட்டும் அல்ல .......!!!
அகம் முழுதும் தீயோடுதான் இருக்கிறான்
தீயே .....!
இவனை தீண்ட அஞ்சும் .......!!!
இருந்தும் இன்னொரு துரோகத்தை தாங்க முடியாததால்
தான்
காற்றில் பறக்கும் பஞ்சாய் போனான் .......!!!
பஞ்சம் பிழைக்க அல்ல ........!!!
எஞ்சிய
உயிரை மட்டும் பிழைக்க புறப்பட்ட
பரதேசியானான் ...........!!!
ஆனால்
அகதியாய் மட்டும் அல்ல !!!
அகம்தீயாய் தான் வாழ்கிறான் .........!!!

இதோ இன்னும் சில மணித்துளிகளில் நான் சிதறியபடி என் உயிரை விட்டிருப்பேன், என் சாவுக்கு யாரையும் காரணமாக்கி விடக் கூடாதென முடிவெடுத்தே நான் எனக்கு பலகக்கப்படாத இவ்விடத்திற்க்கு வந்திருக்கிறேன். நான் சாவதென முடிவெடுத்தவுடன் முதலில் யோசித்தது தூக்கு மாட்டிக் கொள்ளலாமா எனத்தான், ஆனால் தூக்கு மாட்டி செத்தால் நாக்கு வெளியில் தள்ளி பார்க்கவே அகோரமாய் இருப்பேன் என்பதால் அதை கைவிட்டேன்...

ஆசனவாய் வலியாய் எனிமா செலுத்தி என்னை கேலிப் பொருளாக்கி விடுவார்கள், அதனால் மருந்து குடிப்பதையும் வேணாம் என முடிவெடுத்தேன்,,,, அது மட்டும் இல்லை மருந்து குடித்தால் பலமணி நேரம் வலியால் துடிக்க வேண்டுமாம்....

## சடுதியாய் வாருங்கள்..

**காரை.கே.எஸ். விஜயன்**

எனது
அன்பு மாமியாரே..!!
எத்தனை நாளாயிற்று
என்னை விட்டு
பிரிந்து சென்று..??
மகள் வீடென்றாலும்
மாதக்கணக்கிலா
தங்குவார்கள்..??

ஓரெட்டு
போய்வாறேன்
என்றீகள்
ஏழெட்டு, எட்டெட்டு
நாளாச்சு
இன்னுமேன் வரவில்லை
எனதருமை மாமியாரே..??

நீங்கள் இல்லாத வீடெனக்கு
நரகமாய் இருக்கு...
ஊணுறக்கம்
கொள்ளவில்லை
மனம் ஓரிடத்தில்
நிற்கவில்லை
சூனியம் பிடித்தாற்போல்
தினம் சுற்றுகின்றேன்
வீடெங்கும்..

எனவே,
என் அன்பான
மாமியாரே..!!
இக்கடிதத்தை
தந்திபோல் பாவித்து
சடுதியாய் வாருங்கள்
நாம்
சண்டைபோட்டு நாளாச்சு..

ஆதால் அதையும் தள்ளி வைத்து விட்டு அடுத்து என்ன செய்யலாம் என யோசித்தேன்.....

கிணற்றிலோ ஆற்றிலோ குதித்து உயிரை விட்டு விடுவதென முடிவெடுத்தேன்.. ஒருவேளை நாம் குதித்த நேரம் யாரும் பார்த்து காப்பாற்றி விட்டால் எத்தனை கேவலாமாய் பேசுவார்கள், குடிக்க தண்ணியில்லா ஊரிலே குளமோ கிணறோ நீருடன் இருக்குமா என்பதும் கேள்விக் குறிதான்....

அடுத்த முடிவு தூக்க மாத்திரை சாப்பிடுவதென முடிவெடுத்தேன், ஆனால் மருத்துவரின் ஆலோசனையின்றி மாத்திரை தர மறுக்கும் மருந்து கடைக்காரர்கள் இருக்கும் வரை நம் சாவு எளிதாக முடியாதென நினைத்தேன்…

கைநரம்பை அருத்துவிட்டு சுடுநீரில் வைத்தால் உயிர் போகும் வலி தெரியாதென கேள்விப்பட்டு செய்ய நினைத்தேன் அது வலி அதிகம் என தெரிந்த நண்பன் மூலம் அறிந்து கொண்டேன்….

~~~கல்பனா பாரதி~~~



*அந்திப்பொழுதின் அழகினில்*
*ஆகாய்ச் சிவப்பின் மௌனம்*
*ஆழ்கடலின் நீலநித்திரையில்*
*உறங்கிக் கிடக்கும் மௌனம்*
*தென்றலின் மெல்லிய தழுவலில்*
*பொழிலில் நிறைந்து நிற்கும் மௌனம்*
*மூடியிருக்கும் மொட்டிலும் மௌனம்*
*மெல்ல இதழ் விரியும் பூவிலும் மௌனம்*
*மோனத் தவம் புரியும் ஞானியின்*
*ஆழ் மனதின் சலனமற்ற மௌனம்*
*வைகறைப் பொழுதின் தூய மௌனம்*
*பனித்துளிகள் மலரிதழில் துயிலும் மௌனம்*
*பாதி மூடியும் முழுதும் திறவாத அவள்*
*இதழ்களில் முத்துக்கள் கைகோர்த்து நிற்கும்*
*புன்னகையில் பொருள் பொதிந்த மௌனம்*
*இயற்கையின் எழில் காட்சிகளில்*
*தன்னை மறந்து நிற்கும் கவிஞனின் மௌனம்*
*ஆகாயம் முதல் ஆழ் மனது வரை மௌனமே*
*உன் அதிசய வடிவங்களும் அழகிய பிம்பங்களும்*
*ஆனந்தம் ஆனந்தம் என்றுமே !*

பேருந்தின் முன் விழுவது, மாடியில் இருந்து குதிப்பது, மண்ணெண்ணை ஊற்றிக் கொள்வது, விசம் சாப்பிடுவது என பலவாறு யோசித்துப் பார்க்கிறேன்.. எதுவுமே சரியாய் எனக்கு தோன்றவேயில்லை, கடைசியில் மலைமீது இருந்து குதிப்பது என முடிவெடுத்தேன்……

என்னை யாருக்கும் அடையாளம் தெரியாத ஊரில் இம்மலை இருப்பது எனக்கு வசதியாகிப் போனது, நான் மெதுவாய் எட்டிப் பார்த்தேன் நிச்சயம் இங்கிருந்து குதித்தால் எலும்பும் கூட மிஞ்சாது, என் மூச்சை சீராய் இழுத்து விட்டேன், என் கண் முன்னால் அவள் முகத்தை கொண்டு வந்தேன்.

அவளை நினைத்தபடி வாழமுடியவில்லை அவளை

## சமையல்: அரிசிமாவுப் புட்டு

பாண்டிமா



### தேவையான பொருட்கள்

அரிசி மாவு ................. ஒரு கப்

உப்பு ......................... தேவைக்கேற்ப

சீனி .......................... 1/4 கப்

தேங்காய்த்துருவல்........... 1/4 கப்

### செய்முறை

அரிசி மாவில் தேவையான அளவு சிறிது சிறிதாக சுடு நீர் சேர்த்து சிறிதளவு உப்பு சேர்த்து கெட்டி பிடித்துவிடாமல் உதிரியாக கிளறி வைக்கவும்

இட்டலிச் சட்டியிலோ புட்டுக் குழாயிலோ கொஞ்சம் மாவையும் கொஞ்சம் தேங்காய் துருவலுமாக மாறிமாறி போட்டு அவித்தெடுக்க சுவையும் மணமுமாக புட்டு ரெடி.

அழகான கிணணியில் புட்டைப் போட்டு சிறு கரண்டியோடு தந்தால் ஆசையா சாப்பிடுவார்கள். இதில் முக்கியமாக கவனிகக வேண்டியது புட்டு மிருதுவாக இருக்க, கிளறிய மாவு சிறு கட்டிகளாக திரண்டு இருந்தால் புட்டு சற்று விரைப்பாகி விடும். அதனால் கிளறிய மாவை மிக்சி சின்ன ஜாரில் கொஞ்சம் கொஞ்சமாக போட்டு ஒரு சுற்று மட்டும் சுற்ற விட்டு எடுத்தால் மாவு உதிரியாகவும் பொலு பொலுப்பாகவும் இருக்கும். அதன் பிறகு அவித்தெடுத்தால் மிருதுவாக இருக்கும்.

புட்டுக்கு கூட்டாக பழம், அப்பளம், அவித்த பயறு, கொண்ட கடலை கூட்டு அல்லது சீனி இவை சுவையாக இருக்கும்

செய்து பாருங்கள். பிறகு என்ன ? பாராட்டுதான்.
~~~

பூ என்பது ஓர் எழுத்து
அந்த பூவை சூடும் பெண் என்பவள் இரண்டு எழுத்து
அந்த பெண்ணால் வரும் காதல் என்பது மூன்று எழுத்து
அந்த காதலால் வரும் மரணம் என்பது நான்கு எழுத்து
இதுவே இன்றைய இளைஞர்களின் தலை எழுத்து

தளபதி ராம்குமார்

நினைத்தபடி சாவதென முடிவெடுத்தேன்.. அவள் முகம் இன்று சற்று புகை மூட்டாமாய்தான் என் கண் முன் தெரிந்தது, ஏனோ அவள் இதழ்கள் கூட சிரிக்கவேயில்லை, ஒருவேளை நான் சாவது அவளுக்கு முன்னமே தெரிந்திருக்குமோ, உள்ளுணர்வு என்று சொல்வார்களே அது அவளுக்கு உணர்த்தியிருக்குமோ?

எது எப்படி நிகழ்ந்த போதும் இனி நான் வாழ்வதாய் இல்லை, அவளுடன் வாழ முடியாத நான் இனி வாழத்தகுதி அற்றவன், எனவே என்னை மன்னித்துவிடடி உன் கழுத்தில் மங்கல நாண் ஏற இன்னும் சில மணித்துளிகள் தான் மீதி இருக்கிறது, உன் மணவாழ்க்கை என் மரணத்தின் மூலம் தொடங்கட்டும், உன்னை என் உயிராக நினைத்து வாழ்ந்துவிட்டென் இதுவரை, இனி நீ யாருக்கோ சொந்தமானவள் அடுத்தவன் மனைவியாகப் போகிறவள். உன்னை நினைப்பது நியாயமில்லை… நான் உன்மீது வைத்த காதலை என் உயிர் விட்டு நிரூபிக்க போகிறேன்….

என் கடிகாரத்தை பார்க்கிறேன் இன்னும் இரண்டு விநாடிகள் தான் இருக்கிறது என் இறுதி துடிப்புக்கு, அதன் பின் என் உயிரை அவளுக்கு கல்யாண பரிசாய் தந்துவிடுவேன்….

மைதிலி உன்னை நினைக்கையில் உருகுதடி என் நெஞ்சம். என் மரணத்திற்கான கடைசி நொடி இதோ முடிந்துவிட்டது குதித்து விடப் போகிறேன்…

என் சட்டைப் பையில் அலைபேசி அலரல், என் மைதிலியாய் இருக்குமோ என நினைத்து எடுத்தேன், என் நண்பன் முகுந்தன் அலைப்பில் துண்டிக்க மனம் இல்லை கடைசி வார்த்தை நண்பனிடம் பேசியதாய் இருக்கட்டும் என்று நினைத்தே எடுத்தேன்…..

“டேய் மச்சா எங்கம்மாவுக்கு ரொம்ப முடியலைடா பிளீஷ் உங்கிட்ட பணம் இருந்தா அனுப்பி வைடா, நான் எப்படியும் அம்மாவ காப்பாத்தியே ஆகணும் பிளீஷ் டா” என்று கதறினான்….

என் மரணத்தை இன்னொரு நாள் தள்ளிப் போட்டேன், என் நண்பனுக்கு உதவ அவசரமாய் மலைச்சரிவில் இறங்கி வங்கி நோக்கி பயணிக்கலானேன்….

# பாதுகாப்பு தேவை

**வித்யாபரன்**

*பாதுகாப்பு தேவை*
*எனக்கும்*
*என்னைச் சார்ந்தோருக்கும்,*
*என் தாய் நாட்டிக்கும்*
*என் தாய் மொழிக்கும் தான்.*

*பாதுகாப்பு வேண்டும்.*
*என்னைப் போன்ற பத்திரிகையாளர்களுக்கும்,*
*மனித உரிமையாளர்களுக்கும்,*
*அரசின் கொள்கைகளைச் சான்றிராதோருக்கும்,*
*சிறு பான்மை இனத்தவர்களுக்கும் தான்.*

*பாதுகாப்புத் தேடுகிறேன்*
*என் நாட்டைச் சூரையாடிக் கொன்டிருக்கும்*
*தலைமையிடம் இருந்தும்,*
*எங்களால் உயர்த்தப்பட்ட*
*இரத்தக் காட்டேரிகளிடம் இருந்தும்,*
*அரசு என்ற பெயரில் கொள்ளையிடும்*
*குடும்பத்திடம் இருந்தும்*
*காவல் என்ற போர்வைக்குல் உயிர்களை*
*சூரையாடும் அதிகாரத்திடமிருந்தும் தான்.*

*பாதுகாப்பு இல்லை*
*என் தாய்க்கும் தந்தைக்கும்,*
*என் உடன்பிறப்புகளுக்கும்,*
*என் மழலைகளுக்கும்,*
*என் நாட்டு தேச பக்தர்களுக்கும் தான்.*

*பாதுகாப்பு உண்டோ*
*எம் பத்திரிகையாளரின் உயிருக்கு,*
*எம் போராளிகளின் தேச உணர்விற்கு,*
*எம் குழந்தைகளின் கற்பிற்கு*
*எம் மக்களின் பேச்சுரிமைக்கும் தான்.*

*பாதுகாத்து தாருங்கள்*
*எம்மைப் பிரிந்த உறவுகளுக்கு,*
*எம்மிடம் பறித்த சொத்துகளுக்கு.*
*எம்மிடம் பிடுங்கிய உரிமைகளுக்கு,*
*எமது தாய் நாட்டுக்கும் தான்*

*உலகில்*
*பல மனித உரிமை கூட்டமைப்புகள்*
*உண்டு. இருந்தும்*
*எதற்காக இன்னும்*
*இலங்கையில்*
*இத்தனை மனித உரிமை அத்துமீறல்கள்?*

# உழவு போற்று !

கலை

மலைமுகட்டில் பனியிறங்கும் வேளை - கிழக்கில்
தலை துவட்டிப் பரிதிவரும் காலை -
முகிலெடுத்து முகம்துடைக்கும் சோலை - உழவன்
முனைப்போடு தொடங்கிடுவான் வேலை !

◆◆◆

வயல்வெளியில் குருவிகளின் ஆட்டம் - நெற்
பயிரிடையே எலி நடத்தும் கூட்டம் -
கண்டபோது உழவனுக்கோ காட்டம் - அவன்
சத்தங் கேட்டு எலி, குருவி ஓட்டம் !


◆◆◆

கோவணத்தைக் கட்டிக்கொண்ட உழவன்- வயது
எழுபத்து தாண்டிவிட்ட கிழவன் !
ஆவணமாய் வயல் எழுதும் மறவன் - அவனே
அண்டமகிலம் அத்தனைக்கும் அரசன் !

◆◆◆

உடல்முழுதும் பூசி நிற்பான் சேறு-அவன்
உள்ளத்திலே இருப்பதில்லை ஊறு !
சளைக்காமல் ஓட்டிடுவான் ஏரு - ஊருக்கு
களைக்காமல் ஊட்டிடுவான் சோறு !

◆◆◆




கடலாக திரண்டோடும் வேர்வை- அவன்
கண்டதில்லை ஒருபோதும் சோர்வை !
வறுமையவன் போர்த்திக் கொள்ளும் போர்வை
அதை- கிழித்தெறிய அரசிற்கில்லை பார்வை !

◆◆◆

பச்சைசேலை கட்டிக் கொண்ட பூமி -அதில்
பாடுபடும் மனிதன் தானே சாமி ?
உழவனுக்கு இணையிங்கு ஏது - அவனை
போற்றஒரு வார்த்தைக் கிடை யாது !

◆◆◆

# மௌனங்கள்  உயிர்த்தெழுந்தால்




மணிகண்டன்

பகுதி 24

கோடான கோடி விழிகள் கடந்து வந்தும்
நின் விழி குறிப்புகள் மட்டுமே மொழி பெயர்த்துள்ளேன்
மௌனமும் மௌனம் சார்ந்த விழிகளின் மொழிகளும்
எல்லாம் நின் விழி செயல்!

♥♥♥

பெரியதாக ஒன்றும் ஆசையில்லை நாமிருவருக்கும்
ஒரு கோப்பை தேநீரை
ஆளுக்கொரு பகுதியாய் பகிர்ந்திர வேண்டும்  என்பதை தவிர !

♥♥♥

எத்துனை தொலைவிலிருந்து துணை நமக்கு
பறக்கும் முத்தங்களை பகிர்ந்துகொள்கிறோம்
காற்றுக்கும் சற்று பொறாமை அதிகம்தான் போல !

♥♥♥

அநேக நேரம் கண்ணன் என்றே அழைக்கிறாய்
நான் பாடும் கண்கள் எனை காணாமலே
கண்ணன் என்றழைக்க மூங்கில் காடுகளில்
முளைத்திடாத வித்துக்கள் எல்லாம்
இசை கற்க ஆவலென செவிவழி செய்தி !

♥♥♥

நீ கோலமிடுகையிலே வெள்ளை
அதன் கோலபொடி தொட்டு
உந்தன் கண்ணத்தில் திருஷ்டி மையிடும்
காற்றால் கலையும் முடியின் வழியே
நின் விரல் கொண்டு !

♥♥♥

ஈரமான காற்றில் தென்றல் கொண்ட
நேசமது சுவாசமாகும் போது
நேசமே நீ அருகில் இல்லாத பொழுதும்
உன்னை காற்றினில் காற்றினுள்
கைகோர்த்து அனைத்துக்கொள்கிறேன்!

♥♥♥

அநேக நேரம் காதலை பற்றியே
முணுமுணுத்து கொண்டிருக்கிறேன் என்கிறார்கள்
கேட்பாரற்று கிடந்தவனின் மொழி
இன்று கேட்க காத்திருப்பவர்கள் இருக்க
சுவாசம் தந்த நின் விழியின் மொழி காதல்தானே
அதைதானே அசைபோடுகிறேன் !

♥♥♥

நின் விழியால் என்னில் களவு நடத்தினாய்
இன்று தன் விழியால் கனவினை
கனம் இன்றி செய்ய கைகோர்த்து நிற்கிறாய்
எனக்கு உன்னை மட்டுமே அதிகமாய் பிடிக்கும்
நீ என்பதால் !

♥♥♥

# இறகுப்பந்துவிடு தூது!

அகரம் அமுதன்

காற்றில் எழுந்து கணக்காய் நனிவிரைந்து
மாற்றார்க்குத் தப்பிவிடின் மண்வீழ்ந்து –தோற்றாராய்
ஆக்கத் தெரிந்த அழகிறகுப் பந்தே! என்
ஏக்கமறிந் தென்னவள்கண் ஏகு!

ஏகும் முனமென் இளநெஞ்சைத் தொட்டுப்பார்!
வேகும் அவள்நினைவின் வெப்பத்தால்; -ஆகம்*
இழைபோல் இளைத்த இவன்நிலையைச் சொல்லி
அழைப்பாய் அவளைச்சென் றாங்கு! (ஆகம் -உடல்)

ஆங்கவளைக் கண்டால் அருங்கதைகள் பேசிப்பின்
தேங்குவளைக் கண்ணாட்குச் சேவைசெய்! –பாங்காய்ப்பின்
என்நிலையைச் சொல்க! எழுங்காதல் மிக்குடையாள்
தன்நிலையைச் சொல்வாள் தளர்ந்து!

தளர்ந்து தனித்துத் தவிக்கின்றேன் நீபோய்
வளர்ந்தமுலை மாதை வரச்சொல்! –குளம்வாழ்
மரைமுகத் தாளும் மறுப்பாள் எனிலோ
இறப்பான் இவனென் றியம்பு!

இயம்புங்கால் அன்னவளின் இன்முகத்தை நோக்கு!
மயங்கும் விழிகள்; மருள்வாள்; -தயங்காதே!
நண்டுறை நீர்த்துறையில் நானுள்ளேன்; என்னுயிரோ
ஒண்டொடி தன்சொல்லில் உண்டு!

உண்டா எனக்கேள் உறுகாதல் என்மீதிற்
பெண்டாள் இலையென்னாள்; பின்பென்ன? –பண்டென்
உளங்கள வாடி உவந்தாள்தன் மேனி
வளங்கள வாடுகிறேன் வந்து!

வந்தாரக் கட்டி வளஞ்சேர்க்கச் சொல்தன்னைத்
தந்தாலே என்னுயிர் தங்குமெனும் –அந்தப்பேர்
உண்மையினைச் சொல்லி உளமறிந்து வா!இந்த
நன்மையினைச் செய்க நயந்து!

நயந்தேன்; அவளின் நறுந்தேன் உடலை
வியந்தேன்; இதனை விளம்பத் –தியங்குமென்
ஆவியுண் கண்ணாள் அருகிருந்தென் னையணைக்கத்
தூவிறகுப் பந்தே!போ தூது! (தியங்குதல் –கலங்குதல்)

தூதாக நீயுமத் தோகை இடஞ்செல்லத்
தோதாவாய் என்பதினால் சொல்லிவைத்தேன் –போதாயோ?
மெல்லபோ கின்ற மிறல்*பந்தே! பெண்நெஞ்சை
வெல்லப்போ கொஞ்சம் விரைந்து! (மிறல் -பெருமை)

விரைந்துநீ போய்யென் விருப்பம் உரைப்பாய்
கரந்தமனத் தாளவளின் காதில் –சுரந்துவரும்
வாயிதழின் சாற்றில் வழுக்கிவரும் சொல்லேயென்
காயத்தை வாழ்விக்கும் காற்று!

## கவிதையின் ரசனையும் சுயநலம் தான்....!!!

கே இனியவன்

*காதல் செய்யும் வயதில்*
*காதல் கவிதையை*
*நேசித்தேன் ...!!!*
*காதல் தோல்வி கண்ட போது*
*காதல் வலி கவிதையை*
*நேசித்தேன் ...!!!*

*வாழ்க்கைக்கு வந்தபோது*
*வாழ்க்கை கவிதையை*
*நேசித்தேன் ...!!!*
*உறவு பிரிவை சந்தித்த வேளை*
*அன்பு கவிதையை*
*நேசித்தேன் ...!!!*

*பாசங்களை உணர்ந்த போது*
*பாச கவிதையை*
*நேசித்தேன் ...!!!*
*பட்ட கஸ்ரங்களை பகிர*
*நட்பு கவிதையை*
*நேசித்தேன் ...!!!*

*காயமே இது பொய்யடா*
*வெறும் காற்றடைத்த*
*பையடா உணர்ந்த போது*
*ஆன்மீக கவிதையை*
*நேசிக்கிறேன் ...!!!*

*கவிதையின் ரசனையும்*
*தேவையும் விருப்பு வெறுப்பும்*
*அவனவன் சுயநலத்தில் தான்*
*உள்ளது...!!!*

## பிரம்மச்சரியம் என்றால் என்ன ?

சிவனருள் கருணாகரன்

பிரம்மச்சரியம் என்றால் என்ன ? எனும் ஆரோக்கியமான கேள்விக்கு பதில் தரப்படுகிறது.

முதலில் பிரம்மம், பிரம்மா, பிரம்மச்சாரி, பிரம்மசர்யம் நான்கும் வெவ்வேறு பொருள் கொண்டவைகள் என்பதனை புரிந்து கொள்ளல் வேண்டும்.

ப்ரம்மம் என்பது நமது கண்கள், புலன்கள், அறிவுக்கு எட்டாதது, எங்கும் நீக்கமற வியாபித்து நிறைந்திருப்பது.

பிரம்மா என்பது படைப்பு தொழில் புரிபவரை சுட்டும் சொல். பிரம்மச்சாரி, பிரம்மச்சாரினி என்பது திருமணமாகாத, எந்த ஒரு பெண்ணையோ, ஆணையோ மோகம் கொள்ளாதவர்களை குறிக்கும் சொல். பிரம்மசர்யம் எனும் சொல்லின் பொருள் உணர்தல் மிக அவசியமா கின்றது. பெண்ணாசையை விடுவதற்கு பிரம்மசர்யம் என்பது பெயரல்ல .

பிரம்மச்சாரி என்பதே பெண்ணின் துணையை தேடாதவரை குறிக்கும். ஆனால் ப்ரம்மச்சர்யம் என்பது ப்ரம்மத்தை உணர்தலுக்கு தயாராவதை குறிக்கும் சொல்லாகும். ப்ரம்மத்தை உணர்தலுக்கு உட்படும் மனிதனுக்கு பலவித கடுமையான பரீட்சைகள் இயற்கையால் தரப்படுகிறது. இவைகளில் தேர்ச்சி பெற மனிதன் பலபடிகளை தேர்ச்சி பெற்று கடப்பது அவசியமாகின்றது.

புற ஒழுக்கம், அக ஒழுக்கம் மட்டுமல்லாமல், கண்களாலும், சொல்லினாலும், கேட்பதாலும், உடலாலும் முழுமையாக ஒழுக்கம் காக்கப்பட வேண்டும். வேதம் உணர்தலும், அதன்படி சிந்தித்தலும், நடப்பதுவும் முக்யமான பங்காகும். நான், எனது எனும் மமகாரம், அகந்தை அறவே அழிக்கப் படவேண்டும். சொல்லால் மட்டுமல்லாமல் செயலாலும் ஒழுக்கம் காத்தல் வேண்டும். ப்ரம்மத்தை அறிதலுக்கான முயற்சி என்பது எளிதான ஒன்றல்ல . சரியை எனப்படும் வைராக்கிய நெறிகொள்ளல் மிக அவசியம். இவ்விரண்டு சொற்றொடர்களின் இணைப்புதான் ப்ரம்மசரியம்.

ப்ரம்மம் : எங்கும் வியாபித்துள்ள பரம்பொருள் .

சரியை : பரம்பொருளை கண்டடைவேன் எனும் வைராக்கிய உறுதி.

பிரம்மச்சர்யை எனும் பதம் மருவுதல் கண்டு பிரம்மசர்யமாய் மேவி நின்றதுவாம்.

இந்திரியங்களை அடக்கி, காமத்தை துறந்து, அகந்தையை அழித்து, கோப, தாபங்களற்று எனது பிறப்பின் காரணம், பரம்பொருளை அடைவது ஒன்றே எனும் வைராக்கிய சிந்தையோடு அதற்கான வழிதேடி, அந்த வழி சென்று, வழிபட்டு பரம்பொருளின் திருவடி அடையும் பல வித மார்க்கங்களில் பிரம்மசர்ய மார்க்கமும் ஒன்று .

ப்ரம்மசர்ய மார்க்கம் சென்று ப்ரம்ம பதத்தை அடையுங்கள், அந்நிலையை நீங்கள் அடைய வாழ்த்துகள்.

வளமோடு வாழுங்கள், வாழும் நாளெல்லாம் .

## உனக்கும் எனக்குமான மொழி...

கனகீஸ்வரி



என்னவெல்லாமோ செய்து பார்க்கிறேன்
என் நெஞ்சில் உன் நினைவகற்ற.
அத்தனையும் தாண்டி என்னை ஆரத்தழுவி
நிற்கிறது உன் நினைவுகள்.

எதுவுமே இன்று எனதில்லைதான்
எப்போதும் உன் நினைவு என்னோடுதான்
நீ உன் மனவாசல் கதவடைக்கிறாய்
புலம்பல்களால் உன் செவி சேர்க்கிறேன்..

காற்று வழி அனுப்புகிறேன் என்
கவிதைகளை உனக்கு தூதாய்
கதறி அழும் கண்ணீர்த்துளிகள்
கண்டும் காணாதது போல் நீ..

இதயச் சலவை பலமுறை செய்தும்
இடைவிடா நினைவுகளாய் தடம்பதிக்கிறாய்
நெஞ்சமதில் தீ மூட்டி எண்ணங்களால்
எரியூட்டுகிறேன் எரிந்திடா உன் நினைவுகள்.

ஆழத் தைத்த ஊசியகற்றி நீ
அன்பெனும் மருந்தாள் ஒத்தடமிட்டு
பழுக்க காய்ச்சிய இரும்பொன்றால்
பதறிடாமல் துளையிட்டு போகிறாய்.

தேம்பியழும் தெம்பற்று போனேன்
ஏங்கியே என் உடல் வற்றிப் போனேன்
எண்ணத்தில் நீ இருந்த போதும்
எடுத்துரைக்க மொழியற்றுப் போனேன்

உன் இதயக் கூட்டில் நான் தனித்தில்லை
உன் எண்ண ஏட்டிலும் நான் எழுத்தில்லை
என்றபோதும் உன்னிடம் கோபமில்லை
என்னை விட்டுப் போவது துளி நியாயமில்லை

அன்பாய் பேசிடும் வரம் கேட்கிறேன்
அருகில் எனக்கும் ஒரு இடம் கேட்கிறேன்
தூரல் சிந்திடும் வான் மழையாய்
உன்னில் சேர்த்திடு ஒரு இலையாய்

# அம்மாவுக்கு

**அகரம் அமுதன்**

பத்துத்திங்கள் சுமந்தீன்று
பாசத்தைப் பொழிந்தவுன்றன்
கண்ணோரக் கதகதப்பில்
காலம்சில வாழ்ந்திருந்தேன்

✯

சிறுவன்என் கைகளிலே
சிறகுகளைக் கட்டிவிட்டு
பணங்காசு சேர்க்கச்சொல்லி
பரதேசம் அனுப்பிவெச்சே

✯

தனிமரமா ஆகிவிட்ட
தவிப்பினிலே நானிருக்க
மறந்துட்டியா? இன்னுசொல்லி
மடலொன்று வரைந்தவளே

✯

உதட்டோடு முத்தமிட்டு
உசுரில்பாதி இட்டுவைத்துத்
திகட்டாத அன்புவெச்ச
தாயுன்னை மறப்பேனா?

✯

தடத்தில்தாள் பதியாதுன்
தளித்தோளில் தடம்பதித்து
நடைபயின்று நான்வளர்ந்த
நாட்களை மறப்பேனா?

✯

வயிற்றில் சுமந்துகொண்டே
வயல்வெளியில் உழைத்தவுன்னை
வாயொடு வயிற்றைக்கட்டி
வளர்க்கப்பாடு பட்டவுன்னை

✯

காலங்கள் மறந்திடலாம்
நாளங்கள் மறந்திடுமா
நெஞ்சமதை மறந்துவிட்டால்
நல்லகதி சேர்ந்திடுமா?

✯

கடையாணி உடைந்துவிழ
கடைக்குட்டி வண்டிக்குக்கீழ
உடையாத மனமுடைந்து
மூர்ச்சையற்றுக் கிடந்தஅப்பன்

✯

அறியாத பாலகன்நான்
தெரியாமல் தவறுசெய்ய
திட்டினால் திருந்தேனென்று
தூணில்கட்டித் தொலுரித்தார்

✯

கேள்விப்பட்டு ஓடிவந்து
கோவென அழுதுகொண்டே
இரத்தக்கண்ணீர் வடித்தவுன்னை
இமைப்போதும் மறப்பேனா?

✯

பெற்றபிள்ளை புத்திக்கெட்டுப்
பேசிய பேச்சையெல்லாம்
ஒத்தநொடிப் பொழுதுக்குள்ளே
பெற்றவள்நீ மறந்துடுவ

✯

அத்தனையும் கனவில்வந்து
அம்புமழை பொழியுதம்மா
நித்தநித்தம் நினைவிலாட
நித்திரையும் போனதம்மா

✯

நான்பிறந்த அப்புறம்பான்
நெல்லுசோற்றைக் கண்டோமென்ற
தித்திக்கும் சேதிசொல்லி
திருஷ்டிசுத்திப் போட்டவளே

✯

நெல்லுசோற்றை விட்டுத்தள்ளு
நேசமனம் கொண்டவளே
நான்பிறந்த அப்புறம்நீ
நல்லசோறு தின்றதுண்டா?

✯

ஆப்பரேஷன் தியேட்டரிலே
அம்மாநீ கிடக்கயிலே
அன்புமுகம் பார்ப்பதற்கு
அற்பனிவன் வந்ததில்லை

✯

கருணையுள்ள தாய்மனது
கடுகளவும் கலங்கவில்லை
நினைத்தால் அழுகைவரும்
நதியூறும் கன்னத்திலே

✯

மூன்று வயதிலநான்
உன்நெஞ்சில் உதைக்கயிலே
உதைத்த காலைச்சுற்றி
முன்னூறு முத்தம்வைப்பாய்

✯

பதினாறு வயதுலநான்
படுத்திய பாடுக்கென்
பிணத்துக்கும் சாபம்சேரும்
பிணந்தின்னி விலகிஓடும்

✯

ஆத்தா! அடி ஆத்தா!
நான்செத்தா கொல்லிவையி
முந்திக்கிட்டுப் போயிட்டீன்னா
பேரங்கிட்டச் சொல்லிவையி!

✯

# ஆன்மாவின் வேலை என்ன ?

**சிவஅருள் கருணாகரன்**

அன்புள்ள நண்பர்களே வணக்கம்.

“ஆன்மாவின் வேலையென்ன? எனும் கேள்விக்கு இங்கே எல்லோருக்கும் புரியும் வண்ணம் பதில் தர கடமைப்பட்டுள்ளேன்.

முதலில் ஆன்மா என்னவென்று அறிந்தால்தான் அது என்ன வேலையை செய்யும் என்று உணர முடியும்.

பிறப்பெடுத்துள்ள எல்லா ஜீவன்களுக்கும் ஒரே அளவில் அமைந்திருக்கும் ஆன்மா, பிறப்பெடுக்காத, பிறப்பெடுக்க இருக்கும் இன்னும் பல கோடி கோடி ஜீவன்களுக்கும் துணையாகி நிற்கின்றது.

நாம் படித்து, கேட்டு அறிந்த அனைத்து மகரிஷிகளும், ஞானிகளும், முனிவர்களும், புத்தர் முதல் சித்தர்கள் வரை ஆன்மாவை அழிவற்றது என்றும், ஆன்மாவே இறைசொரூபம் என்றும், உலகில் உள்ள உயிரினங்கள் அனைத்தும் ஆன்மவடிவே என்றெல்லாம் கண்டுணர்ந்து சொல்லி இருக்கின்றார்கள்.

இவ்வாறான ஆன்மாவின் பணி என்ன ?

ஆன்மா எல்லா உயிர்களையும் இயக்குகின்றதா ? பேசும் சக்தி பெற்ற மனித உயிர்களை அதுதான் வழி நடத்துகிறதா ? அதுதான் ஆறாம் அறிவா ? ஆன்மா என்பதுதான் உயிரா ? அது மனிதரை ஆள்கின்றதா ? என்பது போன்ற கேள்விகள் நம்முள் அடுக்கடுக்காக எழுகின்றதல்லவா !!

உண்மையில் ஆன்மா என்பது, மனிதனை ஆள்வதோ, இயக்குவதோ, வழிகாட்டியோ, மனிதனின் ஆறாம் அறிவோ இல்லை .அப்படியென்றால் பின் என்ன ?

மனிதர்களை இயக்குவது மனிதனின் மனம், ஆன்மா மனிதரை இயக்குவதாக இருந்தால் மனிதரிடம் தவறுகளோ, தோல்வியோ என்றுமே காண முடியாது.

மனிதரை வழி நடத்துவது அவனுடைய எண்ணங்களும், அவனின் கேள்வி ஞானமும் தான் . மனிதன் ஆன்மாவின் வழிகாட்டுதலில் பயணித்தால் தவறான பாதையில் செல்லும் வாய்ப்பு எந்நாளும் மனிதருக்கு ஏற்பட்டிருக்காது .

மனிதனின் ஆறாம் அறிவாக ஆன்மா இருக்க எள்முனையளவும் வாய்ப்பில்லை .

காரணம், உலகின் எல்லா உயிருக்குள்ளும் ஆன்மா இருகின்றது. ஆனால், பலவிதமான மிருக, பறவை இனங்களின் இனப்பெருக்க உறவுகள் மனிதனின் வழக்கத்திற்கு முற்றிலும் மாறாக இருக்கின்றது.

ஆன்மா என்பது உயிரல்ல என்பதில் மாற்றுக் கருத்தில்லை, ஏனெனில் உயிர் என்பது இந்த உடலோடு சம்பந்தப்பட்டது, ஆனால் ஆன்மா நம் பிறப்போடு தொடர்புடையது. நமது எந்த பாபமும் புண்ணியமும் ஆன்மாவை பாதிப்பதில்லை, ஆனால் உயிர் சம்பந்தமான இந்த உடலையும் மனதையும் மிகவும் பாதிக்கச் செய்கிறது.

## நினைவேடு

**வைஷ்ணவ தேவி**



தூய்மை படுத்தும்
பணி தொடங்கியது
வீட்டில்

வருடம் முழுதும்
என் மடியில் கிடத்தி
இருந்ததை பின்
முடிவில் ஒதுக்கி
வேறொன்றை எடுத்து
இனி அதனுடன்
மகிழ்ச்சியோடு
உறவாடி
இருக்கிறேன்..

நினைவுகளின்
சின்னமாய்
சிதறி கிடைக்கும்
என் பல சொந்தங்கள்
..
அவர்களோடு என்மன
அலைகளை பகிர்ந்து
கொண்ட தருணங்கள்
ஏனோ எட்டி
பார்க்கின்றன …

ஏதும் சொல்ல
இயலா வேளையில்
அனைத்தையும்
கொட்டி
தீர்த்த நேரங்கள் …

ஒவ்வொரு செயலின்
நியாயங்களும்; சில
நேரம் நியாயம்
தான் என்றும்…

எல்லாமே வாங்கி
கொண்டார்கள்;
என்மன
பிதற்றல்கள், களித்த
நினைவுகள்
அனைத்தையும் …

அவர்களை நான்
ஒதுக்கி போனாலும்
இன்று என்முன்
அனைத்தையும்
கண்ணெதிரில்
காட்சியாக்கிய படி
நிற்கிறார்கள் …

இவர்களால்
இன்றைய
பணி சற்று
தாமதம் ஆனது…
இதையும் எழுதி
வைக்கிறேன் என்
நாட்குறிப்பேட்டில்…

வேறொரு நாள்
மீண்டும் படித்து
மகிழ்ந்து இந்நாளை
நினைவில் கொள்ள.

அப்படியானால் என்னதான் இந்த ஆன்மா என்பது ?

ஆன்மா இந்நிலையிலிருந்து முற்றிலுமாக மாறுபட்டது.

நமது ஒவ்வொரு அசைவையும் முழுமையாக கவனித்து, நமது சொல்லோ, செயலோ, கவனமோ, சிந்தையோ தடம் மாறும் போது உள்ளிருந்து மிக பலவீனமான குரலில் நம்மை எச்சரிக்குமே ஒரு முனகல் குரல், ஞாபகம் இருக்கிறதா? அது நமது ஆன்மாவின் குரல்தான் .

மிரட்டும் தொனியில் இல்லாமல் கெஞ்சலிலும் கீழே மிக மெல்லியதாக நம்மை வேண்டாம் என்று தடுக்குமே அந்த குரல் நமது ஆன்மாவின் குரல்தான் .

சாதிக்க பிறந்தவன் நீ ஆனால் இப்படி உன்னை நீயே அழித்துக் கொள்கின்றாயே என்று எங்கோ தொலைவிலிருந்து யாரோ சொல்வதாக ஒரு குரல் நம் காதில் ஒலிக்குமே அது நமது ஆன்மாவின் குரல்தான்.

வெற்றியின் வித்தான நீ, தோல்வியின் மொத்த சொத்தாகி போகின்றாயே என ஈனஸ்வரத்தில் ஒரு ஓசை கேட்கின்றதே ! நமது மனதின் உள்ளே, அந்த ஒலியின் உரிமையாளன் நமது ஆன்மாதான்.

நாம் தவறிழைக்க துணிந்திடும் ஒவ்வொரு சமயமும் கொஞ்சமும் சலிப்பின்றி வேண்டாம் வேண்டாமென்று நம்மை காலில் விழாத குறையாக நம்மை காப்பாற்ற கதறுகின்றதே அந்த குரல் நமது ஆன்மாவின் குரல்தான்.

ஆன்மீக வாசல் திறந்திருக்க, அபாய வாசலை நோக்கி பயணிக்கின்றாயே என்று நல்ல பாதையை நமக்கு காட்டி, நமது கையை பிடித்து நல்வழி செல்ல அழைக்கின்றதே அந்தக்குரல் நமது ஆன்மாவின் அன்புகுரல்தான்.

இப்பிறப்பில் ஆன்ம உயிர்ப்பு இல்லாதபோது வரும் பிறப்பிலாவது நாம் இறையுணர்வில் ஆழ்ந்திட நம்மை விடாமல் பற்றிக் கொண்டு நம்மோடு ஒவ்வொரு பிறப்பிலும் தொடர்ந்து நம்மோடு பயணிக்கும் உற்ற துணை யார் தெரியுமா ? நமது ஆன்மாதான்.

ஆன்மீக நெறியில் ஆழ்ந்து போகும் அன்பர்களுக்கு அவர்கள் யார் என்று உணர்த்தி, முற்பிறப்பில் யாராக இருந்து இறந்தோம், இப்பிறப்பில் எதற்காக பிறந்து வளர்ந்தோம் என உணர்த்துகின்றதே ஒரு தெய்வீக ஒளி அது நமது ஆன்மாவின் ஒளிதான்.

தவ, யோக, த்யான, நியம நிஷ்டையில் மூழ்கி திளைக்கையில், உள்ளிருந்து ஆனந்த பேரலையாக எழுந்து, உடல் முழுவதும் பரவி, மனமும், உடலும் காணாமல் போய், காயமே இது பொய்யடா என மெய்ப்பித்து, இறைவா, இறைவா என்ன இந்த இன்பநிலை ! மானிட பிறப்பில் இப்படியும் அதிசயமா, எனக்கா, இது நானா, என்னாலும் இது சாத்தியமா என ஆனந்த பித்தனாக்கி நம்மை நமக்கு அடையாளம் காட்டப்பட உதவுகிறதே அதன் உள்ளார்ந்த வித்து நமது ஆன்மாதான்.

அடையாளம் காட்டப்பட்ட மனிதன் தன்னுணர்வை அடைந்து இனியும் தாமதிக்காமல் இறைவழியில் நடந்து இறைவனின் பதம் நாட வேண்டும் என எண்ணி துதித்து, மனமுருகி, மெய்யொன்றி அதன் வழி செல்ல முற்படும் போது ஒரு புத்தம்புது பூவை கையிலெடுப்பதுபோல் நம்மை எடுத்து இறைவழியில் நாம் செல்லுவதற்கு இறுதிவரை உடன் வரும் துணை யார் தெரியுமா ? நமது ஆன்மாதான்.

இப்போது தெரிகிறதா ? ஆன்மாவின் வேலையென்ன என்று !!!!!

உங்கள் ஆன்மா சொல்வதை கேளுங்கள், அன்பு வழி செல்லுங்கள் . பேரானந்த அலையில் ஆடுங்கள், பேரின்ப அற்புதங்களை கண்டு உணருங்கள் .

வாழுங்கள் வளமோடு வாழும் நாளெல்லாம்.

# சுதந்திரம்...

காரை.கே.எஸ். விஜயன்

காந்தி வாங்கினார்
வால்மார்ட் கம்பெனிகள்
சொந்தம் கொண்டாடின...

வாழ்வைத் தொலைத்த
தியாகிகள்
கோஷம் போட்டார்கள்
பேரப்பிள்ளைகளுக்கு
ஒதுக்கீடு கேட்டு...

குடிமகன்கள்
வாக்குகளை விற்று
வயிறு நிரப்பினர்
டாஸ்மார்க் கடையில்...

ஏழவு வீட்டில்
இலவச டிவி
பாடியது
இறந்தவன சொமந்தவனும்
இறந்துட்டான்...

பள்ளிச் சிறுவர்கள்
ப்ளாஸ்டி பொறுக்கி
குடும்பம் சுமந்தனர்...
இந்தியாவின்
சுதேசி வரலாற்றைப்
பதிப்பிக்க
அன்னிய கம்பெனிகள்
ஸ்பான்சர் செய்தன...

கடைக்காரன் சொன்னான்
விலவாசியெல்லாம்
ஏறிப்போச்சும்மா...
அம்மா நினைத்துக் கொண்டாள்
ஆமாம்...ஆமாம்...
நூறு, ஆயிரமாய்
இருந்த ஊழல்
லட்சங்கோடியாய்

மாறிப்போச்சே...!

வாங்கிய ரூபாயை
முந்தானையில்
முடிந்துகொண்டு
போலீஸ்மீது
எறிவதற்காக
கல் பொறுக்கிய
தாயிடம்
சொன்னான்
தூங்கப்போறேம்மா...
காலைல
சாலைமறியல்
வேலைக்குப் போகணும்...

கொடியேற்றி
மிட்டாய் கொடுத்தார்கள்
என் பையன்
கேட்டான்
இந்தியா
சுதந்திர தேசம்தானே
அப்பா...???

# சித்திரையே வருக!

செங்கோடன்

சித்திரையே! சித்திரையே!
இத்தரையின் நிலை காண
ஜய வருடத்து சித்திரையே
வருகவே ! வருகவே!
☆

சித்திரையே! சித்திரையே!
பனிரெண்டு மாதம் கருக்கொண்டு
பிறக்கும் குழந்தை நீ..
தமிழ்த் தரணியில் தவழ
வருகவே ! வருகவே!
☆

சித்திரையே! சித்திரையே!
குழந்தைப் பருவத்தே
குதூகலிக்கும்
வண்ணத்துப்பூச்சி தட்டான்
பொன்வண்டு பிடித்து
விளையாட நினையாமல்
வருகவே ! வருகவே!
☆

சித்திரையே! சித்திரையே!
கல் தோன்றி மண் தோன்றா
காலத்தே முன்தோன்றிய மூத்தகுடி
தமிழ் குடியின் முகம் காண
வருகவே ! வருகவே!
☆

சித்திரையே! சித்திரையே!
செந்தமிழும் நாப்பழக்கம்
செந்தமிழ் நாடெனும் போதினிலே
எனும் உயர்தனிச் செம்மொழி
ஊசலாடும் நிலை காண
வருகவே ! வருகவே!
☆

சித்திரையே! சித்திரையே!
யாதும் ஊரே யாவரும் கேளீர்
உலகத்தை உறவாக்கிய
கூட்டுக்குடும்பங்கள் கூண்டுக்கிளிகளாக
பட்ட நிலை காண
வருகவே ! வருகவே!
☆

சித்திரையே! சித்திரையே!
அண்ணல் நடந்த அன்பான
அகிம்சைப் பாதையில்
அழகழகாய் கண்ணிவெடிகள்
பார்த்து அடியெடுத்து
வருகவே ! வருகவே!
☆

சித்திரையே! சித்திரையே!
பச்சைப் பட்டாடை இழந்து
பரதேசி கோலமாய் நிற்கும்
பூமித்தாயைப் பார்க்க
வருகவே ! வருகவே!
☆

சித்திரையே! சித்திரையே!
சிகரத்திலிருந்த உழவு
சீர்குலைந்து சிதிலங்களாக
சிறுமைப்பட்ட நிலை காண
வருகவே ! வருகவே!
☆

சித்திரையே! சித்திரையே!
நிலவரி கட்டி
விளைவித்த நிலங்களில்
வரி வரியாய் வளர்ந்துள்ள
கட்டிடங்கள் வனப்பு காண
வருகவே ! வருகவே!
☆

சித்திரையே! சித்திரையே!
தாய்மொழி தெரியாத சேய்கள்
போதையிலும் புகையிலும்
அமோகமாய் அரும்(பு)பருவத்தில்
துரும்புடன்
வருகவே ! வருகவே!
☆

சித்திரையே! சித்திரையே!
வள்ளுவரும் கம்பரும்
வனவாசம் போயாச்சு
பில்கேட்சும் பிரேக்டேன்சும்
வீட்டிற்குள் வந்தாச்சு
விரைவாக
வருகவே ! வருகவே!
☆

சித்திரையே! சித்திரையே!
சோம்பலெனும்
நித்திரையில் நீந்தும்
இத்தரை இளைஞர்கள்
உறக்கம் களைய
ஊசி வார்த்தைகளுடன்
வருகவே ! வருகவே!
☆

சித்திரையே! சித்திரையே!
இவர்கள்
வியர்வை சிந்தா வீரர்கள்
காசு நேர உழைப்பை
வீணடிக்கும் இவ்வீணர்களுக்கு
ஏணியில் ஏறும் எறும்புகளைக்
காட்ட
வருகவே ! வருகவே!
☆

சித்திரையே! சித்திரையே!
நல்லவர் ஒருவர் உளரேல்
அவர்பொருட்டு பெய்யும் மழை போல்
நல்லவர்களுக்காக
வருடந்தோறும் விரைந்து
வருகவே ! வருகவே!
☆

# குப்பைத்தொட்டி
# (குழந்தையின் குமுறல்)

ஸ்டெல்லா தமிழரசி

சித்திரை
பதிவுப்போட்டியில்
முதல் பரிசு
பெற்ற கவிதை



வீணாக பிறந்த வீணை நான்
பூகாரி ராகம் எனக்கு நானே பாடும் தாலாட்டு

கருப்பையில் வளர்ந்த முத்து
கிலிஞ்சல்கலின் மத்தியில் காயப்படுகிறது

காகித குப்பைகள் ஆடைகளானது
வாழ் நாள் எல்லாம் சிலுவை  சுமையானது

மலடிக்கூட எனக்கு தாயாக மறுக்கிறாள்
விலாசம் இல்லாமல் தேடுகிறேன்
அனாதையாய் என் பெயரை
நானே....

பால் குடிக்க மனம் ஏங்குது
கார சாரமான ரசம் ஏங்கிருத்தோ
வந்து விழுகுது

நெஞ்சோடு தேகம் எரிய்து
வெயில் மழை எல்லாம் வாட்டி வதக்குது

நிழலை கூட உடல் தேடவில்லை
மனம் மட்டும் அம்மாவைக் கேட்டு மன்றாடுது

அய்யோ அய்யோ பசிக்குது
அடுத்த வேலையை எண்ணி இப்பொவே
எனக்கு அழுகை வருது....

கால் போகும் இடமெல்லாம்
பயணம் ஆனது
நாய் நரி பூனையெல்லாம் சொந்தம் ஆனது

என்னைப் போலவே
நடுவில் ஒரு பந்தம் வந்தது
அது பெண்பிள்ளையாய் பிறந்துகிடந்தது

தூக்கியெரிய மனமில்லை
எடுத்து வளர்க்க துணையில்லை
முதல் முறை அண்ணாவானேன்...

நான் கார்த்துடைக்கும்  நேரம்
பிச்சைக்கேட்கிறார்கள் என் தங்கையை
வேசியாக்க பார்க்கிறார்கள்

உங்கள் பசிக்கு விருந்து வைத்து ஊண்ட
எச்சில் குழந்தைகள்
நாங்கள்......

எங்களால் இனி ஒரு குழந்தை இப்படி உருவேடுக்காது
படைத்த கடவுளின் கடைசி பிழை

நாங்களாகவே இருக்கிறோம்
மொட்டு மலர் தான்
ஆனாலும் உதிர்தோம்
குப்பைத்தொட்டியில்

# பாராளுமன்றத் தேர்தலும் சில படிப்பினைகளும்

வினோத் கன்னியாகுமரி



தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதில் இருந்து இப்போது வரை அறிக்கைப்போருக்கும் கலகலப்பிற்கும் விவாதங்களுக்கும் பஞ்சமே இல்லாமல் சமூக வலைதளம் உட்பட அனைத்து ஊடகங்களிலும் அனல் பரப்பி பரபரப்பையும் ஏற்படுத்திய இந்திய பாராளுமன்ற தேர்தல் தற்போது முடிவுகள் வெளிவந்த பின்னும் பரபரப்பிற்கு குறைவில்லாமல் மேலும் ஆர்வத்தை தூண்டியிருக்கிறது.

இங்கே பல கேள்விகள் விவாதங்களுக்கான முன் வைக்கப்படுகிறது.

பாஜக பெற்ற வெற்றி மோடி என்ற தனிமனிதருடைய வெற்றியா அல்லது பாஜகாவின் வெற்றியா? காங்கிரஸ் மீது கொண்ட மக்கள் வெறுப்பா? ஆம் ஆத்மி கட்சியின் எழுச்சி என்னானது? மோடி அலை தமிழகத்திலும் கேரளத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தாமல் போனதற்கு என்ன காரணம்?

ஜனநாயகத்தில் வெற்றி தோல்வி என்பது சாதாரணம். தொடர்ந்து ஒரே கட்சி ஆட்சி செய்தால் அது ஜனநாயக ஆட்சியாக இருக்க வாய்ப்பு குறைவு. அந்த வகையில் பத்தாண்டு ஆட்சி செய்த காங்கிரஸை மாற்றுவதற்கான மக்களின் தீர்ப்பாக இத்தேர்தல் முடிவுகளை எடுத்துக்கொள்ளலாம்.

இருந்தாலும் தோற்ற கட்சிகள் கூறும் சம்பிரதாய பேச்சான மக்களின் தீர்ப்பை ஏற்கிறோம் வெற்றி பெற்ற கட்சிக்கு வாழ்த்துகள் என்று கூறி காங்கிரஸ் விலக முற்பட்டாலும் அதன் படு தோல்வி கசப்பானது.

காங்கிரசின் தோல்விக்கு காரணம் அனைவருக்கும் தெரிந்ததே. மக்கள் விரோத போக்கு, கோடிக்கணக்கான ஊழல்கள், ஊழல்வாதிகளை சட்டத்திலிருந்து காப்பாற்றும் தன்மை, காங்கிரசின் மூத்த தலைவர் ராஜீவ் காந்தி பெயரிலேயே கறுப்புப்பணம், கைப்பாவை பிரதமர், பொருளாதார வீழ்ச்சி, பிரதமர் யார் என்று தெளிவுபடுத்தாமை, ராகுலின் தெளிவற்ற பேட்டிகள், குடும்ப வாரிசு அரசியல், சரியான கூட்டணி இல்லாமை, பிராந்திய கட்சிகளின் வளர்ச்சி போன்ற பல காரணங்கள் உண்டு.

இதற்கு நேர் மாறாக, மோடியை ஆரம்பத்திலேயே அறிமுகப்படுத்தி பிரச்சாரத்தை ஆரம்பித்தமை, குஜராத் வளர்ச்சியையும் முன்னிலைப்படுத்தியமை, மோடி பேச்சின் தெளிவுத்தன்மை, அந்தந்த பிராந்திய பிரச்சனையை மக்களிடம் சுட்டிக்காட்டி தீர்வு காண விழைந்தமை, மாநில அரசுகளை அரவணைத்துச்செல்லும் போக்கை வெளிப்படுத்தியமை, இந்தியாவின் வளர்ச்சியை தேர்தல் அறிக்கையில் காட்டியமை, சமூக இணையதளங்கள் மூலம் இளைஞர்களை ஈர்த்தமை போன்ற பல காரணங்கள் மோடி வெற்றிக்கு காரணமாக கூறப்படுகிறது.

தீர்க்கமான மூன்றாவது அணியை ஏற்படுத்த தவறிய மற்ற கட்சிகளும் பாஜகவின் வெற்றிக்கு காரணமாக அமைந்துள்ளது.



காங்கிரசின் பிரதமர் மன்மோகன்சிங் ஒரு பொருளாதார மேதை என்று கூறப்பட்டாலும் இந்தியாவின் பொருளாதார வீழ்ச்சி ஏற்புடையதாக இருக்கவில்லை. அதே சமயம் ஆட்சி மாற்றம் வரப்போகிறது என்று தேர்தலுக்கு பிந்திய கருத்துக்கணிப்பு வந்தபோதே சென்செக்ஸ் பங்கு வர்த்தகத்தில் இந்திய பண மதிப்பு உயரத்துவங்கிவிட்டிருந்தது புதிய ஆட்சியின் மீது வர்த்தக நிறுவனங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் வெளிப்படையாக காட்டுகிறது. ஆட்சிக்கு வரும் முன்னரே இந்திய பண மதிப்பை உயர்த்திவிட்டிருக்கிறது பாஜகா.

இதை இந்திய ஊடகம் மட்டுமல்லாது வெளிநாட்டு ஊடகங்களும் குறிப்பாக சுட்டிக்காட்டுகின்றன.

மோடி வரப்போகிறார் என்று தெரிய ஆரம்பித்தவுடனே அமெரிக்காவும் பிரிட்டனும் மோடியை ஆதரிக்க ஆரம்பித்துவிட்டன. இப்போது பாகிஸ்தான் சீனா போன்ற நாடுகளும் மோடியின் ஆட்சியில் நட்பு கொண்டாட விரும்புகிறது. சீனாவின் முதலீடு பெருமளவில் இந்தியாவில் வர மோடி அரசு உதவும் என சீனா நம்புகிறது.

குஜராத் கலவர விவகாரம் காரணமாக மோடிக்கு விசா மறுத்த அமெரிக்கா, மோடி பிரதமர் வேட்பாளர் என அறிவிக்கப்பட்ட உடனேயே விசா வழங்குவதை பரிசீலிப்போம் என்று தானாகவே கூறி வந்தது. இப்போதோ நிச்சயமாக விசா

வழக்கப்படும் என்பதை டைம்ஸ் பத்திரிகை உறுதி கூறுகிறது. அது மட்டுமல்லாது பராக் ஒபாமா மோடியை வாழ்த்தியதோடு மட்டுமல்லாமல் அமெரிக்காவுக்கும் அழைத்துள்ளார்.

இதற்கு ஒரு படி முன்னே சென்று ஜெர்மனியோ, மோடிக்கு விசாவே தேவையில்லை எப்போதும் மோடியை வரவேற்க ஜெர்மனி தயாராக இருக்கிறது என்று கூறிவிட்டது.

இவை, உலக நாடுகளின் தலைவர்களிடம் நட்புறவை பேணும் அரசியல் நாகரீகம் என்று எடுத்துக்கொண்டாலும், உலகின் மிகப்பெரிய ஜனநாயக முன்னோடியாக இருக்கும் இந்திய ஜனநாய முறையிலான மக்களின் முடிவுக்கு உலக நாடுகள் கொடுக்கும் மரியாதை என்றும் கொள்ளலாம்.

மேலும், குஜராத் அதிக அளவில் வெளிநாட்டு முதலீட்டை தன் பக்கம் இழுத்து மேம்படுத்தியது போல இனி இந்தியாவில் அதிக அளவு வெளிநாட்டு முதலீடுகள் கிடைக்கும் என வெளிநாடுகள் நம்புகின்றன.

மோடி வித்தை என்று ஏதுமில்லை என்றும், குஜராத் வளர்ச்சி என்பது வெறும் மாயை என்றும், மோடி குஜராத் குற்றவாளி என்றும், மதவாதம் இந்துத்துவ பயங்கரவாதம் என்றும், மோடி வந்தால் சிறுபான்மையினர் பாதிக்கப்படுவார் என்று கவலைப்பட்டும், பாஜகவிற்கு எதிராக அனைத்து கட்சிகளுமே முழுமையாக பிரச்சாரம் செய்துவிட்டன. அவ்வளவு ஏன் 'தி இந்து' பத்திரிகை கூட இதே பரப்புரைகளை திரும்பத்திரும்ப தன் கட்டுரை மூலம் வெளியிட்டது. ஆனாலும் அவற்றையெல்லாம் தாண்டி மோடி வெற்றி பெற்றிருக்கிறார் என்றால் இந்த வெற்றியும் காங்கிரசின் தோல்வியும் ஆராயப்பட வேண்டிய விசயங்கள்.

அவ்வளவு ஏன் முஸ்லீம்கள் அதிகம் உள்ள காஷ்மீரிலேயே அதுவும் காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்வோம் என்று கூறிய பின்னும் அங்கே மோடி வெற்றி பெற்றிருப்பதை ஆராயாமல் இருக்கவே முடியாது.

சும்மா இருந்த மோடியை டீ விற்றவர் என்று எதிர்கட்சிகள் உசுப்பி விட அந்த பந்தையே கடைசி வரை பிரச்சார யுக்தியாக அடித்து நடைபாதை வியாபாரிகளின் மனதில் இடம் பிடித்ததில் ஆரம்பித்து புயல் பிரச்சாரம் வரை தன் பிரச்சார கடமையை செவ்வனே செய்து வெற்றியடைந்திருப்பது நியாயமானது.

தலைவருக்குப்பிறந்தால் தான் தலைவராக முடியும் என்றோ குடும்பத்தில் உள்ளவரை வைத்து தானும் அரசியலில் முன்னுக்கு வந்துவிடலாம் என்ற வாரிசு சாதி அரசியலை ஒழித்து

ஒரு டீ விற்றுக்கொண்டிருந்தவர் இந்திய பிரதமர் ஆக முடியும் என்பதை உறுதி செய்வது தான் உண்மையான ஜனநாயகம். அந்த வகையில் பாஜகவின் அரசியல் தன்மை ஜனநாயகமானது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

. . .

**ஆம் ஆத்மி**

காங்கிரசுக்கு பரிதாபப்பட்டு எந்த பலனும் இல்லை, பரிதாபப்பட வேண்டிய ஆள் ஆம்ஆத்மி கட்சியின் அர்விந் கெஜ்ரிவால் தான்.

அண்ணா ஹசாரேவின் எழுச்சியை நன்றாகவே சமயத்தில் பயன்படுத்தி கட்சி ஆரம்பித்து முதல் அடியிலேயே காங்கிரசுக்கு நெற்றியடி கொடுத்து டெல்லியில் ஆட்சியை கைப்பற்றி அனைவரையும் திரும்பிப்பார்க்க வைத்து தன் அரசியல் எதிர்காலத்திற்கு நல்ல அடித்தளம் போட்டுக்கொண்டு முதலமைச்சர் நாற்காலியில் அமர்ந்த அர்விந் கெஜ்ரிவால் அடுத்த நகர்வில் மக்களின் நாடித்துடிப்பை அறிய தவறியது பலத்த அடியாக போய்விட்டது.



எந்த காங்கிரசுக்கு எதிரான மக்கள் வெறுப்பை வாக்காக மாற்றி வெற்றி பெற்றாரோ அதே காங்கிரசுடனே கூட்டணி வைத்து டில்லியில் ஆட்சி அமைத்த போதே மக்கள் மனதில் ஆம்ஆத்மியின் மீது இருந்த நல்மதிப்பு போய் இதுவும் சராசரி அரசியல் கட்சிதான் என்ற எண்ணம் வர ஆரம்பித்துவிட்டது. அப்போதே அவர் சுகாரித்திருக்க வேண்டும். ஆனால் தன்னுடன் இருந்து கோஷம் போடுபவர்கள் தான் மக்கள் என எண்ணி ஏமாந்து விட்டார்.

அதுவுமில்லாமல் தலைவர்கள் அனைவருமே தங்கள் வெற்றியை உறுதி செய்ய வெற்றி வாய்ப்புள்ள தொகுதியை தெரிவு செய்து போட்டியிடுவார்கள். ஆனால் கெஜ்ரிவாலோ மோடியை நேரடியாக எதிர்த்து போட்டியிட்டு தன் தோல்வியை தேடிக்கொண்டார். ஆனால் அந்த தைரியம் பாராட்டப்பட வேண்டும்.

அவர் டெல்லி முதலமைச்சராகவே இருந்திருக்கலாம். இப்போதோ அரசியல் நகைச்சுவையாக பார்க்கப்படும் நிலைமைக்கு அவர் மட்டுமல்ல அவரது கட்சி ஆட்களும் வந்திருக்கிறார்கள். மோடி வெற்றி பெற்றால் மொட்டை அடிப்பேன் என்று சொன்ன மானுஷ்ய புத்ரன் என்ன செய்கிறார் என்று தெரியவில்லை.

ஆம் ஆத்மியின் புரட்சி பேச்சுகள் இனி எடுபடுவது சந்தேகம் தான்.

. . .



தமிழக அரசியல்

எப்போதுமே திமுக மற்றும் அதிகமுக என்ற வட்டத்திற்குள் சுற்றும் தமிழகமும், கம்யூனுஸ்ட் மற்றும் காங்கிரஸ் என்ற வட்டத்திற்குள் சுற்றும் கேரளமும் தேசிய அரசியலில் இருந்து தனித்து பார்க்கப்பட வைக்கின்றன தேர்தல் முடிவுகள்.

கருத்துக்கணிப்புகளை பிந்தள்ளி அதிக இடங்களை அதிமுக பெற்றிருப்பது ஆச்சரியம். மற்ற இடங்களில் காங்கிரஸ் எதிர்ப்பு அலையை பாஜக பயன்படுத்திக்கொண்டதைப்போல தமிழகத்தில் அதிமுக காங்கிரஸ் எதிர்ப்பு அலையை நன்றாக பயன்படுத்திக்கொண்டது என்று சொல்லவேண்டியிருக்கிறது.

தமிழகம் இன்னும் திராவிட கட்சிகளின் கோட்டை தான் என்பதை தமிழக மக்கள் காட்டியிருக்கிறார்கள்.

தேசிய அளவில் மூன்றாவது கட்சியின் இடத்தில் அதிமுக முத்திரை பதித்திருக்கிறது. சரியான நேரத்தில் கம்யூனிஸ்ட்களை கழட்டி விட்டு தன் பலத்தை தனியாக நின்று நிரூபித்திருக்கிறார் ஜெ. இல்லையென்றால் கூட்டணி கட்சியை வளர்த்துவிட்டதாகவே இந்த வெற்றி அமைந்திருக்கும்.

ஊடகங்களில் மோடி அலை என்று பெரிதாக பேசப்பட்டாலும் தமிழகத்தைப்பொறுத்தவரை மோடி படு தோல்வி என்று எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அந்த கண்ணோட்டத்தால் மட்டுமே ஏன் தோல்வியடைந்தது என்று ஆராய்ந்து செயல்பட முடியும்.

மோடி ஆட்சிக்கு அதிமுக ஆதரவளிக்கும் என்று அறிக்கை விட்ட மலைச்சாமியை உடனடியாக தன் கட்சியில் இருந்தே தூக்கியது மோடியின் பெண் உருவமே ஜெ எனவும் இருவரும் கூட்டணி சேர்ந்துவிடுவார்கள் என்ற எதிர்கட்சியின் பரப்புரைக்கும் அடியாக அமைந்திருக்கிறது.

திமுகவின் மீது இருந்த மின்வெட்டு வெறுப்பு ஜெ அரசு மீதும் நிறையவே மக்களுக்கு இருந்த போதும் தமிழகத்தில் மோடி அலை வீசவில்லை லேடி அலை தான் வீசுகிறது என்று பிரச்சாரித்த ஜெ அதை முடிவுகளில் நிரூபித்திருந்தாலும் அது லேடி அலை அல்ல ஒவ்வொரு வாக்குக்கும் இருநூறு முதல் ஐநூறுவரை பணப்பட்டுவாடா செய்த பண அலை தான் என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுவதில் ஓரளவு உண்மை இருக்கவே செய்கிறது. ஆனால், பணம் வாங்கிய கட்சிக்கே வாக்கு போடும் அளவிற்கு தமிழக மக்கள் நேர்மையானவர்களா என நினைக்கும் போது தமிழகத்தில் ஜனநாயகத்தின் எதிர்காலம் குறித்து வருத்தமே வருகிறது.

மீனவர் பிரச்சனை, கங்கை காவிரி நதிநீர் இணைப்பு இவையெல்லாம் தமிழக மக்களுக்கு பிரச்சனையாக இல்லையா என்பதே இப்போது கேள்வி.

தேமுதிக விஜயகாந்தின் பிரச்சாரம் நல்லதை விட கெட்டதை தான் அதிகம் செய்திருக்கிறது. அவரது பேச்சை ஒரு பத்துநிமிடம் கேட்டால் அவருக்கு வாக்கு போட வேண்டும் என நினைத்திருந்தவர்கள் கூட மனம் மாறி இவருக்கு வாக்கு போட வேண்டுமா என யோசிக்க ஆரம்பித்துவிடுவார்கள் என்று கூறியவர்கள் உண்டு.

ஆனால் விஜயகாந்தின் மனைவி பிரேமலதாவின் பிரச்சாரம் மிகவும் சிறப்பாக நேர்த்தியாகவும் கேட்கக்கூடியதாகவும் இருந்தது. பிரேமலதாவின் பேச்சுத்திறமையை பயன்படுத்திக்கொள்வது தேமுதிகவிற்கு நல்லது.

வைகோவின் தனித்துவத்தைத்தாண்டி, தமிழர் நலனுக்காக மோடியுடன் சண்டை போட்டாவது நலத்திட்டங்களை பெற்றுத்தருவேன் என்று வைகோ பிரச்சாரம் செய்த பின்னும், பாஜக ஆட்சியில் வைகோ மத்தியில் முக்கிய முடிவுகளை எடுக்கக்கூடிய இடத்தில் இருப்பார் என அக்கட்சி தலைவர் ராஜ்நாத் சிங் உறுதி கூறிய பின்னும், தமிழர் நலனை முன்னிறுத்தி போராடிவரும் வைகோ தோல்வியடைந்திருப்பது தமிழ் மக்களுக்கு ஏமாற்றமே.



வைகோ இந்த தருணத்தில் மிகவும் நுணுக்கமாக சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டியது மிக மிக அவசியம்.

விஜயகாந்தோ வைகோவோ தமிழகத்தில் தன் உண்மை பலம் என்ன என்பதை உணர்ந்து வருங்காலத்தில் செயல்பட்டாக வேண்டும். அதற்கு இத்தேர்தல் உதவி செய்திருக்கிறது என்று எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால் இந்த இரண்டு கட்சிகளை விட தமிழகத்தில் பாமகவிற்கு செல்வாக்கு இருக்கிறது என்பது ஆச்சரியமே.

மத்திய ஆட்சியின் தேவையெல்லாம் தீர்ந்த பின் மத்திய கூட்டணியில் இருந்து வெளியே வந்தால் காங்கிரசின் மாசு தன் மீது ஒட்டாது என நினைத்தது திமுக, ஆனால் மக்களை ஏமாற்ற முடியவில்லை. அதுவுமில்லாமல் ஸ்டாலின் நன்மைக்காக அழகிரியை கட்சியில் இருந்து விலக்கி தீமையை தேடிக்கொண்டது திமுக தலைமை. திமுகவிற்கு எதிரான வாக்குகளை அழகிரியின் அறிக்கையிலிருந்தும் திமுக நன்றாகவே தேடிக்கொண்டது.

தன் கட்சிக்காரர்கள் மீது இருக்கும் வழக்குகளை சமாளிக்க ஏற்கெனவே காங்கிரசை வைத்து ஆதாரங்களை இல்லாமல் செய்துவிட்டிருந்தாலும் இனி திமுக என்னச்செய்யப்போகிறது என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

நீலகிரியில் அதிக நோட்டா வாக்கு பதிவாகியிருக்கிறது. அதாவது 2G அலைக்கற்றை ஊழல் புகழ் ராசாவுக்கு எதிரான அலை பாஜக விளையாட்டில் இல்லாததால் நோட்டாவில் அதிகரித்திருக்கிறது. பாஜக வேட்பாளர் குழப்பாமல் இருந்திருந்தால் அங்கே ஒரு வெற்றி கிடைக்க வாய்ப்பிருந்திருக்கும்.

. . .

**கவுரவ பிச்சைக்காரர்கள்!**

நின்னைச் சரணடைந்தேன்

அம்மா...தாயே...!
வாசல் புறமிருந்து வந்த குரலைக் கேட்டு,
நேற்றிரவு மீந்திருந்த பழைய
சோறுடன் வாசலை நெருங்கினேன்.
அங்கே-
நாலைந்துபேர் குழுமியிருக்க நடுவே
நின்றிருந்தது வெள்ளை உடை தரித்த
உருவமொன்று கைகளைக் கூப்பிய வண்ணம்...!
... தேர்தல் நேரம் ....



**வித்தியாசமான குமரி**

தமிழகத்தில் காங்கிரசுக்கும் பாஜகவுக்கும் ஆறுதலான விசயம் குமரி மட்டுமே.

குமரியில் எந்த கட்சி வருகிறதோ அதுவே மத்தியிலும் வரும் என்ற கணக்கு இம்முறையும் பொய்க்கவில்லை. ஆனால் பொய்க்கும் வாய்ப்பு மிகவே இருந்தது. காமராஜ் என்ற தலைவரை மட்டுமே வைத்து காங்கிரசின் கோட்டையாக இருக்கும் குமரி என்னைக்கேட்டால் இம்முறையும் அது காங்கிரஸ் கோட்டையாகவே இருக்கிறது என்றே சொல்வேன். கிருத்துவர்களின் வாக்கு பிளவுபட்டதே பொன்.ராதாகிருஷ்ணன் வெற்றிக்கு காரணமாக அமைந்திருக்கிறது.

இதில் மிகமுக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய விசயம் கூடங்குள போராட்ட தலைவர் உதயகுமாரின் படு தோல்வி.

கூடங்குள எதிர்ப்பு போராட்டத்தில் அத்தனை கடலோர மக்களையும் இணைத்து நடத்தப்பட்ட போராட்டமும் அவரது பேச்சும் ஆம் ஆத்மியின் எழுச்சியும் சேர்ந்து மற்ற கட்சிகளை விட மிகப்பெரும் பலம் குமரியில் உதயகுமார் பெறுவார் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. அதுவுமில்லாமல் குமரியில் கிருத்துவர்களின் பலம் அதிகம். இதை வைத்தே இங்கே திமுக, அதிமுக, கம்யூனிஸ்ட், ஆம் ஆத்மி என அனைத்து கட்சிகளும் கிருத்துவ வேட்பாளர்களை களம் இறக்கிவிட வாக்கு பிளவு ஏற்பட்டு அது உதயகுமாருக்கோ ராதாகிருஷ்ணனுக்கோ சாதகமாக வரலாம் என்ற எதிர்பார்ப்பும் உடைபட்டிருக்கிறது.

கடற்கரை மக்களின் பலமாவது உதயகுமாருக்கு இருக்கும் என்று பார்த்தால் பெரிய ஏமாற்றம். அவருக்கு வெறும் பதினைந்தாயிரம் வாக்குகள் தான் கிடைத்திருக்கிறது. குமரியில் பாஜகா, காங்கிரஸ், அதிமுக, திமுக, கம்யூனிஸ்ட்டைத்தாண்டி ஆறாவது இடத்திற்கு ஆம் ஆத்மி தள்ளப்பட்டிருக்கிறது. ஆம் ஆத்மி கட்சிக்கு கடற்கரை மக்களும் சேர்ந்து பெரிய ஆப்பு வைத்திருக்கிறார்கள் என்று தான் சொல்ல வேண்டும்.

தமிழகத்திலும் கேரளாவிலும் அதிக வெற்றி இல்லாத போதும், கட்சி பாரபட்ச மின்றி பழிவாங்கும் நடவடிக்கை இன்றி அனைத்து மாநிலங்களுடன் சேர்ந்து இந்தியாவின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்காக பாடுபடுவேன் என மோடி தெளிவுபடுத்தியிருப்பது ஆறுதலான விசயம்.

**பிராந்திய கட்சிகள்**

இத்தேர்தலில் தேசிய கட்சிகளை விட பிராந்திய கட்சிகள் வளர்ச்சி பெற்றுள்ளன. முக்கியமாக அதிமுக, திரிணமுல் காங்கிரஸ், பிஜு ஜனதாதளம், சிவ சேனா போன்ற கட்சிகள் வளர்ச்சியை பதிவு செய்திருக்கின்றன. தேசிய கட்சியாக அடையாளம் காணப்படும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் கிடைக்காத வளர்ச்சி இது. அதே போலவே தெலுங்கானா போராட்ட வெற்றியின் பிரதிபலிப்பாக தெலுங்கான கட்சிளுக்கும் வாக்கு கிடைத்துள்ளது.

மாநில கட்சிகள் வளர்ச்சி பெறுவது ஜனநாயகத்திற்கு நல்ல அடையாளம். இதனால் ஒவ்வொரு மாநிலமும் வளர்ச்சியை காணும்.

. . .

மோடி வெற்றி பெற்றது பெரிய விசயமல்ல, மோடிக்கான உண்மையான சவால் பிரதமர் பதவியில் தான் இருக்கிறது. இதை அவரே பிரச்சாரத்தின் போது என்னிடம் ஒரே இரவில் இந்தியாவை மாற்றிவிடும் வித்தை ஏதுமில்லை என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இதுவரை வீசிய அலை முக்கியமல்ல, அறுபதாண்டுகளாக காங்கிரஸ் செய்த பொருளாதார சீரழிவுகளையும் இந்தியாவின் கட்டமைப்பையும் சீர் செய்ய அவர் எடுக்கப்போகும் முடிவும் அதன் விளைவுகளுமே நிஜமான மோடி அலையை வீசச்செய்யும்.

முக்கியமாக பாஜகவின் அத்தனை பக்க தேர்தல் அறிக்கையை விட, கறுப்பு பணத்தை மீட்டெடுத்து, தேசிய அளவில் நதிநீர் இணைப்பை ஏற்படுத்தி விவசாய மற்றும் நீர் பிரச்சனையையும் மின்சார பிரச்சனையையும் தீர்த்தாலே மக்கள் மதிக்கும் அரசாக பாஜக அரசு அமையும் என்பதில் ஐய்யமில்லை.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டின் தேர்தலை முடிந்தவரை சிறப்பாக நடத்திமுடித்த தேர்தல் ஆணையத்திற்கு நன்றிகள். வெற்றி பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்.

# இயற்கையின் தீர்ப்பு

மலர் (எ) மாணிக்கம்

மலையிலிருந்து சலசலவென அருவி விழுந்து வேகமாக ஒடிக்கொண்டிருந்தது. அந்த பகுதியில் உயரமான மரங்களும், அடர்த்தியான புல்வெளியுமாக இருந்தது. அங்கங்கு வண்ணபூக்கள் பூத்து காற்றில் தலையசைத்துக் கொண்டிருந்தன. அந்த அழகான பகுதியில் எல்லா விலங்குகளும் ஒன்று கூடி யாருக்காகவோ காத்திருந்தன.

திடீரென்று மின்னலொன்று வெட்டியது. அந்த இடம் முழுவதும் பிரகாசமானது.

ஜொலிக்கும் வண்ண உடையில், தலையில் கீரிடமும் கையில் மந்திரக் கோலுடனும், சிறகடித்து பறந்து வந்து தரை இறங்கினாள் தேவதை. எல்லா விலங்குகளும் வணங்கின. ‘என்னை அழைத்ததற்கான நோக்கம் என்ன”? என்று கேட்டது தேவதை.

கூட்டத்தின் நடுவே தும்பிக்கையை தூக்கி பிளிறிக்கொண்டு வந்த யானை ‘தேவதையே வணக்கம், இப்ப என்ன நடக்குதுன்னு தெரியுமா? இந்த மக்கள் உயர உயரமா இருக்க மரங்களையும், காடுகளையும் அழிச்சிக்கிட்டே வர்றாங்க. இப்படியே போனா காடே இல்லாமல் போயிறும், இத தடுக்கனும் தேவதையே” என்றது.

ஓடிக்கொண்டிருந்த தண்ணீரிலிருந்து குதித்து வந்தது ஒரு குட்டி மீன் ‘தேவதையே நீர் நீராவே இல்ல. எல்லாம் கருத்துப் போச்சு. இப்ப தண்ணீர் ஒடுறது இல்ல, சாக்கடையும், தொழிற்சாலை கழிவும் கலந்து ஒடுது” என்றது.

அடுத்து வந்தது குயிலக்கா, ‘நான் பாடுறதுக்கு முன்னாடி, தோட்டம், தோப்பெல்லாம் இருந்தது. ஆனா இன்னைக்கு அதெல்லாம் குறைச்சிருக்சு, அப்படியே பாடுனாலும் என் பாட்டு கேட்கிறது இல்ல, ஒரே இரைச்சல் சத்தமா தான் கேட்குது” என்றது.

இப்படி ஒவ்வொரு விலங்குகளும் தங்களது குறைகளை கூற, அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தாள் தேவதை.

இறுதியாக ‘இயற்கை பாதுகாக்க வேண்டும்” என்று எல்லா விலங்குகளும் ஒருமித்த குரலில் கூறின. ‘நான் பார்த்து கொள்கிறேன்” என்று சிறகடித்து தேவதை கிளம்பினாள்.

மறுநாள் அந்த நாட்டு அரசனின் கனவில் தோன்றினாள். தோன்றி தனது ஐந்து விரல்களை காட்டினாள். பின் கடைசி இரண்டு விரல்களை மடக்கினாள். மீதியுள்ள முதல் மூன்று விரல்களையும், பாதுகாப்பாக வைத்து மறைத்தாள்.

## 'தன்'மானத்தமிழா!

சீர்காழி.சேதுசபா



*தமிழிலேயே பெயர் வைப்போம்!*
*நம் பிள்ளைகளுக்கு..*
*தமிழை இழக்காமல் கொடுப்போம்!*
*நம் சந்ததியருக்கு..*

*குழந்தைக்கு முதலில்*
*தமிழமுது ஊட்டுவோம்!*
*குழந்தையின் முதலமுதம்*
*தமிழாக இருக்கட்டும்!*

*பாட்டி சொல்லும் கதைகள்*
*பைந்தமிழாக இருக்கட்டும்!*
*பேத்தி பாடும் பாடல்கள்*
*செந்தமிழாக தவழட்டும்!*

*பணம் சம்பாதிக்க*
*பத்துமொழியும் கற்கட்டும்!*
*குணம் சம்பாதிக்க*
*தாய்மொழியை அறிந்திடட்டும்!*

*சுயமாக சிந்தித்திட*
*சொந்தமொழி வேண்டுமடா!*
*தன்மானம் வளர*
*தாய்மொழி தேவையடா!*
*ஏட்டறிவு பட்டம்பெற*
*எழுத்தறிவு வேலைபெற*
*கல்விகேள்வி பெற*
*செந்தமிழைத் திற!*

*தமிழை யாரும்*
*தாழ்த்திடவும் முடியாது!*
*தமிழை யாரும்*
*மறந்திடவும் முடியாது!*
*'டமில'ரென்று சொல்லிக்'கொல்லும்'*
*நம்மைத் தவிர..*

இரவில் கண்ட கனவிற்கு அர்த்தம் தெரியாமல் குழம்பிப் போனான் அரசன். ஊரில் உள்ள அனைவரையும் அழைத்து விளக்கம் கேட்டான். யாருக்கும் தெரியவில்லை.

கடைசியாக ஒரு பெரியவர் விளக்கம் சொன்னார். '5 விரல் - ஐம்பூதம் (நீர், நிலம், காற்று, நெருப்பு, ஆகாயம்) கடைசி இரண்டை தவிர்த்து விட்டால், மீதியுள்ளது நீர், நிலம், காற்று தான். இம்மூன்றும் கெட்டுப்போகாமல் பாதுகாக்க வேண்டியது உன் கடமை" என்றார்.

அரசனும், அமைச்சர்களும் ஒன்று கூடி பல்வேறு திட்டங்களை தீட்டினர். காடுகள் அழிப்பதை தடுப்பது. ஆபத்து தரும் தொழிற்சாலைகளை மூடுவது. பிளாஸ்டிக் பொருளை தவிர்ப்பது. நச்சு காற்று வெளியேறுவதை நிறுத்துவது, இரைச்சலை குறைப்பது, அணு ஆயுதத்தை எதிர்ப்பது என முடிவு செய்தனர்.

சில நாட்கள் கழித்து, சில அமைச்சர்கள் 'நமது திட்டத்தை நிறைவேற்றினால், நமது நாடு வளர்ச்சியில் பின்னால் போய்வீடும். அறிவியல் வளர்ச்சி பெறாது" என்றனர்.

அரசன் யோசிக்க ஆரம்பித்தான், 'நீண்ட நேரத்துக்கு பிறகு தேவதை கூறியதை விட்டுவிடுவோம்" என முடிவு செய்தான்.

சில ஆண்டுகளில் நாடு நவீனமயமானது, வளர்ச்சி பல மடங்கானது. மக்கள் அறிவியல் வளர்ச்சியால் மாறிப் போயிருந்தனர். ஆனால் இயற்கை வளம் குறைந்து கொண்டே வந்தது.

பால் போல ஓடிய தண்ணீர், சாக்கடையும் தொழிற்சாலை கழிவுமாக ஓடியது.

குடியிலோசை கேட்ட காற்றில், காதை கிழிக்குமளவு இரைச்சலாக இருந்தது.

ஆலமரமும், வேல மரமும் நின்ற இடத்தில், உயர உயரமான கட்டிடமும் மாளிகையுமாக இருந்தது.

சிலமக்கள் மட்டும் வீடுகளில் மழைநீர் சேகரிப்பு, மரம் வளர்ப்பது, பிளாஸ்டிக் தவிர்ப்பு, விவசாயிகளுக்கு முன்னுரிமை, நீர் நிலை பாதுகாப்பு என இயற்கை நேசித்தனர்.

நாட்கள் செல்ல செல்ல இயற்கை மிகவும் மோசமானது. தேவதை அரசனிடம் சென்று எச்சரித்தாள். அரசன் அதை கண்டுக்கொள்ள வில்லை.

நாட்டில் மழை பெய்வது கொஞ்ச கொஞ்சமாக குறைந்தது. தண்ணீர் பற்றாக்குறையானது. நாடு வறண்டு போனது. புதுப்புது நோய்கள் வந்தது. அரசனும், மக்களும் அளவுக்கதிமாக கஷ்டப்பட்டனர்.

திடிரென்று பெருமழை பெய்தது. நாடு முழுவதும் தண்ணீராக நிரம்பியது, மக்கள் அனைவரும் தண்ணீரில் தத்தளித்தனர்.

அந்நேரம் சிறகடித்து பறந்து வந்த தேவதை இயற்கையை நேசித்தவர்களை மட்டும் தூக்கி சென்றது. வெள்ளத்தில் தத்தளித்துக் கொண்டிருந்த அரசன், 'காப்பாத்துங்க"... காப்பாத்துங்க"... என்று கத்தினான். தேவதை அவனை கண்டு கொள்ளவில்லை.

கடைசியாக தேவதை அவனைப் பார்த்து சொன்னது

"கடவுள் எப்போதும் மன்னிப்பார்

மனிதன் எப்போதாவது மன்னிப்பான்

ஆனால், இயற்கை ஒருபோதும் மன்னிக்காது, தண்டித்து விடும்" என்றது.

'இயற்கையை பாதுகாக்க தவறியது என்னுடைய தவறுதான்" என்று உயிரை விட்டான் அரசன். இயற்கையை பாதுகாக்க தவறிய அனைவரும் அழிந்து போனார்கள்.

**முகப்பு படம்**



படம்: விநோத்

நீங்களும் நீங்கள் எடுத்த சிறந்த படங்களை மின்னிதழுக்காக அனுப்பி வைக்கலாம்.

# தேசக் காதல்

வாகைக்காட்டுக் கவிஞன்



அவனது மடல் அது!
இல்லை! இல்லை!
நான் அவசரமாய்
மறுக்கிறேன் .
அவன் மனம் தானது !

அவளுக்கான
அந்த மடலில் என்னையும்
பங்கு கொள்ளவைக்கும்
அவன் பெரிய உள்ளம்
சிறிய பந்தியை பகிர்ந்து .

அவளுக்கு அவன்
பிரியமுள்ள காதலன்.
எனக்கு நேசம்
நிறைந்த நண்பன்.

காவலரணில்
கண் விளித்திருந்திருப்பானோ ..?
கடுங்குளிரில் நடுங்கி
நலிந்தே எழுதியிருப்பானோ ..?

அவகாசம் கிடைத்த
நொடிகளில் அனேகமாக
வரைந்திருக்கலாம் .
கொஞ்சம் கிறுக்கலாக
அவன் கையெழுத்து!

பசுமுதல் பூனை வரைக்கும்
நலம் விசாரிக்கும்
அவன் பாசத்தின் விசாலத்தை
எப்படிச்சொல்ல ..?

முற்றத்துச் செம்பருத்தி
கொல்லையில் ஆமணக்கு
எல்லையில் கார்த்திகைக்
கொடிகளையெல்லாம்
அந்த உயிராயுதத்தை

அணைத்தபடியே நலம்கேட்டு
எழுதி இருக்கிறானே!!!

தன் உறவுகள் முதல்
பக்கத்து ஊர் கடைசி
மனிதர்வரை எப்படித்தான்
நினைவில் வைத்து
நலம் கேட்க முடிந்தது அவனால்!

விழிகளை விரிய வைக்கும்
சில வசனத்தை கண்டேன்..
நெரிசல் கொண்டு நிற்கும்
இந்தக் களமுனையில்
தடைகளை உடைக்கையில்
என் உயிர் போகலாம்!

வாழ்ந்துகொண்டே
போராடுதலை அல்ல .
போராடிக்கொண்டே
வாழ்தலை நேசிக்கிறேன் .

வா..! அன்பே ..
வீழ்ந்து போன பின்
என் துப்பாக்கி ஓயக்கூடாது ..
அங்கே உனக்கும் ஓய்வு
கிடைத்தால்
வா ..! வந்தென்
கல்லறையின் அருகில் தூங்கு..
சுதந்திரக்காற்று இந்த
பூமியில் வீசுகையில்
மறுபிறவி எடுத்து வருவோம் .

இப்போதெல்லாம் அவர்கள்
விதைக்க பட்ட நிலத்தின்
அருகுள்ள தெருக்களை
கடக்கையில் அந்த
உண்மை காதலர்களின்
தேசக் காதல் என்
நெஞ்சில் விரிகிறது

# சாம்ராட் சம்யுக்தன்

சிவாஜிதாசன்

பாகம் **3 - 2.** எதிர்பாரா தாக்குதல்




நாகவனத்தினுள் நுழைந்து ஒரு வீரனைக் கொன்று தன் முதல் கணக்கைத் துவங்கிய ரவிவர்மன், பொழுது புலர்ந்ததும், அரண்மனைக்கு வேலைக்குச் செல்வோரின் கூட்டத்தினுள் கலந்திருந்தான். சாதாரண பாமரன் ஆடையை உடுத்தி வலது தோளில் துணிப்பையைச் சுமந்தபடி சென்றுகொண்டிருந்த அவனது மனம், இரவு நடந்த நிகழ்வு, ஆண்டாள் என்று பெயர்கொண்ட பெண்ணின் சந்திப்பு, அயோத்தியவன ஆட்களிடம் அவர் தன்னைப் பற்றிப் பரிந்து பேசியது, அவர்களும் மறுமொழி கூறாமல் தனக்கு உதவி செய்தது என எல்லாவற்றையும் எண்ணிப் பார்த்தபோது அவர் சாதாரண பெண் அல்ல என்பதை மட்டும் புரிந்துகொண்டான். அவரைச் சந்தித்து ஒரு நாள் கூட இன்னும் முழுமை அடையவில்லை, அதற்குள் எத்துணை பெரிய உதவியை நமக்கு புரிந்திருக்கிறார் என்று ரவிவர்மன் எண்ணும்போது ஆண்டாளின் மீது பக்தியும் நன்மதிப்பும் உண்டானது.

இது ஒரு புறம் இருக்க கூட்டம் அரண்மனையை நெருங்க நெருங்க அவன் உள்ளம் கிலி அடைந்தது. வியர்வை அவன் உடல் முழுதும் பரவி அவனது பய சாயலை வெளிக்கொண்டு வந்தது. அவ்வப்போது வீதியினில் நாகவன வீரர்கள் குதிரையில் சென்றுகொண்டிருந்தனர். அவர்கள் அக்கூட்டத்தினரை ஏளனப் பார்வையோடும் இகழ்ச்சி புன்னகையோடும் கடந்து செல்லும்போது தன்னை நோட்டமிடுவது போல் தோன்றியது அவனுக்கு.

பொழுது புலர்ந்தும் கதிரவனின் ஒளி பூமியில் இன்னும் சஞ்சரிக்கவில்லை. வானத்தில் படர்ந்திருந்த லேசான கார்மேகங்கள் சூரியனின் கதிர்களைப் பூமியில் நுழையவிடாமல் தடுத்துக்கொண்டிருந்தன. ஆங்காங்கே மழைத் துளிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் விழ, ரவிவர்மனின் மேலும் சில மழைத் துளிகள் விழுந்து அவன் உடலைக் குளுமைப்படுத்த எண்ணித் தோற்றுப் போய்க் கொண்டிருந்தன. சரியாக இரண்டு நாழிகைகள் நடந்த கூட்டம் அரண்மனை முகப்பை அடைந்தது.

முகப்பின் மேல் வீரர்கள் வேல் தாங்கிக் காவல் புரிந்தனர். அவர்களின் கூரிய விழிகள் கூட்டத்தினரை நோக்கின. கோட்டைக் கதவுகளைத் திறந்து கூட்டத்தினரை உள்ளே வர வழி ஏற்படுத்தினர். கூட்டமும் சலனமற்ற நதி போல உள்ளே நுழைந்தது. கதவைத் திறந்து விட்டவர்கள் எல்லோர் முகங்களையும் நோக்கினர். ரவிவர்மன் தன் தலையை வேறு பக்கமாய்த் திருப்பிக்கொண்டு அவர்கள் பார்வையிலிருந்து மறைந்து போனான். கதவைத் திறந்து விட்டவர்கள் அங்கிருந்து தங்கள் வேலையைப் பார்க்க நடையைக் கட்டினர்.

மெல்லிய நிம்மதிப் பனி ரவிவர்மன் மனதினை நனைத்து அவன் பதற்றத்தைச் சிறிதளவு தணித்தது. அது நெடுநேரம் நிலைக்கவில்லை. அயோத்தியவன அடிமைகள் ஆளுக்கொரு திசைகளில் செல்லும்போது ரவிவர்மன்.தான் எந்தப் பக்கம் செல்வதென்று குழம்பித் திணறி விட்டான். அதை கோட்டை சுவரின் மேலிருந்த வீரன் கண்டுகொண்டான். ரவிவர்மனின் நடவடிக்கைகள் வீரனுக்கு சந்தேகத்தைத் தூண்டிவிட்டது. அருகிலிருந்த வீரனுக்கு சமிக்ஞை செய்தான். 'என்ன?' என்பது போல் பார்வையால் கேட்டான் இரண்டாவது வீரன். முதல் வீரன் ரவிவர்மனை நோக்கி ஜாடை காட்டினான். 'சந்தேகமாக இருக்கிறது' என்று கண்களை உருட்டினான். இரண்டாம் வீரன் ரவிவர்மனை நோக்கினான்.

ரவிவர்மன் அடிமைகளின் பின்னால் சென்றுகொண்டிருந்தான். அவ்வப்போது தன் மேல் யார் கண்ணாவது பதிந்திருக்கிறதா என்று நோட்டமிட்டபடியே சென்ற அவன் மேல் இரண்டாம் வீரனுக்கும் சந்தேகம் எழுந்தது. முதல் வீரனைப் பார்த்து ஆமோதிப்பதாய்த் தலையசைத்துவிட்டு கோட்டை சுவரிலிருந்து இறங்கி ரவிவர்மனை நோக்கிச் சென்றான். கையில் வாள் ஒன்றைத் தயாராக வைத்துக்கொண்டபடி ரவிவர்மனை நோக்கி விரைவாக நடந்தான். கைக்கெட்டிய தூரம் வந்ததும் தான் அந்த திடுக்கிடும் திருப்பம் நிகழ்ந்தது. யாரும் எதிர்பார்க்காத திருப்பம் அது.

திடீரென்று, ஒருவன் ரவிவர்மன் மீது பாய்ந்து சரமாரியாக அடிக்கத் துவங்கினான். யோசிக்கக் கூட நேரம் கொடுக்கவில்லை ரவிவர்மனுக்கு. மின்னல் தாக்குதலை எதிர்பார்க்காததால் தரையில் விழுந்து பாதி மயக்க நிலைக்குச் சென்றான். 'யார் தன்னைத் தாக்கியது?' என்று அவன் தன் கண்களை எதிரே இருந்தவன் மீது செலுத்தினான். கொலைவெறி முகத்தோடு விஜயன் ரவிவர்மனின் முன்னால் நின்றுகொண்டிருந்தான். ரவிவர்மனுக்குக் கோபம் துளிர்த்து மலையாய் உருவெடுத்தது. விஜயனை தாக்க எழத் தொடங்கியபோது, ரவிவர்மனை மீண்டும் கீழே தள்ளி தன் கையிலிருந்த குதிரையை அடக்கும் சாட்டையால் அவன் உடலைப் பதம் பார்த்தான். ரவிவர்மன் வலியால் துடித்தபடி புரண்டான். ஆனாலும் விஜயன் அடிப்பதை நிறுத்தவில்லை. ரவிவர்மனின் உடலில் சாட்டை பட்ட இடமெல்லாம் சிவந்து கன்னிப்போனது. இனியும் பொறுமை அவசியமில்லாதது என்றுணர்ந்த ரவிவர்மன் விஜயனைத் தாக்கி கீழே விழச் செய்தான். இருவரும் உருண்டனர். அந்தக் காட்சியை அரண்மனையே வேடிக்கை பார்த்தது.

ரவிவர்மனைப் பின்தொடர்ந்து வந்த வீரனுக்கோ என்ன நடக்கிறது என்று ஒன்றுமே புரியவில்லை. இப்படியே இவர்களை யுத்தம் செய்ய விட்டால் ஒருவன் நிச்சயம் கொல்லப்படுவான் என்று பதறி அவர்களைப் பிரிக்க எண்ணி சில வீரர்களை உதவிக்கு அழைக்க, கண நேரத்தில் வீரர்களும் ஓடி வந்து அவர்களைப் பிரித்தார்கள். ஆயினும் அவர்களின் உஷ்ணம் அடங்கவில்லை. மீண்டும் போரிடத் துடித்தனர்.

ரவிவர்மனைப் பின்தொடர்ந்த வீரன் இருவரையும் அதிகாரப் பார்வையோடு நோக்கி, "எதற்காக சண்டையிட்டுக்கொண்டிருக்கிறீர்கள்? அதுவும் எங்கள் முன்னால்? உயிர் பயம் இல்லையோ?" என்று உறுமினான்.

## கணக்குகள்

கிரேப்ஸ் மகேந்திரன்

கணக்குகள் சரிதான்
விடைகள்தான்
வித்தியாசமாய் விடிகின்றன.



பள்ளி முதல்வரின்
ஒன்றுவிட்ட
சித்தப்பாவின்
சிபாரிசில்
எம் மகனுக்கு எல்.கே.ஜி.
யில்
உட்கார இடம்
கிடைத்தது.

காலை மட்டுமல்ல
மாலை முழுவதும் படிப்பு
பின்பு கணிவு கொடுக்கும்
கணிணி படிப்பு.

கணக்காய் நேரம் ஒதுக்கி
கணக்கீடுகளை உள்நிரப்பி
ரசீதோடும் ரசீதின்றியும்
பணம் செலுத்தியதில்
கல்லூரி இயந்திரம்
என்ஜீனியராய் துப்பியது.

மகனை மாப்பிள்ளையாக்க
பெண் தேடலில் பெண் குவியலுக்கிடையில்
தரம்பிரித்து ஒதுக்கி
சல்லடையாய் சலித்தபோது
டாக்டருக்கு மாமனாரானேன்.

சந்தோசம் நீட்டி
தோல்விகள் கழித்து
வாழ்க்கையை வகுத்து
வாழ்ந்து முடிந்ததில்
ஈவாய் மீதமிருந்தது
சிபாரிசின்றி
மகன் வாங்கிதந்த
முதியோர் இல்லத்தில் இடம்தான்.

கணக்குகள் சரிதான்
விடைகள்தான்
வித்தியாசமாய் விடிகின்றன.

விஜயன் திமிறினான். "விடுங்கள்! அவனைக் கொல்லாமல் விடமாட்டேன்!" என்று முரண்டுபிடித்தான்.

"எதற்காக அவனைத் தாக்கத் துடிக்கிறாய்?" என்றான் வீரன் விஜயனிடம்.

"என்னை விடுங்கள்! அவன் உயிர் இன்று என் கையில்" என்று கொதித்தான் விஜயன்.

"கேட்ட கேள்விக்கு பதிலைச் சொல். இல்லையென்றால் தண்டனைக்குள்ளாவீர்கள்" என்று மிரட்டினான் வீரன்.

"எனக்கிருப்பது ஒரே ஒரு புது ஆடை. மற்ற ஆடைகளெல்லாம் பழையவை. புது ஆடையை இவனிடம் துவைக்கக் கொடுத்தேன். அதனைக் கிழித்து விட்டான். எங்கே நான் பார்த்து விடப் போகிறேனோ என்று பதுங்கி பதுங்கி அரண்மனைக்குள் வந்தான். என்னிடமிருந்து தப்ப முடியுமா? சரியாகப் பிடித்துவிட்டேன்"

விஜயன் அவ்வாறு கூறிக்கொண்டிருக்கும் போதே ஒரு பெரியவர் வந்தார். ரவிவர்மனைப் பார்த்து பதறினார். "ஐயோ! மகனே, ஏன் இத்துணை பரிதாபமாகக் காட்சி தந்துகொண்டிருக்கிறாய்?" என்று ரவிவர்மனிடம் கேட்டார்.

ரவிவர்மன் ஒன்றும் புரியாமல் விழித்தான்.

"வாங்க பெரியவரே. உங்கள் மகனை நம்பி என் ஆடையை கொடுத்ததற்கு நல்ல பரிசு கொடுத்துவிட்டான். பாருங்கள்!" என்று தன் கிழிந்த ஆடையை பெரியவரிடம் காட்டினான் விஜயன்.

அதைக் கண்ட பெரியவர் ரவிவர்மன் மேல் கோபம் கொண்டு அவன் முதுகிலேயே அடிக்கத் துவங்கினார். "என் மகனாடா நீ? நம் குலத் தொழிலை கெடுக்க வந்த பாவி" என்று பழித்தபடி அடித்தார்.

வீரன் தடுத்தான். "என்ன பெரியவரே! இப்போது தான் அடி வாங்கி அடங்கியிருக்கிறான். நீங்களும் ஆரம்பிக்கிறீர்களே?"

"என்ன ஐயா செய்வது? தாயில்லா பிள்ளையென்று செல்லம் கொடுத்து வளர்த்தேன். அதுவே எனக்கு பகையாகி விட்டது. பொறுப்பில்லாதவனாக மாறி விட்டானே" என்று வெம்பினார் பெரியவர்.

ரவிவர்மனுக்கு மயக்கம் வராத குறை தான். பேச்சு கூட எழாமல் நடப்பதைப் பரிதாபமாக வெறித்துக்கொண்டிருந்தான். சுற்றியிருந்த அயோத்தியவன ஆட்களும் பெரியவருக்கு ஒத்து ஊதினார்கள். "பெரியவரே, அன்றைக்கே நான் சொன்னேனே. அப்போதே உங்கள் பையனை அடித்து வளர்த்திருந்தால் இப்போது இந்நிலை ஏற்பட்டிருக்குமா?" என்று ஏளனக் குரலில் ஒருவன் பேசினான். மற்றவர்களும் அவனுக்கு பக்கவாத்தியம் வாசித்தார்கள்.

பெரியவர் அழத் தொடங்கினார். வீரனுக்கோ சங்கடமாகப் போனது. "பெரியவரே, சிறு பிள்ளையென்றால் அப்படித்தான்" என்று ஆறுதல் கூறினான்.

அப்பொழுது கூட்டத்தைக் கிழித்துக்கொண்டு சுந்தரி வந்தாள். கூட்டத்தினரைப் பார்த்து, "இங்கே என்ன நடக்கிறது?" என்று கேட்டுக்கொண்டே பெரியவரையும் ரவிவர்மனையும் மாறி மாறி நோக்கினாள்.

வீரன் சுந்தரியிடம், "அது ஒன்றும் இல்லை அம்மணி. சிறு பிரச்சனை. அதுவும் தீர்ந்தாகி விட்டது" என்றான்.

## கவிதைக்குறள் திருக்குறள் தெளிவுரை...

செந்தமிழ்தாசன்

அறம், இரண்டாம் அதிகாரம் - வான்சிறப்பு

*17. நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி*
*தானல்கா தாகி விடின்.*

மேகத்து மழைநீர்
தான் சேராவிட்டால்
கடலும் கடலாகா...
எழில்மேகம் கருந்திரண்டு
மழையெனும் தன்னீர்
தராது எப்போதும்
கலைந்து நின்றால்
பரந்த கடலும்
நிறைந்து இல்லாது
குறைபடத் தோன்றும்
குளம் போலவே...

*18. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்*
*வறக்குமேல் வானோர்க்கு மீண்டு*

மழையோசை வராதுபோனால்
பூசையொலி கேட்காது உலகில்....
வானமெனும் தாய்
மழையெனும் பால்
வார்க்காது போனால்
வானுலாவும் தேவரும்
பூவுலக தெய்வம் என
களிப்புறும் பூசைவிழா
நடவாது நிற்கும் நிலத்திலே....

19. தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

கொடுத்தலும் இருத்தலுமில்லை
வான் கொடுக்காதாயின்.......
தானத்தில் சிறப்பதும்
தவத்தில் இருப்பதும்
இல்லாது நிற்கும்
கொடைதரும் மழை
மண்ணிற்கு வாராது நிலைத்திடின்
அறமிரண்டும் வாழ்விற்கு
அரணாகும் நிலையும் மாறும்
அந்நிலை கொண்ட மழையால்...

"தீர்ந்தாகி விட்டதல்லவா? பிறகு எதற்கு கூட்டமாக நின்றுகொண்டிருக்கிறீர்கள்?" என்று சினத்துடன் கத்தினாள் சுந்தரி. அனைவரும் கலைந்து சென்றனர்.

"பெரியவரே, என் ஆடையைத் துவைக்கக் கொடுத்தேனே. என்ன ஆனது?" என்று அதிகாரத் தோரணையில் கேட்டாள் சுந்தரி.

"இதோ இருக்கிறது தாயே!" என்று தன் துணிப்பையை எடுத்து அதில் ஒரு பட்டாடையை எடுத்துச் சுந்தரியிடம் நீட்டினார் பெரியவர்.

அதை வாங்கி, சரியாகத் துவைக்கப்பட்டிருக்கிறதா என்கின்ற கவனத்தில் புதைந்தாள் சுந்தரி. அதையெல்லாம் கவனித்துக்கொண்டே சென்றான் வீரன். ரவிவர்மனின் மீது அவனுக்கிருந்த சந்தேகம் பனியாய் உருகிப் போனது. சிறிது நேரத்தில் எத்துணை வசை மொழி வாங்கி விட்டான் என்று தனக்குள் சிரித்துக்கொண்டான். மீண்டும் பெரியவரையும் ரவிவர்மனையும் நோக்கினான்.

அந்தப் பெரியவர் சுந்தரியிடம் கெஞ்சிக்கொண்டிருந்தார். "தாயே! எனது மகனுக்கு என் தொழிலைச் சரி வரச் செய்யத் தெரியவில்லை. அவனுக்கு அரண்மனையிலேயே வேறு ஒரு வேலை கொடுத்துவிடுங்கள். அப்போதாவது பொறுப்பு வருகிறதா என்று பார்க்கிறேன்" என்று மன்றாடினார். சுந்தரியும் ரவிவர்மனை கூர்மையான விழிகளில் துளைத்து, "சரி" என்று கூறினாள்.

பெரியவருக்கு நிரம்ப சந்தோசம். ரவிவர்மனை இறுதியாக ஒரு முறை தழுவி, "எப்படியோ கரைசேர்ந்து விட்டாய். மீண்டும் எந்தப் பிரச்சனைக்குள்ளும் சிக்காதே" என்று அவ்விடத்தைச் சுற்றி ஒரு முறை துழாவும் பார்வையை வீசி அங்கிருந்து சென்றார். அவர் பேசியவிதம் ரவிவர்மனுக்கு மேலும் குழப்பத்தை விளைவித்தது. அவர் செல்வதையே வெறித்துக்கொண்டிருந்தான்.

"என்ன இங்கேயே நிற்கிறாய்? குதிரை லாயத்திற்குச் செல்!" என்றாள் சுந்தரி ஒரு திசையைக் கை காட்டியபடி.

ரவிவர்மன் கீழே விழுந்திருந்த தன் துணி மூட்டையைத் தூக்கிக்கொண்டு பரிதாபத் தோற்றத்துடன் அங்கிருந்து சென்றான்.

ரவிவர்மன் குதிரை லாயத்தில் உட்கார்ந்துகொண்டு தன் விதியை எண்ணி நொந்துகொண்டிருந்தான். காட்சிகள் எல்லாம் புயல் வேகத்தில் நடந்து அவனைச் சக்கையாய்ப் பிழிந்துவிட்டிருந்தன. இது வரை காணாத அவமானமும் எரிச்சலும் அவன் உள்ளத்தில் குமுறி, உடம்பில் ஏற்பட்ட ரணங்கள் குருதியாய் வெளிவந்துகொண்டிருந்தது. 'நடந்தது கனவா அல்லது அவர்களெல்லாம் பைத்தியங்களா?' என்று வருந்தினான் ரவிவர்மன்..

நிமிடங்கள் கரைந்தன. குதிரை லாயத்தில் உள்ள குதிரைகளை ஒரு முறை நோட்டமிட்டு தன் ஆடையின் ஒரு பகுதியைக் கிழித்து குருதியைத் துடைத்துக்கொண்டிருந்த ரவிவர்மனின் முன்னால் விஜயன் வந்து நின்றான். ரவிவர்மன் கண்கள் பகைமையால், தீச்சுடரைப் போல் ஒளி வீசியது. இது வரையில் காணாத அவமானங்களைக் கண்டதால் அவன் அறிவு மங்கி பழி வாங்கும் உணர்ச்சியே மேலோங்கியது. சுயக்கட்டுப்பாட்டை மீறி விஜயனின் கழுத்தைப் பிடித்தான் ரவிவர்மன். சீறும் நாகத்தைப் போல் இருந்தது அவனது பிடி.

"நான் சொல்வதைச் சற்று நிதானமாகக் கேள்!" என்றான் விஜயன்.

## நல்லவனாக நடிக்கிறோம் ...!!!

கே இனியவன்

*பொய் சொல்லவத்தில்லை*
*உண்மையை மறைத்திருகிறோம்*
*இதை விட கொடுமை பாதி உண்மை*
*பேசியிருக்கிறோம் - கொடுமையில்*
*கொடுமை பாதி உண்மை*
*பேசுவதுதான் -இதை எல்லாம்*
*செய்து விட்டு நல்லவனாக*
*வேஷம் போடுகிறோம் நடிக்கிறோம் ...!!!*

*தப்பு என்று தெரிந்து கொண்டு*
*தப்பு செய்திருக்கிறோம் -ஆனால்*
*மற்றவர்கள் செய்யாத தப்பையா*
*நான் செய்கிறேன் என்று*
*சமுதாயத்தை அடமானம் வைத்து*
*தப்பு செய்கிறோம் நல்லவனாக*
*நன்றாக நடிக்கிறோம் ...!!!*

*திட்ட மிட்டு பிறர் காசை*
*திருடியது இல்லை ஆனால்*
*வழியில் கிடந்த பணப்பையை*
*யாரும் உரிமை கோராதபோது*
*எம் பணமாக்கி செலவு செய்கிறோம்*
*மனட்சாட்சிக்கு பதில் சொல்கிறோம்*
*வழியில் கிடந்த காசு பொது சொத்து*
*யாரும் பயன்படுத்தலாம் என்று*
*நமக்கு நாமே நியாயம் சொல்கிறோம் ..*
*நன்றாக நடிக்கிறோம் ...!!!*

*ஊன் உண்ணாதே களவெடுக்காதே*
*சிறுவயதில் இருந்து கற்றுகொடுக்கும்*
*பாடம் - ஆனால் மாமிசம் உண்போம்*
*பசு கன்றின் பாலை களவெடுத்து*
*குடிப்போம் - கேட்டால் சொல்வோம்*
*அவையெல்லாம் எமக்காக*
*படைக்கபட்டவை - எமக்கே உரியவை*
*என்று வியாக்கியானம் சொல்வோம்*
*நன்றாக நடிக்கிறோம் ...!!!*

*பிறர் மனம் புண் படும் படி*
*பேசமாட்டோம் -ஆனால்*
*அவர் இல்லாத தருணத்தில்*
*பேசாமல் இருக்க மாட்டோம்*
*தர்மத்தையும் நியாயத்தையும்*
*பேசுவோம் - கோயிலில் தர்ம*
*கத்தாவுடம் வீண்சண்டை போடுவோம்*
*நன்றாக நடிக்கிறோம் ...!!!*

ரவிவர்மனின் பிடி மேலும் இறுகியது. அவனது பேச்சைக் கேட்க விரும்பாதவனாய்த் தோன்றினான் ரவிவர்மன்.

"உன்னைக் காப்பாற்றத்தான் தாக்கினேன்" என்று மெல்லிய குரலில் வலியைக் கலந்து கூறினான் விஜயன்.

ரவிவர்மனின் பிடி தளர்ந்தது. அவன் என்ன சொல்ல எண்ணுகிறான் என்று கேட்கும் ஆவல் முகத்தில் படர்ந்தது.

"நேற்று இரவு நீ எங்கிருந்தாய். அங்கு என்ன நடந்தது. எல்லாம் எனக்குத் தெரியும். எனக்கு மட்டும் அல்ல. அயோத்தியவன மக்கள் சிலருக்கும் தெரியும்" என்று கூற ரவிவர்மனின் பிடி முழுதும் தளர்ந்திருந்தது.

"நீ அரண்மனைக்குள் வரும்போதே உன் மீது சில வீரர்களுக்கு சந்தேகம் வந்துவிட்டது. உன்னை நிறுத்துவதற்காக ஒருவன் பின்தொடர்ந்து வந்தான்.

அவனை நிறுத்த எனக்கு வேறு வழி தெரியவில்லை. அதனால் தான் தாக்கினேன். அவன் விசாரித்திருந்தால் நிச்சயமாக நீ சிக்கியிருப்பாய். அதனால் தான் உயிரோட்டமுள்ள ஒரு நாடகத்தை அரங்கேற்றினேன். நீயும் தப்பினாய்" என்று கூறினான்.

அவர்கள் செய்தது சரி தான் என்பதாய் ரவிவர்மனுக்குத் தோன்றியது. "அந்த நாடகத்தைப் பற்றி என்னிடம் ஒரு வார்த்தை கூறியிருக்கலாமே" என்றான்.

"கூறுவதற்கு நேரம் அமையவில்லை"

ரவிவர்மனுக்கு காயத்தின் வலி பெரிதாகிக்கொண்டே போனது. 'ஷ்ஷ்ஷ்' என்ற சத்தத்துடன் காயத்தில் துணியை வைத்து அழுத்தினான். பின் விஜயனைப் பார்த்து,

"உன் உயிரோட்டமான நாடகத்தை இன்றே நிறுத்திவிடு. இல்லையேல் நீ உயிரை இழக்க நேரிடும்" என்று எச்சரித்தான்.

விஜயன் அவன் கூறியதைக் காதில் போட்டுக்கொள்ளாமல் அவன் காயத்தையே நோக்கிக்கொண்டிருந்தான்.

'பாவம்! சற்று பலமாகத்தான் தாக்கிவிட்டோம்" என்று எண்ணி வருந்தினான்.

அப்பொழுது வள்ளி குதிரை லாயத்திற்குள் வந்தாள். அவள் வருவதை விஜயன் கவனித்தான். அவளின் பார்வை விஜயனை ஒரு முறை கூர்மையாகச் சந்தித்து விலகிக்கொண்டது.

அவள் கையில் ஒரு குடுவை இருந்ததை விஜயன் கவனித்து அவள் எதற்காக வருகிறாள் என்பதைப் புரிந்துகொண்டான்.

ரவிவர்மனின் அருகில் வந்த அவளின் கண்களை மீண்டும் சந்தித்தன விஜயனின் விழிகள்.

சினத்துடன் சீறிய அவளின் கூர்மையான பார்வையைச் சந்திக்க முடியாமல் விஜயன் அங்கிருந்து சென்றான்.

வலியால் துடித்துக்கொண்டிருந்த ரவிவர்மன், வள்ளியைப் பார்த்து, "நீ யார்?" என்று கேட்டான்.

"உங்களுக்கு மருந்து கொண்டு வந்திருக்கிறேன்" என்றாள் மெலிதான குரலில்.

"நான் கேட்ட கேள்விக்குப் பதில் இன்னும் வரவில்லையே?"

"மருந்து பூசிக் கொள்ளுங்கள். காயம் சரியாகிவிடும்" என்று கூறினாள் வள்ளி.

இவளிடம் விசாரிப்பது வீண்முயற்சி என்று உணர்ந்துகொண்ட ரவிவர்மன் அவள் எடுத்து வந்த குடுவையை வாங்கி அதிலிருந்த பச்சிலைச் சாற்றை காயங்களுக்குத் தடவினான்.

"அவன் உனது காதலனா?" என்றான் ரவிவர்மன் காயத்திற்கு மருந்து போட்டுக்கொண்டே.

"அது எப்படி உங்களுக்குத் தெரியும்?" என்று ஆச்சர்யத்துடன் வினவினாள் வள்ளி.

"உன் ஒரு பார்வைக்குப் பயந்து இங்கிருந்து ஓடி விட்டானே அதை வைத்துத்தான்"

வள்ளிக்குச் சிரிப்பு வந்துவிட்டது. இருந்தும் அதனைக் கட்டுப்படுத்திக்கொண்டாள்.

"காதலன் அடிப்பான். காதலி மருந்து கொண்டு வருவாள். நன்றாக இருக்கிறதே உங்களின் வரவேற்பு!" என்று வள்ளியின் காதுகளுக்கு மட்டும் கேட்குமாறு முணுமுணுத்துக்கொண்டான்.

"நான் வருகிறேன். சிறிது ஓய்வெடுங்கள். எல்லாம் சரியாகிவிடும்" என்றாள் அவள்.

"சரியானதும் சொல்லி அனுப்புகிறேன். நீ உன் காதலனை அனுப்பி மீண்டும் தாக்கச் சொல்" என்றான் பரிகாசமாக.

வள்ளி அங்கிருந்து நடையைக் கட்டினாள். அவள் நடையில் கோபம் ஒளிந்திருந்தது.

'இவள் அல்லவா சிறந்த காதலி. தன் காதலனைப் பரிகாசமாகப் பேசினால் கோபத்தோடு செல்கிறாளே. எனக்கும் இருக்கிறாளே ஒருத்தி.. தன் அண்ணனை விட்டே என்னை அடிக்கச் சொலுவாள்' என்று முணுமுணுத்தபடி அங்கிருக்கும் குதிரைகளை நடந்தபடி நோட்டமிட்டான்.

ஒரு குதிரையின் மீது அவன் கண்கள் பதிந்தன. கால்கள் மேற்கொண்டு செல்லாமல் அந்த இடத்திலேயே நின்றன. கண்கள் இரண்டும் குளமாகின. சம்யுக்தனின் குதிரை தான் அங்கு கட்டப்பட்டிருந்தது.

ரவிவர்மனைக் கண்டதும் தனது முகத்தை அவன் அருகே நீட்டியது குதிரை.

அதன் மேல் தன் தலையைச் சாய்த்து கண்ணீர்த் துளிகளால் குதிரையின் முகத்தை நனைத்தான் ரவிவர்மன்.

அந்தக் காட்சியைத் தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்த விஜயனுக்கோ ஆச்சர்யம்.

சம்யுக்தன் சென்ற பின், அந்தக் குதிரை பார்த்திபனுக்கு மட்டுமே அடங்கி வந்தது.

மற்றவர்கள் யார் சென்றாலும் அவர்களைத் தாக்கியது. ஆனால், இவனிடம் பரிவோடு நடக்கிறதே! என்று வியந்தான் விஜயன்..

. . .

நாகவன அரண்மனை மேல்மாடத்தில் நின்றபடி, அடிமைகள் செய்யும் வேலையை ரசித்துக்கொண்டிருந்தார் மார்த்தாண்டன். அவரது இதழ்களில் இகழ்ச்சிப் புன்னகை அரும்பியபடி இருந்தது.

இன்னோர் பக்கம் சுந்தரியும் அடிமைகளைக் கவனித்துக்கொண்டிருந்தாள். ஆனால் அவளின் கண்கள் மார்த்தாண்டன் மீதே படிந்திருந்தன.

அப்போது, ஆண்டாள் மாம்பழக் கூடையைத் தலையில் சுமந்துகொண்டு தள்ளாடியபடி வந்தார்.

ஒரு கட்டத்தில் முடியாமல் போகவே மாம்பழக் கூடையை நழுவவிட்டார். கீழே விழுந்த மாம்பழங்கள் சிதறி உருண்டோடின.

அதில் ஒரு மாம்பழம் வள்ளியின் கால்களில் பட்டு நின்றது. வள்ளி தன் அருகினில் சிதறி இருக்கும் மாம்பழங்களை எடுத்து ஆண்டாளின் கூடையில் போட்டாள்.

ஆண்டாள் அவளை முறைத்துக்கொண்டு, அவசர அவசரமாகத் தரையில் விழுந்திருந்த பழங்களைக் கூடையில் போட்டுக்கொண்டு அங்கிருந்து மீண்டும் நடந்தார்.

அவர் செல்வதை வள்ளி கண்ணீரோடு பார்த்துக்கொண்டிருந்தாள்.

ஆண்டாள் கூடையைச் சுமந்துகொண்டு அரண்மனையின் முன் பக்கம் வரும் நேரத்தில் அங்கு மார்த்தாண்டன் இருப்பதைக் கண்டதும், தன்னை ஒரு தூணின் அருகில் மறைத்துக்கொண்டார்.

சுற்றும் முற்றும் நோக்கிக்கொண்டிருந்த மார்த்தாண்டன் தூணை நோக்கிய சமயத்தில் தூணின் அருகில் யாரோ நிற்பதாய் அவருக்குத் தோன்றியது.

தூணின் அருகில் உருவத்தின் நிழல் இருப்பதையும் அவர் கவனித்தார்.

அப்பொழுது மன்னரின் தோள்களில் வந்து அமர்ந்த ராஜாளி, சிந்தனை படர்ந்த மார்த்தாண்டனின் முகத்தை வித்யாசமாக நோக்கியது.

மார்த்தாண்டன் ராஜாளியிடம் ஏதோ சமிக்ஞை கொடுத்தார்.

உடனே ராஜாளி தூணை நோக்கிப் பறந்து சென்றது. தூணை அடைந்ததும் அங்கேயே சுற்றிச் சுற்றிப் பார்த்தது.

அங்கு மாம்பழக் கூடை மட்டுமே இருந்தது. ஆண்டாள் அங்கில்லை...

தொடரும்...

அறத்துப்பால் - இல்லறவியல். அதிகாரம் - 06.

வாழ்க்கைத் துணைநலம்.

சுந்தரேசன் புருஷோத்தமன்

51: மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

குணமும்நற் காரியமுங் கொண்டு - தனைக்கொண்டான்
கொண்டில்லஞ் சேர்க்கும் பொருள் கொண்டு
பொருளதன் தன்மையைக் கொண்டு - வாழ்வை
வளஞ்செய்வாள் வாழ்க்கைத் துணை.

52: மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்.

மனைமாட்சி யென்னும் மாண்பில்லா
இல்லாளிருக்கு மில்வாழ்விலெல்லா மிருந்தும்
இருந்தென்ன?!
அவையெல்லா மில்லாதற் போலா மவற்றால்
பயனென்ப தொன்று மில்லை.

53: இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை?

இல்லாள் கொண்ட பண்பது நல்லதுவாயின்
கொள்ளு மில்வாழ்வி லில்லாததென்ன!? – அஃது
இல்லாதாயி னில்வாழ்வி லிருப்பதுமென்ன!? - ஆங்கே
எவையிருந்து மில்லாததே யாம்.

54: பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்.

பெண்ணெனப் பட்டவள் பெறுகின்ற அருங்குணம்
கற்பெனும் மனத்திண்மையாம் – கற்பதை
பெண்ணவள் பெற்றிடின் பெண்ணினும் பெறுகின்ற
பெரும்பேறு வேறில்லையாம்.

55: தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

பிறதெய்வந் தொழா ளாயினுங் கொண்ட
கொழுநனைத் தெய்வமாய்க் கொண்டவனைத்
தொழுதேத்தித் துயிலெழும் பெண்ணவள்
பெய்யெனப் பெய்யும் மழை.

56: தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

தன்கற்பு பேணி தனைக்கொண்டான் நலந்தனைக்
கருத்துடன் பேணி - இல்வாழ்வில்
நலந்தரும் புகழையும் பேணி - அறந்தனை
அலுப்பின்றி பேணுவாள் பெண்.

57: சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.

மனவடக்க மென்னு மொழுக்கத்தால்
தமைத்தாமே காக்கும் நிறையென்னும் பண்பே
நற்பண்பாம் மகளிர்க்குச் சிறை யென்னுங்
காவ லென் செய்யும்?

58: பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.

வேண்டுஞ் சிறப்பது வெல்லாம் பெற்றிடின்
பெறும் பெண்கள் பெறுவர் – பெரும் பேறாம்
வான்வாழு தேவர்கள் வாழ்கின்ற உலகதில்
வாழ்வாங்கு வாழும் பேறு.

59: புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை.

புகழ்விரும்பும் நன்மனையாள் நம்மைத்
தலை நிமிர்ந்து நடைபயிலும் வழிசெய்வாள் – இகழ்கின்ற
பகையோர்முன் தலைகுனிந்து செல்பவராம் - புகழ்விரும்பும்
நன்மனையாள் வாய்க்கப் பெறார்.

60: மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

நற்குணமுஞ் செயலும் வாய்த்தவள் நல்இல்லாள்
நல்இல்லா ளொருவர்க்கு மங்கலஞ் சேர்ப்பவள்
மங்கலஞ் சேர்கின்ற நல்வாழ்விற் கணிகலன்
குணநிறை நன்மக்கட் பேறு.

- தொடரும்

# அம்மா என்றழைக்காத.....

ஷைலஜா

“அட! நீங்... நீ... சு..சு.. சுப்ரியா தானே?'' திகைப்புடன் ராதிகா கேட்டபோது புன்னகையுடன் தலையாட்டியவளைப் பார்த்து மேலும் வியந்துபோனவளாக,. “நெனச்சேன்; அந்த உதட்டு மச்சமும், சுருட்டை மயிரும் உன்னை சுப்ரியாவே தான்னு சத்தியம் பண்றதுடி! வாட் எ ப்ளெசெண்ட் சர்ப்ரைஸ்!'' என்றாள்.

பதினைந்து வருடங்கள் கழித்து தனது பழைய சிநேகிதியை நேரில் பார்த்த உற்சாகத்தில் கூவினாள் ராதிகா.

“அம்மா! அம்மா!'' தனது கால்களைக் கட்டிக் கொண்ட மகன்களை சேர்த்து அணைத்தபடி நின்றவளை சுப்ரியாவும் ஏறிட்டாள்.

முப்பத்தி ஐந்து வயதில், மேலும் பத்து வயசு மதிக்கலாம் போலிருந்த ராதிகாவின் தோற்றத்தைக் கண்டு மனம் வருந்தியது ஆனாலும் தனது வாடிய முகத்தை சமாளிக்க, “ராது! உன்னைப் பார்க்கணும்னு தேடி வந்திருக்கிறேன். போனவாரம் வனஜாவை தி.நகர்லபார்த்தேன் அவள்தான் உன் அட்ரஸ் கொடுத்தாள். என் பிசியான ஷெட்யூலில் எப்போ உன்னை சந்திப்பது என ஐடியாவே இல்லை ஆனா சந்திக்கணும்னு ஆவலா இருந்தது அதான் போன் செய்யாமல் சடனா வந்தேன்..

ஆமா....இத்தனை வருஷம் கழித்து உன் வீட்டுவாசலில்வந்து நிக்கிறவளை 'சுப்ரியா! சௌக்யமா இருக்கியா? வீட்டுக்குள்ள வாடி' அப்படீன்னு வரவேற்காமல் அப்படியே நிக்கறயேடி!

ஹ்ம்... படிக்கிற நாளிலும் இப்படித்தானே. பிரமிப்பான விஷயங்களை பார்த்தாலோ கேட்டாலோ நீ ஸ்தம்பித்துப் போயிடுவே? அந்த விஷயத்துல நீ மாறவே இல்லை...'' என்றாள் சிரித்தபடி.

“ஓ... ஸாரி ஸாரி... உள்ள வாடி... வீடு ரகளையா இருக்கும். ஒண்ணும் நினைச்சிக்காத, ப்ளீஸ்.. மூணு குழந்தைங்க, அதான்...''

“வாட்? மூணு குழந்தைக்கு அம்மா ஆகிட்டியா? “ கேட்டபடி சுப்ரியா

ஜாக்கிரதையாக பாதத்தைத் தூக்கி வைத்தாள்., காலடியில் கூடம் முழுவதும் இறைந்திருந்த ஹெலிகாப்டர், கார், கிரிக்கெட் மட்டை, பென்சில் பாக்ஸ், நோட்டுப்புத்தகம் - எதன்மேலும் விரல் நுனி படாமல் சோபாவில் உட்கார்ந்தாள்.

“வசுதா, அக்க்ஷய், அசோக்! நீங்க மூணு பேரும் வாசல்ல கொஞ்ச நாழி வெளையாடிட்டு வாங்க... நான் என் ஃப்ரண்ட் கிட்ட பேசிட்டு வரேன், என்ன?''

“யாரும்மா இந்த ஆண்ட்டி? ஜீன்ஸ் டீ ஷர்ட், கூலிங்கிளாஸ் பாப்கட்டுனு அசத்தலா இருக்காங்க?'' பன்னிரண்டு வயது மதிக்கலாம் போலிருந்த வசுதா ஆர்வமாய் கேட்டாள்.

ராதிகா ஏதோ சொல்ல வாயெடுப்பதற்குள் சுப்ரியா, “நான் உங்கம்மாவோட காலேஜ் மேட்! நல்ல ப்ரண்ட்ஸ்!உங்கம்மா ராதிகாவுக்கு ரிஸல்ட் வரதுக்குள்ளயே கல்யாணம் ஆகிட்டது.



நான் மேற்படிப்புக்காக அமெரிக்கா போனேன், அங்கேயே வேலை கிடைச்சி, இப்பத்தான் இரண்டு வாரம் முன்னாடி சென்னைக்கு வந்திருக்கேன். இனிமே சென்னை வாசிதான் நான்'' என்றாள்.

”அம்மா ஃப்ரண்டா நீங்க! சந்தோஷம் ஆண்ட்டி..ஹாவ் எ நைஸ் டைம்! நாங்க விளையாடப் போறோம்!''

“பாத்து வசு, தம்பிஅசோக் கேட்டைத்தாண்டி வாசல்ல போயிடாம பாத்துக்கோ...'' என்று மகளை எச்சரித்துவிட்டு ராதிகா, சுப்ரியாவிடம் சட்டெனக் கேட்டாள்.

“சுப்ரியா! காலேஜ் நாள்ள சொன்னமாதிரி நீ இன்னமும் கல்யாணமே பண்ணிக்கலையா அல்லது செட்டில் ஆகிட்டியா?”

சுப்ரியா புன்னகைத்தாள். “பெண்கள் என்றால் கல்யாணம், புருஷன், அம்மா ப்ரமோஷன் உடனே குழந்தை குட்டீன்னு வாழற வாழ்க்கைக்கு நான் எதிரின்னு அன்னிக்கு சொன்னபடிதான் இப்பவும் வாழறேன்!'' என்றாள்.

“நெஜமாவா? அமெரிக்கால யாரையும் காதலிக்கலையா? கல்யாணம்? குழந்தைகள் ஏதும்...?''

“பிடிக்காத ஒண்ணை நெருங்க விட்டுடுவோமா? உயிரோடு இருந்தவரை அமெரிக்காவுக்கு என் கூட வந்து இருந்த அம்மா வற்புறுத்தினாங்க. நாளைக்கு உன்னை கவனிக்க ஒரு குழந்தை வேண்டாமா? 'அம்மா'ன்னு அழைக்கவேண்டாமா? அதுக்காகவாவது கல்யாணம் செஞ்சிக்கோ'' என்று சொன்னாங்க.

'அம்மா; ஆகிரதில் என்ன பெருமை? எனக்கு அந்த மாதிரியான வாழ்க்கை அமைப்பில் பிரியமில்லைன்னு சொல்லிட்டேன்.

இப்பவும் அந்த எண்ணம் இல்லை, ராதிகா. ஒரு பெண்ணின் எதிர்காலக் கனவை கல்யாண வாழ்க்கை குழிதோண்டிப் புதைச்சிடுது.

உன்னையே எடுத்துக்கோ. எவ்வளவு நன்றாய் நீ பாடுவாய்! 'துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா?'ன்னு நீ பாடினால் உருகாத நெஞ்சமும் இருக்குமா? கல்யாணம் ஆனபிறகு உன் பாடல்கள் எல்லாம் என்னாச்சு? நானும் அமெரிக்காவிலிருந்தப்போ இன்டர்நெட்டுல தமிழ்நாட்டுச் செய்திகள் படிக்கிறபோது என்னிக்காவது ஒரு நாள், 'பிரபல பாடகி ராதிகா அவர்களின் இசை நிகழ்ச்சி'ன்னு எங்காவது செய்தி வராதான்னு பார்ப்பேன். நான் யூகிச்ச மாதிரி நீ குடும்ப வலைல விழுந்து “குழந்தை, குட்டின்னு உன் திறமைகளை எல்லாம் இழந்து நிற்கிறே!''

## இறைவா சொல்வாயா ???

பாண்டிமா



அம்மா பின்னேறிச் சென்ற
நாட்களெல்லாம்
முன் நின்றே வாராதோ
அம்மா அன்று தெரியலயே
காலத்தின் அருமை
தொலைத்தேன் அறியாமை

நடவாதென அறிந்தாலும்
கிடைக்காதா ஏக்கமாய் நான்
இன்னொரு பிறவி வேண்டும்
மகளாக அல்ல நான் தாயாக
உன்னை மடியில் சுமக்கனும்
வலிக்க வலிக்கப் பெறனும்

தோழில் சுமக்கனும் நாளும்
கொஞ்சி மகிழனும்
நிலா காட்டி சோறு ஊட்டனும்
மடியில் போட்டு கதை சொல்லி
தாலாட்டி தூங்கச் செய்யனும்

பின்னலிட்டு பூச்சூட்டி
அழகு பார்க்கனும் பிடித்த
கலைகள் எல்லாம் கற்றுத் தரனும்
பெரிய படிப்பு படிக்கவைக்கனும்
வல்லவராய் நல்லவராய்
வரன் தேடி அமைக்கனும்

பேரப் பிள்ளைகளோடு நம்
வீடு முழுக்க ஓடி விளையாடனும்
உன் மடியில் தலை வைத்தே
என் உயிர் போகனும்
இதெல்லாம் கிடைக்க நடக்க
நான் என்ன செய்யனும் இறைவா ???

“ப்ச்... என்னடி பண்றது? உலகத்துல பல பெண்களின் நிலை இதுதான். வெற்றிபெற்ற ஒவ்வொரு ஆணின் பின்பு ஒரு பெண் நிற்கிறாள் என்றால், பெண்ணின் வெற்றிக்குப் பின்னால் அவள் குடும்பமே நின்றாலே ஒழிய அவள் சாதிக்க சாத்தியமில்லை. அல்லது உன்னைப் போல தனிக்கட்டையாய் இருக்கணும்.

அதிருக்கட்டும், திடீர்னு எதற்கு இந்தியாவுக்கு வந்திருக்கே?’’

“அமெரிக்கால சம்பாதிச்சதை எடுத்திட்டு வந்து இங்கே ஏதாவது சமூகசேவை செய்யலாம்னுதான் வந்திருக்கேன். கோடம்பாக்கத்துல ஒரு ஃப்ளாட்டுல குடி இருக்கேன்.

தனியா ஒரு பெண் வாழ்வது அமெரிக்கால தவறான விஷயமில்லை. இங்கே நாகரீகம் வளர்ந்தாலும் இன்னமும் ஜனங்களின் கண்ணோட்டம் மாறலை. ஃப்ளாட்டில் பலரின் பார்வை என் மேல சந்தேகக் கீற்றோடு விழுது.

நான் அதுக்கெல்லாம் கவலைப்படலை. ஒரு பெண் கல்யாணம் செய்துகொள்ளணும் அம்மா ஆகி குழந்தை பெத்துக்கணும் என்கிற கொள்கைக்கு நான் எதிரி.

தாய்மை என்கிற பட்டத்துல நாம் இந்தப்புத்திரபாக்கியங்களுக்கு செய்கிற தியாகத்திற்கு செலவழிக்கும் நேரத்தில் பல லட்சியங்களை சாதிக்கலாம்.. சரி, கெளம்பறேன் ராது. இந்தா குழந்தைகளுக்கு சாக்லேட் நிறையக் கொண்டு வந்திருக்கேன், நீ கொடுத்திடு.’’

பெரிய சாக்லேட் டப்பாவை ராதிகாவின் கையில் தந்துவிட்டு சுப்ரியா விடைபெற்றாள்.

“சாப்ட்டு போகக்கூடாதடீ?’’

“ஃபார்மாலீடீஸ் எனக்குப் பிடிக்காதுன்னு உனக்குத் தெரியும். சாப்பிடத் தோணினா நானே வருவேன்.’’

“பிடிவாதம் போகலைடி உனக்கு”

“பிடிவாதம் இல்லை, பிடிமானம். அது இருக்கிறவரைதான் லட்சியப்பிடிப்பில் பற்று இருக்கும். சரி, வரட்டுமா?’’

“ம்.. ரொம்பதாங்க்ஸ் வந்ததுக்கு..பை சுப்ரியா’’

கையசைத்து விடைபெற்று வெளியே வந்து காரில் ஏறினாள்.

செல்போன் மணி அடித்தது.

“ஹலோ?’’ என்றாள் .

“சுப்ரியா மேடம் நான், கோடம்பாக்கம் மலர்கள் அபார்ட்மெண்ட்ஸ், மகளிர் சங்கத்தின் செக்ரடரி சுபரேகா பேசறேன்!’’

“சொல்லுங்க... ஃப்ளாட் வந்த மறுநாளே எனக்கு உங்க அறிமுகம் கிடைத்ததில் மகிழ்ச்சி. என்ன விஷயமா இப்ப போன் பண்ணீங்க சுபரேகா?’’

“மேடம்! புறநகர்ப்பகுதில புதுசா முளைத்து இருக்கிற சில அனாதை இல்லங்களில் பச்சிளம் குழந்தைகளை கடத்தி விக்கறாங்களாம்.

அரசு மருத்துவமனையில் பிறக்கிற சிசுவிலிருந்து, பள்ளிக்கூடத்தில் படிக்கிற ஐந்து வயது குழந்தைகள் வரை பல குழந்தைகளைக் கடத்தி வைத்து இல்லத்தில் பாதுகாப்பதாய் சொல்லி விக்கறாங்களாம். இதை என் ஃப்ரண்ட் பூர்ணிமா, தனக்கும் குழந்தையில்லைன்னு அங்கே போய் சொல்லி கேட்டபோது, ஐம்பதாயிரம் தந்தால் தர்றதா சொன்னதிலிருந்து தெரிய வந்தது. உடனே போலீசுக்கு சொல்லி நடவடிக்கை எடுக்கிறோம். நீங்ளும் புறப்பட்டு வாங்க மேடம்!’’

## தமிழாலயம்

**கல்பனா பாரதி**

*பூவிரி எழில் மலர் பூந்தோட்டம்*
*வண்ண மலராலயம்*
*பொனெழில் கதிர்விரி இளங்காலை*
*அருளாதவன் வானாலயம்*
*பன்னாட்டுப் பறவைகள் சிறகுவிரிக்கும்*
*வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம்*
*அன்புக்கோபுரம் அழகாய் எழுந்து நிற்கும் இதயம்*
*மனிதனின் மன ஆலயம்*
*புன்னகை பூத்த முகத்தினள் தமிழன்னை அமர்ந்திருக்கும்*
*பொதியமலை கவிஞனின் தமிழாலயம் !*

“இதோ வர்றேன். என்ன அக்கிரமம்! ஆஸ்பத்திரிலேந்து திருடறாங்களா? பள்ளிக்கூடத்திலிருந்து கடத்தறாங்களா? அநியாயம். கொடுமை, மகாக் கொடுமை!’’ கத்தியபடி செல்போனை ஆ்ஃப் செய்தாள் சுப்ரியா. அப்போது...படபடவென்று நெஞ்சு அடித்துக் கொண்டது. நா வறண்டு போனது. சட்டென நெற்றி வியர்க்க பின் முதுகில் 'சுளீர்' என வலி தோன்ற ஆரம்பித்தது.

காரை உசுப்ப சாவியை கஷ்டப்பட்டு எடுக்க முயலுகையில் கையிலும் வலி பரவியது. அவ்வளவுதான் 'ஆ' என்று நெஞ்சைப் பிடித்துக் கொண்டு கார் ஸ்டியரிங் மீது சாய்ந்து விட்டாள்.

தெருவில் விளையாடிக் கொண்டிருந்த வசுதா தற்செயலாய் திரும்பியவள் சுப்ரியாவின் நிலையைக் கண்டு கார் அருகில் ஓடி வந்தாள்.

கதவைத் திறந்து “ஆண்ட்டீ! ஆண்டடீ!’’ என்று கூவினாள்.

பதில் இல்லை.

கலவரமாய் தன்னைத் தொடர்ந்த உடன்பிறப்பிடம், “தம்பி... வீட்ல போய் அம்மாகிட்ட சொல்லுடா... ஆண்ட்டீக்கு என்னவோ ஆயிடிச்சின்னு சொல்லி இங்கே கூட்டிட்டு வா, ம் சீக்கிரம் போ...’’ என்று உத்தரவிட்டாள்.

“ஐயையோ ஆண்ட்டிக்கு என்னவோ ஆச்சி... அம்மா... அம்மா...’’ கதறிக் கொண்டே அக்ஷய், ராதிகாவை அழைக்க ஓடினான்.

அசோக் 'திருதிரு'வென முழித்துக் கொண்டு அக்காவின் விரல்களை இறுகப்பற்றி நின்றான்.

வசுதா, தன் பாவாடையை விசிறி போல் மடித்து சுப்ரியாவின் மீது காற்றை வீச முயன்றாள். காருக்குள் தண்ணீர் பாட்டில் எங்காவது இருக்கிறதா என அவள் கண்கள் சுழன்று தேடின.

அதற்குள் ராதிகா அலறிப்புடைத்துக் கொண்டு ஓடிவந்தவள், “ஐயோ என்னடீ ஆச்சு என் சிநேகிதிக்கு? வசுதா, அடுத்த தெருவுல டாக்டர் பத்ரிநாத்னு போடு போட்ட வீட்டு தவைத்தட்டி அவரைக் கையோடு அழைச்சிட்டுவா, போ சீக்கிரம்’’ என்று பதட்டமாய் சொன்னாள்.

“சரிம்மா... நீ ஆண்டியை கவனமா பாத்துக்கோ... டாக்டர் அங்க இல்லேன்னா நான் ஆஸ்பத்திரிக்கு போன் பண்ணி ஆம்புலன்சை வரவழைக்கிறேன்...’’

“அம்மா, இந்தா தண்ணீ... ஆண்ட்டியோட மூஞ்சில அடிச்சிப்பாரும்மா, மயக்கமா இருக்கும்’’ என்று அக்ஷய் ஒரு டம்ளரில் தண்ணீரோடு வந்தான். ராதிகா அதை வாங்கிக் கொண்டாள்.

அசோக் என்னவோ ஏதோ என்றுஅழத் தொடங்கி விட்டான்.

தண்ணீர் முகத்தில் பட்டதும் மெல்லக் கண் விழித்த சுப்ரியா சிரமப்பட்டு ஏதோ பேச முயலும் போது வசுதா, டாக்டருடன் அங்கு ஸ்கூட்டரில் அழைத்துக்கொண்டு வந்து விட்டாள்.

அடுத்த அரை மணிக்குள் நர்ஸிங்ஹோமில் சேர்க்கப்பட்ட சுப்ரியாவை பரிசோதித்த டாக்டர் பத்ரிநாத், “உங்களுக்கு மாரடைப்பு வந்திருக்கு... சரியான டைம்ல கவனிச்சதால உயிர் பிழைச்சது.

கொஞ்சம் தாமதமாயிருந்தா என்ன வேணாலும் ஆகி இருக்கும்’’ என்றார்.

பிறகு கட்டில் அருகே கண்ணில் நீர் மல்க நின்று கொண்டிருந்த வசுதாவைப் பார்த்து, “இந்தப் பொண்ணு நாலுகால் பாய்ச்சல்ல ஓடிவந்து என்னை உடனே கிளம்பி வரச் சொன்னபோது இவளுக்கிருந்த படபடப்பை அப்போ பார்க்கணுமே!

சொல்ல சொல்ல கேட்காமல் வீட்டுக்கும் போகாமல் இங்கேயே பழி கிடக்கிறாள் ஒருமணி நேரத்துக்கு மேல.. ஆமா இந்தப்பெண் உங்க மகளா என்ன ?’’ என்று கேட்டதும் சுப்ரியாவின் பார்வை தோழியின் மகள் மீது கனிவுடன் பரவியது

“”எங்கம்மாவோட ஃப்ரண்ட் இவங்க ஆனா எனக்கு இவங்களும் ஒரு அம்மா தான்.

..”வசுதா சட்டென்று பெருமையுடன் சொல்லவும் டாக்டர்,” பார்த்தீங்களா, உறவில் உன்னதமானது தாய்க்கான இடம்தான்.

இந்தக்குழந்தை உங்களை அம்மா என்று சொன்னதும் உங்க முகம் மலர்ந்ததைப்பார்த்தேன்... “என்றார்.

சுப்ரியாவின் இமைஓரம் ஈரம் கசியத்தொடங்கியது.

# வருட வழி(விழை)யும் மனதின் துளிகள்! - 3

சுந்தரேசன் புருஷோத்தமன்

### தலைக்கனம் அறிக!



புல்லின் தலையமர் பனியின் கனமது

விழிகளுக்கோர் நல்விருந்தாகும் – கனம்

தலைமீ தமர்ந்தால் மருந்தேததற்கு?

சீக்கிரம் களைந்துவிடு!

### ....காதலில்!

அவனும் அவளும் சென்றார்கள்!

அவள் விழுந்தாள்!




அவன் கரையேற்றினான்!

அவள் சிரித்தாள்!

அவனும் சிரித்தான்!

அவர்கள் விழுந்தார்கள்!!

### பெண்சிசுக் கொலை!



ஓட்டைக் குடிசை!

ஒடிசல் தேகம்!

ஒட்டுக்கந்தை உடுப்பு!

கட்டித்தங்கமாய் கையிலோர் பிள்ளையை

கெட்டியாக அவள் கட்டிக்கொண்டிருந்தாள்!

இத்தனைக் கட்டிப்பால் எங்கிவள் வாங்கினாள்?

குட்டி வாய்க்குள் அதை ஊற்றின பின்னாலே

சிப்பிப்போல் வாய்மூடி சித்திரம் தூங்கினாள்!!

### காமக் கசடுகள்..!



கொட்டுங்கள் சீக்கிரம்!

உறவின் எச்சம்

உணவின் எச்சத்துக்காய்

வெகு நேரம் காத்திருக்கிறது!

## கணினி ஏற்று இயக்கம் :: ( Booting)

சந்திரசேகரன்

பகுதி 1

மய்யச்செயலக மறையுறா குறிக்கீடு முடக்கச் சோதிப்பும்
மின்துவங்கப்பிந்து நேர்அணுகல் நினைவகச் சோதிப்பும்
சிப்புத் தொகுதியின் அடிப்படை உள்வெளியீடு அமைவின்
படிநினைவகச் சோதனைக்கூட்டல்வழி முன்தொடங்க
மீட்புறுதிச் சிப்புத்தொகுதிச் சோதனையும், நிரல்படு இடை
வெளி காலம்காட்டியின் அடிப்படை உள்வெளியீடு
அமைவுவழி படிநினைவகச் சோதனைக்கூட்டல் சோதிப்பும்
விசைப்பலகை நேரடினினைவக அணுகல் சோதிப்புமாக.

(பகுதி 2 இதே மின்னிதழில் ...)

சித்திரை
பதிவுப்போட்டியில்
இரண்டாவது பரிசு
பெற்ற கவிதை

# பள்ளியில் சூழட்டும் பசுமையும் சுத்தமும்

சபா வடிவேலு

பச்சை நிறமே! பச்சை நிறமே!
பசுமை காட்டும் நல்ல வண்ணமே
வானம் பொழியும் மழைத் திறமே
வளமை மிகுந்திடும் புவிமேலே

கருமை மேகம் சூழ்ந்திடவே
கணக்காய் மழையும் பெய்திடுமே
ஏரி குளமும் நிறைந்திடவே
எங்கும் பயிர்கள் செழித்திடுமே

நெல்லும் பயறும் நிறைந்திடவே
காயும் கனியும் மலிந்திடவே
உயிர்கள் யாவும் மகிழ்ந்திடுமே
உழைப்பும் பெருமை சேர்த்திடுமே
இவை யாவும் பழங்கதை ஆனதுவே
இன்றோ நிலைமை மாறியதே

எங்கும் வெப்பம் தகித்திடுதே
என்றும் வறட்சி நிலவிடுதே
கழனியும் காடாய் மாறிடுதே
கலப்பையும் வீட்டில் தூங்கிடுதே

பச்சைப் புற்கள் காணலியே
பாவம் கால்நடை வாடிடுதே
குளங்கள் ஏரிகள் வற்றினவே
குடிக்கப் பறவைகள் தவித்தனவே

உணவும் நீரும் அருகினவே
உயிர்கள் வாடி வதங்கினவே
ஏனிந்தத் துன்பம் யாவருக்கும் ?
எண்ணிப் பார்ப்போம் தோழர்களே !

இயற்கை தந்திட்ட செல்வங்களாம்
இனிய வனங்களும் மலைவளமும்
காக்கத் தவறி அழித்திட்டோம்
பொய்த்துப் போனது மழையதுவும்

புகையும் மாசும் நிரம்பியதே
பகையாய் ஆனது காற்றதுவே
சுற்றுச் சூழல் பாழ்பட்டதே
புவியின் வெப்பம் மிகுந்ததுவே
பள்ளியில் பயிலும் பாலகர் நாம்
பாருக்கு உண்மை உணர்த்திடுவோம்

சின்னஞ் சிறிய கைகளினால்
செடியும் கொடியும் வளர்த்திடுவோம்
பென்னம் பெரிய மரம் வளர்ப்போம்
நீரிட்டு நாளும் நிழல் நிறைப்போம்

குப்பை கூளங்கள் தவிர்த்திடுவோம்
குடிநீர் சுத்தம் காத்திடுவோம்
துளித்துளி மழையைச் சேர்த்திடுவோம்
சிக்கனமாய் அதைச் செலவிடுவோம்

பள்ளியில் பசுமை பரவட்டுமே
பார்த்திடும் யாரும் மகிழட்டுமே
சுற்றும் சுத்தம் காத்திடுவோம்
சுகந்தக் காற்றைச் சுவாசிப்போம்

கூடி முயல்வோம் தோழர்களே
கோடி நன்மைகள் நமக்குண்டே
நாளும் நலமாய் வாழ்ந்திடுவோம்!
நமது பள்ளியைப் போற்றிடுவோம்!

# பெண் மனம் என்பது...

ஷைலஜா

மொட்டை மாடியில் துணி உலர்த்திக் கொண்டிருந்த ரேவதிக்கு கீழே ஹாலில் டெலிபோன் ஒலிப்பது கேட்டது. கையிலிருந்த ஈரத் துண்டை அவசரமாய்க் கொடியில் போட்டு விட்டு படியிறங்கி ஹாலுக்கு வரும்வரை போன் ஒலித்துக் கொண்டே இருக்கவே, மூச்சிரைக்க ஓடிப்போய் ரிஸீவரை எடுத்தாள்.

“ஹ்....ஹல்லோ...?’’ என்றாள். ’பட பட’வென்று வந்தது.

எதிர் முனையில் ரீஸீவரை வைத்திருப்பது கணவன் திவாகராய் இல்லாமல் இருக்க வேண்டுமே என்று மனம் வேண்டிக் கொண்டது. நீண்ட நேரமாய் போன் ஒலி கேட்கும்போதே அது திவாகராகத்தான் இருக்கும் என்ற யூகமும், “ரேவதி, எங்கே போனாய் இவ்வளவு நேரமும்?’’ என்ற எரிச்சலான எதிர்முனையின் கேள்வியில் நிரூபணமாகிப் போனது.

திவாகருக்கும், நிதானத்திற்கும் காத தூரம். பேச்சு, செயல் எல்லாவற்றிலும் அவசரம்தான். அதிகாரம் பறக்கும். கல்யாணமான இந்த ஏழு மாதத்தில் ரேவதிக்குக் கணவனின் உரத்த குரலே பெரும் இம்சையானது. அவளிடம் என்றில்லை. எல்லோரிடமும் திவாகர் 'தடாபுடா'வென்றுதான் பேசுவான். அவனுடைய இந்த சுபாவமே, அவனது முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பது போல ரேவதிக்குத் தோன்றும். நல்ல அறிவும், சிந்தனையும் இருந்தும் ஏழு வருடங்களாக இப்படி துணை இயக்குனராகவே அவன் இருப்பதற்கு இதுவும் ஒரு காரணம் என்று நிதர்சனமாகத் தெரிந்தாலும், ரேவதி அதைப் பற்றி வாய் திறக்கமாட்டாள். மௌனம் அவளுக்குக் கவசம்.

“ஏய், ரேவதி! என்ன யோசனை, போன் அடித்தவுடன் எடுக்காமல் எங்கே போனாய் என்று கேட்டேனே?’’ என்று எதிர்முனை அதட்டவும், சுதாரித்த ரேவதி, “அ... அது வந்து... இன்னிக்கு வே... வேலைக்காரி வரலை... மணி பதினொன்று வரை பார்த்து, இப்பதான் துணி துவைச்சு மொட்டை மாடிக்கு...’’ என்று தயங்கித் தயங்கிப் பேசினாள்.

“அட சட்! நிறுத்து...’’ என்று குறுக்கிட்டான் திவாகர்...

ரேவதிக்கு கண்ணீர் பொங்கிக் கொண்டு வந்தது. பிறந்த வீட்டில்தான் ஒரு துர்வாச அப்பாவிடமிருந்து படாதபாடுபட்டாயிற்று. அம்மாமுதல் அண்ணன் அக்காதம்பி என்று ரேவதியோடு பலரையும் சீறிவிழுந்துகொண்டே இருப்பவரிடமிருந்து ஒருவழியாய் மீண்டு புகுந்த வீடு வந்தால் இங்கும் ஒரு விஸ்வாமித்தர புருஷன்! ரேவதிக்கு யாராவது தன்னிடம் மென்மையாய்ப் பேசினால் தேவலை போல இருந்தது.

“ரேவதி?’’ எதிர்முனை உரத்த குரலில் அழைத்தது.

“சொ... சொல்லுங்க...’’

“வசுதாவுக்கு உடம்பு சரியில்லையாம்... இப்போதுதான் இந்த மடையன் ரங்கபிரசாத் சொல்றான். ’ஜுரத்தில் இருப்பவளைத் தனியா விட்டுவிட்டு நீ எதுக்குடா இங்கே வந்தே?’ன்னு திட்டினேன். அவனும் என்னைப் போல ஓர் அஸிஸ்டண்ட் டைரக்டராச்சே..... டைரக்டர் கோபிச்சுப்பார் என்று வந்து விட்டானாம். வசுதா வீட்டில் தனியா இருப்பா. நீ உடனே மாம்பலத்திலிருந்து பஸ்ஸைப் பிடிச்சு மேடவாக்கம் போய்ச் சேரு... வசுதாவிற்கு கஞ்சி ஏதும் வேணும்னா போட்டுக்கொடு. பேச்சுத் துணையா இரு. ’உம்’னு இருக்கக்கூடாது, தெரிஞ்சதா? நான் இங்கே ஷூட்டிங் முடிஞ்சதும், டைரக்டர்கிட்ட சொல்லி ரங்க பிரசாத்தை எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அனுப்பி வைக்கிறேன்... நீயும் ’மச மச’ன்னு நிக்காம உடனே புறப்பட்டுப் போ.’’

நிபந்தனை கணவன்

பிரபாகரன் கணேசன்

உன் இதய கூட்டில்

சிறை வைத்த என்னை

நிபந்தனை ஜாமீனில் விடுதலை செய்

கையப்பம் இடுகிறேன் கணவனாக

காலம் முழுவதும்....

“ச... சரி...’’

“பஸ்கிடைக்கலைன்னா ஆட்டோவில போ... மேடவாக்கம் ஒரு கோடிக்கு ரொம்பத்தான் கேட்பான், பரவாயில்லை. போயிடு.... இதுக்குத்தான் சொல்றது, டூவீலர் ஓட்டக்கத்துக்கணும்னு. சரியான பயந்தாங்கொள்ளி, நீ! பஸ்ல போகவாவது தைரியம் இருக்கில்லையா?’’

“போ.... போயிடுவேன்...’’

“ஆமாம், வாழ்ந்தே! பேச்சே பயத்திலே ’டைப்’ அடிக்குது! சரி, வைக்கிறேன்.’’

உரத்த குரலில் திட்டிவிட்டு ரிஸீவரை வைத்தான் திவாகர்.

ரேவதிக்கு ஆத்திரமும், அவமானமுமாய் வந்தது. கண்களைத் துடைத்துக் கொண்டு, கண்ணாடி முன் நின்று முகத்தைச் சரி செய்தபடி அலமாரியிலிருந்த பர்ஸை எடுத்தாள்.

அடுத்து பத்து நிமிடத்தில் வீட்டைப் பூட்டி கொண்டு வெளியேறினாள்.

வசுதா ஏற்கெனவே கிள்ளி எடுக்கச் சதை இல்லாத உடம்போடு இருப்பவள். இப்போது ஜுரத்தில் கசக்கிப் போட்ட காகிதத் தாளாய் கட்டிலில் கிடந்தாள். ரேவதியைக் கண்டதும் முகம் மலர்ந்தாள்.

ரேவதி ஞாபகமாய் பஸ்டாண்டில் வாங்கிப் போயிருந்த

சாத்துக்குடி பழங்களைப் பிழிந்து ஜூஸ் செய்து கொடுத்தாள். ஜூர வேகத்திலும் வசுதா ஏதேதோ பேசினாள். அவளுக்கு சினிமா சமாசாரங்கள் எல்லாம் அத்துப்படியாயிருந்தன.

## பத்து மாதம்

ஜெயந்தி பிரபராஜன்

நேற்றிலிருந்து காகம் கரைந்து கொண்டிருக்கிறது! - ஆம்
எங்கள் ஜோதிடம் பொய்க்க வில்லை!
விருந்தாளி வந்தார்! - வீட்டிற்கு அல்ல
என் வயிற்றுக்கு!
பொதுவாக விருந்தாளி வந்தால் எப்போது
போவாரென்று எண்ணுவார்கள்.-நாங்கள்
எப்போது என் வயிற்றை விட்டு வெளியே
வருவாரென்று எண்ணிக்கொண்டிருக்கிறோம்.
மூன்றாம் பிறை
வானத்தில் மட்டுமல்ல-என்
வயிற்றிலும் தான்! - எல்லோரும் நிலா காட்டி சோறூட்டுவார்கள்.
இன்னும் ஏழு மாதத்தில்
நான் நிலவிற்கே சோறூட்டப்போகிறேன்! - டேய்!
நீ
அவளா! அவனா? - என்பது
தெரியாமல் உன்னோடு நான்
எப்படி பேசுவது? .......உன்னோடு
பேசிக்கொண்டு.....
அம்மா வீட்டில் நான்!
அம்மா வயிற்றில் நீ!

“பார்த்துக் கொண்டேயிரு ரேவதி! நம் கணவர்கள் இரண்டு பேரும் கூடிய விரைவில் ஒரு பாரதிராஜா போல, ஒரு பாலசந்தர் போல திரை உலகில் ஒரு படத்தை இயக்கி பெயரும் புகழும் அடையத்தான் போகிறார்கள்'' என்றாள்.

ரேவதிக்குச் சிரிப்பாய் வந்தது. திவாகர் டைரக்டரானால் எப்படி இருக்கும் என யோசித்துப் பார்த்ததில், நடிக, நடிகையர் 'ஸ்பாட்'டில் கன்னம் வீங்கக் கதறி அழுது நிற்கும் காட்சிதான் கண் முன் விரிய சிரிப்பு பொங்கியது.

“ஹல்லோ, என்ன மிஸஸ்.ரேவதிதிவாகர் இன்னிக்கு அதிசயமா இப்படி சிரிக்கிறாங்களாம்?'' கேட்டபடியே ரங்கபிரசாத் உள்ளே நுழைந்ததும் ரேவதிக்குத் தூக்கி வாரிப்போட்டது.

இவன் எப்போது வந்தான்?

வீட்டு வாசலில் 'பைக்' வந்து நிற்கும் ஓசையோ அல்லது வாசல் கதவைத் திறக்கும் ஒலியோ... எதுவுமே கேட்காமல் இத்தனை நாசூக்காய், மென்மையாய் அதிராமல் ஒருவர் உள்ளே வர இயலுமா?

ரேவதிக்கு சட்டென திவாகரின் நினைவு பெருமூச்சு வந்ததும் தெரு முனையிலேயே ஸ்கூட்டரின் சத்தமும், ஹார்ன் ஒலியும், காம்பவுண்ட் கதவை ஸ்கூட்டரின் முன் பக்க டயராலேயே எட்டித் தள்ளி உதைத்து உள்ளே நுழைந்து 'சர்'ரென 'பிரேக்' போட்டு நிறுத்தும் நாராச ஒலியும், தொடர்ந்து 'ரேவதி... ஏய் ரேவதி?' என்ற அதட்டலான உரத்த அழைப்பும்...

ரங்கபிரசாத், புன்னகை தவழ, “திவாகர் என்னை அங்கே இருக்க விடவில்லை... 'வீட்டிற்குப் போய்ச்சேர்' என்று கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாய் அனுப்பி விட்டான்! உங்களை வேறு இங்கு அனுப்பி சிரமம் தந்துவிட்டான்...'' என்று அடிக்குரலில் அன்பும், பணிவுமாய்க் கூறினான்.

ரேவதிக்குத் தன் மீது யாரோ மயிலிறகைத் தடவினாற் போல இருந்தது.

மணி ஆறாகி விட்டிருந்தபடியால் ரேவதி வீட்டிற்குப் புறப்பட ஆயத்தமானாள். அப்போது பார்த்து மழை பிடித்துக் கொண்டது.

வசுதா, “என்னங்க, ரேவதியை 'பைக்'கில் கொண்டு வீட்டில் விடுங்க... பஸ்ஸில் போக வேண்டாம். மழை வலுப்பதற்குள் 'பைக்'கில் சீக்கிரமாய்க் கொண்டு சேர்த்துடுங்க...'' என்றாள்.

ரேவதி தயங்கியபடி, “வே... வேண்டாம்'' என்பதற்குள் ரங்க பிரசாத், வாசலுக்குப் போய் 'பைக்'கை ஸ்டார்ட் செய்துவிட, வேறு வழியின்றி ஏறிக் கொண்டாள். ஆனால் பாதி வழியில் 'பைக்' நின்று விட்டது. 'சோ'வென்று மழை அதிகமாப் பெய்தபடி இருந்தது. ரங்கபிரசாத் கைதட்டி ஆட்டோவை அழைத்தான்.

பைக்'கை சாலை ஓரமாய் நிறுத்திப் பூட்டிவிட்டு ஆட்டோவில் ரேவதியுடன் அமர்ந்து கொண்டான்.

வீட்டிற்குள் வந்ததும் விடை பெற இருந்தவனை ரேவதி, “ஒரு நிமிஷம்... டீ சூடாப் போட்டுத்தரேன். மழையில் என்னைக் கொண்டு வந்து விட்டிருக்கிறீர்கள். பாவம்!'' என்றாள்.

ரங்கபிரசாத் “சரி'' என்று சோபாவில் அமர 'பட்' என்று கரெண்ட 'கட்' ஆனது.

“ரேவதி! 'பவர்கட்' ஆகிவிட்டது 'டீ'யெல்லாம் போட்டு சிரமப்பட வேண்டாம்... இப்படி ஹாலில் வந்து உட்காருங்க... பத்து நிமிஷம் பேசி விட்டுப் போகிறேன்...'' என்றான் ரங்கபிரசாத்.

“அதுவும் சரிதான்! இருட்டில் உள்ளே எதையாவது உருட்டி விடுவேன்...''

சிரித்தபடி ஹாலுக்கு வந்த ரேவதி, மெழுகுவர்த்தியை ஏற்றி ஹால் நடுவில் இருந்த மேசை மீது வைத்தாள். அரைகுறை வெளிச்சத்தில், மழையில் நனைந்த உடையில் ரேவதியின் உடலழகு, ரங்கபிரசாத்தை சற்றே தடுமாற வைக்க, "க்யூட்!'' என்று கூவிவிட்டான்.

## *தீயாய்ச்சுடும் தீவிரவாதம்*

**உஷாராணி கண்ணபிரான்**

*தீயமதஇனவெறியைக் கருவறையாய்க் கொண்டு பிறக்கும்*
*தீதான வன்முறையை மொழியாய்ப் பேசிக்களிக்கும்*
*தீஞ்சுவை என்று உயிரை இரையாய் மென்று புசிக்கும்*
*தீயாய் சுடும் கொடிய விடமொத்த தீவிரவாதம்*

*புனிதப்போர் எனும் முகத்திரையை மனமுவந்து அணியும்*
*புதுப்புது குண்டுகளை மனம்பதற விசும்பதிர வெடிக்கும்*
*புவியில் அமைதி எனும் மலர்இரக்கமின்றி கருக்கும்*
*புலம் பெயர்ந்து துர்போதனையை மேதினியில் பரப்பும்*

*எல்லோர்க்கும் கல்வி எல்லோர்க்கும் வேலை*
*நல்லரசு ஆளும் ஊழல் இலஞ்சமற்ற நாடாயின்*
*இல்லாமல் போகும் விரக்தியற்றோர் கூட்டம்*
*கொல்லாமல் அழியும் தீவிரவாதிகளின் குழுமம்*

*மனிதம் எனும் மதம் மட்டும் மனங்களிலே வளர்ப்போம்*
*மழலைகளைத் தொலைநோக்கோடு நாம் அதிலே இணைப்போம்*
*அன்பு நீரூற்று அவனியெங்கும் பெருகிப்பெருகி ஓடட்டும்*
*வன்தீயான தீவிரவாதம் நீறாகிப்போகட்டும்*

"எது, இந்த மெழுகுவர்த்தி ஸ்டாண்ட்தானே? இதை உங்களுடன் ஒரு தடவை கன்னியாகுமரிக்கு ஷூட்டிங் போன இடத்திலிருந்துதான் திவாகர் வாங்கி வந்தார்.'' என்றாள் ரேவதி.

ரங்கபிரசாத் மென்மையான குரலில், "நா... நான் மெழுகுவர்த்தியைச் சொல்லலை'' என்றதும், ரேவதிக்கு சட்டென பயம் தொற்றிக் கொண்டது. திறந்தே கிடந்த வாசல் கதவுகள் ஓரளவு பயத்தைநீக்கப் பிரயத்தனப்படுவது போல காற்றில் முன்னும், பின்னுமாய் அடித்துக் கொண்டன.

"ரே...வ...தி! வசுதாவிற்கும் உங்களுக்கும்தான் எவ்வளவு வித்தியாசம்? கோயில் சிலை மாதிரி உள்ள உங்களை ஒரு படத்தில் கதாநாயகியாப் போட்டு, நான் அந்தப் படத்தை இயக்கும் நாளுக்குக் காத்திருக்கிறேன்...'' என்றான் எழுந்து நின்று கிசுகிசுப்பான குரலில்.

"நா... நான் நடிப்பதா?'' பயத்திலும், குழப்பத்திலும் விழித்தாள் ரேவதி. அந்தச் சூழ்நிலையில் ரங்க பிரசாத்தின் கள்ளத்தனமான பார்வையும், கிசுகசுப்பான 'பேச்சும் அவளை ஏதோ ஒரு விபரீதத்தைக் கோடு காட்டியது. இதிலிருந்து தப்பிக்க வேண்டும். ஓடு. வாசலை நோக்கி ஓடு...

"ரேவதி! உங்க குரல் வேறு இனிமையாக இருக்கிறது! உங்களைப் போல எனக்கு வசுதா வந்து வாய்த்திருக்கக் கூடாதா?'' ரங்க பிரசாத் அருகில் வந்து கிறக்கமான குரலில் காதருகில் இப்படிச் சொன்னதும் ரேவதி சட்டென வாசலை நோக்கிக் காலடி எடுத்து வைக்க ஆயத்தமானாள்.

அப்போதுதான் தூரத்தில் ஸ்கூட்டர் வரும் சத்தம் கேட்டது. ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சிக் கொண்டு, நாராசமாய் 'பிரேக்'போட்டு விட்டு வாசலில் கொண்டு வந்து நிறுத்திய திவாகர், "ரேவதி, ஏய் ரேவதி, வசுதாவைப் பார்த்து, அவளுக்கு உதவி செய்து விட்டு வீட்டிற்கும் வந்து விட்டாயா, என்ன? வாசல் கதவு திறந்தே கிடக்கிறது. ம்?'' என்று உரத்த குரலில் அதட்டலாய்க் கேட்டபடி நுழைந்தான்.

"ஆமாங்க, இப்போதுதான் வந்தேன்... உங்க உயிர் நண்பர்தான் எனக்கு வழித்துணையாய் வீடு வரை வந்தார்!'' ரேவதி உற்சாகமாய் ஓடிப்போய் அவசரமாய் திவாகரிடம் நின்று கொண்டாள்.

"அடே, ரங்கபிரசாத் வந்திருக்கிறானா? இருட்டில் தெரியவில்லை... அட முண்டமே, ரேவதி! ஹாலில் நாலு மெழுகுவர்த்தி ஏற்றி வைத்தால் குறைந்தா போய் விடுவாய்? வாடா ரங்கபிரசாத்! என் பொண்டாட்டி ஒரு படித்த முட்டாள்... பாரேன். 'பளிச்'சென்று ஹாலில் நாலு மெழுகுவர்த்தி ஏற்றி வைக்கணும் என்று கூடத் தெரியவில்லை.... அது போகட்டும். இன்று நீ போனதும் ஷூட்டிங் ஸ்பாட்டில் என்ன நடந்தது தெரியுமா...? அதற்கு முன், ஏய், ரேவதி மக்கு! ரங்கபிரசாத்திற்கு டீ போட்டுத் தந்தாயா, இல்லையா? இல்லையென்றால் இப்போதாவது போடு. எனக்கும் சேர்த்து... ஐயோ, என் பொண்டாட்டி ஓர் அசடுடா ரங்ரங்கபிரசாத்! எல்லாம் நான் விளக்கிச் சொன்னால் தவிர ஒரு இழவும் தெரியாது அவளுக்கு..."

திவாகர் உரத்த குரலில் எரிச்சலுடன் சொல்லிக் கொண்டே போனான்.

ரேவதி ஆனந்தமாய் டீ போடத்தயாரானாள்.

## வயலும்(இல்லை), வாழ்வும்(இல்லை)

மனோ ரெட்

எந்த கிரகத்தில் இருக்கிறோமோ..?
இந்த கிரகம் பிடித்து ஆட்டுகிறது,
வாடிய பயிரைக் கண்ட போது
வாடிய காலமெல்லாம்
வழக்கத்தில் இல்லை..!!

பசி போக்கிய வயலின்
பல்லைப் பிடித்து பார்த்து
பங்கு வைப்பது சரியா...??
அடிமையாகி பிழைப்பதற்கு
அடி வயிற்றில் அடிப்பது முறையா..??

பச்சைப் புல் என்பது
பச்சக் குழந்தைக்கு சமம்..!!
பிஞ்சு புல்லுக்கு
நஞ்சு உரமிட்டு
நட்டு வைப்பதற்கு பதில்
நசுக்கி கொலை செய்வது மேல்...!!

விளை நிலங்கள் இப்போது
வெறும் நிலமல்ல,
ரசாயன விஷம் சிதறிய
மண்புழுக்களின்
மலிவு சுடுகாடுகள்....!!!

முண்டாசு கட்டிய விவசாயியோ
முக்காடு சாத்திக் கொண்டான்,
முப்போகம் விளைந்த வயலும்
மலடியாகி விட்ட கவலையில்
புல்லுக்கு ஏங்கி நிற்கிறது...!!

வயலும் வாழ்வுமாய்
வகுந்து வாழ்ந்தவர்கள்,
வறுமையில் அலைகிறார்கள்,
நாற்று நட்ட வயல் வீதிகளில்
நாதியின்றி திரிகிறார்கள்..!!



சோறு போட்ட நிலத்தையெல்லாம்
கூறு போட்டு விற்கவே
கூலிப் படைகளாக
காத்து இருக்கும் தரகர்கள்
நிலம் தின்னிகள்.....!!

விளை நிலமெல்லாம்
வீடாக மாறியது,
கரும்பு இருந்த காட்டில்
இரும்பு சூழ் பேய் குடி வந்தது,
நகரம் ஆக்க முனைந்தே
நரகம் ஆக்கிவிட்டனர்....!!

கடைசியில் எல்லோரும்
காசுக்காக மட்டுமே
காடுகளை அழித்து,
கஞ்சிக்கு வழியின்றி
கலங்கி நிற்கப் போகிறோம்..!!

# மாற்றுத்திறனாளிகளை நோக்கி ஓர் மன மாற்றம்

கவிதா லோகாந்தன்

“கடவுள் தந்த அழகிய வாழ்வு” தனது அலைபேசி அடிப்பதை அறிந்து எடுத்து பதிலளித்து விட்டு கோவிலுக்குள் சென்றான் இளம்பிறையன். கோவிலுக்குள் சென்று சாமி கும்பிட்டு பிரகாரம் சுற்றி வந்தான். ஓரிடத்தில் கும்பலாய் மக்கள் நிற்க இயற்கை ஆவல் உந்த எட்டிப்பார்த்தான். அங்கு ஓர் சிறுவனை வேப்பிலையாள் பூசாரி அடித்து கொண்டிருந்தார்.

அருகிலிருந்தவரிடம் என்னவென்று கேட்க பேய் ஒட்டுகிறார் என்றார். மனம் சுட உரத்தக் கூரலில் “ நிறுத்துங்க எதுக்கு இந்தப்பாடு படுத்துறீங்க இவனுக்கு பேய் பிடிச்சுருச்சுன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்” என்றான். சுற்றி இருந்தவர்கள் அவனைத் திட்டத் தொடங்கினர்.

அதைப் பொருட்படுத்தாது “அய்யா தயது செஞ்சு நான் சொல்லுறதைக் கேளுங்க இந்தப் பையனைப் பார்த்தாலே மனவளர்ச்சிக் குறைந்தவனு தெரியுது இந்தப் பையனுக்குத் தேவை முறையான சரியானப் பயிற்சி மற்றும் சிறப்புக் கல்விதான் அதவிட்டுட்டு இப்படி வேப்பிலையால அடிச்சா பிரச்சனைதான் அதிகமாகும் என்றான் இளம்பிறையன்.

“உனக்கு என்னத்தம்பி தெரியும் இவன் பங்களிங்க இவனுக்கு செய்வினை வச்சதுனால தான் இவன் புள்ள கோட்டிபயலா போய்ட்டான் தெரியுமால” என்றார் கூட்டத்திலிருந்த பெரியவர் “உங்க எல்லாருக்கும் கடவுள் நம்பிக்கை இருக்கா இல்லையா,” என்று கேட்டு சற்றே இடைவெளி விட்டுத் தொடர்ந்தான் இளம்பிறையன் “கடவுளுக்கு முன்னாடி விதி, பேய், பிசாசு, பில்லிசூனியம், ஏவல், பாவம், சாபம் எல்லம் நம்ம கற்பனைதான்“கடவுளுக்கு அன்பு காட்டத்தான் தெரியும் அன்பு தான் கடவுள்” என்றான் இளம்பிறையன்.

“அப்ப ஏன் எம் புள்ள இப்படியிருக்கு” என்று அழுதுக்கொண்டேக் கேட்டாள் பையனின் தாய்.

“சொந்தத்துல திருமணம் செய்றது தாய் கர்ப்பமாய் இருக்கும் போது சத்தான ஆகாரம் சாப்பிடாம இருக்குறது, தாய்க்கு அம்மை, டைபாய்டு போன்ற நோய்கள் தாக்குறது தாய் கர்ப்பமாய் இருக்கும் போது மருத்துவர் ஆலோசனை இல்லாம சுயமா மருந்து வாங்கி பயன்படுத்துறது போன்ற நம்முடைய தப்பான பழக்க வழக்கங்கள் தான் இந்த குழந்தைங்க பொறக்க காரணம்” என்று விவரித்தான் இளம்பிறையன்.

தம்பி என் பொண்டாட்டிக்கு இந்த மாதிரி பிரச்சனையில்லைN யு ஏதோ இரத்தத்தில பிரச்சனையாம் சுர் னு ஏதோ புரியாததுல சொன்னாங்க என்றார் பையனின் தந்தை.

இரத்தத்தில பல வகைகளும் உட்பிர்p வுகளும் இருக்கு. அப்பாவுக்கு பாசிட்டிவ் இரத்தமும் அம்மாவுக்கு நெகட்டிவ் இரத்தமும் இருந்தா இந்த மாதிரியான குழந்தைகள் பிறக்க வாய்ப்பு இருக்கு அதுக்குத் தான் கல்யாணத்துல ஜாதகப் பொருத்தம் பார்க்குறமாதிரி இரத்தப் பொருத்தமும் பாக்கணும்னு சொல்றாங்க என்றான் இளம்பிறையன்.

இந்த தம்பிக்கு நிறைய விஷயம் தெரியுதுல என்று பாராட்டிய ஒரு வயதான பெண்மணி இளம்பிறையனிடம் “ அப்ப இந்தப் பயலுக்கு பயிற்சி கொடுத்த போதுங்கீறிகளா?” என்று கேட்டார்,

“என்ன பயிற்சி கொடுக்கணும்னு தெளிவா சொல்லுங்க தம்பி” என்றார் பையனின் தாய். அதற்க்குள் “எங்கிருந்தோ வந்த இந்த தம்பி சொல்றத எப்படி நம்புறது” என்றார் பையனின் தாத்தா.

“நீங்களும் தான் செவ்வா, வெள்ளி தவறாம கோயிலுக்கு வந்து உடுக்க போடுறீக என்ன புண்ணியமஇ; புள்ளைக்கு சுகமான பாடக் காணோமே தம்பி யாரயிருந்தா என்ன? நெசம் சொல்லுதுல என்னான்னுதான் கேப்போமே” என்றார் கூட்டத்திலிருந்த ஒருவர்.

“வாங்க எல்லாரும் போய் பிரகாரத்துல உட்காருவோம்தம்பி நீங்க அங்கன வந்து உட்காருந்து விவரமா சொல்லுங்க” என்றார் கூட்டத்திலிருந்த பெரியவர்.

இளம்பிறையன்“கூட்டத்தினரை நோக்கிப் பொதுவா ஊனமுற்றவங்கனு நாம சொல்ற மாற்றுத்திறனாளிகளைப் பல வகை படுத்தலாம்.” “பொதுவா பார்த்தா கண் தெரியாதவங்க, காது கேட்காதவங்க, கை, கால் செயல்படாதவங்க, மனவளர்ச்சிக் குன்றியவங்க, மனநிலை சரியில்லாதவங்க, மூளை முடக்குவாதம் உள்ளவங்கனு சொல்லலாம்.” “இதைத் தவிர கற்றல் குறைபாடு உள்ளவங்க,புற உலக சிந்தனையில்லாமை அதாவது ஆட்டிசம்னு சொல்ற நிலையால பாதிக்கப்படுறவங்களும் இருக்காங்க” என்று தெளிவாக விவரிக்கத் தொடங்கினான்

“என்ன தம்பி என்னென்னமோ சொல்லி பயமுறுத்துறிங்களே எந்தம்பி மனவளர்ச்சி குறைவுனாலும் மனநிலை சரியில்லையினாலும் பைத்தியம்தானே” என்றார் பையனின் தாத்தா.

“இல்லங்க ஐயா நாம தான் இப்படி தப்பா புரிஞ்சுயிருக்கோம். மூளை வளராம அல்லது மூளையிலுள்ள நிறையப் பகுதிகள் பாதிக்கப்படுறதால தான் மனவளர்ச்சி குறைவு ஏற்படுது. இது 18 வயசுக்குள்ளதான் ஏற்படும் ஆனா மனநிலை பாதிப்பு எப்ப வேணாலும் வரலாம் இவங்களுக்கு அறிவுதிறன்ல பாதிப்பு இருக்காது. மேலும் இவங்களுக்கு பயிற்சிகள் எதையும்விட சுத்தி உள்ளவங்க தர அன்பு, ஆதரவு முறையான ஆற்றுப்படுத்துதல் அதாவது கவுன்சிலிங், மருந்து மாத்திரைகள் தான் தேவை.” என்று இளம்பிறையன். சொல்லிக்கொண்டு இருந்த போது “அது என்ன தம்பி 18 வயசு ஏன் அதுக்கு பெறகு மனவளர்ச்சிக் குறைவு வராதா” என்றார்; பையனின் தாத்தா.

“வராது ஐயா நம்ம மூளையோட முழுமையான வளர்ச்சி 18 வயசோட முடியுது.” என்றான் இளம்பிறையன். “மூளை முடக்கு வாதம,; கற்றல் குறைபாடு, ஆஸம்னு என்னமோ சொன்னிங்களே அதெல்லாம் என்ன தம்பி?” என்று கேட்டார் கூட்டத்தலிருந்த பெண் ஒருவர்.

“மூளையில ஒரு சில பகுதிகள் பாதிக்கப்படுறதால கை, கால் செயல் பட முடியாம போகுறது தான் மூளை முடக்கு வாதம்.” என்ற இளம்பிறையனை இடையிட்டு “அப்ப அவங்களுக்கும் மனவளர்ச்சிக் குறைவு இருக்குமோ” என்றார் ஒருவர்

“ஏல்லா மூளை முடக்கு வாத குழந்தைகளுக்கும் மனவளர்ச்சிக் குறைவு வராது மூளையிலுள்ள பகுதிகள் பாதிக்கப்படுறதப் பொருத்து சில குழந்தைகளுக்கு மனவளர்ச்சிக் குறைவு ஏற்படலாம்” “அது வேற இது வேற”

என்றான் இளம்பிறையன்.

## (தமிழ்)தாய்க்கு ஆற்றும் கடமை

செந்தமிழ்தாசன்

சித்திரை பதிவுப்போட்டியில்
மூன்றாவது பரிசு பெற்ற கவிதை

சீர் தளை அடி யென
இலக்கண வரம்பு வைத்தான்
எதுகை மோனை இயைபு யென
நயம்பட வகுத்தான்
யாப்பு ஓசை அமைதி யென
அணி வைத்து உரைத்தான்
அத்தனையும் சொற்களின் தரம் காட்டின.....
அதில்
அறம் பொருள் இன்பம் யென
தான் கொண்ட கருத்துரைத்தான்....

“கொண்டு வா” என்றான் மன்னவன்
”கொன்று” வந்த வீரர்கள்
அரசாளும் மன்னனும் சொல்லில் கெட்டு
மாண்டு போனான் நீதியால்
வார்த்தையின் புாிதல்

வாழ்வின் தாக்கம்,,,
சங்கத்தமிழ் வார்த்தைக்கும் கரு காட்டும்
இன்றோ?

ஒருசொல் ஒருமொழி காட்டிய தமிழ்
ஒருசொல் மாறி பொருள் கெட்டது
வல்மெல்இடை யென
வகுத்து இல்லாது வரம்பு கெட்டது
குறிலுக்கும் நெடிலுக்கும்
வியாதி வந்தது
கால் முளைத்த சொல்
கால் உடைந்த சொல்

இப்படியாய் தமிழ் இருந்தால்
மரூஉவிய சொல்லாய்
வழக்கொழிந்து விடுமா ...

தாய்மொழி காப்பதும்
தமிழ்மொழி படிப்பதும்
ஊனமில்லா எழுத்தும்
மகன் (தமிழ்)தாய்க்கு ஆற்றும்
கடமையன்றோ ...

“தம்பி அப்படீயே மத்ததையும் தெளிவா சொல்லிடங்கத் தம்பி என்றார் பையனின் தந்தை.

**பலிகடா....**

ஒரு கேள்வியும் அறியாத
நான் பலிகடா ஆக்கப்பட்டேன்
தேர்வு என்னும் நேர்த்தி கடனுக்கு......

பிரபாகரன் கணேசன்

“சொல்றேன் இப்ப நான் சொல்லப் போற இரண்டு குறைபாடுகளைப் பத்தி படுச்சவங்களுக்கேத் தெளிவு கிடையாது. “ஒண்ணு கற்றல் குறைபாடுன்னு சொல்லப் படுற கத்துக்கறதுல ஏற்படுற குறை “இவங்களுக்கு பாடம் கத்துக்குறதல தான் குறை இருக்கும்“ இதுல பல வகைகளும் இருக்கு” “இவுங்களுக்கு அறிவுத்திறனுல பாதிப்பு இருக்காது” “ஆனா நிறையப்பேறு இவுங்கள மனவளர்ச்சிக் குறைவு உள்ளவங்கனு தப்பா புரிஞ்சுக்குறாங்க” “அடுத்து ஆட்டீஸம் அதாவத புற உலக சிந்தனையின்மை” குறைபாடு உடையக் குழந்தைங்களுக்கு 3 முக்கிய குறைபாடகள் இருக்கும் பேசுறதல சமுகமா பழகுறதுல “ கற்பனையா விளையாடறதல மற்றும் பழக்க வழக்கங்கள் எல்லாத்துலையும் வித்தியாசம் இருக்கும்” “இவுங்க மத்தவங்க கண்ணுக்கு கண் தொடர்புக்கொண்டு பேச மாட்டாங்க தனிமை இந்தக் குழந்தைங்களுக்கு ரொம்ப பிடிக்கும் பெத்தவங்கள விடப் பொருட்கள் தான் இவங்களுக்கு பிரியம் அதிகமா இருக்கும்” என்று சொல்லிக்கொண்டிருந்தபோது “அப்ப இந்தப் பிள்ளைங்களுக்கும் மனவளர்ச்சிக் குறைவு இருக்குமோ” என்றுக் கேட்டார் ஒருவர்

“ இல்ல ஐயா எல்லா ஆட்டிஸக்குழந்தைங்களுக்கும் அறிவுத்திறனுல பாதிப்பு இருக்காது” “ஒரு சிலக்குழந்தைங்களுக்கு பாதிப்பு இருக்கலாம் ஆனா ஒரு சிலக்குழந்தைங்களுக்கு அதிக அளவு அறிவுத்திறன் இருக்கும் ஏதாவது ஒரு துறை, ஓவியம,; இசை, கணிதம்னு ஏதாவது ஒரு துறையில அதிகத் திறனோட இருப்பாங்க” என்று விவரித்தான் இளம்பிறையன்.

“தம்பி எம்பிள்ளைக்கு என்னப் பயிற்சித் தரணும்னு சொல்லவேயில்லையே” என்றார் பையனின் தாய்.

“பொதுவா இந்தமாதிரி குழந்தைங்களோட தேவையை பொறுத்து பேச்சு பயிற்சி, முடநீக்கியல் பயிற்சி, தொழில் முறைப் பயிற்சி, உணர்ச்சிகளை தூண்டி விடுறப் பயிற்சினு பல பயிற்சிகள் தருவாங்க இதோட சிறப்புக் கல்வி அல்லது ஒருங்கிணைந்தக் கல்வித் தா்றப்ப இந்தக் குழந்தைகளை நிச்சியமா முன்னேற்ற முடியும்” என்று சொல்லிக்கொண்டிருந்தபோது, “இந்தமாதிரி பயிற்சி குடுத்தா குணமாகும்னு என்னத்தம்பி உத்தரவாதம்” என்றுக் கேட்டார் பையனின் தாத்தா

“நான் தான் உதாரணம் நான் ஒரு காதுகேட்காதவன், என்;னப்பெத்தவங்களும் எனக்காக இப்படித்தான் கோயில் கோயிலா அலைஞ்சாங்க சீக்கிரம் பேச்சு வரும்னு சூடு கூடப் போட்டாங்க ஒரு சமுக சேவகர் தான் என் பெற்றோர் கிட்டப்பேசி எனக்குத் தேவையான பயிற்சிகள் கிடைக்க உதவிச் செய்தார் இப்ப நான் ஒரு சிறப்பு ஆசிரியர் இந்த சமுகம் என்னை வியந்து பார்க்கிற அளவுக்கு உயர்ந்து இருக்கேன்” என்று பெருமையோடு விவரித்தான்

இளம்பிறையன். “நம்பிக்கையோடு பயிற்சி குடத்தா மாற்றம் நிச்சயம் என்று நம்பிக்கையுட்டீனான்”

“சிறப்புக்குழந்தைங்களுக்கு உதவ அரசாங்கமும் பலத்திட்டங்கள் செயல்படுத்திட்டுவருது” “கல்வி வேலைவாய்ப்பு திருமணம்னு பல உதவிகள் செய்யுது” இதத்தவிர “மனவளர்ச்சிக் குறைவு மூளை முடக்கு வாதம் மற்றும் கடுமையான ஊனமுள்ள குழந்தைங்களோட பெற்றோர்களுக்கு மாத பாரமரிப்பு உதவித்தொகையும் தர்றாங்க” ஆனா அதுக்கு தேசிய ஊனமுற்றோர் அடையாள அட்டைப் பெறவேண்டும்” என்று தெளிவுபடுத்தினான் இளம்பிறையன்

“அதுக்கு என்னத்தம்பி பண்ணணும்” என்றுக் கேட்டார் பையனின் தந்தை. “எல்லா மாவட்டத்திலும் .மாவட்ட மறுவாழ்வு மையம் இருக்கு” அங்க அணுகி அடையாள அட்டைப் பெற முடியும் அதுக்கு என்ன பண்ணணும்னு அவுங்களே சொல்வாங்க” என்று புரிய வைத்தான் இளம்பிறையன்.

“ஐயா கடைசியா உங்ககிட்ட மட்டுமல்ல இந்த சமூகத்துக்கும் என்னோட பணிவான வேண்டுகோள் என்னன்னா மாற்றுத்திறனுடையக் குழந்தைகளும் பிற குழந்தைங்க மாதிரி தான்,” “பெற்றோர் அன்பு, சமூக ஆதரவு, நம்பிக்கை தந்தாலே அவுங்களும் வாழ்கையில உயர முடியும்.” “இன்று முதல் ஏற்போம் மாற்றுத்திறனாளிகளை நம்மில் ஒருவராய் சக மனிதராய்”.;

## அவள் வேசி அன்று..

திவ்யா ஸ்ரீநிவாசன்

கனவுகள் வானம்
தாண்டி உலா
செல்ல,
அம்மி மிதித்து
அருந்ததி பார்த்து
மாலை சூடி,
தன்னவனின்
கரங்களை பிடித்தாள்..

. . .

கள்ள சாராயம்
குத்தகைக்கு
எடுத்தது
தன்னவனின்
உயிரை..
கண்ணீர் துளிகள்
குத்தகைக்கு
எடுத்தது அவளின்
விழிகளை ..

. . .

அவளின் கனவுகள்
சாம்பல் ஆனது,
தன்னவன் எரிந்த
மயானத்தில்..

. . .

தன்னவன்
விட்டுச் சென்ற
கடன்களால்
அவள் வேசியானாள்..

. . .

தன்னவன்
விட்டுச் சென்ற
பிள்ளைகளால்
அவள் வேசியானாள்..

. . .

தன்னவன்
விட்டுச் சென்ற
சமூகத்தால்
அவள் வேசியானாள்..

. . .

தன்னவன்
தன்னை,
விற்றுச் சென்றதால்
அவள் வேசியானாள்..

. . .

இவ்வுளகம் அவளை
வேசி என்றது..
ஆனால்,
அவளும்
சீதை தான்
அவளது உலகில்
இராமன் இல்லை
எனினும்..

. . .

அவளும்
கண்ணகி தான்
அவள் மதுரையை
எரிக்கவில்லை
எனினும்..

. . .

அவளும்
பாஞ்சாலி தான்
அவளை காக்க
விசுவகர்மா
அங்கே இல்லை
எனினும்...!

. . .

# காதலால் காதல் செய்கிறேன் உயிரே…!!!

கே இனியவன்

நீ
நிலாவாக இரு …!!!
நிழலாக இரு …!!!
எதுவாக இருந்தாலும் …
காதல் செய்கிறேன் …!!!
நிலவாக இருந்தால்
நினைவுகளால் காதலிப்பேன் …!!!
நிழலாக இருந்தால்
கனவுகளால் காதலிப்பேன்…!!!

உன்
தீ கொண்ட பார்வையால்
கருகி கொண்டிருக்கிறேன்
உன் மழலை கொண்ட பேச்சால்
துடித்து கொண்டிருக்கிறேன்
தினமும் எரிகிறேன் - உன்
கண் பட்ட காதல் தீயால் …!!!
இந்த புண்பட்ட இதயத்துக்கு
நீ சிரஞ்சீவி மருந்து …!!!

உன்னை
சிற்பமாக செதுக்கினேன்
நீ சிற்பமாக இருகிறாய்
நான் தான் சிதைக்கபட்டு
விட்டேன் …!!!
எண்ண உளியால் செதுக்கிற
உன் உருவம் அழகானது
உளிதான் அழுகிறது …!!!

உலகில்
பெரிய களஞ்சிய சாலை
என் இதயம் தான் -உன்
இத்தனை நினைவுகளை
சேகரித்து வைத்து அப்பப்போ
தந்து கொண்டிருக்கிறது …!!!
களஞ்சிய இருப்பு குறையாமல்
உன் நினைவுகளை தா உயிரே …!!!

என் கவிதையை எடுத்து
காதல் செய்பவர்கள்
புரிந்த கொண்ட அன்பை
கூட - நீ ஏன் அன்பே
புரிந்து கொள்ளவில்லை …?
ஒன்றில் என்னை புரிந்துகொள்
இல்லையேல் கவிதையை
புரிந்து கொள் …!!!

என்னை எல்லோருக்கும்
பிடிக்கும் -ஆனால் எனக்கு
உன்னை மட்டுமே பிடிக்கும் …!!!
உன்னை எல்லோருக்கும்
பிடிக்கும் -ஆனால் உனக்கு
என்னை மட்டுமே பிடிக்கும் …!!!
காதல் ஆயிரம் சங்குகளில்
ஒரு சங்கு வலம்புரிபோல் …!!!

நீ வந்து விட்டு
சென்றுவிடுவாய்
உனக்கு எங்கு தெரியும்
நான் படும் அவஸ்தை
உன் நினைவுகள் தான்
உள்மூச்சு - உன் கனவுகள்
தான் என் வெளி மூச்சு …!!!

நீ தரும் நினைவுகள்
சிலவேளை காயமாய்
இருகிறது - சிலவேளை
மருந்தாக இருக்கிறது …!!!
அதனால் தான் இத்தனை
வலியை நீ தந்தாலும்
சிரித்துவிட்டு இருக்கிறேன் …!!!

வாழ்க்கையில் நான்
பெற்றவற்றை விட
இழந்தவை அதிகம்
உன் கன்ன குழி சிரிப்பில்
என்னை இழந்தேன்
இப்போ உன்னை இழந்து
விட கூடாது என்பதற்காக
எல்லாவற்றையும் இழக்கிறேன்

நீ என்ன மின்னலா …?
வரும் போது இத்தனை
பிரகாசமாக இருக்கிறாய் …?

நீ என்ன மழைக்கு
பிறந்தவளா …? இத்தனை
கண்ணீரை தருகிறாய் ….?
நீ மின்னலாக இரு
மழையாக இரு -நான்
உனக்கு மேகமாக இருப்பேன் …!!!

காதலில்
சேர்ந்திருக்கும் போது
வரும் இன்பத்தை தான் அன்பே
எல்லோரும் விரும்புவர் -நீ
பிரிந்திருக்க விரும்புகிறாய் …?
பிரிந்திருக்கும் போது நினைவுகள்
அதிகம் என்பதற்காகவா …?

இதயம்
ஒரு கையளவு
என்று சொன்னார்கள்
உன்
இதயத்தில் இணைந்தேன்
இன்று வரை அதன்
எல்லையை தேடுகிறேன்
இப்படிதான் வாழ்க்கையை
தொலைத்தவர்கள் அதிகம்
நான் மட்டும்
விதிவிலக்கில்லை …!!!

சந்தோசப்படுகிறேன் உயிரே
இதுவரை காதலை சுமந்தேன்
இப்போ நீ தந்து விட்டு சென்ற
வலிகளை சுமந்து கொண்டு
இருக்கிறேன் …!!!
உன் வலிகளை சுமக்கும்
கூலியாளாய் என்னை
காதலித்தத்தற்கு நன்றி …!!!

உன் இதயம் என்ன காதல்
சிறைச்சாலையா …?
என்னை கைது செய்து
விலங்கிட்டுருக்கிறாய் …
ஒன்றில் ஆயுள் கைதியாக்கு …
தூக்கு தண்டனை கைதியாக்கு …
தீர்ப்பை தள்ளிப்போடுவதுபோல்
மௌனத்தில் இருக்காதே …!!!

நான்
காதல் பிச்சைகாரன்
என்னிடம் இருந்த
எல்லாவற்றையும் இழந்து
உன்னை பெற்றேன் ..!!!
இப்போ உன்னையும் இழந்து
நிற்கிறேன் ..!!!
கிழிந்த சட்டைபோல் சில
நினைவுகள்
ஒட்டி நிற்கின்றன ..!!!

இறைவா ?
இரண்டு கண்ணை கொடுத்து ..
என்னை கலங்க வைத்தவனே..!!!
எனக்கு இரண்டு இதயம் கொடு ..
அவள் நினைவுகளை சுமக்க ..
ஒரு இதயம் போதவில்லை ..!!!

காதலில் பொறுமையை ..
கடைப்பிடித்தது தப்பானது..
நீ கிடைப்பாய் என்று இருந்து..
என் வாழ்க்கையே ..
கானல் நீராகி விட்டது ..
என் கல்லறைப்பூவில் ..
உன் நினைவுகள் தான் ..
ஆத்ம வரிகள் ..!!!

சித்திரை
பதிவுப்போட்டியில்
மூன்றாவது பரிசு
பெற்ற கவிதை

# அம்மா

பாண்டிமா

அம்மா அம்மா
உயிரிலிருந்து கதறும் குரலாய்
உச்சரிக்கும் ஒரு சொல்
உதடு தாண்டாமல் ஊமையாகி
உதிர்கிறதே

யாருமற்ற தனிமை இரவில்
நானும் நீயும்
சென்ற இடமெல்லாம்
உன் கால் தடம் கிடைக்காதா
புளுதி களைத்து தேடுகிறேன்

நீ ஆயுசுக்கும் உடனிருந்தும்
அருமை உணரல வந்திடுமா
ஒரு வாய் சோறு மட்டும் தந்திடு
நான் வேறேதும் கேட்கலயே
அம்மா பசி தாங்க முடியலயே

நீ அழைத்த குரலுக்கு
அன்று நான் செவி மடுக்கல
இன்று உன் அழைப்பிற்கு
நான் காத்திருக்கேன்
தூங்காம விழித்திருக்கேன்

போனவுங்களை
நினைத்தல் ஆகாதென்று
உறவெல்லாம் ஏசுதம்மா
சொல்லி ஆற்றவும் முடியாம
யாரும் அறியாம அழுவுறேன்

எங்கு சென்றாலும்
துணையாக உடன் வருவாயே
இப்போ போக வழி தெரியாம
கூட வர துணை தேடியே
கெஞ்சி நிற்கிறேனே

கைப்பிடித்துப் போன
இடங்களெல்லாம் மனசு
குழந்தையாகி தேடி அலையுது
வீசிப் போகும் காற்றில்
உன் வாசம் நாசி தேடுது

அம்மா ஒரு முறை
நீ இங்கு வந்திடு உன்னை
ஆசைதீர கட்டி நுகர்ந்திடுவேன்
மடியில் சற்று நேரம்
கண்ணயர்ந்து உறங்குகிறேன்

காத்திருப்பீர்கள் என நம்பி
கடமையே கண்ணென்று
மக்காய் உறவின் சிந்தையில்
அம்மா பாசத்தை தள்ளி வச்சேன்
எமனின் சூதை உணரலையே

துடி துடிக்குதே உயிர்
கொதி கொதிக்குதே உதிரம்
பதை பதைக்குதே மனசு
பட படக்குதே இமைகள்
மருகி மருகிப் புலம்புறேனே

இதயத்திற்கு துடிப்பை
தந்தவள் நீதானே அம்மா
இப்போ இதயமாகவே நீ
என் உயிர் வாழும் கூடு நீ
உன் நினைவின்றி உயிரிறாது

நினைவே நீயாக உருகினாலும்
அலையாத்தான் வந்து போகிற
உயிர்த் துடிப்பாய் ஏங்கினாலும்
கனவாத்தான் கலஞ்சி போகிற
வழியுதே கண்ணீர் சடுதி வந்திடு

# இனியிங்கு இடமில்லை

பூங்கோதை

மாலை நேரம் மயங்கும் நேரம்
மாலைக் காற்று வருடிச் செல்ல
மனதின் துயரில் கரைந்து நின்றேன்
கண்ணில் நீர் கோர்த்து நிற்க
கடவுளின் மீது கோபம் கொண்டேன்

கண்ணா என்றழைத்தபோது
கரை காணா சேலை கொடுத்து
மானம் காத்தாயாமே.. இன்று
கத்திக் கத்திக் குரல்வளை தேய்ந்ததே...
காணவில்லை உன் வரவை..

பாவங்களும் துன்பங்களும்
பரமனே உன்னோடு
சிலுவையில் அறையபட்டதாமே..
தினம் தினம் வேதனைச் சிலுவையில்
அறையப் படுகிறேன் இன்று..

ஒரு கன்னத்தில் அடித்தால்
மறு கன்னம் காட்டு என்றாயே
கிறீஸ்தவள் என்பதற்காகவே
கன்னங்கள் இரண்டும் பழுத்துப் போனதே
காட்டுவதற்குக் கன்னம் இனியேது..

அநீதி கண்டு விட்டால்
நெற்றிக் கண் திறப்பாயாமே..
அநீதியே வாழ்க்கையாய்ப் போனது
அந்தரித்து உன்னை அழைத்த போதும் -உன்
நெற்றிக் கண் என்னவானது?

சுருக்கமாய் வாழ்க்கை இது தானென்று
சுடலைப் பொடி பூசிக் காட்டினாயா?
வாழ்க்கையே சுடுகாடாய் கிடக்கிறதே
சினச் சின்ன சந்தோசங்கள் கூட
சாம்பல் பொடியாய்க் கிடக்கிறதே




புத்த பிரானும் காந்தி மகானும்
சத்தியம் சொன்ன நாட்டில்
சுயநலம் கொண்டே சுற்றுகின்ற
பித்துப் பிடித்த மனிதர்களின்
பிதற்றல்களுக்கே கைதட்டல்....

அரசியல் அசிங்கங்களும்
மதவெறிக் கும்பல்களுக்கும் இடையில்
அலறித்துடிக்குதையா சத்தியங்கள்
தொலந்து போன நீதிகளை
தேடியலைகிறோம் கிடைக்கவில்லை

அல்லாஹூ அக்பர் என்றே
தொழுதெழுந்த பள்ளியெல்லாம்
அடாவடிக்கு இரையாச்சே
அரசியல் நாடகங்களால்
படாத துன்பம் பட்டனரே...

தேடித் தேடி வெறுத்துப் போனேன்
துன்பத்தைத் தடுக்கா தெய்வம் எதற்கு
துன்பம் கொடுக்கும் தேவன் எதற்கு..
அன்பைத் தடுக்கும் ஆண்டவன் எதற்கு
உறவைப் பிரிக்கும் இறைவன் எதற்கு

வேண்டாமென்றே வெறுக்கின்றேன்
வேதனை முட்டித் தவிக்கின்றேம்
வெறுமைத்தீவின் மடியினிலே
சிந்தையில் மூழ்கி நனைகையிலே- கதவு
தட்டும் ஒலி கேட்டெழுந்தேன்...

யாரது என்ற கேள்விக்கு பதில்
நான் தான் கடவுள் என்றொலி கேட்டேன்
நகைத்துக் கொண்டே சொல்லிவிட்டேன்
தாமதமாய் வந்து விட்டீர்- இனி
தங்குதற்கு இங்கே இடமில்லை...

# கண்ணீர் தேசம்

துருவன்

உடம்பில் பட்ட காயமெல்லாம் ஒற்றை மழைத்துளியில் ஆரக்கண்டேன்
தொலைவில் வசந்தம் தொடரக் கண்டேன்;புதிதாய் விடியல்
தோன்றக் கண்டேன்;சட்டென கனவில் அனைத்தும் கனவாய் கண்டேன்

கவிதை எழுத காகிதமும்,உறக்கம் திருடும் சொப்பனமும் எங்கு
சென்றதென்று தெரியவில்லை;எரிந்து முடிந்த சாம்பலிலே,பயம் உயிரைக்
குடிக்கும் வேளையிலே இது எதையும் தேட நேரமில்லை...

விதைகளுக்கு பதில் வெடிகுண்டுகளை விதைத்தவன் எவனோ?
கொத்துக்கொத்தாய் பிணங்கள் வீதியிலே!
ஒரு சொட்டுநீர் ஒன்றும் எரியும் தீயை அணைக்கப்போவதில்லை
தெரிந்தும் கண்ணீர் விழிகளிலே!

சுதந்திர காற்றை சுவாசிக்க நினைத்ததை தவிர தவறேதும்
செய்யவில்லை;தண்டனைதான் ஏனோ?-கல்லறை தேசத்தில்
சொந்தமண்ணிற்கு உரமாகிப் போனோம்!

அம்மா என்று கதறிய குழந்தைகளுக்கு ஆதரவாய் எந்த
தாயுமில்லை;நம்பவைத்து முதுகில் குத்தியவனெல்லாம்
விலைமகளின் பிள்ளை.!

சின்ன குண்டில் கூட்டைக் கலைத்தான் அவன்-ஒற்றைக்
கொலைக்கு தூக்கு இங்கே;லட்சம் கொலைக்கு தண்டனை எங்கே?
இறைவனின் மேல் நம்பிக்கையில்லை-நிர்வாணமாய் கிடத்தி என்
தேசமாதாக்களை மாரில் மிதித்தவனின் கால்கள் இன்னும் பூமியிலே..

தாய்நாட்டிலேயே அரசன்கள் யாவும் அடிமைகளாகிப்போனோம்
பிறநாட்டில் ஒளிந்து அகதிகளாகிப்போனோம்.!
ஏதேதோ சாகசம் செய்ய எத்தனித்த காலம்போய்,ஒவ்வொருநாளும்
சூரிய உதயம் பார்ப்பதே சாதனை ஆனதே.!
தண்ணீர் சூழ்ந்த தேசம் இன்று கண்ணீர் தேசமாகிப் போனதே;
ஈழத்தமிழன் வாழ்க்கை இங்கே ஈனமாகிப் போனதே!!
-ஈழத்தமிழனின் மொழியிலிருந்து/வலிகளிருந்து....

# பெண்ணொருத்தி புலம்புகிறாள் 5

கனீஸ்வரி

பனஓல மரத்தடியில்
பாதகத்தி காத்திருந்தேன்
பத்துமணி நேரம்வரை
படுத்திருந்தும் முழிச்சிருந்தேன்.

கற்பனையில் கோட்டையொன்னு
கட்டி வச்சி காத்திருந்தேன்.
காவலுக்கு உன்நெனப்ப
கொட்டிவச்சி பாத்திருந்தேன்.

முந்தான ஓரத்துல
முடிச்சு ஒன்னு போட்டு வச்சேன்
உன் முகத்த பாத்த பின்ன
முடிச்சவிழ்க்க ஆசப்பட்டேன்.

பொட்டல் காட்டோரம்
பொழுது சாஞ்ச வேளையிலும்
வெட்டி போட்ட விறகாட்டம்
விழுந்தே நான் கிடக்கிறேனே.

கருவேளம் முள் குத்தி
கண்ணீரு வந்ததில்லை
உஞ்சொல்லு கேளாம
கண்ணீரு ஓயலியே.

குளம் வத்தி காஞ்சாலும்
இடம் மாறிப் போகலியே.
நட்டு வச்ச உன்நெனப்ப
பிச்சு வீச முடியலையே.

உன் பேச்சு சத்தம் ஓஞ்சிருச்சி
என் மூச்சு இன்னும் ஓயலியே
உன் நெனப்போட நானிருந்தும்
என் நேசம் உனக்கு புரியலையே.



அடிமனசுல உங்க நினப்பால
அக்கினி நட்சத்திரம் எரியுதுங்க...
ஆசமொழி ஒன்னு தந்து
அணைச்சிக்க நீங்க வேணுமுங்க...

உங்க தோலுல சாஞ்சிக்கிட்டு
உறங்க தோணுது வாங்க...
உங்க மனசுல நானிருந்தா
உடனே வந்து பேசுங்க...

உடம்பு மட்டுமே இங்க கிடக்கிது
மனசு என்னமோ அங்க இருக்குது...
உலகம் எனக்கு நீங்க தானே
உசுரும் கூட எனக்கு தூசுதானே...

சேத்து வச்சிருக்கும் ஆசையெல்லாம்
செலவு பண்ணுவோம் வந்திடுங்க
அடை காக்குற கோழிய போல்
அன்பு மட்டுமே தந்திடுங்க

உங்கள சுமக்கிற என் மனச
உடனே புரிஞ்சுட வேணுமிங்க
உள்ளம் உருகுது உங்களுக்காக
உசுரு தவிக்கிது கேளுங்க

காத்து காத்து நானிருக்கேன்'
கவிதை மொழி பேசிடுங்க....
காலம் நகர்த்தியே நீங்கதான்
காயம் கொடுப்பது ஏனுங்க.......?

மல்லிகை சரமும் வாங்கிவாங்க
மனசுல என்னை சுமந்து வாங்க....
ஓசையில்லாத உறவு போல
ஆசையோட இங்க அலையுறேங்க......

# சிநேகிதியுடன் தனிமையில் சில நிமிடங்கள்

பூங்கோதை

**குறைபாட்டை மறைத்த கணவன்.. குமுறும் உறவு...**

*அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை*

*பண்பும் பயனும் அது திருவள்ளுவர்*

*(இல்வாழ்க்கையின் அன்பும் அறமும் உடையதாக விளங்குமானால், அந்த வாழக்கையின் பண்பும் பயனும் அதுவே ஆகும்.*

சிநேகிதியுடன்.....

வணக்கம் சிநேகிதி,

தங்கள் பதில்களை நான் தொடர்ச்சியாகப் படித்து வருகிறேன். என் உறவுக்கார பெண் ஒருவருக்கு ஒரு பிரச்சனை. அந்தப்பிரச்சனையை உங்களிடம் சொன்னால் ஏதேனும் ஆலோசனை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இதை எழுதுகிறேன்.



அவளுக்கு வயது 38 த் தாண்டுகிறது. இவள் முன்னர் திருமணமாகி கணவனுடன் ஏற்பட்ட சில பிரச்சனைகளால் விவாகரத்துப் பெற்றுக் கொண்டவள். இதனால் இவளது பெற்றோரும் அண்ணன்களும் மிகவும் கோபத்திலும் வெறுப்பிலும் இருந்தார்கள். பின்னர் எப்படியோ அவளுக்கு மீண்டும் சில ஊர்கள் தாண்டி ஒரு வரனைப் பார்த்து மறுமணம் செய்து வைத்தார்கள். அதன் பின் எட்டு வருடமாகியும் அவளுக்கு குழந்தைப் பாக்கியம் கிட்டவில்லை என்பது எங்களுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. அவளிடம் முன்னர் இருந்த துணிச்சலும் துடுக்குத்தனமும் (கொஞ்சம் வாயாடியும் கூட) இப்பொழுது எல்லாமே காணாமல் போயிருந்தது.

அண்மையில் ஒருநாள் நான் அவளது வீட்டுக்கு சென்றிருந்தேன். அவள் என்னோடு சந்தோசமாகத்தான் சிரித்துப் பேசினாள். அவளது கணவனும் மிகவும் நன்றாக உபசரித்தார். கிச்சனில் கூடவே இருந்து எங்களோடு சேர்ந்து சமைத்து மிகவும் சந்தோசமாக இருந்தார். அவருக்கு வேலை இல்லாமல் திண்டாடிக் கொண்டிருந்தார். மாலை நேரம் நான் அவளோடு தனியாகப் பேசும் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்பொழுது மெல்ல அவர்கள் குழந்தை கிடைப்பதற்காக ஏதாவது மருத்துவரைப் பார்த்தார்களா என்று கேட்டேன். அப்பொழுது தான் அவள் அழுதபடியே அந்த அதிர்ச்சியான தகவலைச் சொன்னாள்.

அவளது கணவன் தாம்பத்தியத்துக்கு ஏற்றவரல்ல. ஆனால் இந்த விசயத்தை யாருக்கும் சொல்லக் கூடாது என்று மிரட்டியிருக்கிறார். பக்கத்து வீட்டுப் பெண்களோடு கூட பேச விடுவதில்லை. அது மட்டுமன்றி அவள் தான் சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பாற்றவேண்டியிருக்கிறது. அவரை எந்த வேலையில் சேர்த்து விட்டாலும் விரைவிலேயே வேலையை விட்டு விட்டு வந்து விடுகிறாராம். அவரது இந்தப் பொறுப்பற்ற தன்மையால், அந்த பெண்ணுக்கு அவளது பிறந்த வீட்டில் போட்டுவிட்ட நகைகள் எல்லாமே விற்று குடும்பச் செலவு செய்தாயிற்று. இப்பொழுது, கடை ஒன்று சொந்தமாக போட்டு தந்தால் செய்வதாக சொல்லிக் கொண்டு வேலைக்கே போகாமல் நிற்கிறார்.

என் உறவுக்காரப் பெண் இதைச் சொன்ன போது எனக்குக் கடும் கோபமாக இருந்தது. இப்படி ஒரு வாழ்க்கை நீ வாழ வேண்டுமா என்று கோபமாகக் கேட்டேன். அவளோ ஏதோ இது என் விதியா போச்சு, எனக்கு ஒரு குழந்தை மட்டும் தத்து எடுத்துக் கொடுங்கள், நான் வாழ்ந்துவிட்டுப் போகிறேன் என்கிறாள். கேட்டதிலிருந்து வயற்றைப் பற்றி எரிகிறது. 8 வருடமா இந்த மனிதன் அவளைக் கட்டுப் படுத்தி, துன்பப்படுத்திக் கொண்டு, எப்படி எல்லோரிடமும் நல்ல மனிதன் போல நடித்திருக்கிறான். என் உறவுக்காரப் பெண் எப்படியான ஒரு கொடுமையான வாழ்க்கை வாழ்கிறாள்.... முன்னர் அவர் தொழில் இல்லாமல் கஸ்ரப் படுகிறார் என்று நானும் என் கணவரும் அவர்களுக்கு சொந்தமாக ஒரு கடை அமைத்துக் கொடுக்கலாம் என நினைத்திருந்தோம். ஆனால், இதைக் கேட்ட பின் அவர் மீது இருந்த நம்பிக்கை போச்சு. என்ன செய்வது என்று மனம் நிம்மதி இழந்து தவிக்கிறது. இப்பொழுது இதற்கு ஒரு வழி சொல்லுங்கள் சிநேகிதி.. இந்த வாழ்க்கை அவள் வாழ வேண்டுமா? அல்லது அவள் என்ன செய்ய வேண்டும்? உங்கள் ஆலோசனையை எதிர்பார்கிறேன்.

நன்றி.

தனிமையில் சில நிமிடங்கள்.......

வணக்கம் அன்புத் தோழி, உங்கள் உறவுக்காரப் பெண்ணின் வாழ்க்கைக் கதையைப் படித்து மிகவும் மனம் வருந்தினேன். அதிலும் எட்டு வருடங்களுக்கு முன்னர் ஒரு கலகலப்பான, அடம்பிடிக்கின்ற, ராங்கித்தனமான ஒரு பெண் திடீரென அடங்கி ஒடுங்கிப் போய் இருக்கும் கோலம் உங்களை எந்தளவுக்கு பாதித்திருக்கும் என்பதைப் புரிந்து கொண்டேன்.

# காதல் அரக்கனே!!

**வைஷ்ணவ தேவி**

காதலன் கரம்பிடித்து
கனவு கண்டது
காட்சியில் ஏறாமல்
கண்ணீர் மட்டுமே
கரித்து நிற்க
கானல்நீர் எனத்தெரியாமல்
கன்னியவள் மதியிழந்து
காணாமல் போவேனோ....

தன்னுயிர் மீதிலே
தாரம் நீயென
தாராளமாய் சூளுரைத்து
தனிமையில் நங்கையை
தவிக்கவிட்டு சென்றாயே
தகவுடைய மங்கையெனைநீ
தவிர்க்க - என்மனதிடம்
தகர்ந்து போவேனோ...

நல்லவன் தானெனும்
நம்பிக்கை கொன்றாய்.
நெறியெனும் போர்வைக்குள்,
நரிமுகத்தில் நின்றாய்.
நங்கைதானே என்றெண்ணி,
நிந்தனைகள் புரிந்தாய்.

நிர்க்கதியில் நிம்மதியின்றி
நிற்பாள் என்பது உன்
நினைப்பு.

நின்று கேளடா!!!,
நிமிர்ந்த நன்னடை கொள்வேன்,
நீசனே உன் நிறம் உரிப்பேன்,
நித்திலமும் நோக்கநின் நச்செடுப்பேன்.
நான் நங்கையல்ல,
நெருப்பு.

அந்தப் பெண் வேறு பெண்களோடு பேச முடியாத சூழ்நிலை அவளுக்கு எத்தனை தாக்கம் என்பதும் வெளிப்படையாகவே புரிகிறது. ஒரு பெண்ணின் மனநிலையில் இருந்து பார்த்த போது எட்டு வருடமாகத் தனக்கு ஆண்மை இல்லை என்ற விடயத்தை உலகுக்கு மறைத்து, அந்தப் பெண்ணுக்கு ஒரு சந்தோசமான வாழ்க்கையைக் கொடுக்காமல் அவளை இப்படி நடத்துவதை அறிந்த போது எனக்கும் உங்களை போலவே மனம் கொதித்தது என்ன ஆண் இவன் இவனோடு அந்த பெண் எதற்காக வாழ வேண்டும்? தூக்கி எறிந்து விட்டுப் போயிருக்கக் கூடாதா என்று தான் தோன்றியது. நீங்கள் கூறியதிலிருந்து, ஏற்கெனவே அவள் விவாகரத்து ஆகியவள் என்பதால், இந்த வாழ்க்கையையும் தூக்கி எறிந்துவிட்டு போனால் இந்த சமூகம் அவளை மதிக்காது என்பதுடன், குறிப்பாக அவளது பெற்றோரும் அண்ணன்களும் ஏற்க மாட்டார்கள் என்பதுமே அவள் இந்த வாழ்க்கைத் தூக்கி எறியாமல் இன்னமும் சகித்துக் கொண்டு வாழ்வதற்குக் காரணமாக இருக்கிறது என நினைக்கிறேன். இந்தப் பதிவை எழுதுவதற்கு வசதியாக உங்கள் உறவுக்கார பெண்ணுக்கு வித்தியா என்றும் அவளது கணவனுக்கு ஆனந்த் என்ற பெயரையும் கற்பனைப் பெயராக இடுகிறேன்.

உப்பும் இல்லை ....
புளியும் இல்லை...
காரமும் இல்லை...
சுவையும் இல்லை...
அள்ளி ஊட்டுகையில்
அமிர்தமாய் மாறிபோச்சி
என்னவள் வைத்த ரசம்.,.,.,

**ஜான்பாபு**

தோழி, நான் சிநேகிதியாக இருந்து சிந்திக்கும் போது, ஒரு பெண்ணுக்காக மட்டுமன்றி ஒரு ஆணுடைய மனநிலையிலும் இருந்து சிந்திக்க வேண்டியிருக்கிறது. அந்த வகையில், அந்த ஆனந்தின் மனநிலையில் இருந்து சிந்தித்துப் பார்க்கலாமா தோழி? மேலே நீங்கள் குறிப்பிட்ட கதையில் அவரிடம் வேறு எந்தக் கெட்ட பழக்கமும் இருப்பதாகக் குறிப்பிடவில்லை. அவளுடைய நகைகள் குடித்துக் கூத்தாடுவதற்காக செலவழிக்க படவில்லை. உண்மையில் ஆனந்த் குடிப்பழக்கம் இல்லாதவராக இருந்தால் வித்தியா கொடுத்து வைத்தவள் தான் தோழி. இன்றைக்கு எத்தனையோ பெண்கள் வாழ்க்கையில் ஆயிரம் சுகம் இருந்தும் தங்கள் கணவனின் குடிப்பழக்கத்தால் எந்த சுகத்தையும் அனுபவிக்க முடியாமல் வேதனைப்படுகின்றனர். அந்த வேதனை இங்கே இல்லை என்பது சந்தோசப்படவேண்டிய ஒரு விடயமே. ஒருவேளை அவர் குடிப்பவராக இருந்து, நீங்கள் அதை குறிப்பிட மறந்திருந்தால் மன்னிக்கவும். அது அவளுக்கு இரட்டை வேதனையே.

ஆனாலும் தோழி, தன்னுடைய குறையை அவர் மறைத்ததையும், அவரது தற்போதைய நடத்தைகளையும் வைத்துக் கொண்டு அத்தனை இலகுவாக ஆனந்தை கெட்டவன் என்ற பட்டியலில் போட்டு விட முடியவில்லை. ஆனந்தின் மனநிலையில் இருந்து பார்க்கும் போது, அவர் உண்மையில் ஆண்மைக்குறைபாடு உள்ளவராக இருந்தால், அவருடைய தற்போதைய நடத்தை இயல்பாக ஏற்படக் கூடிய மனநிலையே.

அதாவது, தன் மனைவியை வேறு பெண்களுடன் பேசா விட்டால், இதுவரைக்கும் அவர் மறைத்து வைத்திருந்த தன்னுடைய குறைபாடு சமூகத்துக்குத் தெரிய வந்துவிடும் என்ற அச்சம் அவருக்கு இருக்கும். அது மட்டுமன்றி அவர்

தான் சேர்ந்து கொள்ளும் எந்த வேலையிலும் அவர் நிலையில்லாமல் இருபதற்கும் அது ஒரு காரணமாக இருக்கும் அல்லவா? நம் சமூகத்தில் ஆண்கள் குறிப்பிட்ட வயது வந்ததுமே "எப்போது திருமணம்?" என்று நச்சரிக்க ஆரம்பித்து, திருமணமான சில நாட்களிலேயே "என்ன விசேசம் ஒன்றும் இல்லையா?"தொடரும் இவர்களது கேள்விக் கணைகளின் முன்னே எத்தனையோ கணவர்களும் மனைவிகளும் குற்றவாளிகள் போல குறுகிப்போய் நிற்கின்ற நிலையில், உண்மையிலேயே தன்னுடைய குறைபாட்டைத் தெளிவாகத் தெரிந்து கொண்டிருக்கும் அவருக்கு அந்த அச்சம் இருக்காதா தோழி... அந்த அச்சமும், இயல்பாக ஏற்படக்கூடிய தாழ்வு மனப்பான்மையும் சேர்ந்து அவருக்கு, பலரும் இணைந்து வேலை செய்யும் இடங்களில் வேலை செய்வது கடினமாக இருந்திருக்கலாம்.

சற்று நிதானமாக சிந்தித்துப் பாருங்கள்....

இங்கே நீங்கள் வித்தியாவுக்கு மட்டுமன்றி, ஆனந்துக்கும் மனரீதியான ஆதரவைக் கொடுக்க வேண்டுமென்றே நான் நினைக்கிறேன் தோழி...

சமூகத்துக்குப் பயந்தோ, அல்லது தன் பெற்றோருக்குப் பயந்தோ தன் திருமண வாழ்க்கையை முறிக்காமல் வாழ்ந்து கொண்டிருக்கும் வித்தியாவுக்கு மனத்திடத்தை நீங்கள் கொடுக்க முடியும்.. வித்தியா இந்த உறவை அறுத்து எறிந்த பின், தன்னுடைய சொந்தக் காலில் தனித்து வாழக்கூடிய பக்குவம் உள்ளவரா? அப்படியே அந்தப் பக்குவம் இருந்தாலும், சமூகத்தால் அவளுக்கு வரக்கூடிய சகல விதமான விமர்சனங்களையும் எதிர்நோக்கி வாழ்க்கையை எதிர்த்து போராடக் கூடியவரா என்பதை நீங்கள் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும். ஏனென்றால் இன்றும் எமது சமூகத்தில் பெண்ணியம் இன்னும் பேச்சளவில் தான் இருக்கிறது. கணவனை விட்டுப் பிரிந்த ஒரு பெண்ணின் நியாயங்களை ஏற்றுக் கொள்ளும் பக்குவத்துக்கு சமுதாயம் இன்னமும் முழுமையாக மாற்றம் பெறவில்லை. அந்த சமூகத்தில் அவளால் தனித்து நின்று போராடுவது என்பது, தற்போது அவள் அனுபவிக்கும் துன்பத்தை விடக் கொடியதாக இருக்கலாம் அல்லவா?...

திருமண பந்தத்தில் இணைந்து விட்டால், ஆண் பெண் இருவருமே தம் வாழ்க்கைத் துணையைக் குறைகளோடு ஏற்றுக் கொள்ள வேண்டியவர்களாகிறார்கள். குடும்பம் என்று வரும்போது எல்லோருமே குறைகள் அற்றவர்களாக இந்த உலகில் இருப்பது மிக அரிது. உடல் ரீதியாகவோ, அல்லது மனரீதியாகவோ அல்லது நடத்தைரீதியாகவோ சிறு குறையேனும் இருக்கவே செய்கிறது. இது சிறிதாகவோ, பெரிதாக இருந்து விடுகிறது. பெரும்பான்மையான குறைபாடுகளுக்கு அவர்கள் காரணமாக இருப்பதில்லை. அவை இயற்கையாகவோ அல்லது, அவர்கள் வாழ்ந்த, வளர்க்கப்பட்ட சூழ்நிலைகள் காரணமாகவோ இவர்கள் குறைபாடுகளைச் சுமக்க வேண்டியவர்களாகின்றார்கள்.. எனவே வித்தியாவோ நீங்களோ ஆனந்தின் குறைபாட்டை அவரின் குற்றமாகக் கருதமுடியாது என்பதைப் புரிந்து கொள்வீர்கள் என்று நம்புகிறேன். எனவே அவருடைய குறைபாட்டை அப்படியே ஏற்றுக் கொள்ளவேண்டியதே வாழ்க்கையைச் சீர்படுத்த இலகுவான வழி.

தோழி, எனக்குத் தோன்றுவதைச் சொல்கிறேன்... தீர்வு அல்ல ஆலோசனை மட்டுமே...

முதலாவதாக, வித்தியா ஒரு சரியான வாழ்க்கைத்துணைதான் என்று ஆனந்தின் நம்பிக்கையைப் பெறுவதற்காக இன்னும் உழைக்க வேண்டியுள்ளது. அப்பொழுது தான் அவள் தன் ஆண்மைக் குறைவை மற்றவர்களுக்கு வெளிப்படுத்த மாட்டாள் என்ற நம்பிக்கை அவருக்கு ஏற்படும். எனவே தன் கணவனிடம் இருக்கக் கூட்ய ஏனைய நற்பண்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும் அதையிட்டு பெருமை கொள்ளவும், அதைத் தன் க்ணாவனுக்கு வெளிப்படுத்தவும் வேண்டும். வித்தியா ஆனந்தை அவனுடைய நிறை

## காதல் உனக்கு ஒரு விளையாட்டு

கே இனியவன்

என் இதயத்தில்
உதைப்பந்து
விளையாடுபவள்
நீ - உன் உதைகள்
ஒவ்வொன்றும் இலக்கு
தவறி செய்கிறதே தவிர
காதல் இலக்கை வரவே
இல்லை - தயவு செய்யது
ஒரு உதை என்றாலும்
காதலை நோக்கி உதை ...!!!

சிறுவயதில் நான் தோற்று
விடுவது -கண்ணாம்பூச்சி
விளையாட்டில் ...!!!
யாரையும் நான் கண்டு
பிடிக்க மாட்டேன் -அழுவேன்
அவர்களாகவே வந்து
விடுவார்கள் ...!!!

இப்போ
என் இதயத்துக்குள்
கண்ணாம் பூச்சி
விளையாடுகிறாய்
உன்னை காணாமல் அழுகிறேன்
நீ வரவில்லை - இப்போதான்
புரிகிறது காதலை விட நட்பு
இரக்கம் மிகுந்தது ...!!!

காதல் கிரிக்கட்டில்
துடுப்பெடுத்து ஆடும்
துடுப்பாட்டக்கரன் போல் ...!!!
எந்த நேரம் அவுட்
ஆகிடுவமோ -
என்ற ஏக்கம் போல் ...!!!
இடையிடையே மூன்றாம்
நபர் தலையீடும் நம்
காதலை கெடுத்து விடுமோ ..?
என்ற பயமும் வேறு....!!!

குறைகளோடு முழுமையாக ஏற்றுக் கொள்வதை வெளிப்படுத்தும் போது அவள் மீதான நம்பிக்கை அவனுக்கு அதிகமாகும். அந்த நம்பிக்கையே வித்தியா மீது ஆனந் போட்டு வைத்திருக்கும் கட்டுப்பாடுகளைத் தளர்த்தும், நாளடைவில் அவை மறைந்தும் போகும்.

அடுத்து, வித்தியா விரும்புவது போலவே ஒரு குழந்தையைத் தத்தெடுத்துக் கொள்வதன் மூலம் வித்தியா ஆனந்துக்கு இடையிலான உறவில் நெருக்கம் ஏற்பட அதிக வாய்ப்பு உண்டு. அத்துடன் அது வித்தியாவுக்கும் வாழ்க்கையில் ஒரு பிடிப்பை ஏற்படுத்தும். ஆனந்துக்கும் ஒரு குழந்தை தன்னை அப்பா என்று அழைக்கும் போது தன் குறைபாட்டால் ஏற்பட்ட மன உளைச்சல் குறையலாம். பொதுவாக குழந்தையும் தெய்வமும் ஒன்று என்பார்கள். குழந்தையின் கபடமற்ற முகத்தையும், அதன் சிரிப்பொலியையும், மழலை மொழியையும் பார்க்கும் போது மனதி இருந்த பாரம் தானாகவே இறங்கி விடும். எனவே இது ஒரு நல்ல வழியாகவே எனக்குத் தோன்றுகிறது.

அடுத்து அவருடைய தொழில் முயற்சிக்கு அவர் விரும்புவது போல ஒரு சிறிய கடையை அமைத்துக் கொடுத்துப் பார்க்கலாம். உண்மையில் ம்ற்றவர்கள் முன்னிலையில் நடமாடுவதற்கு சங்கடப்பட்டுத் தான் தன்னைத் தானே அவர் தனிமைப்படுத்திக் கொள்கிறார் என்றால், சொந்தமாகக் கடை நடத்துவது பலன் அளிக்கும். இதை நீங்கள் முயற்சித்து பார்ப்பதில் தவறில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக வித்தியாவுக்கு மனத்திடத்தையும் ஆதரவையும் கொடுங்க... அதே வேளை ஆனந்திடம் அவரிடம் உள்ள குறைய நீங்கள் கண்டு கொண்டதாகவே காட்டிக் கொள்ளாமல், மிகச் சாதாரணமாக நடந்து கொள்ளுங்கள். உங்களுடைய அன்பு அவரது தனிமைப்படுத்தலைப் போக்குவதுடன், அதன் மூலமாக ஒரு குழந்தையத் தத்தெடுக்க சம்மதமும் இலகுவாகக் கொடுக்க முடியும். எனவே தோழி இந்த வழிமுறையை உபயோகித்துப் பாருங்கள்.

வித்தியா ஆனந்தின் வாழ்க்கை சிறக்க என் மனமார்ந்த வாழ்த்துக்கள்!!!

நண்பர்களே... நீங்களும் மேற்குறிப்பிட்ட பிரச்சனையில் சம்பந்தப்பட்டவர்களைப் புண்படுத்தத வகையில், உங்கள் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கலாம்...

இந்தத் தொடர் பலருக்கும்பயனுள்ளது என்று என்ற கருத்து உங்களுக்கும் இருந்தால், தொடர்ந்தும் உங்களது அல்லது உங்கள் நண்பர்களது கேள்விகளை சிநேகிதிக்கு அனுப்பி வையுங்கள்... பதில் கூற மகிழ்ச்சியோடு காத்திருக்கிறேன்....

தொடர்பு கொள்ள வேண்டிய மின்னஞ்சல் முகவரி : poongothaichelvan8@gmail.com

நட்புடன்

சிநேகிதி

### நந்தவணம்(சுடுகாடு)

*ஊருக்கு ஒதுக்குபுறம்*
*எந்தனது அந்தபுரம்*
*கூவி அழது தினம்*
*மன குமுறுலை குறைக்கும் இடம்*
*பாவி அவள் சிரித்து தினம்*
*பல கதைகள் பேசி விட்டு*
*பரிதவிக்க விட்டு சென்ற*
*எந்தனது நந்தவணம்*
*எந்தன் இளமை காலங்கள்*
*மார்கழி காலை கோலங்கல்*
*இன்றோ முதுமை சோகங்கள் – இவை*
*ஊமைக்குயிலின் ஓலங்கள்*

ரமணி சுப்ரமணியன்

### தமிழ் ஆசிரியர்

*தமிழை எனக்கு புரியவைக்க*
*இவரில்லை*
*தமிழை எனக்கு உணர வைக்க*
*இவர் உண்டு;*
*பிழை வளர இவரில்லை - தமிழிலும்*
*வாழ்விலும்;*
*நன்னெறி வளர இவர் உண்டு - தமிழிலும்*
*வாழ்விலும்;*
*என்றென்றைக்கும் என் மனதில்*
*இடமுண்டு இவருக்கும் தமிழுக்கும் ...*

சிவாராம்

# ஆத்திசூடியை மாற்றி ஆங்கிலச்சூடி படி.......

ஊத்துக்குளி (சந்திரசேகரன்)

என் தாயகமே ; தங்கத் தென்னகமே !
வான் பொய்த்தது ; காவிரி பொய்த்தது;
பருவ நிலை மாற்றம் பரவா இல்லை;
மக்கள் நம்பிக்கையும் பொய்த்தது; ஆனால்
தமிழும் இல்லையெனில் ஏன் இந்த
தாய் நாடு, தாய் மொழி எல்லாம் ;

அனைத்தையும் ஆங்கிலேயனுக்கு
தாரை வார்த்து விடுங்கள். மீண்டும்
இங்கிலாந்து மன்னர் இங்கு ஆளட்டும்.
புறநானூற்றுப் பாடல்களை புறக்கடையில்
கொட்டுங்கள். பதிற்றுப்பத்தை தீப்பற்ற
வையுங்கள். குறளையும், குறுந்தொகையையும்
குப்பைத் தொட்டியில் வீசி எரித்துக் குளிர் காயுங்கள்;

தமிழ்க் கோவில்களில் ஆங்கிலத்தில் அர்ச்சனை
செய்யுங்கள். சிவன், முருகன் பெயர் மாற்றி
தேவாரம், திருப்புகழ் எல்லாம் ஆங்கிலத்தில்
படியுங்கள். ஆத்திசூடியை மாற்றி
ஆங்கிலச்சூடி படித்து அமெரிக்காவில்
மாதம் ஆறாயிரம் டாலர் சம்பாதித்து
அன்னை தந்தைக்கு ஆங்கிலத்தில்
வாய்க்கரிசி போட, மின்னஞ்சல் அனுப்புங்கள்
ஓடும் ஒளி நிழற்படத்தில் கொல்லி வையுங்கள்;

அங்கேயே தங்கி ஆங்கிலேயனாகுங்கள்;
ஆனால், பரங்கியர் உன்னை பாராட்டுவான் என
எண்ணாதீர்கள். தாயுக்கும் தமக்கைக்கும்
வேறுபாடு தெரியாதவன் அவன் பண்பாடு வேண்டும்
என நினைத்து மீண்டும் இந்திய நாடு
ஆங்கிலேயர் ஆட்சிக்கு அடிமைப்பட வைக்க
அவனுக்கு ஆளவட்டம் போட்டு
இந்த இனப்பற்று மிகுந்த காலத்தில்
இளிச்சவாயர்களாய் மாறி, எதிர்கால
தலைமுறையைக் கேளிக்கூத்தாகி விடாதீர்கள்.

சிதறிய ரஷ்ய ,ஐரோப்பிய நாடுகளைப்
பார்த்தாவது அவரவர் தாய்மொழிக்கு மதிப்பு
கொடுங்கள். இல்லையெனில் தமிழ் நாடு
தரங்கெட்ட நாடு என பெயர் வந்துவிடும்.
கற்பு மனையாளை மறந்துவிட்டு, கனிகையர்
நாடும் மனவாளனைப் போல், தமிழ் மறந்து
ஆங்கிலம் நாடுவோரே ! அருணகிரியார் அருளிய
திருப்புகழை வீசிவிட்டு, காசுக்கு ஆசைப்பட்டுத்
தாயைக் கேவலப்படுத்துவது தரங்கெட்ட
அரசியல்வாதிகளுக்குப் பழக்கமாய் இருக்கலாம்.

தமிழை மறந்தவர் தன்னிலை மறந்தவர்கள்;
போதும்... நீங்கள் மொழி காத்த லட்சணம்;
புல்லர்களே; புவியை விட்டு ஓடி விடுங்கள்;
பிற நாடுகளில் தமிழ்பெருமை பாடவந்தால்
தமிழ் நாட்டிலே தமிழை பாழ்படுத்துவதை
எப்படிச் சகிக்க முடியும்? செம்மொழியை
சிதைக்க வந்த சிறு நரிக்கூட்டமே,
அகத்தியன் வடித்த அழகுமொழியை
அழிக்க வந்த ஆலகாலவிஷமே.

**மதம்**

காடு அழிகிறது
யானைகளின் அட்டகாசம்
மதம் பிடித்ததாம்
மனிதன் சொல்கிறான்
நாடு அழிகிறது
மனிதனின் அட்டகாசம்
எது பிடித்தது
என்னவென்று சொல்வது?

ரமணி சுப்ரமணியன்

# *சீலானின் ஒப்பாரி*

வித்யாபரன்



*படம்: நானே வரைந்தது*

புத்த பிக்குகளின்
புத்தி பிதுங்கல்களினால்
புட்டெறியப்பட்ட  பிரஜாவுரிமைகள் தான் இவை.

போதி மரத்தடியில்
பொத்தென்றெழுந்த
பொதுபலசேனாவின்  சதி தான் இவை

உண்ணும் உணவுக்கும் தடை
உடுக்கும் உடுப்புக்கும் தடை
உயிர் தந்த ஊரில் விதிக்கப்பட்ட விதி தான் இவை.

சொத்துக்கள் சூரையாடப்பட்டன
சொந்த மதத் தலங்கள் அவமதிக்கப்பட்டன.
சோனகர் தலையில் வாரி இறைக்கப்பட்ட சகதி தான் இவை.

தொழுவதற்கு மசூதிகள் தேவையில்லை
தெருவோரம் ஆலயங்களும் தேவாலயங்களும் இல்லை
தேரரின் விகாரை போதுமாம் இலங்கை மக்களுக்கு.

பொறுப்பற்ற அரசியல் சாணக்கியர்களும்
பொது பல சேனாவின் பிக்குகளும்
பொருந்தி நடத்தும் நாடகங்கள் இவை.

வெலிவெரியவுக்கு இராணுவம் அனுப்பவும்
வெறித்தனமாக விமர்சிக்கவும்
வேசக்காரன் ஞானசாரருக்கு இலங்கை தந்த உரிமைகள் இவை

வில்லங்கம் கண்டு சீலான்
விலாங்காக நழுவினான்
வித்தன் போதி மரத்தான் உரிமை சாடுகிறான்.

கோத்தபாய அனுசரணையில்
கொடிய பொதுபலசேன
கொன்று குவிக்கும் இனப்படுகொலைகளே இவை.

மீதம் உள்ள உயிருக்கும் உணர்வுக்கும்
மனித உரிமை நிறுவனங்களிடம் கோரும்
மனித ஒப்பாரிக் கோரல் இவை

மூன்று தசாப்தங்களாக கோரிய உரிமைகளை
முழுமையாகத் தொலைத்தவர்கள் நாங்கள் - இன்று
முஸ்லிம்களின் உரிமைக்கும் மடிப்பிச்சை கோருகின்றோம்.

மனித உரிமை காக்கும்
மன்றங்களே வல்லரசுகளே.... உம்மிடம்
முற்றும் தொலையும் முன் உரிமை கோருகின்றோம்...

உலகம் விழிக்கும் வரை
உயிரை ஏந்தி
ஊசலாடுகின்ற மனசு இது

உலகத்தான் போடும்
உரிமைப் பிச்சைக்காக ... இன்று
உதிரம் சிந்திக் காத்திருக்கின்றது...

*சீலான் = இலங்கையர்கள்*

# திசைமாறும் திருப்பங்கள்

இரா. சந்தோஷ் குமார்

சில பிழைகள்
திருப்பங்களாகின்றன.
சில திருப்பங்கள்
திசைகளை மாற்றுகின்றன.

விசையோடு பயணித்தாலும்
ஓசையின்றி சில திருப்பங்கள்
திசைகளை திருத்திடும்.

தன்னம்பிக்கை அம்புகள்
வாழ்வு நாணலில் பொருத்தி
வெற்றி குறியில்
சாதனை திசைநோக்கி
ஏய்திடும் தருணம்
நப்பாசை பார்வைகள் ஒரு
துடிப்பான இளைஞனின்
பொன்னான இலட்சியத்தில்
திருப்பங்களை உண்டாக்கிடும்.

இளைஞனே..!
இலட்சிய நேர்கோட்டில்
நீ பயணித்திடும் போது
தவறுகள் திருப்பங்களாகி
திருப்பங்கள் பிழையாகி
பிழைகள் வாழ்வை
கொலை செய்திடும்.



அற்ப மாயைகளுக்கு
அலையாதே............!
சொற்ப ஆசைகளுக்கு
வளையாதே....!

அதோ பார்..!
வெற்றிக்கனி..!
எடு அம்பை..!
இலட்சிய பார்வை வை..!
அலட்சிய மனதை கலை..!
தொடு அம்பினை..!
விடு..... இழத்து விடு...!

விசையாக விடு..!
வெறித்தனமாக விடு..!
இதோ  உன் காலடியில்
வெற்றி....கனிகள்..!

தெறித்து ஓடுது பார்
நீ கண்ட அவமானங்கள்..!
தெளிக்கிறது பார்
சந்தோஷ தூறல்கள்.!
வெந்துமடிகிறது பார்
உன் தோல்விகள்....!

# கவிப்பயணம்

செங்கோடன்

கவியெழுதுவது எளியதென
கணித்திருந்தது எமது இளநெஞ்சம்.
மதியிலிருந்தால் போதுமென
இறுமாந்திருந்ததென் மனம்.

அடுத்தவர் கவியை படிக்கும் போது
அடடா! நமக்கும் இது உதித்ததுதானே!
அங்கலாப்பு எய்தினேன்.

நதியோ, கடலோ, காற்றோ
வரிசையாய் நான்கு வரிகள்
கற்பனையுடன் விதைத்தலே
கவியென களித்திருந்தேன்.

மரபுக்குத்தான் அடி,தொடை
எதுகை,மோனை
புதுசுக்கெதற்கு பழைய ஆடைகள்

ஜால வார்த்தைகள், சரிகை வரிகள்
ஜோடித்து முகநூல் வீதியில்
முடிந்துவிட்டால்
முன்னூறு விருப்பங்களுடன்
முதலிடத்தில்
அதுவே கவிதையென
பட்டாம்பூச்சி எண்ணங்கள்
படபடத்தது.

எழுதுகவென ஏளனமாய்
என்னிதழ்கள் இளநகைபுரிய,
எடுத்தேன் எழுதுகோலும் தாளும்.

தலைப்பு தேடி முடிப்பதற்குள்
தலைசுற்றியது.

சிக்கிய தலைப்பில் சீரமைக்க
சிக்கலில் சிக்கியதாய் வார்த்தைகள்
வரி(சை)யில் வர சிரமப்பட்டது.

இதயவானில் உருவான வார்த்தைகள்
கதவெனும் தொண்டையில் வந்து
மதகடைத்த நீராய் மண்டியிட்டது.

மடைகடந்து ஓடிவந்த உயிர்எழுத்துக்கள்
எழுதுகோலில் பிரசவிக்கும்முன்
சவமானது.
வந்த வார்த்தைகள் வசப்பட்டாலும்
சந்தங்கள் சரியாக வசப்படவில்லை.

சிந்தித்து சிந்தித்து சந்தி
சிரிக்கும்படி நொந்து போனேன்.

சந்தர்ப்பத்தால் சேர்ந்த
வார்த்தை சோடிகள்
எதுகை மோனையுடன்
எதிரும் புதிருமாக
மோதிக்கொண்டன.

மோதிக்கொண்ட வரிகளில்
பொருள்சேதம் மிகுந்திருந்தது.
சில இடங்களில் பொருளே
இல்லாமலும் இருந்தது.

எப்படியோ எழுதி முடித்தேன்.
எப்படியுள்ளதென உச்சி முதல்
பாதம் பணிந்தேன்.

கவிதையாய் இல்லையெனினும்
கவிதை வயலில்
விதையாய் விழுந்ததற்கு
வான்மழையாய் மகிழ்கின்றேன்

சித்திரமும் கைப்பழக்கம்
செந்தமிழும் நாப்பழக்கம் போல்
எழுதி எழுதிப் பழகினால்

விழுந்த விதை விருட்சமாக
வளருமென விழைகின்றேன்..
கவியருவி கொட்டுமென
காத்திருக்கின்றேன்..

24 நவ வித்ரும பிம்பஸ்ரீ ந்யக்காரி ரதனச்சதா

பவழம் போன்ற இதழ் கொண்ட
அவளைப் பணிந்தால் அன்பு வரும் (ப)
அன்பே அன்னையின் உதடாகும்
தன்னை அறிவதே தவமாகும் (ப)

ருதம்பரா பண்பை அடைந்து விட்டால்
சதமாய் பிறவியும் ஆகி விடும்
பதமாய் அன்னையை போற்றிவிட்டால்
சுதந்திரம் என்பதை அடைந்திடலாம் (ப)

ஞானம் என்பது கோவைப்பழம் அதுவே
அன்னையின் செவ்வாய் நல்ல நிறம்
பின்னைப் பிறப்பை போக்கிவிட்டால் அதுவே
தன்னைத்தான் அறியும் நல்ல விதம் (ப)

25. சுத்தவித்யாங்குராகார த்விஜபங்க்தி த்வயோஜ்வலா
ராகம் - சாமா

சுத்தவித்தையே அன்னையின் (இரு)பல்வரிசையே
அத்தனின் சரிபாதியே (சு)
விதவிதமான தத்துவங்கள் உலகினிலே அதில்
சதமாக உள்ளதிங்கே சித்சக்தியே (சு)

தன்னை அறிந்தால் பிறப்பில்லையே
ஞானாநந்தம் என்பார் அந்நிலையே
பண்டைய முனிவரின் பரம்பரையே நாம்
அண்டிட அவளன்றி ஓர் கதியில்லையே (சு)

அருள்சக்தி நமது வழித்துணையே
இருள்தன்னை அகற்றிடும் ஒளிவெள்ளமே
இருபல் வரிசைக்கோர் இணையில்லையே
கருப்பொருள் அவள்தான் தடையில்லையே (சு)

26. கற்பூரவீடிகாமோத ஸமாகர்ஷிகந்தரா
ராகம் - தோடி

கற்பூர வீடிகை அன்னை தன் செவ்வாயில் திகழும் (க)
மூக கவி பெற்ற அருள் நாம் மறக்க முடியுமா?
கவிகாளிதாஸன் கவித்வம் எதனால் தெரியுமா? (க)
ஞானாநந்தம் பெறும் வல்லமை அதனாலே
கானம் பாடும் கருத்தும் அதனால் சிதறாதே
தன்னை அறிவது தாய் அவள் அருளாலே
பின்னை பிறப்பறும் அவள் வாய் சொல்லாலே (க)

பூஜையில் நாம் வைக்கும் கர்பூர வீடிகை நம்
பிறவித் தொடரை அறுக்க அது பூர்வபீடிகை
திறவுகோல் ஞானத்திற்கு பக்திஎனும் சாவி மனத்
துறவுதான் முக்கியம் எங்கும் ஓடாது தாவி (க)

27. நிஜஸல்லாப மாதுர்ய வினிர்பச்சித கச்சபி

உறையில் இட்டு மூடினாள் ஸரஸ்வதி தன் வீணையை (உ)
லலிதையின் குரலுக்கு ஈடு இணை இல்லையென
லஜ்ஜையினால் தன் வீணையை (உ)

நாரதர் தன் வீணையும் நாணம் கொண்டது
ஆரணப்பொருளுக்கு ஆர்வம் கொண்டது
காரணம் அவள் என கச்சபீ நினைத்தது
ப+ரண வித்தைக்கு பூஜையை செய்தது (உ)

ஞானாநந்தமே நானிலத்தில் சிறந்தது
ஞாலம் இங்கு ஓர்நாள் மறைவது
பாலமாம் பக்திக்கு இந்நாமம் உயர்ந்தது
தூலமாய் கண்டிட வாக்தேவி மொழிந்தது (உ)

28. மந்தஸ்மித ப்ரபாபூர மஜ்ஜத்காமேச மானஸா
ராகம் - கானடா

புன்னகை செய்தாள் புவனேசி அதில்
தன்மனம் இழந்தார் காமேசர் (பு)
மாயாவிசிஷ்ட சைதன்யம் அது
மாயையால் ஈசனை மயக்கிவிடும் (பு)

ஞானாநந்தம் அடைந்து விட்டால்
ஞாலத்தில் பற்று இற்று விடும்
காலனும் பயந்து ஓடி விடும் அவள்
காலடி தன்னை பணிந்து விட்டால் (பு)

சிவசக்தி மயமாம் உலகமிது என்னும்
சீரிய ஞானம் அடைந்திடவே
சித்சக்தி இரண்டாய் வந்து நம்மை
புத்தியால் சிறக்க செய்ததுவே (பு)
(தொடரும்....)

# சமையல்: பருத்தித்துறை வடை/ தட்டைவடை

பூங்கோதை

### செய்முறை




முதலில் தோல் நீக்கிய உடைத்த உளுந்தை ஒரு மணி நேரம் முன்பு ஊறவைக்க வேண்டும்.

ஊறிய பின்பு தண்ணியை நீக்கி ஊளுந்தையும் கோதுமை மாவையும் மற்ற வற்றல் பெருஞ்சீரகம் கருவேப்பிலை இவை அனைத்தையும் சேர்த்து தண்ணீர் விடாமல் கலக்க வேண்டும்.

### தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| கோதுமை மாவு | ஒரு கிலோ |
| தோல் நீக்கிய உடைத்த உளுந்து | கால் கிலோ (கோதுமை மாவுக்கு கால் பங்கு உளுந்து இருக்க வேண்டும்) |
| வற்றல் மிளகாய் லேசாக இடித்தது | தேவையான அளவு |
| பெருஞ்சீரகம் | தேவையான அளவு |
| கருவேப்பிலை | சிறிதாக நறுக்கியது |
| தேங்காய் எண்ணெய் | தேவையான அளவு |
| உப்பு | தேவையான அளவு |

கலந்த மாவில் அரை கப் எண்ணை விட்டு மேலும் நன்றாக பிசைய வேண்டும்.

பின்பு அதில் கொஞ்சம் கொஞ்சமாக தண்ணிவிட்டு கையில் ஒட்டாத பக்குவத்தில் பிசைய வேண்டும்.

பிசைந்த மாவை சின்னச்சின்ன உருண்டையாக்கி அதை மிகவும் மெலிதாக தட்டையாக்க வேண்டும். கையில் ஒட்டாமல் இருக்க எண்ணெய் தடவிக்கொள்ளலாம்.







வாணலியில் எண்ணை விட்டு பொரிக்க வைக்க சூடானதும் தட்டி வைத்ததை பொரித்து எடுக்க வேண்டும்.

இலங்கையில் பருத்தித்துறை பகுதியில் இவ்வகை வடைசெய்வது பிரசித்தம் என்பதால் இது பருத்தித்துறை வடை என்று அழைக்கப்படுகிறது.

எத்தனை நபர்களுக்கு:

15 நபர்கள் வரை

தயாரிக்க ஆகும் கால அளவு:

30 முதல் 1 மணி வரை



# கறை படிந்தது

ராஜீவ்காந்



சமூக வலைதளங்களில் அதிகமாக பகிரப்பட்ட, வாக்களித்ததின் அடையாளமான "கறை படிந்த" இடது ஆட்காட்டி விரல்களின் புகைப்படங்களை பார்த்த சாஸ்த்ரி தன்னுடைய முதல் ஓட்டு போடும் நிகழ்வை பற்றி சிந்திக்கலானான்.

"18 வயசு 19 வயசு பசங்களும் பொண்ணுங்களும் அவங்க போட்ட முதல் ஓட்ட போட்டோ எடுத்து போட்டுருக்காங்க, ஆனா நாங்கலாம் அதுக்க முன்னாடியே ஓட்டு போட தயாராகிட்டோம்ல " என்று தனக்குள் கூறிக்கொண்டு தானாகவே சிரித்தும் கொண்டான் சாஸ்த்ரி .

மறக்க முடியாத அந்த நிகழ்வு அவனுக்குள் மறுபடியும் ஓட தொடங்கியது. கூடவே ஒரு விதமான கோபமும் ஆனந்தமும்.

1999-ம் ஆண்டு நடந்த பாராளுமன்ற தேர்தல் அது. வாக்களிக்கும் நேரம் முடியும் 30 நிமிடங்களுக்கு முன்னர்,

"லேய் தம்பி , நீ இங்க வா " என்று ஜெகத்திரு-பாலன் அண்ணன் அழைக்க,

அவன் தெருவில் வசிக்கும் சக நண்பர்கள்,தன் இரு சகோதரர்கள் சூழ சாஸ்திரியும் வாக்குச் சாவடி நோக்கி நடை போட்டான்.

போகிற வழியில் பாலன் அண்ணாச்சி

"லேய் எல்லோரும் பூ சின்னத்துக்கு போட்ருங்க உங்க வோட்ட, என்ன "

என்று அதட்டினார் . கூட்டத்தில் இருந்த அனைவருக்கும் ஒரே ஆனந்தம், ஓட்டே இல்லாத தாங்கள் ஓட்டு போடபோகும் தருணம் எண்ணி.

13 வயதே ஆன சாஸ்த்ரி தான் அந்த கூட்டத்திலே சிறியவன் .தானும் ஓட்டு போட போகிறோம் என்ற பூரிப்பு அவன் மனதில் எல்லையில்லா ஆர்ப்பரிப்பை உண்டாக்க

" நானுமா? "

"நீயும் தாண்டே" என்றார் அண்ணாச்சி .

" லேய் தம்பி, நாமலாம் 'அய்யா வழி' சாமி கும்பிடுறவங்க. பூக்கு தான் அதனால நம்ம ஓட்ட போடனும்ல , சரியா? " என்றார் அவர் .

# எழுத்துப் பூக்கள்.!!

சீர்காழி சபாபதி

அன்பின் பிறப்பிடத்தை
சொல்லிவிடுகிறது
மழலையின் புன்னகை!
மொழியின் இனிமையை
புரியவைத்துவிடுகிறது
குழந்தையின் மழலை!

இயல்பே அழகென்பதை
உணர்த்திவிடுகிறது
பிஞ்சுவின் வெற்றுடம்பு!
மகிழ்ச்சியின் உச்சத்தை
தொட்டுவிடுகிறது
கள்ளமற்ற சிரிப்பு!

உணர்ச்சிகளின் தாக்கத்தை
வெளிப்படுத்திவிடுகிறது
மழலையின் நடத்தை!
வளர்ந்தவர்களின் கர்வத்தை
உடைத்துவிடுகிறது
சிறுவர்களின் பேச்சு!

வாழ்வின் அர்த்தங்களை
விளக்கிவிடுகிறது
பிள்ளைகளின் விலையாட்டு!
விலையாட்டின் குதூகலத்தை
காட்டிவிடுகிறது
குழந்தைகளின் உற்சாகம்!

வெகுளித்தனத்தின் உச்சத்தை
காட்டிவிடுகிறது
பிஞ்சுகளின் நட்பு!
பெற்றோர்களின் உலகத்தை
புதுப்பிக்கிறது
பிள்ளைகளின் புதுமைகள்!

அன்பின் வேர்களை
நீரூற்றிக்காக்கிறது
வெள்ளைமனதின் வார்த்தைகள்!
மனிதற்களுக்கு மனிதத்தை
அறிமுகப்படுத்துகிறது
மழலைகளின் உலகம்!

சாஸ்த்ரி அதிகம் சிந்திக்காதவனாய்

"அண்ணாச்சி, நானும் 'ஐயா' வழி தான். எங்க அப்பா வழி.

எங்கம்மாவ அப்பா 'விரல்' சின்னத்துக்கு தான் ஓட்டு போட சொன்னாங்க .

நானும் அப்பா சொல்லத தான் கேப்பேன் " என்றான் அடம் பிடித்தவனாய், ஓட்டு சாவடி அருகில் வந்ததை கூட மறந்து விட்டு .

வாக்குச் சாவடிக்கு வெளியில் நீண்ட வரிசையில் இன்னும் சிலர் நின்று கொண்டிருந்தார்கள்.பாலன் அண்ணாச்சி நேராக உள்ளே சென்றது அவனுக்கு ஆச்சர்யத்தை ஏற்படுத்தியது .

## தோழி நீ தான் என்று

கனிகசாகரன்

*கண்களில் மழைக்கட்டும் போதெல்லாம்*
*சுடர் விடும் ஒளிதனிலே*
*சொல்லெனும் மொழியெடுத்து*
*உயிர் பிழிந்து எழுதுகிறேன்*
*என் தோழி நீ தான் என்று*

*சொல்லாதச் சிறு சிறு தவறுகளும்*
*சொல்லிக் கலைத்த பழைய வார்த்தைகளும்*
*இன்னும் எத்தனை எத்தனையோ*
*பசுமை நிறைந்த நினைவுகளை*
*தேக்கி வைத்து சொல்கிறேன்*
*என் தோழி நீ தான் என்று*

*அன்று என்னால் உன் கண்களில்*
*எத்தனை முறை உப்பு கரைந்ததோ*
*இன்று உன்னால் தினதினம்*
*என் கண்களில் இரத்தக் குமிழ்கள்*
*நீராவியாக வடிந்துக்கொண்டிருப்பதில் உணர்கிறேன்*
*என் தோழி நீ தான் என்று*

*என்னில் அடங்கா நேசம் திக்கிமுக்காட*
*பாசி படியாத பாசம் தத்திதடுமாற*
*ஏங்கியே நிற்கும் அன்பு*

*மறக்க முடியாதும் விடமுடியாதுமா*
*நினைவுர்துகிறேன்*
*என் தோழி நீ தான் என்று*

விடுமுறை கழிந்து பள்ளிக்கூடம் மறுபடியும் போனதும் தன் நண்பர்களிடம் பாலன் அண்ணாச்சி வரிசையில் நிற்காததை பற்றியும்,தன் கை விரல்-மை காட்டி தான் ஓட்டு போட்டதை பற்றியும் சொல்ல வேண்டும் என்று, ஓட்டு போடும் முன்னரே முடிவு செய்து விட்டான் சாஸ்த்ரி. அவர்கள் ஆச்சர்யத்துடன் அவனை அன்னாந்து பார்ப்பார்கள் என்று நினைத்த பொது அவனுக்கு சில நிமிடம் மிக்க கௌரவம் வந்து விட்டு சென்றது.

எனினும் ஓட்டு போட இன்னும் சிலர் வரிசையில் நின்றது அவனுக்கு

கோபத்தை உண்டாக்கியது. சற்றே நீண்ட அந்த வரிசையில் தனக்கான வாய்ப்பு நினைந்து ஆவலுடன் தானும் காத்துக்கொண்டிருந்தான்.

இடையிடையில் இன்னும் எத்தனை பேர் தனக்கு முன்னால் நிற்கிறார்கள் என்று விரல்களால் எண்ணிக் கொண்டு, எண்ணம் குறைய குறைய திகைப்போடு காணப்பட்டான்.

இதற்கிடையில் ஓட்டு போட்டு வெளியில் வந்த 11-ம் வகுப்பு படிக்கும்

" யன்னேன், யானே உங்களுக்கு மை வைக்கல கைல? " என்று வினவினான். பதில் சொல்லாத ஸ்டீபன் அண்ணன் கம்பீரமாய் புன்னகையுடன் நடந்து சென்றது அவனுக்கு மேலும் ஆசையை தூண்டியது.

கூட்டம் குறைய குறைய சாஸ்திரிக்கு ஆனந்தம் கூடியது. தானாகவே சிரித்தான். தான் சிரிப்பதை உள்ளே இருப்பவர்கள் கவனிப்பது அறிந்து சில சமயம் குனிந்து,வாய் பொத்தி சிரித்தும், சிரிப்பை அடக்கிகொண்டும் காத்திருந்தான்.

அவன் எண்ணம் நிறைவேறும் தருணம் வந்தது.

"இன்னு கொஞ்ச நேரம் தாம்டே இருக்குது.சீக்கிறோம்"

என்று பாலன் அண்ணாச்சி வேகம் காட்ட, அவனுக்கான வாய்ப்பும் வர சாஸ்த்ரி வாக்குச் சாவடி உள்ளே சென்றான்.

"யாரு , இந்த பையனா? ,முடியவே முடியாது, சார் " என்று உள்ளே இருந்து ஒரு குரல் எழும்பியது.

"இவன் 'பகதூர் சாஸ்த்ரி' சார். என் கிளாஸ்-ல படிக்கறான்.

ஒரு மனசாட்சி வேணாமா ? 9-ம் வகுப்பு பையனலாம் என்னால

அனுமதிக்கமுடியாது " என்று கோபத்துடன் மேலும் ஒலித்தது அந்த குரல்.

பாலன் அண்ணாச்சிக்கும் உள்ளே இருந்தவர்களுக்கும் வாக்கு வாதம் நடந்தது மட்டுமே சாஸ்த்ரியின் கண்களுக்கு தெரிந்தது எனினும் தெளிவாய் புரியவில்லை .

உள்ள இருந்த இன்னோருவர், "தம்பி பாலன் , அவன வெளில அனுப்புங்க " என்றார். பாலன் அண்ணன் பல முறை வேண்டி பார்த்தும் அதிகாரிகள் விடுவதாய் இல்லாததால் , சாஸ்திரியை பாலன் அண்ணனே வெளியில் கூட்டி வந்து ஆறுதல் சொன்னார்.

அவன் அழுவதை கண்டு அவன் கையில் சில சில்லறைக் காசுகளை திணித்து அருகில் இருந்தவனிடம் சாஸ்திரியை அவன் வீட்டில் விட சொல்லி விட்டு,

அவர் மறுபடியும் வாக்குச் சாவடி உள்ளே சென்றார்.

வீட்டுக்கு வந்ததும் " யாம் மக்ளே அழுற ?" என்று அவன் அம்மா கேட்டது மற்றும்

"ஐய்யா, நாங்க ஒட்டு போட்டோமே " என்ற அவன் அண்ணன்களின் ஓட்டு போட்ட கம்பீர அளப்பரையும் அவனுக்கு மேலும் அழுகையை தூண்டியது.

தன்னை ஓட்டளிக்க விடாத ஆசிரியர் மீது கோபம் இதனால் இன்னும் கூடிற்று சாஸ்திரிக்கு.

" 'அய்யா ' சாமி, சுப்பையா சாருக்கு தலைல முடியே வளர கூடாது. அவரோட பைக் பஞ்சராகி அவரு ......." இன்னும் அதிகமாய் அவன் குல சாமியிடம் கோரிக்கை மனுவளித்தான் சாஸ்திரி.

திடீரென "க்கீங் க்கீங் க்கீங் க்கீங் " என்று எதோ ஒலி எழும்ப,

"ஏய் அபி , லேப்டாப் சார்ஜெர் எடுத்துட்டு வா சீக்றோம்.சார்ஜ் down ஆய்டிச்சு ....சீக்கிறோம் " என்று கட்டளையிட்டு, தற்கால சகஜ நிலைக்கு வந்தான் சாஸ்த்ரி.

" இவுரு வேற,ரொம்ப நாள் கழிச்சு நானே இப்போ தான் எங்கம்மா-அப்பாவ பார்க்கிறேன். கொஞ்ச நேரம் பேச விட மாட்டாரு... அத எடு இத வை-னுட்டு ..." என்று புலம்பலுடன் adapter-ஐ எடுத்து வந்து கணவனிடம் கொடுத்தாள் அபி.

இதற்கிடையில் காடு சென்று திரும்பிய தன் விவசாயி-மாமனிடம்

"என்ன மாமா, யாருக்கு ஓட்டு போட்டீங்க ?" என்றான் சாஸ்த்ரி.

"இதுல உங்களுக்கு என்ன சந்தேகம் மாப்பிள-தம்பி.

நாம 'அய்யா வழி'-ல. பூ -க்குத்தான் போட்டேன்" .

மேலும் அவர் , மை படிந்த தன் கை விரல் உயர்த்தி,

" அண்ணாச்சி நம்ம சொந்தம்லா, அவர விட்டு மாற்று ஆளுக்கு போடுவேனா........." நிற்காமல் அடுக்கி கொண்டிருந்தார் மாமனார்.

அவர் பேச்சு 'ஜெகத்திரு பாலன்' அண்ணனை நினைவு படுத்தியது சாஸ்திரிக்கு. கூடவே சுப்பையா சாரும் நினைவுக்கு மறுபடியும் வந்தார்.

" பாலன் அண்ணன் இப்போது ஒரு அரசியல் கட்சியின் மாவட்ட செயலாளராவும், MLA-வாவும் இருக்கறாரு."

" சுப்பையா சார் தான் என்னன் ஆனாருனு தெரில . ஒருவேள எங்காவது தலைமை ஆசிரியரா இருக்கலாம் retire ஆகலனா.... "

" ஆனா ஒன்னு என்ன ஓட்டு போடா விடாத அந்த நாள் நிச்சயம் அவரு நல்ல தூங்கிருப்பாரு. "

" Booth-capture பண்ணப்பட்ட அவரு இருந்த அந்த வாக்கு சாவடில, தன்ன ஓட்டு போடா விடாததனால,அவரால முடிஞ்சது ஒருத்தரையாவது கள்ள-ஒட்டு போடாம தடுத்தொம்னு அவருக்கு ஒரு மன திருப்தி இருந்திருக்கும்."

சாஸ்த்ரி தனக்குள்ளே பேசிக்கொண்டான் .

அவருக்கு கெட்டது நடக்க வேண்டி தான் சாமியிடம் அன்று வேண்டியது இப்போழுது நினைக்கையில் அவமானமாகவும், சிரிப்பு வர வைப்பதாகவும் தோன்றிட்டு சாஸ்திரிக்கு இன்று.

எனினும் அரசாங்கத்தால் வாக்களிக்க ஏதுவாறு கொடுக்கப்பட்ட வியாழ-கிழமை விடுமுறை நாளன்று, மனைவியின் வற்புறுத்தலால், அதை நீண்ட விடுமுறை வாரமாக மாற்றி, வாக்களிக்காமல், வரும் ஞாயிறு மாலை வரை மாமனார் வீட்டில் தங்க தானே முடிவு செய்தது, அவன் மனதை கொஞ்சம் தைத்தது.

அவன் மனதில் இந்த கறை படிந்தது . இன்று இரவு தூக்கம் வருமா என்று அவன் யோசித்துக் கொண்டிருந்தான் .

## கணினி ஏற்று இயக்கம் :: ( Booting)


சந்திரசேகரன்

பகுதி 2

நிரப்பு உலோக உயிரகக்குறை கடத்திமூலம் முழுதுமாய் மூடி
நிறுத்தல் அடிப்படையாம் எட்டெட்டு கிலோ என்னுன்மி
நினைவகச் சோதிப்பும், கட்டுப்படுத்தியின் தொடர் வரிசையும்
நிகழ் இணைமுகப்பு முடக்கச் சோதிப்பும், ஒளித்தோற்ற
நிரல்படு குறுக்கீடுகளின் கட்டுப்படுத்திவழி முடக்கச்சோதிப்பும்,
விசைப்பலகை கட்டுப்படுத்திஅமை நினைவக கண்டறிதலும்,
நிரப்பு உலோக உயிரகக்குறை கடத்திச் சில்லின் சோதிப்பான
நிரல்படு இடைவெளி காலம்காட்டிமூலம் தரவுசரிபார்ப்புமே.

# மாயை

பூமலை



மாயை என்ற சொல் ஞான மார்க்கத்தில் அதிகம் சொல்லப்படுகிறது. உலகமே மாயை என்று ஞானிகள் சொல்வர். மாயையை நாம் தினந்தோறும் காண்கிறோம், உறக்கத்தில் நாம் காணும் கணவும் ஒருவகை மாயைதான்.

உறக்கத்தில் நாம் கனவு காணும் நேரம் சில நிமிடங்களே அந்த சில நிமிடக் கனவில் நீண்ட காலத்தில் நடப்பது போன்று நிறைய நிகழ்வுகள் நடக்கின்றன. அதில் நாம் பங்கு கொண்டு நிஜமாகவே சுகத்தையும், துக்கத்தையும், பயத்தையும், உணர்கிறோம்.

உறக்கம் கலையும் வரை நிஜமாகவும், விழித்த பின் நிஜமல்ல கனவு என்று உணர்கிறோம்.

நம்மிடம் பணம் இருந்தால் மனம் மகிழ்கிறது. இல்லையென்றால் கலங்கிறது.பணத்குள்ளேயே நம் வாழ்க்கை கழிகிறதே! ஆக பணம் மனிதனைமயக்கும்மாயை.

திரைப்படத்தில் அதில் வருபவர் தீயவரும் நல்லவராகவும், நல்லவர் தீயவராக நடிப்பவரே தீயவராகவும் நம் கண்ணுக்கு தெரிவர், திரையில் உண்மையென நம்பிவிதே காரணம். மாயை நம்மை மயக்கிவிடுகிறது.

இவைபோன்றே கல்வி, அழகு, பொருள், பதவி, புகழ், இவையும் நம்மை அதிலேயே ஆழ்த்திவிடும், நமக்கு எது பலமோ, அதுவே பலவீனம், அது மாயை என்று உணர்ந்து மீளவேண்டும். மாயை என்றால் முற்றிலும் பொய்யானது என்பதாக பலரும் நினைக்கிறார்கள், மாயை என்பது தற்காலிக தோற்றம்,

உதாராணத்திற்கு கானல் நீரைச் சொல்லலாம், கானல் நீர் கண்ணுக்கு தெரிவது நிஜம், அது காண்பவரின் கற்பனை அல்ல. ஆனாலும், அது நீர் பொருளாக பெற முடியாது, கண்ட காட்சி நிஜம். தாகத்திற்காககஅனுகினால் அதைப்பருக நினைப்பது ஏமாற்றம், அது காணல் நீராக உணர்வது தான் ஞானம் - அறிவு.

"மா" என்றால் ஒடுக்குதல் , "ஆ" என்றால் வருவித்தல், அனைத்தையும் தன்னுள் ஒடுக்கியும், மீண்டும் வருவிக்கவும் செய்யும் சூக்குமப் பொருளை மாயை என்கிறோம்

தமிழில் இது மருள் எனப்படுகிறது. நம்மை இது மயக்குகிறது.

இது நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என ஐந்தாக விரிகிறது. அவை நம் உடலாகவும், உலகாகவும், உலகப் பொருளாகவும், மாறுகின்றன.

ஆணவ வழியில் நாம் இதனுள் அழுந்தி, உணர்ந்து, திருந்தவே மாயை வழிக் காரியங்கள் வருவிக்கப் பட்டன. ஆகவே இது நம் வாழ்வில் சிறிய ஒளிபோல் நம்மைத் திருத்த வந்தது. அதனுள் வீழும் நாம் உணர்ந்து திருந்தவும், திருவருள் துணை வேண்டும்.

ஆம் மாயை என்று உணர்வதற்கே இறையருள் துணை வேண்டும்.

ஆயிரம் அடி தோண்டினாலும்

வராத கண்ணீர்

என் நண்பன் என்னை விட்டு

பிரியும் போது

என் கண்களில்....

முத்தரசு

ஒன்று மாயை பொருள் என்று விளங்கும் போது அதைப் பெற ஆணவ வழியில் நாம் எவ்வளவு தூரம் பயணப்பட்டுள்ளோம் என்பதையும் உணர முடியும்.

ஏனென்றால் இறைவனது அருள் மறைப்பு சக்தியாகவும், வந்து நம்மை மயக்கியுள்ளது. ஆக முன்பு நம்மை மயக்கியதும், பின்பு நமக்கு உணர்த்தியதும் இறைவனது கருணை என்பதும் பினனர் தெரியும்.

தவறு செய்வது மனித இயற்கை என்பர், மாயை நம்மை மயக்கித் தவறுசெய்யத் தூண்டும். தவறு உடலை வளர்க்கும், அது தவறு என உணரும்போது இறையருள் புரியும், இறையருளை உணரும் போது உயிர் வளரும், ஆகவே மாயை நம்மைத் திருத்த வந்தது.

திருச்சிற்றம்பலம்

# பில்லா III: பில்லா Vs டிராகுலா

சிவாஜிதாசன்

பகுதி - 12

மாஃபியா கூட்டத்தின் தலைவர் ஜோசப் அளித்த விருந்து தொடர்ந்தபடி இருந்தது. அதில் சில போலீஸ் உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். வந்தவர்களுக்கு சுவை மிகு உணவு வகைகள், மதுபானம், ஆடல், பாடல் என்று அமர்க்களமாக விருந்து நடந்துகொண்டிருந்த வேளையில் திவாகரின் கண்கள் அலெக்ஸ் பில்லாவின் மேல் பதிந்தன. அவன் அலெக்ஸிடம் பேச விரும்பினான். ஆனால், 'எப்படிப் பேசுவது? தன்னைச் சுற்றி எப்பொழுதும் பரத்தின் ஆள்கள் சங்கிலி போன்று பின் தொடர்கிறார்களே!' என்று வேதனையுற்றான்.

சில நிமிடங்களை மௌனமாக கடத்திய அவனை பரத் வந்து சந்தித்தான். பரத்தின் சாந்தமான முகத்தினுள் ஒரு குரூரம் ஒளிந்திருந்தது. அவன் நேராக திவாகரின் அருகில் சென்று அவன் தோள்களை அழுத்தினான். "டிராகுலா வருவான்னு சொன்ன" என்று குரலில் பயங்கரத்தைக் கொண்டு வந்து கேட்டான்.

"சார், கொஞ்சம் பொறுமையா இருங்க. நான் ஒண்ணும் ஜோசியக்காரன் இல்ல. என் உள்ளுணர்வு வச்சி தான் நான் சொல்றேன். ஆனா நிச்சயம் இன்னைக்கு ஒண்ணு நடக்க போகுது" என்றான் திவாகர்.

"எத வச்சி அப்படி சொல்ற?"

"மார்டின்ல இருந்து முதல் கணக்கு தொடங்கிருக்கான் சார். அவர கொன்னதுல இருந்து சரியா நாலு நாள் கழிச்சி விக்டர், பில்லா கையால இறந்திருக்காரு. அதுக்கு மூல காரணம் டிராகுலா. இப்போ விக்டர் இறந்து சரியா நாலாவது நாள் இன்னைக்கு சார்" என்று தன் பேச்சினை நிறுத்தினான் திவாகர்.

பரத் குரூரமாக நகைத்தான். "நீ என்ன கணக்கு வாத்தியாரா? கொலை நடக்கபோறதா கணக்கு போட்டுட்டு இருக்க. இன்னைக்கு நீ சொன்ன மாதிரி எதுவும் நடக்கலன்னு வச்சிக்கோ.." என்று தன் கண்களை திவாகரின் முகத்தின் மேல் சில நொடிகள் நிலைக்கவிட்டான். பின் பார்ட்டியில் மூழ்கி இருக்கும் கூட்டத்தை ஒரு முறை நோக்கி விட்டு, "இன்னைக்கு நீ சொன்ன கொலை நாளைக்கு நடக்கும் அது நீ தான்" என்று கூறி முறைத்தபடியே அங்கிருந்து அகன்றான் பரத்.

திவாகரின் உடல் லேசாக நடுக்கம் கொண்டது. முதலை வாயில் சிக்கிக்கொண்ட மீனின் கதையானதே என்று தன்னுள்ளாகவே நொந்துகொண்டான். ஆனால், அவன் மனது ஒன்று மட்டும் கூறியது. நிச்சயம் இன்று ஒரு கொலை விழும் என்று. திவாகர் விளையாட்டு மனம் படைத்தவன் ஆனாலும் விவகாரமானவன். பரத் பேசியதை ஒரு பாதுகாப்புக்கு ரெக்கார்ட் செய்துவிட்டான். தனக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்தாலும் கூட பரத் நிச்சயம் பிடிபட்டு விடுவான் என்று ஒரு முறை தனக்குள் எண்ணிக்கொண்டான்.




அப்பொழுது திவாகரைக் கண்காணித்துக்கொண்டிருந்த இருவரும் சாப்பிடுவதற்காக அவனை விட்டு அகன்றனர். அந்த நேரத்தை சரியாகப் பயன்படுத்திக்கொண்ட திவாகர் வேக வேகமாக அலெக்சை நோக்கி நடந்து அவன் முன்னே நின்றான். திவாகரை அலெக்ஸ் புதிராகப் பார்த்தான். திவாகரின் நெற்றியில் படர்ந்திருந்த வியர்வைத் துளிகள் அவன் படபடப்போடு இருப்பதாய் அலெக்சிற்கு சொல்லியது.

"திவாகர்" என்று வலது கரத்தை நீட்டியபடி தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டான்.

அலெக்சும் புன்முறுவல் செய்தபடி தன்னையும் அறிமுகப்படுத்திக்கொண்டான்.

"நீங்க இந்தியால தான இருந்தீங்க?" என்று அவனிடம் வினா அம்புகளைத் தொடுக்க ஆரம்பித்தான்.

"அது எப்படி உங்களுக்குத் தெரியும்?" என்று ஆச்சர்யத்தோடு கேட்டான் அலெக்ஸ்.

"பத்திரிக்கைக்காரன் ஆச்சே? இது கூட தெரியாம இருந்தா எப்படி சார்?" என்று புன்முறுவினான் திவாகர்.

பத்திரிக்கைக்காரன் என்று சொன்னதும் அலெக்சின் முகம் இறுக்கமானது. 'நாம் பேசும் ஒவ்வொரு பேச்சையும் வேறு கோணங்களில் திருப்பி இக்கட்டான சூழ்நிலையில் சிக்கவைத்து விடுவார்களே!' என்று அவன் மனம் கூறியது. அதனால் திவாகரிடம் மேற்கொண்டு பேச்சை வளர்க்காமல் வேறு பக்கம் தன் தலையைத் திருப்பிக்கொண்டான். அலெக்சின் மனக்கூற்றை உணர்ந்த திவாகரும் சிறு சிரிப்போடு கூட்டத்தினரை வெறித்தான். உடனே, அவனது சிரிப்பு மறைந்தது.

◆◆◆

கிறிஸ்டின் இன்று போதை மருந்து கடத்தப்போகிறார் என்று ஜான் கூறியதைக் கேட்டு, உடனே தயாரான நிலைக்கு வந்தார் ஸ்டீபன். முக்கிய இடங்களில் போலீஸாரை உஷார் படுத்தினார். எந்த வாகனமும் சோதனையிலிருந்து தப்பிக்கக்கூடாது என்று கறாரான உத்தரவு வெளியான பிறகு போலீஸாரும் உஷார் நிலைக்கு வந்தனர். ஆனால் போதைப்பொருட்களை மட்டும் பிடிக்க முடியவில்லை. அதனால் விரக்தி அடைந்த ஸ்டீபனும் ஜானும் போலீஸ் வாகனத்தில் ரோந்து சென்றுகொண்டிருந்தனர்.

"ஜான், நீ சொன்ன தகவல் உண்மை தானே?" என்று சந்தேகப் பார்வையை வீசினார் ஸ்டீபன் காரோட்டியபடி.

"பொய்யான தகவல் சொல்லி எனக்கு பழக்கம் இல்லை சார்"

"அப்போ ஏன் இன்னும் நம்ம கண்ணுல மாட்டாம இருக்காங்க?" என்று வினவினார் ஸ்டீபன்.

# மனுசனாக கொஞ்சம் திருந்து..

கனிகீல்வரி



சேதி கேட்டுத்தான் நெஞ்சு பதறுது
ஈரக்குழையும் தான் இப்ப நடங்குது......
வேட்டு வச்சவன் மனுச சாதியா?
அவனப் பெத்துப் போட்டவ ஈன பிறவியா?
உன்ன கொல்லவே உனக்கு உரிமையில்ல
ஊருக்கொல்ல நீ துணிஞ்சதேனடா?
கல்லு நெஞ்சமா உனக்கு?
அதுல கருணை இல்லையா சொல்லுடா?

ஒன்னும் அறியா மக்களை அட
நீ கொன்னு சாதிச்சதென்னடா?
உன்னப் போல இல்லடா
அந்த காட்டு மிருகம் கூட .........
செத்துப் போன பொண்ணு
உன் முகத்த பாத்ததுண்டா....
அவ விட்டு போன உசுரு
உன்ன குத்தம் சொல்லுமாடா?

கோடி கோடியா கொல்லை அடிச்சவன்
குடும்பம் குடும்பமா இங்க வாழுறான்...
வேலை செஞ்சு பிழைக்கவும்
எங்களை விட்டு வைக்கவும் மாட்டியா?
பத்து மாசம் தான் சுமந்து
தன் இரத்தம் உறிச்சு கொடுத்தவ
பெத்த புள்ளைய பறிகொடுத்து
அவ நித்தம் வாடுவா நீசனே.....

குண்டு வச்சு நீ தகர்க்க
இது வஞ்சம் நிறைஞ்ச பூமியா?
அட இரும்பு மனுசா உனக்கு
இதயம் இல்லையா சொல்லு.....
உன்னக் கருவுல சுமந்தவ
அவ கருப்பை பாவமும் சுமந்தா
தேசம் எங்கதான் போகுது
என் மனசு ரொம்பதான் நோகுது......
அட யாரு தந்தாங்க உரிமை
ஊருக்கு எமனாகுற துணிவை?
போதும் போதும் இந்த இழிவு
இனி மனுசனாக கொஞ்சம் திருந்து......

"திருடங்க.எப்போவும் நம்மள விட ஒரு அடி முன்னால இருப்பாங்க சார்"

ஸ்டீபன் ஜானை புரியாமல் பார்த்தார்.

"எந்த இடத்துல போலீஸ் இருக்கும். அதனால எப்படி நடந்துக்கணும்னு முன்னாடியே திட்டம் தீட்டி வச்சு அதன்படி போயிட்டு இருப்பாங்க. அதுவும் இல்லாம, இப்படி சைரன் வச்சிட்டு ரோந்து போனா 'போலீஸ் வருகிறது! போலீஸ் வருகிறது!'னு நாமளே அவங்கள எச்சரிக்கை பண்ணுறா போல இல்ல?" என்று நகைத்தான் ஜான்.

நகைக்கும் ஜானின் அறிவு ஸ்டீபனை வியக்க வைத்தது. "இத்தன அறிவுபூர்வமா பேசுறியே, உனக்கு ஏன் இன்னும் ப்ரோமோஷன் கிடைக்கல?" என்று நகைத்தார்.

"அறிவு மட்டும் இருந்தா போதாது சார். அத செயல்படுத்துற வேகம் இருக்கணும். அது உங்க கிட்ட இருக்கு" என்றான் ஜான்.

அதைக் காதில் போட்டுக்கொள்ளாத ஸ்டீபன், வேகமாக சென்றுகொண்டிருந்த தனது போலீஸ் காரை சாலையில் ஒரு ஓரமாக நிறுத்தி, இறங்கி நடந்து சென்றார். திடீரென்று ஸ்டீபன் அப்படி நடந்துகொள்வது ஜானிற்கு புரியவில்லை. 'சரி, என்ன தான் செய்யப்போகிறார்?' என்ற எதிர்பார்ப்பில் அவரின் பின்னே சென்றான்.

சில நிமிடங்களில் ஒரு டாக்ஸி சாலையில் வேகமாக வந்துகொண்டிருந்தது. .தனது கையை நீட்டி டாக்ஸியை நிறுத்தினார் ஸ்டீபன். டாக்ஸியும் நின்றது. டிரைவரிடம் தனது போலீஸ் ஐடி கார்டை காட்டியபடி உள்ளே ஏறினார் ஸ்டீபன். அவரைப் பின்பற்றியபடி ஜானும் டாக்ஸியில் ஏறிக்கொண்டான். ஒரு காட்டுப்பகுதியான இடத்திற்கு செல்லச் சொன்னார் ஸ்டீபன். டிரைவரும் ஸ்டீபனின் கட்டளைக்குப் பணிந்து வண்டியை வேகமாக செலுத்தினான்.

"என்ன சார், புரியாத மாதிரி நடந்துக்கிறீங்க?" என்று கேட்டான் ஜான்.

"சீக்கிரத்துல புரிஞ்சிப்ப. நீ ஒரு நல்ல பாய்ன்ட் கொடுத்த ஜான். போலீஸ் இருக்குற இடத்துல திருடங்க வரமாட்டாங்க. அதனால திருடங்க இருக்குற இடத்துக்கு நாம போவோம்" என்று விஷமப் புன்னகையை உதிர்த்தபடி தனது மொபைலில் எதையோ பார்த்து ஆமோதிப்பதாய்த் தலையசைத்தார் ஸ்டீபன்.

சில நாழிகைகளில் டாக்ஸி காட்டுவழி சாலையை அடைந்தது. மரங்கள் பூதாகரமாக நின்றுகொண்டு காட்டினை பயங்கரப்படுத்தி காட்டின. அதைப் பற்றிக் கண்டுகொள்ளாமல் டாக்ஸி படுவேகமாக காட்டு சாலையில் சென்றது. ஆங்காங்கே முறிந்து விழுந்த கிளைகளும் சிதறிக்கிடந்த காய்ந்த இலைகளும் டாக்ஸியின் ஓட்டத்தைத் தடை செய்யவில்லை.

தூரத்தில் ஒரு வாகனம் செல்வதை அதன் விளக்குகள் சமிக்ஞை செய்து காட்டின. அதைப் பின்தொடருமாறு டிரைவரிடம் கூறினார் ஸ்டீபன். கூடவே தன் துப்பாக்கியில் குண்டுகளைச் சரிபார்த்தார்.

## விதவைத் தமிழ் ..!

மனோ ரெட்

என்ன பாவம் செய்ததோ
இந்த எழுத்துக்கள்
திருமணம் ஆகாமலே
இப்படி மெய்யின்றி
விதவைகளாகி நிற்கின்றன..!!

தமிழ் மொழி கொண்ட
பெருமை சொல்லவே,
மெய்யில்லாமல்
பொய்யாக நிற்கின்றன
இந்த எழுத்துக்கள்...!!

எந்த மொழியும்
எதிர் காணாத பெருமை
எங்கள் தாய் தமிழுக்கு உண்டு,
இது வெறும் பேச்சு மொழியல்ல,
உயிரின் மூச்சு மொழி...!!

உலகின் மிக சிறந்த
பேரழகி எங்கள் தமிழ் மொழி,
உச்சரிக்கும் போதே
நாவில் எச்சில் ஊறும்
தேனினும் இனிய மொழி..!!

எழுத்து பிழை இருந்தாலும்,
அழகில் குறை சூழ்ந்தாலும்
தனித்துவம் வாய்ந்து
தடம் பதிப்பது
எங்கள் ஆதிகால தமிழ்...!!

இங்கே தமிழ் மொழியின்
விந்தை என்பது
மெய்யெழுத்தில்லாமல்
உயிர்மெய்யெழுத்தை
வாசிக்க முடியும் என்பதே...!!

ஒரு தமிழனால் இதை
நிச்சயமாக சரியாக
படிக்க முடியும்
என்ற கர்வத்தினால் தான்
தமிழ் மொழி பெருமையை
உரக்கச் சொல்கிறேன்..!!
இது விதவை தமிழ்...!!

முன்னே சென்றுகொண்டிருந்த லாரியிலிருந்த ஓட்டுனர் 'தன்னை யாரோ பின்தொடர்கிறார்களே' என்று கண்ணாடியில் பார்த்தார். பின்னே வருவது டாக்ஸி என்று தெரிந்ததும் அசட்டைத்தனமாக லாரி ஓட்டுவதில் கவனத்தைச் செலுத்தினார். சில நிமிடங்களில் டாக்ஸி லாரியை முந்திக்கொண்டு லாரியை வழிமறித்து நின்றது.

## கவிதையும் நானும்

ஜெயந்தி பிரபுராஜன்

கரிக்கோலும் கவிதையுமாக இருந்த என்
கைவிரல்கள் காய்கறி அரியவும்
புளிகரைக்கவும் மட்டும்தான்
விரதமிருக்கின்றன!

கவிதையை
சுவாசித்துக் கொண்டிருந்தவள்
கதையடித்து உறங்குவதில்
முன்னேறி இருக்கிறேன்!

உண்ணும் போதும், உறங்கும்போதும் - ஏன்
என் கோபம்கூட கவிதையாக
வாழ்ந்திருந்த நான் எங்கே போனேன்?

எனக்கு கோபம் கோபமாக வருகிறது.
எழுத நேரமில்லாமல் இல்லை!
புகுந்த வீட்டிலும் ஒருநாளைக்கு
இருபத்தினாலு மணிநேரம் தான்.

எந்நேரமும் எழுதிக்கொண்டிருந்த நான்
எங்கே மறைந்துவிட்டேன்?
கவிதை என்ற மூன்றெழுத்தை நான்
மறந்துவிட்டேன்!.........

விழித்துக்கொண்டேன்! - இனி
கவிதையும் நானும்

உடனே, லாரியை நிறுத்தினார் அதன் ஓட்டுனர். டாக்ஸியின் கதவினை திறந்துகொண்டு ஸ்டீபன் லாரியின் அருகே வந்து டிரைவரின் தோள்களில் சுட்டார். லாரி ஓட்டுனர் கதவைத் திறந்துகொண்டு கீழே விழுந்தார். ஸ்டீபனின் பின்னால் வந்த ஜான் கீழே விழுந்த ஓட்டுநரைத் தூக்கித் தாங்கிப் பிடித்து ஸ்டீபனை நோக்கிக் கத்தினான்.

"உங்களுக்கு என்ன பைத்தியமா?" என்று உரக்கக் கத்தினான் ஜான்.

அதைக் காதில் வாங்கிக்கொள்ளாமல் லாரி ஓட்டுனரைப் பிடித்து தர தரவென்று இழுத்துக்கொண்டு சென்றார்.

"வண்டிக்குள்ள என்ன இருக்கு?" என்று கேட்டார்.

"புத்தகங்களும் டீ பாக்கெட்டுகளும்" என்றான் டிரைவர். வலியைத் தாங்கிக்கொண்டு.

"இதோ பாரு, எனக்கு நேரம் இல்ல. உனக்கு வேற பிளீடிங் ஆய்ட்டு இருக்கு. இன்னும் கொஞ்ச நேரம் இப்படியே இருந்தா நீ இறந்திருவ. நீ உண்மைய சொன்னா மருத்துவமனைல சேர்த்து உன்ன காப்பாத்தலாம். என்ன சொல்ற?" என்று அவன் முகத்தையே வெறித்தார் ஸ்டீபன்.

டிரைவர் மிரட்சி பார்வையை ஸ்டீபன் மேல் வீசினான். சிறிது நேரம் அப்படியே கண்களை மூடி எல்லா உண்மைகளையும் சொல்லத் துவங்கினான். 'இது கிறிஸ்டினோடது. இத போல நான்கு வண்டிகளில் கடத்தல் பொருள் உள்ளதாகவும் எந்தெந்த பாதைகளில் வண்டிகள் செல்கின்றன' என்ற மொத்த உண்மைகளையும் ஸ்டீபனிடம் கக்கினான்.

அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் டீ பாக்கெட்டுகளில் மறைத்துவைக்கப்பட்டிருந்த ஹெராயினை வெளியே கொட்டினார் ஸ்டீபன். சீல் செய்திருந்த புத்தகங்களைக் கிழித்து அதனுள் வைக்கப்பட்டிருந்த ஹெராயினையும் எடுத்து பார்த்தார்.

"மொத்தம் எத்தன கிலோ ஹெராயின்?' என்று கேட்டார் ஸ்டீபன்.

"இருநூறு கிலோ இருக்கும் சார்" என்று சொன்னார் லாரி ஓட்டுனர்.

ஸ்டீபன், அதையெல்லாம் கவனித்து போலீஸ் கண்ட்ரோல் ரூமை தொடர்புகொண்டு கடத்தல் பொருள் வரும் திசையையும் வண்டியின் அடையாளமும் கொடுத்து அவற்றைப் பிடிக்க உத்தரவு கொடுத்தார். தாங்கள் இருக்கும் இடத்திற்கு ஒரு போலீஸ் வாகனத்தை வர சொன்னார். சற்று நேரத்தில அங்கு வந்த போலீஸ் வாகனத்தில் இருந்த போலீசிடம் லாரி ஓட்டுனரை ஒப்படைத்து அருகிலிருக்கும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுமாறு கூறினார்.

பிறகு, ஸ்டீபனும் ஜானும் கடத்தல் லாரியில் ஏறி புறப்பட்டனர். ஸ்டீபனின் இறுக்கமான முகத்தினைப் பார்க்க விரும்பாத ஜான் அமைதியின் சொரூபமாக காட்சியளித்தான். எடுத்த எடுப்பிலேயே ஓட்டுனரைச் சுட்டது ஜானிற்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை. ஒரு பேச்சுக்குக் கூட விசாரிக்காமல் எதற்கு இந்த அதிகப்பிரசங்கித்தனம் என்று மனதினுள் கருவிக்கொண்டிருந்தான்.

"என்ன ஜான், பேசாம வர?" என்று ஸ்டீபன் முதலில் ஆரம்பித்தார்.

ஜான் மௌனமாக வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான்.

"உன்னிடம் தான் கேட்கிறேன்" என்று குரலில் அழுத்தத்தை கொண்டு வந்த நேரத்தில் அவரது வாக்கி டாக்கியில் ஒரு குரல் அலறியது. உடனே, வாக்கி டாக்கியை எடுத்து பதில் கூறத் துவங்கினார்.

"ம்ம்.என்ன நடந்தது?" என்றார் ஸ்டீபன்.

"சார்! இரண்டு லாரியை மடக்கிப் பிடித்துவிட்டோம். மீதமிருக்கும் ஒரு இடத்திற்கு போலீஸ் படையை அனுப்பியுள்ளோம்" என்றது வாக்கி டாக்கியில் வந்த குரல்.

"சரி, அந்த ஸ்பாட்டிற்கு நாங்களும் வருகிறோம்" என்று சொல்லியபடி இணைப்பைத் துண்டித்தார்

"இப்போ சொல்லு ஜான். ஏன் திடீர்னு மௌனவிரதம்?" என்று சிரித்தபடி கேட்டார் ஸ்டீபன்.

"நீங்க அந்த டிரைவர எடுத்த உடனே சுட்டு இருக்கக்கூடாது சார்" என்று சட்டென சொன்னான் ஜான்.

## யானைகள் சுருங்க..

**ராமஜெயம்**

மன்னனை
மாலையிட்டு
தேர்வு செய்தும்
முன்னின்று படைசென்று
காவல் காத்ததும் யானை

கந்தனின் காதலை
கணேசனே உருவெடுத்து
சேர்த்து வைத்ததும் யானை

கோவில்கள் தோறும்
பக்தர்கட்கு ஆசிகூறி
வாழ்த்துகள் சொன்னதும் யானை

தன் நெற்றியில்
நாமமா பட்டையா?
மனிதர்கள் மோதிட பார்த்த யானை

வீதிகளில்
பாகன்களின் பசிபோக்க
பிச்சையெடுத்ததும் யானை

பலப்பலவாய்
பரிமளித்தயானை
ஊருக்குள் வந்திடுச்சி

பயிர் பச்சை காண
பட்டாசு வேட்டுகளில்
பாழ்படும் யானை

மனிதர்களின்றி
மிருகங்கள் வாழ்ந்த காலம்
மிருகங்களின் பொன்னுலகம்

மனிதர்கள் பெருக
மிருகங்கள் குறைய
மனிதரின் சுய உலகம்

யானைகள் சுருங்க
பாகன்கள் பெருக்கும்
காலம்.

ஸ்டீபன் சிரித்துக்கொண்டே, "உன் கீழ கொஞ்சம் பார்" என்றார்.

சித்திரை பதிவுப்போட்டியில்
மூன்றாவது பரிசு பெற்ற கவிதை

# நின்னோடு என் நினைவுகள்

கவியாழினி சரண்யா



நீ என்னோடு இல்லையென்ற நிஜத்தை
நீ என்னோடு இருப்பதான நினைவுகள்
தோற்கடிக்கின்றன ; நீ என்னோடு
இல்லையென கேலி செய்கையில் பிம்பமற்ற
நிழலாய் வந்து வேலியென நிற்கிறாய் நீ

கடற்கரை மணலில் என் கால்தடங்களின்
அருகில் உன் கைபிடித்து வரும் இடைவெளிதாண்டி
இல்லாத உன் பாதச்சுவடுகள் இருப்பதாகவே
எண்ணி மகிழ்கிறேன் எப்பொழுதும் நான்

என்னை சுற்றி ஒலிக்கும் எத்துணையோ
சப்தங்களுக்கு மத்தியில் உன் குரல்நான்கள்
எழுப்பிய ஒலிகள் மட்டும் என்னுள் சங்கீதமாய்
வீணை மீட்டிகொன்டே இருக்கிறது

வருடங்கள் ஓடினாலும் வயதே கூடினாலும்
சித்திரை வெயிலிலும் நித்திரை கொள்கிறேன்
உன் மார்பின் கதகதப்பில் என் தலை வைத்து
உறங்கிய அந்த சிறு நாட்களோடே ஒவ்வொரு
இரவும் உறக்கம் கொள்கிறேன் நான்

எவ்வளவு சோகங்கள் என்னை சூழ்ந்தாலும்
உன்னோடு வாழ்ந்த நாட்கள் மனதில் ஓட
மகிழ்ச்சி கொட்டும் ;எத்துனை வேகமாக வந்தாலும்
என்னை தாண்டி செல்ல மறுக்கிறது உன் நினைவுகள்

எல்லாவித அழகு ஆடைகளை வாங்கியும்
அழகு குறைந்தே தோன்றுகிறது பெட்டியில்
பொக்கிசமாய் உறங்கும் நீ வாங்கித்தந்த
பாவாடை சட்டையின் அழகின் முன்

அந்நாட்களில் களைத்து இறங்கி வந்து
இழைத்த உடம்போடு உணவு உண்கையில்
உழைத்த உன்மீது வரும் வியர்வை நறுமணத்தை
வாசித்துகொண்டே இந்நாட்களில் தினமும்
உண்கிறேன் என் மதிய உணவை

ஊராரும் உடனிருப்போரும் நீ இல்லையெனலாம்
என்னுள்ளிருக்கும் உன்னை என்னையன்றி
உன்னால் கூட உணரமுடியாது "அப்பா " -இவள்
உன் உணர்வுகளை சுவாசித்து வாழ்வைநேசிப்பவள்

நான் பட்டாம்பூச்சியாய் பறந்து திரிந்தாலும்

ஜான் குனிந்து கீழே பார்த்து ஒரு பொருளை எடுத்தான். அது ஒரு கைத்துப்பாக்கி என்று தெரிந்துகொள்ள அவனுக்கு நொடிப்பொழுது கூட அவசியம் இல்லாமல் போனது. கைத்துப்பாக்கியைப் பிடித்துக்கொண்டே ஸ்டீபனை புரியாமல் நோக்கினான்.

"நான் சுடலனா அவன் நம்மள சுட்டு இருப்பான்" என்று சாலையை பார்த்துக்கொண்டே ஸ்டீபன் மெல்லிய குரலில் கூறினார்..

◆◆◆

திவாகர் அந்த விருந்தில் யாரையோ தேடிக்கொண்டிருந்தான். ஒவ்வொருவரின் முகத்தினையும் நோட்டமிட்டபடி எதையோ ஒன்றை தான் கண்டுபிடித்துவிட்டதாகவும் அது ஆபத்தின் அறிகுறியாகவும் இருக்கப்போகிறதென்று அவன் மனதினுள் ஒரு எச்சரிக்கை மணி ஒலித்துகொண்டே இருந்தது. பரத்தின் ஆள்கள் திவாகரை தேடிக்கொண்டிருந்தனர். திவாகர் சிந்தனையோடு எல்லோருடைய முகத்தினையும் பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டு அவனருகே சென்றனர்.

"எங்கே சென்றாய்?" என்றான் ஒருவன்.

"இவன் அடி வாங்கினால் தான் அடங்குவான்" என்று மற்றொருவன் அவனுக்குப் பதிலுரைத்தான்.

அவற்றையெல்லாம் அசட்டை செய்து, "பரத் எங்கே?" என்றான் திவாகர்.

"எதற்கு?" என்றான் ஒருவன்.

"உங்களுக்கு விளக்கம் கூறி நேரத்தை விரயம் செய்ய விரும்பவில்லை. பரத் எங்கே?" என்றான் அவசரத்தோடு.

அவன் அவசரத்தை புரிந்துகொண்ட அடியாட்களும் பரத்திடம் அவனை கூட்டிச் சென்றனர். பரத்திடம் சென்றதும் திவாகர் படபடப்போடு கூறத் துவங்கினான்.

"இங்க ஒரு தப்பு நடந்திருக்கு"

"என்ன?" என்று பரத் அலட்சியமாக கேட்டான்.

"இங்கு எல்லா மாபியா தலைவர்களும் இருக்காங்களா?" என்று கேட்டான் திவாகர்.

'தேவையிலாத கேள்வி' என எண்ணி, "இப்போ உனக்கு என்ன பிரச்சனை?" என்று பெருமூச்சை விட்டெறிந்தான் பரத் .

"ஒருத்தர காணும்" என்று நிறுத்தினான் திவாகர்.

பாரத்தின் முகம் இறுக்கம் கொண்டது. "யார காணும்?"

"கிறிஸ்டின்!" என்று மெல்லிய குரலில் கூறினான் திவாகர்.

பரத் தன் கண்களை ஓட்டி கிறிஸ்டின் இருக்கிறாரா? என்று ஆராய்ந்தான். அங்கு கிறிஸ்டின் இல்லை.

"பிரச்சனை ஆரம்பமாயிடுச்சினு நினைக்கிறேன்" என்றான் திவாகர் அரண்ட விழிகளுடன்.

◆◆◆

ஒரே ஒரு வண்டி தவிர எல்லா கடத்தல் லாரியும் பிடிபட்டுவிட்டது. அந்த வண்டிக்காகக் காத்துக்கொண்டிருந்தனர் போலீஸ் படை. அவர்களுடன் ஜானும் ஸ்டீபனும் இருந்தனர்.

தூரத்தில் ஒரு லாரியின் விளக்கு வெளிச்சம் அவர்கள் கண்களில் பட்டது.

"அந்த லாரியா தான் சார் இருக்கும்" என்று கூறினான் ஜான்.

"வரட்டும். இன்னைக்கு நமக்கு செம வேட்டை. கிறிஸ்டின சுலபமா கைது பண்ணிடலாம்ல?"

"நிச்சயமா சார்"

அவர்கள் பேசி முடிப்பதற்குள் லாரியின் விளக்கு வெளிச்சம்.அவர்களின் முகத்தினில் அறைந்தது. லாரியை நிறுத்தும்படி ஸ்டீபன் சைகை காட்டினார். ஆனால் லாரி நிற்கவில்லை. போலீஸ் கார்களை இடித்து தள்ளி பறந்தது. போலீஸார் சாலையின் ஓரத்தில் விழுந்து தப்பித்தனர். அவர்கள் மீண்டும் எழுந்து லாரியை நோக்கிய காட்சியை இடது பக்கமுள்ள லாரியின் சைடு மிரரில் பார்த்தான் லாரி ஓட்டுனர். கூரிய விழிகளுடன் அவனது இதழில் விஷமப் புன்னகை தவழத் துவங்கியது.

தொடரும்...

# சமையல்: செட்டிநாடு புளி குழம்பு/பூண்டு குழம்பு

ஜெயஸ்ரீ

**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| சின்ன வெங்கயம் | 1 கப் (பொடியாக நறுக்கியது) |
| தக்காளி | 5 (பொடியாக நறுக்கியது) |
| பூண்டு | 30 பல் |
| மல்லி பொடி | 3 டீஸ்பூன் |
| தேங்காய் | 1/2 கப் (தனியாக அரைத்தது) |
| புளிக்கரைசல் | தேவைக்கேற்ப |
| உப்பு | தேவைக்கேற்ப |
| நல்லெண்ணெய் | தேவைக்கேற்ப |
| கருவேப்பிலை | தாளிக்க |
| கடுகு | தாளிக்க |

**தனியாக வதக்கி அரைப்பதற்கு**

| | |
|---|---|
| கடலை பருப்பு | 5 டீஸ்பூன் |
| அரிசி | 3 டீஸ்பூன் |
| காய்ந்த மிளகாய் | 8 |
| சின்ன வெங்கயம் | 1 கப் (பொடியாக நறுக்கியது) |
| தக்காளி | 5 (பொடியாக நறுக்கியது) |

**செய்முறை**

கடாயை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி கடலை பருப்பு , அரிசி, காய்ந்த மிளகாய், சின்ன வெங்காயம் , தக்காளி சேர்த்து பொன்னிறமாக நன்கு வதக்கவும்.

பின்னர் இதனை ஆற வைத்து அரைத்து கொள்ளவும்.

மற்றொரு கடாயை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி கடுகு, சின்ன வெங்காயம், கருவேப்பிலை சேர்த்து பொன்னிறமாக நன்கு வதக்கவும்.

வெங்காயம் நன்கு வதங்கிய பின், உரித்த பூண்டு பற்களை(இரண்டாக கீறி கொள்ளவும்) சேர்த்து வதக்கவும்.

இந்த கலவை நன்கு வதங்கியதும் பொடியாக நறுக்கிய தக்காளி சேர்த்து, தக்காளி மசியும் வரை வதக்கவும்.

பின்னர் அரைத்த தக்காளி - வெங்காய கலவை, மல்லி பொடி, ஒரு குழி கரண்டி நல்லெண்ணெய் சேர்த்து பொன்னிறமாக வதக்கவும்.

இவையனைத்தும் வதங்கியதும், அரைத்த தேங்காய், தேவைக்கேற்ப புளிக்கரைசல் மற்றும் தண்ணீர் சேர்த்து எண்ணெய் பிரியும் வரை கொதிக்க வைத்து இறக்கவும்.

எத்தனை நபர்களுக்கு:

10 நபர்கள் வரை

தயாரிக்க ஆகும் கால அளவு:

30 முதல் 1 மணி வரை

# உறவைத் தேடும் உயிர் - 15

சிவாஜிதாசன்

உடலெங்கும் வைர முலாமைப் பூசியபடி மின்னிக்கொண்டிருந்த ஒரு குதிரை, இரவின் குளிர்ச்சியாலும் பால் நிலாவின் கொள்ளைகொள்ளும் அழகின் ஈர்ப்பாலும் தன் விசாலமான சிறகை பட படவென அடித்துக்கொண்டு வானை நோக்கிப் பறக்க, குதிரை பறக்கும் சத்தம் துயில்கொண்டிருக்கும் குழந்தையின் உறக்கத்தைக் கலைக்குமோ என்ற அச்சத்தில் குழந்தையை மெல்ல அணைத்துக்கொண்டான் வசந்தன்.




ஷோபனா, 'தனக்கு முக்கிய வேலை ஒன்று இருப்பதாகவும் திரும்பி வர நேரமாகலாம் என்பதால் குழந்தையை உங்களுடனே வைத்துப் பராமரிக்க முடியுமா?' என்றும் கேட்டுக்கொண்டதால் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டான் வசந்தன். 'எங்கே செல்கிறீர்கள்? என்ன வேலை?' என்று அவன் கேட்க விரும்பவில்லை. இது வரை யாரிடமும் குழந்தையைக் கொடுக்காமல் தன்னுடனேயே வைத்துக்கொண்டிருந்த அவள், தனக்கு இப்பொறுப்பை வழங்கி இருக்கிறாள் என்பதால் அவ்வேலையின் முக்கியத்துவத்தை அவன் உணர்ந்துகொண்டான்.

வீட்டினுள் குழந்தையை எடுத்துக்கொண்டு சென்று பஞ்சணையில் படுக்கவைத்து பிஞ்சு கைகளுக்கு முத்தம் கொடுத்து நெஞ்சை மயிலிறகால் வருடி உறக்கத்தைக் குழந்தைக்குக் கொடுத்து

தூங்கவைத்தான் வசந்தன். குழந்தை தூங்கிய பின்னும் அதன் பால் வடியும் முகத்தையே புன்முறுவலோடு வெறித்துக்கொண்டிருந்தான்.

குழந்தை தூங்கும்வரை பொறுமையோடு காத்திருந்த ராஜீவ் தனது பேச்சைத் துவங்கினான்.

"வசந்தா!" என்றான். குழந்தையின் உறக்கம் கலையக்கூடாது என்பதில் உறுதியாக இருந்ததால் மிக மெல்லிய குரலில் அழைத்தான். ராஜீவை திரும்பிப் பார்த்தான் வசந்தன்.

"உன்னிடம் சில விஷயங்களைப் பற்றிப் பேச விரும்புகிறேன். உன் விளக்கங்கள் தேவை"

"தாராளமாக கேள் நண்பா!" என்றான் வசந்தன்.

"உன் நடவடிக்கைகளில் மாற்றங்கள் தெரிய ஆரம்பித்துள்ளன. என்னிடம் உண்மையை மறைக்க வேண்டுமென்று நினைக்கிறாய்"

"எதனால் இந்தத் திடீர் சந்தேகம்?" என்று குழப்பத்தோடு கேட்டான் வசந்தன்.

"உன் கண்களுக்கு மெமோரியல் உலகம் புலப்பட்டது. திடீரென்று ஒருத்தி வந்தாள். உன்னிடம் ஒரு பெட்டியைத் திணித்தாள். மாயமாய் மறைந்து போனாள். யாரென்று கேட்டால் புதிய தோழி என்றாய். இதற்கு சரியான விளக்கங்களை இது வரை நீ தரவில்லையே?" என்றான் இறுக்கமான முகத்தோடு ராஜீவ்.

"நண்பா, முதலில் ஒன்றை நீ உணர்ந்துகொள்ளவேண்டும். நீ எனது நண்பன். நான் இவ்வுலகத்தில் சஞ்சரித்த மறுநாளிலிருந்து நீ தான் என்னை வழி நடத்தினாய். உன்னிடம் மறைக்கவேண்டுமென்று எண்ணியதில்லை. எனக்கே பல உண்மைகள் விளங்கவில்லை. நானே விளங்காமல் தவிக்கும் நேரத்தில் என் நிலையை உனக்கெப்படி விளக்கிக் கூற முடியும்? சிறிது காலம் செல்லட்டும். முழுதாய் புரிந்தபின் உன்னிடம் நிச்சயம் கூறுவேன்"

வசந்தன் தன்னிடம் கூறிய பதிலைக் கேட்டு ராஜீவ் திருப்தி அடையாவிட்டாலும் அரைமனதோடு "சரி" என்று தலையசைத்தான். இருவரும் உறங்கச் சென்றனர். வசந்தன், மெல்லிய போர்வையை எடுத்து குழந்தையின் கழுத்துவரை போர்த்திவிட்டு சாளரத்தின் வழியே அவ்வுலகின் அழகை ரசிக்கத் துவங்கினான். எல்லையற்று விரிந்திருக்கும் வைரக் கம்பளம் போல் மின்னிக்கொண்டிருக்கும் அவ்வுலகின் பேரானந்தத்தை ரசிக்கக் கோடி கண்கள் வேண்டுமென்று எண்ணினான்.

அபர்ணா கொடுத்திருக்கும் வைரப்பெட்டியை நோக்கிவிட்டு, ராஜீவ் உறங்கிவிட்டானா? என்று ஒரு முறை உறுதி செய்துகொண்டு அந்த வைரப் பெட்டியை ஒலியெழுப்பாமல் திறந்து பார்க்க ஆசைப்பட்டு தாழ்ப்பாளைத் திறந்து மேல் பாகத்தை மெல்ல தூக்கியபோது பளிச்சென்ற ஒளி அவன் வீட்டினுள் மின்னல் போல வந்து போனது. உடனே, பெட்டியை மூடி திரு திருவென்று விழித்தான். திரும்பி குழந்தையையும் ராஜீவையும் நோக்கினான். அவர்கள் இன்னும் உறங்கியபடியே இருந்தார்கள். நீண்ட பெருமூச்சு வசந்தனிடமிருந்து வெளிப்பட்டது. 'என்ன செய்யலாம்' என்று யோசித்தான். 'பெட்டியைத் திறந்தால் அதிலிருந்து குமிழும் ஒளி ராஜீவை நிச்சயமாக விழிக்க வைத்துவிடும். என்ன செய்யலாம்?' என்று சிந்தித்து இறுதியாக ஒரு முடிவுக்கு வந்ததைப் போன்று

தலையாட்டினான். அடுத்த வினாடி எழுந்து குழந்தைக்கு அன்பு முத்தத்தை பதித்துவிட்டு பெட்டியை எடுத்துக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறினான். வசந்தன் வெளியே செல்லவும் ராஜீவ் கண்களைத் திறந்து கவனிக்கவும் சரியாக இருந்தது.

வீட்டை விட்டு வெளியே வந்தவுடன் சிறிது நிம்மதி கலந்த மூச்சை வெளியேற்றினான் வசந்தன். தன் நண்பனிடம் உண்மையை மறைக்கின்றோமே என்று லேசாக வருந்திய மனதோடு இரண்டு அடிகள் முன்னே வைத்தான். அப்பொழுது சிறிது தூரத்தில் ஒரு பெண் நடந்து போவது தெரிந்தது.

'யார் இந்நேரத்தில் நடந்து போவது?' என்று எண்ணியபடி அவளைப் பின்தொடர்ந்தான். ஒரு வளைவில் அவள் கடக்கும்போது அவளின் பக்கவாட்டு முகத்தை நோக்கினான் வசந்தன். அவள் யார் என்பதையும் தெரிந்துகொண்டான். வேறு யாருமல்ல, ஷோபனாவே தான். 'இந்நேரத்தில் அவள் எங்கே செல்கிறாள்? அதுவும் தனியாக?' என்று எண்ணியபடி அவளைப் பின்தொடர்ந்தான்.

ஒரு காட்டு வழிப் பாதையில் பயணமானாள் ஷோபனா. காட்டில் உள்ள மரங்கள் ஒளிரும் வைரமாகவும் அதன் இலைகள், பழங்கள் எல்லாம் மின்னும் நட்சத்திரங்களாகவும் இருக்க, பளிச்சென்ற ஒளியோடு சிறிது கும்மிருட்டும் கலந்ததால் மங்கிய ஒளி அக்காட்டை அலங்கரித்திருந்தது. கூட்டிலிருக்கும் பறவைகள் தங்கள் சங்கீதங்களைப் பாட காற்றில் மரக்கிளைகள் ஆடி மத்தளம் கொட்டின. காட்டினில் திரியும், இரவினில் மட்டும் இரை தேட வரும் மிருகங்களும் இது வரை பார்த்திராத பறவைகளும் வந்தன.

பறவைக் கூட்டம் மரங்களைக் கடந்து செல்கையில் ஒரு வினாடி தன்னை நிறுத்தி பறவைகளின் அழகை ரசிக்கத் துவங்கினாள் ஷோபனா. வசந்தனும் பறந்து சென்றுகொண்டிருக்கும் நீல நிற ஒளி கமிழும் அப்பறவைகளை ரசித்தான். நீல நிற வைரம் போல் ஜொலிக்கும் அந்தப் பறவைகள் ஒரு பட்ட மரத்தை வட்டமடித்தன. 'அவை ஏன் அப்படி செய்கின்றன?' என்று புரியாமல் பறவைகள் செய்யும் காரியத்தை எதிர்பார்ப்பு கலந்த ஆச்சர்யத்தில் நோக்கினான்.

பட்டுப்போன மரத்தைச் சுற்றி தங்கள் மேல் சுமந்திருந்த ஒளியை மரம் முழுதும் கமிழவிட்டு சிறகடித்தபடி இருந்தன. சிறிது நேரத்தில் ஓர் அற்புதக் காட்சி அங்கு நடந்தது. பட்டுப்போன அந்த மரம் மீண்டும் உயிர்பெற்று கனிகளை உடைய மரமாக மாறியது. அதிசயத்தில் அசந்து போய், நின்ற இடத்திலேயே நின்றுவிட்டான் வசந்தன். மரத்திற்கு உயிர் கொடுத்த பின் அப்பறவைகள் மாயமாய் மறைந்து போயின. எப்படி மறைந்தன என்று அவனால் தெரிந்துகொள்ள முடியவில்லை.

ஷோபனா இருந்த இடத்தை நோக்கினான். அங்கே அவளைக் காணவில்லை. என்ன இவளும் மறைந்துவிட்டாள்? என்று அதிர்ச்சியாகி அவள் எங்கு சென்றாள்? என்று எண்ணியபடியே சுற்றும் முற்றும் தேடினான். அவள் நடந்து சென்ற பாதையில் அவனும் நடந்து போனான். தன் கையில் வைத்திருந்த பெட்டியை இறுகப் பிடித்தபடி தேடுதல் பார்வையை வீசினான்.

திடீரென்று ஒரு மரத்தின் பின்னால் எழுந்த சலசலப்பு அவனை திடுக்கிடவைத்து அவன் பார்வையைத் திருப்பியது. ஷோபனா ஒரு மரத்தின் பின்னால் சாய்ந்தவாறு நின்றிருந்தாள்.

அவளைப் பார்த்ததும், 'தன் குட்டு வெளிப்பட்டுவிட்டதே? இப்பொழுது இவளிடம் என்ன பதில் கூறப்போகிறோம்?' என்று தலையை வேறு பக்கம் திருப்பி சிந்தித்தான். ஆனால், ஷோபனா அவனை சிந்திக்க விடவில்லை.

"எதற்காக என்னைப் பின்தொடர்கிறீர்கள்?" என்றாள்.

"நீங்கள் தவறாக எண்ணி இருக்கிறீர்கள். நான் உங்களைத்

## மறுபடியும் பிறப்பாயோ எனக்காய்...

கனகீஸ்வரி

வசதியில்லா என் வீட்டில்
அம்மா தரையில் சேலை விரித்தும்
அப்பா கோணியிலும்
நாங்கள் மூவரும் ஒற்றைபாயில்
கோடு கிழித்தும் உறங்கியதுண்டு....

நட்ட நடுஇரவில் கோட்டை தாண்டிய
என் தமையனை தள்ளிவிட்டு
ஒருவருக்கொருவர் கோபம்கொண்டு
சண்டையிட்டு உறக்கம் தொலைத்ததுண்டு......

அம்மா வைத்த கடுங்காபி சுவை
இன்றும் நாக்கில் ஒட்டியபடி......
தாம்பாளத்தில் சோறு போட்டு
ஆளுக்கொருவாய் உருண்டை
சோறு உண்ட நினைவுன்டு.........

அண்ணா என நான் அழைக்காதற்காய்
என்னை கொட்டிய என் தமையனை
பட்டப் பெயர் வைத்து அழைத்து
மீண்டும் அடிவாங்கியதும் நினைவுண்டு.....

பட்டன் இல்லா சட்டையில்
என் வயிறு தெரிய
மேடையில் பரிசு வாங்கிய
புகைப்படம் பார்க்கையில் மனம் கனப்பதுண்டு.....

காலனி இல்லாமல் கால் கொண்டே
நடந்து படித்த பக்கத்து ஊர் பள்ளியும்
பயிற்று வித்த ஆசிரியரும்
மனக் கண்ணில் இன்றும் நினைவில்....

வறுமை என்னை ஒரு போதும்
அழவைத்ததே இல்லை அன்று
அம்மா உடன் இருந்ததால்......
இன்று வறுமையும் இல்லை அம்மாவும் இல்லை.......

கட்டில் மெத்தை இருக்கு
ஓட்டு வீடும் கூட மாடிக்கட்டிடமாச்சி
தினம் ஒன்று உடுத்தவும் இருக்கு
ஆனாலும் நீ மட்டும் இல்லையே அம்மா

வாய்க்கு ருசியா ஆக்கி போடணும்
உன் மடியில படுத்துகிட்டு
கதை பேசி தூங்கணும்
மறுபடியும் பிறப்பாயோ அம்மா நீ எனக்காய்...

தேடி வரவில்லை. எதேச்சையாக இங்கு வந்தேன். உங்களைப் பார்த்தேன். அவ்வளவு தான்"

"வீட்டிலிருந்தே எதேச்சையாகத் தான் வந்தீர்களோ?" என்றாள்.

தான் வருவதை இவள் முதலிலேயே தெரிந்துகொண்டாள் என்று வசந்தனுக்கு தெரிந்ததும் மேற்கொண்டு இவனால் எதைக் கூறியும் தன்னை நியாயப்படுத்த முடியவில்லை. மரத்தினில் சாய்ந்திருந்தவள் நடக்கத் துவங்கினாள். வசந்தனைக் கடந்து செல்லும்போது சுடும் பார்வையை அவன் மீது வீசினாள்.

"உங்களை நம்பி குழந்தையை ஒப்படைத்தேன். இது தான் நீங்கள் பாதுகாக்கும் லட்சணமா?" என்றாள் முன்னே நடந்தபடி.

"ராஜீவ் இருக்கிறான். சிறு வேலையாக இங்கு வந்தேன்" என்றான் வசந்தன்.

"அது என்ன கையில் பெட்டி?"

வசந்தன் பதில் தெரியாமல் விழித்தான்.

"உங்கள் புது தோழி கொடுத்தது தானே?" என்றாள் சிறு பரிகாசத்தோடு அனலையும் கலந்து.

"அவள் தான் கொடுத்தாள். ஆனால் அவள் என் தோழியல்ல"

"வேறு யார் ?" என்றாள் ஷோபனா.

"உங்களைப் போன்று ஒரு முறை என்னைக் காப்பாற்றியவர்" என்றான் வசந்தன்.

புரியாத பார்வையை வசந்தனிடம் சில விநாடிகள் நிலைக்கவிட்டாள் ஷோபனா.

"மெமோரியல் உலகில் ஓர் ஆபத்து என்னைச் சூழ்ந்தது. அதிலிருந்து அவள் தான் என்னைக் காப்பாற்றினாள். அதற்கு பிரதிபலனாக என்னிடம் உதவி எதிர்பார்த்தாள். இது தான் எங்களின் சிநேகிதம். இதைச் சிநேகிதம் என்று சொல்வதை விட வியாபாரம் என்று சொல்லலாம்"

"மெமோரியல் உலகிலிருந்து காப்பாற்றினாளா?" என்று ஷோபனா அதிர்ச்சியானாள். 'யாராக இருக்கும்?' என்று மனதினுள் கேள்வியை எழுப்பினாள்.

வசந்தன், பறவைகள் உயிர் கொடுத்த மரத்தை நோக்கினான். அதிலிருந்து ஒளிரும் கனிகளை ஒரு முறை நோக்கிவிட்டு, "அந்தப் பறவைகள் இறந்து போன மரத்திற்கு எப்படி உயிர்கொடுத்தன?" என்று வினவினான்.

"அம்மரம் இறந்து போகவில்லை. சிறிது உயிர் இருந்தது. அந்த பறவைகள் மற்ற பறவைகளைப் போல் அல்ல. உயிர் கொடுக்கும் பறவைகள். இறந்து போவதற்கு சிறிது நேரத்திற்கு முன் அப்பறவைகள் வந்தால் அவற்றால் நிச்சயம் பிழைக்க வைக்கமுடியும்" என்றாள்.

"அப்படியா?" என்றான் ஆச்சர்யத்தோடு வசந்தன்.

"ஆனால், அந்தப் பறவைகள் சாதாரணமாக வந்து உயிர் அளித்துவிடாது. நடத்தையில் நேர்மையும், பேச்சில் உண்மையும், மனதினில் கருணையும் கொண்டிருப்போரை மட்டுமே காப்பாற்றும்"

"அதிசயம்!" என்றான் மெல்லிய குரலில் வசந்தன்.

ஷோபனா சிறிது தூரம் நடந்து சென்றாள். வசந்தனும் பின்னால் நடந்து சென்றான். இருவருக்குள்ளும் மௌனமே பேசிக்கொண்டிருந்தது. ஓரிடத்தில் மரங்கள் பாதையை மறைத்துக்கொண்டிருந்தன. யாரும் அதற்குள் நுழையமுடியாதபடி தங்கள் கிளையைப் பரப்பி இருந்தன. ஷோபனா மரங்களை நகருமாறு சமிக்ஞை செய்தாள். மரங்களும் அவளுக்கு வழிவிட்டன. அதில் வசந்தனும் ஷோபனாவும் பயணமானார்கள். சிறிது தூரம் நடந்ததும் பெரிய வெண்ணிற முத்து ஒன்று, நிலவு ஒளியைப் போல் மோகனக் கதிரை உமிழ்ந்துகொண்டிருந்தது.

"என்ன இது?" என்று கேட்டான் வசந்தன்.

அதற்கு மறுமொழி சொல்லாமல் முத்தைத் திறந்தாள் ஷோபனா. உள்ளே ஒரு பறவை முட்டை கிடந்தது. வசந்தன் நடக்கும் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தான்.முட்டை லேசாக அசைந்தது. சின்ன விரிசல் ஒன்று வெளிப்பட்டது. வசந்தன் கண்ணிமைக்காமல் நோக்கியபடி இருந்தான். விரிசல் பெரிதானது. அவ்விரிசலை உடைத்து பறவைக் குஞ்சின் தலை வெளிப்பட்டது. முட்டையிலிருந்து முழுவதுமாக வெளிவர போராடிய அந்தக் குஞ்சிற்கு உதவ வசந்தன் முனைந்தபோது, ஷோபனா அவனைத் தடுத்தாள். 'ஏன் தடுக்கிறாய்?' என்பதைப் போல் பார்த்தான் வசந்தன்.

"பறவை, முட்டையிலிருந்து முழுவதுமாய் வெளிவரும் வரை நாம் எதுவும் செய்யக்கூடாது. அப்படி ஏதேனும் செய்தால் அப்பறவை இறந்து விடும்" என்றாள் ஷோபனா. குஞ்சு, முட்டையிலிருந்து முழுவதும் வெளிவந்தவுடன் அதை எடுத்து தனது உள்ளங்கையில் வைத்து மெதுவாக வருடினாள். அவள் உள்ளங்கை கதகதப்பில் தாயின் அரவணைப்பு கிடைத்தது போன்று கண்களை மூடி ரசிக்கத் துவங்கியது பறவைக்குஞ்சு.

"இந்த பறவைக்குஞ்சு அந்த மரத்திற்கு உயிர் கொடுத்த பறவை இனத்தைச் சேர்ந்தது தானே?" என்றான் வசந்தன்.

'ஆமாம்' என்பது போன்று தலையசைத்தாள் ஷோபனா.

"மற்றவர்களுக்கு உயிரைக் கொடுக்கும் இவற்றுக்கு தங்களைக் காத்துக்கொள்ளத் தெரியாது. ஒரு நாள் இதன் தாய்ப் பறவை கூட்டினுள் இறந்து கிடந்தது. அதன் அருகில் அதனுடைய முட்டை இருந்தது. அதைப் பாதுகாத்து வைத்திருந்தேன். அதற்கான பலன் இன்று கிடைத்திருக்கிறது" என்றாள் அவள்.

வசந்தன் அப்பறவைக்குஞ்சையே வாஞ்சையோடு ரசித்துக்கொண்டிருந்தான். மீண்டும் அந்தப் பெரிய முத்தினுள் அந்தப் பறவைக்குஞ்சை விட்டுவிட்டு அங்கிருந்து புறப்பட்டனர் இருவரும்.

"நீங்கள் கூறிய முக்கிய பணி இது தானா?" என்றான்.

அது வரை சிரித்த முகமாக இருந்த அவளின் முகம் மாறியது. 'இல்லை' என்பது போன்று தலையசைத்து மேலிருக்கும் பால்நிலவை நோக்கினாள். 'நேரமாகிவிட்டது' என்று தனக்குள் முணு முணுத்துக் கொண்டாள்.

"எங்கே செல்லப்போகிறீர்கள்?" என்றான் வசந்தன்.

"மெமோரியல் உலகின் சிறைக் காவலுக்கு"

"சிறைக் காவலுக்கா?"

"ஆம், அங்கு தான் செல்லவேண்டும். பின்னொரு நாளில்

## போட்டியோ போட்டி!

யாழ்பாவாணன்

*கொதித்துப் பொங்கியெழும்பும்*
*நெருப்புக் குழம்பான*
*ஞாயிற்றுக் கதிரை விட*
*ஞாயிற்றுக் கதிரையே*
*தான் பெற்றுத் தரும் ஒளி பெரிதென*
*ஞாயிறு - நிலவு மோதுவதும்*
*போட்டியோ போட்டி!*

*இயற்கையின் இயல்பழகு*
*செயற்கையின் தனியழகு*
*இரண்டையும் - பாவலன்*
*எண்ணிய எண்ணப்படி பாபுனைய*
*இயற்கையால் அமைந்த*
*நம்மவூருப் பெண்ணழகுக்கும்*
*செயற்கையால் அமைக்கும்*
*நம்மவூருப் பெண்ணழகுக்கும்*
*போட்டியோ போட்டி!*

*இயற்கை உணவோடு*
*இயற்கை நடைமுறையோடு*
*வாழும் நம்முறவுகளுக்கும்*
*செயற்கை உணவோடு*
*செயற்கை நடைமுறையோடு*
*வாழும் நம்முறவுகளுக்கும்*
*நெடுநாள் வாழ்வோர் எவரென*
*போட்டியோ போட்டி!*

*படித்துப் பட்டமும் பெற்றோர்*
*ஒப்புக்குச் சாட்டும் சுட்டி*
*தம் கருத்தை மெய்ப்பிக்க*
*பட்டறிவே பெரிதெனப் பெற்றோர்*
*பட்டதையே சொல்லி வைத்து*
*தம் கருத்தை மெய்ப்பிக்க*
*எடுக்கும் முயற்சிகள் எல்லாமே*
*போட்டியோ போட்டி!*

*பணப் படைத்தோர் பிள்ளை*
*முன்னணிப் பள்ளியில் படிக்க*
*ஏழை வீட்டுப் பிள்ளை*
*பின்னணிப் பள்ளியில் படிக்க*
*கையூட்டு வேண்டும் ஆசிரியரிருக்க*
*ஏழைக்கு எழுத்தறிவித்தவர் இறைவனாவாரென*
*பாரதி சொன்னபடியுள்ள ஆசிரியரிருக்க*
*நம்ம நாட்டுப் பிள்ளைகள் படிப்பதும்*
*போட்டியோ போட்டி!*

*போட்டிகள் வேண்டும் உறவுகளே...*
*போட்டியால் வெளிப்படும் பெறுதிகள்*
*நம்முறவுகளுக்கும் நம்நாட்டுக்கும்*
*நன்மை அளிக்க வேண்டியே*
*நாடு, இன, மத, மொழி, இட வேறுபாடின்றி*
*பங்காளிகள் பங்கேற்கையிலே*
*நன்மைகள் விதைக்கப்படும் வேளை*
*போட்டியோ போட்டி!*

விரிவாக பேசலாம். எனக்கு நேரமாகின்றது" என்று கூறி வானை நோக்கி ஒளியாகப் பறந்து சென்றாள் ஷோபனா.

அவள் ஒளியாக செல்வதைச் சில நிமிடங்கள் வெறித்தபடியே இருந்தான். அவன் பின்னாலிருந்த மரங்கள் மீண்டும் பாதையை மறைத்துக்கொண்டன. அதைப் பார்த்து பெருமூச்சை விட்டெறிந்து, சிறிது தூரம் நடந்தான். பின்னர் ஓரிடத்தில் நின்று தன்னை யாராவது மறைந்திருந்து கண்காணிக்கின்றார்களா? என்று உறுதி செய்த பின் பெட்டியைத் தரையில் வைத்து சில வினாடிகள் அமைதிகாத்தான். பிறகு பெட்டியை மெல்லத் திறந்தான்.

மின்னல் போன்ற ஒளி காடு முழுவதும் ஆக்கிரமித்து மின்னிக்கொண்டிருந்த மரங்களை எல்லாம் இருள் சூழச் செய்தது. திடீரென்று பேரிரைச்சலோடு ஒரு சூறாவளி அங்கே தோன்றி அவனைத் தூக்கி எறிந்தது. நிலைதடுமாறி எழுந்து நின்றான். அவனால் நிலையாக நிற்க முடியவில்லை. புயல் அவனை இழுத்துக்கொண்டு சென்றது. அவனைச் சுற்றிப் பல நிழல் உருவங்கள் தோன்றின. வசந்தன் திடுக்கிட்டான். நிழல் உருவங்களின் முகம் கொடூரத் தன்மையும் இரக்கமின்மையும் கொண்டவையாக இருந்தன. வசந்தனை எல்லாத் திசைகளிலும் தாக்கி உயரே தூக்கி எறிந்தன.

கீழே விழுந்த வசந்தனின் உள்ளத்தில் கோபம் கொழுந்துவிட்டெரிந்தது. அவன் உடல் முழுதும் நெருப்பு படர்ந்து, சுழன்றடிக்கும் காற்றினில் அவன் உடலைப் பற்றி எரிந்திருந்த தீ மரங்களுக்கும் பரவி எரியத் தொடங்கின. தன்னைத் தாக்கிய நிழல் உருவங்களை நோக்கி தீயிட்டு அவைகளை எரித்தான். நிழல் உருவங்கள் கோர சத்தத்தோடு எரிந்து சாம்பலாகிப் போயின. 'என்ன நடக்கின்றது? தன் உடல் ஏன் எரிகின்றது?' என்று பயந்து அங்கிருந்து ஓடினான். அவன் ஓட ஓட மரங்களுக்கும் தீ பரவி அவை கொழுந்துவிட்டு எரியத் துவங்கின.

திடீரென்று அவன் முன் ஒரு புலி வந்து நின்றது. அதன் விழிகள் நெருப்புத்துண்டு போல அனலைக் கக்கின. உடல் முழுதும் கருநிறப் புகை படர்ந்து அவனைத் துரத்தியது. வசந்தன் பயந்து ஓடினான்.

புகை ஒரு நீர்ப் பறவையாக மாறி எரிந்துகொண்டிருந்த மரங்களின் மேல் தண்ணீரைப் பீய்ச்சியடித்தபடி வசந்தனைத் துரத்தி அவன் மேலும் நீரைப் பீய்ச்சி அடித்து எரிந்திருந்த அவனை அணைத்து தானும் அழிந்து போனது. என்ன நடக்கின்றது? என்று ஒன்றும் புரியாமல் விழித்தான் வசந்தன்.

திடீரென்று, வசந்தனின் முன் அவனைப் போலவே உருவமுள்ள ஒருவன் ஒளியாகத் தோன்றினான். அவனுடன் ஓல்ட்மனும் தோன்றினார். இருவரும் ஒன்றாகக் கலந்து அபர்ணா அங்கு நின்றாள். இறுதியில் அவளும் மறைந்து போக சூறாவளிக் காற்று மொத்தமும் அந்தப் பெட்டியினுள் சென்று மீண்டும் மரங்கள் மிளிரத் துவங்கின.

வசந்தன் கீழே கிடந்த அந்தப் பெட்டியையே வெறித்தபடி இருந்தான்.

தேடல் தொடரும்...

# என்றும் என் தோழியவள்...

ஜோஷி

பக்கத்து வீட்டில் குடியிருந்து
அறிமுகம் ஆனாய்
எதிரெதிர் பார்க்கையில் புன்னகையால்
பழக்கம் ஆனாய்
தண்ணீர்க் குழாயடியில் பேசிபேசி
தோழமை யானாய்!
ஒருவடொருவர் மனம்விட்டுப் பேசி
தோழி யானாய்!

என் இன்பத்தை மட்டுமல்ல
துயரினையும் உரிமையோடு
கேட்டு பங்கிட்டாய்
பள்ளி நிகழ்வுகளோடு
வீட்டின் துயரையும்
பகிர்ந்துக் கொண்டாய்!

உன் பெற்றோர்
நம்மைப் பற்றி
விசாரித்த பொழுதும்
தெளிவாக உறுதியாக
சொன்னாய் நான்
"உன் தோழனென்று"

நிகழ்கால சோகத்தோடு
எதிர்கால லட்சியத்தையும்
சொல்லி வியப்படைந்தாய்

என் திறமையினை
கண்டும் ஆச்சரியமுற்றாய்
அதே சமயத்தில்
என் தவறினைக்
கண்டும் திருந்தச் செய்தாய்!

வயதின் கோளாறால்
தடுமாறிய போதும்
உறுதியாக
புரிந்து புரிய வைத்தாய்!

உடல்நிலை
சரியில்லாத பொழுதும்
அன்னையைப் போல்
தலைக் கோதிவிட்டு
அன்பின் வார்த்தைகளினால்
ஆறுதல் தந்தாய்!

நமக்குள் இவ்வாறு
நட்பு வளர்ந்தாலும்
அடுத்தவர் பார்வைக்கும்
கண்ணியமாய்
நடந்துக் கொள்ள வைத்தாய்!

உன் தோழிகள்
நம் நட்பினை பகிர
வந்தபோது சண்டைக் கோழியாய்
சீறி விலக வைத்தாய்!

அடுத்தவர் உன்னிடம்
என் குறையினைப் பற்றி
தவறாக சொல்லிய போதும்
"என் நண்பன்" என்று
பெருமையாக சொல்லி
வாய் மூட வைத்தாய்
அதே நேரத்தில்
தனிமையில் சந்திக்கும் போது
யாருமறியாது என்
குறையினை சுட்டிக்காட்டி
கண்டித்திடும் ஆசிரியை ஆனாய்.........

நட்பா காதலா
என்று அறிந்தோர் கேட்கையிலே
மாறிடும் காதல் அல்ல
மாறிடா நட்பு அவன்



எந்தன் நண்பன் என்றென்றும்
என்று சொல்லி
நட்பிற்கு மரியாதை செய்தாய்...........

சண்டைகள் என்னிடம் போட்டு
பேசாமல் நான் இருந்த போதும்
நீ கோயிலில் தவறாது
எனக்காக பிரார்த்தனை செய்தாய்!

வாலிபத்தில் வந்த
காதலில் நீ தோற்ற
போதும் கூட
நான் வாழ்வில்
ஜெயிக்க வேண்டுமென்று
எனக்கு உரமேற்றினாய்!

உன் இன்பங்களை
என்னிடம் சொல்லாவிட்டாலும்
நின் கண்ணீரினை
என் முன்பாகவே சொல்லி
நட்பினை வாழ வைத்தாய்!

திருமணத்தன்றும் எல்லோர்
முன்னிலையிலும்
உன் கணவரிடம் பெருமையாக
அறிமுகம் செய்தாய்
"நண்பனென்று"

இன்னுமெத்தனை ஜென்மம்
எடுத்தாலும்
என் தோழியாய்
நீ ஒருவள் போதுமடி எனக்கு!

# பிறவிப் பயன்

காவியன்

பாய் வீட்டு பிரியாணியோ !!
கல்யாண வீட்டு புளிக்குழம்போ !!
செல்லும் இடம் தெரியாம,
திசையேதும் அறியாம,

அரும்பாடு பட்ட உழவனுக்கு,
ஊதியம் கிடைக்குமுன்னு,
சந்தைக்கு போனோமே !!

குட்டி யானையிலே,
கூடைகுள்ளே உட்கார்ந்து,
உற்சாகமாய் போனோமே !!

ஒட்டி வந்த பங்காளி,
மெட்டெடுத்து தந்தானே !!

த... த... தக்காளி...
எங்க இனம் தானுங்க...
நாங்க இல்லா சமையலரை,
எங்க உண்டு கூறுங்க ?

எங்களையும் மறந்து புட்டு
உற்சாகமாய் போகையில,
அலைபேசி பெட்டியில
பேசி புட்டு வந்த பய,
குட்டி யானை மூக்கு மேலே,
எட்டி வந்து மோதிப் புட்டான்...

தடுமாறி குட்டி மக
தொப்புன்னு தான் விழுந்தேனே
கை கொடுத்த தோழமையும்
உதவாம போயிடுச்சே !

வட நாட்டு பெண்ணாட்ட
பள பளன்னு இருப்பயே !
சாலையில்,
அடிபட்ட தவளையாய்
உடம்பெல்லாம்
கிழிஞ்சிறிச்சே !!

முத்துன முருங்கையெனை
ஏளனமாய் பார்க்கிறதே !!

வேலைக்காகா வெண்டை கூட
கேவலமாய் சிரிக்கிறதே !!

விலை போகா கத்திரியும்
பாதி விலைக்கும் போகலையான்னு
புரளி பேசி செல்கிறதே !!!

என்னினம் அத்தனையும்
வரிசை கட்டி போகிறதே - அங்கு
என் மானம் மட்டும்
கொடி கட்டி பறக்கிறதே !!!

உயிர்த்த உழவனுக்கு
ஊதியம் உயிர்க்கலைன்னு
உள் மனசு தவிக்கிறதே !!

பிறவி பயன் அடையாமல்
பித்து பிடித்து சாவேனோ ?
பட்டமரமாய் பயனுராமல்
பிணமாய்தான் போவேனோ ?

பின் நாளில் புறந்தள்ளி,

சித்திரை பதிவுப்போட்டியில்
மூன்றாவது பரிசு பெற்ற கவிதை



சாக்கடைக்கு போவேனோ ? - இல்லை
எவராவது எடுத்தள்ளி
மக்கும் குப்பை ஆவேனோ ?

மக்கும் குப்பையிலே,
விதையாகி - மீண்டும்
செடியாகி வீறு கொண்டு எழுவேனோ ?

எழுச்சியுடன்
புதியதாய்தான் பிறவேனோ !!!?


புறநகர் பகுதியிலே,
விளையாடும்
சில் வண்டுகள் கையிலேனும்
சிக்காமல் போவேனோ ?

நாளை – ஏழை
அடுப்பறையில்
நீரோடும் சோறோடும்
கலந்தாட மாட்டேனோ?
ஒட்டிய வயிறுக்கு
பசியாற மாட்டேனோ ?
உழுதவன் பெருமையை
கோலோச்ச மாட்டேனோ?
இவண்
அடிப்பட்ட தக்காளி

# எளிய முறையில் த்யானம்

கருணாகரன்

அன்பு நண்பர்களே , வணக்கங்கள்.



பொதுவாகவே உங்கள் அனைவரையும் உங்களாலேயே மேல்நிலை காணச் செய்ய வேண்டும் எனும் பேராவலில்தான் பயணம் துவக்கினேன்.

ஆனால் இதனை தொடர்ந்த பலரும் மந்த்ரம் , மாந்தரீகம் கற்கவும் , ஏதேனும் ஒரு துஷ்ட காரியம் கற்றுக் கொள்ளவும்தான் நினைத்தனரேயன்றி யாரும் த்யானம் யோகம் , தவம் , இறைநிலை , இறைத்தன்மை, இறையுணர்வு, இறையோடிணைவு பற்றிய சந்தேகமோ கேள்வியோ எழுப்பவில்லை.

அதனை சிந்திக்கவும் யாரும் தயாரில்லை என்பதும் புரிந்தது.

காரணம் ,

அவரவர்களின் வாழ்வும் , அவரவர்களின் அன்றாட தேவையும்தான்.

அனைவரும் அன்றாட வாழ்வின் ஓட்டத்தில் சிக்கி சின்னாபின்னமாகி கொண்டிருப்பதுவுமே காரணம் என உணர்ந்தேன்.

தீரா கடன் தீர வழி என்றால் எல்லோரும் அதிகம் விரும்புகின்றனர். வசியம், தனஆகர்ஷணம் எனும் செய்திகள் இன்னும் வேகமாக விரும்பப்படுகிறது.

இப்படி ஒரு சூழலில் உள்ள அவர்கள் த்யானம் , தவம் , இறையனுபூதி பற்றி எப்படி சிந்திப்பார்கள் ?. அதோடு மட்டுமல்ல, அவரவர்களின் ஜாதக அமைவுகளும் முக்ய காரணமாகின்றன .

எல்லோரும் இந்நிலையை எய்த முடிந்தால் அதற்கேது பெருமை?. இல்லையா ?

ஆனால் யோகா , த்யானம் , தவம் , மூச்சுப்பயிற்சி , இறையுணர்வு , இறையோடிணக்கம் என்பது போன்ற செய்கைகளின் பலன் ஒவ்வொரு மனிதரின் வாழ்வின் பாதையையே வெகுவாக மாற்றியமைத்து சீராக்கும் வல்லமை கொண்டது என்பதுவும் , இந்த பேருண்மையை எம்பெருமானே அம்பாளிடம் திருவாய் மலர்ந்து அருளியதையும் மறக்கக்கூடாது.

நம்மை கடைத்தேற்ற நாம் நம்மைக் கொண்டே மாற்றி அமைத்துக்கொள்ளும் வித்தையே இது.

விடியற்காலம் எழுந்து , உடலை முறுக்கி , மூச்சை நிறுத்தி குண்டலினியை தட்டி எழுப்பி . . . . . . . . . . . . . . . என்பது போன்ற புரியாத , பயப்படுத்தும் வார்த்தைகளெல்லாம் இல்லாமல் ,

சாதாரணமாக வாழும் வாழ்வில் , வாழும் போதே , வாழ்வினை உணரும் , மகோன்னதமான நிலையினை நாம் காண , உணரக் கூடிய எளிமையான த்யானமுறையை அனைவருக்கும் அறியத் தர வேண்டும் என ஆவல் கொண்டேன்.

அதன் பயனாக எளிய முறை த்யானதின் பயிற்சி முறையை இங்கே தருகிறேன்.

த்யானம் மிக எளிய முறை :

உங்கள் பிறந்த நட்சத்திரம் , பிறந்த நாள் , பிறந்த கிழமை அல்லது ஒரு வெள்ளிக்கிழமையில் . . .

குளித்து முடித்து நெற்றியில் நீறணிந்து சிறு விளக்கேற்றி வைத்து ஊதுபத்தி சாம்பிராணி ஏற்றி வைத்து நீங்கள் த்யானம் செய்ய உத்தேசித்துள்ள அறையில் துர்மணம் இல்லாதவாறு பார்த்துக்கொள்ளுங்கள்.

நான் த்யானம் செய்யப்போகிறேன் , எல்லோரும் அமைதியாக இருக்க வேண்டும் என்பது போன்ற கட்டுப்பாடுகளை யாருக்கும் விதிக்காதீர்கள்.

நாம் இருக்கும் சூழலில்தான் எதையும் கற்க முற்பட வேண்டும். அமைதியான சுழலில் பழகிக் கொண்டால் பின்னர் சிறு ஓசையும் நம்மை த்யானம் செய்ய விடாது.

சுமார் 25 % , 30 % சதவீதம் காலி வயிறாக இருக்கட்டும்.

உங்களுக்கு எப்படி அமர்ந்தால் சௌகரியமோ அப்படி வடக்கு நோக்கி அமர்ந்து கொள்ளுங்கள்.

கூன் விழுந்தமாதிரி அமராமல் நிமிர்ந்து உட்கார்ந்து கொள்ளுங்கள் , ஆனால் விறைப்பாக வேண்டாம். கைகளை இடது கையின் உள்ளங்கையின் மேல் வலது கையின் புறங்கை இருக்குமாறு மடியில் வைத்துக் கொள்ளுங்கள்.

கண்களை மெல்ல மூடுங்கள் , மூடிய கண்கள் மூடியபடியே இருக்க இரு கண்களின் இடையே உள்ள புருவ மத்தியை நோக்கி கவனத்தையும் , பார்வையையும் குவித்து செலுத்துங்கள்.

அடுத்து , உங்கள் மூச்சினை இரண்டு மூக்கு துவாரத்திலும் ஒரே நேரத்தில் உங்களால் முடிந்த மட்டும் மிக மெதுவாக உள்ளிழுங்கள். ஒருபக்கம் இழுக்க வேண்டாம்.

உள்ளிழுத்த மூச்சினை நிறுத்தாமல் உடனே இரண்டு மூக்கு துவாரத்திலும் ஒரே நேரத்தில் உங்களால் முடிந்த மட்டும் மிக மிக மெதுவாக வெளி விடுங்கள். ஒரு பக்கமாக வெளிவிட வேண்டாம்.

இந்த மாதிரி மூன்று முறைகள் நீண்டதாக, அமைதியாக, மெதுவாக, ஒரே சீராக செய்யுங்கள்.

கவனம் மிக மிக மெள்ளமாக எவ்விதமான பதட்டமுமின்றி இதனை செய்ய வேண்டும்.

இப்போது உங்கள் உள்மனமும் ,உங்களின் வெளிஇயக்க உணர்வும் கொஞ்சம் கொஞ்சமாக அமைதிக்குள் செல்லும் .

இப்போது நீங்கள் த்யானத்திற்கு தயாராகி விட்டீர்கள்.

இப்போது மிக முக்கியமான தருணம்.

உங்கள் ஒவ்வொரு அசைவும் உங்களால் கவனிக்கபடுகின்றது. (நீங்கள் அறியாமலேயே)

இந்நிலையில் நீங்கள் மிக முக்கியமான மூன்று விஷயங்களை கடைபிடிக்க வேண்டும்.

**ஒன்று :**

நீங்கள் கண்களை மூடி அமர்ந்தவுடன் இதுவரை நீங்கள் கண்ட நிறைய காட்சிகள் நிழல்படங்களாக உங்கள் முன் வரிசையாக தோன்றி கொண்டே இருக்கும் .

அதனை வராமல் தடுக்காதீர்கள் , தடுக்க முயற்சிக்காதீர்கள் . வர விடுங்கள்.

**இரண்டு :**

வருகின்ற காட்சிகளில் சிந்தனையை செலுத்தி காட்சியின் பின்னே நீங்கள் செல்லாதீர்கள் .

காட்சிகளை ஒரு வேற்று மனிதனாக வெறுமனே காணுங்கள். அதனைப் பற்றி எந்த சிந்தனையும் செய்யாதீர்கள்.

**மூன்று :**

சும்மா இருக்க முடியாமல் நீங்களே ஒன்றை புதிதாக உருவாக்காதீர்கள் .

உதாரணமாக : ஓம் நமசிவய சொல்லிக்கொண்டிருப்பது அல்லது வேறு மந்த்ரங்கள் சொல்வது போன்றவைகள்.

இந்த நிலையில் நீங்கள் இருக்கும் போது உங்கள் மூச்சு என்ன செய்கிறது ? எங்கெல்லாம் செல்கிறது ? என கவனியுங்கள் , வேறொன்றும் செய்ய வேண்டாம்.

இவ்வாறான நிலையில் இயல்பாக நீங்கள் அமர்ந்து பயிற்சி பெறுவதற்கு குறைந்தது 5 அல்லது 6 வாரங்களாகளாம்.

பொறுமை மிக அவசியம் . எந்த முதிர்ச்சி நிலையும் உடனே வருவதில்லை.

இந்த நிலையினை நீங்கள் பெற்றபின் எந்த சூழலிலும் எவ்வளவு இரைச்சல் இருந்தாலும் நீங்கள் த்யானம் மிக சுலபமாக செய்ய முடியும்.

**இதனால் என்ன பயன் ?**

நம்மை சுற்றி உள்ள அனைத்து இறுக்கங்களும் தாமாகவே தளர்வடையும். வாழ்வின் இயல்பு நமக்கு புரியும். சத்யமான வாழ்வின் சுகம் நிதர்சனமாக புலப்படும். இந்த பேருண்மையை விளங்கிக் கொண்டால் எந்த துக்கமும் இல்லை , எந்த சந்தோஷமுமில்லை எனும் தெளிவு நமக்குள் ஏற்படும். பிற உயிரின் மேல் அலாதி பாசமும் , நேசமும் உண்டாகும். இறையவனின் ஆற்றல், மகிமை, அன்பு, அருமை, அருகாமை புலனாகும். எல்லாவற்றிற்கும் மேலாக நம்மை நாமே அறிந்து கொள்ள உதவும். நம்முள் அடைபட்டிருக்கும் மன அமைதி , சாந்தம் , ஒழுக்கம் , தூய அன்பு ஆகிய அருங்குணங்கள் தாமாக வெளித் தோன்றும்.

**பின் குறிப்பு :**

இந்த பயிற்சியினை நீங்கள் காலையில் அல்லது மாலையில் சுமாராக 6.20 மணிக்கு மேல் இரவு 8.00 மணிவரை மட்டுமே செய்ய வேண்டும்.

வாய்ப்பிருந்தால் காலை , மாலை இரண்டு நேரமும் செய்யலாம்.

அதாவது ஒளி உலகினை சூழும் நேரம், இருள் உலகினை சூழும் நேரம்.

மதியம் செய்வதாக இருந்தால் 12.00 மணிக்கு துவங்கி 2.30 மணி வரை செய்யலாம்.

செங்கோடன்

**இறைவனிடம்**
**உயிர்**
**கடன்**

**ஈன்றோரிடம்**
**உடல்**
**கடன்**

**வசூலிப்பதென்னவோ**
**எமன்...**

ஒவ்வொரு முறை த்யானப் பயிற்சி முடித்த பின்னும் சுமார் ½ மணி நேரம் வெறுமனே படுத்திருப்பது மீண்டும் பயிற்சி செய்வதற்கு உதவும்.

உடலுக்கு எந்தவிதமான உபாதையும் தராது.

ஆகவே சைவ உணவே மிக சிறந்தது.

அசைவ உணவினை உண்பவர்கள் மெல்ல சைவ உணவிற்கு மாறுவது நல்லது.

அசைவ உணவினால் பயிற்சியில் ஈடுபடும் போது உடல் உபாதைகள் குறிப்பாக மூச்சு பிடிப்பு , தசைவலி போன்றவைகள் ஏற்படும்.

ஆனால் பயம் வேண்டாம் அதுவே சரியாகிவிடும்.

சைவ உணவில் இந்த தொல்லைகள் உருவாகாது.

மிக எளிய இந்த பயிற்சியை யார் வேண்டுமானாலும் செய்யலாம்.

கீழே விரிப்பு ஏதேனும் (வெண்மையான துணி) விரித்துக் கொள்ளுங்கள்.

கீழே அமர முடியாதவர்கள் நாற்காலியில் அமர்ந்து கொள்ளுங்கள் , கால்களின் பாதங்களை , இடதுகாலின் பாதத்தின் மேல் வலதுகால் பாதம் இருக்குமாறு அமருங்கள்.

நாற்காலியில் அமர்பவர்கள் கால்களை மடித்து மேலே அமரக்கூடாது.

முதுகினை வளைக்காமல் நேராக இருக்குமாறு அமருங்கள் .

முன் அனுபவம் உள்ளவர்கள் சின்முத்திரையை பிரயோகிக்கலாம்.

# பாதணித்துவ உழவர் ஆட்சி

இமாம்தீன்



இரத்த யுத்தங்களை – பூமியினில்
சத்த சாகசமாய்
நொய்து செய்து
சொத்தில்லாமலே செத்து மடிகிறான்
நர்த்தன விவசாயி !!
✯✯✯

சேற்றினில் செருப்பாய்த் தோய்ந்தும்
உடல் பிரியா ஆவியோடு
ஒரு வாய் சோற்றுக்காய்
இக்காலும் கொட்டாவியோடு
அலைகிறான் அப்பாவி!!
✯✯✯

ஆங்கிலேயனின் காலணித்துவம்
மட்டமாகிறது
முதலாளிகளின்
பாதணித்துவத்தின் கீழ் !!!
✯✯✯

தொழிலாளி ஒருத்தனின்
வியர்வைத் துளிகள்
சொல்லலும் தத்துவத்தை தந்ததா
அரிஸ்டோட்டிலின் புத்தகம்???
✯✯✯

முதலாளி ஒருத்தனின்
சால்வைத் துண்டு
துடைத்திருக்குமா –தொழிலாளி
ஒருத்தனின் வியர்வைத் துளிகளின்
சந்தன நாற்றத்தை???
✯✯✯

காலையின்றி மாலையின்றி
காளையோடு வேலையின்றி
மோதி விளையாடும் - ஊழர்
கூட்டம் ஒருபுறம்
✯✯✯

இவன் பசி
அவன் பசி
எவன் பசியாற்றவும்
ஓட்டத்தோடும் வாட்டத்தோடும்
காளை கட்டி
ஏரிழுத்து பூமியோடு புரட்சித்து
பூவுலகுக்கு புண்ணியம் சேர்க்கும்
உழவர் கூட்டம் மறுபுறம்.
✯✯✯

சதை ருசித்து
மது குசித்து
எருது தின்று
விருது என்று
மானிடப் புகழ்ச்சிக்காய்
போர்த்தப்படும் பொன்னாடைக்கு
மறு ஆடை மாற்ற ஆடையின்றி
எருதோடு விருது பெறும்
உழவனின் கோவணத்துக்கு
ஈடாமோ ?
✯✯✯

அந்தப்
பொன் ஆடையும் பெண் வாடையும்!!
எருதிறைச்சியும் விருதுப் புகழ்ச்சியும்!!
இவையெல்லாம்
இவன் கோவணக் கிழிசல்களின்
அழகுணர்ச்சியைக் கெடுக்கிறதே !!
✯✯✯

சட்ட யாப்புகளுக்கு ஆப்பிறுக்கி
விவசாய விடியலின் தடயமாய்
அரியாசன ஆட்சியில்
தொழிலாளியின் மோட்சம்
விமோசனம் பெற
வழி வகு இறைவா !!!
✯✯✯

# இது என்ன மரம்

கல்யாண கண்ணன்

மாமா இதோட பேரு என்ன?

எதோடதுடா

இதோ .....இந்த மரம்

காதலர்கள் உருவாக்கிய இதயத்தில் மெல்லிய நரம்புகள் தெரிவதுபோல் இலைகளையுடைய அந்த மரத்தை பார்த்தவனுக்கு அதன் பெயர் தெரியவில்லை. வேறு என்ன செய்வது எந்தவித தயக்கமின்றி உண்மையை ஒத்துகொண்டான். அவனும் அதை பெரிதாக எடுத்துகொள்ளவில்லை.அவன் கவனம் எல்லாம் சட்டென்று பூங்காவில் இருந்த ஊஞ்சல் மேல் சென்றது.

மாமா வா ஊஞ்சல் விளையாடலாம்

சரி வாடா போகலாம் என்று பதில் சொல்வதற்குள் ஊஞ்சல் மேல் அமர்ந்தான்.

தள்ளிவிடு.......... தள்ளிவிட்டு.........

இந்தமுறையாவது வானத்தை தொடவேண்டும் என்பதுபோல ஒவ்வொருமுறையும் மேலே செல்லும்பொழுதும் கால்களை தன்னால் முயன்றவரை தூக்கினான். ஒவ்வொரு முறையும் அவனது முகசுழிப்பு மாறுவது அவனக்கு சிரிப்பாய்யிறுந்தது. கொஞ்சநேரம் சென்றவுடனேயே அவன் கவனம் கயிறு ஏற்றம் மேல் சென்றது. இன்னும் சற்றுநேரத்தில் அவையெல்லாம் மறைந்துவிடபோவதுபோல.

நிறுத்து நிறுத்து என்று அவசர அவசரமாக ஊஞ்சலை நிறுத்த செய்து கயிறு ஏற தொடங்கியவன் நான்கு அடுக்குகொண்ட அதில் இரண்டாம் அடுக்கே போதும் என அங்கேயே நின்றுவிட்டான். அடுத்த ரெண்டு அடுக்கு ஏறி அடுத்தபக்கம் போக விருப்பமில்லைபோலும். கயிறை பிடித்தவாரே மாமா இது பேரு என்ன என்றான்.

ராணுவ அதிகாரியின் தோரனையில். நெறுக்கமாகவும் சிறியதாகவும் இலைகளையுடைய விட்டமின் டி நிறைத்த கனிகளை தரக்கூடிய அந்த மரத்தின் பெயரும் தெரியவில்லை. ஆனால் முன்பு போல் இல்லாமல் சற்று நேரம் யோசித்துவிட்டு ஞாபகம் வந்தவன் போலும் ஆனால் சற்று நேரம் முன்புதான் மறந்தவன்போலும் சமாளித்தான். அவன் அதை கேட்டுகொண்டே கயிறைவிட்டு இறங்கி அடுத்த விளையாட்டை நோக்கி ஓடினான்.

விளையாட்டு பொருட்கள் அனைத்தையும் செவ்வகவடிவ பூங்காவின் அனைத்து பக்கங்களிலும் வைத்தது அவன் மாமாவிற்கு சற்று எரிச்சலை ஏற்படுத்தியது. இப்பொழுதுதான் பலவருடம் கழித்து தன்வீட்டுக்கு அருகில் இருக்கும் பூங்காவிற்கு இரண்டாவது முறையாக வருகிறான்.

அவன் பொழுதுபோக்கிற்கு நகரின் பல இடங்களில் திரையரங்கமும், காப்பி கடைகளும், வணிக வளாகமும் இருந்தது. எப்பொழுதும் குறையபோகாத தொப்பையை குறைப்பதற்காக பல பேரும்,பேசிசிரிக்க சிலபேரும் என மாலைவேலையில் மட்டுமே அந்த பூங்கா பயன்படுத்தப்பட்டது.

பூங்கா குடியிருப்புகள் அதிகம் உள்ள ஏரியாவில் இருப்பதால் காதலர்கள் என கூறிகொள்பவர்களின் தொல்லையில்லை. சந்தையில் வந்த புதுவித ஸ்மார்ட்போன் பற்றி பேசிகொண்டிருந்தவனை நீண்ட நேரத்திற்கு பிறகு மீண்டும் அதே கேள்வி அவனைதாக்கியது.

இந்த மரத்தோட பேரு என்ன ?

..ம்ம்... மரம் ஏன்டா படுத்துற போடா போயி விளையாடுறா. அவனும் ஒவ்வொருமுறையும் அனிச்சைசெயல் போல மரத்தை பார்த்ததும் பெயர் கேட்க ஆரம்பித்தான். இப்பொழுது ஐந்தாவது முறையாக தன்னை தாக்கும் அந்த கேள்வி அவனை எரிச்சலடைய செய்தது.

நீண்ட நேர நடையும் கூடதான். அருகில் இருந்த மரஇருக்கையில் சற்று அமர்ந்து ஆசுவாசபடுத்தி கொண்டவன் இடையில் ஒரு மரத்திற்கு வேறு பெயர் கூறியதை நினைவுபடித்திகொண்டே தான் பெயர் தெரியாது என்று சொன்ன அந்த மரங்கள் அனைத்தையும் சற்று நிதானத்துடன் கவனித்தான். தன் பெயர்கூட தெரியாத அவனை அந்த மரங்கள் அலட்சியபடுத்துவதுபோல தோன்றியது. அவனுக்கு அவைகளின் ஒவ்வொரு அசைவும் அவனைபார்த்த ஏலனசிரிப்பாகவே தோன்றியது.

ஒவ்வொரு மரத்தின் வித்தியாசம் அவனுக்கு புரிய ஆரம்பித்தது. கூர்மையான அந்த இலைகள் போர்வீரனை நோக்கிவரும் ஆயுதம் போல் அவனை நோக்கி காற்றில் நடனம் ஆடியபடியே வந்துகொண்டிருந்ததும் அவைகளின் மௌனமும் அவனை குற்றவுணர்ச்சி கொள்ளசெய்தது. அந்த பூக்களின் வாசம் அவனை எதோசெய்தது. அவ்வளவு பெரிய பூங்காவில் தனக்கு பெயர் தெரிந்த மரம் எதாவது இருக்காதா என்று தேட ஆரம்பித்தான். பெயர் தெரியாத மரத்தின் மரஇருக்கையில் இருந்து எழுந்து வேகமாக நடந்தான்.

மாமா மாமா இரு நானும் வரேன்

மரத்தோட பெயர்தானே தெரியாது என்று ஆறுதல்பட்டுகொண்டே தனக்கு தெரிந்தவை அனைத்தையும் சில நிமிடகளில் நினைவுபடித்திகொண்டவன்.

புன்சிரிப்புடன் தன் நடையை சற்று தளர்த்திகொண்டான்.

அவன் சிரிப்புக்கு காரணம் இருந்தது........

சற்றுதுரம் தள்ளி இருந்த அந்த மரத்தின் பெயர் அவனுக்கு தெரியும்.

கசப்பு தன்மையுடைய அந்த இலையும் அதன் பழங்களும் அவ்வளவு பரிச்சயம்மில்லை என்றாலும் அதன் பெயர் அவனுக்கு தெரியும். மரத்தை நெறுங்க நெறுங்க அவனேயே பார்த்தான்.

தேர்வில் தனக்கு தெரிந்த ஒரே ஒரு கேள்வி வினாதாளில் கடைசியாக இருப்பதை பார்த்தவன்போல. ஆனால் அவனோ சற்றும் சனலமற்று அதை கடந்துபோனான். குழந்தைகளுக்கு மட்டுமே அது சாத்தியம் போல.

அவனும் குழந்தையை போல ஏமாந்து போனான்.

மரத்தின் பெயர்கூட தெரியாத தன் மாமாவிடம் கேட்பதற்கு அவனிடம் கேள்விகள் ஒன்றுமில்லை போலும்.